பி. இரயாகரன்



# ஆணாதிக்கமும் மார்க்சியமும்

www.tamilarangam.net

# ஆணாதிக்கமும் மார்க்சியமும்

(ஆணாதிக்கமும் பெண்ணியமும் என்றநூலின்ன்றாவதுபாகம்)

## பி. இரயாகரன்

கீழைக்காற்று வெளியீட்டகம்
16, அவுலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை
சென்னை - 666 662
தொ.பே. 644 - 28412367.

| | | |
|---|---|---|
| நூல் | : | ஆணாதிக்கமும் மார்க்சியமும் |
| ஆசிரியர் | : | பி. இரயாகரன் |
| உரிமை | : | ம பி. இரயாகரன் |
| விமர்சனங்களுக்கு | : | P. RAYAKARAN<br>32, RUE TROUILLET DEREL<br>92600 ASNIERES SUR - SEINE<br>FRANCE.<br>Website: www.tamilcircle.net<br>email: rayakaran@aol.com |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் - 2003 |
| அச்சாக்கம் | : | எழில் பிரிண்ட்ஸ்<br>சென்னை - 600 024<br>✆ : 044-24835887. |
| விலை | : | ரூ. 155.66 |
| நூலாக்க விபரம் | : | 1/8 டெம்மி<br>404 பக்கங்கள்<br>25லி பாரங்கள்<br>10 புள்ளி எழுத்து<br>N.S. மேப் லித்தோ |
| வெளியிடுவோர் | : | கீழைக்காற்று வெளியீட்டகம்<br>10, ஔலியா சாகிபு தெரு<br>எல்லீசு சாலை<br>சென்னை - 600 002<br>✆ : 044-28412367<br>email: keezhaikatru@hotmail.com. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| ஸீ. தஸ் | முஷீரீநிகி௩ | ு.தஸ் |
|---|---|---|
| 1. | ஏகாதிபத்தியச் சூறையாடலால் தொடரும் குழந்தை உழைப்பு | 005 |
| 2. | தனிமனிதச் சுதந்திரம் வீங்கியபோது குழந்தைகளின் எதிர்காலம் | 023 |
| 3. | குழந்தையின் ஆரோக்கியத்தை மறுக்கும் ஏகாதிபத்தியப் பெண்ணியம் | 026 |
| 4. | பால்மனம் மறவாத சிறுமி மீதான கற்பழிப்புடன் கூடிய கொலையின் பின்னணிக் குற்றவாளிகள் யார்? | 031 |
| 5. | மாணவ - மாணவிகளின் ஆணாதிக்கச் சீரழிவுப் போக்கு | 049 |
| 6. | ஆணாதிக்கம் பெண்ணின் கடமையாக்கிய வீட்டு வேலை | 055 |
| 7. | சுரண்டும் ஆணாதிக்க உற்பத்தியில் பெண்களின் நிலை | 059 |
| 8. | சக உளவியல் தற்கொலைகள் | 077 |
| 9. | ஆணாதிக்கச் சுரண்டல் அரசு | 082 |
| 10. | சகச் சீரழிவில் குடி | 095 |
| 11. | பாலியலூடான எய்ட்ஸ் (அஜாகு) | 100 |
| 12. | ஆணாதிக்கச் சுரண்டல் கண்காணிப்பு | 108 |
| 13. | மனிதனை அன்னியப்படுத்தலும் நுகர்வில் ஆடம்பரமும் | 111 |
| 14. | உதவியின் பெயரில் ஆக்கிரமிப்பு | 117 |
| 15. | பெண்ணியத்தின் பின் அரங்கேறும் ஆணாதிக்கம் | 120 |
| 16. | பெண்ணின் கட்டற்ற சுதந்திரமும் காதல் சுதந்திரமும் ஒரு விபச்சாரமே | 123 |
| 17. | மார்க்சியத் தலைவர்கள் ஆணாதிக்கவாதிகளா? | 149 |
| 18. | ஆணாதிக்கத்தை மார்க்சியம் பாதுகாக்கின்றதா? | 156 |
| 19. | பெண்களின் சுவடுகளில் என்னும் பெண்களின் வரலாற்றைப் பற்றிய நூல் மீதான விமர்சனம் | 200 |
| 20. | ஆணாதிக்கத்தை எதிர்த்து எழுந்த வர்க்கக் கவிதை | 229 |
| 21. | மார்க்சியப் பெண்ணியத்தின் மீது சந்தேகத்தை விதைக்கும் ஆணாதிக்கத்தின் போக்கு குறித்து | 233 |
| 22. | பெண்ணின் போராடும் உரிமை பெண்ணின் உயிரைக் காட்டிலும் அடிப்படையானது | 253 |
| 23. | பெண் விடுதலையின் பின்னால் திரிக்கப்பட்ட ஆணாதிக்க நிலைநிறுத்தல்கள் மீது | 262 |
| 24. | பொருளாதார மறுசீரமைப்பைக் கோரும் ஆணாதிக்கமும் தலித் ஆணாதிக்கத்தை எதிர்க்காத பெண்ணியமும் | 287 |
| 25. | மார்க்சியப் பெண்ணியம் மீதான கேள்விகள் மேல் | 308 |
| 26. | பூடகமான மார்க்சிய எதிர்ப்புப் பெண்ணியம் | 316 |
| 27. | சுரண்டுவதில் தொடங்கிய ஆணாதிக்கம் சுரண்டல் ஒழியும்போது பெண் விடுதலை அடைவாள் | 319 |
| 28. | மார்க்சியமல்லாத பெண்ணியல்வாதிகளின் மௌனத்தின் பின்னால் | 326 |
| 29. | உலகமயமாகும் ஏகாதிபத்தியப் பெண்ணியம்: பெண் எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்தி வக்கரிக்கின்றது | 334 |
| 30. | விமர்சனத்தின் மீது ஒரு பதிலுரை | 384 |
| 31. | முடிவுரை | 398 |


## பதிப்பாளர் குறிப்பு

www.tamilarangam.net

## பொருளடக்கம்


1. ஏகாதிபத்தியச் சூறையாடலால் தொடரும் குழந்தை உழைப்பு 005
2. தனிமனிதச் சுதந்திரம் வீங்கியபோது குழந்தைகளின் எதிர்காலம்
3. குழந்தையின் ஆரோக்கியத்தை மறுக்கும் ஏகாதிபத்தியப் பெண்ணியம்
4. பால்மனம் மறவாத சிறுமி மீதான கற்பழிப்புடன் கூடிய கொலையின் பின்னணிக் குற்றவாளிகள் யார்?
5. மாணவ - மாணவிகளின் ஆணாதிக்கச் சீரழிவுப் போக்கு
6. ஆணாதிக்கம் பெண்ணின் கடமையாக்கிய வீட்டுவேலை
7. சுரண்டும் ஆணாதிக்க உற்பத்தியில் பெண்ணின் நிலை
8. சக உளவியல் தற்கொலைகள்
9. ஆணாதிக்கச் சுரண்டல் அரசு
10. சகச் சீரழிவில் குடி
11. பாலியலூடான எய்ட்ஸ் (AIDS)
12. ஆணாதிக்கச் சுரண்டல் கண்காணிப்பு
13. மனிதனை அன்னியப்படுத்தலும் நுகர்வில் ஆடம்பரமும்
14. உதவியின் பெயரில் ஆக்கிரமிப்பு
15. பெண்ணியத்தின் பின் அரங்கேறும் ஆணாதிக்கம்
16. பெண்ணின் கட்டற்ற சுதந்திரமும் காதல் சுதந்திரமும் ஒரு விபச்சாரமே
17. மார்க்சியத் தலைவர்கள் ஆணாதிக்கவாதிகளா?
18. ஆணாதிக்கத்தை மார்க்சியம் பாதுகாக்கின்றதா?
19. பெண்களின் சுவடுகளில் என்னும் பெண்ணின் வரலாற்றைப் பற்றிய நூல் மீதான விமர்சனம்
20. ஆணாதிக்கத்தை எதிர்த்து எழுந்த வர்க்கக் கவிதை
21. மார்க்சியப் பெண்ணியத்தின் மீது சந்தேகத்தை விதைக்கும் ஆணாதிக்கத்தின் போக்கு குறித்து
22. பெண்ணின் போராடும் உரிமை பெண்ணின் உயிரைக் காட்டிலும் அடிப்படையானது
23. பெண் விடுதலையின் பின்னால் திரிக்கப்பட்ட ஆணாதிக்க நிலைநிறுத்தல்கள் மீது
24. பொருளாதார மறுசீரமைப்பைக் கோரும் ஆணாதிக்கமும் தலித் ஆணாதிக்கத்தை எதிர்க்காத பெண்ணியமும்
25. மார்க்சியப் பெண்ணியம் மீதான கேள்விகள் மேல்
26. பூடகமான மார்க்சிய எதிர்ப்புப் பெண்ணியம்
27. சுரண்டுவதில் தொடங்கிய ஆணாதிக்கம் சுரண்டல் ஒழியும்போது பெண் விடுதலை அடைவாள்
28. மார்க்சியமல்லாத பெண்ணியல்வாதிகளின் மௌனத்தின் பின்னால்
29. உலகமயமாகும் (ஏகாதிபத்தியப்) பெண்ணியம்: பெண் எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்தி வக்கரிக்கின்றது
30. விமர்சனத்தின் மீது ஒரு விமர்சனம்
31. முடிவுரை

www.tamilarangam.net

# 1. ஏகாதிபத்தியச் சூறையாடலால் தொடரும் குழந்தை உழைப்பு

உலகில் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் யுனிசேவ் கி.பி. 1995-இல் ஓர் அறிக்கையை முன்வைத்தது. அந்த அறிக்கையில் ஆரம்பக் கல்விக்கு 1,300 கோடி டொலரும், சுத்தமான தண்ணீருக்கு 600 கோடி டொலரும், சுகாதாரத்துக்கு 900 கோடி டொலரும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 600 கோடி டொலருமாக மொத்தம் வருடம் 3,400 கோடி டொலர் இருப்பின், உலகில் குழந்தைகளின் நிலைமைகளை மேம்படுத்த முடியும். ஆனால் இது உலகமயமாதலின் சுரண்டலில் சாத்தியமில்லை.

ஆணாதிக்கச் சுரண்டலைப் பாதுகாக்கவும், தனிமனித உணர்வுகளைத் தீர்க்கவும், சமூக விரோதத் தன்மையை வளர்க்கவும், செலவு செய்யும் தொகை சிகரெட்டுக்கு 40,000 கோடி டொலரும், குடிப்பதற்கு (பீர், வைன்) 24,500 கோடி டொலரும், கோல்ஃப் விளையாட 4,000 கோடி டொலரும், இராணுவத்துக்கு 80,000 கோடி டொலரும் பயன்படுத்துகின்றனர்.

ஒரு ஏ.கே.47 துப்பாக்கி செய்யும் பணத்தைக் கொண்டு 3,000 பேருக்குக் குருட்டுக் கண்ணை நிவர்த்தி செய்யும் விட்டமின் ஏ குளிசையை (மாத்திரையை) வாங்க முடியும். ஒரு கோடி கண்ணி வெடிகளைக் கொண்டு, அதாவது 10 கோடி டொலர்களைக் கொண்டு ஆறு விதமான தடுப்பூசிகளை 77 இலட்சம் குழந்தைகளுக்கு ஏற்றமுடியும். 23 எப்-16 விமானத்தைக் கொண்டு, அதாவது எண்பது கோடி டொலர்களைக் கொண்டு 160 கோடி மக்களுக்கு 10 வருடத்துக்கு ஐயடின் குறைவால் ஏற்படும் மனவளர்ச்சிக் குன்றலைத் தடுக்கமுடியும். நீர்மூழ்கி கப்பல் கொண்டு, அதாவது 240 கோடி டொலர் கொண்டு 4.8 கோடி மக்களின் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்த முடியும்.

இதை நாம் செய்யமுடியுமா எனின் இல்லை. **இந்த ஜனநாயகம் இருக்கும் வரை இது சாத்தியமில்லை.** இதைக் கோரும் ஜனநாயகத்தை **மக்கள் சர்வாதிகாரம்** கொண்டு நசுக்கும் போதே இந்தப் பணம் மக்களின் நலனுக்குப் பயன்படும். உலகமயமாதல் ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டிப் பாதுகாக்கும் இந்த மனித விரோத, சமூகவிரோத, தனிமனித நலன்களைக் கொண்டிருக்கும் வரை, மக்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களை அடக்கும் ஜனநாயகத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யும். இதைப் புரியாதவரை, இதை எதிர்த்துப் போராடாத வரை, இதன் மீது அதிகாரத்தை நிறுவாதவரை இந்த ஜனநாயகம் மாறிவிடப் போவதில்லை. மாறுவதும் மாறாததும் ஒவ்வொரு தனிமனிதனும், தனிமனித வாதத்துக்கு எதிராக, சமூகமயமாகி போராடுவதில் தங்கிக் கிடக்கின்றது.

குழந்தைகளையிட்டு அக்கறைப்படாத உலக ஜனநாயகத்தில் கி.பி. 1990-இல், 2.5 இலட்சம் குழந்தைகள் கொரில்லாப் போராட்டக் களத்தில் இயங்கினர். 10 கோடி குழந்தைகள் பாடசாலை செல்ல வசதியற்றவர்களாக இருக்கின்றனர். 15 கோடி குழந்தைகள் பட்டினியுடன் படுக்கையை நாடினர். 3 கோடி குழந்தைகள் வீடற்ற நிலையில் வீதியில் படுத்துறங்கினர். இவைகளால் 40 ஆயிரம் குழந்தைகள் இறந்து போகின்றனர். ஐந்து கோடி குழந்தைகள் உணவற்ற நிறைகுறைவினால் மரணத்தின் பிடியில் சிக்கியிருந்தனர். தாய்ப்பால் கொடுக்கும் தாய்மையின் பால்சுரப்பை 4 முதல் 6 மாதத்துக்கு நீடிக்கும் உணவைக் கொடுப்பதன் மூலம், உலகில் 10 இலட்சம் குழந்தைகளின் உயிரைப் பாதுகாக்க முடியும். கி.பி. 1984-க்கு முந்திய பத்து வருடத்தில் 50 இலட்சம் குழந்தைகள் யுத்தத்தினால் காயமடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர். 50 இலட்சம் பேர் வதிவிடத்தை (வாழ்விடம்) இழந்தனர். உலக வர்த்தக அமைப்பு மற்றும் யுனிசேவ் அறிக்கைகளின் படி கி.பி.1990-களின் குழந்தைகளின் மரணத்தைப் பார்ப்போம்.

**அட்டவணை: 1**

| | | | |
|---|---|---|---|
| காகுலான் இருமல் | - | 5.1 | இலட்சம் |
| சிசு தலைவிறைப்பு ஜன்னி | - | 7.9 | இலட்சம் |
| மலேரியா | - | 10 | இலட்சம் |
| மணல்வாரியம்மை | - | 15.2 | இலட்சம் |
| இதர சுவாச நோய்கள் | - | 22 | இலட்சம் |
| வயிற்றுப்போக்கு நோய் | - | 40 | இலட்சம் |
| இதர காரணங்கள் | - | 42 | இலட்சம் |

மக்கள் விரோத, தனிமனித ஜனநாயகத்தில் ஒவ்வொரு வருடமும் வயிற்றுப் போக்கினால் ஐந்து வயதுக்கு உட்பட்ட 30 இலட்சம் குழந்தைகள் இறந்து போகின்றனர். கி.பி. 1993-இல் தொற்று நோய்கள் காரணமாக 165 இலட்சம் மக்கள் (இங்கு சில நாடுகளில் தொற்று நோய் சாதாரண இறப்பாக



மதிப்பிடுவதால் இறப்பு அதிகமாகவே இருக்கின்றது.) இறந்து போனார்கள். இருபது கோடி குழந்தைகள் ஊட்டச் சத்து இன்றி பட்டினியில் தவிக்கின்றனர். 50 கோடி மக்கள் மனநோயால் துன்புறுகின்றனர்.

உலகில் 175 கோடி மக்கள் காச நோய் பாக்டீரியாவால் பாதிக்கப்பட்ட போதும், வறுமையில் வாழும் நாட்டு மக்களின் நோயாக இருப்பதால், சந்தை வசதியின்றியிருப்பதால், பன்னாட்டு மருந்து உற்பத்தியாளர்கள் இதற்கான நோய்த்தடுப்பு மருந்தை உற்பத்தி செய்ய மறுக்கின்றனர்.

சமூகச் சுதந்திரத்தை மறுக்கும் உலகமயமாதலின் தனிமனிதச் சுதந்திரத்தில் இவைகளைச் சாதிக்கின்றது. இந்தச் சமுதாயத்தின் நாகரிக உற்பத்தியாகும் விளைவுகள் இவை. மூலதனத்தின் குவிப்பில் வெளியேற்றப்படும் கழிவுகள் இவை.

சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் படி 10 வயதுக்கும் 14 வயதுக்கும் உட்பட்ட 7.3 கோடி குழந்தைகள், அதாவது 13 சதவீதத்தினர் கடுமையான உடலுழைப்பில் வாழ, இந்த ஜனநாயக உலகம் நிர்ப்பந்திக்கின்றது. வீட்டில் வேலைக்காரர்களாக வேலை செய்யும் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இதற்குள் உட்படுத்தப்படவில்லை. தொழிற்துறை சார்ந்த இந்தப் புள்ளி விபரமே பிரமிப்பை ஏற்படுத்துகின்றது. அதாவது 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட 20 முதல் 25 கோடி குழந்தைகள் கண் விழித்தவுடன் உடலுழைப்பில் ஈடுபடுகின்றனர். இந்த ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பில் **ஜனநாயகம் என்பது சுரண்டுவதற்கே** ஒழிய, சிறுவர்களின் மென்மையான, அப்பாவித்தனமான, பிஞ்சு நெஞ்சங்களுக்கு அல்ல. குழந்தைகளை வாட்டிப் பிழிந்தெடுத்த மூலதனத்தில் தான் ஜனநாயகம் பீறிட்டுப் பிறக்கின்றது. இந்த அமைப்பின் அனைத்துப் பண்பாட்டு நாகரிகமும் இரத்தச் சாற்றை உள்ளடக்கியவை.

தனிமனிதச் சுரண்டலும், அதைப் பாதுகாக்கும் சமூகவிரோத யுத்தங்களும் மக்களுக்கு எதிராக மாறுவதால் குழந்தைகளை இந்தச் சுரண்டல் அமைப்பு சிதைக்கின்றது. கி.பி. 1995-களில் 18 வயதுக்குட்பட்ட 2 கோடியே 40 இலட்சம் சிறுவர்களைப் புலம் பெயர்ந்த அகதி முகாம்களில் அல்லாட வைத்துள்ளது. கடந்து சென்ற 10 வருடங்களில் 20 இலட்சம் குழந்தைகளைக் கொன்ற சுரண்டல் தனிமனித வாத ஜனநாயக அமைப்பு, 40 முதல் 50 இலட்சம் குழந்தைகளை ஊனமாக்கியுள்ளது. இந்த அவலங்களை இந்த உலகமயமாதல் ஜனநாயக அமைப்பில் தடுக்க முடியாது. இந்த உலகமயமாதலுக்குப் பதில் இந்த ஜனநாயகத்துக்குப் பதில் மக்கள் சர்வாதிகாரம் இதன் மீது நிறுவப்படும் போதே இவைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

இந்தியாவிலுள்ள உத்திரப் பிரதேசத்தில் மீர்ஸாபூர் என்ற மாவட்டத்தில் கம்பளம் பின்னும் தொழிலில் ஒரு இலட்சம் குழந்தைகள் சிறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முதல் மூன்று வருடங்கள் சம்பளமின்றியும், அடுத்த வருடம் 15 மணி நேர வேலைக்கு மூன்று ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரை கொடுத்து கொடூரமாகச் சுரண்டப்படுகின்றனர். பெரோஸாபாத் கண்ணாடி தொழிற்சாலையில் 50,000 குழந்தைகள் வாட்டி எடுக்கும் 700 - 1500 டிகிரி வெப்ப நிலையில், தினமும் பன்னிரண்டு மணித்தியாலம் உழைக்கிறார்கள். இதற்குக் கூலியாகப் பெறுவது எட்டு முதல் பதினொரு ரூபாய் ஆகும். இவர்கள் தப்பியோடாது இருக்க மா∴பியா அமைப்பு கண்காணிப்பில் ஈடுபடுகின்றது. (1.1.1993)[1] திருப்பூரில் தீப்பெட்டி, தோல் பதனிடல், பீடித்தொழில், பின்னல் ஆடை, சாயப் பட்டறை ஆகிய தொழில்களில் ஐந்து முதல் 15 வயதையுடைய 30,000 குழந்தைகள் 16 மணிநேரத்துக்கு மூன்று ரூபாய் கூலியில் கடுமையாகச் சுரண்டப்படுகின்றனர். (15.11.1994)[1]

கனடா டொரன்டோ நகரில் 10,000 தெருவோரப் பிள்ளைகள் வசிக்கின்றனர். கடந்த பத்து வருடங்களில் இது வேகமாக அதிகரித்துள்ளது. பெற்றோரின் விவாகரத்து, தனிமை, கட்டுப்பாடு, வறுமை போன்ற காரணங்களால் வீதிக்கு வந்த இவர்களில், 54 சதவீதம் பேர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். ஐந்து பெண்ணுக்கு ஒருத்தி கருத்தரிப்பதாகவும், 80 சதவீதமானோர் போதைப் பொருள் பாவிப்போராக அல்லது குடிப்போராக இருக்கின்றனர். 67 சதவீதம் பேர் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றனர். 43 சதவீதம் பேர் தற்கொலை செய்ய முயன்றுள்ளனர்.[2] நாகரிகமான, சுதந்திரமான மனிதர்கள் வாழ்கின்ற செல்வம் கொழிக்கும் உலகமயமாதலின் தலைநகரங்களின் பொதுத்தன்மை இவைகளே. ஏழைநாடுகளின் குழந்தை உழைப்புக்கு நிகரான சீரழிவுகளை இந்த ஜனநாயக அமைப்பு ஏற்படுத்தி, அதை மூலதனத்தின் கவர்ச்சிகரமான அழகியலின் பின்னால் மறைக்க முயன்றாலும் முடியாது என்பதுக்கு இவைகள் சாட்சியாகவுள்ளது.

இனி நாம் கி.பி. 1995-ஆம் ஆண்டின் கணக்குபடி குழந்தை உழைப்பினை உலகளவில் பார்ப்போம்.

**அட்டவணை: 2**

| நாடுகள் | குழந்தை உழைப்பு சதவீதம் |
|---|---|
| பூர்கினா பாசோ | 51% |
| புறூண்டி | 49% |
| கமருன் | 25.2% |
| கோட்ஈவார் | 20.5% |
| எகிப்து | 11.2% |
| எதியோப்பியா | 42.3% |
| கானா | 13% |
| கினியா | 41% |
| மாலி | 54.5% |
| நைகர் | 45.1% |
| நைஜீரியா | 25.7% |
| உகான்டா | 45.3% |
| செனிகல் | 31.3% |
| சாம்பியா | 16% |
| சிம்பாவே | 29% |
| பங்காளதேஷ் | 30% |
| பூட்டான் | 55% |
| சீனா | 12% |
| இந்தியா | 15% |
| இந்தோனேசியா | 9.5% |
| நேபாளம் | 45.1% |
| பாக்கிஸ்தான் | 17.5% |
| துருக்கி | 24% |
| தாய்லாந்து | 16.2% |
| ஜெர்மனி | 20% |
| பொலிவியா | 14.3% |
| பிரேசில் | 16% |
| குவாட்டமாலா | 16.2% |
| அதாயிட்டி | 25.3% |
| மெக்ஸிக்கோ | 6,7% |
| நிக்கரகுவா | 14% |
| டொமினிக்கன்குடியரசு | 16% |
| சாலமன் தீவுகள் | 28.8% |
| பாப்புவா நியூகினியா | 19% |
| பொலினீசியா | 3.6% |
| அல்பேனியா | 1.1 |
| அங்கேரி | 0.1% |
| இத்தாலி | 0.3% |
| போர்த்துக்கல் | 1.7% |
| ருமேனியா | 0,1% |






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தை உழைப்பு முதலாளித்துவ மூலதனத்தைத் திரட்டுவதில் முக்கியமான பங்கை வகித்தது. மிக இளமையில் குழந்தைகளின் இயல்பான வாழ்க்கையைச் சிதைத்து இயந்திரத்தனமானதாக மாற்றுவதன் மூலம் மிகக் குறைந்த கூலிக்கு எதிர்ப்பற்ற இலகுவான சுரண்டலை நடத்த முடிகின்றது.

ஐரோப்பிய முதலாளித்துவப் புரட்சியைத் தொடர்ந்து வளர்ச்சி பெற்ற மூலதனம் தனது மூலதனத் திரட்சியைக் கொண்டு குழந்தை உழைப்பை, பெண்கள் உழைப்பை வாரம் ஏழு நாட்களும் நாள் ஒன்றுக்கு 18 மணி நேரத்துக்கு ஒட்டச் சுரண்டியதால் வேகமான வளர்ச்சி கண்டது.

இதை **மார்க்ஸ்** கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார். "முன்னதாகத் தொழிலாளி தன் சொந்த உழைப்புச் சக்தியை விற்றார். அதை அவர் பெயரளவில் சுதந்திரப் புருஷராய் விற்றார். இப்போது அவர் மனைவியையும் குழந்தையையும் விற்கிறார். அவர் அடிமை வியாபாரியாகியிருக்கிறார். குழந்தைகளின் உழைப்புக்கான கோரிக்கை முன்னதாக அமெரிக்கப் பத்திரிக்கை விளம்பரங்களில் காணப்பட்ட நீக்ரோ அடிமைகளுக்கான விவரக் கோப்புகளைப் போலவே இருக்கிறது." (மூலதனம் பாகம் : 1, புத்தகம் : 1, பக்கம்-536)[4]

இருபதாம், இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள நாகரிகத்துக்கு முந்திய நூற்றாண்டு பச்சிளம் கைகளின் உழைப்பால் வறண்டுபோன வறட்சியில் தான் இன்று குளிர்மையைக் கண்டுள்ளது. ஆணின் உழைப்பு மட்டுமே கொண்டு குடும்பத்தைப் பராமரிக்க போதுமான கூலியைப் பெற்று வாழ்ந்த நிலையை, முதலாளித்துவம் ஆணின் கூலியைக் குறைத்ததன் மூலம் பெண்ணின் உழைப்பை நிபந்தனையாக்கியது. **மார்க்ஸ்** மூலதனத்தில் குறிப்பிட்டது போல், "இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்தி முதலாளிகள் முதலில் நாடிச் சென்றது மாதர்கள், குழந்தைகளின் உழைப்பையே. உழைப்புக்கும் தொழிலாளர்களுக்குமான அந்த வலிமை பொருந்திய பதிலி, பால் அல்லது வயது வேறுபாடின்றி தொழிலாளியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் மூலதனத்தின் நேரடி ஆளுகையில் வேலைக்குப் பதிவு செய்து கொண்டதன் மூலம் கூலித் தொழிலாளர்களின் தொகையை அதிகமாக்குவதற்கான சாதகமாய் உடனடியாகவே மாற்றப்பட்டது. முதலாளிக்கான கட்டாய உழைப்பு குழந்தைகளது விளையாட்டின் இடத்தை மட்டுமல்லாமல், குடும்பத்தின் ஆதாரத்துக்கான மிதமான வரம்புகளுக்குட்பட்டு வீட்டில் நடக்கும் சுதந்திர உழைப்பின் இடத்தையும் அபகரித்துக் கொண்டது." (மூலதனம் பாகம்: 1, புத்தகம்: 1, பக்கம்-534)[4]

இது பெண்ணை வீட்டுக்கு வெளியில் உழைப்பில் ஈடுபடுத்த தொடங்கியதுடன், ஆண் - பெண்ணின் உழைப்பை மேலும் ஆழமாகச் சுரண்டியதோடு குழந்தைகளை உழைப்பில் இறக்க நிர்ப்பந்தித்தது. இதை **மார்க்ஸ்** மூலதனத்தில் எப்படி திருமணத்தின் வயதைக் கூட தீர்மானிக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.





"நவீனத் தொழில் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் வாழ்கின்ற நிலைமைகளில் தவிர்க்க முடியாத விளைவாகிய இளம் வயது திருமணங்கள் இந்தச் சமுதாயத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சீக்கிரமாய் பிள்ளை பெற்று வேலைக்கு அனுப்புவதால், கிடைக்கக் கூடிய கூடுதல் வருமானமும் இதற்கு உதவுகிறது. (மூலதனம் பாகம்: 1, புத்தகம்: 2, பக்கம்-863)[4]

குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் உழைத்தால் மட்டுமே நாகரிக ஜனநாயக முதலாளித்துவ அமைப்பின் கூலியில் கஞ்சி குடிக்க முடியும் என்ற நிலைமையை மூலதனத் திரட்சி நிபந்தனையாக்கியது. இதற்கு எதிரான போராட்டத்தை ஆண் தொழிலாளர்கள் தமது எதிர்ப்பின் மூலம் வெளிப்படுத்தினர். இது ஆணாதிக்கச் சிந்தனைக் கோட்பாட்டு மரபு வழிகளில் தனது எதிர்ப்பைக் காட்டிய போதும் இந்தப் போராட்டத்தின் நியாயமான பக்கம் நிராகரிக்க முடியாதவையாகும். ஆண்கள், பெண்களின் கடின உழைப்பை மட்டுமல்ல சொந்தக் கடின உழைப்பின் வாழ்க்கையைக் கூட சகித்துக் கொள்ள முடியாத பட்டினியில் இருந்தே பெண்களுடைய உழைப்பின் பாத்திரத்தை எதிர்த்தனர்.

அன்று "தென் அமெரிக்காவிலுள்ள சுரங்கங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் அன்றாடம் செய்ய வேண்டிய வேலையானது 450 அடி ஆழத்திலிருந்து 180 முதல் 200 இறாத்தல் எடையுள்ள உலோகச் சுமையைத் தோளில் தூக்கி மேலே தரைமட்டத்துக்குத் கொண்டு வருவதாகும். அவர்கள் ரொட்டியும் மொச்சையும் மட்டும் உண்டு வாழ்கின்றனர். ரொட்டியை (பாண்) விரும்பி உண்பதால் இவ்வேலையைச் செய்யமுடியாது எனக் கருதிய அதிபர்கள் மொச்சையை உண்ணுமாறு கட்டாயப்படுத்துகின்றனர்.

24 வயதுடைய இளம்பெண் இரண்டு சிறுமிகளின் உதவியுடன் நாளொன்றுக்கு 2,000 ஓடுகள் செய்வது வழக்கம். அப்பெண்ணுக்கு உதவியாக இரு சிறுமிகள் களிமண் சுமந்தனர், ஓடுகளை அடுக்கினர். 30 அடி ஆழத்திலிருந்து களிமண் குழிகளில் வழுக்கலான சரிவுகளில் நாளொன்றுக்கு 10 டன் சுமந்தனர். பின்னர் 210 அடி தூரத்துக்கு அதைச் சுமந்து சென்றனர்..."[4] இப்படியாக ஆண்கள் மட்டுமல்ல பெண்களினதும், குழந்தைகளினதும் இழிவான துன்பத்தைச் சகிக்க முடியாத ஆண்கள், இந்த உழைப்பை எதிர்த்தனர். கடுமையாக உழைத்து வரும் ஆண் வீட்டில் ஆற்றிக் கொள்ள முடியாத நெருக்கடியில் சிக்கிய போது அதைக் கண்டு கோபம் கொண்டான். இதனால் பெண்ணை மீண்டும் வீட்டுக்கு அனுப்பும் படி போராடினான்.

பெண்களின் உழைப்பைச் சுரண்டி சூறையாடிய முதலாளித்துவம் குழந்தைகளையும், கணவனையும் பராமரித்த பெண்ணின் நிலையை முதலாளித்துவம் தனது சுரண்டும் நலனுக்காக மறுதலித்ததேயொழிய, பெண்ணின் விடுதலைக்காக அல்ல. இது பெண்ணைப் புதிய பரிணாமத்துக்கு நகர்த்தியது. "அதீத இறப்பு வீதங்களுக்கு வட்டார அளவிலான காரணங்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருபுறமிருக்க, பிரதானமாக, தாய்மார்கள் வீட்டை விட்டுச் சென்று வேலை செய்வதும், அதனால் ஏற்படுகின்ற கவனிப்பின்மையாலும் தகாத முறைகளாலும் விளையும் ஊட்டப் பற்றாக்குறை, பொருந்தா உணவு, அபின் ஊட்டி உறங்கச் செய்தல் போன்ற கேடுகளும் காரணங்களாகும். மேலும் தாய்க்கும், சேய்க்கும் இடையே இயற்கைக்கு ஒவ்வாத பிணக்கு தோன்றுகின்றது. இதன் விளைவாக, வேண்டுமென்றே பட்டினி போடுவதும், நஞ்சூட்டுவதும் நிகழ்கின்றன."[4] இதில் இருந்து தான் ஆண் தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை எதிர்த்தும், பெண்ணை மீண்டும் வீட்டுக்கு அனுப்பக் கோரியும் போராடினர்.

இந்தப் பக்கத்தில் இருந்த பாரம்பரிய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தை, பாட்டாளி வர்க்கத்தின் போதனையூடாகத் திருத்தி மேலும் சரியாகப் போராடக் கற்றுக் கொண்டது. முதலாளித்துவப் பெண்ணியல் கோட்பாட்டாளர்கள் எப்போதும் இந்த ஆண் தொழிலாளர்களின் போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்கு எதிராக நிறுத்துகின்றனர். இதை இன்று முன்நிறுத்தும் போது அக்காலகட்டத்தின் யதார்த்த நிலையைத் திட்டமிட்டு மூடி மறைக்கின்றனர். பெண் உழைப்பால் ஆணின் கூலி மேலும் வீழ்ச்சி உற்றதையும், பெண்ணின் உழைப்பை இரட்டிப்பு ஆக்கியதையும், குழந்தை உழைப்பின் மூலம் சூறையாடும் வடிவத்தைத் திட்டமிட்டே மூடிமறைக்கின்றனர். பின்னால் ஆண்கள் இப்படி என்று நிறுத்துவதன் மூலம் முதலாளித்துவச் சுரண்டல் வடிவத்தைக் கட்டிப்பிடித்து பாதுகாக்கின்றனர்.

குழந்தை உழைப்பை முதலாளித்துவ அமைப்பே உருவாக்கியது மட்டுமின்றி பெண்ணையும் சுரண்ட பெண்களை வீட்டுக்கு வெளியில் கொண்டு வந்தது. இந்தப் பக்கத்தைக் கவனமாக மறைத்தபடி ஆண் தொழிலாளர்களின் வாழ்க்கையை நாசமாக்கியதையும், இதன் ஊடாக மொத்தக் குடும்பத்தையும் சிதைத்ததையும் கவனமாக மூடிமறைக்கின்றனர். "குடும்பத்தின் ஜீவனத்துக்காக, ஒருவருக்குப் பதில் இப்போது நால்வர் உழைக்க வேண்டும் என்பதோடு, முதலாளிக்கு உபரி - உழைப்பும் தரவேண்டும்."[4] இதைத்தான் அன்று மூலதனம் பெண் உழைப்பு, குழந்தை உழைப்பின் ஊடாகச் சாதித்தது.

பாட்டாளிவர்க்கம் இந்த ஆண் தொழிலாளர்களின் தவறான பக்கத்தைத் திருத்தியதுடனும், பாட்டாளி வர்க்க உணர்வை ஊட்டியதுடனும் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஈவிரக்கமின்றி சுரண்டப்படுவதையும், பொதுவான சுரண்டல் வடிவத்தை எதிர்த்தும் போராடக் கற்றுக் கொடுத்தது. இதன் மூலம் குழந்தை உழைப்பு படிப்படியாகத் தடை செய்யப்பட்டது மட்டுமின்றி பெண்களின் கூலியை ஆணுக்குச் சமமாகக் கொண்டு வரும் போராட்டம் இன்று வரை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதில் பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து, தலைமை தாங்கிப் போராடும் புதிய வடிவத்தைப் பாட்டாளி வர்க்கம் கற்றுக் கொடுத்தது. இதை மறுக்கும் பெண்ணாதிக்கம், பெண்ணின் தனித்துவத்தை மீள (முன்பு ஆணாதிக்கம் பெண்ணைத் தனித்துவமாக ஒதுக்கி வைத்திருந்தது.) சுதந்திரமாகக் கோருகின்றது.



**மார்க்ஸ்** இந்த ஆண் தொழிலாளர் போராட்டத்தையும் இதனால் குழந்தை உழைப்பு தடை செய்யப்பட்டதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றார். "இயந்திரச் சாதனமானது, தொழிலாளர் தம் அணிகளில் மாதர்களையும் குழந்தைகளையும் அளவுக்கதிகமாகச் சேர்த்ததன் மூலம், மூலதனத்தின் கொடுங்கோன்மைக்கு ஆண் தொழிலாளர்கள் பட்டறைத் தொழிற்காலத்தில் தொடர்ந்து காட்டி வந்த எதிர்ப்பை இறுதியில் உடைத்திடுகிறது." (மூலதனம் பாகம்: 1, புத்தகம்: 1, பக்கம்-545)[4]

தொழிலாளர் வர்க்கம் பலம்பெற்ற நாடுகளில் குழந்தை உழைப்பு ஒழிக்கப்படுவதைத் தீவிரமாக்கியது. நவீன தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைச் சாதகமாகக் கொண்டு முதலாளித்துவ அமைப்பு தன்னை மீள அமைத்துக் கொண்டு புரட்சியைப் பின் தள்ளியது. தொழிலாளர் வர்க்கம் பலவீனமான மற்றும் முதலாளித்துவப் புரட்சி நடைபெறாத நாடுகளில் குழந்தை உழைப்பு சதையுள்ள சுரண்டலாக உள்ளது. முதலாளித்துவ நாடுகளில், இதை ஒழிக்கத் தொழிலாளர் வர்க்கம் போராடிக் கொண்டிருந்த போது, இந்த நாடுகளின் காலனிகளில் இதை முழு வீச்சில் ஏகாதிபத்தியங்கள் கட்டிக்காத்து ஊக்குவித்தன.

உலகளவில் சோவியத் புரட்சியின் தாக்கம், பின்னால் தொடர்ந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிகள், காலனிக்கு எதிரான தேசிய விடுதலை எழுச்சிகள் குழந்தை உழைப்பை ஒழிப்பதை நிபந்தனையாக்கியது. இங்கு ஏகாதிபத்தியம் இதை உயிருடன் வைத்திருக்க, பாதுகாக்க போராடியது. பின்னர் காலனித்துவக் கைமாற்றல்களின் பின்னாலான நவகாலனித்துவ மற்றும் அரைக்காலனித்துவ வடிவத்தை உருவாக்கியது. இது ஏகாதிபத்திய நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்ததன் மூலம் குழந்தை உழைப்பு கேள்விக்கு உள்ளாகவில்லை.

ஆனால் இன்று வீச்சுபெற்றுவரும் ஏகாதிபத்திய உலகமயமாதல் மூலதனத் திரட்சியை நேரடியாகத் தேசம் கடந்து திரட்டும் புதிய வடிவத்தில் குழந்தை உழைப்பை இடைஞ்சலான வடிவமாகக் காண்கின்றது. தேசம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தியைச் சர்வதேசமயமாக்கி சுரண்டுவதால், மூன்றாம் உலகில் மலிவுக் கூலியில் உற்பத்தி செய்து மேற்கில் மூலதனத்தைத் திரட்ட முடிகின்றது. இந்த மூலதனத் திரட்டலில் குழந்தை உழைப்பின் ஊடாகத் திரட்டப்படுகின்ற போது, அது சொந்த நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் கடுமையான எதிர்ப்பை எதிர்த்து விற்க முடியாத பகிஸ்கரிப்பை (புறக்கணிப்பை) எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் சொந்த நாட்டில் உற்பத்தியான பொருளை மூன்றாம் உலகில் விற்கின்ற போது, அந்நாட்டில் சந்தையின் பெறுமானத்தில் மூலதனத்தைத் திரட்ட முடியாத நிலைக்குள் சிக்கிக் கொள்கின்றது.

மூன்றாம் உலகில் தேசிய முதலாளித்துவம் மற்றும் நிலப்பிரபுத்துவ உற்பத்திகள் மலிவுக்கூலியான குழந்தை உழைப்பு சார்ந்து ஏகாதிபத்தியச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தை வடிவத்தைப் போட்டிக்குள்ளாக்குகின்றது. இந்த உழைப்பை ஏகாதிபத்தியம் பயன்படுத்த முடியாத அளவுக்கு மேற்கு பாட்டாளி வர்க்கத்தின் போராட்டமும், மூன்றாம் உலகில் மலிவான உற்பத்தியும் ஏகாதிபத்தியச் சந்தையை நெருக்கடிக்கு உள்ளாக்கி, மூலதனத் திரட்சியை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது.

இதை ஏகாதிபத்திய அமைப்பு சகித்துக் கொள்ள முடியாத நிலையில் குழந்தை உழைப்புக்கு எதிராக மனித வரலாற்றில் சுரண்டும் வர்க்கம் முதன்முதலாகக் குரல் கொடுக்கின்றது. இது பெருமூலதனம் சிறுமூலதனத்துக்கு எதிராகத் தன்னை அமைப்பாக்கி போராட்டத்தைக் கோருகின்றது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டக் கோட்பாட்டுக்கு உள்ளிருந்தே சிதைத்த முதலாளித்துவம், பாட்டாளிவர்க்கத்தின் வீறுமிக்க போராட்டத்தை அதன் அரசியல் உள்ளடக்கத்தில் சிதைத்தது. இதனால் குழந்தை உழைப்புக்கு எதிரான ஏகாதிபத்தியப் போராட்டத்தை, அரசியல் மயப்படாத தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்திய அரசியல் உள்ளடக்கத்தில் ஏற்றுள்ள நிலை பரவலாகக் காணப்படுகின்றது.

ஆனால் பாட்டாளி வர்க்கம் தன்னையும், தனது கோட்பாட்டையும் வர்க்கப் போராட்டத்தில் ஒழுங்கமைத்து, குழந்தை உழைப்புக்கு எதிரான தனது நிலைப்பாட்டைத் தெளிவாக ஒழுங்கமைக்கின்றது. பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியக் குழந்தை உழைப்பின் ஒழிப்பை நிபந்தனையின்றி எதிர்க்கின்றது. குழந்தை உழைப்புக்குக் காரணமான சமூக நிலைமையை மாற்றாமல் குழந்தை உழைப்பை ஒழிப்பதானது அந்தக் குழந்தையினதும், குடும்பத்தினதும் வாழ்க்கையை மேலும் சிதைக்கும் என்பதை அம்பலப்படுத்துகின்றது. ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு தான் மூன்றாம் உலகில் குழந்தை உழைப்பைப் பாதுகாக்கும் மறைமுக நேரடி வடிவம் என்பதை அம்பலப்படுத்துகின்றது.

இதையொட்டி **மார்க்ஸ்** "பெரிய அளவிலான தொழிற்சாலைகள் இருக்கும் நிலையில், குழந்தைத் தொழிலாளர்களைப் பொதுவாகத் தடை செய்வது ஒத்துவராது, எனவே அது ஒரு வெற்று அவா"[5] என்று கூறினார். மேலும் பெற்றோர்கள் குழந்தைகளைச் சுரண்டுகின்றனர் என்பதையும் கீழ்க்கண்டவாறு மறுக்கின்றார் மார்க்ஸ். அதாவது "முதலாளித்துவச் சுரண்டல் என்பது பெற்றோர் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் விளைந்தது அல்ல. மாறாக முதலாளியின் சுரண்டல் பாங்கே பெற்றோர்களின் அதிகாரத்தின் பொருளாதார அடிப்படையைப் பறித்து விட்டதால், குழந்தைகள் மீது, தங்களது உண்மையான அதிகாரத்தை அவர்கள் விஷமத்தனமாகத் தவறான தேவைக்குப் பயன்படுத்த வகை செய்தது."[5] மார்க்ஸின் இந்தக் கருத்தைத் தன்னார்வக் குழுவைச் சேர்ந்த ஏகாதிபத்தியத் தொண்டர் அமைப்புகள் குறிப்பிட்டு மார்க்ஸ் கருத்து தவறானது என்று விமர்சிக்கின்றது. ஏனெனின் இன்று மேற்கில் குழந்தை உழைப்பு ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும், கல்வி கிடைத்துவிட்டதாகவும் காட்டுகின்றனர். ஆனால் வரலாற்றில் அக்காலத்தில் இவை கிடைத்துவிடவில்லை.





மாறாக மார்க்ஸ் வழிகாட்டிய பாட்டாளி வர்க்கம் தீவிரமான நீண்ட போராட்டத்தை (இன்று இதை எழுதும் தன்னார்வக் குழுவுக்குப் பணம் வழங்கும் அமைப்புக்கு எதிராக நீண்ட தீவிரமான போராட்டத்தை) நடத்தியே இதைச் சாதித்தது. கைக்கூலித் தனத்தில் குழந்தை உழைப்பு பற்றி எழுதிய அந்த நூல் தனது சொந்த வரலாற்றையே போராடிய வர்க்கத்துக்கு எதிராக நிதி ஆதாரத்தில் கட்டமைத்து சோடித்துக் காட்டிப் பாதுகாக்கின்றனர். இன்று பெரும் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்குக் குழந்தை உழைப்பு தடையாவதால் எதிர்க்கும் ஏகாதிபத்தியத்தின் நிலையை, அன்றைய பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக நிறுத்தி ஏகாதிபத்திய அமைப்பைக் கைக்கூலித்தனத்தில் நிறுவுகின்றனர்.

பாட்டாளி வர்க்கம் சொந்த நாட்டில் குழந்தை உழைப்பை எதிர்த்து தேசியப் புரட்சியைக் கோருகின்றது. தேசியப் புரட்சி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்துகின்ற போது தேசிய முதலாளித்துவ வளர்ச்சிக்கு உதவுவதன் மூலமும், சொந்த வர்க்கத்தின் தலைமையில் ஆட்சியை அமைத்து குடும்பத்தின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதன் மூலமும் குழந்தை உழைப்பை ஒழிக்கப் போராடுகின்றது.

சில மூன்றாம் உலக நாடுகளில் 50 சதவீதத்துக்கும் மேல் குழந்தை உழைப்பில் ஈடுபடும் நிலைமை என்பது தன்னிச்சையாக பெற்றோர் விரும்பி செய்தவையல்ல. ஒரு தாய் தனது குழந்தையைக் கணவனுடன் சேர்ந்து சூறையாடும் உழைப்பில் ஈடுபடுத்தும் ஈவிரக்கமற்ற இயந்திரங்கள் அல்லர். அவர்கள் இயற்கையாகக் குழந்தை மீதான பாதுகாப்பில் அதிகமாக உயிராற்றலை வெளிப்படுத்துபவர்கள். இது உயிரியல்விதி. தாய்மையின் உயர்ந்த பண்பையும் அதன் வெளிப்பாட்டையும் பட்டினி போட்டு அழிக்கும் இந்த ஏகாதிபத்தியச் சுரண்டல் கொடூரத்தின் மூலம், உயிர் வாழ்தலுக்காக உழைத்தலை நிபந்தனையாக்குகின்றது. இந்த இளம் வயது உழைப்பு, பற்றாக்குறையிலான வாழ்க்கையையும் குழந்தை மரணத்தையும் தீவிரமாக்குகின்றது.

**மார்க்ஸ்** இதுபற்றி "..உண்மையில், பிறப்பு-இறப்பு எண்ணிக்கை மட்டுமல்லாமல் குடும்பங்களின் அறுதி அளவும் கூட கூலி மட்டத்தோடு எதிர் விகித உறவு கொண்டுள்ளது. எனவே தொழிலாளர்களின் வெவ்வேறு வகையினர் பயன்படுத்தும் வாழ்வுச் சாதனங்களின் அளவோடும் எதிர்விகித உறவு கொண்டுள்ளது. முதலாளித்துவச் சமுதாயத்தின் இந்த விதி காட்டுமிராண்டிகளுக்கு, ஏன், நாகரிகக் குடியேற்றக்காரர்களுக்கே கூட அபத்தமானதாகவே தோன்றும். தனிநிலையில் பலமற்றதாகவும் ஓயாமல் வேட்டையாடி ஒழிக்கப்படுவதாகவும் இருக்கும் மிருகங்கள் தமது இனத்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரம்பின்றிப் பெருக்கிக் கொள்கின்றன அல்லவா, அதைத் தான் இந்த விதி நமக்கு நினைவுபடுத்துகிறது"[4] என்றார். இதனால் இயற்கையான, அதிக அழிவைக் கொண்ட உயிரினங்கள் அதிகமாக பெருகுவது என்ற இயற்கையின் பரிணாம விதிக்கமைய குழந்தை பிறப்பு அதிகரிக்கின்றது. இது மட்டுமே உயிர்வாழும் அந்த இனமக்கள் கூட்டத்தின் உயிர் வாழ்தலுக்கான அடிப்படை விதியாகும். இதை ஏகாதிபத்தியம் திசை திருப்பி அதிக குழந்தைகளே வறுமைக்கு காரணம் என்ற திரிபை புகுத்தி சுரண்டலை தீவிரமாக்குகின்றனர். அந்த மக்களின் சொந்த தேசிய உழைப்பை சூறையாடி நாசமாக்கியபடி அவர்களை கையேந்தும் நிலைக்குள்ளாக்கி உணவுக்கு மற்றவனை எதிர்பார்க்கும் (தன்னார்வக் குழுக்களின் உதவிகள், மத அமைப்புகளின் தயவுகள், ஏகாதிபத்திய உதவிகள் போன்றன) நிலைக்குத் தரம் தாழ்த்தியுள்ளனர்.

குழந்தையின் பிறப்பு விதியை இயற்கைக்குப் புறம்பாக ஏகாதிபத்தியம் செய்யும் பிரச்சாரத்தில் ஈர்க்கப்படும் ஆணுக்கு எதிரான பெண்ணியக் கோட்பாட்டாளர்கள், கர்ப்பத்தடை, குடும்பக் கட்டுப்பாடு, கருஅழிப்பு என்ற ஏகாதிபத்தியப் பதாகையைத் தூக்கிக் கொண்டு வலம் வருகின்றனர். இதற்குப் பெண்ணின் சுய உடல், சுதந்திரக் கட்டுப்பாடு என்று வேறு விளக்கங்களையும் வைத்து மூடிமறைக்கின்றனர். இந்த ஆணாதிக்க ஏகாதிபத்தியச் சிந்தனைக்கு வெளியில், எப்படி பெண் சுதந்திரமாகச் சிந்தித்து, சுதந்திரமாக உடல் கட்டுப்பாட்டைக் கொண்டு வாழமுடியும் என்று கேட்டால் பதிலளிப்போர் யாரையும் காணமுடிவதில்லை. இதை வறட்டு வாதம் என்று கூறி விபச்சாரம் செய்கின்றனர்.

பச்சிளம் பாலகர்கள் சிறு பிராயத்தில் தமது இளமையை உழைப்பில் ஈடுபடுத்தும் போது அந்த இரத்தக் கசிவு **சதையுள்ள மூலதனமாகத் திரண்டு, கலையுள்ள கொழுப்பாகின்றது.** ஆனால் குழந்தைகளின் எலும்புகள் இயந்திரத்தின் உறுப்பாகின்றது. இந்த ஜனநாயக முதலாளித்துவ அமைப்பின் நாற்றம் உலகு எங்கும் 25 கோடி சிறுவர்களின் உழைப்பால் கட்டிக் காக்கப்படுகின்றது. இது முந்திய பிந்திய நாகரிகத்தின் மூலதனத்தை நவீனமாக்குகின்றது. இதைப் பாட்டாளி வர்க்கம் தனது போராட்டத்தின் ஊடாக வேரறுப்பதை யாரும் தடுக்க முடியாது.

இது ஒருபுறம் இருக்க குழந்தைகள் நவீன வடிவில் சுரண்டப்படுவது நாகரிகமாகியுள்ளது. பாலியல் ரீதியில் சுரண்டுவதை எதிர்க்காத ஏகாதிபத்தியம் குழந்தைகளை விளம்பரத்துக்கும், அழகிப் போட்டிக்கும் அனுப்பி, நுகர்வு வக்கிரத்தை ஏற்படுத்தி, நுகரும் நாகரிக விளம்பரச் சந்தையின் பங்காளியாகப் பயன்படுத்தும் போது இதை ஏகாதிபத்தியம் எதிர்ப்பதில்லை. அமெரிக்காவில் நடக்கும் குழந்தை அழகிப் போட்டிகள் இன்று இந்தியா வரை நீண்டு உள்ளது. இதை இந்த நவீன உழைப்பின் சேவைத் துறை உழைப்பாக மூலதனத்தைத் திரட்டுவதாக உள்ளது. குழந்தை உடல் உழைப்பில் ஈடுபடும் போது அதை எதிர்க்கும் ஏகாதிபத்தியம், சேவைத்துறை சார்ந்தும், பண்பாடு - கலைத்துறை



சார்ந்தும் சொகுசான உழைப்பில் ஈடுபடுவதை இந்த ஏகாதிபத்தியம் எதிர்ப்பதில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பதெல்லாம் தனது சுரண்டலைத் தீவிரமாக்க தடையான பிரிவுகளை மட்டுமே. தனது மூலதனத் திரட்சிக்குச் சாதகமான குழந்தை உழைப்பை ஊக்குவித்து ஜனநாயகத்தின் சுதந்திரமான பக்கமாகக் காட்டித் தன்னை அலங்கரிக்கின்றது. இதைப் பாட்டாளி வர்க்கம் இனம் கண்டு அம்பலப்படுத்தி குழந்தை உழைப்பை ஒட்டு மொத்தமாக ஒழித்துக்கட்டப் போராடுகின்றது.

இந்தியாவில் கிராமப் புறங்களில் 43 சதவீதமான சிறுவர்களும், 69 சதவீதமான சிறுமிகளும் நகரத்தில் 17 சதவீதமான சிறுவர்களும், 36 சதவீதமான சிறுமிகளும் வறுமை காரணமாகப் பாடசாலை செல்வதில்லை. படிக்கும் மாணவர்களில் ஐந்தில் ஒரு மாணவன் படிப்பை முடிக்காது படிப்பை இடையில் கைவிடுகின்றான். கல்வி பயிலும் 8 சதவீதமான மாணவர்களுக்குக் கரும்பலகையோ, இருக்க கதிரையோ (பெஞ்ச்) கிடையாது என 42ஆவது சுற்று தேசிய சர்வே அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. (1.7.1990)[1] யாழ்குடாவில் 20,600 சிறுவர்கள் வறுமை காரணமாகப் பாடசாலை செல்லவில்லை. இலங்கையில் 1.5 இலட்சம் சிறார்கள் வீட்டு வேலைகளில் வேலைக்காரர்களாக நசிகின்றனர். கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் 2.2 இலட்சம் சிறுவர்கள் வீதியில் வாழ்கின்றனர். (27.9.1998)[6]

சுதந்திர ஜனநாயகத்தினுடைய வக்கிரத்தின் விளைவால், பிரான்சில் 30 இலட்சம் பேர் எழுதப் படிக்கத் தெரியாதோராக அதிகரித்து வருகின்றது. இது மொத்த ஜனத்தொகையில் 10 முதல் 20 சதவீதமாகும். (2.12.1998)[7] ருசியாவில் கி.பி. 1908-இல், 1,000 குடி மக்களுக்கு 46.7 பேரே பாடசாலை சென்றனர். இது கி.பி. 1904-இல், 44.3 பேர் மட்டுமேயாகும். பள்ளி செல்லக் கூடியோர் ஜனத்தொகையில் 22 சதவீதம் இருக்க 4.7 சதவீதம் பேர் மட்டுமே சென்றனர். ஜனத்தொகையில் 21 சதவீதம் பேர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர்.[8]

குழந்தைகளுக்கான கல்வி என்பது வறுமையுடன் தொடர்புடையதாகப் பொதுவாக உள்ளது. இதை விட நிறம், சாதி, பால், இனம், வர்க்கம் சார்ந்து கல்வி மறுக்கப்படுவதும் உண்டு. கல்வி பற்றிய சமுதாயத்தில் முதலாளித்துவ ஜனநாயக அமைப்புக்குப் பின்புதான் கல்வி மறுப்பு அரசியல் வடிவம் பெற்றது. இது முதலாளித்துவ மூலதனத் திரட்டலுக்குக் குழந்தைக் கல்வி கோட்பாட்டு மறுப்பைப் பெறுகின்றது. நிலப்பிரபுத்துவம் நீடித்து வந்த காலத்தில் சமுதாயத்தின் கிராமியப் பொருளாதாரங்கள் வடிவத்தையொட்டி அச்சமுதாயத்தில் பல்வேறுவிதமான கல்வி காணப்பட்டது. அது சமுதாயம் சார்ந்து, உழைப்பு சார்ந்து அதன் எல்லைக்குள், தேவைக்குள் இக்கல்வி சுயாதீனமாக மக்கள் தமது தேவையுடன் தாமே ஒழுங்குபடுத்தினர். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ மூலதனம் திரண்டு பெரும் உற்பத்தியாக விரிவுபட்ட போது அதற்கே உரிய கல்வியை வழங்க மறுத்தது. அதற்குப் பதில் குழந்தை உழைப்பை மூலதனத் திரட்டலுக்கு அவசியமான, மலிவான இயந்திர வடிவமாகக் கண்டது.

முதலாளித்துவம் குழந்தை உழைப்பை எப்படி நியாயப்படுத்தியது எனப் பார்ப்போம். "அவர்களது வேலைக்குரிய துணியின் மென்மையான இழை நயத்துக்கு, விரல்களின் மெல்லிய தொடுநயம் தேவை, இந்தத் தொழிற்சாலைகளில் அவர்கள் பிள்ளைப் பிராயம் முதலே பழகினாலன்றி இந்தத் தொடு நயத்தைப் பெறமுடியாது"[4] என்று ஜனநாயக முதலாளித்துவம் குழந்தை உழைப்பை நியாயப்படுத்தி வாதாடிய போது, **மார்க்ஸ்** தனது விமர்சனத்தில் "குழந்தைகள் முழுக்க முழுக்க அவர்களின் மெல்லிய விரல்களுக்காகவே வதைக்கப்பட்டனர்"[4] என்று விமர்சித்தார். மேலும் "சித்திரப் பின்னல் இடங்களில் இரண்டு, இரண்டரை வயது குழந்தைகள் காலை ஆறு முதல் இரவு எட்டு மணி வரை கசக்கி பிழியப்படுகின்றனர்.... வேறு இடத்தில் 8-9 மணிக்கு வேலை முடிந்து செல்லும் போது **'இது அம்மாவுக்காக'** என்று கூறி இறுதி சித்திரப் பின்னல் வேலையை வீட்டுக்கு அனுப்பி மூலதனத்தைக் குவித்தனர். (இது என்னால் சுருக்கப்பட்டது. விபரமாக இந்தச் சூறையாடலைப் புரிந்து கொள்ள மூலதனத்தைப் படிக்கவும்.)"[4]

இதனால் சிறுவயது குழந்தைகளின் கல்வி மறுப்பு மூலதனத்தின் சுதந்திரமான நலன் கருதி முதலாளித்துவத்தின் ஜனநாயகக் கோட்பாடாகியது. இதைப் போற்றி மகுடம் சூட்டிக் கொள்ள, இதில் ஜனநாயகத்தைப் பூதக்கண்ணாடி வைத்து தேடினர். டயானா சீமாட்டியும், அன்னை திரேசாவும் மனிதச் சமூகத்தை மீட்கப் பிறந்த மீட்பாளர்கள் ஆகியது போல் ஆக்கிய, ஆக்கிய பெருமை இந்த மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு எப்படி இருந்ததோ அது போல் அன்றும் குழந்தை உழைப்பைப் போற்றினர்.

"..தொழிலின் முக்கிய இடமான நார்விச்சில் ஆறு வயதுள்ள சிறிய ஜீவனும் கூட உழைப்புக்கு லாயக்கானதென்று (தகுதியானதென்று) கருதப்பட்டது. தாராளக் குணத்துக்குப் பேர் போனவர்கள் எனக் கருதப்பட்ட சிலர் உட்பட அந்தக் காலத்திய எழுத்தாளர்கள் பலரும், அந்த ஒரு நகரத்தில் மட்டும் இளந்தளிரொத்த சிறுவர்கள், சிறுமிகளும் வருடம் ஒன்றுக்குத் தங்கள் சொந்த ஜீவனத்துக்கு அவசியமானதை விடப் பன்னிரண்டாயிரம் பவுன் மிகுதியாகப் படைக்கின்றனர் என்ற உண்மையைக் களிப்புடன் குறிப்பிடுகின்றனர்... அதாவது பஹாலந்தில் வறியோர் இல்லமொன்றில் நான்கு வயது குழந்தை வேலைக்கு அமர்த்தப்பட்ட விதத்தை 17-ஆவது நூற்றாண்டில் 'அன்புள்ளம் கொண்ட' வாணிப நேயர்கள் 'களிப்புடன்' விவரிக்கின்றனர் என்பதையும் 'நடைமுறை நற்பண்பு' என்பதன் உதாரணங்கள் ஆடம் ஸ்மித்தின் காலம் வரை மெக்காலே பாணியிலான எல்லா மனிதாபிமான நூல்களிலும் எடுத்தாளப்படுகிறது."[4]



அன்று முதல் முதலாளித்துவத்தின் மனிதாபிமான எச்சில்கள் மீது புகழாரங்கள் சூட்டப்பட்டன. இதை மாற்றத்தின் முன்மாதிரி வடிவமாகப் புகழப்பட்டது. இதன் பின்னால் மாபெரும் ஒடுக்குமுறை என்பது வெற்றியோடு பவனி வந்தது. இந்த ஒடுக்குமுறை ஜனநாயகப் பாராளுமன்றத்தில் மக்களின் வாக்குரிமைக்கு ஊடாக வளர்ச்சி பெற்றது. குழந்தைகளின் கல்வி மறுப்பும், உழைப்புக்கு நெட்டிச் (தள்ளிச்) செல்லும் சட்டக்கோவைக்காக மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனநாயகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றங்களில் வாக்களித்தனர். இதற்காகவே இந்தப் பாராளுமன்றம் தனது சுதந்திரமான மூலதனச் சூறையாடலுக்காக இன்று வரை சுதந்திரமாக வாக்களித்து சட்டத்தை இயற்றுகின்றது. இதற்கு எதிரான போராட்டம் தொழிலாளர் வர்க்கம் படிப்படியாக முன்னெடுத்த போது முதலாளித்துவம் அதற்கு எதிராகப் போராடியது.

"கி.பி. 1870-இல், அமெரிக்காவில் பெரிய தொழிற்சங்கக் கூட்டமைப்பான நைட்ஸ் ஆப் லேபர் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருப்பதைத் தடை செய்யக் கோரி போராடியது..... கி.பி. 1890-இல், நியூயார்க் குழந்தைத் தொழிலாளர் குழு, தேசிய நுகர்வோர் லீக், பெண்கள் சங்கப் பொதுக் கூட்டமைப்பு குழந்தைத் தொழிலாளர்களைத் தடை செய்யக் கோரி போராடியது."[5]

இதை மறுத்துப் போராடிய முதலாளித்துவம் பற்றி மார்க்ஸ் அழகாகவே குறிப்பிட்டுள்ளார். "இந்தக் கல்வி சரத்துக்களுக்குத் தொழிலதிபர்களே காட்டுகின்ற எதிர்ப்பு, அவற்றை ஏய்ப்பதற்காக அவர்கள் கையாளும் தந்திரங்களும், சூழ்ச்சிகளும் ஆகிய இவை யாவற்றிலும் முதலாளித்துவப் பொருள் உற்பத்தியின் ஆன்மா கண்கூடாகத் தெரிகிறது." (மூலதனம் பாகம்:1, புத்தகம்:1, 541)[4] இந்தளவுக்கு இன்றைய முதலாளித்துவ ஜனநாயகம் இன்று போல் அன்றும் கல்வியைக் குழந்தைகளுக்கு மறுத்தது. குழந்தை உழைப்பை வாட்டிப் பிழிந்து எடுத்த இரத்தத்தினதும், வியர்வையினதும் சுதந்திரமான எல்லை கடந்த வெளிப்பாடு தான், இன்றைய மூலதனத் திரட்சியைச் சாதித்தது.

இதே போல் அன்று கத்தோலிக்கத் திருச்சபை குழந்தைகளின் கல்விக்கான கோரிக்கையை, புனிதத்தின் மகிமையை நிலைநாட்ட எதிர்த்தது. நியூயார்க் திருச்சபை "கல்விக்கான மசோதா பெற்றோர்களின் உரிமையைப் பறிக்கின்றது (இது இன்று பெண்களின் கரு அழிப்புக்கு உடல் சுதந்திரம் என்று கூறுவது போல்) என்றும், குடும்ப வருமானத்தைக் குறைப்பதன் மூலம் வறுமை உருவாகும் என்றும் (இன்று வறுமைக்குக் காரணம் அதிக குழந்தைகள் என்று காரணம் கூறுவது போல்) வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் எதிர்த்தனர்."[5]

பிரெஞ்சுப் புரட்சி பற்றி அறிந்த ஆஸ்திரிய அதிகாரிகளும், திருச்சபையும் "அரசு நடத்தும் பாடசாலை கல்வி இளம் குழந்தைகளை, வேகம் நிறைந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளங்களை மனிதாபிமானம் என்ற போர்வையில், அழிவை ஏற்படுத்தும் சிந்தனைகளால் ஈர்க்கின்றனர். இந்தச் சிந்தனைகள், மிகவும் கீழ்மட்டத்து மக்களுக்கும் பரப்பப்பட்டு, அது மேலும் அடிவரை ஊடுருவ முயல்கின்றனர்"[5] என்று கி.பி. 1793-இல், அரசருக்கு எழுதினர். மதப்போதனை இல்லாத பொதுக்கல்வி ஆபத்தான விளைவை ஏற்படுத்தும் என்றனர். இப்படியாக எல்லா நாடுகளிலும் கிறித்தவம் போல் கல்வியை எதிர்த்தனர்.

பார்ப்பனியம் சூத்திர மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் திட்டவட்டமாக மறுத்தது. கல்வி நிபந்தனையாக உருவான போது அதை மதவாதம் மற்றும் முதலாளித்துவக் கல்வியாக மாற்றி இருக்கும் அமைப்புக்குச் சேவை செய்யக் கூடியதாக உருவாக்கினர். இன்று ஏகாதிபத்தியங்கள் கல்வியைத் தனது அமைப்பு நீடித்து வாழ எப்படி உருவாக்கி கட்டியமைக்கின்றதோ, அந்தளவுக்குக் கல்வி தனது தூய்மைத்தனத்தை இழந்து வர்க்கக் கல்வியாகியது.

இன்று மீண்டும் **'டங்கல்** ஒப்பந்தச் சரத்துப்படி பாடசாலைகளைத் தனியார்மயமாக்கி கல்வி பெற்று வரும் குழந்தைகளின் கல்விக்கு வேட்டுவைக்க தன்னாலான முயற்சிகளை மீளவும் தொடங்கியுள்ளது. குழந்தை உழைப்பைத் தடை செய்யக் கோரும் ஏகாதிபத்தியக் கூக்குரல்கள் குழந்தையின் கல்விக்கான உரிமையை நிலை நாட்டக் கோருவதில்லை. இதை மேலும் இல்லாது ஒழிப்பதை நிபந்தனையாக்குகின்றது. இது முதலாளித்துவ அமைப்பின் எல்லையில்லா சுரண்டல் கனவுகளின் ஜனநாயகமாகும்.

கி.பி. 1999-இல், ஆசியாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து "15 இலட்சம்"[9] குழந்தைகள் பாடசாலை செல்வதை நிறுத்தியுள்ளனர். "தென்கொரியாவில் 8.6 முதல் 14.8 சதவீதமாக"[9] வறுமை அதிகரித்துள்ளது. கல்வி இந்த உலகமயமாதல் சந்தை நிலைமைக்கு ஏற்ப மறுப்பதும், கொடுப்பதும் தீர்மானமாகின்றது. இந்தச் சுரண்டல் அமைப்பு கல்வியைத் தேவையாகவும், கடமையாகவும் கருதுவதில்லை. மாறாகத் தனது நலன்களையொட்டியே கல்வியைத் தீர்மானிக்கின்றது. சோவியத் அக்டோபர் புரட்சியும், சீனப் புரட்சியும் அந்த நாட்டுக் குழந்தைகளை உடனடியாகவே குழந்தை உழைப்பில் இருந்து விடுவித்ததுடன் தொடர்ச்சியாகப் போராடியது. பெற்றோரின் வாழ்க்கை நிலைமையை உயர்த்தியதுடன், மரபார்ந்த கல்விக்கு எதிராக ஆணாதிக்கக் கருத்துக்கு எதிராகக் கலாச்சாரப் புரட்சியின் போது போராடியது.

கி.பி. 1949-இல், சீனப் புரட்சி நடந்த போது எழுத்தறிவு மொத்த ஜனத்தொகையில் "20 சதவீதமாகவே"[5] இருந்தது. குழந்தைகளில் "நாலில் ஒருவரே"[5] ஆரம்பப் பள்ளியில் இருந்தனர். கி.பி. 1982-இல், "93 சதவீதம்"[5] பேர் பாடசாலை செல்வதை உறுதி செய்தது. அதே நேரம் எழுத்தறிவு 68 சதவீதமாக உயர்ந்தது. இந்த அதிகரிப்பு புரட்சியின் பின் முழுமையாக





ஏற்பட்டு விடவில்லை. கலாச்சாரப் புரட்சியில் தான் இதன் வேகம் என்றுமில்லாத அளவுக்கு வளர்ச்சி பெற்றது. இது கட்டாயக் கல்வி என்பதில் இருந்து கடமையாகவும், தேவையாகவும் அரசியல் மயப்படுத்தப்பட்டது. கி.பி. 1952-இல், பெண்களின் பங்கு ஆரம்ப பாடசாலையில் 23 சதவீதமாகும். இது கி.பி. 1975-இல், 45.2 சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது.

இது போல் சோவியத்தில் கி.பி. 1917-இல், 70 சதவீதம் எழுத்தறிவின்மை காணப்பட்டது. இதை கி.பி. 1931-இல், கட்டாயக் கல்வி கொள்கை அமுல் செய்யப்பட்டுக் கல்வி அனைவருக்கும் உறுதி செய்யப்பட்டது. வர்க்கப் போராட்டம் குழந்தையின் கல்வி மட்டுமின்றி பெண்களின் கல்வி மற்றும் சமவுரிமையையும் உறுதி செய்கின்றது. அத்துடன் புரட்சிக்கு அடுத்த நிமிடமே எல்லாம் மாறிவிடும் என்ற அராஜகவாதக் கண்ணோட்டமும், புரட்சி முடிந்து விட்டது என்ற இயங்கியல் மறுப்பு வாதமும் தவிடுபொடியாகின்றது. மாறாக வர்க்க முரண்பாடு நிலவுவதையும், ஏற்றத் தாழ்வு நீடிப்பதையும் **தொடர்ந்து வர்க்கப் புரட்சி** நடத்தப்படுவதன் மூலமே மேலும் மக்கள் தமது விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதையும் இது காட்டுகின்றது.

கல்வி என்பது சமுதாய வளர்ச்சியில் சுரண்டல் மற்றும் ஒடுக்கு முறைக்கு எதிரான கல்வியைக் கொண்டதாக இருக்கவேண்டும். இது மனித முரண்பாடுகளைக் களைவதை அடிப்படையாகக் கொண்டு மனிதத் தேவையை உள்ளடக்கி அதைப் பெறுவதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இன்று கிடைக்கும் கல்வியை அனைவருக்கும் உறுதி செய்யவும், ஏகாதிபத்தியக் கல்வியை மாற்றியமைக்கவும் கோராத போராட்டம் கல்வி மறுப்பாகவும் ஏகாதிபத்திய அமைப்பை உறுதி செய்வதுமாகவே இருக்கும்.

இன்று ஏகாதிபத்திய நலன்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரத்துக்காகச் சுரண்டும், சூறையாடும் கொள்ளையை (உரிமையை) யார் பெறுவது? என்ற யுத்தத்தில் குழந்தைகள் பலியிடப்படுவது நியதியாக மாறிவிட்டது. கடந்த பத்து வருட உலகளாவிய யுத்தங்களில் இருபது இலட்சம் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நாற்பது இலட்சம் சிறார்கள் சொந்த வீட்டையும், குடும்பத்தையும் இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். பத்து இலட்சம் சிறார்கள் அநாதைகளாகியுள்ளனர். 2.5 கோடி மக்கள் அகதியாக உலகில் அலைகின்றனர். யுத்தம் இன்று குழந்தைகளைப் பந்தாடுவதும் உளவியல் ரீதியாகச் சிதைப்பதும் அதிகரித்துச் செல்லுகின்றது. அத்துடன் குழந்தைகளைப் போர் முனையில் ஈடுபடுத்துவதன் மூலம் வலது பாசிசம் தனது அதிகார வடிவத்தை உறுதி செய்கின்றது. இது இலங்கையில் இருந்து உலகம் வரை விரிந்து பரந்து போயுள்ளது.

குழந்தைகள் விளையாட்டுகளாக வரும் கணினி மற்றும் மின்னணு (எலக்ட்ரானிக்) சார்ந்த அனைத்துப் பொருட்களும் யுத்தத்தைச் சொந்தத்தில் செய்வதை, ஜனநாயக உரிமையாக இந்தச் சுரண்டல் அமைப்பு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றது. குழந்தைகளின் கேலிச்சித்திரம் (கார்ட்டுன்) முதல் இது எங்கும் வியாபித்து போயுள்ளது. யுத்தமும், வன்முறையும் குழந்தையின் இணைபிரியாத விளையாட்டாக ஆக்கப்பட்டுவிட்டது. இது யதார்த்தத்தில் வன்முறையாகவும், யதார்த்தமான சண்டையாகவும், அகதி வாழ்க்கையாகவும் குழந்தைகளுக்கு இந்தச் சூறையாடும் சுரண்டல் அமைப்பு பரிசளிக்கின்றது. இதுதான் நாம்! போற்றும்!! தேர்ந்தெடுக்கும்!!! முதலாளித்துவ ஜனநாயகத்தின் விளைவாகும். இதை வேர் அறுக்காத வரை இதன் பாதிப்பு எல்லாத் தளத்திலும் ஆழமான பக்க விளைவுகளைக் கொடுப்பதுடன் அதையே புதிய பண்பாடாகவும் செய்கிறது.

இலங்கையில் அதிகமாகக் குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்ட இடமாகக் கொழும்பு செட்டியார் தெரு மாறியுள்ளது. ஆணாதிக்க அமைப்பில் வாழும் பெண்கள் தங்களின் செருக்கைக் காட்ட, பெருமையைப் பேச, கௌரவத்தை வெளிப்படுத்த, அந்தஸ்த்தைக் காக்க தங்க ஆபரணங்களை அணிந்து ஆண்களுக்கு அழகு காட்டும் இந்தத் **தங்க ஆபரணங்களின் பின்னால் நெஞ்சைப் பிழியும் குழந்தை உழைப்பு** அகோரமாக உள்ளது. இந்த இடத்தில் வசிக்கும் 7 வயது முதல் 14 வயதுடைய 90 சதவீதமான குழந்தைகள் தமது கல்வியை ஒரு வருடம் அல்லது இரண்டு வருடம் மட்டுமே கல்வி கற்கின்றனர். ஆண்களுக்காக அழகுபடுத்தும் தொழிலில் இருக்கும் குழந்தைகள் எழுத வாசிக்க தெரியாத இயந்திரப் பேச்சு மொழியுள்ள நடைப்பிணங்களாகும். 20,000 தொழிலாளர்களைக் கொண்ட இந்தப் பணக்காரச் செட்டியார் தெரு உழைப்பில், 40 சதவீதம் பச்சிளம் பாலகர்களின் கைகளை ஆதாரமாக கொண்டுள்ளது.(19.3.2000)[10] காலை 6 மணி முதல் இரவு 11 - 12 மணி வரை உழைக்க வேண்டிய இவர்கள் இலங்கை ஜனநாயகத்தின் ஆரோக்கியத்திற்கு ஒரு வகை மாதிரியாகும்.

பெரும்பாலான சிறுவர்களின் உழைப்பு, உணவு, படுக்கை என எல்லாம் தொழில் இடமாக உள்ளது. வேலை முடிந்த பின் முதலாளியின் அற்பக் கடமைகளையும் செய்து நக்கிப் பிழைக்கக் கோருகின்றது இந்தப் பணக்காரப் பண்பாளர்களின் பண்பாடு. **உலகத்தில் மூலதனத்திடம் ஈவிரக்கம் எதிர்பார்க்க முடியாது. இதற்கு எதிரான போராட்டமும் ஈவிரக்கம் அற்றதாகவே இருக்கும். இந்த மூலதனத்தை ஒழிக்கும் வன்முறையில் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியாது.**



## 2. தனிமனிதச் சுதந்திரம் வீங்கிய போது குழந்தைகளின் எதிர்காலம்

குழந்தைகள் ஒரு பெற்றோருடன் வாழ்வதைப் பார்ப்போம்.[11]

**அட்டவணை: 3**

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| இங்கிலாந்து | 23 % |
| பின்லாந்து | 17 % |
| பிரான்ஸ் | 15 % |
| ஜெர்மனி | 13 % |
| போர்ச்சுக்கல் | 12 % |
| கொலான்ட் | 11 % |
| இத்தாலி | 11 % |
| ஸ்பெயின் | 8 % |
| கிரீஸ் | 7 % |

பிரான்சில் இருபது இலட்சம் குழந்தைகள் சொந்த தாய் தந்தையுடன் வாழவில்லை. மாறாகத் தனித்து ஒரு பெற்றோருடன் (தாய் அல்லது தந்தை) வாழ்கின்றனர். பிரான்சில் மூன்றில் ஒரு திருமணம் விவாகரத்துக்கு உள்ளாகின்றது. இதில் பாரிசில் மூன்றில் இரண்டு விவாகரத்துக்கு உள்ளாகின்றது.

20 சதவீதமான குழந்தைகளின் பெற்றோர் எட்டு வருடத்தில் விவாகரத்தைச் செய்கின்றனர். 17.2 சதவீதமான குழந்தைகள் பெற்றோர்களின் விவாகரத்தை எதிர் கொள்கின்றனர். 15-17 வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளில் நாலில் ஒரு குழந்தையின் பெற்றோர் விவாகரத்தைப் பெற்றுள்ளனர். இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவாகரத்துக்குட்பட்ட குழந்தைகளில் 85 சதவீதமான குழந்தைகள் தந்தையை விவாகரத்துக்குப் பின் சந்திப்பதில்லை. நாலில் ஒரு குழந்தை பெற்றோர் இன்றி வாழ்கின்றனர். 62 சதவீதமான விவாகரத்து பெற்ற தந்தையர்கள் தனியாக வாழ்வதுடன், இவர்கள் தமது குழந்தைகளை மாதத்தில் பலமுறை சந்திக்கின்றனர். 32 சதவீதமான விவாகரத்தைப் பெற்ற தந்தையர்கள் மீள திருமணம் செய்து குழந்தைகள் உடன் வாழ்கின்றனர். (1.4.1999)[12]

ஐரோப்பாவில் 70 இலட்சம் குழந்தைகள் விவாகரத்தால் பெற்றோரை இழந்து உள்ளனர். இது மொத்தக் குடும்பத்தில் 16 சதவீதமாகும். பிரான்சில் ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு விவாகரத்து நடக்கின்றது. (12.12.1998)[7] அமெரிக்காவில் கி.பி. 1985-இல், 25 சதவீதமான 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள், ஒரு பெற்றோரை விவாகரத்து மூலம் இழந்திருந்தனர். அதே நேரம் கி.பி. 1984-இக்குப் பின் பிறந்த 60 சதவீதமான குழந்தைகள் ஒரு பெற்றோரை இழந்து வாழ்வர் என்று ஆய்வுகள் சுட்டி நின்றது.[2]

குழந்தைகள் இயற்கைக்கு மாறாக வாழ்வதைப் புள்ளிவிபரம் காட்டுகின்றது. மனிதக் குழந்தைகள் இயற்கையாகவே தாயின் அரவணைப்பில் உயிர் வாழும் உயிராற்றலை, இன்றைய **சுரண்டும் ஜனநாயகம்** சிதறடிக்கின்றது. ஐரோப்பாவில் 70 இலட்சம் குழந்தைகள் தாய் அல்லது தந்தையின்றி வாழும் போக்கு குழந்தையின் உளவியலைச் சிதைத்து, புதிய பண்பாட்டை உருவாக்குகின்றது. இது இந்த ஜனநாயக அமைப்பின் வீங்கிவெடிக்கும் அவலத்தைக் காட்டுகின்றது.

விவாகரத்து என்பது தவிர்க்க முடியாத நிலையில் கையாள்வதற்குப் பதில் குறுகிய நோக்கில் கையாள்வது அதிகரிக்கின்றது. குழந்தைகளைச் சமூகம் பொறுப்பேற்கும் சமூகக் கண்ணோட்டம் அற்ற இன்றைய நிலையில், இந்தச் சமூகச் சிதைவுகள் குழந்தைகளை விகாரமாக்குகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது சொந்தத் தனிமனித நலனை முதன்மைப்படுத்தி வாழ்வது மேலும் மேலும் சுயநலத்துக்கான சமூகச் சீரழிவைத் தூண்டுவதுடன் அதுவே பண்பாடாகின்றது.

உலகளவில் சுயநலம் சொத்துரிமை குவிப்பில் கோரத்தாண்டவம் ஆடும் இன்றைய நிலையில், இதை நியாயப்படுத்தும் பண்பாட்டுக் கலாச்சாரத்தை வெகுஜன தொடர்பு அமைப்புகள் தீவிரமாக்குகின்றன. இதைச் சொத்தைப் பறிகொடுத்தவன் தனது பண்பாடாக, கலாச்சாரமாக ஏற்றுக் கொள்கின்ற போது, விவாகரத்து அதன் உடனடி விளைவாகின்றது. குழந்தையின் உளவியல் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றது. தனிமனிதச் சுதந்திரம் அடுத்தவன் சுதந்திரத்தைவிட முக்கியமானதாக மாறுகின்றது.

சமூகச் சுதந்திரம் என்பதல்ல தனிமனிதச் சுதந்திரமே அடிப்படையானது என்ற உலகமயமாதல் கோட்பாடு குழந்தைகளைத் தனிமையை நோக்கி கழுத்தைப் பிடித்து தள்ளுகின்றது. இவை ஏழை நாட்டைச் சுரண்டி பணக்கார நாட்டில் வசதியாக வாழும் போது ஏழை நாட்டைக் கொச்சைப்படுத்தும் வாதம் போல் இந்த விவாகரத்துகள் வெடிப்பு காண்கின்றது. பிளவுகள் ஏற்றத்தாழ்வான பல்துறை சார்ந்து குடும்பத்தைத் தனிமனித வாதத்துக்குள் சிதைக்கின்றது. கூட்டுவாழ்வின் தேர்வுக்குள் வாழ முயற்சித்து வெற்றி பெற முயல்வது புறக்கணிக்கப்படுகின்றது. தீர்வு உடனடியாகவே இரண்டில் ஒன்றாக முடிவாகின்றது. இது தனிமனித அராஜகவாதத்தின், வறட்டுத்தனத்தின் வெளிப்பாடாகும். உலகமயமாதல் பண்பாட்டைப் புரிந்து அதற்கு எதிரான கோட்பாட்டில் குடும்பத்தை உயர்ந்தபட்ச எல்லைக்குள் விட்டுக் கொடுத்து வாழ போராடும் போது இவை சீரழிவதற்குப் பதில் ஆரோக்கியமான சமூக வாழ்க்கை வளர்ச்சி பெறும்.

இதை மறுத்து, விவாகரத்து குழந்தைகளை இயற்கைக்குப் புறம்பாகச் சமூகத்திடம் இருந்து அன்னியப்படுத்தும் தனிமை உலகம் ஒருபுறம் உருவாகின்றது. மறுபுறம் இந்தியா எங்கும் 14 வயதுக்கு உட்பட்ட 3 கோடியே 81 இலட்சம் சிறுவர் சிறுமிகள் அநாதைகளாக உள்ளனர். இதில் ஒரு கோடியே 20 இலட்சம் பேர் வறுமையில் சீரழிபவர்கள். (21.3.1991)[13] வீதிக்கு வரும் சிறுவர் சிறுமிகளின் எண்ணிக்கை இது.

வாழ்க்கையில் மேட்டுக்கும், பள்ளத்துக்கும் இடையில் ஏற்படும் பிளவு அதிகரித்துச் செல்ல குழந்தைகள் வறுமைக்குள் சிக்கி வீதிக்கு வருகின்றனர். குழந்தை உழைப்பைத் தடுக்க ஏகாதிபத்தியம் ஒற்றைக் காலில் நிற்க, குழந்தைகள் மேலும் வறுமையில் மடிவது அதிகரிக்கும். ஏகாதிபத்தியங்கள் மக்கள் அநாதையாவதைத் தடுக்க, வறுமையை நீக்க, சுரண்டுவதை நிறுத்தப் போவதில்லை. மாறாக மேலும் ஒட்டச் சுரண்டுவதைத் தீவிரமாக்குகின்றது. இதை ஜனநாயகத்தின் குரலாகச் சர்வாதிகாரத்துக்கு எதிராக முன் நிறுத்துகின்றனர். **சுரண்டும் சர்வாதிகாரத்தை ஜனநாயகமாக வேஷம் போட்டு ஆடும் ஆட்டம் வறுமையால் நிர்வாணமாகின்றது.**

செல்வச் செழிப்பில் மேட்டுக்குடி குழந்தைகள் ஆடம்பரமாக நுகர்ந்து சிதைக்க, அடிமட்டக் குழந்தைகள் அதற்காகத் தம்மைத் தியாகம் செய்கின்றனர். இந்தத் தியாகத்தைக் கட்டாயமாக்கும் ஜனநாயக உரிமையில் சுரண்டிப் பெறுவதைக் கேள்விக்குள்ளாக்குவது சர்வாதிகாரத்தின் கூறு என்று பிரகடனம் செய்த பின்பு அடக்கி ஒடுக்கியே இதைச் சாதிக்கின்றனர். சப்பித் துப்பும் எச்சில் கிடைப்பதே ஜனநாயகத்தின் பண்பாக இந்த அமைப்பு கருதும் வரை இந்த அநாதைகள் இந்த உலகில் நீடிப்பதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3. குழந்தையின் ஆரோக்கியத்தை மறுக்கும் ஏகாதிபத்தியப் பெண்ணியம்

தாய்ப் பால் குடிக்கும் குழந்தையை விட, புட்டிப்பால் குடிக்கும் ஏழைக் குழந்தையின் இறப்பு 15 மடங்கு அதிகமாகும். ஐக்கிய நாட்டுச் சபை சார்ந்து யுனிசேவ் விடுத்த அறிக்கையொன்றின்படி தாய்ப்பால் மறுக்கப்பட்டுப் புட்டிப்பால் குடிப்பதன் காரணமாக, அது சார்ந்த நோயால் நாள் ஒன்றுக்கு 4,000 குழந்தைகள் இறந்து போகின்றன என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்துள்ளது.

ஆனால் குருட்டுப் பெண்ணியம் (ஏகாதிபத்தியப் பெண்ணியம் தான்) தாய்ப் பால் கொடுப்பதும், கொடுக்காததும் பெண்ணின் உரிமை என்றும், அத்துடன் அது உடல் சார்ந்தது என்றும் முழங்குவதன் மூலம் இயற்கையின் பாதுகாப்பை மூலதனச் சந்தைக்கு அடகு வைத்து குழந்தைகளையே படுகொலை செய்கின்றனர். அத்துடன் ஆணாதிக்க ஆண்களுக்கு, இயற்கையின் பால் சுரப்பியை வெறும் பாலியல் நுகர்வு உறுப்பாக்கி அழகு காட்ட, ஆணாதிக்கச் சந்தைப்படுத்தும் வழியில் பால் கொடுப்பதை அநாகரிகமாகக் கருதுகின்றனர். குழந்தையின் தாயுரிமையைக் கைவிட்டுச் செல்லும் பெண்ணியம், அந்தக் குழந்தையின் ஆரோக்கியத்தைத் தனது நுகர்வு தளத்தில் பண்டமாக்கி அலட்சியப்படுத்துகின்றனர். இது நவீன ஆணாதிக்க வளர்ச்சியாகும்.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் காலத்தை அட்டவணை:4-இல் காணலாம்.[14]

**அட்டவணை: 4**

| கண்டம் | மாதம் |
|---|---|
| ஆப்பிரிக்கா | 18 |
| ஆசியா | 17 |
| தென்அமெரிக்கா | 9 |
| வடஅமெரிக்கா | 1 |
| ஐரோப்பா | 1 |
| மற்றையவை | 3 |





தாய்மையின் கடமைகள் நாகரிகத்தின் வக்கிரத்தால் சிதைகின்ற போது குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலான இயற்கையிலான உறவும் சேதத்துக்கு உள்ளாகின்றது. பெண்ணின் மார்பின் ஊடான குழந்தைக்கான பால் என்பது இயற்கையாக, நோயெதிர்ப்பு பாதுகாப்பைக் குழந்தைக்கு வழங்கியது. ஆனால் ஆணாதிக்கம் தனது சொந்தப் பண்பாட்டால் பெண்ணின் மார்பைப் பாலியலில் நுகர்வுக்குரிய கவர்ச்சிப் பண்டமாக்கியதன் மூலம் அதனைச் சதையுள்ள மூலதனமாக்கியது. குழந்தை பால் குடிக்கும் உறுப்பு என்பது சிதைந்து ஆணின் கவர்ச்சிப் பொருளாகியது. இந்தப் பண்பாட்டில்தான் பெண்ணின் மார்பை ஆண் அழகுபடுத்தினான். இந்த வக்கிரமான பாலியல் வளர்ச்சியில் பெண்ணின் மார்பைச் சந்தைத் தளத்தில் நுகர்வு விளம்பரக் கலை உத்தியாக்கினான். வியாபாரத்தின் விளம்பரக்கலை பெண்ணின் மார்பில் மையம் கொண்டது. பெண் அதை நோக்கிய பண்பாட்டுக்குள் சிதைந்தாள்.

பெண் தனது மார்பைப் பாலியல் கவர்ச்சியின் அங்கமாகக் கண்டும், அழகுபடுத்தியும் தனது ஆணாதிக்கமயமாதலை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறினாள். இதில் இருந்து குழந்தைக்குப் பால் கொடுப்பது என்பது சொந்த மார்பின் அழகைக் கெடுக்கும் என்ற பெண்ணின் கண்ணோட்டம் குழந்தையின் இயற்கை உரிமையைத் தகர்த்தது. தனது சொந்த உடல் சார்ந்தது என்ற வாதத்தைச் சேர்த்துக் கொண்டதன் மூலம், வாய் பேசாத குழந்தையின் உரிமையை மறுத்து, ஆணாதிக்கக் கவர்ச்சிக்குத் தன்னை அழகுபடுத்தினாள்.

இது வறுமைக்கும், செல்வத்துக்குமிடையிலான பிளவை இந்தப் பாலூட்டும் அங்கம் தொடர்பான பார்வையில் வேறுபடுத்தியது. வறுமைப்பட்ட தாய்மை இதைப் பாலியல் அங்கமாக அல்ல, குழந்தையின் பால் வழங்கும் உறுப்பாகத் தெளிவாகக் காணும் யதார்த்தம் துல்லியமாக்குகின்றது. பணக்காரப் பெண்களிடையே இது பாலியல் அங்கம் என்ற எல்லைக்குள் சிதைந்ததைக் காட்டுகின்றது. இந்த இடைவெளி பணக்கார நாட்டுக்கும், ஏழைநாட்டுப் பெண்களிடையேயான கண்ணோட்டத்திலும் தெளிவாக வெளிப்படுகின்றது.

குழந்தை பற்றிய பணக்காரக் கண்ணோட்டமும், ஏழைக் கண்ணோட்டமும் பாலியல் தளத்தில் பிளந்து போவதை மேலும் துல்லியமாக்குகின்றது. புட்டிப்பால் போன்றன பற்றாக்குறையை ஈடுசெய்வதற்குப் பதில், அது ஆணாதிக்கப் பாலியல் வக்கிரத்தின் அழகை ஈடுசெய்யும், பெண்ணின் விளம்பரமான பாலியல் உடல் சுதந்திரத்தின் ஊடகமாக மாறிவிடுகின்றது. குழந்தைக்குப் பால் கொடுக்கும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய்மை இயற்கையில் ஒன்றி வாழும் ஆரோக்கியமான சிந்தனைத் தளத்தில், உயர்ந்த சமூக வடிவமாகும். இது நாகரிகமும், பணத்திமிரும் புகுந்து செல்ல முடியாத இடங்களில் இன்னமும் இயற்கையாக நீடிக்கின்றது.

இயற்கையை அண்டியும், சேர்ந்தும் வாழும் பல்துறை சார்ந்த பெண்கள் தான் குழந்தைக்குப் பால் கொடுப்பதிலும் இயற்கையுடன் ஒன்றிப் போயுள்ளனர். அவளிடமே பெண்ணியம் தன்னை உருவாக்க வேண்டுமே ஒழிய ஆணாதிக்கப் பெண்களின் வக்கிரத்தில் இருந்து பெண்ணியத்தை உருவாக்கின், அது ஆணாதிக்கத்தின் இன்னுமொரு வடிவமாகவே மட்டும் எஞ்சும்.

அடுத்த சமூகச் சீரழிவைப் பார்ப்போம். அமெரிக்கப் பாடசாலையில் செய்த ஆய்வுகளில் ஆறாம் வகுப்பு மாணவர்களில் 28 சதவீதமும், எட்டாம் வகுப்பு மாணவர்களில் 49 சதவீதமானோரும், பத்தாம் வகுப்பு மாணவர்களில் 60 சதவீதமான மாணவர்களும் பாலியல் நடத்தையில் ஈடுபடுகின்றனர். கர்ப்பத் தடையைத் தவிர்க்க 10 வயது பெண் குழந்தைக்கும் கர்ப்பத்தடை உறை (ஆணுறை) இலவசமாக வழங்கப்படுகின்றது.[2] ஜனநாயகம், தனிமனிதச் சுதந்திரம் மூலதன விரிவாக்கத்தில் வெம்பும் போது இவை விளைவு ஆவதைத்தான் இது காட்டுகின்றது.

கி.பி. 1994-இல், பிரேசிலில் 15 வயதுக்கு உட்பட்ட 11,547 சிறுமிகள் குழந்தையைப் பெற்று எடுத்தனர். இது கடந்த 19 வருடங்களில் 391 சதவீதங்களில் அதிகரித்துள்ளது. ஆனால் ஜனத்தொகை 42.5 சதவீதம் மட்டும் அதிகரித்துள்ளது. இது 15-19 வயதுடையோர் குழந்தையைப் பெறுவது 60 சதவீதம் அதிகரித்துள்ளது.[6]

சிறுவயதில் கர்ப்பமாதல் என்பது ஒரு போக்காக உள்ளது. 13-19 வயதுக்கு இடைப்பட்ட 40 சதவீத அமெரிக்கர்களில் ஆய்வு செய்த போது இருபது வயதுக்கு உட்பட்ட 10 இலட்சம் சிறுமிகள் ஒருதடவை தன்னும், கர்ப்பம் அடைகின்றனர். இந்தப் பத்து இலட்சத்தில் 80 சதவீதம் சிறுமிகள் திருமணம் செய்யாதவர்கள். 13-19 வயதுக்கும் இடைப்பட்ட கர்ப்பம் தரித்தல் என்பது மேற்கு நாடுகளில் 12 சதவீதம் குறைந்துள்ளது. இது கரு அழிப்பு மூலமும், கர்ப்பத் தடை மருந்தை முன் கூட்டியே பாவித்தல் மூலமும் (15 வருடங்களுக்கு முன் கர்ப்பத்தடை மருந்து பாவித்தல் 11 சதவீதமாக இருந்தது. இன்று 44 சதவீதமாக உள்ளது.) தடுக்கப்பட்டது. அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்காவில் 21 சதவீதத்தால் கர்ப்பமாதல் குறைக்கப்பட்டுள்ளது.(27.12.1998)[6]

சிறுமிகள் கர்ப்பமாதல் என்றுமில்லாத வேகத்தில் அதிகரித்துச் செல்லுகின்றதே, ஏன்? கர்ப்பத்தடை மற்றும் கருஅழிப்பை மீறியே இப்புள்ளிவிபரங்கள் அதிசயிக்கத்தக்க வகையில் உள்ளது. பாலியல் பற்றிய விகாரமான கற்பனைகள், யதார்த்த வாழ்க்கையில் இருந்து அன்னியப்பட்ட புனைவுகள், பாலியல் மீதான பிரமிப்பான இன்பக் கற்பனைகள் ஆகியவை





பாலியல் நுகர்வை நாடவைக்கின்றது. இளமையில் பாலியல் பற்றிய விழிப்புணர்ச்சி, சந்தைப்படுத்தும் பாலியல் வக்கிரத்தால் கவரப்பட்டு அதை நாடவைக்கின்றது. மக்கள் தொடர்பு சாதனங்கள் எங்கும் பாலியல் வக்கிர விளம்பரத்தில் ஜனநாயக மூலதனத்தைப் பாதுகாக்கவும், இந்த அமைப்பைப் பாலியல் விகாரமாக்கும் போது, இது சமூக அமைப்பின் ஆதாரமாக உள்ளது.

இதிலும் பெண்கள் பாலியல் நுகர்ச்சியின் சின்னமாகக் கட்டமைக்கும் ஆணாதிக்கம், பெண்ணைப் பாலியல் அங்கமாக, ஆணின் கவர்ச்சிப் பொருளாகச் சித்தரித்து அனுபவிக்கத் தூண்டுகின்றது. இந்தப் பெண்கள் மீதான பார்வையை ஆண்களும், பெண்களும் அதன் யதார்த்த நிலையில் உள்வாங்கி அதன் சின்னங்களாகின்றனர். பாலியல் உணர்ச்சியைத் தூண்டும் இவ்வயதில் பெண்கள் மீதான சமூகப் பார்வையையும் அதன் நுகர்வுத் தன்மையையும் இன்பத்தின் உச்சமாகப் புனைந்து காட்டும் யதார்த்தத்துக்குப் புறம்பான வாழ்க்கையில் சிக்கி விடும் சிறுமிகள், ஆணின் போகத்துக்குள் பந்தாடப்படுகின்றனர்.

இந்த ஏகாதிபத்திய நுகர்வுச் சந்தையில், ஆண்கள் பெண்களை நுகர உருவான சமுதாயத்தில், சிறுமிகள் பாலியலில் ஈடுபடவும், வக்கிரத்துக்குள்ளாகவும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு எதிராகக் கட்டமைக்கும் பாலியல் சித்திரங்களின் விளைவுகளைத் தடுக்க கர்ப்பத்தடை, கரு அழிப்பு போன்றவற்றையே தீர்வாக வைக்கின்றனர்.

பாலியல் பற்றிய அறிவான கல்விக்குப் பதில் பாலியலை ஏகாதிபத்தியச் சந்தை நுகர்வுக்கு இசைவாகக் கற்றுக் கொடுக்கும் அயோக்கியத்தனம் இந்த ஜனநாயக அமைப்பின் ஆதாரமாக உள்ளது. பாடசாலை மாணவ-மாணவிகள் கற்றுக் கொள்ள வேண்டிய கல்விக்குப் பதில் இந்த அமைப்பின் அழுகல்களை உள்வாங்கி வெம்பிப் போகும் சமுதாய வளர்ச்சி, சமூகக் கண்ணோட்டத்தை நிராகரிக்கும் கண்ணோட்டத்தை உள்வாங்குகின்றது. இதன் விளைவு வன்முறை கொண்ட இளைய சமுதாயத்தைச் சமுதாயத்துக்கு எதிராகத் தோற்றுவிக்கின்றது. அனுபவிப்பும், நுகர்வும் தேடி அலைவது, அதன் தோல்வி இந்தச் சமுதாயம் மீதான வெறுப்பாகத் தோற்றம் பெறுகின்றது. இது சமுதாயத்தின் அனைத்துத் துறைகளையும் எதிர்த்துச் சமுதாய விரோதமாக மாற்றம் காண்கின்றது. இதன் மூலம் நுகர்வையும், அனுபவிப்பையும் அடைய முயல்கின்றது. பாலியல் மீதான நாட்டமும் அதன் மீதான யதார்த்தத்துக்குப் புறம்பான தோல்விகளும் பால் எதிர்ப்பைத் தோற்றுவிக்கின்றது.

இளமையில் வீங்கி வெம்பிப் போய் யதார்த்த வாழ்க்கைக்கு முரணாக ஈடுபடும் பாலியல், தோல்வியில் முடிகின்றது. கற்பனையான இட்டுக்கட்டி காட்டப்பட்ட பாலியல் நடத்தைகள் தோல்வியில் முடிகின்ற போது பால் எதிர்ப்பு வளர்ச்சி பெறுகின்றது. இது எதிர்பால் பாலியல் (ஆண் x பெண் பாலியல்) உறவுகளைச் சமுதாயத்தின் முரண்பாடாகக் காண்கின்றது. இதை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவி வரும் ஆணாதிக்கக் கொடூரத்தின் பக்கமாகத் தவறாக அடையாளம் காண்பதும், காட்டுவதும் நிகழ்கின்றது. இதன் மூலம் எதிர்பால் உறவை வெறுப்பதும், ஓரினச் சேர்க்கையை நாடுவதும் அதிகரிக்கின்றது.

இளம் வயது பாலியல் நாட்டம் சமுதாயத்திற்குப் பல்வேறு கெடுதல்களை விளைவிக்கின்றது. இது மேற்கில் இருந்து மூன்றாம் உலகம் ஈறாக, பொதுவாக உள்ளது. இவை தொடர்பாக மேலே பல புள்ளிவிபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. சந்தைப் பொருளாதாரம் இலாப நோக்கில் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு நுகர்வை ஊக்குவிக்கும் எல்லைவரை குழந்தைகளைப் பாலியலில் வெம்பி வெடிக்க வைப்பது தொடரும். இது மட்டுமே இந்த அமைப்பின் நம்பிக்கையான சந்தையைத் தீர்மானிக்கின்றது. இதைத் தகர்க்க வர்க்கப் போராட்டம் மட்டுமே மாற்றான பாதையாக எம் முன்னுள்ளது.



# 4. பால் மணம் மறவாத சிறுமி மீதான கற்பழிப்புடன் கூடிய கொலையின் பின்னணிக் குற்றவாளிகள் யார்?

பிரான்ஸையும், பாரிசையும், புலம் பெயர் சமூகத்தையும் அதிர்ச்சிக்கும், ஆத்திரத்திற்கும் உள்ளாக்கிய 11 வயது சிறுமி **நிதர்ஷினி** மீதான கற்பழிப்புக்கு, படுகொலைக்குப் பின்னால் கப்பம் மற்றும் கொள்ளையின் பின், தன்னெழுச்சியாக ஆயிரக்கணக்கில் தமிழ் (கணிசமான பிரஞ்சு மக்களும்) மக்கள் திரண்டு தமது அனுதாபத்தை, அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர்.

மனிதக்குலம் வெட்கித் தலைகுனியும் வண்ணம் பாடசாலைக்கு வந்து பசி தீர்க்க ஆவலாக உண்ண புறப்பட்ட போது, காமப் பசியால் அலைந்த இரண்டு நாய்களுக்கு (பேட்சன், தியாகரூபன்) உணவாகியது மட்டுமின்றி, அக்குழந்தையைச் சுவைத்துண்டு வெறிதீர்த்த பின், மின்சார வயரால் கழுத்தை இறுக்கி வழக்கம் போலவே கொலைக் கலாச்சாரத்தின் அனுபவத்துடன் தடயத்தை அழிக்கும் கைவந்த கலையாகச் செய்து முடித்து வைத்தனர்.

தமிழ்ச் சமூக ஒழுக்க விழுமியங்கள் பெண் குழந்தைகள் மீது மிக கண்டிப்பான வகையில் கடைப்பிடிக்கும் ஆண்கள் சார்ந்த ஆணாதிக்கமும், அந்த ஆண் வர்க்கமும் தான், இப்படுகொலைக்கு முழுப் பொறுப்பாகும்.

குற்றவாளிகள் மிக திட்டமிட்ட வகையில் இயக்கப் போராட்ட அனுபவத்துடன் இந்தக் கோரத்தை நடத்தி தப்பியபோது, தற்செயலாகப் பிடிபட்ட நிலையில், அதன் பாதுகாப்பில் எல்லோரும் குற்றவாளி மீது காறி உமிழ்ந்தார்கள். ஆனால், குற்றவாளி தானாகச் சமூகத்தில் உருவாவதில்லை. குற்றவாளியை உருவாக்குபவர்களே பின்னால் குற்றவாளி மீது கண்டனம் செய்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்து ஒழித்துக் (மறைத்துக்) கொள்கின்றனர்.

பாலியல் வன்முறை எப்படி, அவன் முன் இரக்கமின்றி தோன்றுகின்றது? ஆணாதிக்கப் பாலியல் வக்கிரத்துடன் கொலை வெறி எப்படி அரங்கேறுகின்றது? உழைக்க மறுத்து கொள்ளையடித்து சொகுசாக எப்படி வாழமுடிகின்றது? என்பதைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தக் கொலை நடந்த அதே வாரம் வெளியாகிய பிரெஞ்சு ''QUESTIONS DE FEMMES'' (பெண்கள் பற்றிய கேள்விகள்) பத்திரிகையில் என்ற பொருத்தமான தலைப்பில் ''MARCHE DU SEXE - LES FEMMES AUSSI'' (பாலியல் சந்தையில் பெண்ணும் கூட) கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

பாலியல் என்பது மனிதர்களில் இயல்பானது. இந்தப் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சமூகம் இருக்காத எல்லா நிலையிலும், ஆண் - பெண்ணுக்கு இடையில் முரண்பாடுகள் வன்முறைகள் இயல்பாகின்றன. இந்த இடைவெளியில் கட்டியமைக்கப்பட்ட ஒழுக்கம் மனித வளர்ச்சிக்கு எதிரானதாக உள்ள போது, தனிமனித ஒழுக்க மீறல்கள் சமூகம் மீதான வன்முறையாக வெளிப்படுகின்றது.

இந்தச் சமூகத்தில் மனித வளர்ச்சியின் இயல்பான பாலியல் தேவை மறுதலிக்கப்பட்டு, அது இடையூறாக, மனித வளர்ச்சிக்கு மாறாக நலம் அடித்த மனிதர்களை ஆண் - பெண் வேறுபாடின்றி உலகில் விதைக்கப்பட்டு வெம்பிப் போனவைகளை, சமூகத்தின் ஜனநாயக எதிரியாகக் காட்டிய பின் அறுவடைகளை ஆணாதிக்க முதலாளித்துவ வர்க்கம் சூறையாடுகின்றது.

இந்த வகையில் நலம் அடித்த ஆண் - பெண் சமூகத்தின் முன், சினிமாவில், "பெண்" பாலுறவு (Sex) பதுமையாக எல்லாத் துறைகளிலும் மாற்றப்பட்டு விட்டாள். குழந்தைகள் முன் கொட்டிக் குவிந்துள்ள கணினி விளையாட்டுகளில், ஆண் பெண் உறவை விளையாட்டுப் போல் ஈடுபட்டு இன்பம் காணும் கணினியில் காட்டூன்களில், (கேலிச்சித்திரம்) விளம்பரங்களில், பயன் படுத்தக் கோரும் உடைகளில், தொலைக்காட்சியில், பொழுது போக்கு என திரும்பும் இடமெல்லாம் பெண் மீதான பாலுறவு (Sex) கவர்ச்சியே பின்நவீனத்துவக் கோட்பாட்டில் உலகமயமாக்கப்பட்டுள்ளது. இன்று மறுதலையாகப் பெண்களைக் கவர ஆண்கள் கூட, பெண்கள் முன் கவர்ச்சிகரமாக மாற்றப்பட்டுவிட்டனர். செக்ஸ் கிளப்புகள், காபரேக்கள், மசாஜ் நிலையங்கள், துகில் உரியும் நிலையங்கள் ஆண் - பெண் கூட்டாகவும் தனித்தனியாகவும் அவரவர் இரசனைக்கு ஏற்ப இந்த ஜனநாயக மூலதனம் உருவாக்கிப் பாதுகாக்கின்றது.

ஆணாதிக்கம் ஆண் முன் இந்த கவர்ச்சிகரமான வியாபார இரசனை மோசமான பண்பியல் பாய்ச்சலை, தனிநபர் ஒழுக்க மீறல்களை அரங்கேற்றுகின்றது. அப்போதுதான், இது சட்டத்தின் முன் மாபெரும் குற்றமாக, ஆணாதிக்க ஒழுக்கத்தின் முன் அத்து மீறலாக வடிவம் பெறுகின்றது.

பால்மணம் மாறாத தமிழ்ச் சிறுமியின் மீது தமிழ் ஆணாதிக்க ஒழுங்கு மீறல் மூலம் வன்முறையைக் கையாண்ட தமிழ் காமுகன் எப்படி உருவாக்கப்படுகின்றான்? இதுவல்லவா எதிர்காலத்தில் சிறுமிகள் மட்டுமல்ல, பெண்கள் மீதான பாலியல் வன்முறையைத் தடுக்க போராடமுடியும்?




ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும்? என சாதாரண உலகம், கடந்தகால இலக்கியத்தின் உவமைகள் உடன் மதத்தின் துணையுடன் பெண்ணை ஆணின் பதுமையாக காட்டவே செய்கின்றது. பெண் ஆண் போல் ஓர் உயிர் என்பதை ஏற்க மறுத்து ஆணின் நுகர்வுக்கும், போகத்துக்கும், ஆணின் கடமைக்கும் மட்டுமே ஆண்டவன் படைத்தான் என்பதன் மூலம், பெண்கள் கணவன் என்ற ஆணின் முன் பாலுறவு (Sex) பண்டமாக மட்டும் இருக்க கோரும் ஒழுக்கவியல், மற்ற ஆண்கள் முன்னும் நுகர்வுக்குரிய பொருள்தான்.

இந்த ஆணாதிக்க ஒழுங்கைக் கட்டிக் காக்கும் சடங்குகளை ஒட்டிய மந்திரம் எப்படி பெண் மீதான கற்பழிப்பைச் செய்கிறது எனப் பார்ப்போம். திருமணத்தில் கூறும் சமஸ்கிருத மந்திரத்தின் ஒரு பகுதியில் பெண்ணை நோக்கி "நீ இதுவரை இந்திரனுக்கு ஒருநாள் மனைவியாக, பின் தேவர்கள் அனைவருக்கும் மனைவியாகி, பின் எனக்கு மனைவியாகி, இப்பொழுது நான் உன்னை இவனுக்கு மனைவியாக்குகிறேன்"(2.6)[69] என்கின்ற போது பெண் பண்டமாக, ஆணின் வக்கிர பாலுறவு (Sex) தேவையைப் பூர்த்தி செய்யும் உயிரற்ற ஜடம்தான். படத்தில் முகம் பார்த்த திருமணங்கள், பெண்ணைப் பார்த்த திருமணங்கள் எல்லாம் ஓர் ஆணைப் பூர்த்தி செய்வதையே நோக்கியுள்ளது.

புலம் பெயர் சமூகத்தில் கணிசமான கனடா இளைஞர்கள் தமது மனைவியை, குழந்தையைக் கனடாவில் விட்டுவிட்டு இந்தியா சென்று தமது உல்லாசத்தை எப்படி கழிக்கின்றனர் எனப் பார்ப்போம். தாம் திருமணம் செய்ய வந்ததாகக் கூறி கன்னிகழியாத இளம் பெண்களைச் சீதனத்துடன் பெற்று, அவர்கள் பணத்தில் ஒரு மாதம் சம்மதத்துடன் கற்பழித்து நடுரோட்டில் பிள்ளையுடன் விட்டுச் செல்வது வாடிக்கையாக உள்ளது. பணம் வாங்கி, கொழுத்த விருந்துடன் உல்லாசப் பயணம் செய்யும் தமிழன் மூளை அல்லவோ மூளை. இது ஒரு பெண் தனது திருமணத்தில் அவள் சம்மதத்துடன் எப்படி கற்பழிக்கப்படுகின்றாள் என்பதைக் காட்டுகின்றது. இங்கு ஏமாற்றுவது மட்டும்தான் நிகழ்ச்சியில் வேறுபடுகின்றது. அதைத் தாண்டி எந்த விளக்கத்தையும் தங்கை என்பதாலோ, அக்கா என்பதாலோ மாறிவிடுவதில்லை. அக்கா, தங்கை என பல வகையில் விளித்தல் கூட, தப்பு நடந்து விடும் என்ற ஒழுக்கத்தைப் பாதுகாக்கத்தான்.

இன்று உயர்ந்த கலை படைப்பாளிகள் எனப் பலர் புகழ் பிழைக்கும் சுதந்திரமான ஜனநாயக தனிமனித உரிமைகளின் வரைவிலக்கணம் விபச்சாரமாகும். இதன் பிம்பமாகத் தமிழ்த் திரைப்படத்தில் கதாநாயகி முதல் அனைத்துப் பெண்களின் தெரிவு, காட்சி, காட்சி படிமங்கள், வசனங்கள், பாடல்கள் .. என அனைத்தும் பெண் மீதான கவர்ச்சியை வைத்து சினிமாவாக்கி ஆணாதிக்கச் சமூகம் முன் காட்சிப்படுத்தப்படும் போதும், அதனால் உணர்ச்சி வயப்பட்ட ஒரு நபர் சமூகமீறலைச் செய்து சமூக ஒழுக்கத்தை மறுத்து




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காமுகனாகி பெண்ணைக் குதறும் போதும், எப்படி அவன் மட்டும் குற்றவாளியாகக் காணமுடியும்.

இந்தத் திரைப்படத்தைத் தயாரித்து, அதைப் போற்றும், அதில் கலை அம்சத்தை மெச்சி பாதுகாக்கக் கோரும், அதில் தனிமனித உரிமையைக் கோட்பாட்டில் கோரும்.... அனைவரும் தான் முதல் குற்றவாளிகள். அதன் பின் இதில் ஈடுபட்டவன் இரண்டாவது குற்றவாளியாகின்றான். ஆனால் வழக்கில் எதிர்மறையே எப்போதும் உள்ளதுடன் தூண்டியவன் இந்த அமைப்பின் காவலன் ஆகின்றான்.

இன்று வெகு விமர்சையாக நடத்தும் நாட்டிய அரங்கேற்றங்கள், எப்படி பாலியலைத் தூண்டுவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது எனப் பார்ப்போம். இசை மற்றும் அதையொட்டி ஆடுவது எல்லாம் மனிதன் உழைத்துவிட்டு அதன் களைப்பைப் போக்க, தமது துயரங்களை மறக்க தன்னியல்பில் தமக்குள் உருவானவை என்பதை மறுத்து, நடனங்கள் ஆடிக் காட்டுவதற்காக, அதை இரசிப்பதற்காகப் பெண்கள் பல விதத்தில் அலங்கரித்து அரங்கேற்றப்படுகின்றனர். அதாவது மொடலிஸ் எதைச் செய்கின்றாளோ, அதே போன்று வாழ்க்கையில் எந்த விதத்திலும் நடனத்தை, இசையைப் பயன்படுத்தாத வகையில் அரங்கேறும் அரங்கேற்றங்கள், பெண்ணை ஆணாதிக்கச் சமூகம் முன் இரசிப்புக்காக, கவர்ச்சிக்காக அரங்கேற்றுவதன் மூலம், அப்பெண் பல ஆண்களின் கனவுக் கன்னியாக, அதே நேரம் நினைவில் கற்பழிக்கப்பட்டு, சந்தர்ப்பம் கிடைத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாகக் கூடிய வகையில் அரங்கேற்றம் பாலுறவு (Sex) பதுமைகளைச் சமூகம் மீது கவர்ச்சியாக்கி விடுகின்றது.

பார்ப்பனர்களின் முன், பழைய நிலப்பிரபுத்துவக் கால மன்னர்கள் முன், நிலப்பிரபுக்கள் முன் கோயிலில் விபச்சாரியாக விடப்பட்ட தேவதாசிகள், விபச்சாரத்தின் முன் ஆடிக்காட்டிய அரங்கேற்றங்கள், பெண்ணை ஆடவிட்டு பெண்ணை அவர்களின் வைப்பாட்டியாக மாற்றிய தொடர்ச்சியில் தான் உருவானது. ஆனால் இந்தப் போக்கு முடிவுக்கு வந்தாலும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் பழையதை மறுத்து, புதியதைக் கோரும் பின்நவீனத்துவ உலகமயமாதலில் ஆண்களுக்கு விளம்பரமாகி கவர்ச்சி நாயகியாகும் பெண், ஆணாதிக்கவாதிகளால் மனதிலும், படத்திலும் கற்பழிக்கப்பட மட்டுமே அரங்கேற்றம் நீடிக்கின்றது.

இதுபோலத்தான் சாமத்தியச் சடங்குகளும் நடக்கின்றன. ஒரு பெண் ஆணின் இரசனைக்கும், மனதில் கற்பழிக்கவும், பிள்ளை பெற தயாராகப் பெண் உறுப்புகள் வளர்ச்சி பெற்று விட்டது என்பதையும் பறை சாற்றும் வகையில் மட்டும் சடங்குகள் என்ற பெயரால் நடத்தப்படும் கேவலங்கள், ஆணாதிக்கச் சமூகம் முன் அப்பெண் கூர்மையான பார்வைக்கு உள்ளாக்கப்படுகின்றாள். ஏன் கொல்லப்பட்ட அக்குழந்தையின் சாமத்தியச்





சடங்கும் மிக அண்மையில் தான் பெரிதாகக் கொண்டாடியதாக அறியும் போது, குற்றவாளிகளுடன் இருந்த சட்டத்துக்குப் புறம்பான கொடுக்கல் வாங்கலுடன் பெற்றோரின் முன் தொடர்பு, சாமத்தியச் சடங்கு மூலம் பிள்ளையை விற்று பணம் வாங்கும் பெற்றோரின் அழைப்புக்கு உட்பட்டு இருக்கும் வாய்ப்புகள் இருக்கும் என ஊகிக்க முடிகின்றது.

இறந்த நிதர்ஷினியின் பெயரில் எழுதிய கவிதையில் ஆணாதிக்கம் கொப்பளிக்கும் வரிகளைப் பார்ப்போம். "..கரும்பே, கற்கண்டே, என்று - என்னை ஆரத் தழுவி - பாசம் சொறிந்து - வாழ்த்துக்கள் கூறி - மாதம் எட்டு கூட ஆகவில்லை"[70] என்று மீளவும் இச்சமூகம் முன், மீள அக்குழந்தையைக் கற்பழித்ததைக் இது (என்ன எட்டு மாதம்) காட்டவில்லையா? அக்குழந்தை மீதான ஆர்வத்தை, தூண்டுதலைப் பொறுப்பற்ற ஆணாதிக்கப் பெற்றோர்கள் தமது பொறுப்புணர்ச்சியற்ற போக்குகளால் ஊக்குவித்தனர், ஊக்குவிக்கின்றனர். ஒரு பெண் தனது இறந்த முட்டைகளை வெளியேற்றுவது (மாதவிடாய்) என்பது இயல்பானது. ஆனால் அந்த இயற்கையின் வளர்ச்சி மாற்றத்தை விற்பதிலும், பாதுகாப்பதிலும் சமூகச் சடங்குகள் என்ற பெயரில் பணச் சடங்கு நடத்தும் சீரழிவுகள், பெண் குழந்தைகளைச் சுதந்திரமாக இந்த ஆணாதிக்க உலகில் நடமாடவிடாது, ஆண்கள் முன் வெட்கிப் போய் வன்முறைக்குப் பலியிட தயாரான ஆடுகளாக நடமாடவிடுகின்றது இந்தக் கேடுகெட்ட சமூகம்.

நாடகம், கதை, கவிதை, ஓவியம் ...என இலக்கியத்தில் பெண் வருணிப்பு என்பது ஆண் முன் கிளர்ச்சியை ஏற்படுத்தும் உளவியலாக உருப்பெறுகின்றது. இதன் வெளிப்பாட்டை நடைமுறைப்படுத்தும் ஒருவனைக் குற்றவாளியாகக் காட்டி துண்டுப்பிரசுரம், அனுதாப அஞ்சலிகள் குவிப்பதால் இந்த உணர்ச்சியைத் தூண்டும் போதைகளை மறைமுகமாகப் பாதுகாக்கின்றனர். போதை மனிதனை மெய் மறக்கச் செய்கின்ற போது, சமூகத்தைக் கட்டுடைத்து ஒழுக்கத்தை மீறி குற்றத்தைத் தூண்டியது போதையே ஒழிய, தனிப்பட்ட அவன் அல்ல. யாரும் கற்பழிப்பதற்காக மண்ணில் பிறப்பதில்லை. சமூகம் தான் குற்றவாளிகளை உருவாக்குகின்றது. அது ஒருசிலர் மீது கட்டுப்படுத்த முடியாத வெறியாக வளர்ந்து விடும் போது திட்டமிட்ட வகையில் அதை அனுபவிக்க தொடங்குகின்றது.

சமூகத்தைப் புரட்டிப் போடப் போவதாகக் கூச்சலில் ஈடுபடும் பின்நவீனத்துவ வாதிகளின் அனுசரணையுடன், அண்மையில் எக்ஸில்:5-இல், பிரெஞ்சில் கவிதை எழுதுவதாகக் கூறப்படுபவரும், புகலிடச் சிறந்த சிறுகதை எழுத்தாளருமான **காலமோகன்** (என உப்புச் சப்பு இன்றி புகழ்பவர்கள்.) தனது பெயரை மறைத்து **"ஜெயந்தீஸ்சன்"** என்ற புனைபெயரில் தனது ஆசையை நண்பியிடம் (பெண் நண்பர்) கூறி, நண்பிகள் உடன் கூட்டுக் கலவி செய்ய வேண்டும் எனக் கூறி பலவித ஆசைகளும் ஐடியாக்களும் (நிதர்ஷினி மீது அந்த வன்முறைகள் குதறிய போது இரண்டு மிருகத்தின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டுக் கலவியின் ஐடியாக்களை இந்த எழுத்துக்கள் போன்றவைதான் தூண்டியதோ?) மின்னிப் பொறித்தன என தனது வக்கிரத்தைக் கொட்டுகிறார்.

இது போல் இருண்ட 'இருள் வெளி' மலரில் **அரவிந் அப்பாத்துரை** என்ற ஏகாதிபத்தியக் கழிசடை தனது சிறுகதையில், ஒரு பெண் சினிமா பற்றிய புத்தகத்தில் ரஜினி, கமல்.. போட்டோவைப் பார்த்து விட்டு, பக்கத்து அறையில் இருந்தவர்கள் உடன் உறவு கொள்ள ஆசைப்பட்டாள் என்கின்றார். இது போல் பக்கத்து அறையில் இருந்த மூவருடன் உறவு கொள்ள எண்ணினால் அதையே கற்பழிப்பாக நடத்தினால், செய்ய ஆசைப்பட்டால் இலக்கியமோ?

கனடா நாட்டில், ஒரு பெண்ணியவாதியுடன் உடல் உறவு கொண்டது போல் பாவனை செய்து எழுதிய எழுத்தாளரையே, கற்பழித்த குற்றச்சாட்டில் கம்பிகளை எண்ண வைத்தது. இதே போல் எக்சில்: 2 - இல், பெண்கள் தன் மார்பை இந்தாபிடி இந்தாபிடி என திரிபவர்கள் என சுகன் (இவர் தலித்தியம் பேசி அதன் அரசியல் விபச்சாரத்தில் வேட்டி கட்டிக் சாமத்தியச் சடங்கின் பிரதான காதநாயகனாக, பார்ப்பனருக்கே ஆணாதிக்கத் தலித்தாக வழிகாட்டியவர்.) எழுதியதும், அதை அம்மாவில் சேனன் போற்றியதையும் (போற்றியதற்காகச் சுகன் தலித் தண்ணீர் அடிக்க 100 பிராங் வழங்கினார்.) பார்க்கின்றோம்.

ஏன் இதைப் பிரசுரித்தோர், இதைப் போற்றுவோர் தமது மனைவியுடனோ, தமது தங்கையுடனோ அல்லது அப்பெண் தனியாகவோ, வேறு பெண்களோ போகும் போது இதை வாசித்து, இதைச் சரியென ஏற்றுக் கொண்ட ஒருவன் அல்லது உணர்ச்சி வயப்பட்ட ஒருவன் பெண்கள் தங்கள் மார்பை "இந்தாபிடி இந்தாபிடி" என 'பிடிக்க' திரிபவர்கள் என பின்நவீனத்துவத் தத்துவப்படி பிடித்தால், பிடித்தவனை ஆணாதிக்கவாதி என்று கூறி, கழுவில் ஏற்ற, எழுதி பிரசுரித்தவர்கள் ஈறாகப் பலர் பின் நிற்க மாட்டார்கள்.

ஆனால் உண்மையான குற்றவாளி யார்? இதை எழுதித் தூண்டிவர்களே என்பது மறைக்கப்பட்டு, இலக்கிய இரசனையால், ஊர் உலகத்தில் இல்லாததையா எழுதினோம் என்றும், கட்டுடைப்பு இப்படித்தான், கவிழ்த்துப் போடல் இதுதான், ஒழுங்கு மீறலின் உன்னதமான படைப்பு என பலவாகக் கூறி குற்றத்தைத் தூண்டியவன் தப்பிவிடுகின்றான். நடைமுறையில் குற்றவாளி ஊர் உலகத்தில் இல்லாததையா நடைமுறைப்படுத்தினான் எனின் இல்லை என்பதையும் மறுக்க முடியாது. இந்த உலகத்தில் இலக்கியம் வேறு நடைமுறை வேறு அல்ல, என்பதை, நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இதற்கு உண்மைச் சம்பவம் ஒன்றைச் சுட்டுவது அவசியம். யாழ் பல்கலைக்கழகத்தில் கி.பி. 1985-இல், நடந்த (ராக்கிங்) பகிடி வதையைத் தொடர்ந்து அதில் பெண்கள் பற்றியும், ஒரு குறித்த பெண்ணைச் சுட்டியும், அப்பெண்ணின் மார்பு பற்றிய வருணணையால் உந்தப்பட்ட இரண்டாம் வருட மாணவன் முதலாம் வருட பெண்ணின் மார்பைச் சிலர் முன் பிடித்தான்.





இதனால் அவமானப்பட்ட பெண் அன்றிலிருந்து தனது படிப்பைத் தொடராத மன நோயாளியாகச் சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டாள். இந்தச் சம்பவத்தைத் தெரிந்தவர்கள் மறைக்க, தெரிந்த நிர்வாகம் மூடிமறைத்த நிலையில், என்முன் சில பெண்கள் இதைக் கூறினார்கள்.

இதை அடுத்து உடனடியாகவே பகிஸ்கரிப்புக்கு (புறக்கணிப்புக்கு) அழைப்பு விடுத்து, ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கவே பல்கலைக்கழக மானத்தைக் காப்பாற்ற விழுந்தடித்து வந்த நிர்வாகம், உடனடியாகவே அம்மாணவனை மூன்று வருடக் காலம் பல்கலைகழகத்தில் இருந்து நீக்கியது. இருந்த போதும் உண்மையான குற்றவாளி அவன் மீதான வக்கிரங்களைத் தூண்டியவர்கள் என்பதுதான் யதார்த்த உண்மையாகும். தூண்டிய குற்றவாளிகள் இன்று பேராசிரியர்களாக, ஆசிரியர்களாக, சமூகத்தின் முன்னோடிகளாக இருந்து சமூகத்திற்கு வழிகாட்டுகின்றனர். இதைத்தான் சிலர் சமூக மாற்று இலக்கியமாகத் தமது ஆணாதிக்க வக்கிரத்துடன் எழுதியும், பாராட்டியும், பிரசுரித்தும் அங்கலாய்க்கின்றனர்.

கி.பி. 1985-ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக (ராக்கிங்கில்) பகிடி வதையில் பாதிக்கப்பட்ட பெண்கள் கூற எழுதப்பட்ட துண்டுப் பிரசுரத்தை, நான் தனியாக விநியோகித்தேன். அதில் "ஒரு மாணவியின் மேலாடைகளை அவள் எவ்வாறு கண்ணாடி முன் நின்று கழற்றுவாள் என்று அவள் முன்னாலே லேசாகவே பேசும் நீங்கள் உங்கள் தங்கையின் மேலாடை கழற்றப்படுவதைப் பற்றி யாராவது பேசினால் என்ன செய்வீர்கள்?" எனக் கேட்டு எழுதப்பட்ட துண்டுப் பிரசுரத்தை நான் தனியாக விநியோகித்தேன். மேலும் "கிராமிய நிலப்பிரபுத்துவப் பண்பாடு பெண்களை அடிமைகளாகக் கருதுகின்றது. முதலாளித்துவப் பண்பாடு அவர்களைச் சந்தைப் பொருட்களாகப் பார்க்கின்றது. உங்கள் ராக்கிங் கேள்விகள் ச(ந்)தைப் பொருட்களாகவும், அடிமைகளாகவும் கருதும் கலப்பான பிற்போக்குத்தனத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல.

உங்கள் கேள்விகள் பெண்கள் பற்றிய ஏகாதிபத்தியங்களின் காமவிகாரப் பண்பாட்டுப் பிரச்சாரங்களில் இருந்து பெற்ற வக்கிரமான மன உணர்வுடன் வெளிப்படுகிறதே அன்றி.. ..கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்கள் பல (தமிழ், ஆங்கிலம்) திரைப்படங்கள், சஞ்சிகைகள் மூலமாக அறிமுகமாகும் ஏமாற்றுக் கலை வடிவங்கள் மக்களை வெறியர்களாக்கி சீரழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்குடன்.." என்று அம்பலப்படுத்தி எழுதப்பட்ட துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த போது, "எனக்கு மனநோய்" என்று துண்டுப் பிரசுரம் போட்டு பத்திரிக்கையில் பிரசுரித்தனர். அதையே நன்னி நன்னி போராடியதாகக் கூறி மீளவும் அதே நோக்கத்துக்காக எனக்குக் கல்வெட்டு அடித்தார் ஷோபாசக்தி. பெண்கள் மீதான ஆணாதிக்க ஊற்று மூலத்தைப் பாதுகாக்கும் ஏகாதிபத்தியப் பண்பாட்டை இன்று இலக்கியமாக, தமது ஆணாதிக்க வக்கிரத்துடன் வெளிப்படுத்துவது ஒன்றும் ஆச்சரியமானது அல்ல. அதைப் போற்றுவோர், அதை வெளியிடுவோர் என அனைவரும் இச்சமூகத்தின் குற்றவாளிகளே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் விடுதலைப் போராட்டத்தைக் குத்தகைக்கு எடுத்த விடுதலைப் புலிகள் ஆணாதிக்க ஒழுக்க மரபைப் பாதுகாக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியில், வீதிகளில் பெண்கள் மீது பகிடி விடுவோரையும் தமது கட்டுப்பாட்டை மீறுவோரையும் கட்டுப்படுத்த தமது அடியாட்படையாக, இந்தப் பாலியல் வன்முறைக் கொலைக்காரர்களை வைத்து தாக்குதலை நடத்தினர். இந்த நிகழ்வால் தான், பாரிஸ் ஈழமுரசு 16.02.1999 - இல், "புல்லுருவிகள்" என ஆசிரியர் தலையங்கம் எழுதியதன் மூலம், மெதுவாக நழுவ முயன்ற போதும், குற்றவாளிகளின் பெயரை வெளியிடாது (பிரெஞ்சு தொலைக் காட்சி பெயரை வெளியிட்டு இருந்தது.) கரைப்பகுதியைச் சேர்ந்தவர் என்று போட்டது. மக்களிடம் இருந்து "ஏன் பெயர் போடவில்லை" என்ற கேள்வியால் அடுத்த இதழில் பெயரைக் குறிப்பிடுகின்றனர். இதில் கரை பகுதியைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்டது (ஊரின் பெயர் பாவிக்காது.) என்பது சாதிப் பெயராகி புதிய சர்ச்சையாகியது. இதை அடுத்து அடுத்த நாள் மன்னிப்பு கோருகின்றனர். தாம் எப்படி தமது அடாவடித்தனங்களுக்கு இயக்கத்தினுள் வைத்து குற்றவாளிகளைப் பயன்படுத்தி சேவை பெற்று வளர்ந்ததை, சுயவிமர்சனம் செய்து போராட்டத்தைத் தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பான பணியைக் கைவிட்டு, யார் அவன் என்பது முதல் பெயரை மறைத்து, ஊரை மறைத்ததன் மூலம் குற்றவாளிகளின் ஊற்று மூலத்தைத் தொடர்ந்து திறந்தே வைத்துள்ளனர்.

குற்றவாளி, ஊரில் இயக்கத்தை விட்டு ஏன் வந்தார்?, இந்த மாதிரி கொடூரமான கொலைகளைச் செய்ய இலங்கையில் ஜனநாயகத்தை மறுத்த போராட்டம் காரணமா? அங்கு தண்டனை பெற்றவரா?, பின் எப்படி மீள இயக்கத்துடன் இயங்க முடிந்தது? விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பில் தனிப்பட்ட முறையில் பணம் சேர்த்தாரா? பல பெண்களை மிரட்டி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, அதைப் படமாக்கி மீள மீள பெண்களைப் பயன் படுத்தியது, வேறு பெண்கள் மீதான கொலைகள் என மக்களால் கேட்கப்படும், பேசப் படும் இது போன்ற பல விடயங்கள் பற்றி எல்லாம், யுத்த ஆய்வு போல் விடுதலைப்புலிகள் செய்து, குற்றவாளிகள் உருவாகும் ஊற்று மூலத்தைக் கண்டறிவதன் மூலம், தமிழ் மக்களின் நம்பிக்கையை அல்லவா ஊட்டியிருக்கவேண்டும். இல்லாது மக்களுக்குள் மக்கள் பேசிய இரகசியமான விடயமாக இது நீடிக்கும் சமூகம் உள்ள வரை, குற்றவாளியின் ஊற்று மூலம் எல்லாவற்றிலும் தொடர்வது தவிர்க்கமுடியாது.

இதை வைத்து ஜனநாயகமாகச் சுதந்திரமாகச் செய்தி விடுவதாகக் கதையளந்து **குரு** ஈழமுரசை அடியொற்றி பத்திரிக்கை நடத்தி பிழைப்போர், வானொலி, தொலைக்காட்சி நடத்துவோர் என எல்லோரும், பிணத்தின் மீது உண்மைகளை ஆராயத் தவறி, குற்றவாளி மீது தமது திட்டுதல் ஊடாக, குழந்தையின் பால் முகம் மீது தம்மைத் தாமே மறைத்துக் கொண்டனர்.

பாரீஸ் புத்தகக் கடையில் விற்கும் வக்கிரமான நீலப்படப் புத்தகங்கள் மீதும் அஞ்சலிக் கவிதை பாடியும், பாரிஸ் வியாபார நிலையங்களில்



விற்பனைக்காகப் பரப்பியுள்ள இந்திய மலின சஞ்சிகை மீதான கவர்ச்சி பெண்கள் மீது கறுப்புக் கொடி கட்டியும் துக்கத்தைப் பறக்க விட்டதன் மூலம், நேரடிக் குற்றவாளிக்கு எதிராக மறைமுகக் குற்றவாளிகள் ஆணாதிக்க எதிர்ப்புவாதிகளாகி ஒழுக்கத்தின் பாதுகாப்பாளராகி விடுகின்றனர். ஆனால் அக்குற்றவாளி கிளுகிளுப்பூட்டும் எத்தனை நீலப்படப் புத்தகத்தைப் படித்தும், எத்தனை கவர்ச்சி நாயகிகளின் படத்தை வாங்கி கண்டு களித்து ரசித்ததனால் வெறியூட்டுதல்களை ஏற்படுத்தியிருக்கும் என்பது தெரிந்ததே. வக்கிரங்களை தூண்ட காரணக்கர்த்தாவாக இருந்த உங்கள் கைகள் கறுப்புக் கொடி கட்டினால் சுத்தமானவையாக மாறிவிடுமோ? இப்படி உருவேற்றப்பட்ட எத்தனை பேர் ஆணாதிக்க ஒழுங்குக்குப் பயந்து உணர்ச்சியை அடக்கிய படி, அமைதியாக நடமாடுவர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள், சிறுவரையே உழைக்க வைத்து அதில் சுகம் காண்பது எல்லாம் இந்த ஜனநாயக அமைப்பில் பாதுகாக்கப்படுகின்றது. நாகரிகம் அடைந்த முதலாளித்துவ - நவீனத்துவ வளர்ச்சியிலும், இன்று உலகமயமாகும் பின் நவீனத்துவக் கால ஏகாதிபத்திய மேற்கு நாடுகளிலும் சிறுவர் மீதான 18 மணிநேர உழைப்பு, சிறுவர் மீதான பாலியல் வன்முறை ஒரு நூற்றாண்டுக்கு முன் மிகக் கோரமாக இருந்தது. அது சில பண்பியல் மாறுபாட்டுடன் உலகு எங்கும் எல்லா இடத்திலும் இன்று உள்ளது.

இந்த வன்முறைகளில் ஈடுபடும் கட்டற்ற ஒழுக்க மீறல் அவர்களின் தனித்த பண்புடன் பிறப்பதில்லை. மாறாக இந்த ஆணாதிக்கச் சமூகம் உற்பத்தி செய்கின்றது. இந்தக் குற்றத்தின் பொறுப்பாளிகள் நாம் எல்லோரும் என்பதை உணர்ந்து கொள்வதும், அதை மாற்ற நாம் போராடுவதும் அவசியம். குற்றவாளியைக் கைது செய்தல், தண்டனையைக் கொடுத்தல், கண்டன அறிக்கைகள், கறுப்புக் கொடிகள் ஆகியவை எல்லாம் சிலர் பிழைக்கவும், நாளை மறந்து போகவும் மட்டுமே நடக்கும். இதன் சமூக ஊற்று மூலத்தைக் கண்டறிவதும், அந்த நோயைத் தீர்க்க போராடுவதுமே இக்கொலைக்கு முன் உள்ள பிரச்சினை. நாளை இன்னுமொரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாகாத சமூகத்தைப் படைக்க போராடாத வரை இது போல் நடப்பதற்குத் துணைபோகின்றோம் என்பதை மறந்தாலும், மறுத்தாலும் அவர்களும் குற்றவாளிதான்.

இந்தக் பாலியல் வன்முறைக் கொலைகள் சமூக ரீதியில் பாரிய மாற்றத்தை எதிர் நிலையில் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாகப் பெண் குழந்தைகள் மீதான கட்டுப்பாடு, அடக்குமுறை அதிகரித்துள்ளது. பெண் குழந்தைகளின் நியாயமான கேள்விகள், இதைக் காட்டி மறுக்க, நியாயவாதியாக மாற்றிவிட்டது. இங்கு ஒரு பெண் குழந்தையை மட்டும் அந்த ஆணாதிக்கக் காமுகர்களும், இதற்குத் துணைபோன கவர்ச்சி வியாபாரிகளும் கொத்திக் கிளறி குழந்தையை அலங்கோலம் செய்து படுகொலை செய்யவில்லை. மாறாக பாரிசிலுள்ள,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலம் பெயர் சமூகத்தின் எல்லாப் பெண் குழந்தைகளையும் ஆணாதிக்கக் கொடூரத்துக்குள் சிறைவைக்க அறைகூவல் இட்டு நடைமுறைக்குள் நகர்த்தியுள்ளனர். இந்தப் பாலியல் வன்முறைக் கொலைகள் அந்தப் பெண்ணையும் இச்சமூகத்தில் இருந்து மீட்கவில்லை, எல்லாப் பெண்களையும் கவனம் என்ற ஆணாதிக்கக் கொடூர புதிய சிறைக்குள்ளும் இட்டுச் சென்றுள்ளது.

பெண் குழந்தைகள் உள்ள குடும்பங்களில் பழகும் நல்ல நண்பர்களை, தொழில் ரீதியாகத் தொழில் புரியும் விசா அற்ற, தொழில் அற்ற, கட்டடத் தொழிலாளர்கள் மீது சந்தேகங்களை, சங்கடங்களை விதைத்துச் சென்றுள்ளது. இருக்க கூடிய குடும்பப் பந்த உறவுகள் சிதைய, கூட்டுக் குடும்பங்கள் சிதைய, குடும்பம் சிதைய முன்னோடியாகியுள்ளது. மனிதர்களின் நல்ல நேச மனப்பான்மை என்பது மேலும் மேலும் சிதைந்து சிதற, பெண் குழந்தைகள் இறுக்கமான கட்டுபாட்டுக்குள் நசுங்க, குற்றவாளியின் மூலக் காரணத்தை ஆராய மறுத்து, இச்சமூகம் புதிய குற்றவாளியை உருவாக்க, ஈடுபட்ட குற்றவாளிகள் வழிகாட்டிச் சென்றுள்ளனர்.

குறிப்பு: இக்கட்டுரையின் கீழ் வெளியிட்ட பல அஞ்சலிகள் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்கின்ற, அதைப் புகட்டுகின்ற, அதை இறுக்குகின்ற சில மாதிரிகளை மட்டும் இங்கு எடுத்து விமர்சித்துள்ளேன். இது போல் பத்திரிக்கைகள், வானொலிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பற்பல ஆணாதிக்க வக்கிரங்களைத் தமது அஞ்சலி ஊடாகக் கொட்டியிருந்தனர். அதே நேரம் கடந்தகால ஜனநாயக விரோத அடக்குமுறைகளை மறைமுகமாகவும், நேரடியாகவும் நியாயப்படுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியில் பரிமாறிக் கொண்ட வார்த்தைகளில் "தமிழன் போயும் போய் தமிழச்சிக்குச் செய்யலாமோ" என்பதன் ஊடாகத் தமிழ் இனவாதிகள் தமிழச்சி அல்லாத வேறு பெண் (சிங்களப் பெண்) என்றால் எல்லாம் சரி என்ற மாதிரி துடித்து பதைத்து கதைத்தோரை என்ன என்பது?

அஞ்சலிக் கவிதை ஒன்றில் "ஐயோ! அன்னை மடி சுகமறியா அக்கிரமக்காரர்களே! பாலுக்கும் கள்ளுக்கும் பாகுபாடு புரியாதோ?" என்று கண்ணீர் வடிக்கின்றார்கள். அதாவது இந்த அஞ்சலிக் கவிதையில் பால் என்பது குழந்தை, கள் என்பது பெண் என்பதாகும். கள்ளை நீ ருசித்திருக்கலாம் என்பது அஞ்சலியின் தமிழ் விளக்கம். அத்துடன் அன்னை மடி சுகம் தெரியாததுகள் மட்டுமே இப்படி என்று குற்றத்தைத் தூக்கிப் பெண் மீது போடுகின்றது. எந்தத் தாயும் ஆணாதிக்கம் போல் அல்லாது தன் குழந்தையைப் பால் ஊட்டித்தான் வளர்க்கின்றாள். குற்றத்தின் ஊற்று மூலம் ஆணாதிக்கச் சமூகத்தைப் பாதுகாக்கும் இச்சமூகம் தானே ஒழிய, அதைப் பெண் மீது வழக்கம் போல் தள்ளிச் சேறு வீசுவது ஆணாதிக்கக் குற்றத்தின் அபத்தமாகும்.

தமிழ் மக்கள் சேவை செய்ய நடத்தும் வானொலியில் நேயர் உள்ளிட்ட கருத்துப் பரிமாற்றத்தில், ஏன் அங்கு இவைக்கு (குற்றவாளிகளுக்கு) அந்தப்



பெண்கள் நிற்கின்ற இடம் தெரியாதோ? எனக் கேட்டு தம்மையும் தம் அறிவையும் மெச்சிக் கொண்டதன் மூலம் விபச்சாரிகளைக் கற்பழித்திருக்கலாம் என்று கூறுகின்றனர். தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டைத் தீர்மானிக்கும் இந்த ஆணாதிக்கத் திமிர்களை என்ன என்பது?

நடந்ததை ஆராயும் காற்சட்டை போட்டு படித்த சடங்கு சம்பிரதாயத்தில் தமிழ்ப் பண்பாடு காப்போர் "அவன் ஊரில் எவடம்? அவன் சாதி என்ன? சாதி புத்தியைக் காட்டுதுகள்?..." என விளக்கம் கொடுத்து தம்மைத் தாம் மெச்சியதுக்குள், தமக்குள் இது இல்லை என்ற மாதிரி கதையை முடிச்சினம். ஆணாதிக்கம் எல்லாச் சாதிக்குள்ளும் இருக்கிறது. பாலியல் வன்முறை எல்லாச் சாதிக்குள்ளும் புளுத்துப் போயுள்ளது என்பதை மூடி மறைத்தபடி, தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களைக் கும்பல் கும்பலாகக் கற்பழித்து சாதி ஆணாதிக்கத்தை நிறுவிய மூத்தக்குடிகள் அல்லவா இவர்கள்.

எங்கடை மண்ணிலே சிங்களவன் செய்தது, இப்படி தமிழுக்குள் முடியுமோ என்ற மாதிரி கதைகளும் உலாவின. உயர்சாதித் தமிழரின் சமுதாயம் என்ற விஷேட கண்டுபிடிப்புகளுடன், தமிழர் பண்பாடு ஆணாதிக்கமற்ற, பாலியல் வன்முறையற்ற உன்னதமானது என்று வேறு கண்டுபிடிப்பாகியது. இது "உலகின் எட்டாவது அதிசயமானாலும் ஆகலாம்" எச்சரிக்கை!

ஈழநாடு பத்திரிக்கை ஆசிரியரில் ஒருவரும், பாலுறவு (Sex) வக்கிர நூல் ஈறாகக் கடைவிரித்து நடத்துபவரும் எழுதிய அஞ்சலிக் கவிதையில் "அக்கிரமக் காரர்களை -இன்னும் மரணக் கயிற்றினால் கட்டாமல் விடுவதா?"[70] என எழுதுவதன் மூலம் கொன்று விட்டால் எல்லாம் சரி என்கின்றார். இனி இப்படி நடக்காது என எமக்குக் கதையளக்கின்றார். இதன் மூலம் எப்படி அவன் உருவானான் என்பதும், அதைப் பாலுறவு (Sex) வக்கிர நூல்கள் மூலம் பத்திரிக்கை மூலம், வானொலியில் கேவலமான பாடல்கள் மூலம் உருவேற்றி நிறைவேற்ற தூண்டிய உங்களுக்கு என்ன தண்டனை என்று, அஞ்சலிக் கவிதையில் பாடியிருப்பின் நியாயமாக இருந்து இருக்கும்.

இதுவல்லாது குற்றத்துக்கு எப்படி எல்லாம் நீங்கள் மறைமுகமாகத் துணை நிற்க, பணத்தாசை பிடித்து பெண்களின் உடல்களை விளம்பரப்படுத்தி செக்ஸ் வியாபாரம் பண்ணியதைச் சுயவிமர்சனம் செய்து, இனி இப்படி செய்ய மாட்டோம் என உறுதியளித்து இருந்தால், வருங்காலத்தில் இதுபோன்ற சிலவற்றைத் தடுக்க முதல் காலடி எடுத்து வைத்த வெற்றியாவது கிடைத்திருக்கும். ஆனால் இந்த அஞ்சலிக்குப் பின்னால் அடுத்த கற்பழிப்புக்கு நபரைத் தயார் செய்யும் நோக்கில், பெண் பாலுறவு சின்னமாகத் (Sex Simple) தொடர்ந்தும் உங்கள் பணம் வாங்கும் விற்பனையால் அடுத்த குற்றவாளி உருவேற்றப்படுகின்றான். ஆகவே நேரடி குற்றவாளி உருவாக மறைமுகக் குற்றவாளி காரணமாகின்றான். எனவே மறைமுகக் காரணம் ஒழிக்கப்படாமல் நேரடி குற்றத்தைத் தடுக்கமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெர்மனி **ஸ்ரீபதி சிவனடியான்** எழுதுகின்றார் "சமூக விரோதிகளை நாம் எந்தவித காரணத்திற்காகவும் அடையாளம் காட்டாமல் விட்டுவிடவும் கூடாது. (என்பவர் இனம் காட்டவில்லை)......... தஞ்சம் புகுந்த நாட்டிலும் எம்மவர் உயிருக்குச் சில சமூக விரோதிகளால் அச்சுறுத்தல்.."[70] என்று அந்த சிவ நாமத்தார் என்று கூறுகின்றார். சமூக விரோதி எப்படி சமூகத்தில் உதித்தான் என்றால் அது சிவனிடமே இருந்த ஆணாதிக்கமேயாகும்.

ஏன் மூன்று வயதில் ஞானம் பெற்றதாகக் கூறப்படும், இந்து சமயத்தின் வணக்கத்துக்குரிய திருஞானசம்பந்தனின் வக்கிரமான பாலியல் பார்வையைக் கண்டுதான் உமாதேவியார் மார்பில் பால் கொடுக்காமல் கிண்ணத்தில் பால் கொடுத்தாரோ? அந்தச் சம்பந்தன் இறைவியாகக் கருதும் உமாதேவியின் உடல் உறுப்புக்களை, வகைவகையாக வருணித்ததைப் பெரிய பட்டியலில் போட்டு டிப்ளமோ பட்டம் வாங்கமுடியும். அந்தளவுக்குக் கடவுளாகக் கருதி குருவாகக் கொண்ட எம் ஆணாதிக்கச் சமூகமே, சமூக விரோதியின் தோற்றுவாயே ஒழிய தனிநபர்கள் அல்ல.

ஏன் சம்பந்தப் பெருமான் இந்து - சமணப் போராட்டத்தின் போது "பெண்ணகத்தே எழில்சாக்கியப் பேய் அமன் தென்ன கற்பழிக்கத் திருவுள்ளமே"[71] எனக் கோரி சமணப் பெண்களைக் கற்பழிக்க அருள் கோருகின்றார்.

பிள்ளையார் கதையைப் பார்ப்போம். சிவபெருமானின் மனைவி உமாதேவியார் குளக்கட்டில் (குளியலறையில்) குளிக்கும் போது தன்னை ஆணாதிக்க வக்கிரத்தில் இரகசியமாகப் பார்த்து விடுவர் எனப் பயந்து, தன் உடல் மேல் இருந்த ஊத்தையை (அழுக்கை) விறாண்டி (சுரண்டி) பிள்ளையாரை உருவாக்கி காவலுக்கு (இங்கு மனிதனை உருவாக்கவில்லை. மிருகம் கலந்த குழந்தையையே உருவாக்கினார். மனிதக் குழந்தை கூட ஆணாதிக்கத்தைக் கொண்டது என்பதாலோ! ) வைத்ததே பிள்ளையார் உருவான கதை. எப்படி இறைவியாலேயே ஆணாதிக்கத் தொல்லையில் இருந்து தன்னையே பாதுகாக்க முடியவில்லை.

ஏன் பெண்களை எல்லாம் குறும்பு செய்து, பெண்களை எல்லாம் வைப்பாட்டியாக வைத்திருந்த கண்ணன் கதை வேறு. வேலுடன் திரிந்த இரண்டு பெண்டாட்டிக்காரன் முருகன் இப்படி. இந்து கடவுள்களே ஆணாதிக்கத்தின் வடிவங்கள் அல்லது அதைச் செய்பவர்களாக இருந்தனர். கும்பிடும் தெய்வங்களே கற்பழிக்கும் போது தனி மனிதன் மட்டும் குற்றவாளியா? எப்படி?

வண்த் தெய்வம் தனது அஞ்சலியில் "...பாதகம் ஒன்றினை நடத்திய இவ்வன்செயலை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய மக்கள் தொடர்பு சாதனங்கள் பாராட்டுக்குரியவை"[70] என்கிறார். யாரை எந்த ஜனநாயக விரோதிகளைப் பாதுகாக்க விரும்புகின்றீர்கள். மண்ணில், புலம் பெயர் சூழலில்





நடத்திய படுகொலைகள், தாக்குதல்கள், இக்குற்றவாளிகள் முன்பு இயக்கத்தில் இருந்த போது நடத்திய தாக்குதல்கள் எல்லாம் எப்படி உறங்கிப் போனது? பத்திரிக்கைகள் ஏன் அனைத்தையும் மறைத்து விளையாடுகின்றன. அதன் அரசியல் என்ன? இப்படி இருக்க ஏதோ ஜனநாயகம் வாழ்வதாகத் தமிழ் மக்களுக்குக் கதையளக்கின்றார்.

'தமிழன்' என்ற பத்திரிக்கையின் முன்னாள் ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் என்பவர் "நமது மண்ணில், சிங்கள ஏகாதிபத்தியவாதிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சீருடை அணிந்த சிங்களக் காடையர்கள் தமிழ் யுவதிகளை - ஏன் வயது முதிர்ந்த பாட்டிமார்கள் மீது கூட பலாத்காரம் புரிந்து அடையாளம் தெரியாமலேயே அழித்து புதைத்துக் கொண்டுவரும் கொடுமைகளைத் தினமும் கேள்விப்படுகின்றோம். இதுபோல் ஆப்பிரிக்க நாடுகளிலும் ஆட்சியில் உள்ளவர்கள் பெண்கள் மீது காட்டுமிராண்டித்தனம் புரிகிறார்கள்."[70] என்கின்ற போது புல்லரிக்கின்றது. விட்டால் சிங்களவன் இல்லை என்றால் அந்த கறுப்பு ஆப்பிரிக்கன் மட்டுமே இவர்களின் இனவெறி விளக்கம். அதற்குள் இவர் பத்திரிக்கை ஆசிரியர் வேறு என்றால், இப்படி கற்பழிப்புகளின் ஊற்று மூலம் இங்குதான் ஊற்று எடுக்கின்றது.

புலம்பெயர் நாட்டை நோக்கி வருகின்ற போது, பெண்களைப் பயண முகவர்கள் மிரட்டி உருட்டி கற்பழித்துக் கொன்றும், கொல்லாமலும் (இதில் ஈடுபட்ட பலருள் பத்திரிக்கை ஆசிரியர்கள் உள்ளிட்ட) நடந்த சம்பவங்கள் நிறையவே உண்டு. ஏன் வசதி கருதி மறந்து போனீர்கள்? இன்று பயணமுகவர் மூலம் பெண் வந்து இருந்தால், ஆணாதிக்கச் சமூகம் விபச்சாரியாகப் பார்க்கும் அளவுக்குப் பாலியல் வன்முறை காணப்படுகின்றது. இப்படி வரும் பெண்ணைத் திருமணம் செய்ய மறுக்கும் புதிய புலம் பெயர் சமூக ஒழுக்க நியதி கூட உருவாகியுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பெண், பாதிக்கப்படாத பெண் என இருவரின் பின்னாலும் புதிய ஒடுக்குமுறையை, அவமானத்தை இந்தப் பத்திரிக்கைகள் கண்டு கொள்ளாது "இப்படியும் நடக்கிறது" என்ற குசும்புக்கு (குறும்புக்கு) ஊடாக ஆணாதிக்க வக்கிரத்தை உருவேற்றவே உதவுகின்றது.

தற்போது தமிழ் ஆணாதிக்கம் பயண முகவர் வழிவந்த பெண் வேண்டாம், நேரடி இறக்குமதி பெண் வேண்டும் என கன்னிப் பரிசோதனை செய்யாத குறையாக நாக்கைத் தொங்க விட்டு ஆணாதிக்கம் அலைகின்றது. இந்தியாவின் சட்டத்தைப் பாதுகாக்கும் உள்துறை அமைச்சு செயலாளரின் ஆறு வயது மகளைப் பலர் முன் கற்பழித்ததை அறிந்த தாய், நீதி கேட்டு சென்ற போது நீதி மறுக்கப்பட்டது. அதற்காக அந்த வசதி படைத்த தாய் (வசதியிருந்ததால்தான் சட்டத்தின் முன் நீதிகேட்டுப் போராட முடிகின்றது.) நீண்ட போராட்டத்தை நடத்தியும், சட்டத்துக்குப் பொறுப்பான உள்துறை அமைச்சு இழுத்து அடிக்கின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் இந்தியாவைச் சேர்ந்த ஒரிசாவில் அஞ்சான் என்ற பெண் தனது கணவனின் கொடூரத்தால் பாதுகாப்பு தேடி நீதி கோரி, அரசுத் தலைமை வழக்கறிஞரிடம் இடம் முறையிடச் சென்ற போது, அவன் அப்பெண்ணைக் கற்பழிக்க முயன்றான். அதை எதிர்த்து அப்பெண் போராடிய போதும், முதல் அமைச்சரிடம் முறையிட்ட போதும் (இருவரும் கூட்டாகப் பல கற்பழிப்பில் ஈடுபட்டவர்கள்.) அப்பெண்ணைக் கும்பலாக அடியாட்படை கொண்டு கற்பழித்தனர். இதன் பின் தன்னெழுச்சியாக மக்கள் திரண்டு போராடிய பின் விசாரணை நாடகம் தொடங்கியுள்ளது.

ஏன் ஐரோப்பாவில் சிறுமிகளைக் கடத்திச் செல்வதையும், அது பொலிஸ்-அரசு கூட்டுச் சதியுடன் நடந்த செயலால் தொடர்ந்த நிலையில், அண்மையில் ஸ்பெயின் நாட்டில் இலட்சக்கணக்கில் மக்கள் வீதி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஏன் அமெரிக்கா இராணுவத்தில் உள்ள 50 சதவீதமான பெண்கள் உயர் அதிகாரிகளால் கற்பழிக்கப்பட்டுள்ளனர். ஏன் **கிளிண்டன்** அதிகாரப் பாலியல் வன்முறை உலகை நாறடிக்கவில்லையா?

கம்பூச்சியாவில் கம்போடியா பயங்கரக் கொலைகாரனை ஒடுக்கி சமாதானம் காணச் சென்ற ஏகாதிபத்தியம், **போல்பாட்டையும்,** உழைக்கும் மக்களின் ஆட்சிகளைச் சேறடித்த ஆணாதிக்க அமெரிக்கத் தியாக வீரர்கள், கன்னிகழியாத இளம் பெண்ணை 50,000 ரூபாய்க்குப் பணம் கொடுத்து வாங்கி ஜனநாயகச் சந்தையில் நுகரமுடிந்தது. **சத்திய சாயிபாபா** என்ற ஆணாதிக்க வெறியன், பெண் போட்டியில் அரசியல் செல்வாக்குடன் பொலிசைக் கொண்டு தனது சீடர்களை அழித்ததை மூடி மறைக்க முடியாது நாறியது.

எம் மூத்த தமிழ் மறவர்கள் தமது சாதி ஆதிக்கத்தில் இன்றுவரை எத்தனை தாழ்த்தப்பட்ட பெண்களைக் கற்பழித்து சாதி ஆணாதிக்கத் திமிரில் சுகம் பெற்றதை, பெறுவதை மறைத்துப் புலம்புவது மோசடியாகும்.

ஏன் இரண்டாம் உலக யுத்ததில் எத்தனை ஆயிரம் பெண்களை ஜப்பானும், ஜெர்மனியும் சூறையாடியது. இப்படி எத்தனை வரலாறுகள். இதற்குப் பிறகு சுத்திச் சுத்தி சிங்களவன் ஆப்பிரிக்கன் மட்டும்தான் என்ற மூத்த தமிழ்க் குடிகளின் இன பாசிச ஒப்பாரிகள் சகிக்க முடியவில்லை.

"எம்மினத்தின் முகங்களிலே கரும்புள்ளி. இரத்த வெறி பிடித்த கரடிகளின் செயலால் தமிழ்மொழி பேசா மற்ற இனத்தவர்கள் கொலைகாரர்கள் இலங்கைத் தமிழர்களிடமும் இருக்கிறார்கள் என்று பேசும் படி செய்து விட்டார்கள். இந்த நய வஞ்சகச் சொறிநாய்கள்"[69] என **நந்தினி கலைத் தென்றல்** அஞ்சலி ஒப்பாரி வைக்கின்றது.

சபாலிங்கம், நாதன், கஜன்..... என நடந்த ஈவிரக்கமற்ற அரசியல் கொலைகள் மற்றும் பல பெண் படுகொலைகள் எல்லாம் இதைச் செய்யவில்லையா? மண்ணில் ஆயிரக்கணக்கில் இயக்க உட்படுகொலைகள்,



மற்ற இயக்கப் படுகொலைகள், எல்லையோர அப்பாவிச் சிங்கள முஸ்லிம் படுகொலைகள் எல்லாம் எம் இனத்தின் கொலைகள் இல்லையா?

ஏன் கி.பி. 1993-இல் ஜெர்மனியில் சுஜிதா என்ற சிறுமி கொல்லப்பட்ட போது, நாசிகள் மீது வாய் கூசாது குற்றம் சாட்டி விட்ட கதைக்குப் பின்னால் சாதித்திமிரும், ஆணாதிக்க வெறியாட்டமும் கொலையின் பின்னணி என்ற கதைகளும் பரவிய போது, அஞ்சலிகள் மௌனத்தின் உறைவிடமானது ஏனோ? இவர்கள் சொறிநாய்கள் அற்ற புனிதர்களோ? என்ன நித்திரையா கொள்கின்றீர்கள்? இது சொறிநாய் என்றால் இதன் ஊற்று மூலம் தொடங்கி வைத்த இடமும் சொறிநாய்கள்தான்.

**தி. உமாகாந்தன்** என்பவர் தனது உன்னதமான அரசியல் வழி அஞ்சலியில் "..எங்கள் சொந்த இடம் தெரியாமல் குழம்பி நிற்கும் வேளையிலே தேகம் திமிரெடுத்ததால் இந்த மிருகத்தனம் நிகழ்ந்தது. நிலவுக்கு அஞ்சி பரதேசம் வந்த கதையாகி விட்டதா நம் கதை"[72] என்கின்றார். தேகம் திமிர் இல்லாமல் (இயல்பான பாலியல் தேவை இல்லாமல்) மனிதன் இருக்கமுடியுமோ? பாலியல் மனித வாழ்வில் இயல்பானது என்பதையே மறுக்கும் ஆணாதிக்கம், இந்த இயல்பான பாலியல் மீது எண்ணெய் ஊற்றி எரியவைக்கும் போது ஏற்படும் விளைவைத் "தேகம் திமிரெடுத்தது" என்று கூறி பிரச்சினையின் மூலவேரை அடியோடு கவனமாகப் பாதுகாக்க உதவுகின்றது இப்பழமொழி. இவர்கள் அரசியலில் சமூகத்தைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை மீட்டு எடுக்கவும் வம்பளக்கின்றனர் என்பதையே இந்த அஞ்சலிகள் தெளிவாக்குகின்றன. ஏன் இவர் ஆதரிக்கும் இ.பி.ஆர்.எல்.எப். இந்தியா ஆக்கிரமிப்பாளனுடன் சேர்ந்தும், தனித்தும் கற்பழிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காதது.

"உன் பிள்ளையை உன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்!"[72] என்று **ஞானி** ஆலோசனை வழங்குகின்றார். பெண்பிள்ளை என்றால் பூட்டி ஆணாதிக்கச் சிந்தனைக்குள் அமுக்கு. ஆண் குழந்தை என்றால் "கறுப்பு" (ஆப்பிரிக்க மக்கள்) மற்றும் "அடைகள்" (அரபு மக்கள்) உடன் சேர அனுமதியாதே. அதாவது தாய் தந்தையைக் கொண்ட இந்த ஆணாதிக்கச் சமூக ஒழுக்கத்தை மீறாத வகையில் உன் பிள்ளையைக் கட்டுப்பாட்டில் வைத்திரு அது போதும் என்கின்றார். அதன் வெளிப்படையாக "...உன் மனதிலே பதித்துக் கொள், என் இனமே! வட்டிக்குப் பணம் வாங்கி வடக்கே வாசல் வைத்து - வளவோடு வீடு கண்டோம்! சீட்டுக் கட்டி சிங்கார வாகனத்தில் ஒய்யாரமாய் பவனிவந்தோம்!"[72] என்பதன் ஊடாக உயர் சாதியினரில் சிலர் வாழ்க்கையில் வசதியற்ற வக்கற்றவர்களின் பணத்தைச் சீட்டில் ஏமாற்றி வடக்கு வாசல் வைத்து, தமக்குச் சேவகம் செய்ய காலாட்டி, காணி வழங்கி கொட்டில் (கட்டில்) போட்டு, உயர்சாதியின் சீறும் செருக்கை வெளிப்படுத்தியதைப் பிள்ளைக்குப் புகட்டு. அப்போதுதான் உனது கட்டுப்பாட்டில் சாதி கடவாத, காதல் செய்யாத, சீதனத்தை மறுக்காத, வேறு இனத்தைத் திருமணம் செய்யாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கம் ஒடுக்கமான ஊமைப் பிள்ளைகளை வளர்த்த பெருமையை, **கல்தோன்றா மண் தோன்றா தமிழ் மரபைப் பேணுவதை உலகம் புகழும் என்பதே அவரின் கவிதை விளக்கம்.**

**திருமதி நளாயினி தாமரைச்செல்வன்** என்பவர் தனது அஞ்சலியில் "காமுகரை அடக்கி ஆளுங்கள். யூடோ கராத்தே உண்டு. யுத்திகள் நிறைய உண்டு"[70] என்கின்றார். துப்பாக்கிகள் உண்டு பெண்களே இடுப்பில் செருகி நடமாடுங்கள் என கூறாதது மட்டுமே இங்கு விடுபட்டுவிட்டது. சமூகத்தின் ஆணாதிக்க நோய்க்குக் கராத்தேவோ, யூடோவோ, துப்பாக்கியோ, மரணத் தண்டனைகளோ தீர்வாகுமா? இல்லையே. ஆணாதிக்க வெறி என்பது எல்லா நவீன ஆயுதங்களையும் மீறி பின்நவீனத்துவ (ஏகாதிபத்தியமாக) நடைமுறையாக உள்ளது. அதாவது நவீன ஆயுத உற்பத்தியில் உலகை ஆளும் போட்டி போல் இதுவும் நீடிக்கும்.

புலம்பெயர் சீரழிவு இலக்கிய மையவாதியான **சி. புஸ்பராஜா** தனது அஞ்சலியில் "சமூகச் சீர்திருத்தத்தில் அக்கறை கொண்டவர்களுடனும், சட்டத்துடனும் ஒத்துழைத்து நம்மிடையே இருக்கும் சமூக விரோதிகளை இனம் கண்டு, நீதியின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற செய்யவேண்டும்."[72]

இது எப்படி? சட்டமும் ஒழுங்கும் ஆணாதிக்கமாக உள்ள போது, அத்துமீறிய ஆணாதிக்க மீறல்களைச் சட்டம் சிலவேளை கண்டு கொள்ளலாம். அமெரிக்க இராணுவத்தில் இணைந்த பெண்கள் மீதான கற்பழிப்புகளை எந்தச் சட்டமும் கண்டுகொள்ளவில்லை. ஏன் கிளிண்டன், ஸ்பெயின்.. என பட்டியல் நீண்டு உள்ளது. ஆணாதிக்கத்தை இச்சட்டம் பாதுகாக்கின்றது. இதைச் சீர்திருத்தவாதிகள் தங்கள் வர்க்க விசுவாசத்துடன் முண்டு கொடுக்கின்றனர்.

ஏன் அண்மையில் உங்கள் உடன் கூடித் திரிவோர் எழுதிய படைப்புகளில் பெண்கள் மார்பை இந்தாபிடி இந்தாபிடி எனத் திரிவதாக எழுதியும், விமானப் பெண் என்ன குடிக்கிறாய் எனக் கேட்க, உன் மார்புப் பால் எனக் கூறியதையும் (ஏன் நிதர்ஷினியைக் குதறியவர்கள் அப்பெண்ணை இலக்கியவாதி கோருவதையே செய்தனர் என்பதை அஞ்சலிகள் ஊடாக மறைக்காதீர்கள்.) எந்தச் சட்டத்திடம் முறையிடுவது. அதையும் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதுபோல் சமூக அக்கறை கொண்டோர் என நீங்கள் அடையாளம் காட்டும் இவர்கள்தான் அதாவது நீங்கள் கூடித் திரியும் அந்தக் கழிசடை இலக்கியவாதிகள் தான், பெண்களைக் கேவலமாக எழுதியே கற்பழித்தவர்கள் ஆவர்.

"ஆண்களைச் சரியாக வளர்க்காத தாய்களா காரணம்?[72] என்று பூர்சுவா பெண்களின் பிரச்சினை சார்ந்த நாவல்களை எழுதிய **இராஜேஸ்வரி** லண்டனில் இருந்து அஞ்சலி செய்கின்றார். ஆணாதிக்கம் எப்படி தாய் வளர்ப்பால் ஏற்படும்? ஆணாதிக்கம், பெண்கள் மீது ஆணாதிக்க உற்பத்தி முறையால், முதலாளித்துவ ஜனநாயகத்தால் பாதுகாக்கப்படுகின்றது. பின்னால் ஆணாதிக்கச் சுதந்திரம் கொண்ட ஜனநாயகமான ஆண், ஆணாதிக்க ஒழுங்கை அத்துமீறினால் தாய் வளர்ப்பில் குற்றமோ! ஐயகோ! என்னவென்று சொல்வது.





**திருமதி ரூபி ஜெயசீலன்** என்பவர் தனது அஞ்சலியில் "தலைகுனிந்த தமிழரினம் தலைமீண்டும் நிமிர்கையிலே - தலைகுனிய வைக்கிறதே தரம் கெட்ட தமிழன் செயல்"[72] என்கின்றார். எம்மண்ணிலும் புலம் பெயர் நாட்டிலும் சொந்தச் சகோதரர்களை வீதிவீதியாகப் படுகொலை செய்தும், உயிருடன் எரித்த போதும் தமிழன் தலை எங்கிருந்தது? அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்ட போது வீரத்தின் உச்சத்தில் உச்சி குளிர்ந்ததோ! சொந்த இடத்தில் இருந்து தமிழன் முஸ்லிம் மக்களை விரட்டியது வீரமோ! இப்போதுதான் தமிழனுக்குத் தலைக் குனிவு ஏற்பட்டதாகக் காதுக்குப் பூ வைக்கின்றார். எப்போது தமிழன் ஜனநாயகத்தை மறுத்தானோ அப்போதே தமிழனால் தலைகுனிவு ஏற்பட்ட நிலையில், எந்த மாற்றத்தையும் வரலாறு மீட்கவில்லை.

சுவிஸ் **வல்வை - சுஜேன்** என்பவர் தமது அஞ்சலியில் "பிஞ்சுமுகம் அறியா வஞ்சகர்"[72] என்பதன் ஊடாகப் பிஞ்சு அற்ற முகம் என்றால் எப்படிச் சரியாகிவிடுமா? சரியாகிவிடும் என்பது பொதுவான ஆணாதிக்கச் சிந்தனை மரபாகும்.

**'முகத்தான்' யேசு** என்பவர் தனது அஞ்சலியில் "மதத்தின் பெயராலே மர்மக்கொலைகள், மறைமுகக் கொலைகள், தற்கொலைகள், வஞ்சம் தீர்க்கும் வர்க்கக் கொலைகள், பணப்பித்தர்களின் பாதகக் கொலைகள், காம வெறியர்களின் வெறியாட்டக் கொலைகள் எத்தனை?" என்றவர், வசதியாக வசதி கருதி இனக் கொலைகளை மறந்து போனார். சகோதரப் படுகொலைகளை மறந்து போனார். இப்படி மறந்து மறைக்கப்பட்ட தொடர்ச்சியில் "மொட்டாகி, விரிந்து மணம் பரப்பும் மலராகும் முன், முளையிலே கிள்ளி.." என்கிறார். அதாவது மலரானால் கிள்ளி எறியலாமோ? ஆணாதிக்கப் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யாமல் பிள்ளை பெறாமல் போய்விட்டாய்? என்றே புலம்புகின்றார்.

இங்கு வெளியாகிய அஞ்சலி ஒன்றில் "குற்றவாளியை அங்கம் வகுத்து அணுஅணுவாய் கூறாக்கி - அவர் உயிரை எடுத்தாலும் ஆறாது எம் நெஞ்சு- அன்பான பிரெஞ்சு நாட்டுப் பண்புடையீர் - விண்ணப்பம் - அனுப்புங்கள் அந்த அநியாயப்படுவோரை வன்னிக்கு"[72] என இலங்கையில் இருந்து எழுதும் விண்ணப்ப அஞ்சலி. ஏதோ வன்னியில் இதுபோல் இல்லை என்ற மாதிரி. வன்னி என்ன ஆணாதிக்கம் கடந்த பூமியோ? வன்னிக்கு அனுப்பினால் திருத்தி விடுவானா என்ன? அப்படிப்பட்ட புண்ணிய பூமியா வன்னி? ஏன் பல சமர் கண்டு புலம் பெயர்ந்த இந்த முன்னைய வீரப் புதல்வன் எப்படி உருவானான்?





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவு மோசமான கொலை வெறியுடன் என்பதற்கு அல்லவா வன்னி பதில் கூறவேண்டும்.

இல்லாத அஞ்சலியை விடுவதும், வீரம் பேசுவதும், தண்டனை பற்றி விதந்துரைப்பதும் தங்கள் சொந்த ஆணாதிக்கத்தை மூடி மறைக்கத்தான். இதன் மூலம் ஆணாதிக்கச் சமூகத்தைச் சேதமின்றி பாதுகாக்கத்தான். இக்குற்றத்தின் ஊற்று மூலம் இச்சமூகமே என்பதை இனம் காட்டாத அனைத்துக் கூப்பாடுகளும் உண்மையில், இது போன்றவற்றை மீளவும் தொடர பச்சைக் கொடி காட்டுபவைதான். இந்த வேரையறுப்பது வரலாற்றுக் கடமையாகும்.



# 5. மாணவ - மாணவிகளின் ஆணாதிக்கச் சீரழிவுப் போக்கு

பிரேசிலில் பெற்றோர்களுடைய உழைப்பின் கூலி மீது பிள்ளைகள் அதிக அளவு ஆதிக்கத்தைச் செலுத்தி, ஏகாதிபத்தியச் சீரழிவின் சுதந்திர நுகர்வோராக உள்ளனர். 5,000 கோடி அமெரிக்க டொலரை, பெற்றோரிடம் இருந்து பெற்று, தமது நோக்கத்தை ஈடேற்றுவதாக **'வேஸா'** பத்திரிகை தெரிவித்துள்ளது. 40 சதவீதமான குழந்தைகள் தமது பெற்றோரை உயர்வாக மதிப்பதை விட, உதைபந்தாட்ட (கால்பந்து) வீரர்களை உயர்வாக மதிக்கின்றனர். இவர்கள் வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் எதைப் பார்ப்பது? எங்கு சுற்றுப் பயணங்கள் செல்வது? வீட்டுக்கு வராது வேறு வீடுகளில் தங்குவது என்று பெற்றோரின் அனுமதியின்றி வெம்பிச் சிதைகின்றனர். சமூகச் சுதந்திரத்தை மறுத்த தனிமனிதச் சுதந்திரச் சீரழிவின் பக்கத்தில் இதுவும் ஒன்று.

பிரேசிலில் 14 முதல் 19 வயதுக்குள்ளாகவே 33 சதவீதமான சிறுமிகளும், 64 சதவீதமான ஆண்களும் உடலுறவில் ஈடுபட்டு விடுகின்றனர். பெண்களின் உடலுறவு கடந்த பத்து வருடங்களில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இளம் வயது சிறுமிகளில் 18 சதவீதமானோருக்குக் குழந்தைகள் இருப்பதும் அம்பலமாகியுள்ளது.

"இதோ இளைய பாரதம்" என்ற தலைப்பில் இந்தியா டுடே 45 இலட்சம் பேர் கொண்ட மாணவ-மாணவிகளை அடிப்படையாகக் கொண்டு 1,365 பேரை இந்தியா டுடே-மார்க் ஆய்வு செய்தது. இவர்கள் வியாபாரக் கார்ட்டைக் (பண அட்டையைக்) கொடுக்க கூடியவர்கள் என குறிப்பிட்டு பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை, நாசிக், அலகாபாத் ஆகிய நகரங்களை மையமாக வைத்து ஆய்வு நடத்தியது. அதன் விவரங்களை அட்டவணை : 5-இல் காணலாம். (21.1.1999)[13]

**அட்டவணை: 5**

| குறிக்கோள் | சதவீதத்தில் |
|---|---|
| நல்ல வேலை | 60% |
| சமூக சேவை | 18% |
| மணவாழ்க்கை | 13% |
| புகழ் | 8% |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் மேட்டுக்குடி மாணவ - மாணவிகளின் போக்குகளை ஆராய்வோம். குறிக்கோளைப் பொறுத்த வரை மேட்டுக்குடிகளின் கனவுகளையே இவை காட்டுகின்றது. சமுதாயத்தில் இருந்து அன்னியப்பட்ட, சமுதாயத்தைச் சூறையாட நினைக்கும் சுயநலம் மேலோங்கி மண்டிக் கிடப்பதைத் தொடர்ந்து ஆராய்வோம்.

பட்டம் பயனற்றது என்று 60 சதவீதமானவர்களும் போட்டியிடத் தயார் என்று 75 சதவீதமானவர்களும் கருத்து தெரிவித்து உள்ளனர். இதனடிப்படையில் தாம் கற்கும் கல்வி அர்த்தமற்றதென்பதையும் (60%), போட்டி போட்டு வெல்ல முடியும் (75%) என்ற மேட்டுக்குடியின் சமூக நிலைமையை துல்லியமாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. மேட்டுக்குடிகளின் கல்வி மீதான அதிருப்தி சமுதாயத்தின் கல்வி பற்றிய கொள்கையையே சிதைக்கின்றது. இதற்குட்பட்ட கல்வி மேலும் சீரழிவை நோக்கி நகர்வதுக்கு இவை வழிகாட்டுகின்றது.

ஒருபுறம் கோடிக்கணக்கில் குழந்தைகள் கல்வி பெறமுடியாத நிலையில், இன்னொரு புறம் கிடைக்கும் கல்வியே அர்த்தமற்றது என்ற நிலையில், இந்தக் கல்வியின் பின்னால் மனித அவலங்கள் விரிவாகின்றது. மக்களின் நலன் சார்ந்த கல்வி மறுக்கப்பட மக்களைச் சமூகத் தளத்தில் இருந்து அன்னியப்படுத்தும் அளவுக்கு இது சீரழிய, பெண்கள் மேலும் மேலும் ஆணாதிக்க வக்கிரத்தில் சிக்குகின்றனர். அண்மைக் காலமாக இந்து பாசிசம் கல்வியில் நடத்தும் மாற்றங்கள் மென்மேலும் கல்வியூடாகப் பெண்களை ஆணின் அடிமையாக்குகின்றது.

திருமணமான பின் பெண் வேலைக்குச் செல்லக் கூடாது என்ற கருத்தை ஆண்கள் 34 சதவீதம் பேர் ஆதரித்துள்ளனர். அதே கருத்தைப் பெண்கள் 17 சதவீதம் பேர் ஆதரித்துள்ளனர்.

திருமணத்துக்குப் பின் பெண் வேலைக்குச் செல்லக் கூடாது என்ற இந்த மேட்டுக்குடியின் கண்ணோட்டம் நிலப்பிரபுத்துவத்தின் எச்சமாகும். தரகு முதலாளித்துவத்தின் கோட்பாட்டை உள்வாங்கிய படி இந்த மேட்டுக் குடி இயங்கிய போதும், சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவத்துடன் கொண்ட ஏகாதிபத்தியக் காதல், பெண்ணை வீட்டு வேலைக்காரியாக இருக்கக் கோருகின்றது. பெண்ணின் கடமையைச் செய்வது பெண்ணுக்கு அழகு என்ற பண்பாட்டை ஆணாதிக்கம் கோரி பாதுகாக்கின்றது.

திருமணத்தின் போது வரதட்சணையைப் பெறுவேன் என்று 31 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

திருமணத்தில் சீதனம் வாங்குவேன் என்று கூறும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமானது. வாங்க மறுப்பேன் என்றோர் திருமணத்தின் போது வாங்கும் நிலைக்குள் செல்வது எங்கும் பொதுவாக உள்ளது. மாணவர்களின் இன்றைய உணர்வு திருமணத்தின் போது தீர்மானகரமானது அல்ல. ஏனெனின் ஆணாதிக்கக் குடும்பச் சொத்துரிமை ஆதிக்கம் பெற்றோர் இளைய



சந்ததிக்கிடையில் உயிரோட்டமாக உள்ளது. இது நான் வாங்குவேன் என பிரகடனம் செய்யவும், வாங்க மாட்டேன் என்று கூறி வாங்கவும் ஆணாதிக்கச் சொத்துரிமை வழிகாட்டுகின்றது.

| | |
|---|---|
| சிபாரிசு மூலம் பணம் சம்பாதிக்க முடியும் | - 89 சதவீதம் |
| முன்னேற ஆடுற மாட்டை ஆடியே கறக்க முடியும் | - 63 சதவீதம் |
| முன்னேற உதவக் கூடியவர்களைத் தெரிவது அவசியம் | - 33 சதவீதம் |

சமுதாயத்தில் உயிர்வாழும் ஆதாரம் சமுதாய நலனில் இருந்து தொடங்குவதில்லை. மாறாக எப்படியாவது பணத்தைப் பெற எதையும் செய்ய தயாரான கண்ணோட்டமாக இது உள்ளது. இதுவே இந்த மேட்டுக் குடியின் பொது கண்ணோட்டமாக உள்ளது. சமுதாயம் எந்தளவுக்கு மக்கள் விரோதமாக உள்ளதோ அந்தளவுக்கு அதற்குள் சென்று வாழ தயாராக உள்ளதை மாணவ - மாணவிகளின் போக்கு காட்டுகின்றது. எதிர் நீச்சல் போட்டு, சமுதாயத்தை எதிர்த்துப் போராடுவதை விட அந்தச் சகதிக்குள் புரண்டு எழும் கண்ணோட்டம் அனைத்து மக்கள் விரோத போக்கையும் கோருகின்றது.

பட்டப்படிப்பில் உள்ளோரில் மூன்றில் இரண்டு பேர் பெற்றோர் தெரிவு செய்பவரைத் திருமணம் செய்யத் தயார் என்கின்றனர். 33 சதவீதம் பேர் திருமணத்துக்கு முன் பாலுறவிலும் (Sex), தன்னிச்சை உறவிலும் (Homosex) ஈடுபட்டதுடன், இதே எண்ணிக்கை உடையோர் வரதட்சணை வாங்கத் தயாராக உள்ளனர்.

இந்தியப் பாரம்பரியப் பாலியல் கண்ணோட்டத்திற்கு எதிராகத் தம்மைப் பாலியலில் ஈடுபடுத்துகின்றனர். ஒருதாரமணத்தில் திருமணத்துக்கு முன் பாலியல் உறவைத் தவறாகக் கருதும் இந்தியாவில், மேட்டுக்குடி இதை மறுதளிக்கின்றது. மாறாக ஏகாதிபத்திய நுகர்வுக் கலாச்சாரத்தில் பெண்ணைப் பாலியல் பண்டமாகக் காண்பதும், நுகர்வதும் ஜனநாயகமாகின்றது. இந்த வகையில் ஏகாதிபத்தியச் சீரழிவில் பாலியல் வக்கிரத் தன்மை பெற்று இந்த மாணவ - மாணவிகள் மத்தியில் உயிரோட்டமான பண்பாடாகின்றது. சமுதாயத்தில் கடுமையான ஆணாதிக்க ஒழுக்கமுள்ள பாலியல் கட்டமைப்பும், ஏகாதிபத்தியச் சீரழிவுத் தன்மை கொண்ட விபச்சாரமும் ஒன்றுக்குள் ஒன்றாக, அக்கம்பக்கமாக நீடிக்கின்றது. இது திருமணத்துக்கு முன் பாலுறவு (Sex) தவறில்லை எனக் கருதுகின்றது. அந்த வகையில் ஆண்கள் 48 சதவீதமானவர்களும், பெண்கள் 18 சதவீதமானவர்களும் பாலுறவு தவறில்லை என்று கூறியுள்ளனர்.

இவை சமுதாயத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியில் இருந்து தோன்றவில்லை. மாறாக வக்கரித்து போன மேட்டுக்குடியின் விபச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளது. இதில் இருந்தே நெருக்கமாக ஒருவருடன் பாலியல் ரீதியாக உறவைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றேன் என்ற கருத்துக்கு ஆண்கள் - 33 சதவீதமானவர்களும், பெண்கள் 17 சதவீதமானவர்களும் ஆதரவு தெரிவித்து உள்ளனர். அப்படி உள்ள போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் ஒருவருடன் ஓரிரு முறை உறவு உள்ளதை ஆண்கள் 37 சதவீதமானவர்களும், பெண்கள் 34 சதவீதமானவர்களும் ஒருவருடன் இருக்கும் தொடர்பைத் தாண்டி நுகர்வுப் பண்பாட்டில் விபச்சாரத் தளத்துக்குள் பாலியலில் ஈடுபடும் இந்த மேட்டுக்குடி, சமுதாயத்துக்குத் தலைமை தாங்குவது தான் மொத்தச் சமுதாயத்தினதும் அவலமாகும். இந்த விபச்சார அவலம் சமுதாயத்தின் அனைத்துத் துறையிலும் விபச்சாரத்தைப் புகுத்துகின்றது. இது அடிமட்ட வாழ்க்கையை நாசமாக்குகின்றது.

பெண்கள் இந்த விபச்சாரத்தனமான ஆளும் மேல்மட்டத்தின் பண்பாட்டுக்குள் சிக்கி சிதைகின்ற போது ஆணின் பார்வை பெண்ணை நுகர்வுப் பண்டமாக மாற்றுகின்றது. பெண்ணை அழகியலாகப் பார்த்து இரசித்து பாலியல் பண்டமாகக் கண்ட நிலப்பிரபுத்துவப் பண்பாட்டில் இருந்து ஏகாதிபத்தியப் பண்பாடு மேலும் பெண்ணை நுகர்வுக்குரிய பொது விபச்சாரத் தளத்துக்குத் தாழ்த்துகின்றது.

இந்தப் பண்பாடு நுகர்வை மூலதனமாக்குகின்றது. இது கவர்ச்சியைக் காட்டி முன்னேறலாம் என்கின்றது. இந்தக் கருத்தினை ஆண்கள் 37 சதவீதமானவர்களும், பெண்கள் 15 சதவீதமானவர்களும் ஆதரித்துள்ளனர். இந்த வகையில் கவர்ச்சியானது நுகர்வின் அடிப்படையாகின்றது. இந்தக் கவர்ச்சியை மூலதனமாக்கி எதைச் செய்யலாம் என்ற மேட்டுக்குடியின் கனவு எதையும் செய்ய தயாராகின்றது. நிர்வாணமாக போஸ் கொடுக்க தயாராக உள்ளது. இதை ஆண்கள் 11 சதவீதமானவர்களும், பெண்கள் 13 சதவீதமானவர்களும் சரியென்று கருத்து கூறியுள்ளனர். பாலியல் அங்கத்தை முன்னிறுத்தி காட்டி, கவர்ச்சி வடிவத்துக்கு ஆணைவிட பெண் அதிகமாகத் தயாராக உள்ள நிலைமையானது ஏகாதிபத்திய நுகர்வு, விபச்சார, விளம்பர உத்தியில் இருந்து உயிர்த்தெழுகின்றது. பாலியல் அங்கத்தை மூலதனமாக அடமானம் வைக்க தயாரான மேட்டுக்குடி கண்ணோட்டம், ஒட்டு மொத்தச் சமுதாயத்துக்கும் இன்று தீர்வாக மாற்றுகின்றது.

இன்றைய திரைப்படங்களில் வரும் ஆபாசம், பெண்ணின் கவர்ச்சிக் காட்சிகள் மிகவிரைவில் பகிரங்கமான பாலியல் உறவு காட்சிகளை அரங்கேற்றும். கவர்ச்சி காட்டவும், நிர்வாணமாக போஸ் கொடுக்கவும் பாலியலை மூலதனமாக்க மேட்டுக்குடி தயாராக உள்ள சமுதாய பார்வையுடன் கூடிய பண்பாட்டைத் தொடர்பு சாதனங்களில் மிகவிரைவில் அரங்கேற்றுவர். இது மேட்டுக்குடியின் பண்பாடாக இருப்பதாலும், அதுவே அதிகார வர்க்கமாக இருப்பதாலும், இந்தப் பண்பாடு இந்தச் சமுதாயத்தின் பொழுதுபோக்காக ஊடறுத்துச் செல்ல ஏகாதிபத்தியப் பண்பாடு உந்தித் தள்ளுகின்றது. இது சமுதாயத்தைப் பொது விபச்சாரத் தளத்துக்குள் அனைத்துத் துறைகளையும் மாற்றுகின்றது.

இது (விபச்சாரம்) தேவையானால் இலஞ்சம் கொடுப்பீர்களா? என்ற கேள்விக்கு ஆம் என்போர்களில் ஆண்கள் 43 சதவீதமானவர்களாகவும், பெண்கள் 34 சதவீதமானவர்களாகவும் தனது விபச்சாரத்தை இலஞ்சத்துக்குள்





செய்கின்றது. யதார்த்த வாழ்க்கைக்குள் மேலும் ஊடுருவும் போது இந்த இலஞ்சம் கொடுக்கும் விபச்சாரக் கண்ணோட்டம் மேலும் அதிகமாகும். இது நாட்டை விற்று வாழத் தன்னைத் தயார்ப்படுத்துகின்றது. நாட்டை விற்று வெளிநாட்டில் படிக்க 51 சதவீதம் பேர் விரும்புகின்றனர்.

இந்த மேட்டுக் குடிகளின் கண்ணோட்டம் ஏகாதிபத்தியத்தின் வரவுக்காகத் தன்னையும், தனது பண்பாட்டையும் நிர்வாணமாக்குகின்றது. இதைப் பொதுப் பண்பாடாக்க அதிகாரத்தைக் கையில் எடுக்கின்றது. 3,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் குடும்பத்தை சேர்ந்தோரில் 23 சதவீதம் பேர் மட்டுமே அரசுத் துறையில் வேலையை நாடுகின்றனர். 21 சதவீதம் பேர் சொந்தத் தொழில் நடத்த விரும்புகின்றனர். தரவுகளை வழங்கியோரில் ஐந்தில் ஒருவர் தொழிலில் இருந்தனர். வேலைக்குத் தகுதி தேவையில்லை என்போர் 89 சதவீதமாகும். இந்தளவுக்குச் சமுதாயம் தகுதியை விட அதிகாரம் மூலமும், பணத்தைக் கொண்டும் அதிகாரத்தை கைப்பற்றுகின்றது.

அரசைவிட தனியார் துறையில் ஏகாதிபத்தியத் தரகாக உழைப்பதுக்கான கண்ணோட்டத்தைத் தமது மனநிலையிலேயே வெளிப்படுத்துகின்றனர். இது கல்வியைத் தனது நலனுக்கு இசைவாகச் சீரழிக்கின்றது. சமுதாயத்தைச் சூறையாடும் ஒரு நல்ல வேலை கிடைத்தால் 49 சதவீதம் பேர் பட்டத்தைத் தூக்கி எறியத் தயார் என்று பிரகடனம் செய்வதன் மூலம், கல்வியைச் சமுதாயத்துக்கு நிராகரிக்கின்றனர். இது ஏகாதிபத்தியம் கோரும் கல்வியைத் தனியார்மயமாக்கும் கண்ணோட்டத்துக்கு இசைவானது. இதில் இருந்தே பட்டம் பற்றி பிரச்சனையில்லை என்கின்றனர் 55 சதவீதம் பேர். இதில் பட்டத்துக்குத் துணையாகப் படிப்பதில் ஆண்கள் 42 சதவீதமானவர்களும் பெண்கள் 38 சதவீதமானவர்களும் கல்வியை இந்தளவுக்குச் சீரழிவாக்கிய மேட்டுக்குடி கண்ணோட்டம் பட்டப்படிப்பைச் சமுதாயத்தில் இருந்து அன்னியப்படுத்தி மேட்டுக்குடியின் பொழுது போக்காக மாற்றுகின்றது.

இது கல்லூரியில் பெற விரும்புவது எது? என்ற கேள்விக்குக் கிறுக்குத்தனமான பதிலைத் தருகின்றது. அந்தப் பதிலில் அதிக மதிப்பெண்ணுக்காக 57 சதவீதமும் தொடர்புக்காக 31 சதவீதமும் பொழுதுபோக்கு 11 சதவீதமும் என்ற விகிதத்தில் இருந்தது. கல்வியைத் தனக்கே மறுத்தபடி பொழுது போக்கை விரிவாக்குகின்றது. கல்வியை அர்த்தமற்றதாக்குகின்றது. பாலியலை நுகர்வாக்கி நுகருகின்றது. அனுபவிப்பைப் பொது விபச்சாரமாக்குகின்றது. இதை அனைத்துத் துறைக்கும் பண்பாடாக மாற்றுகின்றது. இதில் இருந்தபடி இந்த மேட்டுக்குடி அரசு அதிகாரியாக ஆசை என்பதற்கு 42 சதவீதமானவர்களும், உயர் அதிகாரியாக ஆசை என்பதற்கு 21 சதவீதமானவர்களும், தொழில் தொடங்க ஆசை என்பதற்கு 9 சதவீதமானவர்களும் பிரகடனம் செய்கின்றனர்.

இந்த உயர் வர்க்கத்தின் அதிகாரம், பணத்திமிர் சமுதாய நலனுக்கு எதிரானது. இந்த வர்க்கம் சமுதாயத்தை ஒட்டச் சுரண்டி சூறையாடவும்,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டிக் கொடுக்கவும், கூட்டிக் கொடுக்கவும் தயாரான பண்பாட்டை வெளிப்படுத்துகின்றனர். இதைச் செயல்படுத்த அரசியலில் சேர விரும்புவோர் 48 சதவீதம் பேராக உள்ளனர். இந்த வர்க்கம் தான் ரவுடி அரசியலுக்கும் வன்முறை-வக்கிரத்திற்கும் காவலர்கள் ஆவர். இவர்கள் தான் இந்த ஜனநாயக அமைப்பின் தூண்கள். இவர்கள் சமுதாயத்தைத் தனக்கு இசைவாகத் தலைகீழாக நிறுத்தக் கோருகின்றனர். இந்த வர்க்கம் ஏகாதிபத்தியத்தின் தாராளமயமாக்கலை நல்லது என்போரில் ஆண்கள் 40 சதவீதமும் பெண்கள் 23 சதவீதமும் ஆவர். எந்த விதத்திலும் தேச நலன் கோராத இந்தப் பிரிவு நல்ல ஏகாதிபத்தியக் கைக்கூலிகளாக இருக்க வெட்கப்படவில்லை.

உங்களுக்குப் பிடித்தமானவர் யார்? என்ற கேள்விக்கு அளித்துள்ள பதில்களை அட்டவணை:6-இல் காணலாம்.

**அட்டவணை: 6**

| பிடித்தமானவர் | | சதவீதம் |
|---|---|---|
| இராஜிவ் | - | 25.1 சதவீதம் |
| அசாருதீன் | - | 14.2 சதவீதம் |
| இரத்தின்டாடா | - | 9.1 சதவீதம் |
| பாபாஆம்தே | - | 8.2 சதவீதம் |
| மன்மோகன்சிங் | - | 7 சதவீதம் |
| ஹர்ஷத்மேத்தா | - | 4.7 சதவீதம் |
| நரசிம்மராவ் | - | 4.4 சதவீதம் |
| அருண்சௌத்ரி | - | 3.4 சதவீதம் |
| ஜெனரல் சுந்தர்ஜி | - | 1.2 சதவீதம் |

இந்த வர்க்கத்தின் தலைவர்கள் உழைக்கும் மக்களின் விரோதிகளே. சமுதாயத்தின் ஒட்டு மொத்த அதிகார வர்க்கத்துக்குத் தலைமை தாங்கும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளை இரசிக்கும் பண்பாடுதான், மேட்டுக்குடியின் உயர்ந்த பண்பாட்டுக் கலாச்சாரமாகும். இந்த மேட்டுக்குடியின் பண்பாட்டில் உருவான பாலியல் வக்கிரத்தையே கம்யூனிச எதிர்ப்பு கொண்ட பின்நவீனத்துவக் கோட்பாட்டாளர்களின் பாலியல் விளக்கமாக உள்ளது. இந்தக் கும்பல் கோட்பாட்டில் ஏகாதிபத்தியத்துக்காக உழைக்க, அவர்களின் வக்கிரத்தை விளக்கம் கொடுத்து பாதுகாக்க தயாராக உள்ளதைக் காட்டுகின்றது.





# 6. ஆணாதிக்கம் பெண்ணின் கடமையாக்கிய வீட்டுவேலை

பிரான்சில் வீட்டில் உணவு தயாரிப்போர் யார்? என்பதை அட்டவணை:7 மூலமாகப் பார்ப்போம்.[15]

**அட்டவணை: 7**

| நாட்கள் | பெண் | ஆண் | மற்றவர்கள் |
|---|---|---|---|
| வேலை நாட்கள் | 76 | 14 | 10 |
| விடுமுறை நாட்கள் | 65 | 24 | 11 |

பிரான்சில் பெண்கள் வீட்டு வேலையில் எத்தனை மணித்தியாலயம் ஈடுபடுகின்றனர்? என்பதை அட்டவணை:8-இன் வழியாகப் பார்ப்போம்.[16]

**அட்டவணை: 8**

| ஈடுபடும் நேரம் மணித்தியாலம் | எத்தனை சதவீதப் பெண்கள் |
|---|---|
| 1 - 2 | 24.2% |
| 3 - 5 | 32..2% |
| 6 - 9 | 19.2% |
| 10 - 19 | 8.6% |
| 20 - 29 | 4.5% |
| 30 - 39 | 0.4% |

பிரான்சில் வீட்டுச் சமையலில் பாத்திரம் கழுவுவது யார்? என்பதை அட்டவணை:9-இலிருந்து பார்ப்போம். (3.3.1999)[17]





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அட்டவணை: 9**

| யார் | எத்தனை சதவீதம் |
|---|---|
| பெண் | 51% |
| எல்லோரும் | 29% |
| ஆண் | 15% |
| பிள்ளைகள் | 3% |

பிரான்சு வீட்டில் எந்த வேலை அதிகமாக உள்ளது? என்பதை அட்டவணை:10-இன் வழியாகக் காணலாம். (28.2.1999)[17]

**அட்டவணை: 10**

| எந்த வேலை | எத்தனை சதவீதம் |
|---|---|
| அயன்பண்ணுதல் | 40% |
| கூட்டுவது | 14% |
| உணவு தயாரித்தல் | 13% |
| பாத்திரம் கழுவுவது | 12% |
| உடுப்பு தோய்த்தல் | 6% |
| எதுவுமில்லை | 15% |

குடும்பம், கணவன் அல்லது வீட்டு வேலையில் பெண்ணின் திருப்தி உற்றமை 87 சதவீதமாகும். (8.3.1999)[17] இந்தியாவில் பொருளாதாரக் காரணத்தால் மத்தியதரக் குடும்பங்களில் வீட்டு வேலையை ஆண் பகிர்ந்து கொள்ள பெண்ணின் வேலைக்குத் துணையாக உள்ளது. (6.2.1991)[13]

பாரம்பரியமான பெண்ணின் கடமைகள் ஏகாதிபத்தியப் பண்பாட்டால் மாற்றத்தைச் சாதிக்கவில்லை. நவீன உபகரணங்கள் வேலையின் பளுவைக் குறைத்த போதும் பெண்ணின் கடமையைக் குறைக்கவில்லை. சமையல் கலையாக இருந்த போது அது பெண்ணின் உரிமையாக இருந்தது. ஆனால் அக்கலை பெண்ணிடம் இருந்து பறித்தெடுத்த ஏகாதிபத்திய நுகர்வுப் பொருளாதாரம் பெண்ணின் கடமையைத் தொடர வழிகாட்டுகின்றது.

சமையல் கலையைப் பெண்ணிடம் இருந்து அன்னியப்படுத்தி அதை ஆணின் உரிமையாக்கி அதை இலாபம் தரும் சந்தைக்குள் நகர்த்தியுள்ளது. இதன் மூலம் அக்கலை மேட்டுக்குடியின் ருசிக்கும் அதற்கேயுரிய கலையாகச் சீரழிந்து போனது. பெண்ணிடம் எஞ்சிக் கிடந்த சமையல் கலை அடிமட்ட மக்களிடம் இருந்து அன்னியப்பட்டது.





சமையல் கலையைப் பெண்ணிடம் இருந்து பறித்து சமையலை வெறும் இயந்திரத்தனமான நிலைக்குத் தரம் இறக்கியுள்ளது. ஏதோ உண்டால் சரி என்றளவுக்குச் சமையல் கலையை நவீன உபகரணத்தின் செயற்கை எல்லைக்குள் மாற்றிவிட்டது. இது பெண்ணின் வேலைப்பளுவைக் குறைத்த போதும் பெண்ணின் சமையல் என்ற கடமையை மாற்றிவிடவில்லை. வீட்டு வேலைகள் பொதுவாக இயந்திரமயமான போது குறைந்து செல்கின்றது. போடும் உடுப்புகள் தேய்த்தல் (அயன்) மட்டும் அதிக பளுவுள்ளதாக உள்ளது. இதற்கான இயந்திரங்கள் இன்மையே இதன் காரணமாக உள்ளது.

மிகவும் தரக் குறைவாக மதிக்கப்படும் வேலையில் பெண்ணின் பங்கே அதிகமாக உள்ளது. ஆணின் பங்கு குறைவானதாகவும் உள்ளது. இந்த ஆணாதிக்கக் கண்ணோட்டம் பெண் பொருளாதாரப் பலம் பெற்ற நிலையிலும், சுதந்திரமான செயல்பாட்டிலும் தொடர்கின்றது. இது ஆணாதிக்கப் பண்பாட்டு நெருக்கடியில் ஆண் - பெண் தொடர்ந்து சிக்கியுள்ளதைக் காட்டுகின்றது.

நவீன கண்டுபிடிப்புகளைப் பெண்ணின் பொற்காலமாகப் புகழ்வதும், ஆணாதிக்கத்திடமிருந்து விடுதலையாகக் காட்டவும் இந்த உலகம் தயங்கியதில்லை. அன்று "கிரேக்கக் கவிஞரான **'ஆண்டிப் பட்ரோஸ்'**, எல்லா இயந்திரச் சாதனங்களுக்கும் மூல வடிவமாய்த் திகழும் கண்டுபிடிப்பாகிய தானிய அரைவை நீர் விசைச் சக்கரத்தின் கண்டுபிடிப்பை, அடிமைப் பெண்களுக்குச் சுதந்திரம் வழங்கும் கண்டுபிடிப்பென்றும், பொற்காலத்தைத் திரும்பக் கொண்டுவரும் கண்டுபிடிப்பென்றும் புகழ்ந்தார். அவர் அதை கவிதை மூலம் சொன்னதைக் கீழே காணலாம்.

தானியமரைத்து அசதியுற்ற கைக்கு ஓய்வளிப்பீர்!
ஓ, அரைவைப் பெண்களே, சற்று கண்ணயர்வீர்!
விடியலைச் சேவல் கூவியழைப்பது வீணாகட்டும்!

வனிதையர் வேலையை வனதேவதை செய்திடும், இது தேவனின் ஆணை

மெல்லடியெடுத்து தேவதை நடனமாட சக்கரங்கள் சுழன்றோடும்!
அச்சுகள் அசைந்து ஆரைகள் சுற்றும்
சுழலும் கற்களின் பாரம் இழுபடும்!
மூதாதையர் வாழ்வை மீண்டும் வாழ்வோம்!
களைப்பாறி இளைப்பாறி,"[4]

- என்று நவீனக் கண்டுபிடிப்பு பெண்ணை மட்டுமல்ல ஆணையும் விடுவிக்கும் என்ற நம்பிக்கையைக் கவிஞன் வெளிப்படுத்துகின்றான். கடந்து சென்ற பொற்காலம், ஓய்வான வாழ்க்கையை இது மீட்டு எடுக்கும் என்று கவிஞன் பாடுகின்றான். ஆனால் இதற்குப் பின்னால் மூலதனம் ஒன்று இருப்பதைக் கவிஞன் புரிந்து கொள்ளாத நிலைவரை இது அவனின் கனவாகவே இருக்கும். ஆனால் மூலதனம் ஒவ்வொரு கண்டுபிடிப்பையும் தனது மூலதனப் பெருக்கத்துக்கான உறுப்பாக மாற்றியமைத்தது. முன்பை விட இயந்திர





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க்கையைப் புகுத்தினான். இதனால் மேலும் சுமை அதிகரித்தது. மேலும் புதிய நுகர்வுப் பண்பாடு புகுந்து கொண்டது. பெண் புதிய சுமையை நவீனத் தொழில் நுட்பம் ஊடாக ஏற்றுக் கொண்டாள். அத்துடன் அழகியல் பற்றிய நவீன வடிவம் பெண்ணை மேலும் இறுக்கமான சுமைக்குள் நகர்த்தியது. அழகுபடுத்துவது ஆணாதிக்கத்தைத் திருப்தி செய்யும் ஊடகமாக மாறியது. இது பின்னால் பெண்ணின் புதிய பண்பாடாகியது. பெண் எல்லையற்ற சுதந்திரமான கனவுகளில் நுகர்வுக் கவர்ச்சியில் சிக்கிக் கொண்டாள்.

இதனால் பெண்ணின் திருப்தி ஆண் மீது இருப்பதில்லை. இது பல்வேறு துறை சார்ந்து காணப்படுகின்றது. இந்தியாவில் மத்தியதர ஆண்கள் வேலைக்குச் செல்லும் பெண்ணுக்கு உதவுவது காணப்பட்ட போதும் இது பொருளாதார நலன் சார்ந்து இயங்குவதைக் காட்டுகின்றது. பொருளாதார ரீதியாகப் பெண்ணை விடுவிப்பது மட்டுமல்ல பண்பாட்டுக் கலாச்சாரப் புரட்சியின் அவசியத்தை, ஆணாதிக்கத்துக்கு எதிராக நடத்துவதன் அவசியத்தை இவை காட்டுகின்றது.

இதை மறுப்பவர்கள் ஆணிடம் இருந்து பெண்ணைத் தனிமைப்படுத்தும் ஆண் எதிர்ப்புக் கண்ணோட்டத்தை இந்தச் சமுதாயத்தில் முன்வைக்கின்றனர். இது தீவிரப் பெண்ணியம் என்று அடையாளம் காட்டப்படும் அராஜக வதை மற்றும் பூர்சுவா பெண்ணியத்தின் கையாலாகத்தனத்தின் வெளிப்பாடாகும். வீட்டு வேலையைச் சமூக வேலையாக்கும் போக்கில் புரட்சியும், புரட்சிக்குப் பிந்திய கலாச்சாரப் புரட்சியும் ஆணாதிக்கத்துக்கு எதிராக நடத்தப்பட வேண்டும். இது சுரண்டல் அமைப்பில் இருந்து இலாப நோக்கமற்ற சமுதாயத் தேவையை உள்ளடக்கிய வகையில் புரட்சி அரசியல் மயப்படுத்தப்படவேண்டும். குறுகிய தனிமனித நலனுக்கு எதிராகச் சமுதாய நலனை அரசியல் ஆணையில் வைக்கவேண்டும்.

மார்க்ஸ் இது பற்றி "குடிவாழ் கூட்டில் மட்டுமே ஒவ்வொரு தனிநபரும் தனது அறத்திறன்களை எல்லாத் திசைகளிலும் வளர்த்துக் கொள்வதற்கான சாதனங்களைப் பெறுகின்றான். எனவே குடிவாழ் கூட்டில் மட்டுமே தனிநபர் சுதந்திரம் சாத்தியம்"[18] இந்தச் சுதந்திரம் பற்றிய கண்ணோட்டமே மற்றைய பெண்ணியத்தில் இருந்து பாட்டாளி வர்க்கப் பெண்ணியத்தைத் துல்லியமாக வேறுபடுத்துகின்றது. **சுதந்திரம் என்பது தனிமனிதனுக்காகவா? சமூகத்துக்காகவா?** என்பதே அடிப்படையான கேள்வியாகும். இது மற்றைய பெண்ணியத்தில் இருந்து வேறுபட்டு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சியை ஆணாதிக்கத்துக்கு எதிராக துல்லியமாக வேறுபடுத்தி பெண்ணை விடுவிக்கும்.





# 7. சுரண்டும் ஆணாதிக்க உற்பத்தியில் பெண்களின் நிலை

அமெரிக்காவை எடுப்பின் 7 அமெரிக்கப் பெண்களுக்கு ஒருவர் ஏழையாகவும், 6 பெண்களுக்கு ஒருவர் மருத்துவ வசதி இன்றியும் உள்ளனர். இதில் கறுப்பு நிறப் பெண்கள் 25 சதவீதம் பேர் வறுமைக்குள் உள்ளனர். நிறவெறியும் சேர்ந்து கறுப்பு நிறப் பெண்களை ஒடுக்குகின்றது. இங்கு கறுப்பு நிறப் பெண் வறுமை, ஆணாதிக்கம், நிறம் போன்ற மூன்று சுமையை ஒரே நேரத்தில் சந்திக்கின்றாள்.

கி.பி. 1990-இல், அமெரிக்காவில் 1.8 முதல் 2 கோடி பேர் வரை வருடம் முழுக்கப் பட்டினியாக உள்ளனர். இதில் 18 வயதிற்குக் குறைந்த குழந்தைகள் 70 முதல் 80 இலட்சமாகவும், 65 வயதிற்கு மேற்பட்டோர் 20 இலட்சம் பேராகவும் உள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்களாவர். அமெரிக்க அரசின் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொகை 3.2 கோடிப் பேராவர். இதில் பெரும்பகுதி பெண்களாவர். இந்த வறுமைக் கோட்டின் நிலவரம் கி.பி. 1980-88-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 43 சதவீதமாக அதிகரித்தது. கி.பி. 1985-இல், சராசரி வருடத்திற்கு ஐந்து ஆயிரம் டாலர் வருமானமுடைய தாய்மார்கள் 68 சதவீதம் பேர் வீட்டுக்கு வெளியிலும் வேலை செய்தனர். இதன் மூலம் தமது வறுமையைத் தவிர்க்க முனைந்தனர்.

கி.பி. 1989-இல் அமெரிக்காவில் ஆண் உழைப்பாளியின் வருமானத்தில், ஒரே வேலையைச் செய்யும் வெள்ளையினப் பெண் 62 சதவீதத்தையும், கறுப்பு இனப் பெண் 56 சதவீதத்தையும் மட்டுமே பெற்று தனது இரண்டாவது நிலையை ஆணாதிக்க ஜனநாயகச் சமுதாயத்தில் பெறுகிறாள்.

அமெரிக்காவில், பெண்களை அதிகளவில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமை என்பது குடும்ப வருமான இழப்பில் உருவானது. கி.பி. 1986-89-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 9 சதவீதம் கூலி பணவீக்கத்துடன் குறைந்தது மட்டுமின்றி ஓய்வூதியம் 13.8 சதவீதமாகக் குறைந்தது. இதனால் கி.பி. 1980-இல், 54 சதவீதம் பெண்கள் உழைப்பில் ஈடுபடல் என்பது கி.பி. 1990-இல் 65 சதவீதமாக மாறியதன் மூலம் தனது குடும்ப உழைப்பு வருமானத்தைப் பங்கிட்டுச் சரிகட்ட முயல்கின்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதேநேரம் அமெரிக்காவில் நிரந்தர வேலை செய்யும் ஒரு கோடி பெண்கள் தமது அடிப்படைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத வறுமைக்குள்ளான சம்பளத்தைப் பெறுகின்றனர். கி.பி. 1980-88-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் 3 இலட்சம் சிறுபண்ணைகளை விழுங்கிய பெரிய பண்ணைகள் கிராமப்புற வறுமையை 44.8 சதவீதமாக அதிகரிக்க வைத்ததன் மூலம், கிராமப்புறப் பெண்களின் அரைவாசிப் பேரை வறுமைக்குள் தள்ளினர். ஒரு பண்ணை மூடியபோது 3 முதல் 5 பேர் வேலை இழந்தனர்.[19]

25 முதல் 59 வயது வரையிலான பெண்களில் வீட்டில் இருக்கும் பெண்களை அட்டவணை:11 மூலமாகச் சதவீதத்தில் அறியலாம்.[20]

**அட்டவணை: 11**

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| அயர்லாந்து | 60% |
| ஸ்பெயின் | 49% |
| லுக்சம்பெர்க் | 45% |
| கிரீஸ் | 42% |
| இத்தாலி | 40% |
| நெதர்லாந்து | 36% |
| ஜெர்மனி | 31% |
| இங்கிலாந்து | 27% |
| பிரான்ஸ் | 25% |
| பெல்ஜியம் | 23% |
| போர்ச்சுக்கல் | 22% |
| டென்மார்க் | 4% |

பிரான்சில் ஓய்வு ஊதியத்தை எடுத்தால் ஆண் 7,950 பிராங்கைப் பெற பெண் 4,350 பிராங்கைப் பெறுகின்றாள். இந்த வேறுபாடு ஏற்பட, பிள்ளைப்பேறை ஒட்டிய விடுமுறை காரணமாக உள்ளது[21]


பிரான்சில் பெண்கள் வேலை செய்வதைப் பார்ப்போம்.[4]

"அவசியத்தால் வந்த அவதாரம்" என்ற தலைப்பில் ஆண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுவதையும், இதனால் மாறி வரும் போக்கையும் வெளிப்படுத்தியுள்ளது. தமிழகத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எண்ணிக்கை 22.56 சதவீதமாகும். (21.10.1994)[13]





**வரைபடம்: 1**




பிரான்சில் வேலை செய்யும் பெண்களில் 85 சதவீதமானவை பகுதி நேரத்தை கொண்டவை. இது ஐரோப்பாவில் 76 முதல் 90 சதவீதமாகும். பிரான்சில் கி.பி. 1980-இல், பகுதி நேர வேலை செய்தோர் 15 இலட்சம் மட்டுமே. இது கி.பி. 1997-இல், 35 லட்சமாகும். கி.பி. 1992-இல், 30 சதவீதம் பகுதிநேர வேலையாக இருந்தது. இது கி.பி. 1998-இல், 38.2 சதவீதமாக மாறியுள்ளது. டென்மார்க்கில் வேலை செய்யும் பெண்கள் 80 சதவீதமாக இருக்க, இதில் 40 சதவீதம் பகுதி வேலை நேரமாகும். நெதர்லாந்தில் பகுதி வேலை நேரம் 62 சதவீதமாக உள்ளது.[22]

பிரான்சில் தொழில் புரிவோரில் கி.பி. 1990-இல், பகுதி நேர வேலையில் இருந்தோர் 30 சதவீதமாகும். இது கி.பி. 1998-இல், 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. (18.31999)[17] மொத்த வேலை செய்வோரில் 30 சதவீதம் பெண்கள் பகுதி நேர வேலையில் உள்ளனர். இந்தப் பகுதி நேர வேலையில் 25 வயதுக்குக் குறைந்த பெண்கள் 38 சதவீதமாக உள்ளது. தொழிலில் ஈடுபடுவோரில் ஆண்கள் பகுதி நேரத்தில் 5 சதவீதம் பேராக உள்ளனர். வேலையற்றோரில் 25 வயதுக்குக் குறைவானோரில் பெண்கள் 25.5 சதவீதம் ஆகும். 25-49 வயதுக்கு உட்பட்டோரில் 12.8 சதவீதமாக உள்ளனர். 50 வயதுக்குக் கூட 10.1 சதவீதமாகும். (2.1999)[23]

பிரான்சில் வேலையற்றோர் பெண்கள் 13.8 சதவீதமாக இருக்க ஆண்கள் 10.2 சதவீதமாக உள்ளது. இதில் 25 வயதுக்குக் குறைந்த பெண்கள் 30 சதவீதமாக இருக்க ஆண் 21.9 சதவீதமாக உள்ளது. பிரான்சில் பகுதி நேர வேலையில் ஈடுபடுவோர் 18 சதவீதமாக இருக்க, இதில் பெண்கள் தொகை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

40 சதவீதமாக உள்ளது. இவர்களின் வருமானம் 4,000 பிராங்கை விட குறைவாகும். பிரான்சில் ஆணைவிட சராசரியாக 20 சதவீதம் குறைந்த சம்பளத்தையே பெண் பெறுகின்றாள். 80 சதவீதமான வீட்டு வேலைகளைப் பெண்ணே செய்கின்றாள்.

தொழிற்சங்கத்தின் தலைமைகளில் CFDT-யில் 46 சதவீதமும், CGT-யில் 25-30 சதவீதமும் அதே நேரம் தலைமையில் 50 சதவீதமும், CFTC-யில் 40 சதவீதமும், CGC-யில் 18 சதவீதமும், தலைமைக் குழுவில் இரண்டு தலைமை உறுப்பினரையும் கொண்டு உள்ளனர்.(8.3.1999)[24]

உலகில் பெண்கள் 40 சதவீதம் வேலை செய்வோரில் இருந்த போதும் உயர் பதவிகளில் ஐந்து சதவீதம் மட்டுமே உள்ளனர். கி.பி. 1994-1995-ஆம் ஆண்டு உலகில் சில முன்னணி நாடுகளில் உயர் பதவிகளில் உள்ள பெண்ணின் நிலையை அட்டவணை:12-இல் பார்ப்போம்.(2.1999)[23]

**அட்டவணை: 12**

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| அமெரிக்கா | 43% |
| இங்கிலந்து | 33% |
| நார்வே | 32% |
| சுவிஸ் | 28% |
| பின்லாந்து | 25% |
| ஆஸ்திரியா | 22% |
| இஸ்ரேல் | 19% |
| ஜப்பான் | 9% |

நியூசிலாந்தில் பெண்களின் கல்வித் தகுதி, ஆண்களை விட அதிகமாக இருந்த போதும் பெண்கள் குறைவான சம்பளத்தைப் பெறுகின்றனர். பெண்கள் 40 வயதை அடைந்த உடன் 20 சதவீதமான ஆண்கள் பெண்களை விவாகரத்து செய்கின்றனர். (23.3.1999)[25]

மேற்கு பெண்களின் பல்வேறு நிலைமையை இப்புள்ளிவிபரம் காட்டுகின்றது. முதலாளித்துவம் வீட்டுக்கு வெளியில் பெண்ணைச் சுரண்ட அழைத்து வந்த போது, அது பெண்ணின் உரிமையை வழங்கிவிடவில்லை. இந்த உரிமைக்காகப் போராடுவது வர்க்கப் போராட்டத்தின் உள்ளடக்கமாக இருந்தது. இன்று ஏகாதிபத்தியத்தின் உச்சக் கொப்பளிப்பில் தேசம் கடந்து தொழில்கள் செல்கின்ற போது உற்பத்தியும் மேற்கைத் தாண்டி செல்கின்றது. மலிவு கூலி, இலகுவான தொழில் சட்டங்கள் என்று முதலாளித்துவம் வர்க்கப் போராட்டமின்றி எங்கெல்லாம் தொழிலாளரை நிபந்தனையின்றி கசக்கி பிழிய





முடியுமோ அங்கு உற்பத்தியை நகர்த்துகின்றனர். இது மேற்கில் சமூக நெருக்கடியை வேகப்படுத்துகின்றது. இதனால் வேலையிழக்கும் மனிதர்கள் பெண்களாக இருப்பதே பொதுவிதியாக உள்ளது.

மேற்கில் நவீனத் தொழில் நுட்பம் பெண்ணை வீட்டுக்கு அனுப்புகின்றது. இது போல் ஏகாதிபத்தியப் பக்க விளைவுகள் அனைத்தும் பெண்ணை முதலில் சிதைக்கின்றது. முதலாளித்துவப் புரட்சிகள் முதலாளித்துவ உற்பத்தியை மலிவுக்கூலியில் வளர்த்தெடுக்க வீட்டுக்கு வெளியில் பெண்ணை அழைத்து வந்த அதே வேகத்தில் மலிவான உற்பத்திக்காக ஏகாதிபத்தியம் பெண்களை மறுபடியும் வீட்டுக்குள் முடக்குகின்றது. இதை அரசுகள் திட்டமிட்டே செய்கின்றது.

பிரான்சில் குழந்தை பெற்ற பெண்கள் குழந்தையின் மூன்று வயது வரையான பராமரிப்புக்கு, அரசு உதவியுடன் பெண்ணை வீட்டில் கடமை செய்ய கோரியது. "இதனால் கி.பி. 1997-இல், ஐந்து இலட்சம் பெண்கள் குழந்தை பராமரிப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இது கி.பி. 1994-ஐ விட மூன்று மடங்கு அதிகமாகும். இந்தக் குழந்தை பராமரிப்பு விடுமுறையை எடுத்த ஆண்கள் ஒரு சதவீதம் மட்டுமே. குழந்தையின் மூன்று வயதிற்குப் பின் 50 சதவீதமான பெண்கள் வேலையை இழக்கின்றனர்."[26] இப்படி பலவழிகளில் பெண்ணை வீட்டுக்கு அனுப்புகின்றனர்.

சொத்துரிமை விரல் விட்டு எண்ணக் கூடியவர்களின் கையில் குவிந்து செல்ல, சிறு உற்பத்திகள் விழுங்கி ஏப்பமிடப்பட, பெரும் நவீன உற்பத்திகள் உயர் தொழில் நுட்பத்தால் நவீனப்பட, உழைப்போர் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது. இது பெண்களை முதலில் பாரம்பரியக் கடமைகளுக்காக மீண்டும் வீட்டுக்கு அனுப்புகின்றது. இதைப் பாட்டாளி வர்க்கம் மட்டுமே உற்பத்தியையும் அது சார்ந்த சொத்துரிமையையும் சமூகத்தின் உரிமையாக்க கோரி எதிர்த்துப் போராடுகின்றது. உலகில் இரண்டு பொருளாதார வடிவங்கள் மட்டுமே சாத்தியம் என்ற நிலையில் பெண் இதில் ஒன்றை மட்டுமே தனது நலன் சார்ந்து தெரிந்தெடுக்க வேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியம் சார்ந்து சொத்துக் குவிப்பு ஊடாகத் தனது வேலையைப் பறி கொடுத்தல் அல்லது பாட்டாளி வர்க்கம் சார்ந்து சொத்தை மக்கள் சொத்தாக்கி தனது பங்கை உறுதி செய்வது என்பதைப் பெண் தீர்மானிக்க வேண்டியுள்ளது. எந்தப் பெண்ணியமும் இதற்கு வெளியில் வழி காட்ட முடியாது. விரும்பின் தனிநபர் பயங்கரவாத வழியில் குண்டு வெடிப்பு ஆணாதிக்க அரசியலைப் புகட்டுவதும், அதில் நம்பிக்கை கொள்ளச் செய்து ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு நீடித்து இருக்க உதவமுடியும்.

பெண்ணிடம் சொத்துரிமையற்ற நிலையில், அற்ப அன்றாடக் கூலியையும் இழக்க வைக்கும் ஏகாதிபத்திய வரலாற்றை முடிவுக்குக் கொண்டுவர பாட்டாளி வர்க்கம் கோருகின்றது. இதை **லெனின்** "டிரஸ்டுகளிலும் தொழிற்சாலைகளிலும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் வேலைக்கமர்த்தப்படுவது முற்போக்கானது என்று நாம் விளக்குகிறோம். கைத்தொழில் அமைப்பிற்கு அதாவது ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்தின கட்டத்திற்கு, பெண்கள் வீட்டு வேலை வட்டத்திற்குள் உழலும் நிலைக்கு நாம் திரும்பிப் போக விரும்பவில்லை..."[8] என்று குறிப்பிட்டு அன்று பெண்களை வீட்டுக்கு அனுப்ப முற்பட்ட போது **லெனின்** எதிர்த்து நின்றார். இன்று பெண்ணை நவநாகரிகமாக அலங்கரித்து, அழகுபடுத்தி, கவர்ச்சியாக்கி, விபச்சாரப்படுத்தி, பாலுறவு (Sex) பதுமையாக்கி, தனிமையில் வதைத்து, மீண்டும் வீட்டுக்கு அனுப்பி, அழுந்தக் கோரும் இப்பண்பாட்டு வக்கிரத்தைப் பாட்டாளி வர்க்கம் எதிர்த்துப் போராடுகின்றது.

உலகளாவிய ரீதியில் பெண்களை வீட்டுக்கு அனுப்புவது ஒரு போக்காக உள்ளது. இதே போல் ஆண்களை வீட்டுக்கு அனுப்பி பெண்களின் மலிவுக் கூலியைச் சுரண்டுவதும் அதிகரிக்கின்றது. இந்த எதிர் நிலைப் போக்குகள் மேற்கும், மற்றைய நாடுகளுக்குமிடையிலான பாரிய வேறுபாடாக உள்ளது. சந்தைப் பொருளாதாரத்தை முழுமையாகக் கையில் குவிக்கும் பன்னாட்டு அமைப்புகள் உற்பத்தியை எங்கே, எதற்காக, எதனடிப்படையில், எப்படி உற்பத்தி செய்கின்றது என்பதைப் பொறுத்தே, பெண்ணின் வேலை பாதுகாப்பு தீர்மானமாகின்றது. இந்த **ஏகாதிபத்தியப் பன்னாட்டுப் பொருளாதார அமைப்பை மாற்றக் கோராத எந்த நிலையிலும், பெண்ணின் கோரிக்கைகள் நிறைவேறுவதில்லை.** ஏதாவது சலுகை வழங்கின் அது வர்க்கப் போராட்டத்தின் உக்கிரத்தில் மட்டும் சாத்தியமாகின்றது. இதுவும் தற்காலிகமானவையாகவே நீடிக்கின்றது.

இன்று சுரண்டல் ஊடான இலாபத்தைச் சம்பாதிக்கும் பன்னாட்டு அமைப்புகள் ஒரு நபரைக் கூட தேவையின்றி வைத்திருக்கத் தயாராக இல்லை. அதாவது தொழில் நுட்ப வடிவத்தைச் சிறுக்கப் பண்ணும் வளர்ச்சியில், உற்பத்தியில் உள்ள உழைப்பாளிகள் என்ற இயந்திரப் பாகத்தைச் சுருக்கிச் சரக்காக்கி மூலதனத்தைக் குவிக்கின்றனர். இந்தச் சுருக்கம் அதிகமான உற்பத்தியூடான உபரியை உயர்த்தி, சிறு அளவு உழைப்புச் சாதனங்கள் என்ற கோட்பாட்டில் பெண்ணின் வேலை உடனடியாகப் பறிக்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்தே பொதுவாக ஆணின் வேலை பறிக்கப்படுகின்றது. ஏனெனின் மரபார்ந்த ஆணாதிக்கக் குடும்பத்தில் பெண்ணின் கடமையை மீள புகுத்துவது இலகுவானது. இதன் மூலம் சமூகக் கொந்தளிப்பைத் தடுக்க முடியும் என்று இந்த ஏகாதிபத்திய அமைப்பு கனவு காண்கின்றது.

சலுகை போன்றவற்றைக் காட்டிப் பெண்ணைக் குழந்தை பராமரிப்புக்குள் அனுப்பும் பிரஞ்சு ஏகாதிபத்தியம் பெண்ணின் மரபார்ந்த கடமைக்குள் அவளை அறியாமலே இட்டுச் செல்லுகின்றது. இதை மேலும் ஏகாதிபத்தியம் வீட்டு வேலைக்குக் கூலி வழங்குவதன் மூலம், பெண்ணை வீட்டுக்குள் மீள வேகமாகத் தள்ளவும் எதிர்காலத்தில் தயாராக உள்ளது.





முதலாளித்துவப் பூர்சுவா பெண்ணியம் வீட்டு வேலைக்குக் கூலி வழங்கக் கோரும் போராட்டத்தை, ஏகாதிபத்தியம் பெண்ணின் கடமைக்குள் கட்டமைக்கப் பயன்படுத்தி வருகின்றது. பெண்ணின் வீட்டு வேலைக்குக் கூலி நியாயமானதும் அடிப்படையானதுமாகும். ஆனால் இதை ஏகாதிபத்தியம் தனது வர்க்க அமைப்பின் பாதுகாப்புக்குச் சாதகமான ஒரு வடிவமாகக் கையாளும் நாள் மிகவிரைவில் அரங்கேறும். இதன் மூலம் சமூகத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தை மட்டுப்படுத்தவும், பெண்ணைச் சமூகப் பொது இயக்கத்தில் இருந்து வீட்டுக்குள் மீள இயங்க வைப்பதற்கு ஒரு மாற்றுப் பாதையாகும்.

முதலாளித்துவம் பெண்ணைத் தனது உற்பத்தியைப் பெருக்க வீட்டுக்கு வெளியில் கொண்டு வந்த வேகத்துக்குச் சமமாக ஏகாதிபத்தியம் பெண்ணை மீளவும் வீட்டுக்கு அனுப்ப வீட்டு வேலைக்குச் சலுகை வழங்குவதன் மூலம் தொடங்குகின்றது. இது இன்று குழந்தை பராமரிப்புடன் பெண்ணின் பணியை விரிந்துரைக்கின்றது. மேல் சுட்டிக்காட்டியது போல் குழந்தை பராமரிப்பில் ஈடுபட்ட பாதிப் பெண்கள் வேலையை விட்டு, வீட்டில் மூழ்கிப் போனதைக் காட்டுகின்றது.

இதில் இருந்தே பாட்டாளி வர்க்கத்தின் கோஷம் (முழக்கம்) திட்டவட்டமாக வேறுபடுகின்றது. இந்தச் சமூக அமைப்பில் பெண்ணின் உழைப்புக்குக் கூலி வழங்குவதை ஆதரிக்கும் அதே நேரம், பெண்ணைச் சமூக உற்பத்தியில் ஈடுபடுவதை வீட்டுக்கு வெளியில் கோருகின்றது. குழந்தை பராமரிப்பு, உணவு தயாரிப்பைச் சமூக மயப்படுத்தக் கோருகின்றது. அதாவது வீட்டு வேலையைச் சமூகத்தின் கூட்டு உழைப்பாக, வீட்டுக்கு வெளியில் கோருகின்றது.

பிரான்சில் 22 இலட்சம் குழந்தைகள் பராமரிப்பு இல்லத்துக்கு வெளியில் தாய்மாரால் வீட்டில் பராமரிக்கப்படுகின்றனர். இரண்டு இலட்சம் குழந்தைகள் மட்டுமே அரசு பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றனர். (15.6.2000)[17] முதலாளித்துவ ஜனநாயகம் பெண்களைச் சமூக உழைப்பில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தி, சிறைவைப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றது. இதில் இருந்தே ஆணாதிக்க ஆண் எதிர்ப்பு பெண்ணியல்வாதிகள் அரசுக்கு எதிராகப் போராடுவதை மறுத்து, இதை மூடி மறைக்க குழந்தை பெறுவதையே எதிர்க்கின்றனர். அத்துடன் தனிப்பட்ட ஆணைக் குற்றவாளியாகக் காட்டுகின்றனர்.

முந்திய சோசலிச நாடுகளில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் நிலவிய போது, குழந்தை வளர்ப்பை அரசே முழுக்க முழுக்க பொறுப்பு எடுத்து பராமரித்ததும், இன்று குழந்தைகளை மீள தாய்மாரிடம் கொடுத்து வீட்டில் சிறை வைப்பதையும், இன்றைய ஆணாதிக்க ஜனநாயகத்தின் பொதுத் தன்மையைத் தெளிவாக அம்பலமாக்குகின்றது.

பிரான்சில் இன்று குழந்தை பராமரிப்புக்கான மையங்களைக் குறைக்கும் அரசின் போக்கை எதிர்த்தும், இதைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்தும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தை பராமரிப்பு மையங்களை மேலும் அதிகமாகக் கோரியும் போராடக் கோருகின்றது. இதேபோல் உழைப்பு மையங்களில் தமக்கான உணவை வழங்கக் கோரி போராட வேண்டும். இதன் மூலம் பெண் வீட்டுக்கு வெளியில் உற்பத்தியில் ஈடுபடவும், கூலி பெறுவதையும் உறுதி செய்யக் கோருகின்றது. இது இந்தச் சமூக எல்லைக்குள் நடத்தும் போராட்டமானது சமூகத்தின் முன்முயற்சிக்கும், தனது பொறுப்பில் இவைகளை நடத்தும் சமூகக் கண்ணோட்டத்தையும் வழங்குகின்றது. கூலிக்குப் பதில் தேவைக்கு உட்பட்ட சமூகக் கண்ணோட்டம் பெண்ணை வீட்டில் இருந்து திட்டவட்டமாக விடுவிக்கவும், தேவையைப் பெற்றுக் கொள்ளும் சமூகத்தை நோக்கி பெண் முன்னேறக் கோருகின்றது.

இன்று பெண்கள் சமூக உழைப்பில் இருந்து அன்னியப்பட்டு, வீட்டுக் கடமையுடன் மூழ்கிவிடும் பெண்கள் தொடர்பான புள்ளி விபரம் ஏற்கெனவே தரப்பட்டுள்ளது. இது மேற்கில் வேறுபட்ட தன்மையைக் காட்டுகின்றது. பெண்ணை வீட்டுக்கு வெளியில் உழைப்பில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பது எது? மேற்கில் சில நாடுகளில் உள்ள பொது வறுமை. மறுபக்கம் பெண்ணின் ஏகாதிபத்திய நுகர்வு பண்பாட்டிலான சுயேட்சையான தன்மையைக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய ஆணாதிக்கக் கண்ணோட்டத் தன்மை. இதனுடன் மரபார்ந்த மத ஆதிக்கம் கொண்ட பண்பாட்டின் தொடர்ச்சி பெண்ணை வீட்டில் சிறை வைக்கின்றது. இவை தான் மேற்கில் பெண்ணின் வீட்டுக்கு வெளியிலான தொழிலில் ஈடுபடும் எண்ணிக்கையை நாட்டுக்கு நாடு தீர்மானிக்கின்றது.

மேற்கில் சில நாட்டுப் பெண்களை விட மூன்றாம் உலகில் பொதுவாக வீட்டுக்கு வெளியில் பெண் அதிகமாக உழைப்பில் ஈடுபடுவதைக் காணமுடியும். இது **சாதி, நிறம், தேசிய இனம், வர்க்கம், மதம்** என்ற குறிப்பான நிலைமைகளுக்கு உட்பட்டு, அதற்குள் கூட பெண் உழைப்பின் எண்ணிக்கை தீர்மானகரமாகின்றது. இவை **ஆணாதிக்கம், பொது பொருளாதாரம், குறிப்பான பண்பாடு** என்ற பொது எல்லைக்குள் பெண்ணின் கடமையை எல்லைப்படுத்துகின்றது.

**வீட்டுக்கு வெளியில் வந்த பெண் எப்படி உள்ளாள்?** பகுதி வேலைகளிலும், அரைகுறை வேலைகளிலும், இடைவெளிவிட்ட வேலை நேரத்திலும் என்று பெண் அலைக்கழிக்கப்படுகின்றாள். இந்த அரைகுறை வேலையூடாகப் பெண்ணின் மிகுதி நேரத்தை வீட்டில் மரபார்ந்த கடமையைச் செய்யக் கோருகின்றது.

பொதுவாக மேற்கில் உழைக்கும் பெண்களில் பெரும்பான்மையானோர் ஒழுங்கற்ற பகுதி வேலையில் உள்ளனர். அத்துடன் இதற்கு வழங்கும் கூலி எந்தளவுக்கு அடிமட்டமாக இருக்க முடியுமோ அந்தளவுக்குச் சுரண்டும் வர்க்கத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாக உள்ளது. இந்த அடிமட்டச் சம்பளம் வர்க்கப் போராட்டத்தின் நிலைமை, அதில் பெண்ணின் பங்கு, குறிப்பான



பண்பாடுகள், அந்த நாட்டுத் தொழில் சட்டங்களின் வரையறைகள், பெண்ணின் பொருளாதாரத் தேவை, ஆண் கூலியின் அளவு போன்றனவே பெண்ணின் கூலியை மட்டுப்படுத்துகின்றது.

பெண்ணின் உயர் பதவிகள் அவளின் திறமையால் தீர்மானிக்கப்படவில்லை. மாறாக ஆண் அந்த இடத்தை நிரப்ப முடியாத நிலையில் மட்டுமே பெண் அவ்விடத்தை வந்தடைகின்றாள். இங்கு பெண்ணின் திறமை ஆணிடம் இல்லாத ஒரு நிலையில் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றது. முடிவு எடுக்கும் அதிகாரப் பீடத்தில் பெண் அமர்வதால் பெண் ஆணாதிக்கத்தை ஒழித்துவிடுவதில்லை. அதிகார வர்க்கத்துக்கே உரிய நாய்க்குணத்தை ஆணுக்குப் பதில் பெண்ணும் பெற்று வெளிப்படுத்துவது பொதுப் பண்பாகின்றது. இந்த அதிகாரம் ஆணாதிக்க வழிகளில் கட்டமைக்கப்படுகின்றது.

பெண் அதிகாரத்தில் பெரும்பான்மையை அடைந்தாலும் பெண் மீதான ஆணாதிக்கம் உச்சத்தில் தான் இருக்கின்றது, இருக்கும். இது சிலவேளைகளில் விகாரமாகக் கூட மாறுகின்றது. இதற்குப் பல உதாரணங்களைக் காணமுடியும் அழகுராணி போட்டிகள், மொடலிங் போன்ற பலதுறைகளில் பெண்ணின் அதிகாரம் ஆணாதிக்கத்தை மேலும் விகாரப்படுத்தி வெளிப்படுத்துகின்றது. ஆணுக்கு இந்தச் சமூகத்தில் இருக்கும் உரிமைபோல் பெண்ணுக்கும் இருக்கவேண்டும் என்ற ஜனநாயகக் கோரிக்கை எவ்வளவு நியாயமானதாக இருந்த போதும், இதைச் சாதிப்பதன் மூலம் பெண் விடுதலையடைந்து விடுவதில்லை. மாறாக அதே ஆணாதிக்கத்தைப் பெண்ணே தலைகீழாக நின்று கையாள்வதுதான் பொதுப்பண்பாக இச்சமூக அமைப்பு வழிகாட்டுகின்றது.

சில நாடுகளில் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் எண்ணிக்கையைக் கீழ்க்கண்ட அட்டவணை:13 வழியாக ஆராய்வோம்.[22]

**அட்டவணை: 13**

| நாடுகள் | சதவீதத்தில் |
|---|---|
| மெக்ஸிக்கோ | 58% |
| கோஸ்ரோரிக்கா | 60-62% |
| கொண்டூராஸ் | 72-75% |
| குவாட்டாமாலா (1993) | 78% |
| டொமினிக்கன் குடியரசு (1992) | 60% |

இந்தியாவில் கி.பி. 1990-இல் 3,000 ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் உடைய 20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டோரிடம் இந்தியா டுடே-மார்க் நடத்திய ஆய்வைப் பார்ப்போம். (21.12.1996)[13] நகர்ப்புறப் பெண்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12 சதவீதம் பெண்கள் வேலைக்குப் போகின்றனர். "உயர் பதவியில் உள்ள பெண்கள் அடங்கிப் போக மறுக்கின்றனர்" என இந்தியா டுடே எழுதுகின்றது.

இந்தியாவில் இமாலயப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் நடத்திய ஆய்வில் வருடம், பெண்கள் 640 மணித்தியாலம் களையெடுப்பிலும், 384 மணித்தியாலத்தை நீர்ப்பாசனத்திலும், 650 மணித்தியாலத்தைப் பசுவின் கழிவு மூலமான உரச் சேகரிப்பிலும் அதை மண்ணில் இணைப்பதிலும், 984 மணித்தியாலத்தை அறுவடை, கதிரடித்தல் போன்றவற்றிலும் 557 மணித்தியாலத்தை விதைத்தலிலும் (ஆண்கள் உடன் சேர்ந்து) ஈடுபடுகின்றனர்.

மலைப்பகுதி ஆய்வில், ஒரு ஜோடி மாடு ஒரு போகத்துக்கு 1,064 மணித்தியாலமும், ஆண்கள் 1,212 மணித்தியாலமும், பெண்கள் 3,485 மணித்தியாலமும் பணிபுரிகின்றனர்.

**பா.்.தி,** மற்றும் **சிங்** ஆகியோருடைய இமாலயப் பிரதேச ஆய்வில் பெண்கள் விதைத்தலில் 37 சதவீதத்தையும், களையெடுத்தல் மற்றும் நீர்ப்பாசனத்தில் 59 சதவீதத்தையும், அறுவடையில் 69 சதவீதத்தையும், கதிரடித்தல் மற்றும் தூற்றுதலில் 59 சதவீதத்தையும், விலங்குகளைப் பராமரித்தலில் 69 சதவீதத்தையும் ஆக மொத்தம் 61 சதவீதத்தையும் பெண்கள் விவசாயத்தைச் சார்ந்த தொழிலில் ஈடுபடுகின்றனர்.[27]

ஆப்பிரிக்காவில் உள்ள வேளாண்மைத் துறைகளில் 80 சதவீதத்தைப் பெண்கள் உழைப்பால் கட்டிப் பாதுகாத்து 50 சதவீத உணவு உற்பத்தி செய்தனர். **ஸ்ரீலதா பத்லிவாலா** மேற்கொண்ட ஆய்வில், இந்தியாவில் ஒரு நாளில் வீடு சார்ந்து வேளாண்மையில் ஆண் 37 சதவீதத்தையும் பெண் 53 சதவீதத்தையும், குழந்தைகள் 16 சதவீதத்தையும் உழைப்பில் பயன்படுத்துகின்றனர்.[27]

இப்புள்ளி விபரங்கள் பெண்ணின் கடின உழைப்பைக் காட்டுகின்றது. ஆணைவிட உற்பத்தியில் அதிகமாக உழைப்பதைக் காட்டுகின்றது. ஆணாதிக்கம் பெண்ணிடம் இருந்து சொத்துரிமையைப் பறித்த பின்னாலும் பெண் உழைப்பதில் கடினமாகப் பணியில் ஈடுபடுவதைக் காட்டுகின்றது. இந்த உழைப்பின் ஊடாக உலகத்துக்கு உணவு கொடுப்பதையும், தான் பட்டினி கிடப்பதையும் காட்டுகின்றது. தாய்மையின் உன்னதமான கூறுகளைப் பெண்ணின் தியாக மனப்பான்மைக்குச் சான்றாக இவை விளங்கிய போதும், இதை அவளிடம் கட்டாயப்படுத்திச் சூறையாடும் வரலாறு தான் பெண்ணின் வறுமைக்குக் காரணமாகும்.

பெண் வறுமையில் மடிந்து போகும் அளவுக்கு அவளின் உழைப்பையும், அதன் ஊடான உணவையும் கைப்பற்றிய சுரண்டும் வர்க்கம் இன்று அதை மேலும் தீவிரமாக்கி பெண்ணை அடிமைப்படுத்துகின்றது.



விவசாயத்தைப் பெண் கண்டுபிடித்து உணவை உற்பத்தி செய்த போது, அவள் இயற்கையின் உன்னதமான பாதுகாப்பையும் சார்ந்து பாதுகாத்தாள். ஆனால் விவசாயத்தைச் சுரண்டும் வர்க்கம் பெண்ணிடம் இருந்து சொத்துரிமையைக் கைப்பற்றியதன் மூலம் பெண்ணுக்கு அன்னியப்படுத்திய இன்றைய வரலாற்றில் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற இடங்களில் பெண்ணின் ஆளுமை தொடர்ந்து காணப்படுவதை அவளின் உழைப்பு காட்டுகின்றது. ஆணாதிக்கச் சொத்துரிமை பெண்ணுக்கு மறுத்து விவசாயத்தைச் சுரண்டும் நலனுக்கு ஊடாக அதிகாரம் பெற்ற மக்கள் கூட்டத்தில் பெண் கூலியாக மாறுவது பண்பாகின்றது.

இந்தியாவில் **அகர்வால்** என்பவர் செய்த ஆய்வில் கி.பி. 1961 முதல் கி.பி. 1981 வரையிலான பசுமைப் புரட்சிக் காலத்தில் பெண் விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை 25.6 சதவீதத்தில் இருந்து இரண்டு மடங்காக அதாவது 49.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேநேரம் கி.பி. 1961-க்கும் கி.பி. 1971-க்கும் இடையில் பெண் உற்பத்தியாளர்கள் குறைந்து, கூலிப் பெண்கள் அதிகரித்ததை **மரியா பீஸ்** என்பவரின் ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. அதே நேரம் வழங்கப்படும் கூலி ஆணை விட பெண்ணுக்கு அரைப்பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு குறைவாகவே கிடைத்தது.[27] இதன் மூலம் பெண்ணின் பொருளாதார ஆதாரங்கள் பறிக்கப்பட்டுக் கூலித் தொழிலாளராகத் தள்ளியுள்ளதையும், அதே நேரம் வறுமை மேலும் சமூக மயமாகி அதிகரித்ததையும் புள்ளி விபரம் காட்டுகின்றது.

பெண் உற்பத்தியாளனாக இருந்த அவளின் கண்டுபிடிப்பு மீதான அனுபவமும், வழிகாட்டலும் பறிக்கப்பட்டுக் கூலிகளாக மாற்றப்படுவதைப் புள்ளிவிபரம் நிறுவுகின்றது. அத்துடன் ஆணாதிக்கக் குடும்பத்தில் வீட்டுக் கடமையில் ஈடுபட்ட பெண் ஆணின் கூலியிழப்பால் வீட்டுக்கு வெளியில் கூலியாக்கப்படுவதைக் கட்டாயமாக்குகின்றது. இவை ஏகாதிபத்திய நலன் சார்ந்த பசுமைப் புரட்சியின் விளைவால் பெண் புதிதாகச் சந்திக்கும் பொது நெருக்கடியாகும். ஒருபுறம் உற்பத்தியில் ஈடுபட்ட பெண் கூலியாகவும், மறுபுறம் புதிய கூலிகளையும் சமூகத்தில் தோற்றுவித்த போது சமூகம் பொதுவான நெருக்கடிக்குள் செல்வதைக் காட்டுகின்றது.

உலக மக்கள் தொகையில் வாழும் அடிமட்ட பிரிவாக உள்ள 20 சதவீதம் பேர் கி.பி. 1960-இல், உலகச் செல்வத்தில் பெற்ற 2.3 சதவீதமான ஆதாரத்தை கி.பி. 1986-இல், 1.1 சதவீதமாகக் குறைக்க, ஏகாதிபத்தியச் சூறையாடலே இச்சமூக அவலத்தை நிர்வாணமாக்குகின்றது.

இதையும் பறிக்கும் இன்றைய **காட் ஒப்பந்தம்** இந்த ஜனநாயக அமைப்பின் அச்சாணியாக உள்ளது. இதன் மூலம் பெண் சொத்துரிமை இழப்பு அதிகரிப்பதும், பெண் கூலியிழப்பைச் சந்தித்து செல்வதும் அதிகரிக்கின்றது. இதை மாற்ற போராடாத வரை பெண் விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாத்தியமில்லை. இதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கப் போராட்டம் அல்லாத எந்தப் போராட்டமும் வழிகாட்டியதில்லை. வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தைப் போலிக் கம்யூனிசக் கட்சிகள் வரிந்து கொண்டதைத் தொடர்ந்து கூலி மேலும் மேலும் குறைந்து செல்வது அதிகரிக்கின்றது. இந்தக் கூலியில் ஆணைவிட பெண்ணுக்கு இழிவாக உள்ள கூலி மேலும் இழிவுபடுத்தப்படுகின்றது. இதை வருடாந்த சம்பளத்துக்கும் விலை அதிகரிப்புக்கும் இடையிலுள்ள சதவீதத்தில் அட்டவணை:14-இல் இருந்து பார்ப்போம்.[28]

**அட்டவணை: 14**

| நாடுகள் | ஆண்டுகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1961 | | 1961-1970 | | 1971-1980 | | 1981-1990 | | 1993 | |
| | உண்மையான சம்பளம் அதிகரிப்பு | போலியான சம்பளம் அதிகரிப்பு | உண்மையான சம்பளம் அதிகரிப்பு | போலியான சம்பளம் அதிகரிப்பு | உண்மையான சம்பளம் அதிகரிப்பு | போலியான சம்பளம் அதிகரிப்பு | உண்மையான சம்பளம் அதிகரிப்பு | போலியான சம்பளம் அதிகரிப்பு | உண்மையான சம்பளம் அதிகரிப்பு | போலியான சம்பளம் அதிகரிப்பு |
| ஜெர்மனி | 10.2 | 6.5 | 8.6 | 5.6 | 8.3 | 3.0 | 3.6 | 0.9 | 3.6 | 0.0 |
| பெல்ஜியம் | 3.2 | 0.6 | 7.7 | 4.5 | 12.0 | 4.6 | 5.2 | 0.6 | 4.7 | 1.8 |
| ஸ்பெயின் | 12.9 | 10.9 | 14.1 | 7.7 | 20.4 | 4.6 | 9.9 | 0.5 | 7.3 | 1.7 |
| பிரான்ஸ் | 10.6 | 7.0 | 9.5 | 5.0 | 13.3 | 3.5 | 7.5 | 1.0 | 3.9 | 1.2 |
| இத்தாலி | 8.2 | 6.4 | 10.8 | 6.7 | 18.4 | 3.3 | 12.0 | 1.8 | 4.1 | -1.6 |
| நெதர்லாந்து | 7.4 | 4.9 | 10.6 | 6.3 | 10.8 | 3.1 | 2.3 | 0.1 | 3.3 | 0.6 |
| இங்கிலாந்து | 6.8 | 3.7 | 7.0 | 3.0 | 16.0 | 2.4 | 8.4 | 2.3 | 3.7 | -1.3 |
| ஐரோப்பா | 8.8 | 5.8 | 9.1 | 5.1 | 14.3 | 3.2 | 7.8 | 1.3 | 4.4 | 0.0 |
| அமெரிக்கா | 3.2 | 1.9 | 5.2 | 2.4 | 8.1 | 0.9 | 5.1 | 0.5 | 2.1 | -0.6 |
| ஜப்பான் | 13.2 | 6.5 | 13.5 | 7.5 | 13.1 | 4.1 | 3.9 | 2.0 | 1.9 | -0.7 |

வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் இன்றைய மனித வாழ்வில் தொழிலாளியினுடைய கூலி குறைந்து செல்வதைக் காட்டுகின்றது. வர்க்கப் போராட்டத்தின் வர்க்க அடிப்படை சிதைக்கப்படுகின்ற போது சொத்து மேல்





சொத்து குவிப்பதன் மூலம் கூலி குறைந்து செல்லுகின்றது. இது பெண்ணின் கூலியை மேலும் இழிவுக்குள்ளாக்குகின்றது. பெண் இழந்து போனதும், இழந்து செல்கின்றதுமான சொத்துரிமையையும், இழக்கும் கூலியையும் பெண் மீளப் பெற போராடாமல் ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியாது. அதாவது சொத்துரிமையை மீளவும் சமூகச் சொத்தாக்கும் வர்க்கப் போராட்டத்தால் மட்டுமே இது சாத்தியம். மேலும் கூலியிழப்பால் பெண் ஆணாதிக்கப் பிடிக்குள் இறுக்கப்படுகின்றாள்.

சந்தையில் சுயாதீனமாக நுகர ஆணாதிக்கம் பெண்ணை ஊக்குவித்தபடி பெண்ணின் கழுத்தைப் பொருளாதார ரீதியில் மேலும் இறுக்குகின்றது. பெண் பொருளாதார ரீதியில் ஆணிடம் சார்ந்திருப்பதை இது ஊக்குவிக்கின்றது. இவை எமக்குக் காட்டுவது என்ன? எந்தச் சீர்திருத்தங்களும், சலுகைகளையும் தருகின்ற சுரண்டும் வர்க்கம் மற்றொரு பக்கத்தில் அதை ஒழித்துக் கட்டுகின்றது. வழங்கப்படும் சம்பள உயர்வை விலை ஏற்றத்தின் ஊடாகச் சுரண்டும் வர்க்கம் மறுக்கின்றது (பறித்துக் கொள்கிறது). இது அனைத்து விடயங்களுக்கும் பொருந்தும்.

இதன் மறுபுறத்தில் பெண்ணின் தொழிலைச் சுரண்டும் வர்க்கம் மறுக்கின்றது. மறுபுறம் பெண்ணின் தொழிலைப் பகுதி நேரமாக்குகின்றது. இதைக் கீழ்க்கண்ட அட்டவணை:15-இன் மூலம் ஆராய்வோம்.[28]

**அட்டவணை: 15**

| நாடுகள் | ஆண் | | பெண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1992 | 1979 | 1992 | 1979 | 1992 |
| ஆஸ்திரேலியா | 5.2% | 10.5% | 35.2% | 43.3% | 15.9% | 24.4% |
| ஆஸ்திரியா | 1.5% | 1.5[1]% | 18.0% | 20.1% | 7.6% | 8.9% |
| பெல்ஜியம் | 1.0% | 2.1[1]% | 16.5% | 27.4[1]% | 6.0% | 11.8% |
| கனடா | 5.7% | 9.3% | 23.3% | 25.9% | 12.5% | 16.8% |
| டென்மார்க் | 5.2% | 10.5% | 46.3% | 37.8[1]% | 22.7% | 23.1% |
| பின்லாந்து | 3.2% | 5.5% | 10.6% | 10.4% | 6.7% | 7.9% |
| பிரான்ஸ் | 2.4% | 3.6% | 16.9% | 24.3[1]% | 8.2% | 12.7% |
| ஜெர்மனி | 1.5% | 2.7[1]% | 27.6% | 34.3% | 11.4% | 15.5% |
| கிரீஸ் | - % | 2.2[1]% | - % | 7.2[1]% | - % | 3.9% |
| அயர்லாந்து | 2.1% | 3.6[1]% | 13.1% | 17.8[1]% | 5.1% | 8.4% |
| இத்தாலி | 3.0% | 2.7% | 10.6% | 10.5% | 5.3% | 5.4% |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜப்பான் | 7.5% | 10.6% | 27.8% | 34.8% | 15.4% | 20.5% |
| லுக்சம்பேர்க் | 1.0% | 1.9[1]% | 17.1% | 17.9[1]% | 5.8% | 7.5% |
| நெதர்லாந்து | 5.5% | 16.7% | 44.0% | 62.2[1]% | 16.6% | 34.3% |
| நியூசிலாந்து | 4.9% | 10.3% | 29.1% | 35.9% | 13.9% | 21.6% |
| நார்வே | 7.3% | 9.8% | 50.9% | 47.1% | 25.3% | 26.9% |
| போர்ச்சுக்கல் | 2.5% | 4.2% | 16.5% | 11.0% | 7.8% | 7.2% |
| ஸ்பெயின் | - % | 2.0% | - % | 23.7% | - % | 5.9% |
| சுவீடன் | 5.4% | 8.4% | 46.0% | 41.3% | 23.6% | 24.3% |
| இங்கிலாந்து | 1.9% | 6.1% | 39.0% | 44.6% | 16.4% | 23.2% |
| அமெரிக்கா | 9.0% | 10.8% | 26.7% | 25.4% | 16.4% | 17.5% |

[1]1991-ஆம் ஆண்டுக்குரியது.

இது பெண்ணின் அவலத்தைக் காட்டுகின்றது. பெண் வீட்டுக்கு வெளியில் தொழில் புரிவதாகக் காட்டும் ஆணாதிக்க ஜனநாயகம் உண்மையில் பெண்ணின் வேலையை அரைகுறையாகக் கொடுத்து அதிகமாக அவளை ஒட்டச் சுரண்டுகின்றது. பெண் பொருளாதார ரீதியாகத் தொடர்ந்து ஆணைச் சார்ந்திருக்க இது நிர்ப்பந்திக்கின்றது.

பிரான்சில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் பாரிய சம்பள வேறுபாட்டை ஒரே தொழிலில் கொண்டுள்ளனர்.[19] அதைக் கீழ்க்கண்ட அட்டவணை:16-இல் காணலாம்.

**அட்டவணை: 16**

| துறை | வருட வருமானம் | | |
|---|---|---|---|
| | **பெண்** | **ஆண்** | **பெண்ணை விட ஆணின் அதிகரிப்பு** |
| பாதுகாப்புத் துறை | 1,96,200 பிராங் | 2,69,000 பிராங் | 37 சதவீதம் |
| தொழில் நுட்பவியல் | 1,15,800 பிராங் | 1,37,000 பிராங் | 18 சதவீதம் |
| அலுவலகர் | 86,800 பிராங் | 96,000 பிராங் | 11 சதவீதம் |
| தொழிலாளர் | 72,100 பிராங் | 93,600 பிராங் | 29 சதவீதம் |



ஆணுக்கும் பெண்ணுக்கு இடையில் காணப்படும் சம்பள வேறுபாடுகள் விதிவிலக்கின்றி எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. மேற்கு நாடுகளில் அடிப்படை சம்பளம் வரையறுக்கப்பட்ட போது (சில மேற்கு நாடுகளில் அடிப்படைச் சம்பளம் வரையறுக்கப்படவில்லை. அடிப்படைச் சம்பளம் உள்ள நாடுகளில் உலகமயமாதல் இதை மீள நீக்க கோருகின்றது.) ஆண் பெண்ணுக்கு ஒரே சம்பளத்தையே வரையறுத்துள்ளது. அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் ஆண் பெண்ணுக்கிடையில் சம்பள வேறுபாடு என்பது கிடையாது. பொதுவாக இப்பிரிவு தொழிலாளர் வர்க்கமாகக் காணப்படுகின்றது. அதற்கு மேல் ஊதியம் பெறும் ஆண் பெண்ணுக்கிடையில் காணப்படும் வேறுபாடு, இந்த ஆணாதிக்க அமைப்பில் நீக்கப்பட முடியாதவகையில் காணப்படுகின்றது.

ஒரே வேலையில் திறமை, ஊக்குவிப்பு... போன்ற பல்வேறு காரணங்களால் இப்பிளவு மூலதனத்தின் ஆதாரமாக உள்ளது. இந்தப் பிளவில் பெண் மட்டுமல்ல ஆண்களும் சுரண்டப்படுகின்றனர். பொதுவாகச் சுரண்டல் வர்க்கம் பிரித்து விடும் நோக்கில் சலுகை பெற்ற பிரிவை உற்பத்தி செய்வதாலும், கண்காணிப்பை அதிக சம்பளம் கொண்டு நடைமுறைபடுத்துவதாலும் ஊதிய வேறுபாடு ஜனநாயகமாக, சுதந்திரமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சராசரியாகப் பெண்களின் கூலி அதிக சதவீதத்தால் வேறுபட்ட போதும், இதன் கட்டமைப்பு ஆண்-பெண் என்ற பிளவைச் சுரண்டும் வர்க்கம் பிரித்து சுரண்டும் கைக்கூலித்தனத்தில் நடைமுறைப்படுத்துகின்றது.

இந்தச் சுரண்டல் அமைப்பு நீடிக்கும் வரை வேறுபட்ட சம்பளம் நடைமுறையில் கையாள்வது மூலதனத்தின் ஆதாரமாகும். மனிதர்களின் தேவைக்குரியதைப் பெறும் சமுதாயம் மட்டுமே இதைத் தீர்க்கும் மாற்றாக எதிர்நிலையில் காணப்படுகின்றது. **மூலதனத்தை மக்கள் தமது கைகளால் பறித்தெடுப்பதன் மூலம் மட்டுமே இந்தப் பிளவுகளை ஒழித்துக் கட்டமுடியும்.**

இன்று உலகமயமாதல் தொழிலை விட்டு துரத்துகின்ற போது, அந்தத் துரத்துதலைப் பெண்ணை நோக்கி நகர்த்துகின்றது. தொழிலை இழந்த பெண் பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் அவலத்தை மீண்டும் சுரண்டும் வர்க்கம் மேலும் மலிவான கூலியிலும், மிகக் குறைந்த காலத்தில் (விரைவுச் சுரண்டல்) ஒட்டச் சுரண்டும் கைங்கரியத்திலும் ஈடுபடுகின்றது. பெண் இந்தப் போக்கின் ஊடாக ஆணாதிக்கச் சுரண்டலுக்குள் அதிகமாக நசுக்கப்படுகின்றாள்.

நுகர்வுப் பண்பாட்டில் நேரடியாக ஆணிடம் இருந்து விடுவிக்கும் ஏகாதிபத்தியம் பெண்ணை ஒட்டச் சுரண்டுவதற்கும், பொருளைச் சுதந்திரமாக நுகர்வதுக்கும் வசதியாக, ஆணின் பொருளாதாரப் பாதுகாப்பில் நின்று பெண் போராடுவதை ஆண் எதிர்ப்பு கோஷத்தின் (முழக்கத்தின்) ஊடாக மறுக்கின்றது. இதில் இருந்தே ஏகாதிபத்தியப் பெண்ணியம் உதித்து எழுகின்றது. இதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டே பூர்சுவா மற்றும் அராஜகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணியக் கோட்பாடுகள் கட்டமைக்கப்படுகின்றது. இந்தப் பெண்ணியம் ஆணுடன் இணைந்து வர்க்கப் போராட்டத்தை நிகழ்த்துவதன் ஊடாக ஆணாதிக்கத்தை ஒழிப்பதை மறுக்கின்றது. இது பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக, அரசியல் அதிகாரத்துக்காகப் போராடிய காலம் முதலே நீடிக்கின்றது.

**பாரீஸ் கம்யூன்**-ஐப் பார்த்த ஒரு முதலாளித்துவ பத்திரிக்கையாளர் கி.பி. 1871 மே மாதத்தில் கீழ்க்கண்டவாறு கூறினார். "பிரஞ்சு தேசம் முழுவதும் பெண்களையே கொண்டிருந்தால், அது எத்தகைய பயங்கரமான நாடாக இருக்கும்! பெண்களும் பத்து வயதைக் கடந்த குழந்தைகளும் பாரிஸ் கம்யூனில் ஆண்களோடு தோளோடு தோள் நின்று போராடினர்."[8]

பெண்கள் மீதான அச்சத்தை முதலாளித்துவ வர்க்கம் தனது சுரண்டும் நலனுடன் எப்போதும் இனம் காண்கின்றது. இதைக் கோட்பாட்டு ரீதியாக ஆணிடம் இருந்து பிளந்து விட்டால் ஆணும் வர்க்க விடுதலையை அடைய முடியாது. பெண்ணும் ஆணாதிக்கத்திடம் இருந்து விடுதலை அடைய முடியாது என்பதால் தான் பாட்டாளி வர்க்கமல்லாத பெண்ணியத்தைத் தோற்றுவிக்கின்றனர். இது அந்த வர்க்கத்தில் இருந்து இயல்பாகவும் தன்னிச்சையாகவும், அதே நேரம் இதற்குக் கோட்பாட்டு விளக்கம் திட்டமிடப்பட்டும் பாட்டாளி வர்க்க எதிர்ப்பில் கட்டமைக்கப்படுகின்றது. இதையும் மீறி நடந்த வர்க்கப் புரட்சிகள் பெண்ணை ஆணாதிக்கத்திடம் இருந்து விடுவிக்கும் போராட்டத்தைத் தீவிரமாக்கியது. இதைத் தொடர்ந்து கலாச்சாரப் புரட்சியின் ஊடாக ஆணாதிக்கத்தை ஒழிப்பது அரசியல்மயமாக்கப்பட்டது.

கி.பி. 1988-இல் சீனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என டெங்சியாபிங் அறிவித்த பின் அங்கு பெண் சிசுக் கொலை வேகமாக அதிகரித்துச் சென்றது. இது வருடத்திற்கு 10 இலட்சமாக மாறியது. **டெங் கம்யூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை ஏற்ற பின்பு,** சமூகத்தில் பெண்களை இரண்டாம்தர பிரஜையாக மாற்றியதுடன் பெண்களை இழிநிலைக்கும் இட்டுச் சென்றது.

இன்று அங்கு பெண்கள் பகிரங்க இடத்தில் ஏலம் விடப்படுவதுடன், பெண்களை விலை பேசி விற்கப்படுவதும், ஒரு பெண்ணை 4-5 பேர் கூட்டாக வாங்கி அடிமைகளாகத் தமது வீடுகளில் விடுகின்றனர். பெண்களை வரிசையாக நிறுத்தி அவர்களின் மார்பகத்தின் மீது ஒரு துண்டு சீட்டில் பெயர், வயது, விலை எழுதி வைத்து, விற்பதற்காக நிறுத்தி வைக்கப்படுவது இன்று நடைமுறையாக உள்ளது. **முதலாளித்துவச் சீனாவில்** 25 சதவீதமான பெண்கள் அதாவது 15 கோடி பெண்கள் வீட்டில் துன்புறுத்துதலைக் கணவன்மார் மூலம் எதிர் கொள்கின்றனர். இன்று டெங் பொருளாதாரச் சீர்திருத்தம் 2 கோடி பெண்களை வேலையை விட்டு நீக்கி, வீட்டில் அடிமையாக இருக்க வீட்டுக்கு அனுப்பியுள்ளது.





முதலாளித்துவ மீட்சியைக் கட்சிக்கு உள்ளிருந்தே உருவாக்கியவர்கள், மொத்தச் சமூகத்தையே சுரண்டும் வர்க்க நலனுக்காக முதலாளித்துவ ஜனநாயகச் சர்வாதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் மீது திணித்தனர். இது பெண்களைத் தமது வேலைகளில் இருந்து அகற்றியது.

சீனாவில் புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக அரசுத் துறையில் வேலைசெய்த இரண்டு கோடி பெண்கள் வேலையில் இருந்து துரத்தப்பட்டுள்ளனர். (4.9.1994)[6]

கி.பி.1995-இல், ருசியாவில் 62 சதவீதமான பெண்கள் வேலையிழந்து, மீண்டும் வேலை தேடுபவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

பல்கேரியாவில் கி.பி. 1991-க்கும் கி.பி. 1995-க்கும் இடையில் 55 முதல் 65 சதவீதமான பெண்கள் வேலை இழந்துள்ளனர்.

ருமேனியாவிலும், போலந்திலும்

53 முதல் 56 சதவீதப் பெண்கள் வேலை இழந்துள்ளனர்.

லிதுவேனியாவில் கி.பி. 1990-இல், அரசு சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் 76.4 சதவீதக் குழந்தைகள் விடப்பட்டுப் பெண்கள் விடுவிக்கப்பட்டு இருந்தனர். போலி கம்யூனிசத்துக்குப் பதில் ஜனநாயகம் மீட்ட பின் கி.பி. 1993-இல், இந்தப் பராமரிப்பு நிலையத்தில் 36.4 சதவீதமான குழந்தைகளே பராமரிக்கப்பட்டுப் பெண்களை குழந்தையைப் பராமரிக்கும் இயந்திரமாக்கி, வீட்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.[22]

முன்னைய கம்யூனிச நாடுகள் தமது போலி கம்யூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவ ஜனநாயகச் சர்வாதிகாரத்தை மீட்ட பின் வேலையின்மை அதிகரித்துச் செல்ல, பெண் பழையபடி வீட்டில் பட்டினியுடன் வேலைக்காரியாகின்றாள். இந்த நாடுகளின் ஜனநாயகம் எப்படி பொதுவில் வேலையை விட்டுத் துரத்துகின்றது என்பதை அட்டவணை:17-இல் இருந்து பார்ப்போம்.[28 மற்றும் 29]

**அட்டவணை: 17**

| நாடுகள் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| அல்பேனியா | 1.9 | 2.1 | 5.1 | 12.5 | - |
| பல்கேரி | 0.0 | 1.5 | 10.8 | 15.6 | 16.4 |
| கங்கேரி | 0.4 | 1.9 | 7.5 | 12.3 | 13.4 |
| போலந்து | 0.1 | 6.3 | 11.8 | 13.6 | 15.7 |
| ருமேனியா | 0.0 | 0.4 | 3.0 | 8.4 | 10.1 |
| ருசியா | 0.0 | 0.0 | 0.1 | 1.4 | 1.1 |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிலோவனியா | 2.9 | 4.7 | 10.1 | 3.4 | 14.4 |
| செக்கோசிலாவியா | 0.0 | 1.0 | 6.6 | 5.1 | - |
| செக் | 0.0 | 0.6 | 4.1 | 2.6 | 3.5 |
| சிலாவாகியா | 0.0 | 1.6 | 11.8 | 10.4 | 12.0 |

ஜனநாயகம் என்பது ஆணாதிக்கச் சுரண்டும் வர்க்க ஜனநாயகம் என்பதையே மேலுள்ள புள்ளிவிபரங்கள் எமக்கு நிறுவுகின்றன. அனைவருக்கும் வேலை என்பதை மறுக்கும் இன்றைய ஏகாதிபத்திய ஜனநாயகம் பாட்டாளி வர்க்கம் மீது ஆணாதிக்கச் சர்வாதிகாரத்தைக் கையாண்டு அவர்களின் வேலையை மறுக்கின்றது. இதையே ஜனநாயகத்தின் வடிவமாகப் பிரகடனம் செய்கின்றனர்.

வேலையின்மை முதலில் பெண்கள் மீதே பாய்கின்றது. இதன் மூலம் பெண்ணை வீட்டுக்குள் திருப்பி அனுப்பிய ஜனநாயகம், பெண்ணை வீட்டுக் கடமைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கின்றது. குழந்தை பராமரிப்பு இல்லங்களை மூடுவது முதல் அனைத்தையும் பெண்ணுக்கு எதிராகக் கையாளுகின்றது. பெண்களைத் தமது வறுமையின் ஊடாக வீதி விபச்சாரத்தை அந்த நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் இந்தச் சுரண்டல் ஜனநாயகம் ஈடுபடுத்துகின்றது.

சிறுமிகள், குழந்தைகள் எல்லாம் விபச்சாரத்துக்கும், ஓரினச் சேர்க்கைக்கும், தத்தெடுப்புக்கும், சிறுவர் உழைப்புக்கும் வீதிச் சிறுவர்களாக சிறுவர்களை மாற்றிய பெருமை எல்லாம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு எதிரான முதலாளித்துவ ஜனநாயகத்தின் சுரண்டும் ஜனநாயகமாக, அதன் பரிமாணமாக இருந்தது. இதைத் தான் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான அனைத்துக் கோட்பாட்டுவாதிகளினதும் அடிப்படையான ஜனநாயக விளக்கமாக இருந்தது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும், வர்க்கப் போராட்டத்தையும் விமர்சிக்கும் எல்லா விதமான மார்க்சிய எதிரிகளும் இதற்காகவே தலைகீழாக நின்றனர், நிற்கின்றனர். இந்தப் பாட்டாளி வர்க்கத்தின் எதிரிகளை இனம் காண்பதன் மூலமே ஆணாதிக்கத்தைப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் ஊடாக ஒழித்துக் கட்டமுடியும் என்பதை யதார்த்தம் மீண்டும் நிர்வாணமாக்குகின்றது.



## 8. சமூக உளவியல் தற்கொலைகள்

ஆப்பிரிக்காவில் வாழும் 60 கோடி மக்களில் சகாராவுக்குத் தெற்கே வாழும் 10 கோடி மக்கள் மனநோய் சார்ந்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர் என்று உலகச் சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நைஜீரியாவைச் சேர்ந்த பேராசிரியர் **மைக்கேல் ஓலட்டவுரா** கூறும் போது, பாரம்பரியக் கூட்டுக்குடும்பச் சிதைவு, சமூக நெருக்கடிகள், சமூகச் சீரழிவுகள் இதன் மூலமாக இருப்பதை அம்பலப்படுத்தியுள்ளார்.

பிரான்சில் நெருக்கடி ஏற்படும் போது உணர்ச்சி வசப்பட்ட சுயஉணர்விழந்த உளவியல் பாதிப்பு எத்துறைகளில் ஏற்படுகின்றது என்பதை ஆராய்வோம். இதை 100 என்ற சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வோம். ஆய்வின் முடிவினை அட்டவணை:18-இல் காணலாம். (7.5.2000)[30]

**அட்டவணை: 18**

| எப்போது | விகிதம் |
|---|---|
| துணையை இழக்கும் போது | 100 |
| விவாகரத்தின் போது | 73 |
| பிரிந்து வாழ்கின்ற போது | 65 |
| மிக நெருங்கியவரை இழக்கின்ற போது | 63 |
| நோய் அல்லது விபத்தின் போது | 53 |
| திருமணத்தின் போது | 50 |
| வேலையை விட்டு நீக்கும் போது | 47 |
| வேலையை விட்டு ஓய்வு எடுக்கும் போது | 45 |
| மருந்தை மாற்றும் போது | 44 |
| தாய்மை அடையும் போது | 40 |
| குழந்தையைப் பெறமுடியாத பாலியல் நெருக்கடியின் போது | 39 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| நிதி நெருக்கடியின் போது | 38 |
| நல்ல நண்பன் இறக்கும் போது | 37 |
| வேலை மாறுகின்ற போது | 36 |
| ஆண் பெண் குடும்பத்தில் கதைக்கும் போது | 31 |
| சொத்தை இழக்கின்ற போது | 30 |

உளவியல் நெருக்கடிகள் யதார்த்த வாழ்க்கைப் பிரச்சனைகள் மீது, சமூகக் கூட்டுத்தன்மை சிதறுகின்ற போது ஏற்படுவதை இது காட்டுகின்றது. உணர்ச்சிவசப்பட்ட சினந்து வாழும் வாழ்க்கை சமூகச் சிதைவில் பண்பாவதைக் காட்டுகின்றது. இயந்திரமான வாழ்க்கையில் ஒவ்வொரு மாற்றமும் நெருக்கடியைத் தோற்றுவிக்கின்றது. தனிமனித வாதங்கள் சமூகக் கூட்டுத் தன்மையை நிராகரிக்கின்ற போது, மாற்றங்கள் அசாத்தியமான நெருக்கடியைத் தருகின்றது. இந்தத் தனிமனித வாழ்க்கையில் இசைவாக்கமடையும் குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளும் தனிமனித ரீதியாக உளவியலில் சிக்கலைக் கொடுக்கின்றது. இவை தற்கொலை, கோபப்படுதல், எரிந்து விழுதல், உணர்ச்சி வசப்படல்... என பல வடிவங்களில் வெளிப்படுகின்றது.

சீனாவில் குடும்பப் பிரச்சனை, பட்டினி காரணமாக நாளொன்றுக்கு 474 பெண்கள் தற்கொலை செய்கின்றனர்.[7] இந்தியாவிலுள்ள கேரள மாநிலத்தில் கி.பி. 1983-இல், 4,380 ஆக இருந்த தற்கொலை கி.பி. 1991-இல் 8,400 ஆக உயர்ந்துள்ளது. இந்த மாநிலத்தில் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு தற்கொலை நடக்கின்றது. (16.3.1992)[1]

ஒரு இலட்சம் ஆண்களுக்குத் தற்கொலை செய்யும் சராசரியை அட்டவணை:19 மூலம் காணலாம். (1989 - 1991)[31]

**அட்டவணை: 19**

| நாடுகள் | மொத்த ஆண்களில் | ஆண்கள் 75 இக்குக் கூட |
|---|---|---|
| கங்கேரி | 58 | 186.2 |
| பிரான்ஸ் | 30 | 114 |
| பெல்ஜியம் | 30 | 98 |
| சுவிஸ் | 34 | 80.7 |
| டென்மார்க் | 30 | 72.8 |
| இங்கிலாந்து | 12 | 21.5 |
| அமெரிக்கா | 20.4 | 41.1 |



15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடையில் உள்ள ஒரு இலட்சம் இளைஞர் - இளைஞிகளின் தற்கொலைகளை அட்டவணை:20-இன் வழியாகப் பார்ப்போம். (1991-1993)[32]

**அட்டவணை: 20**

| நாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| நியூசிலாந்து | 39.9 |
| ஆஸ்திரேலியா | 24.6 |
| அமெரிக்கா | 21.9 |
| சீனா (கிராமம்) | 17.4 |
| சிங்கப்பூர் | 10.2 |
| ஜப்பான் | 10.1 |
| கொங்கொங் | 9.7 |
| பிரான்ஸ் | 9.7 |
| சீனா (நகரம்) | 5.6 |

பிரான்சில் 1,50,000 பேர் வருடம் தற்கொலை செய்ய முயல்கின்றனர். இதில் 12,000 பேர் இறக்கின்றனர். இது கி.பி. 1974-இல் 8,000 மட்டுமேயாகும். தற்கொலைகளில் 80 சதவீதம் பெண் பாதிப்பால் நடக்கின்றது. 70 சதவீதம் தற்கொலை செய்பவர்கள் ஆண்கள் ஆவர். வேலைத்தள நெருக்கடியில் ஏற்படும் 1,500 தற்கொலைகளில், 600 தற்கொலைகள் முதலாளிக்கு எதிராகச் செய்யப்படுகின்றது. (11.12.1996)[17]

சென்னை நகரில் மட்டும் வருடம் 1,000 பேர் தற்கொலை செய்கின்றனர். இதில் ஆண்கள்தான் அதிகம். தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் 15,000 பேர் ஆவர். (1.12.1992)[1]

ஐந்து ஆணுக்கு ஒரு பெண் என்ற ரீதியில் பிரிட்டனில் 4,500 தற்கொலைகள் நடக்கின்றன. 15-24 வயதிற்கிடையிலான இளம் பெண்களின் தற்கொலை என்றுமில்லாத வகையில் அதிகரித்துச் செல்லுகின்றது.[2]

கேரளத்தில் இலட்சம் பேருக்குத் தற்கொலை 25 பேராக உள்ளபோது இந்தியாவில் சராசரி 8 ஆக உள்ளது. தற்கொலையில் 20 முதல் 25 சதவீதம்வரை குடும்பமாகவே தற்கொலையில் ஈடுபடுகின்றனர். தற்கொலையில் ஈடுபடுபவர்களில் 44 சதவீதம் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

ருசியாவில் தற்கொலை அதிகரித்துச் செல்வது எல்லையற்று போயுள்ளது. கி.பி. 1997-ஆம் ஆண்டு மொத்தத் தற்கொலைகள் 54,900



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகும். இது கி.பி.1998 முதல் இரு மாதத்தில் மொத்தத் தற்கொலைகள் 44,700-ஐத் தாண்டி நின்றது. கி.பி. 1990 மார்கழிக்குப் பின் வேலையின்மை அதிகரிக்க தற்கொலைகள் அதிகரித்துச் சென்ற வண்ணம் உள்ளன. (12.2.1999)[24]

மனிதனின் சொந்த வாழ்க்கை மீதான போராட்ட நம்பிக்கைகளை இழக்கின்ற போது மனிதன் தற்கொலையைத் தீர்வாக நாடுகின்றான். மனிதர்கள் தமது தேவையை இந்தச் சமூகத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத போது அவலமாக மடிந்து போவதே மேல் என்று எண்ணுகின்றனர். அத்துடன் மற்றவனின் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் மீறி தனதாக்கும் கனவுகளிலும் தற்கொலை பரிணமிக்கின்றது. இந்தக் கண்ணோட்டம் தனிச்சொத்துரிமையிலான கண்ணோட்டத்தில் பரிணமிக்கின்றது.

வறுமை, பட்டினி, அவமதிப்பு, வேலை பறிப்பு, மற்றவனின் சுதந்திரத்தை மறுத்து தனதாக்கும் கண்ணோட்டம் போன்றன தற்கொலையின் பொதுப்படையாக உள்ளது. உதாரணமாக அமெரிக்காவில் வருடம் 30,000 தற்கொலைகள் நடக்கின்றது. பெண்களைவிட ஆண்கள் நான்கு மடங்கு அதிகமாகத் தற்கொலை செய்வதுடன், வயது முதிர்ந்தவர்கள் அதிகமாகத் தற்கொலையை நாடுகின்றனர்.

இது தனது எதிர்ப்பைக் காட்டுவதற்காகத் தனிமைவாதக் கோட்பாட்டில் எழுபவைதான். தனிமனிதன் சமூகத்தை எதிராக நிறுத்தி, சமூகத்துக்கு எதிராகக் குண்டு வைப்பதும், முதலாளி மற்றவனின் வாழ்வைப் பறித்து தனது சுகபோகத்தை நிறுவுவதும், தனிமனிதன் தற்கொலை செய்வதும் என எல்லாம் ஒரே கோட்பாட்டால் கட்டமைக்கப்பட்டவைதான். கூட்டுச் சமூகச் செயல்பாட்டை மறுக்கும் தனிமனிதவாதத்தின் அடிப்படையாக இது உள்ளது. இதற்குள் இவை குறிப்பானதில் தான் தனக்குள் வேறுபடுகின்றது.

தற்கொலைகளில் பெண்களைவிட ஆண்கள், பெரியோரைவிட இளைஞர்களும், வயதானவர்களும், உரிமையைப் பெற்றவர்கள் இழக்கும் போது பொதுவில், கிராமத்தை விட நகரத்திலும் இந்தத் தற்கொலை பரிணமிக்கின்றது. பெண்கள் சமூகத்தின் அவலத்தை எதிர் நீச்சல் ஊடாக அல்லது அடங்கி போய் வாழ்வதால், ஆணைவிட குறைவாகத் தற்கொலையைச் செய்கின்றனர். இதே நிலையை ஆண்கள் சந்திக்கும் போது தற்கொலையை நாடுவது பெண்ணைவிட அதிகமாக உள்ளது. பெரியவர்கள் வாழ்க்கை அனுபவத்தின் ஊடாகத் தம்மைப் போராடக் கற்றுக் கொள்ளுதல் அல்லது அடங்கி போகின்றனர்.

இளைஞர்கள் அனுபவக்குறைவால் நம்பிக்கை இழந்து தற்கொலையை நாடுகின்றனர். வயதானவர்கள் பராமரிப்பின்றி அது சார்ந்த வாழ்வின் பிடிப்பின்றி தற்கொலையை நாடுவது அதிகரிக்கின்றது. இது வாழ்க்கை மீதான ஆதாரத்தைச் சார்ந்து மக்கள் பிரிவுக்கு இடையில் வேறுபடுகின்றது.

பெண்கள் தமது கடினமான வாழ்க்கையூடாகப் போராடக் கற்றுக் கொண்டு ஆணைவிட இழிந்த நிலைகளைத் தாங்கிக் கொள்கின்றனர். இந்த



நிலையில் ஏற்படும் மாற்றம் பெண்ணையும் தற்கொலைக்கு அழைத்துச் செல்லுகின்றது. ஆண் தனிச்சொத்துரிமையின் ஆணாதிக்கக் கண்ணோட்டத்தின் வடிவில் நேரடியாகப் பிரச்சினைகளைக் காண்பதும், சிந்திப்பதும், தீர்வை நாடி ஓடுவதும் தவிர்க்க முடியாமல் தற்கொலையை நாடுவதைத் தீவிரமாக்குகின்றது.

பெண் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் மறைமுகமாகத் தனிச் சொத்துரிமைக் கண்ணோட்டத்தைக் காண்பதன் மூலம், இதன் மீதான அன்னியப்படல் தோல்விகளைத் தற்கொலைக்கு அழைத்துச் செல்வதில்லை. ஏனெனின் முன்கூட்டியே தனிச்சொத்துரிமை இழந்த பெண் அது சார்ந்து தேவைகள் மறுப்புக்குள்ளாகும் போது, அதை அவள் முன்கூட்டியே இழந்து வாழ்வதால் தற்கொலையை நாடுவதில்லை. ஆனால் ஆண் இதைத் தாங்கிக் கொள்ளமுடியாத தோல்வி மனப்பான்மையில் தற்கொலையை நாடுகின்றான்.

ஆணின் பொருளாதாரப் பலமும், பெண்ணின் பொருளாதாரப் பலவீனமுமே தற்கொலையை ஆணை அதிகம் தூண்டியும் பெண்ணை எதிர்த்து நிற்கவும் கோருகின்றது. வேகமான மாற்றங்கள், கோரிக்கைகள் போன்றவற்றிலும் கூட, பெண்ணின் நிதானமான செயல்பாட்டையும், ஆணின் அவசரமான செயல்பாட்டையும் காணமுடியும். இது போல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இக்கண்ணோட்டம் தெளிவாகப் பலதுறைகளில் வேறுபடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 19. பெண்களின் சுவடுகளில்... என்னும் பெண்களின் வரலாற்றைப் பற்றிய நூல் மீதான விமர்சனம்

"**பெண்களின் சுவடுகளில்...**" என்ற சாந்தி சச்சிதானந்தம் எழுதிய நூல் பல மானிடவியல் ஆய்வாளர்களின் ஆய்வுகளை உள்ளடக்கி உள்ளது. தமிழில் வந்துள்ள பெண்ணியம் சார்ந்த நூல்களில் மிகவும் முக்கியமான பெண்ணின் வரலாறு பற்றிய நூலாகும்.

ஆனால் இந்நூல் வர்க்கக் கண்ணோட்டத்தில் இயற்கை சார்ந்த ஆய்வைக் கையாளாமையாலும், முதலாளித்துவ மானிடவியலாளர்களின் வரலாற்றுத் திரிபுகளைத் தமது வர்க்க அமைப்பை நிலைநாட்டுவதற்கு முன்வைத்ததை, இயற்கை சார்ந்த இயங்கியல் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு இன்றியும் தொகுக்கப்பட்ட போது, தவறுகளையே இந்நூல் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆண் எதிர்ப்பு மிகையாக வெளிப்படுத்தி எழுதப்பட்ட இந்நூல் ஆதாரமின்றியே அறிவியலுக்குப் புறம்பாகவும், பெண்ணைச் சமூகத்துக்கு மேலாகவும் சித்தரிக்கின்றது. அத்துடன் கிடைத்த பல்வேறு சிறப்பான ஆதாரமான தரவுகளைப் பயன்படுத்தும் போது (இத்தரவுகள் அண்மைய மனித வரலாற்றிலும், ஏடறிந்த வரலாற்றுக்கு உட்பட்டது என்பதையும் காணத் தவறி மனித வரலாற்றுக்குப் பொதுமைபடுத்திய ஆய்வு முதலாளித்துவ ஆய்வாகும்.), வரலாற்றின் கடந்தகாலத் தொடர்ச்சியைப் பொதுமைப்படுத்தி, இன்றைய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் இருந்து ஆண் எதிர்ப்புடன் முன்வைக்கின்ற போது, இயற்கை மற்றும் வரலாறு பற்றிய திரிபு இயற்கையாகின்றது.

மார்க்சியத்தை வரலாற்று ஆய்வு மீது பொருத்தாதவரை, மனித வரலாற்றை இயற்கை வரலாறாகக் காண்பதும், மனித வரலாற்றை இன்றைய பூர்சுவா தனிச்சொத்துடைமை வரலாறாகக் காண்பதும் விளக்குவதும் தவிர்க்கமுடியாதது. இயற்கை மற்றும் மனித வரலாற்றை மார்க்சியம் மட்டுமே பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் அணுகுகின்றது. இதைக் கைவிட்டு




மௌனம் சாதித்தபடி, இன்றைய ஆணாதிக்கம் மீது முன்வைக்க முடியாத ஆய்வுகள், அடிப்படையில் வரலாற்றைத் திரிவுபடுத்துகின்றது.

கண்டுபிடிப்புகளின் ஆதாரங்கள் மற்றும் யாரால் இவை நிறுவப்பட்டது போன்ற தரவுகளையும், எந்த நூல்களில் இருந்து இவை பெறப்பட்டன போன்றனவற்றை இந்நூல் முழுமையாகக் கொண்டிருக்கவில்லை என்ற குறைபாடும் இதில் உள்ளது. அத்துடன் **ஏங்கெல்சின் ஆய்வுகளை மறைமுகமாக மறுக்கும் இந்த நூல்,** அது எப்படி என்று மட்டும் நிறுவி விடவில்லை. ஏங்கெல்சின் ஆய்வு பற்றிய மௌனம் இதை மேலும் அம்பலப்படுத்துகின்றது. இந்த நூலை விமர்சிக்கும் போது இன்னுமொரு நூலாகிவிடும் என்பதால், குறிப்பானதும் முக்கியமானதுமான ஒருசில விமர்சனங்களை மட்டும் பார்ப்போம்.

"ஆதிவாசி மத்தியில் தகாதப்புணர்ச்சிக்கு எதிரான தடையானது தன்னினம் உண்ணும் வழக்கத்தின் அபாயங்களைத் தவிர்க்கவே ஏற்படுத்தப்பட்டது"[50] என்ற வாதம் வரலாற்றையே திரித்து தவறாக்குகின்றது.

இரத்த உறவுக் குடும்பமே மனித இனத்தின் முதல் குடும்பமாகும். அதாவது இருந்து வந்த வரைமுறையற்ற, புணர்ச்சியைத் தடுத்து தலைமுறை குடும்பங்கள் தோன்றின. அதாவது பூட்டன் - பூட்டி, தாய் - தந்தை, மகள் - மகன், பேரன்கள் - பேத்திகள் என்ற தலைமுறைகளுக்கிடையிலான தடைதான் குடும்பத்தின் முதல் தோற்றமாகும். இருந்து வந்த தலைமுறை கடந்த புணர்ச்சிக்குப் பதிலாக, சகல பூட்டன் - பூட்டியும் பரஸ்பரம் தமக்கிடையில் கணவன் மனைவியாகவும், சகல தாய் - தந்தையும் பரஸ்பரம் தமக்கிடையில் கணவன் மனைவியாகவும் இது போன்று சகல மகள் - மகன் பரஸ்பரம் தமக்கிடையில் கணவன் - மனைவியாகவும், சகல பேத்தி - பேரன் பரஸ்பரம் தமக்கிடையில் கணவன் - மனைவியாகவும் உறவு கொள்ள வரையறுத்த குடும்பமே முதல் குடும்பமாகும்.

இவை தமக்கிடையில் தன்னினம் உண்ணியாக இருக்கவில்லை. எப்படி இருக்கமுடியும்? தன்னினம் உண்ணி (சொந்தக் குழுவுக்குள்) மனிதச் சமுதாயம் வளர்ச்சிபெற தடையானது அல்லவா. எப்படி வரைமுறையற்ற பாலியல், கூட்டு மனித வளர்ச்சிக்கு நிபந்தனையாக இருந்ததோ, அந்தளவுக்குத் தன்னினம் உண்ணியாக இருப்பது கூட்டுமனிதவளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. இவை ஒன்றுக்கு ஒன்று நேர் எதிரான இயங்கியலில் மட்டுமே உயிர் வாழ்கின்றது.

மனித இனத்தின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் தன்னினம் உண்ணியாக இருப்பது முற்றாக முரணானது. தன்னினம் உண்ணி என்பது சொந்தக் குழுவைத் தாண்டியே இருந்தது. சொந்தக் குழுவில் மிகமோசமான உணவுத் தட்டுப்பாட்டின் போதே, வயது போனவர்களைக் கொன்று உண்ணும் மரபு இருந்துள்ளது. இங்கு உழைப்பின் ஆற்றல் மட்டும் கவனத்தில் கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் **டார்வினின்** ஆய்வுகளின் போது, இவைகளைக் கண்டறிந்ததுடன் உழைக்க கூடிய நாயைக் கொல்வதைவிட, வயது போன




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உழைக்க முடியாத மனிதனை உணவுத் தட்டுப்பாட்டின் போது கொல்லப்பட்டதையும், உண்டதையும் உறுதி செய்கின்றார். ஆரம்பக் காட்டுமிராண்டி சமுதாயத்தில் மிருகங்கள் மனிதனைக் கொல்லும் போது மனித உடலைக் கைப்பற்றி, உணவு இன்றி இருக்கும் போதே இறந்தவரை உண்பது நடந்திருக்கின்றது.

தகாதப்புணர்ச்சி எப்படி தன்னினம் உண்ணியின் ஊக்கியாக இருக்கும்? சொந்தக் குழுவுக்குள்ளான வரைமுறையற்ற புணர்ச்சி தன்னினம் உண்ணியைத் தயார் செய்திடவில்லை. முதலில் மனிதன் தகாதப்புணர்ச்சியைத் தடுக்க முன்னேறி சிந்தித்து மற்ற குழுவுடன் உறவை ஏற்படுத்தினான் எனின், ஏன் தகாதப் புணர்ச்சியைத் தடை செய்யவேண்டும்.

முதலிலேயே முன்னேற்றம் கொண்ட சமூகத்துக்கு இந்த நிபந்தனை அவசியமில்லை, நிபந்தனையில்லை. அத்துடன் இப்படி உருவாக்க உலகம்முழுக்க பல்வேறு குழுக்கள் அக்கம்பக்கமாக இருந்தன என்பது கற்பனையானது. மனிதன் அக்கம்பக்கமாக வாழ்ந்ததில்லை. அத்துடன் தொடர்பு மொழி இதை விடக் கடினமானதாக இருந்தது. குழுமணங்கள் கூட பிந்திய காலத்தில் திருமண விலக்கு பெற்ற நீண்ட கால இடைவெளியில், வளர்ச்சியில் வாழ்ந்து வந்த அடையாளம் கண்ட பிரிவுகளுக்கிடையில்தான் (இதன் தலைமுறை கடந்து பார்ப்பின் ஒரே குழுவில் இருந்து பிரிந்தவையே) திருமணம் முதலில் நிகழும் சாத்தியம் மற்றும் சூழல் இருந்தது.

இன்று கூட இனம், மதம், சாதி, நிறம், பரம்பரை... கடந்த திருமணம் எந்தளவுக்குக் கடினமானது என்பது சொல்லாமலே விளங்கும். காதலில் கூட இவைச் செயல்படும் சூழல் மற்றும் காலத்தில் மட்டும்தான் முற்போக்காக இருப்பதைக் குறிப்பாகக் காண்கின்றோம். குழுவில் இருந்த உட்தடைகள் மூலம் வளர்ச்சி பெற்ற குடும்பம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்ற போதும், அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் தான் திருமணத்தின் விரிந்த வடிவம் வளர்ச்சி பெற்றது. குழுவை அடையாளம் கண்ட பரம்பரை வழியாகத்தான் குழுமணங்கள் நகர்ந்து சென்றது. அத்துடன் அவைகளுக்கிடையில் தன்னினம் உண்ணியாகவும் இருப்பதில்லை. குழுக்களின் தலைமுறை குழுத் தாய் வயிற்றுக் குழந்தைகளில் இருந்து உருவானது என்பது தன்னினம் உண்ணியாக இருப்பதைத் தடுக்கின்றது அல்லவா.

தலைமுறைக் குடும்பம் நிச்சயமாகத் தன்னினம் உண்ணி என்பதால் உருவாகிவிடவில்லை. இதுபோல் சகோதர - சகோதரி இடையிலான புணர்ச்சி விலக்கு, தன்னினம் உண்ணியாக இருந்ததால் விலக்கப்படவில்லை. மாறாகச் சமுதாயத்தின் வளர்ச்சியில் இவை உருவாக்கப்பட்டது. பூட்டன் - பூட்டிக்கும், பேரனுக்கும் - பேத்திக்கும் இடையிலான உறவு எந்தளவுக்குச் சமுதாயத்தால் விலக்கப்பட்டதோ, அதுவே சகோதர - சகோதரிகளுக்கிடையிலான இரண்டாவது புணர்ச்சியையும் விலக்கியது. இது பூனலுவா குடும்பமாகியது. குடும்பம் இந்த வகையில் தான் உருவாகி வளர்ச்சி பெற்றது. இது சமுதாயத்தின் வளர்ச்சியாக இருந்ததே இதன் சிறப்பான மூல அம்சமாகும். இதனால் மட்டுமேதான்



புணர்ச்சியில் விலக்குகள் உருவாக்கப்பட்டன. தன்னினம் உண்ணியாகத் தொடர்வதைத் தடுக்கவே "ஆதிவாசி மத்தியில் தகாதப் புணர்ச்சிக்கு எதிரான தடையானது தன்னினம் உண்ணும் வழக்கத்தின் அபாயங்களைத் தவிர்க்கவே ஏற்படுத்தப்பட்டது"[50] என்பது சரியானது அல்ல.

தன்னினம் உண்ணியாகத் தொடர்வதைத் தடுக்க, திருமணம் மற்றும் பந்தங்கள் நிகழ்ந்ததா எனின், அவை மிகவும் பிற்பட்ட கால நிகழ்ச்சிகளாகவே இருந்தன. ஆனால் எல்லாக் குடும்பங்களின் குழு மணங்களும் இதற்காக மட்டும் நடந்து விடவில்லை. சொந்தக் குழுக்களில் ஏற்படுத்தப்பட்ட திருமணத்தடையானது புதிய குழுக்களை உருவாக்கியது. மேலும் அவைகளுக்கிடையிலான திருமணத்தை, சொந்தக் குழுக்களில் இருந்த திருமண விலக்கே பொதுவாக நிபந்தனையாக்கியது.

பொதுவாகக் குழுவைத் தாண்டிய திருமணங்களை, குழுவில் விலக்கப்பட்ட திருமணத் தடைதான் நிபந்தனையாக்கியது. ஒரு தடை இன்னொரு தடையை உருவாக்குகிறது. பின்பு இரு தடைகள் இணைந்து புதிய இணைப்பு உருவாகின்றது. தன்னினம் உண்ணிக்கு எதிரான தடையாக, திருமணம் என்பது விதிவிலக்கான வளர்ச்சி பெற்ற கட்டத்தில் நிகழ்ந்தவை மாத்திரமே. இவை பல்வேறு வடிவங்களில் ஒன்றாக மட்டுமே இருந்தன. இதைக் காணத் தவறி, இந்த நூலில் முன்வைத்த போது வரலாற்று இயற்கை இயங்கியலை பற்றிய ஆழமான பார்வையின்றி, தகவல்களைத் தகவலாக மட்டும் சொந்த வர்க்க ஆய்வின்றி கையாண்டதைக் காட்டுகின்றது. இது பலவிதமான வரலாற்றுத் தவறுகளை உள்ளடக்கி பெண்ணுக்கு எதிராகவே மாறிவிடுகின்றது.

"எவ்வாறு தாம் உண்பதற்குரிய **உணவினைப்** பெறுகின்றனர் என்பதனையும், எந்த **முறைகளுக்கு** மையக் கூடிக் குழந்தைகள் பெறுகின்றனர் என்பதனையும், சார்ந்தே அச்சமூகத்திற்கே உரித்தான வேறுபட்ட பண்பாடு தோன்றுகின்றது" என்பது அடிப்படையில் பண்பாட்டின் அடிக்கட்டுமான கூறுகளை நேரடியாக ஆனால் மறைமுக வழிகளில் மறுக்கின்றது.

உணவைப் பெறும் **உழைப்பு** எந்த வகையைச் சார்ந்து, எதன் வழியில் உழைப்பு நடைபெறுகின்றது என்பதைப் பொறுத்தே, உணவைப் பெறுவது மட்டுமின்றி பாலியல் உறவையும் தீர்மானிக்கின்றது. இந்த **உழைப்புதான் பண்பாட்டைத் திட்டவட்டமாக உருவாக்குகின்றது.** உழைப்பு வடிவம் மாறுகின்ற போதும், உழைப்பின் மூலம் மாறுகின்ற போதும் பண்பாடும் மாறுகின்றது. குழந்தையைப் பெறும் வடிவம், உணவைப் பெறும் வடிவம் இந்த உழைப்பின் தன்மைக்குள் மட்டுமே மாற்றம் காண்கின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த இயற்கை மற்றும் வரலாற்று இயங்கியல் மறுப்பை ஒன்றைப் பார்ப்போம்.

**"குரங்கிற்கும் மனிதனுக்குமுள்ள உயிரியல் ரீதியான முக்கிய வேறுபாடு மாமிசம் உண்ணும் வழக்கமாகும்**. மனிதக் குரங்குகளாக இருக்கும் போது தாவரஉண்ணிகளாகத் திரிந்தவர்கள் மனிதர்களாக மாறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சியின் ஏதோவொரு இடை நிலைப்படியில் மாமிச உண்ணிகளாக - நரமாமிசம் சாப்பிடுபவர்களாக இருந்திருக்கின்றனர்...."[50]

குரங்கிற்கும், மனிதனுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன? இங்குதான் இயற்கை சார்ந்த மார்க்சியவாதிகளுக்கும், அதை மறுக்கின்ற முதலாளித்துவ ஆய்வாளர்களுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு ஏற்படுகின்றது. இதில் இருந்து உலகைப் புரிந்து கொள்வதில் வேறுபாடுகள் அகன்று செல்கின்றன. மாமிசம் உண்பது தான் உயிரியல் ரீதியில் முக்கிய வேறுபாடு என்றால், இந்த ஆய்வின் எல்லை பல்வேறு மனித விரோத வக்கிரங்களை வெளிப்படுத்துகின்ற இன்றைய ஆய்வுகளில் குரங்கு இனங்கள் சில மாமிசம் உண்பதை எப்படி இதில் இருந்து விளக்கமுடியும்? **மனிதனுக்கும், மனிதக்குரங்கும் உள்ள அடிப்படையான உயிரியல் வேறுபாடு, இயற்கை மீதான உழைப்பு** என்பதை மறுப்பதன் நோக்கம், திட்டவட்டமாக மனிதவிரோதத் தன்மை கொண்டவை. **உழைப்பு இல்லை என்றால் மனிதன் இல்லை.** இதுதான் குரங்கில் இருந்து மனிதனைப் பிரித்தது. அந்தளவுக்கு இயற்கை மீது உழைப்பைப் பயன்படுத்தி வாழத் தொடங்கிய போதே, குரங்கில் இருந்து திட்டவட்டமாக மனிதக் குரங்கு பிரிந்து சென்றது.

இதே விசயத்தில் அடுத்து மற்றொரு முக்கியமான திரிபினைப் பார்ப்போம். குரங்கில் இருந்து மனிதன் நேரடியாகத் தோன்றினான் என்ற கருத்தானது குரங்கில் இருந்து மனிதன் என்ற மாற்றத்துக்கு இடையில் மனிதக் குரங்கு என்ற ஓர் இடைநிலை உயிர் இனம் நீண்ட காலம் உழைப்பின் வளர்ச்சியுடன் மனிதனாகப் பரிணாமித்தான் என்பதை மறைமுகமாக மறுக்கிறது. இது ஏன்? இந்த இடைநிலை உழைப்பின் வளர்ச்சியை மறுப்பதன் மூலம் அல்லது மறைமுகமாகக் காணத்தவறுவதன் மூலம் குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்ற பரிணாமத் தத்துவத்தை அடிப்படையில் வீரியம் இழக்கச் செய்து, கருத்துமுதல்வாதக் கோட்பாட்டுக்கு மாற்றிச் செல்வதாகும்.

மரத்தில் இருந்த குரங்கு, குரங்கு மனிதனாக நிலத்தில் வாழ இறங்கிய பரிணாமத்தில், குரங்குக்கே இருக்க கூடிய கைகளைக் கொண்டு நடமாடும் (நடக்கும்) முறை மாறி, கால்களைக் கொண்டு நடப்பதற்கு உபயோகிக்கவும், நிமிர்ந்து நிற்கவும் தொடங்கினான். மரத்தில் வாழ்ந்த போது தாவரம் சார்ந்த உண்ணியாக இருந்தான். மரத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை போக்கவே நிலத்தை வந்தடைகின்றான். இங்கு நிலத்தைக் கிண்டி (தோண்டி) கிழங்குகளைப் பெறுவது போன்ற கடமைகளில் உழைப்பைக் கையாளத் தொடங்கும் போது, உழைப்புக் கருவியையும் உழைப்பையும் இடம்மாற்ற வேண்டிய வரலாற்று கடமையில் நிமிர்ந்து நிற்பது என்பது நீண்ட பரிணாமத்தில் ஏற்பட்டது.

நிலத்துக்கு வந்த போது உணவுச் சங்கிலியில் எதிரியைத் தவிர்க்கமுடியாமல் நேருக்குநேர் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மற்ற விலங்குகள் நிலத்தில் வைத்து மனிதக் குரங்கை இலகுவாக அழிக்க கூடியதாக



இருந்தது. சொந்தத் தற்காப்பை இயற்கையாக மரத்தில் வாழ்ந்ததன் மூலம் பெற்ற குரங்கு, பின்னால் மனிதக் குரங்காகி, நிலத்தில் சொந்தத் தற்காப்பைச் சாதிக்க உழைப்புக் கருவியையே எதிரிக்கு (விலங்குக்கு) எதிராகக் கையாள தொடங்குகின்றான்.

இந்தப் போராட்டத்தில் அழிவுகளும் அதன் மீதான வெற்றிகளும் உயிரியல் ரீதியாக மேலும் மாற்றத்தைக் கோரியது. பல்வேறு அழிவுகளில் இருந்து கிடைக்கின்ற வெற்றிகளின் போது, வென்று கொன்ற உயிரை உண்பதன் மூலம் தனது வெற்றியை வெளிப்படுத்தினான் அல்லது பழி தீர்த்துக் கொண்டான். மற்ற மிருகங்கள் தான் கொல்லுகின்ற மிருகங்களை உண்பதைக் கண்ணுற்ற மனிதக் குரங்குக்கும் (மனிதனுக்கும்) தான் வென்ற மிருகங்களை உண்ணும் பழக்கத்தை இது ஊக்குவித்தது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, தனது சொந்த அணியில் ஏற்பட்ட இழப்பைக் கைப்பற்றுவதன் மூலம் அதையும் உணவாக்கினான். இங்கு தன்னினம் உண்ணி என்பது சொந்தக் குழுவில் உள்ளவர்களைக் கொன்று தின்பதல்ல. அப்படி தின்பது என்பது மனித இருப்புக்கே தடையான பக்கமாகும். பாலியலில் வரைமுறையற்ற புணர்ச்சி மனித இருப்புக்கு எப்படி அடிப்படையானதோ, அந்தளவுக்குத் தன்னின உண்ணியாக இல்லாமல் இருப்பது அடிப்படையாகும்.

மூலதனச் சுரண்டல்தான் இதற்கு நேர் எதிராக உள்ளதை மறுக்கவே, தன்னினம் உண்ணி என்பதை மனிதக் குரங்கு மற்றும் மனிதனின் இயல்பு என புனைகின்றது. அதேநேரம் மற்ற குழுக்கள் (மனிதன் மற்றும் மிருகங்கள்) உடன் ஏற்பட்ட உணவுப் போட்டியில் கொல்லப்பட்ட மனிதனையும், மற்ற குழுக்களையும் வேறு ஒரு போட்டி மிருகமாகக் கருதி கொன்ற நிகழ்ச்சியிலேயே, மனிதன் தன்னினம் உண்ணியாக இருந்தான். இந்த இடத்தில் **மிருகத்தின் தன்மையில்தான் தன்னினம் உண்ணியாகச் செயல்பட்டான்.** இங்கு தன்னினம் உண்ணி என்ற அர்த்தம், இன்றைய நாகரிக நிலையில் மட்டும் புரிந்து கொள்ளக் கூடியனவே ஒழிய, அன்றைய வரலாற்றில் அன்றைய மனித நிலையில் அல்ல. அன்று பல்வேறு குழுக்களை, மற்ற மனிதப் பிரிவுகளை வேறு ஒரு விலங்காகவே கருதினர். இதற்குப் பலவிதமான ஆதாரங்களை வரலாறும் மற்றும் இந்த நூலிலும் பல இடங்களிலும் காணப்படுகின்றது.

நாகரிக மனிதனுக்குத் தன்னினம் உண்ணி என்பது, இன்றைய அறிவியலுக்கு உட்பட்டே புரிந்து கொள்கிறான். ஆனால் உண்மையில் அன்று தன் குழு தவிர்ந்த மற்ற மனிதப் பிரிவுகளை வேறு ஒரு மிருகமாகவே கருதினான். ஏன் இன்று அடிமைப்படுத்திய மக்கள் இனங்களை, சுரண்டும் வர்க்கமும், சுரண்டும் சிந்தனைகளும், சுரண்டும் கோட்பாடுகளும் மிருகமாகக் கருதி பட்டினி போட்டு கொன்று குவிக்கும் போது, எப்படியான உணர்வு காணப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால், அன்றைய மனிதனைக் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறைச்சியை ஆண் பெண் வேறுபாடின்றியே (இதில் ஆண் - பெண்ணுக்கு இடையில் முந்திய - பிந்திய என்ற வேறுபாடு என்பது கற்பனை.) உண்ணத் தொடங்கிய போது தீவிரமான மாற்றத்தை உடல் சந்தித்தது. கிடைத்த இறைச்சி மேலதிகமான ஊட்டச்சத்து வழங்கியதுடன், உழைப்புக் கருவிகளை இலகுவாகக் கையாள்வதை இலகுவாக்கியது. குரங்கில் இருந்து மனிதக் குரங்கு பின்னால் மனிதனாக மாறிய காலத்தில் ஏற்பட்ட தீவிரமான உடல் மாற்றத்தைப் புதிதாகக் கிடைத்த இறைச்சியே உடல் உழைப்பின் மீது சாதித்தது. அந்தவகையில் மாமிசம் உடல் பரிணாமத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியதே ஒழிய, இது உயிரியல் ரீதியான வேறுபாட்டை வழங்கி விடவில்லை. உயிரியல் வேறுபாட்டை வழங்கியது உழைப்பு மட்டும்தான். இந்த உழைப்புத்தான் இறைச்சியைப் பெறுவதற்கான நெம்புகோலாக வேறு இருந்தது.

காட்டுமிராண்டி சமுதாயத்தில் வாழ்ந்த மனிதன் மற்ற குழுக்களைப் பார்த்து அவை தம்மையொத்த அல்லது வேறுபட்ட புதிய மிருகமாகவே கருதினான். இது அவனுக்கு முன், தான் விலங்குகளில் ஒரு விலங்குதான் என்ற படிமானம் இருந்தது. உழைப்பைக் கையாளக் கூடிய விலங்கில் இருந்த வேறுபட்ட மனித இனம் என்பதைப் புரிந்ததில்லை. இன்று நாகரிகமான கல்வி பெற்ற மனிதனின் சிந்தனையில் இருந்து, இதை விளங்கிக் கொள்ள முடியாது.

இயற்கை பற்றிய அறிவையும், அதன் பின்நோக்கிய ஆய்விலும் புரிதலிலும் தான், இதன் சரியான ஆய்வைக் காணமுடியும். இருந்தபோதும் இன்று வெளிவரும் பல்வேறு சினிமாக்கள், புத்தகங்களில் வேற்று கிரகவாசி தொடர்பான கற்பனை படிமானங்களில், அவை மக்களைக் கொல்லும் பலவிதமான தோற்றங்களைக் கொண்ட விலங்குகளாக உருவாக்கிக் காட்டும் போது, மனித அறிவு காட்டுமிராண்டித்தனத்தின் வடிவில் இருந்ததல்ல, சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு, சூறையாடும் விலங்குக் கண்ணோட்டத்தில் இருந்தே வெளிவருகின்றது. அன்று மற்ற மனிதனை மிருகமாகக் கருதி கொன்று உண்ட போது, அவனின் அறியாமை மற்றும் விலங்கான தன்மை தான் ஊக்கியாக இருந்தது. ஆனால் இன்று மனிதனைச் சூறையாடி பட்டினியில் கொன்று நாகரிகமாக உண்டு வாழும் மனித நடத்தையை என்ன என்பது? நிறம், சாதி, இனம், பால்.. போன்ற பல்வேறு காரணங்களால் மனிதனை வேறுபடுத்தி சூறையாடி அடக்கி ஆளும் போது, இந்த மிருகத்தன்மையை மனிதத் தன்மையாகக் காட்டுவது கேவலமானது அல்லவா?

அடுத்து "...வரைமுறை எதுவுமில்லாமல் யாருடனும் பால்உறவு வைத்துக் கொள்ளும் முறை எந்த நிலைத்த மனிதர் கூட்டத்திலும் காணப்பட்டது கிடையாது. ஆகையினால் இந்தக் கட்டுப்பாடுகள் உயிரியல் ரீதியான அடிப்படையில் அல்லாது பண்பாடு தந்த மனப்பாங்கிலேயே அமைந்திருந்தது என்பது தெளிவாகின்றது."[50]

- என்ற கூற்றில் நிலைத்த மனிதர் கூட்டத்தில் வரைமுறையற்ற புணர்ச்சி நடக்கவில்லை என்பதற்கு என்ன அடிப்படையை ஆதாரமாகக் கொண்டுள்ளது?



மனிதக் கூட்டம் நிலையான ஒரு பிரதேசத்தைச் சார்ந்து வாழ்வது என்பது, அங்கு உணவு கிடைக்கும் எல்லைதான் தீர்மானித்தது. உணவு கிடைத்த நிலைகளில் தமது தற்காப்பின் பாதுகாப்பைச் சார்ந்து நிலைத்த பிரதேசத்தைத் தெரிவு செய்து கொண்டான். இங்கு தற்காப்பு மற்றும் உழைப்பு அத்தியாவசியமான, அடிப்படையான நிபந்தனையாக இருந்தது. இந்த நிலையில் இதைச் சாதிக்க வரைமுறையற்ற புணர்ச்சி நிபந்தனையாக இருந்தது. வரைமுறையற்ற புணர்ச்சி தகர்ந்திருப்பின், அங்கு தற்காப்பும், உணவு பெறமுடியாத நிலையே ஏற்பட்டிருக்கும். எனவே நிலைத்த வாழ்க்கை நீடித்த நீண்ட காலத்தில் வரைமுறையற்ற புணர்ச்சியே அடிப்படையானதாகவும் நிபந்தனையாகவும் இருந்தது.

அலைந்து திரிந்த குழுவிற்கு மட்டும் உரிய சிறப்பான புணர்ச்சி வடிவமல்ல வரைமுறையற்ற புணர்ச்சி. வரைமுறையற்ற புணர்ச்சி என்பது மனித உயிர் வாழ்தலின் போராடும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு நீடித்தது. உணவைப் பெறவும், பாதுகாப்பைப் பெறவும் தேவையான உழைப்பைப் பெறவும், வரைமுறையற்ற புணர்ச்சியே மனிதனுக்குரிய வடிவமாக இருந்தது. இது அலைந்து திரிந்த முதல் நிலைத்த வாழ்க்கை என்ற வரை நீண்ட காலக்கட்டம் நீடித்தது. இங்கு மேலதிக உணவின் பூர்த்தி மற்றும் பாதுகாப்பு பலப்பட்ட போது புணர்ச்சியில் சில விலக்குகள் அனுமதிக்கப்ட்டன.

இது உயிரியல் ரீதியில் அல்ல, பண்பாட்டு ரீதியில் என்கின்றபோது அடுத்த திரிபு ஏற்படுகின்றது. உயிரியல் ரீதியில் அல்லாது பண்பாட்டு ரீதியில் என்கின்றபோது, ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்கும்போது, இயங்கியலின் வளர்ச்சி விதியை மறுக்கின்றது. உயிரியல் காரணங்கள் நிலையானவையாகக் கருதும் இயங்கியல் மறுப்பு இதன் அடிப்படையாகின்றது. குரங்கின் உயிரியல் தன்மையும் சரி, குரங்குக்கு முந்திய உயிரியல் தன்மையும் சரி, ஒரு கால விலங்கின் உயிரியல் தன்மையும் சரி, மனிதக் குரங்கின் உயிரியல் தன்மையும் சரி, மனிதனின் உயிரியல் தன்மையும் சரி, நாகரிக மனிதனின் உயிரியல் தன்மையும் சரி அனைத்துமே ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்ட தொடர்ச்சியைக் கொண்டு வேறுபட்டன. இது இயற்கை, சூழல், உழைப்பு என்று பல்வேறு காரணங்களால் ஏற்பட்டது. நிலையான உயிரியல் தன்மை என்று எதுவும், என்றென்றைக்கும் கிடையாது. மனிதனின் வளர்ச்சியில் உழைப்புக்கு ஏற்ப தீவிரமான உயிரியல் தன்மை மாற்றம் காண்கின்றது. இதை விலக்கிய சுதந்திரமான உயிரியல் தன்மை என்பது கற்பனையானது.

அடுத்து பண்பாடு என்பது உழைப்பின் விளைவே ஒழிய சுயேட்சையான உயிரியலில் இருந்து உருவான கற்பனையல்ல. குடும்பத்தின் தோற்றம் என்பது உழைப்பினுடைய சாதனையின் விளைவாகும். இது வளர்ச்சியின் படிக்கற்களாகும். இது படிப்படியாகக் காட்டுமிராண்டித்தனத்தை ஒழித்துக் கட்டியது. ஆனால் கூட்டு மனித இயக்கத்தை மறுத்து தனிச் சொத்துரிமையை ஏற்படுத்திய போது, காட்டுமிராண்டித்தனம் வேறுவழியில் புகுந்தது. அப்போது ஆணாதிக்கம் அதன் விளைவாகியது. பண்பாட்டு ரீதியில் ஏற்பட்ட மாற்றமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புணர்ச்சி மீதான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பது அடிப்படையான திரிபாகின்றது. உழைப்பின் மாற்றங்கள்தான் குடும்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. உழைப்பு என்ற அடிக்கட்டுமானம் மீது செயற்படும் பண்பாடு இதை மாற்றிவிடவில்லை. பண்பாடு உழைப்பின் விளைவுகளை ஒட்டி வெளிப்படுவதுதானே ஒழிய சுயேட்சையாக அல்ல. மாற்றம் உழைப்பின் வடிவில்தான் ஏற்படுகின்றது.

''நவீன உலகில், எந்தவித சமூகக்கட்டுப்பாடுகளையும் விட தகாதப்புணர்ச்சிக்கெதிரான கட்டுப்பாடுகள்தான் அதிதீவிரமானவை எனலாம். இவை எந்தக் குறிப்பிட்ட சித்தாந்தத்தினையும் சார்ந்து நிற்காது உலகளாவிய முறையில் தனித்துவமாக நிற்பவை''[50] என்கின்ற வாதம் தவறானது. தகாதப்புணர்ச்சிக்கு எதிரான விளக்கங்கள் பல எல்லைக்கு உட்பட்டவை. சொந்தத் தாயுடன் மகன் புணர்வது அல்லது மகனுடன் தாய் புணர்வது அல்லது பிறர் மனைவியைப் புணர்வது அல்லது பிறர் கணவனைப் புணர்வது போன்ற நடத்தைகளைச் சமூகம் மறுக்கின்ற போது, அதற்குப் பின்னால் குறித்த சித்தாந்தத்தின் ஆதிக்கம் உண்டு. இது போல் மனிதனை மனிதன் உண்பதற்கு எதிரான கண்ணோட்டத்திலும் சித்தாந்தம் உண்டு. இது சுயேட்சையான, கற்பனையான இயற்கையல்ல.

ஒவ்வொரு விலகலும் விலக்கப்பட்டு மொத்தச் சமூகத்தின் இயல்பான தன்மையாக மாறும் போது, அது சுயேட்சையான கட்டுப்பாடற்ற வடிவில் இருப்பதாகத் தோன்றும். கம்யூனிசச் சமூகத்தில் சுரண்டல் பற்றிய கருத்துகளும் இப்படித்தான் இருக்கும். இது அதிதீவிரமான சமூகக் கட்டுப்பாடாகக் காலம் கடந்து இருப்பதில்லை. மனிதனின் இயல்பான இயக்கமாகவே, வளர்ச்சியாகவே இருக்கின்றது. மக்கள் பரஸ்பரம் புரிந்து, மனித வளர்ச்சிக்கு உன்னதமாகக் கருதும் விடயங்கள், மனிதர்களுக்கிடையிலான முரண்பாட்டை இழந்து போகச் செய்கின்றது. ஆனால் இன்றைய யதார்த்தத்தில் தனது சொந்தக் காட்டுமிராண்டித்தனத்தால் திரிந்த வடிவில், சித்தாந்தத்தின் பிறழ்சியில் நீடிப்பது காணமுடிகின்றது. அதுதான் அவை எந்தச் சித்தாந்தத்தில் இருந்து அன்னியப்பட்டது என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.

வரலாற்றின் காலத்தைக் கடந்து அதை இன்றைய காலத்தின் எல்லையில் பொருத்தி ஆய்வு செய்யும் போது, கடந்த காலச் சித்தாந்தத்தின் செல்வாக்கை மறுப்பது தவிர்க்க முடியாத விளைவாகின்றது. அத்துடன் சமூகத்துக்குச் சமூகம் தகாதப் புணர்ச்சி வரையறை மாறி மாறிக் காணப்படுகின்றது. சகோதரியின் மகளைச் சகோதரியின் தம்பி அல்லது தம்பி மகன் திருமணம் செய்யும் முறை சில சமுதாயத்தில் தடை செய்யப்பட்டவையாக இருக்கின்றது. இது சமுதாயம் கடந்து வந்த பல்வேறு கூறுகளுடன் தொடர்புடைய வளர்ச்சியில் விலக்கிய வேறுபாடுகளில் இருந்த ஏற்படுகின்றது.

"...தகாதப்புணர்ச்சி வருங்காலச் சந்ததியினருக்குத் தீங்கு விளைவிக்கும் என்னும் கோட்பாடு ஆய்வுக்கூடத்தில் தகர்க்கப்பட்டுவிட்டது. ...இங்கிலாந்தில்



அதி சிறந்த பந்தயக்குதிரைகள் உலகிலேயே ஆகக் கூடியளவு உட்புணர்ச்சியினால் ஒரு விலங்கிலுள்ள நல்ல குணாம்சங்கள் பன்மடங்காக வாய்ப்புகள் அதிகரிக்கின்றன என டார்வின் கூறுகின்றார்'' என்ற கருத்தில் டார்வின் கூற்று பொதுப்படையாகத் திரிக்கப்படுகின்றது. நல்ல குணாம்சம் மட்டுமல்ல, தீய குணாம்சமும் பன்மடங்கு வளர்கின்றது. ஆய்வுக் கூடத்தில் பயன்படுத்தியபோது நிறுவியபோது, மனித வரலாற்றில் தோற்கடிக்கப்பட்டதையே கருத்து காட்டுகின்றது. ஆரியஇனம் என்ற இனத்துக்குள்ளான உட்புணர்ச்சி இனப் பாசிசம், வரலாற்றில் தோற்கடிக்கப்பட்டது. அதுபோல் பற்பல. வெற்றி தோல்விகளைச் சமூக இயக்கத்திலும் சரி, வளர்ச்சி விதியிலும் சரி பொதுமைப்படுத்தமுடியாது.

ஒலிம்பிக் போட்டியில் முன்னணி வீரர்கள் உட்புணர்ச்சி முறையில் தோன்றியவர்களா? இல்லை அல்லவா. உட்புணர்ச்சி முறையை மிக குறுகிய எல்லைக்குள் பேணிய சமூகப் பிரிவுகள் அல்லவா நிறைய வெற்றிகளைச் சந்தித்திருக்க வேண்டும். சில இனங்கள் கூட அழிந்து போன வரலாற்றையும் காண்கின்றோம். அத்துடன் பொதுவான சராசரி ஆணின் திறமையைவிட அதிக திறமை கொண்ட ஒலிம்பிக் பெண் வீராங்கனைகளின் திறமையை, பொதுவான பெண்களின் திறமையோடு பொருத்துவது எப்படி அபத்தமாகுமோ, அதுபோல்தான் உட்புணர்ச்சியின் விளைவுகளும்...

உட்புணர்ச்சி என்பது குறித்த ஒரு பிரிவில் உயர்ந்த வளர்ச்சியை ஈடுசெய்கின்றது. தனிச்சொத்துரிமை வடிவில் உலகமயமாதல் சொத்துக் குவிப்பு எதை அடிப்படையாகக் கொள்கின்றதோ, அதை ஒத்த உட்புணர்ச்சிக் கோட்பாடு நவீன உயிரியல் திரிபாகும். டார்வின் உட்புணர்ச்சி வடிவத்தின் மீதான பூர்சுவா கருத்தியலின் பிலிஸ்டைன் ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கவே அந்த உதாரணத்தைக் கையாண்டார். மனிதன் உட்புணர்ச்சியைப் படிமுறையாக நீக்கிய போது, அவை அநாகரிகமாக இருந்ததைக் கண்டதன் மூலம் நீக்கினான். இவையல்லாது, இன்று குரங்கில் காணப்படும் ஆணின் பொறாமை என்ற கண்ணோட்டத்தில் இருந்து குழுவின் சிதைவைத் தடுக்கும் அடிப்படையில் அல்ல. பொறாமை என்பது பிந்திய காலத் தனிச்சொத்துரிமை உணர்ச்சி மட்டுமேயாகும்.

இந்த நூலில் குறிப்பிட்டது போல், பெண்ணின் புணர்ச்சி வேட்கை ஏற்பட்டவுடன், ஆணின் தொடர்ச்சியான வருடம் முழுமைக்குமான புணர்ச்சி வேட்கையின் இச்சையில் இருந்து எழும், ஆண்களின் வேட்கை மோதலைத் தவிர்க்கவே உட்புணர்ச்சி தடுக்கப்பட்டது என்ற வாதம் தவறானது. இந்த வாதம் ஆணின் ஆணாதிக்க மேலாண்மையை மறைமுகமாகப் பாதுகாக்கின்றது. இயற்கையின் பரிணாமத் தேர்வு புணர்ச்சியில் சமநிலையையே எப்போதும் பேணியது. வளர்ச்சியின் இயங்கியல் விதி ஆணையும், பெண்ணையும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்க முடியாத வகையில் பிரதிபலித்தது. பெண்ணின் புணர்ச்சி வேட்கையும் சரி, ஆணின் புணர்ச்சி வேட்கையும் சரி ஒரு சீராகவே இருந்ததே ஒழிய, ஆணில் அதிகரித்த தன்மையை ஏற்படுத்தவில்லை. மனிதன் இன்றைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையை எடுத்து, ஆணின் ஆணாதிக்கம் சார்பாக நியாயப்படுத்த, இன்றைய குரங்கைப் பொதுமைப்படுத்தும் போது, இயற்கையின் இயங்கியலை மறுக்கின்றது.

பொறாமை என்ற உணர்ச்சி உயர்ந்த இன மந்தையிடம் இருப்பதில்லை. குரங்கிடம் தொற்றிக் கொண்டது என்பது அதுவும் இயங்கியல் தன்மையாகின்றது. இதனால் ஆணைவிட அதிக பெண் குரங்குகளை இயற்கை உருவாக்குகின்றது. (அண்மைய உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். எத்தியோப்பிய வறுமை உலகத்தைப் பிடித்தாட்டுமளவுக்குக் கோரமானது. ஏகாதிபத்தியச் சூறையாடல் அந்த மக்களைச் சிதைத்துள்ளது. இன்று சராசரி ஆயுள் 49 வயதாக இருக்க, 1000 பேருக்கான மரணவிகிதம் 109 பேராக மாறியுள்ளதுடன், உலகத்தில் முதலிடம் வகிக்கின்றது. மரணவிகிதம் அதிகரிக்க பிறப்பு விகிதம் அதிகரித்துச் செல்லுகின்றது. ஜனத்தொகையில் 46 சதவிகிதம் 14 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க, ஜனத்தொகை கி.பி. 1984-1985-யைப் போல் இரண்டு மடங்காகியுள்ளது. வறுமை இனவிருத்தியை அதிகரிக்க வைக்கின்றது. வரைமுறையற்ற புணர்ச்சி மனித இருப்பில், அதன் பாதுகாப்பில் அடிப்படையான உள்ளடக்கமாக இருந்ததை இது காட்டுகின்றது.) மனிதன் அதிக பெண்களை அனுபவிக்க வேண்டும் என்ற உணர்வு, தனிச்சொத்துரிமையின் குணாம்சமே ஒழிய இயற்கையான தன்மை கிடையாது. பெண்ணின் தலைமையில் சமுதாயம் இருந்த போது அங்கு ஆண் அதிக பெண்களை அனுபவிக்கும் சண்டை என்பது கற்பனையானது. இங்கு பெண் தலைமை தாங்கினாள் என்பதால், ஆண் பாலியலில் அதிகாரம் செலுத்தும் வடிவமே கற்பனையாகின்றது. இதை மறுத்து இந்த நூல் விளக்கும் போது, பெண்ணின் இயற்கையே பெண்ணின் அடிமைத்தனத்தை அனுசரித்ததாக விளக்கம் தருகின்றது. பெண் - ஆண் இருவரும் தமது புணர்ச்சியைச் சுயமாகத் தெரிந்தெடுத்தே ஈடுபட்டனர். காட்டுமிராண்டித்தனமான மனிதனில் இது அச்சமுதாயத்துக்கே உரிய வகையில் நீடித்தது. பரஸ்பர தெரிவு இன்றி, அங்கீகாரம் இன்றி ஆண் - பெண் புணர்ச்சி மனிதனில் இருந்தது என்ற விளக்கம், பெண்ணின் அடிமைத்தனத்தைத் தனியுடைமைச் சமுதாயத்துக்கு முந்தியதாகக் காட்டி, அதை இயற்கையின் கொடையாக்குவதன் மூலம், ஆணாதிக்கத்தைத் தொன்றுதொட்ட நடத்தையாக நிறுவும் முயற்சியாகும். இது ஆணாதிக்கத்தை வரலாற்றுத் திரிபுஊடாக நிறுவும் மீள் முயற்சியாகும்.

பெண்கள் மீது ஆணின் புணர்ச்சி ஆதிக்கம் என்பது, சில மிருக இனத்தின் தன்மையே ஒழிய மனித இனத்தின் தன்மையல்ல. இதில் இருந்தே திட்டவட்டமாக மனிதன் பிரிந்து வருகின்றான். அத்துடன் மனித இனத்தில் இது நிகழ்வது என்பது மனித வளர்ச்சிக்கு எதிரானது. கடந்த 3000 வருட வரலாறுகளில்தான் பெண்கள் மீதான ஆணின் பாலியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர் என்பதை மறுத்து, இதை ஆதியில் மிருகத் தொடர்ச்சியாகக் காட்டுவது என்பது ஆணாதிக்கத்தைச் சுரண்டல் அமைப்பு மீது தொடர்ச்சியாகப் பாதுகாப்பதுதான்.



ஆணினதும் பெண்ணினதும் தேர்வுக்கு உட்பட்ட உட்புணர்ச்சி தான் பரஸ்பரம் மனிதக் குரங்கில் இருந்து மனிதனாக மாறிய காலத்தில் இருந்தது. பெண்ணின் விருப்பம் இன்றி ஆண் உடல் உறவு கொள்ள முடியாத நிலை நீடித்த போது, ஆண்கள் சண்டையிடத் தேவையற்றதாகவே இருந்தது. ஆண் போட்டி மற்றும் சண்டையூடாகப் பெண்ணை அடையும் உட்புணர்ச்சியில் இவை தடுக்கப்பட்டது எனின், ஆணாதிக்கச் சமூகமே மனித வரலாற்றின் இயற்கை மூலம் என்ற கோட்பாட்டை, இந்த இயற்கை வரலாற்றுத் திரிபு நிறுவுகின்றது.

இந்த இயற்கை வரலாற்றில் பெண்ணின் உடலுறவு அனுமதி மட்டும் தான் (இங்கு பெண்ணின் தெரிவு மறுக்கப்படுகின்றது.) பெண்ணின் உரிமையாக இருந்தது என்பது ஆணாதிக்கக் கொச்சைத்தனமாகும். பெண் சொந்தத்தில் ஆணைத் தெரிந்தெடுக்கும், பெண்ணின் உரிமை கொண்ட சமூகத்தைப் பெண் தலைமை தாங்கிய வரலாற்றை இது மறுக்கின்றது. இயற்கையாகவே ஆண் மேலாண்மையைப் பெண்ணின் அனுமதியுடன் பெண்ணின் தெரிவு இன்றி உட்புணர்ச்சியில் அனுபவித்தது என்றால், இது ஆணாதிக்கத்தின் மீள அமைப்பதற்கான மோசடி பக்கமாகும். உலகமயமாதல் பெண்ணியம் நடத்தையுடன் கூடிய ஒழுக்கத்தை இதையே அமுலுக்குக் கொண்டு வருகின்றது. பாட்டாளி வர்க்கம் இதை மறுத்துதான் பெண்ணின் தெரிவையும் முன்நிறுத்துகின்றது. இந்தத் தெரிவு வர்க்கச் சமுதாயத்தில் இருக்கின்றது என்றால், அது ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தில் கொண்டவையாகும்.

அடுத்து இந்தத் திரிபின் அடுத்த கட்ட விளக்கத்தைப் பார்ப்போம். “ஒரே சமயத்தில் அதிகஅளவு பெண்களையடைவதே ஒவ்வொரு ஆணினதும் குறிக்கோள். இந்தச் சண்டைகளில் பெருத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.... இதன் விளைவாகவே குழூஉக்குறி அமைப்பின்கீழ் ஒரு குழுவைச் சார்ந்தவர்களுக்கு உட்புணர்ச்சி தடை செய்யப்பட்டதென நாம் அனுமானிக்கலாம்.”[50]

இது முரண்பாட்டுடன் முன்பு சொன்ன தன்னின உண்ணியாகத் தொடர்வதைத் தடுக்க தடையாக உருவானது என்பதை மறுத்தபடி, இரத்த உறவுக் குடும்பம், பூனலூவா குடும்பம்... என ஆரம்பக் குடும்ப வடிவங்களையே மறுக்கின்றது. அத்துடன் தகாதப்புணர்ச்சி தடை குறித்து, அது குறிப்பிட்ட சித்தாந்தத்தினையும் சார்ந்து நிற்காது, உலகளாவிய முறையில் தனித்துவமாக நிற்பது என்ற முந்திய வாதத்தையும் முரண்பாட்டுடன் மறுக்கின்றது. வாதத்தில் குறிப்பிட்டது போல் உயிர்ச் சேதத்தைக் குறைக்க, தன்னினம் உண்ணியாக இருப்பதைத் தடுக்க உருவானது என்று முரண்பாட்டுடன் கூடிய வாதம் ஒரு சித்தாந்தத்தின் ஆளுமைக்கு உட்பட்டது அல்லவா. மொத்தத்தில் இதன் மூலம் ஏங்கெல்ஸ்சின் ஆய்வை மறுக்கின்றது.

ஏங்கெல்ஸ் இந்த ஆய்வுகளைச் செய்த போது நாகரிக மனிதன் எதை எதிர்த்துப் பாதுகாக்க முன் நின்றானோ, அதையே இது மீள முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுத்துகின்றது பின்பக்கப் பாதைமூலம். உயிர்ச் சேதத்தை விளைவித்தமையால் உட்புணர்ச்சி தடுக்கப்பட்டது எனின், இந்த வாதம் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமானது என்பது தெளிவாகும்.

முதல் உட்புணர்ச்சி தடை சந்ததிக்கிடையில் மட்டுமே ஏற்பட்டதே ஒழிய, குழுவின் மொத்த ஆண்களுக்கும் மொத்தப் பெண்களுக்கும் இடையில் இத்தடை ஏற்படவில்லை. (இது இன்று வரை தமிழர் திருமணத்திலும் சரி, தென் அமெரிக்கச் சமுதாயத் திருமணத்திலும் சரி பல்வேறு பழங்குடிகளில் இரத்த உறவுத் திருமணங்கள் அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் காணப்படுகின்றது.) அதாவது புணர்ச்சி தலைமுறைக்குள் மட்டும் ஏற்கப்பட்டது. அடுத்தக்கட்டக் குடும்ப வளர்ச்சி சகோதர - சகோதரிகளுக்கிடையில் புணர்ச்சி தடை ஏற்பட்டது. இப்படியேதான் குடும்பம் முன்னேறியது. இங்கு தந்தைமார் அதிக பெண்களை அடையும் புணர்ச்சி சண்டையால் பேத்தி, மகள், தாய், பூட்டியுடனான புணர்ச்சி தடை செய்யப்படவில்லை. இதுபோல் சகோதரர்களின் சண்டையால் சகோதரிகளுடனான புணர்ச்சி தடை செய்யப்படவில்லை. மாறாக மனித வளர்ச்சியில் இவை அநாகரிகமாகக் கண்டதன் மூலம் படிப்படியாக மனித வளர்ச்சியில் தடைசெய்யப்பட்டது.

அடுத்து இந்த வாதப்படி குடும்பத்தின் முதல்படியில் உட்புணர்ச்சி மொத்த ஆணுக்கும் பெண்ணுக்கும் தடை செய்யப்பட்டால், எங்கிருந்து தமது புணர்ச்சிக்கான ஆண்களையும் - பெண்களையும் பெற்றனர். சுற்றுவட்டாரம் என்பது நீண்ட மனிதன் அற்ற பிரதேசங்கள்தான். அத்துடன் மனிதன் தென்பட்டாலும் அவன் ஒரு மிருகமாகவே கருதும் காட்டுமிராண்டித்தனமும், தன்னினம் உண்ணி (இங்கு தன் குழு அல்லாத மனிதனை மிருகமாகக் கருதியதால்) போன்ற நிலைமைகளில் எப்படி புணர்ச்சி வளர்ச்சி பெற்றிருக்கும். குழுவைத் தாண்டிய புணர்ச்சியை வந்தடையும் முன் மனிதன் பல கட்டங்களை வந்தடைய வேண்டியிருந்தது. முதல் குடும்ப அலகுகள் உள்ளார்ந்த வடிவத்துக்குள்தான் உருவானது. இதில் தான் படிப்படியாக வளர்ச்சி பெற்றது.

இன்று தமிழர் உட்பட தென் அமெரிக்கச் சமூகங்கள் வரை காணப்படும் இரத்த உறவு குடும்பத்தில் இருக்கும் ஒரே மாதிரியான உறவுமுறைகள், இதை மிகத் துல்லியமாக நிறுவுவதுடன், திருமணம் அதற்குள் அனுமதிக்கப்பட்ட வடிவங்களும் இதை மேலும் துல்லியமாகத் தெளிவாக்குகின்றன. குழுவுக்கு வெளியில் திருமணம் செய்யும் முறை பிந்திய காலத்தில் ஏற்பட்டமை அடுத்த கட்ட வளர்ச்சியாகும்.. இது நிச்சயமாக அதிக பெண்களை அனுபவிக்கும் ஆண்களின் சண்டையினால் ஏற்படவில்லை. மாறாகச் சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்டவையாகவே இது இருந்தது. இது குழுவுக்குள் இருந்து பிரிக்கப்பட்டு புணர்ச்சிக்கு அனுமதிக்கப்படாத பிரிவுகளைக் கொண்டு, பல தலைமுறைகளைக் கடந்து பிரிந்து உருவான வேறு குழுக்களுடனான உறவாக மாறியது. இப்படியே இவை படிமுறையாகவே வளர்ச்சி பெற்றது.



புணர்ச்சியில் சண்டை, அதிக பெண்களை அனுபவிக்கத் துடிக்கும் போக்கு போன்றன கடந்த 3000 வருடங்களாகத் தொடரும் இன்றைய சமுதாயக் கண்ணோட்டத்தின் பொதுத்தன்மையாகும். இது ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமையின் விளைவாகும்.

"மார்க்ஸ் கூறியபடி, அவர்கள் பூர்வீகக் கூட்டு வாழ்க்கையின் தொப்பூழ்க் கொடியுடன் பிணைக்கப்பட்டிருந்தார்கள். இந்தப் பூர்வீகக் கூட்டு வாழ்க்கையின் பலத்தை உடைக்க வேண்டியிருந்தது. அது உடைக்கப்பட்டது. ஆனால் அதை உடைத்த செல்வாக்குடைய சக்திகள் பண்டைக்காலக் குலச் சமுதாயத்தின் எளிமையான, தார்மீக மேன்மையிலிருந்து இழிநிலையாகவும் வீழ்ச்சியாகவும் நமக்குத் தொடக்கத்திலிருந்தே தோன்றுகின்றன. கீழ்த்தரமான பேராசை, மிருகத்தனமான காமவெறி, பொருளாசை, பொதுச் சொத்துக்களைச் சுயநலத்துக்காகக் கொள்ளையடித்தல் ஆகிய இழிந்த நலன்களே புதிய நாகரிகச் சமுதாயத்தை, வர்க்கச் சமுதாயத்தை வரவேற்கின்றது"[51] என்றார் ஏங்கெல்ஸ்.

இதைப் பற்றிய ஆய்வு இன்றி இதை ஆதி மனிதனுக்குப் பொருத்திக் காட்டுவதன் மூலம், இயல்பாக ஏற்க வைக்கும் கண்ணோட்டம் ஆணாதிக்கத்தை, தொன்று தொட்ட இயற்கையாக நிறுவுவதன் மூலம், பெண்ணியத்தைத் தனிச் சொத்துரிமைக்கு எதிரான போராட்டத்தில் சுரண்டும் வர்க்கம் சார்ந்து பிளப்பதாகும்.

அடுத்து ஆதி பொதுவுடைமைச் சமூகத்தை மறுக்கும் வரலாற்றுத் திரிபைப் பார்ப்போம். "மந்தைகளாகத் திரியும் நரிகளும் காட்டுநாய்களும் கூட இதற்கு விதிவிலக்கில்லை. ஓர் இரையை வேட்டையாடுவதற்கு எல்லாம் ஒற்றுமையாக நடவடிக்கையில் இறங்கியிருந்தாலும் கூட அதை உண்ண முயலும்போது அவை தமக்குள் பலத்த சண்டை போட்டுக் கொள்கின்றன. இந்தச் சண்டையில் பலம் பொருந்தியவை பலவீனமானவற்றைக் கொன்று உண்டு விடுகின்றன. தாவர உண்ணிகளான யானை, மான் போன்றவை மட்டும் ஓரளவுக்குத் தம்முள் பூசல்களைத் தவிர்த்து வாழ்கின்றன. ...பாலூட்டிகளில் உயர்ந்த நிலையிலுள்ள குரங்குகள் கூட பகிர்ந்து உண்பதில்லை. ஆளுமை வகிக்கும் குரங்குகள் தம் குழுவில் பலவீனமானவற்றைப் பயமுறுத்தி வேண்டிய உணவைப் பெற்றுக் கொள்கின்றன. ...இவ்விதிக்கு ஒரேயொரு விலக்கு பெண்விலங்குகளும் அவற்றின் கருவில் உதித்த இளம் வாரிசுகளுமாகும்.... தாய்க்கும் பிள்ளைக்குமிடையே நீடித்த உறவு ஒரே தாயின் பிள்ளைகளுக்கிடையேயும், இப்பிள்ளைக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கிடையேயும் ஒத்துணர்வினை (யாருடன்? இங்கு ஆணும் பெண்ணையும் கடந்தா?) ஏற்படுத்த ஏதுவாகின்றது. விலங்கினங்களிடையே ஆணின் நடத்தைகள் இதற்கு நேரெதிரானது. ... ஒரே நோக்கங்கொண்டு பல ஆண்கள் செயலில் இறங்குவதால் (இது பெண்களுக்கு மறுப்பது ஏன்? பெண்கள் ஒரே நோக்கில் போராடக் கூடாது என்பதாலா?) அவற்றுக்கிடையே பெருத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டிகளும் பூசல்களும் மலிகின்றன. ...தனிமனித வாதத்திற்கு எதிர்முரணாகவிருக்கும் தாய்மை என்னும் உணர்ச்சியே விலங்கினின்றும் 'மனிதன்' தோன்றிய முதல்படி எனக் கூறலாம். ஒருவருக்கொருவர் அனுசரணையாகக் கூட்டுவாழ்க்கை மேற்கொள்ளும் இயல்பு முதன்முதலில் தாயிடமிருந்து தோற்றம் பெற்றதன்றோ? ...மேற்கூறிய ஆதாரமாய் இன்னுமொரு விடயமுமுண்டு. மனிதக்குரங்கின் ஆணினம் மாமிச உண்ணிகளாக மாறி, பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் மனிதக் குரங்கின் பெண்ணினம் தாவர உண்ணிகளாகவே தொடர்ந்தனர். ...போட்டிச் சண்டையிடும் வழக்கமுடைய தன்மையினால் உரமான (பலமான) தாடைத் தசைகளும் கூரான பக்கவாட்டுப் பற்களும் விருத்தியடையப் பெற்ற ஆண்கள் இறைச்சியை இலகுவில் உட்கொண்டனர் என்பது ஒன்று. ஆண்கள் சமரில் தேர்ந்தவர்களாகையால் (இது எப்படி ஆணுக்கு மட்டும் சாத்தியமானதாக இருக்கமுடியும்?), பெருத்த உருவமும் நீண்ட நகங்களுடையவர்களாக இருந்தார்கள். இதன் காரணமாக வேட்டையினைத் தமக்கே சொந்தமாக்கி கொண்டனர் என்பது இன்னொன்று...."[50]

"விலங்கியல்புகளையும் தன்னின உண்ணி முறைகளையும் தகர்க்கவே தாய்வழிச் சமூகங்கள் தோன்றின" என்று மிருக வரலாற்றை மனித வரலாறாகக் காட்டும் போதே இன்றைய ஆணாதிக்க அமைப்பு மெச்சப்படுகின்றது. மிருகத்தை மனிதத் தோற்றத்தின் பின் ஒப்பிடுவதே அபத்தமாகும். இது மனிதனின் தோற்றத்தை மறுக்கின்றது. மிருக இயல்புகளை மறுத்து உருவாகியதுதான் மனித இனம். மனிதனுக்கும் குரங்குக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு உழைப்புக்கூடான கூட்டுச் சமூக அமைப்பாகும். இந்த வளர்ச்சி இன்றி, இன்றைய மனிதன் என்பது கற்பனையானது.

ஆண் விலங்குகள் உணவுக்காகப் போட்டி போட்டு, சண்டையிட்டு உண்ணும் எடுகோளே மாமிசம் உண்ணும் விலங்கு இனத்திலேயும் கூட தவறாகின்றது. மாமிசம் உண்ணும் பெண்ணினம் கூட போட்டி போட்டு சண்டையிட்டே உண்ணுகின்றது. ஓநாயை எடுத்தாலும் சரி, நரியை எடுத்தாலும் சரி அந்த இனத்துப் பெண் எங்கிருந்து மாமிச உணவைப் பெறுகின்றது. ஆணுக்கு வெளியில் அமைதியான சண்டையற்ற கற்பனையில் அல்ல.

உணவுச் சங்கிலிப் போராட்டத்தில் ஆண் - பெண் விலங்குகள் விதிவிலக்கின்றி ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. அத்துடன் இதில் ஆண் - பெண் விலங்குகளுக்கு இடையில் உடல் பலத்தைச் சார்ந்த வேறுபாடு என்பது கற்பனையானது. அத்துடன் இறைச்சியை உண்பதில் ஆண் - பெண் விலங்குகளின் உடல் வலிமை வேறுபாடு என்பதும் கற்பனையானது. ஆண் - பெண் விலங்குகளைப் போராட்டத்தில் இனம் காணமுடியாது. அதுபோல் பலத்திலும் காணமுடியாது. அதுபோல் உண்பதிலும் காணமுடியாது. பெண் விலங்கு பலம் குறைந்தது எனின் உயிர்வாழும் தகுதியை உணவுப் போராட்டத்தில் இழந்துவிடுமல்லவா? அத்துடன் ஆண் விலங்குகள் பலமானவை என்பது ஆணாதிக்கத்தின் கற்பனையான இயற்கை மீதான மீள் எடுகோளாகும்.





இனவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட உருவ வேறுபாடுகள் மட்டுமே, உணவுப் போராட்டத்தில் சிலவேளை உன்னிப்பாக அவதானித்தால் (கவனித்தால்) மட்டுமே தெரிந்து கொள்ளமுடியும்.

வேட்டையிலும் சரி, உணவை உண்பதிலும் சரி பொதுவாக மாமிசம் உண்ணும் விலங்குகள் ஆண் - பெண் விலங்குகள் வேறுபாட்டில் அமைதியைக் கடைப்பிடிப்பதில்லை. முட்டிமோதி உணவு உண்பதுதான் ஆணின் சிறப்பு குணம் என்ற எடுகோள் மூலம் மனித உருவாக்கத்தை விளக்க, அந்தச் சிறப்பு குணத்தை பெண் விலங்குக்கு விதிவிலக்காக்கி காட்டியது விலங்கினத்திலே தவறாகின்ற போது, விலங்கில் இருந்து எடுத்து வைக்கும் எடுகோள்கள் விலங்குகளுக்கு மட்டுமல்ல மனிதனுக்கும் முற்றாகத் தவறாகின்றது.

சொந்தக் குழந்தையைத் தாய் **பராமரிக்கும் இயல்பு** இயற்கையின் நியதி. இது **பெண்ணின் சிறப்பான தகுதியல்ல.** ஆனால் ஆணாதிக்கச் சமூகத்தில் அது பெண்ணின் மெச்சத்தக்கத் தகுதியாகின்றது. ஏனெனில் ஆணாதிக்கம் கூட்டு அமைப்பை நிராகரித்து தனிமனித வாதத்தில் சீரழிந்த போது, பெண் மட்டும் தாய்மையில் கூட்டுக் கண்ணோட்டத்தைத் தொடர்வதால் அதன் சிறப்பு முன்வருகின்றது. ஆனால் இன்று நுகர்வுப் பண்பாடு பெண்ணிடமும் தனிமனித வாதத்தை ஏற்படுத்திய போது, இந்தக் கூட்டுக் கண்ணோட்டம் சிதைகின்றது.

இயற்கையின் நியதியான குழந்தை பராமரிப்பு எல்லா விலங்கு இனத்திலும், பறவை இனத்திலும் ஒரேமாதிரி இருப்பதில்லை. பாலூட்டிகளிடையே பெண் பாலூட்டுவதால், பொதுவாகப் பெண் சார்ந்து குட்டிகள் வளர்கின்றன. இங்கு ஆண் அனுசரணையாகப் பெண்ணின் உணவைக்கூட தேடிக் கொடுக்கின்றது. சில விலங்கினத்திலும், பறவை இனத்திலும் ஆண் விலங்குகள் குட்டியைப் பராமரிக்கின்றது.

(பேரரடைஸ் ஃபிஷ் என்ற மீன் இனத்தில் பெண் மீன் முட்டையிட்டுச் செல்ல, ஆண் மீன் அவைகளை ஒன்று சேர்த்து பாதுகாக்க, ஒரு பசை மூலம் ஒட்டி குஞ்சு பொரிக்கும் வரை பாதுகாக்கின்றது. பூனைமீன் என்ற இனத்தில் பெண் மீன் இடும் மூட்டையை, ஆண் மீன் தனது வாயில் வைத்து குஞ்சு பொரிக்கும் வரை பாதுகாக்கின்றது. கடற்குதிரை மீன் இனத்தில் பெண்மீன் இடும் முட்டையை ஆண் மீன் வாய் மூலம் விழுங்கி உட்பையில் பாதுகாத்து, பொரித்த பின் வாய் மூலம் வெளியில் அனுப்புகின்றது.) சிலவற்றில் ஆண் - பெண் சேர்ந்து பராமரிக்கின்றன. சிலவற்றில் பெண் மீன் மட்டும் பராமரிக்கின்றது. மனிதனில் பெண் மட்டும் பொதுவாகப் பராமரிக்கின்றாள்.

பெண் மட்டுமே உயிரினத்தில் குழந்தையைப் பராமரிக்கின்றாள் என்ற விதி தவறானது. ஆண் பராமரிக்கும் தன்மையும் உயிரினத்தில் உள்ளது. இயற்கையாகவே பெண்ணின் பாதுகாக்கும் உணர்வு வயிற்றில் சுமந்து பெற்று பால் கொடுப்பதன் மூலம் இயற்கை சார்ந்து கோருகின்றது. இந்தப் பரிணாமத்தின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சிக்குரிய மாற்றத்தைச் சூழல் வளர்த்தெடுத்தது. இதில் ஆண் மட்டுமா? பெண் மட்டுமா? என்பதைப் பல்வேறு காரணக்காரியத்துடன் இயற்கை ஒழுங்கமைத்தது. இது ஆணாதிக்கம் உயிரியல் ரீதியில் பெண்ணிடம் திணித்தவையல்ல. உயிரினங்களில் பெண், குட்டிகளைப் பராமரிக்கும்போது அங்கு ஆணாதிக்கம் இருப்பதில்லை.

உயிரினத்தில் ஆண் - பெண் இடையிலான வேறுபாடுகள் இயற்கையாக உள்ளது. இது ஆணாதிக்கத்தால் அல்ல. ஆனால் அங்கு மனிதனில் இருந்து விதிவிலக்கு ஆண் - பெண்ணை அடிமைப்படுத்துவதில்லை. மனித இனத்தில் ஆண் பெண்ணை அடிமைப்படுத்துவதன் ஊடாக, குழந்தைகள் ஆணுக்கான வாரிசாகிய போது (நிரந்தரமான மன்னர் பரம்பரையில் ஆண் வாரிசுரிமை ஆட்சிகள் ஆணாதிக்கம் மற்றும் அரசு வடிவத்தைத் தெளிவாக்குகின்றது.), இங்கு ஆணின் வாரிசைப் பெற்றுக் கொடுப்பதும் வளர்ப்பதும் பெண்ணின் கடமையாகின்றது. பெண்கள் தலைமை தாங்கிய போது குழந்தை வளர்ப்பில் ஆண் தலையிடுவது பெண்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மனிதனின் உயர்ந்தகட்ட வளர்ச்சியே பெண்ணுடன் இணைந்த சமூகத்தின் பொறுப்பில் குழந்தை வளர்ப்பைக் கோருகின்றது. இதை நோக்கி மாறிக் கொண்டு இருக்கின்றது.

பெண்ணில் பொதுவாகக் காணப்படும் குழந்தை மீதான பரிவும், பாதுகாப்புணர்வும் "தனிமனித வாதத்திற்கு எதிர்முரணாகவிருக்கும் தாய்மைக்" கண்ணோட்டத்தில் பெண்ணிடம் உருவாகவில்லை. தனிமனித வாதம் என்பது பற்றிய கண்டுபிடிப்பு நகைப்புக்குரியது. இந்த வாதம் சுரண்டல் அமைப்பைப் பாதுகாக்கும் கோட்பாட்டைச் செழுமைப்படுத்துகின்றது. தனிமனிதவாதம் மனித உழைப்பைச் சுரண்டியதன் மூலம் மனித வரலாற்றில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டது. இதை ஆதி சமுதாயத்தின் விலங்கு உணர்ச்சியில் ஆணின் தன்மையாகக் காட்டுவதன் மூலம், உண்மையில் சுரண்டல் அமைப்பின் இயல்பை மென்மைப்படுத்துவதாகும்.

தனிமனித வாதம் இயற்கையின் தொடர்ச்சியல்ல. அத்துடன் மிருகத்தில் போட்டியான உணவுச் சண்டை தனிமனித வாதத்தின் இயல்புணர்ச்சிகள் அல்ல. மாறாக விலங்குகளுக்குக் கிடைக்கும் உணவு நெருக்கடியின் போட்டியே அதை ஏற்படுத்துகின்றது. இது இல்லாத எல்லா நிலையிலும் அவை போட்டியற்ற நிலையில் வாழ்கின்றன. உணவு தாராளமாகக் கிடைக்கும் எல்லா நிலையிலும் மிருகத்தினிடையே சச்சரவு குறைவாகக் காணப்படுகின்றது. அது பற்றாக்குறையாக இருக்கின்ற போது சண்டை அதிகமாவதும் சொந்த இனத்தைக் கொன்று உண்பதும் ஆண் - பெண் என்ற விதிவிலக்கின்றி பொதுவான தன்மையாகின்றது.

அத்துடன் குரங்கில் இருந்து மனிதக் குரங்காகவும் பின் மனிதனாகவும் தோற்றம் பெற்ற வரலாற்றில் மனித வளர்ச்சியில் விலங்குணர்ச்சி மற்றும் தன்னினம் உண்ணியாகத் தவிர்க்கவே தாய்வழிச் சமூகம் உருவானது என்ற கண்டுபிடிப்பும் அபத்தமாகும். குரங்கில் இருந்து உருவான மனிதக் குரங்கும்





பின்னால் மனிதனும் தாவர உண்ணியாக இருந்துள்ளான். ஏனெனின் குரங்கின் உணவு தாவரம் சார்ந்து இருந்தது அல்லவா? பின்னால் இறைச்சியை உண்கின்ற போதே இங்கு ஆண் - பெண் வேறுபாடு இருந்ததில்லை. தன்னினத்தையும் மிருகமாகக் கருதியே உண்டான். தாவரம் சார்ந்த உணவுச் சங்கிலியில் உதித்த மனிதன் எப்படி இறைச்சிக்காகப் போராடியிருக்கமுடியும்? எப்படி தன்னின உண்ணியாக இருந்திருக்கமுடியும்? எப்படி பாலியலுக்காக மோதியிருக்கமுடியும்? இதில் இருந்து மனிதனைப் பெண் உருவாக்கினாள் என்பது கற்பனைப் புரட்டாகும்.

அத்துடன் இவற்றில் இருந்து வெளிவர தாயுரிமை சமூகம் தோற்றம் பெற்றது என்பது தவறானதாகி விடுகின்றது. தாயுரிமைச் சமூகம் திட்டவட்டமாகப் பெண்ணின் தாய்மையை அடையாளப்படுத்தி உருவானது. தன்னின உண்ணியாக இல்லாமல் போனது என்பது, மற்றவனை மனிதனாகத் தன்னையொத்த இனமாகக் கண்டதன் விளைவு மட்டுமேதான். இன்றைய சுரண்டல் அமைப்பு இல்லாது போக வேண்டும் எனின், மற்றவனைச் சுரண்டுவது மனித இயல்பு இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளும், மற்றவன் தன்னைப் போல் ஒரு மனிதன் என்பதைத் தெரிந்து கொள்ளும் அறிவு அவசியம். இது போராட்டத்தில் அடிப்படையான உள்ளடக்கமாகும்..

அடுத்து குரங்கிலிருந்து மனிதன் தோன்ற தனிமனித வாதத்துக்கு எதிரான இந்தத் தாய்மையுணர்வே காரணம் என்ற கருத்துரை, மனிதன் தோன்ற காரணமாக இருந்த உழைப்பை மறுக்கின்றது. தாய்மை உணர்வு உழைப்பைத் தோற்றுவித்ததா? என்ற கேள்வி இங்கு அடிப்படையாகின்றது. இல்லை. அப்படியாயின் எல்லா விலங்கினத்திலும் இந்தத் தாய்மை உணர்வு ஏன் புதிய மனிதர்களை ஒத்த உயிரினத்தைத் தோற்றுவிக்கவில்லை? அத்துடன் இந்தத் தாய்மை உணர்வு குரங்கிலும், மனிதனிடத்திலும் வேறுபாடு இன்றி (மனித வளர்ச்சியை ஒட்டிய உழைப்பு சார்ந்து தாய்மை உணர்வு வேறுபாட்டை இது மறுக்கவில்லை.) பொதுத் தன்மையில் காணப்படுகின்றது. குரங்கில் தாய்மை உணர்வு இல்லை என்றால் இந்த வாதம் ஒரு எடுகோளாக எடுப்பதை அனுமதிக்க முடியும். ஆனால் தாய்மையை எடுகோளாக எடுப்பதுக்குக் கூட அருகதையற்ற வாதமாகின்றது.

தாய்மை இயற்கையானது. அது எல்லா உயிரினத்திலும் மாறுபட்ட வடிவில் இருக்கின்றது, நீடிக்கின்றது. இதைப் பரிணாமத்தின் குறிப்பான மாற்றத்துக்குப் பொருத்துவது தவறானது. தாய்மை உணர்வு மனிதனைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக உழைப்பின் ஆற்றல்தான் மனிதனை உருவாக்குகின்றதே ஒழிய இயற்கையான உணர்வுகள் அல்ல. குரங்கில் இருந்து வளர்ச்சிபெற்ற இனம், உணவைத் தேடி அலையும் போராட்டத்தில் உழைப்புக் கருவியை உபயோகிக்க தொடங்கிய உழைப்புதான், குரங்கில் இருந்து மூளை வளர்ச்சி பெற்றபோது மனித குரங்கு, மனிதனையும் தோற்றுவித்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாமிசம் உண்ணாத விலங்குகளிடையே மோதல் நிகழ்வதில்லை என்பது தாராளமாக உணவு கிடைப்பதால்தான். இதனால் அவை இயற்கையில் சுயேட்சையாக மோதலைத் தவிர்த்து உண்டு வாழ்கின்றன. இதனால் பாலியல் புணர்ச்சியில் மிக இலகுவான வரைமுறையற்ற புணர்ச்சியைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன. உணவின் மீதான ஆதிக்கப் போராட்டம் இயல்பில் பாலியலிலும் கடுமையாகின்றது. இயற்கை சார்ந்த இலகுவான உணவு கிடைக்கின்ற போது இலகுவான புணர்ச்சி ஏற்படுகின்றது.

குரங்கில் மாமிசம் அல்லாத உணவு இயற்கை சார்ந்து கிடைத்த போது எப்போதும் உணவுச் சண்டை இருப்பதில்லை. இயல்பாகவே ஜோடி சேர்ந்து புணருகின்றன. குரங்கு தாவர உண்ணியாக இருந்த நிலைமையால் அங்கு மோதல் என்பது கற்பனையானது. சண்டையும் சச்சரவையும் தாண்டிய எதிர்க் கண்ணோட்டத்தில் வாழ்ந்த பெண் அதன் அடிப்படையில், மனித இனத்தைத் தோற்றுவித்தாள் என்பது தவறான எடுகோளில் தவிடுபொடியாகின்றது. மனிதனின் தோற்றத்துக்குப் பெண் குரங்கின் தாய்மைத் தன்மைதான் காரணம் என்ற எடுகோள் மேலும் தவிடுபொடியாகின்றது. இயற்கை சார்ந்த உணவில் குரங்குகளுக்கிடையில் போராட்டம் என்பது கிடையாது. தாவர உண்ணியான குரங்கில் எப்படி இது இருந்திருக்கும். இது இப்படி இருக்கும்போது எப்படி "தாய்மை என்னும் உணர்ச்சியே விலங்கினின்று 'மனிதன்' தோன்றிய முதல்படி எனக் கூறலாம்."

குரங்கிலேயே கூட்டுச் சமூக கண்ணோட்டம் நிலவியதே ஒழிய, பெண்ணின் தாய்மைக் கண்ணோட்டத்தில் உருவாகவில்லை. அத்துடன் மாமிசம் உண்ணத் தொடங்கிய மனிதன் தாவர உணவையும் கலந்தே உண்டான். இங்கு மனிதனாக இருப்பதால் உணவுக்கான போராட்டம் இருக்கவில்லை. தொடர்ச்சி மற்றும் உயர்ந்த மனித இனமாக வளர்ச்சி பெற்ற தன்மையே மிருகத்தனத்தை ஒழிப்பதை நிபந்தனையாக்கியது. இதனால் புணர்ச்சியில் மோதல் இருக்கவில்லை.

முந்திய வாதத்தில் அடுத்து திரிபு முன்வருகின்றது. "மனிதக்குரங்கின் ஆணினம் மாமிச உண்ணிகளாக மாறி, பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் பெண்ணினம் தாவர உண்ணிகளாகவே தொடர்ந்தனர்"[50] என்ற எடுகோள் ஆணாதிக்கம் முன்கூட்டியே இருந்ததாக நிறுவ முயல்வதாகும். ஆணாதிக்கத்தின் வரலாற்றுக் காரணத்தைத் திசை திருப்ப இது முன் வைக்கப்படுகின்றது. ஏன் பெண் மனிதக் குரங்கு மாமிசம் உண்ணவில்லை. ஆணின் உணவுக்கான போட்டி மற்றும் தாய்மைக் கண்ணோட்டம் என்கின்றார். பெண்விலங்குகள் மாமிசம் உண்ணாத கற்பனையான பிறவிகளா? ஒரு விலங்கினம் மாமிச உண்ணியாக இருந்தால் அதில் ஆண் - பெண் விலக்கு என்பதே கிடையாது. இப்படி முன்வைக்கும் உயிரியல் இயற்கை ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள் உண்மையில் ஆணாதிக்கத்தின் பிம்பமாக வரலாற்றைத் திரித்தே எழுதினர், எழுதுகின்றனர்.





குரங்கில் இருந்து மனிதன் தோன்றிய போதும் சரி, மனிதக் குரங்கில் இருந்து மனிதன் தோன்றிய போதும் சரி ஆண் - பெண் தனித்து விடப்படவில்லை. உணவுக்கான போராட்டத்தில் சேர்ந்தே போராடினர். இதுமட்டும் தான் மனிதச் சமுதாயத்தின் அடிப்படையான இயங்கியலாகும். இந்தப் போராட்டத்தில் சொந்தக் குழந்தையைப் பாதுகாக்கும் போது ஆண் - பெண் என இருவரும் இணைந்தே நின்றனர். இது தாக்குதலின் போதும் சரி, தற்காப்பின் போதும் சரி இங்கு வேறுபாடு இருக்கவில்லை. இதில் கொன்ற விலங்கை உண்ணத் தொடங்கிய போது சேர்ந்தே உண்டனர். பெண் விலகிச் சென்று தாவர உணவை உண்ணவில்லை. இது அறிவியலுக்கு புறம்பான வாதம். எப்படி இது சாத்தியம்? அரியண்டம், விலக்கு, பாவம் போன்ற உணர்வுகள் பிந்திய கால உணர்வுகளாகும்.

சொந்தக் குழந்தை மீதான தற்காப்பு கருதி, உணவின் தேவை அபரீதமாகக் கிடைத்த போதே, பெண் தனித்து நின்று குழந்தையைப் பராமரிக்கும் முதல் வேலைப்பிரிவினை ஏற்பட்டது. இது மிகவும் பிற்பட்ட கால நிகழ்வாகும். இந்த முதல் வேலைப்பிரிவினையில் இருந்துதான் ஆண் பெண்ணுக்கிடையில் உணவுப் பழக்கத்தில் வேறுபாடுகள் தோற்றம் பெற்றது. அதுவரை உணவுப் பழக்கத்தில் ஆண் - பெண் வேறுபாடு என்பது இருக்கவில்லை. பொருளாதாரக் காரணத்தால் அதாவது, எந்த உழைப்பின் ஊடாக ஆண் - பெண் உணவைப் பெற்றனரோ அது பொதுவாக இருந்ததால் உணவும் ஒன்றாகவே இருந்தது.

குழந்தைப் பராமரிப்பு இங்கு பெண்ணை ஒதுக்கும் கண்ணோட்டத்தில் அல்ல, மாறாகக் குழந்தையின் பாதுகாப்பில் நடந்த வேலைப்பிரிவினையும், கிடைத்த உணவை அந்த இடத்திலேயே உண்ண நிர்ப்பந்தித்த தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு, உணவில் மாற்றம் காண்கின்றது. இதில் தனித்து நின்ற பெண் படிப்படியாகக் கண்டுபிடித்த தாவர உணவை உற்பத்தி செய்ததும், மிருக வளர்ப்பின் ஊடாகப் பால் போன்ற உணவைக் கண்டுபிடித்ததும் நிகழ்கின்ற போது, உணவுச் சங்கிலியிலும் பிளவு ஏற்படுகின்றது. இது உடல் வலுவை மாற்றியமைக்கின்றது. இறைச்சியை அதிகமாக உண்ட ஆண் வலிமை பெற்றவனாக மாறுகின்றான். இந்த உணவு மாற்றத்துக்கு முன் ஆண் பெண் இருவரின் வலுவும் ஒரே தன்மை கொண்டவையாகவே இருந்தது.

குரங்கில் இருந்து மனிதக் குரங்காகி மனிதனாகிய வடிவத்தில் நிமிர்ந்து நடக்கத் தொடங்கிய மாற்றத்தில், இறைச்சி ஆண் - பெண் விதிவிலக்கின்றி முக்கியமான பாத்திரத்தை ஆற்றியது. பெண் இறைச்சியைத் தவிர்த்து இருந்தால், மனிதன் தோன்றியிருக்கவே முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். இறைச்சி மட்டும்தான் ஆண் - பெண் உடல் அமைப்பை முற்றாக மாற்றியமைக்கும் வலுவை வழங்கியது. பெண்ணின் தாய்மை மற்றும் தாவர உண்ணியாக இருந்ததால் மனிதன் தோன்றினான் என்பது கற்பனையான அறிவற்ற மூடத்தனமாகும். மனிதனின் தோற்றம் உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் விதிவிலக்கற்ற ஒரே நியதியான





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணத்தால் உருவானது. முதல் வேலைப் பிரிவினைதான் மாற்றத்தை ஆண் பெண்ணுக்கிடையில் இனவிருத்திக்கு அப்பால் வித்திட்டது. ஆனால் இது பெண்ணடிமைத்தனத்தைத் தோற்றுவித்துவிடவில்லை. அவசியம் கருதி, தேவை கருதி உருவான மனித வளர்ச்சியின் நியதிகளை எல்லாம் உள்வாங்கியபடிதான், அதற்கு எதிராகப் பெண்ணடிமைத்தனம் தனிச்சொத்துரிமையின் விளைவாகியது. மனித வளர்ச்சியில் உருவாகும் மனிதக் கண்டுபிடிப்பான விஞ்ஞானம், எப்படி மனித அழிவை வித்திடுகின்றதோ அதுபோல்தான் இதுவும்.

உணவுச் சங்கிலியில் சண்டையும் சச்சரவும் நிகழ்ந்ததால் அங்கு ஆண் பெண் விதிவிலக்கின்றியே நிகழ்கின்றது. பெண்ணின் தாய்மை சார்ந்த வாழ்க்கை இயற்கையின் தன்மையாகும். இது பெண்ணின் தனிமை வாதத்துக்கு எதிரான உணர்ச்சியல்ல. அத்துடன் இது மனித இனத்தைத் தோற்றுவிக்கும் மூலமாக இருந்ததில்லை. தனிமை வாதம் தனிச்சொத்துரிமையின் பிந்திய கால உணர்ச்சி மட்டுமே. சுரண்டல் அமைப்புதான் ஆணாதிக்கத்தை வித்திட்டது. தனிமை வாதத்தை முன்னிறுத்தியது.

அடுத்து, பெண் ஆணில் இருந்து விலகி தாவரம் உண்ணுவது போன்ற விளக்கங்கள் மறுதளத்தில் பெண் தனிமைவாதத்தின் பிரதிநிதியாக ஆக்கப்படுகின்றாள். ஆணாதிக்கம் தனிச் சொத்துரிமையில் தோற்றுவித்ததை முன்கூட்டியே பல்வேறு துறைகளில் பெண் பிரிந்து சென்றதனால் உருவானதாகக் காட்டுவது, இந்த ஆணாதிக்கச் சூறையாடும் அமைப்பைப் பூசி மெழுகி அதைப் பாதுகாப்பதாகும். இதனால் மறைமுகமாகப் பெண்ணைப் புகழ்வது போல் காட்டி சேறு வீசுவதாகும். அதாவது, பெண்ணை அழகின் பிம்பமாக்கி, அதன் பின் வேசையாக்கி இழிவாக்கும் ஆணாதிக்க வடிவத்தில் இது முன்வைக்கப்படுகின்றது.

இதையொத்த அடுத்த கருத்துரையைப் பார்ப்போம். "...எந்த வகைப் பாலூட்டிகளை எடுத்துக் கொண்டாலும், புணர்ச்சிக்குப் பின் பெண் விலங்குகள் தனித்தே தாமொரு கூட்டமாய் வாழ்வதைக் காணலாம்"[50] என்ற வாதம் முற்றிலும் தவறானது. விலங்குக் கூட்டங்கள் ஆண் - பெண் பிளவுகளைக் கொண்டவையல்ல. இயற்கையாக விலங்குகள் வாழும் இடம் எங்கும் புணர்ச்சிக்கு முன் - பின், ஆண் - பெண் சேர்ந்தே வாழ்கின்றன. சில விலங்குகளில் ஒதுங்கிக் கொள்ளும் தன்மை குறித்த விசேட சிறப்பு தன்மையில் மட்டுமேதான். அடுத்த கணம் இயல்பாகச் சேர்ந்து வாழ்கின்றன. இது மனித இனத்தில் பொருத்துவது அபத்தமாகும். ஏனெனில் விலங்கு இனத்தில் இருந்து மனிதன் பிரிந்துவந்த இயங்கியல் வளர்ச்சிவிதியே இதற்கு எதிரானது. மனிதனை மிருகமாகக் கருதிய ஆய்வு குப்பைத் தொட்டியில் வீசுவதற்கே உதவும். இயங்கியல் வளர்ச்சி விதி மீதான மூடத்தனமான அறிவுள்ளவர்கள் மட்டுமே இப்படி எடுத்து வைப்பது சாத்தியம்.

பெண்கள் தனித்து தாமொரு கூட்டமாக வாழ்வது என்பது ஆணாதிக்கத்தை மறைமுகமாக ஏற்பதாகும். இதில் இருந்துதான் ஓரினச் சேர்க்கை போன்ற கோட்பாடுகள் இயற்கையை மறுத்து விளக்கம் பெறுகின்றன.





ஆண் - பெண் பிளவை இயல்பான ஓர் இயற்கை நிகழ்ச்சியாக, மிருகத்தைக் கொண்டு புனைந்து காட்டுவது ஆணாதிக்கத்தை மறைமுகமாக நிலைநிறுத்துவதாகும்.

இதைச் செழுமைப்படுத்த வைக்கும் வாதத்தைப் பார்ப்போம். "... சமூகத்தின் ஆரம்பக் கட்டமானது பாலுறவின் அடிப்படையில் அமையாத - பொருளாதார ரீதியில் தொடர்பு கொண்ட சகோதரர்களும் - சகோதரிகளும் அன்னையரின் தலைமையின் கீழ் இயங்கிய அமைப்பாகும் என்பது புலனாகிறது. ஆண் இனத்தினையும் பெண் இனத்தையும் இரு வேறான பிரிவுகளாக்கி தம் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்ததாலேயே பெண்கள் சகோதரத்துவ அமைப்பைக் கட்டி எழுப்பினர். இதனை வகுக்கப்பட்ட உறவுமுறை என்று குறிப்பிடலாம். ஆண்களும் பெண்களும் தனித்தனியே குழுக்களாக வாழ்ந்து வந்த இக்காட்டுமிராண்டி நிலை..."[50] எனத் தொடர்கின்ற ஆய்வுரைகள் அபத்தமானவை.

ஆரம்பக்கட்டத்தில் ஆண் பெண் உறவு பொருளாதார ரீதியானது என்பது வியக்கத்தக்க திரிபாகும். அத்துடன் ஆரம்பம் அல்லாத பிந்திய கால உறவு பாலியல் உறவு என்பது மறைமுகமாகக் குறிப்பிடப்படுகின்றது. இன்றைய சமுதாயத்தைப் பற்றிய மார்க்சிய ஆய்வுகளின் போது ஆண் - பெண் உறவைப் பொருளாதார உறவாகக் காண்கின்றது. அதே நேரம் ஆண் எதிர்ப்பு கொண்ட பெண்ணியம் இன்றைய சமுதாயத்தில் ஆண் - பெண் உறவைப் பாலியல் உறவாகச் சித்திரிக்கின்றது. இதுவே இன்றைய நிலையில் இருவேறுபட்ட அரசியல் நிலையாகும். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் துல்லியமான வேறுபாடாகும். இன்று ஆண் - பெண்ணின் அனைத்து வகையான உறவுகளுமே பொருளாதார ரீதியானவையாக இருக்க, அதைக் கடந்த காட்டுமிராண்டி நிலைக்கு எளிமைப்படுத்துவது ஏன்? இன்றைய மனித உறவுகளின் விபச்சாரத்தனத்தின் உட்கூறுகளை மூடிமறைத்து மந்தப்படுத்துவதற்கே. இன்றைய ஆண் பெண்ணின் உறவு பொருளாதாரம் சார்ந்து அமைவதைத் திரித்துக் காட்டி, பாலியல் உறவாகக் காட்ட, வரலாற்றுத் திரிபை ஆதி மனிதனுக்குக் கடத்தி செல்வது அவசியமாகின்றது. பெண் தலைமையில் சமுதாயம் தோன்றியது என்பது குழந்தையின் வழியாகத்தான் என்பது மறுக்கப்படுகின்றது. உணவுக்கான உழைப்பு, மனித விருத்திக்கான தாய்மை, உழைப்பில் பெண்ணின் பாத்திரம் முன்னேறிய வகையில் மதிக்கப்பட்டது. இதனால் தாய்வழிச் சமுதாயத்தை அடையாளம் காண்பது நிகழ்கின்றது. தாய்மை மட்டுமே குழுவை வேறுபடுத்தியதால் தாய்மை குழுவின் ஆதாரமாகியது. இதனால் பெண் உயர்ந்த ஸ்தானத்தை (இடத்தைப்)பெற்றாள்.

காட்டுமிராண்டி கால ஆண் - பெண் உறவுகள் இயற்கை சார்ந்து சுதந்திரமான உணவுப் போராட்டத்தில் கூடிவாழும் வாழ்க்கையாகவே இருந்தன. இது சகோதர - சகோதரி உறவு என்று எதையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனின் அப்படி ஓர் உறவுமுறையே தெரிந்திராத காலமாகும். உறவு, அன்பு, ஆசை, காதல், பிரிவு, இணைவு, பரிவு, சகோதரத்துவம், தனிமைவாதம்,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டுவாதம் போன்ற உறவுகள் எல்லாம் அன்று கற்பனையானவை. இவை பிந்தியகால விளைவுகளாகும். கிடைப்பதைச் சேர்ந்து உண்ணும் ஆதி பொதுவுடைமை சமுதாயத்தில் வரைமுறையற்ற புணர்ச்சியே உணவுப் போராட்டத்தை எளிமைப்படுத்தியது. ஆண்கள் தனியாக, பெண்கள் தனியாக வாழ்ந்தனர் என்ற புனைவுகள் கற்பனையானவை. அப்படி வாழ ஆணின் சண்டை சச்சரவு கொண்ட உணவு உண்ணும் முறையும், புணர்ச்சி வேட்கையுமே காரணம் என்ற எடுகோள் முற்றாகத் தவறானது என்பதை மேலே பார்த்தோம்.

குரங்கு மாமிச உண்ணியாக இருக்காமையும், அத்துடன் ஒரு விலங்கு என்ன உணவை உண்கின்றதோ, அதை ஆண் - பெண் வேறுபாடு இன்றியே அதன் எல்லைக்குள் உண்டு வாழ்ந்தன. இதில் ஆண் - பெண் வேறுபாடு என்பது வரலாற்றுக் கற்பனையாகும். இதை மறுக்க இன்றைய சில மிருக இனத்தின் குறித்த நேர நடத்தைகள் எந்த விதத்திலும் மனிதனுக்கும் பொருந்தாது. அன்னையர் தலைமையில் சமூகம் இருந்தது என்றால், பெண்ணினுடைய தாய்மையின் அடிப்படையில் மட்டுமேயாகும். மனித இனவிருத்தி மட்டுமேதான் சந்ததியின் வாழ்வைப் பாதுகாத்ததுடன், தாய் வழிமட்டுமே சொந்த இனத்தை அடையாளம் காட்டும் ஊடகமாக இருந்தது.

இயற்கையின் அனைத்துச் செல்வங்கள் மீதும் மனிதன் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும், இயல்பாகத் தாயின் இயற்கையான குழந்தை உற்பத்தியைப் போற்ற வைத்தது. இதனால் பெண் சமூகத்தின் வழிகாட்டியானாள். பெண் சகோதர - சகோதரி என்ற அமைப்பை உருவாக்கி கண்காணித்த நீதியான அமைப்பு என்பது கற்பனையானது. அரசு வடிவங்கள், கண்காணிப்புகள் எல்லாம் கடந்த 3000 வருடத் தனிச்சொத்துரிமையின் கேவலமான கொடையாகும். அன்று ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே கூடி வாழ்ந்தனரே ஒழிய தனித்தனியான சமூகமாக வாழவில்லை. இது மிருகத்திற்கும் பொருந்தும். இனவிருத்தியின் போதும் சரி, பாலூட்டும் போதும் சரி தனித்து ஒதுங்கியிருப்பது இதில் இருந்து முற்றிலும் வேறுபட்ட நிகழ்ச்சியாகும். அத்துடன் ஆண் - பெண் குழுக்களாகப் பிரித்து வைத்த நிகழ்வு, வாழ்க்கை முறைகள் எல்லாம் பிந்திய கால நிகழ்ச்சிகளாகும்.

பெண், சமூகத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதிகார அமைப்பைக் கட்டமைத்து விடவில்லை. மாறாகப் பெண் இயற்கையாக, இயல்பாகத் தலைமை தாங்கினாள். இங்கு உத்தரவுகள் இருந்ததில்லை. தாய்மைக் கண்ணோட்டத்தில் அவளின் கருத்து மதிக்கப்பட்டது. இன்று இருப்பதுபோல் முரண்பாடுகள் அன்று இருந்ததில்லை. சமுதாயத் தொடர்ச்சியில் இயற்கை முரண்பாடுகள் மீதே மனித முரண்பாடுகள் இருந்தன. இயற்கை சார்ந்த வாழ்வில் இதைக் கடப்பது இயல்பாக இருந்தது. இதை மறுத்து பெண் கட்டுப்பாட்டை வைத்திருந்தாள் என்பதும், ஆண் - பெண் குழுக்களாகப் பிரித்து வைத்திருந்தாள் என்பதும், பொருளாதார ரீதியில் பாதுகாத்து வைத்திருந்தாள் என்பதும் வரலாற்றுத் திரிபாகும். இது இன்றைய ஆணாதிக்க அமைப்பை ஒத்த பெண்ணாதிக்க அமைப்பு நிலவியதாகக் காட்டுவதன் மூலம்,





இன்றைய ஆணாதிக்கம் நியாயப்படுத்தப்படுகின்றது. பெண்ணாதிக்கச் சமூகம் நிலவியதாகக் காட்டி, அதை ஆண் கைப்பற்றியதாகக் காட்டுவதன் நோக்கம், உண்மையில் ஆணாதிக்கம் தனிச் சொத்துரிமையில் தோற்றம் பெற்றது என்பதைக் கோட்பாட்டு ரீதியில் சிதைக்கத்தான். அத்துடன் இன்று பெண்ணாதிக்கக் கண்ணோட்டத்தில் ஆண் எதிர்ப்பு கொண்ட பெண்ணியத்தை நியாயப்படுத்த முயல்கின்றது. ஆண் எதிர்ப்பற்ற ஆணாதிக்க எதிர்ப்பு கொண்ட மார்க்சிய அரசியல் மார்க்கத்தைச் சிதைக்க வரலாற்றுத் திரிவு நிபந்தனையாகின்றது. இதன் மூலம் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்கும் வடிவம் ஏற்படுகின்றது. இந்த ஏகாதிபத்திய அமைப்பு ஆண் எதிர்ப்பின் ஊடாக வாழ்த்தப்படுகின்றது அல்லவா.

ஆண் - பெண் பிளவு, திட்டவட்டமாக ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமையுடன் தொடர்புடையனவாக இருந்தது. தலைமுறைகளுக்கு இடையிலான புணர்ச்சியை விலக்கிய போதும் சரி, சகோதர - சகோதரிகளுக்கு இடையிலான புணர்ச்சியை விலக்கிய போதும் சரி இவை கடைப்பிடிக்கப்பட்ட வழிகளில் ஆண் - பெண் குழுக்களை உருவாக்கிவிடவில்லை. இவை அச்சமூகங்களில் உருவாக்கப்பட்ட போது நீண்ட நெகிழ்ச்சியான வழிகளில்தான் உருவானது. இங்கு யாரும் யாரையும் கட்டுப்படுத்தியதில்லை. அதுபோல் யாரும் யாருக்கும் அடங்கி நடந்ததில்லை.

சமூகத்தின் உயர்ந்தபட்ச இணக்கத்துடன் கூடிய வாழ்க்கை முறையின் பிரதிநிதிகள்தான், சமுதாய வளர்ச்சியின் அங்கமாகவே எல்லோரும் இணைந்து உருவாக்கியவைதான் இவைகள். சமூகத்தின் உயர்ந்தபட்ச ஒன்று இணைந்த இயக்கத்தில்தான் பொதுவாக இவை கட்டுப்பாடு நிறைந்த வடிவமாக இருந்தது. அத்துடன் இந்த விலக்கு சமுதாயத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது என்பதால், இதன் மேலான முரண்பாடு அற்றுச் சென்றது. பெண் தலைமை தாங்கிய சமூகத்தில் பாலியல் மேலாண்மை ஆணிடம் இருக்கவில்லை. பெண்ணிடமும் இருக்கவில்லை. இன்று உள்ளது போல் அன்று காட்டப்படும் புனைவுகளில், ஆணின் அடங்காத புணர்ச்சி வேட்கை என்பது கற்பனையானது மட்டுமின்றி, பெண் தலைமை தாங்கிய போது இது சாத்தியமென்பது அறிவற்ற புரட்டுமாகும். ஆணாதிக்கத்தில் மட்டுமே பிளவுகள் தோன்றி இறுகியது.

உழைப்பை அடிப்படையாகக் கொண்ட வெவ்வேறு பிரிவுகளின் சடங்குகள் உழைப்பை மேம்படுத்தும் வகையில் இருந்தன. இது மனிதனைப் பிளந்து விடவில்லை. ஆனால் தனிச் சொத்துரிமையின் பின்புதான் ஆணுக்குத் தனியான சடங்குகள், பெண்ணுக்குத் தனியான சடங்குகள் என பால்ரீதியில் பிளவு உருவானது. இது மனிதனைப் பிளந்தது. சமையல் முறைகள், படுக்கை அறைகள் என பல்வேறு வழிகளில் விலக்கி வைப்பது உருவாகியது. இது திட்டவட்டமாகப் பால்ரீதியில் விலக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். பெண்ணின் ஆரம்பக் காலங்களில் வேறுபட்ட சடங்குகள், இனவிருத்தி சார்ந்த செயற்பாடுகள், உழைப்பின் வேறுபாடுகள் மீது மட்டுமே நீடித்தன. ஆனால் ஆணாதிக்கம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோலோச்சிய பின்புதான் பொருளாதார ரீதியான சடங்குகள், பழக்க வழக்கங்கள் பெண்ணை ஆணில் இருந்து திட்டவட்டமாகப் பிரித்தது.

அடுத்து நேரடியாக ஏங்கெல்சைத் திருத்தி மறுத்து எழுதும் வரிகளைப் பார்ப்போம். "உண்மையில் ஏங்கெல்ஸ் குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினை தந்தையுடைமைச் சமுதாயம் நன்கு வேரூன்றிய பின்பே ஏற்பட்டது. அப்போதுதான் ஆண்கள் பெண்களை வலுக்கட்டாயமாக வீட்டில் இருத்தி வேற்று அடிமைகளைக் கொண்டு தமது வேலைகளைச் செய்வித்தனர்... வர்க்கரீதியான அடக்குமுறை ஏற்பட்ட அதே வீச்சில் பெண்களின் ஒடுக்குமுறையும் உருவாகியிருக்க வேண்டும்'' என்று வரலாறு புரட்டிக் காட்டப்படுகின்றது. உழைப்புப் பிரிவினையின் தந்தை ஆதிக்கச் சமுதாயத்தின் விளைவா? அல்லது பெண் தலைமை தாங்கிய காலத்தின் விளைவா? என்ற கேள்வி இங்கு முன்வைக்கப்படுகின்றது.

கி.பி. 1846-ஆம் ஆண்டில் மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் எழுதிய கட்டுரையில் **"குழந்தை பெறுவதற்கான ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேலைப் பிரிவினைதான் முதல் வேலைப்பிரிவினை ஆகும்"**[51] என்றார். இதை மேலும் ஏங்கெல்ஸ் "வரலாற்றில் தோன்றிய முதல் வர்க்கப் பகைமை ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பகைமை வளர்வதுடன் பொருந்துகிறது. முதல் வர்க்க ஒடுக்குமுறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்குகின்ற ஒடுக்குமுறையுடன் பொருந்துகின்றது. ஒருதார மணமுறை வரலாற்று ரீதியில் மகத்தான முன்னேற்றமாகும். ஆனால் அதே சமயத்தில், அது அடிமைமுறையுடனும் தனிச்சொத்துடனும் சேர்ந்தாற்போலவே இன்றளவும் நீடிக்கின்ற ஒரு யுகத்தைத் துவங்கியது''[51] என்றார்.

தந்தையுடைமை சமூகம் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட உற்பத்திமுறையால் ஒருதாரத் தனியுடைமைக் குடும்பம் உருவானது. இதற்கு வெளியில் தந்தையுடைமை சமூகம் உருவாகி இருக்க முடியாது. தனிச் சொத்துரிமை மட்டும் தான் தந்தையுடைமைச் சமுதாயத்தின் ஆதாரமாக இருந்தது. இதனால் சொத்துடைமைக்கான வாரிசுரிமையைத் தந்தை பெற்றதன் மூலம், முடிவாகப் பெண் தலைமையிலான சமூகம் முடிவுக்கு வந்தது. விவசாயத்தைப் பெண்களிடம் இருந்து ஆண்கள் தமது கையில் எடுத்ததன் மூலமே உபரியைத் திரட்டமுடிந்தது.

பிரதான வேலையாக உணவு வேட்டை இருந்தபோதே குழந்தையின் பாதுகாப்பை முன்னிட்டு, குழந்தைக்குப் பாதுகாப்பாகத் தாய் நிலையான இடத்தில் தங்கி இருப்பது நடைமுறையாகியது. இதில் குழந்தைகளைக் கொண்ட தாய்மார் மட்டும் தனித்து நிற்க அல்லது அவர்களுக்குத் துணையாகப் போதுமான பாதுகாப்பு கொண்ட பிரிவு நிற்க, ஆண் - பெண் வேட்டை தொடர்ந்தது. தனித்து நின்ற பெண்கள், குழந்தைகள் விவசாயத்தை அனுபவ வாயிலாகக் கண்டுபிடிக்கின்றனர். கால் நடை வளர்ப்பு கண்டுபிடிக்கப்படுகின்றது. இந்த வேட்டையும், தங்கி நிற்றலும், அது சார்ந்த விவசாயமும், கால்நடை





வளர்ப்பும் சமூகத்துக்குள்ளான வேலைப் பகிர்வாக இருந்தது. இதில் இருந்து கால்நடை வளர்ப்பு பிரித்துச் சென்றதே முதல் வேலைப் பிரிவினையாகும்.

சமூகத்தின் பொதுச் சொத்தாகவும், சொந்த உழைப்புக் கருவியாகவும் இருந்த கால்நடையைச் சமுதாய ரீதியில் பிரித்துச் சென்ற போது முதல் மாபெரும் உழைப்புப் பிரிவினையாகியது. இதை ஏங்கெல்ஸ் "அநாகரிகர்களின் பொதுவான கூட்டத்திலிருந்து கால்நடை வளர்க்கும் இனக்குழுக்கள் தனியே பிரிந்து சென்றன. **இதுதான் சமுதாய ரீதியில் ஏற்பட்ட முதல் மாபெரும் உழைப்புப் பிரிவினை ஆகும்**... ...முதல் மாபெரும் சமூக உழைப்புப் பிரிவினையிலிருந்து முதன்முதலாகச் சமுதாயத்தில் மாபெரும் வர்க்கப் பிரிவினை தோன்றியது."[51]

முதல் உழைப்புப் பிரிவினை பெண்ணுக்கும் ஆணுக்கும் தோன்றிய போது அது சமுதாயத்தைப் பிளந்து விடவில்லை. சமுதாயத்தின் அவசியம் கருதி உருவான பிளவு, பெண் சார்ந்த வீட்டு உற்பத்தி மூலம் பிளந்து விடவில்லை. மாறாக உற்பத்தி மற்றும் உழைப்பு வடிவம் ஐக்கியமாக்கியது. அங்கு பெண்தான் தொடர்ந்து தலைமை தாங்கினாள். ஆனால் கால்நடை வளர்ப்பு உழைப்புப் பிரிவினையாகி, அவை வீட்டுக்கு வெளியில் சென்ற போது, சமுதாயப் பிளவாகி பெண்ணின் தலைமை ஆணிடம் செல்வதை உறுதிப்படுத்தியது. உழைப்பின் வடிவம், இடம் ஆணின் தலைமையை இயல்பாக மாற்றியமைத்தது. இவை அநாகரிகக் காலத்திலேயே தோற்றம் பெற்றதே ஒழிய பிந்திய கால நிகழ்வுகள் அல்ல.

முன்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பிளவு சமுதாயப் பிளவாக இருக்கவில்லை. ஆனால் கால்நடை வளர்ப்பு பிளவாகிய போது அது சமுதாயத்தைப் பிளந்தது. உற்பத்தி வடிவம் தான் குடும்ப அமைப்பின் அடுத்தக் கட்டத்தைத் தீர்மானிக்கின்றது. அது ஒருதார மணத்தை உருவாக்குகின்றது. **தனிச் சொத்துரிமை வடிவம் தான் ஒருதார மணத்தை உருவாக்கியதே ஒழிய, ஒருதாரமணம் தனிச்சொத்துரிமையை உருவாக்கி விடவில்லை.** ஒருதாரமணம் தான் தனிச் சொத்துரிமையையும் வர்க்கப் பகையையும் உருவாக்கியது என்பது வரலாற்றுத் திரிபாகும். இது வர்க்கப் போராட்டத்தைப் பெண்ணியத்துக்குள் சிதைப்பதாகும்.

வர்க்கப் போராட்டமே பெண்ணை விடுவிக்கும் என்ற மார்க்சிய அடிப்படையை வரலாறு மற்றும் இயற்கைத் திரிபு ஊடாக மறுப்பதாகும். இதனால் தான் இப்படி கூறுகின்றனர். "உழைப்புப் பிரிவினை தந்தையுடைமைச் சமுதாயம் நன்கு வேரூன்றிய பின்பே ஏற்பட்டது. அப்போதுதான் ஆண்கள் பெண்களை வலுக்கட்டாயமாக வீட்டிலிருத்தி வேற்று அடிமைகளைக் கொண்டு தமது வேலைகளைச் செய்வித்தனர்'' என்று வாதாட முனைகின்றனர். தந்தையுடைமை சமுதாயமே உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்தியது என்பது பொருளை மறுப்பதாகும். இது கருத்துமுதல் வாதமாகும். உழைப்புப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிவினைதான் தந்தையுடைமை சமுதாயத்தை, உழைப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் காரணத்தால் பிரிக்கின்றது.

அத்துடன் பெண்ணை வீட்டில் ஆண் இருத்தினான் என்பது அடுத்த வரலாற்றுத் திரிபாகின்றது. தந்தையுடைமை சமூகமே பெண்ணை வீட்டில் வலுக்கட்டாயமாக இருத்தியது என்பது, ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கை சார்ந்த குழந்தை வளர்ப்பில் பெண் தங்கி நின்றதை மறுக்கின்றது. தனியுடைமை சமுதாயம் பெண்ணை வீட்டில் அடைப்பதற்கு முன்பே பெண் வீட்டில் தங்கியிருந்தாள். ஒருதார மணம், கற்புரிமை போன்றவற்றைப் பெண் தனது தற்காப்பு சார்ந்து தெரிவு செய்த காரணத்தை மறுத்து, ஆணாதிக்கம் என்ன விளைவை ஏற்படுத்தியதோ, அதே போல்தான் பெண் தெரிவு செய்த, ஒரு நிலைத்த பிரதேசத்தில், குறித்த இடத்தில் வாழும் நிலைக்கும் ஏற்பட்டது. ஆனால் இன்றைய பெண்ணியல்வாதிகள் கற்புரிமை, ஒருதாரமணத் தெரிவு, வீட்டில் தங்கி வாழ்தல் போன்ற பெண்ணின் தெரிவை மறுத்துத் திரித்து காட்டுவதன் மூலம், பெண்ணின் இயற்கையான தெரிவை மறுப்பதன் மூலம், ஆணாதிக்கத்துக்குச் சேவை செய்கின்றனர்.

அநாகரிகக் காலகட்டத்தைத் தொடர்ந்து 3000 வருடங்களை அண்ணளவாகக் கொண்ட ஒருதார மணத்தை உருவாக்கிய தனிச் சொத்துரிமை அமைப்புக்கு முன்பே விவசாயம், கால்நடை வளர்ப்பு 10000 - 15000 வருடங்களுக்குள் தோன்றியதை வரலாற்று ஆய்வுகள் நிறுவுகின்றன. 4 இலட்சம் வருடங்களுக்கு முன் நெருப்பைக் கண்டுபிடித்தது முதல் 1.5 இலட்சம் வருடமாக நிலைத்த இடத்தில் தங்கி வாழ இருப்பிடங்களை உழைப்பின் மூலம் உருவாக்கத் தொடங்கினர். இதற்கு முன்பு இயற்கை சார்ந்த உணவு, இருப்பிடம், வேட்டை என மனிதன் அலைந்த வாழ்க்கை நீடித்தது. இதில் இருந்து மாறிய போதே முதல் வேலைப் பகிர்வுக்கான நிலைமை தொடங்கியிருந்தது.

நிலைத்த வாழ்க்கை என்பது அசாத்தியமான பல்வேறு கூறுகளுடன் எதற்காகத் தொடங்கியதோ, அதுவே பெண்ணின் குழந்தை பாதுகாப்பை நிர்ணயித்தது. இதற்கும் பிந்திய வரலாற்றில்தான் தனிச்சொத்துரிமை தோன்றி வளர்ந்தது. ஒருதார மணத்துக்கு முந்திய இணை மணங்கள் பெண்ணை அடிமைப்படுத்திவிடவில்லை என்பதுடன், பெண்ணே அவைகளைத் தேர்ந்தும் எடுத்தாள். இதுபோல் பெண் தலைமையிலான சமூகத்திலும், மாறிவந்த சமுதாயத்தின் பல்வேறு பெண் தெரிவுகளை ஆணாதிக்கம் உள்வாங்கி மறுவிளக்கம் கொடுத்து, பெண்ணை அடிமைப்படுத்திய வரலாற்றில் அதை மறுத்துத் திரிப்பது, இருக்கும் சுரண்டல் ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பதாகும்.

மொழியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பணியைப் பெண்களே ஆற்றினர், ஆண்கள் அல்ல என்பது தவறான வாதமாகும். "...ஆண்களோ வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களிலேயே ஈடுபட்டதனால் முக்கியமாகத் தனிமையில்தான் செயற்பட்டார்கள். கூட்டாகச் செயற்பட்ட போது அமைதியாக இருக்கவே (ஏன்?) நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ்வாறாக மொழிவளர்ச்சிக்கான



அஸ்திவாரங்களாகத் திகழ்ந்ததும் பெண்கள்தாம்"[50] என்பது மனித வரலாற்றுச் சார்ந்த மொழி திரிபாகும்.

காட்டுமிராண்டி காலத்தில் ஆண் பெண் சமூகத்தில் உருவான உழைப்பின் அடிப்படை இயங்கியலில் இருந்தே தெரிந்த பொருட்களின் மீதான உழைப்பு விளக்க மொழி வளர்ச்சி பெற்றது. ஆண் பெண் வேலைப் பிரிவினையுடன் கூடிய மாறிய சமூகத் தன்மையில் ஆண்கள் அலைந்து திரிந்த நிலைமையால், மொழியின் பன்முகத் தன்மையின் விருத்தியில் பெண்களே பங்காற்றினர் என்ற வாதம் தவறானது. பெண்கள் சுற்றுப்புறத்தில் அதிக நேரம் கூடிப் பேசி வாழ்ந்ததால் மொழியின் ஆளுமை விரிவானதாகி, வளர்ச்சியில் பெண் தீர்க்கமாகப் பங்காற்றினாள் என்பது தர்க்க ரீதியில் தவறானது.

ஏனெனின் மொழியின் வளர்ச்சியில் புதிய சொற்கள் இணைவதை மட்டுப்படுத்தும் அளவுக்கு, பெண்களின் நடமாட்டம் தவிர்க்க முடியாது குறுகியதாக இருந்தது. ஆண்கள் அலைந்து திரிந்ததால் புதிய பொருட்களைக் கண்டறிவதன் மூலம், பொருட்களை மொழியுடன் இணைக்கும் போது சொற்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருந்தது. பெண்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் நீண்டநேரம் இருந்தமையால், எந்நேரமும் கூடியிருப்பதால் மொழியின் இலக்கண - இலக்கியத் தன்மை சீர்படுத்துவதைப் பெண்களின் உழைப்புமுறை கோரியது. ஆண்களுக்கு உழைப்புமுறை அதற்கு எதிராக இருக்கவில்லை. ஆண்கள் மொழியின் சீரான ஒலியைப் (Sound) பெண்கள் ஊடாகவே பெற்றனர்.

மொழியின் வளர்ச்சியில் ஆண் புதிய சொற்களைப் புகுத்த, பெண் அதை உள்வாங்கி மொழியின் சீரான ஒழுங்கமைப்பில் பங்கு கொண்டாள். ஆண்கள் வேட்டை மற்றும் மீன் பிடியில் தனிமையில் திரிந்ததால், மொழியைப் பெண்களின் தனிச் சிறப்பான பங்களிப்பு கொண்டவை என்ற வாதம் தவறானது. வேட்டை மற்றும் மீன் பிடியில் பொதுவாக ஈடுபட்ட ஆண்கள் தனித்து அல்ல, கூட்டமாகவே எப்போதும் செயல்பட்டனர். இதில் தனித்து இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று கூறும் வாதம், விளக்கம் எதையும் தரவில்லை. ஏன் அப்படி இருக்கவேண்டும்.? அப்படியிருப்பது மனித இனத்தினது குணாம்சம் அல்ல.

மனித இனத்தில் கூட்டமாகச் சேர்ந்து வாழும் வகையிலான உழைப்பு மட்டுமே, உயிர்வாழும் நிபந்தனையாக புறநிலையாகவும் அகநிலையாகவும் இருந்தது. மொழியின் தேவை உழைப்பை அடிப்படையாகக் கொண்டு பொருட்களை விளக்க உருவான போதே, அதன் வரைமுறையற்ற வளர்ச்சியில் ஆண் - பெண்ணின் பங்களிப்பு நிபந்தனையானது. கூட்டாக வாழவும், கூட்டாகச் செயற்படவும், மொழியால் உரையாடல் நடத்தவும் எல்லா உழைப்புகளுக்கும் அடிப்படையாக இருந்தது. ஆண் தனித்து இருந்து இருப்பின் வேட்டையில் கூட வளர்ச்சி பெற்றிருக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயற்கை சார்ந்த உணவுத் தேவையில் எழுந்த வேலைப் பிரிவினை ஆண் - பெண்ணைச் சமூக ரீதியாகப் பிளந்து விடவில்லை. சமூகத்தில் கூடிவாழ்வதே எப்போதும் முதன்மையானதாக இருந்தது. தனியுடைமை சமுதாயத்துக்கு முந்திய உழைப்புகளில் பொதுத் தன்மையே இதன் நிபந்தனையாகும். கால்நடை வளர்ப்பு குறிப்பாக விரிவான தொழிலாகி நடந்த முக்கியமான வேலைப் பிரிவினையாகிய போதும் கூட, கால்நடைகள் சமூகச் சொத்தாக இருந்ததால் அங்கு கால்நடை வளர்ப்புகூட கூட்டான உழைப்பாகவே இருந்தது.

மொழியின் வளர்ச்சியில் ஆண் பெண்ணின் பங்களிப்பு, அவர்களின் வேலைப்பிரிவினையுடன் வெவ்வேறு துறைகளில்தான் பங்களிப்பை நிபந்தனையாக்கியது. வேட்டை மற்றும் மீன் பிடிக்குச் செல்லுகின்ற காலகட்டத்தில் தனிமனிதச் சமுதாயம் தோன்றிவிடவில்லை. இன்றைய மற்றும் தனியுடைமை சமுதாயத்தைப் பொதுமைப்படுத்தி, வரலாறு முழுக்க பொருத்தும் வாதங்கள் இயல்பில் பெண்ணின் மீதான மிகை மதிப்பீட்டை ஆண் எதிர்ப்பில் ஏற்படுத்துகின்றது. அதாவது இயற்கை வரலாற்றை மனித வரலாறாகக் காட்டியது, பேசுவது போல் இது உள்ளது. அடிப்படையில் இவை ஆண் எதிர்ப்பை நிபந்தனையாக்குகின்றது.

வேட்டை மற்றும் மீன் பிடியில் ஆண்கள் புதிய மொழியைக் கண்டறியவும் (பொருளை அடையாளப்படுத்தவும், உழைப்பை விளக்கவும்), அதை விரிவாக்கவும் செய்த கண்டு பிடிப்புகளை மறுக்கின்றது. இயற்கை மற்றும் மனித வரலாற்றில் மனிதனுக்குள் வாழ்கின்ற வேறுபட்ட முரண்பட்ட பிரிவுகளின் பங்களிப்பைச் சரியாக மதிப்பிடவும், கண்டறியவும் தவறுகின்ற போக்கு, அடிப்படையில் இன்றைய ஆணாதிக்க வரலாற்றை நிறுவி பாதுகாக்க இத்திரிபுகள் மறைமுகமாக உதவுகின்றன.

இந்த நூலில் இது போன்ற விமர்சனங்கள் நிறையவே தொடர்ச்சியாக உள்ளன. அவை ஒரு தனி நூலுக்குரியவை. ஏங்கெல்சின் நூல் தொடர்ந்து இன்றும் இந்த நூல் திரிபுகளுக்கு எதிராகப் பலவிடயத்தில் பதில் அளிக்கின்றது. பல்வேறு தரவுகளையும் உள்ளடக்கியுள்ள இந்த நூல் அறிவியல் ரீதியாகத் தரவுகளைப் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தக்கூடியது. இந்த நூல் தரவுகளை எடுக்கின்ற போது விமர்சனக் கண்கொண்டு பார்க்க தவறுகின்ற நிலையில், நாமும் தவறு இழைப்போம். மேலும் இந்நூல் அதிதீவிரமான ஆண் எதிர்ப்பு கொண்ட அராஜகவாதத்துக்குள் சென்று ஆணாதிக்கத்துக்கு மறைமுகமாகச் சேவை செய்வதை ஊக்குவிக்கின்றது. அத்துடன் நேரடியாக இயற்கை மற்றும் வரலாற்றுத் திரிபு நேரடியாக ஆணாதிக்கத்தைத் திருப்தி செய்வதன் மூலம் சுரண்டும் ஏகாதிபத்திய அமைப்பைப் பாதுகாக்கின்றது.



# 20. ஆணாதிக்கத்தை எதிர்த்து எழுந்த வர்க்கக் கவிதை

சரிநிகர் 123-இல், ''கோணேஸ்வரிகள்'' என்று தலைப்பிட்டு கலா என்பவர் ஒரு கவிதை எழுதியிருந்தார். இக்கவிதையைத் தொட்டு பல விமர்சனங்களைச் சரிநிகர் எதிர் கொண்டு சிலவற்றை வெளியிட்டு இருந்தனர்.

ஆணாதிக்கம் இனவாதத்துடன் இணையும் போது ஒரு தமிழ்ப் பெண் சந்திக்கும் இனவாத ஆணாதிக்கத்தை மிக அருமையாகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியிருந்தார் கலா. இதன் மூலம் யதார்த்தச் சமூகத்தின் இயலாமைக்குச் சவால் விட்டுள்ளார். அதேநேரம், இனவாதம் சிங்களப் பெண் மீதான இராணுவ, ஆணாதிக்க வன்முறையை ஒத்தி வைத்துள்ளதை அழகாகச் சுட்டிக் காட்டுவதன் மூலம் இலங்கை அரசியலைச் சரியாக, மிக நேர்த்தியாகச் சுட்டிக் காட்டுகின்றார் கலா. ஆனால் பெண்ணியல் அமைப்பாளர்கள், ஜனநாயகவாதிகள், பெண்கள், பத்திரிக்கையாளர்கள் எனக் கொஞ்சம் பேர் இதை எதிர்த்து அழுது வடிந்துள்ளனர்.

தமது வர்க்கக் கட்டமைப்புக்கு இசைவாக ஆணாதிக்க நிலையில் நின்றும், இனவாதக் கட்டமைப்பின் மீது நின்றும் நடந்த ஆணாதிக்க வன்முறையை மூடிமறைக்கும் போது அல்லது மௌனமாகி கைவிடும் போது, ஒரு பெண்ணின் மீதான கொடுமையைச் சரியாகச் சுட்டும் போது எதிர்த்துப் புலம்பியுள்ளனர். நாம் முதலில் கலாவின் அக்கவிதையைப் பார்ப்போம்.

கோணேஸ்வரிகள்...!

நேற்றைய அவளுடைய சாவு - எனக்கு

வேதனையைத் தரவில்லை.

மரத்துப் போய்விட்ட உணர்வுகளுக்குள்

அதிர்ந்து போதல் எப்படி நிகழும்?

அன்பான என் தமிழச்சிகளே,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே வாருங்கள்
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே உன்னையும் தான்.

சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்.

பாவம்,
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்?

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்.
தீர்ந்ததா எல்லாம்
அவளோடு நின்றுவிடாதீர்!
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே
வெடி வைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளிப்





புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளிர்விடமுடியாதபடி.
சிங்களச் சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

(17.05.1997 அன்று பத்து பொலிசாரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண்குறியில் கிரானைட் வைத்து கொல்லப்பட்ட மட்டக்களப்பு 11 - ஆம் கொலனியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய்.)

காலம் காலமாக நடக்கும் இனவாதச் சாவுகள் பழக்கப்படுத்தப்பட்ட நிலையில் அவை அதிர வைப்பதில்லை. உணர்வுகள் மரத்துப் போகின்றன. சமாதானத்திற்காகப் போராட முடியாத அரசியல் குரோதத்தில் முடங்கிப் போகும் போது, நீங்கள் நிர்வாணமாக ( உடல் மற்றும் இனவாத அடிப்படை எப்படியாயினும்) இருப்பது தான் உங்கள் நிலை. ஏனெனின் சமாதானம் என்பது தேசங்களின் சுயநிர்ணய உரிமையில் ஏற்படுகின்றது. அந்தத் தேசச் சுயநிர்ணய உரிமையை, அது சார்ந்த சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய அரசியல் வர்க்கப் போராட்டமே. அதற்காக என்ன செய்துள்ளீர்கள்? என்பதே இதன் சாரம்.

புத்தரின் பேரால் புத்தரைத் திரித்தே சமாதானம் பேசுகின்றனர் (இங்கு புத்தரை அல்ல) யுத்தவாதிகள். சமாதானத்துக்காகப் போர் புரியும் இனவாதிகளின் சமாதான ஆணாதிக்க வக்கிரத்தைத் தீர்க்க அரசியல் அற்ற நிதர்சனமானதென்றாலும், சமூகம் ஆணாதிக்கத்தில் யோனியைத் திறந்து தான் வைத்திருக்கிறது யதார்த்தத்தில். ஏனெனின் யோனி மீது இனவாதம் தனது இனவாத ஆணாதிக்கத்தால் பெண்ணின் கற்பு உரிமையைக் குதறும் போது, மௌனம் சாதிக்கும் இனவாதப் பெண்ணியத்தின் முன் யோனி அரசியல் அற்ற நிதர்சனமான பிம்பம் தான். அதே நேரம் இயல்பான ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தில், பெண்ணை யோனி வழியாகக் காண்பதும், பண்பாட்டுக் கலாச்சார வேர்களை யோனி வழியாகத் திணிக்கும் போது, இயல்பான சமூக ஆணாதிக்கம் யோனியை நிர்வாணமாகக் காண்கின்றது, ஆராய்கின்றது.

ஆணாதிக்க இன வக்கிர அடையாளத்தையும், இதற்கு எதிரான எழுச்சியையும் சிதைக்க யோனியின் உள்வைத்து வெடிக்க வைக்கும் கைக்குண்டு. இதுவே பொதுவான ஆணாதிக்கக் 'கற்பு' நிலையும் கூட. யோனிக்குள் தேடும் 'கற்பு' இனவாதத்துக்கு எதிராகப் போராடுபவர்களின் இன்றைய பொதுக் கண்ணோட்டமாகும். இதை எதிராகக் காட்டி மறுக்கும் சிலரின் கண்ணோட்டத்தில் பெண்ணின் கற்புரிமையை, அதாவது யோனியில் திறந்து பொது விபச்சாரம் செய்வதாகும். இப்படி பல.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறக்கும் குழந்தை தனது பிறப்புக்குப் பழிதீர்க்கவும், ஆணாதிக்கத்தை ஒழித்துக்கட்டவும், சமாதானத்தை நிறுவும் வழியை அடைக்க, போராடாது இருக்க, குழந்தை பிறக்கும் வழியிலேயே (யோனியில்) வைக்கும் குண்டுகள். பெண்ணின் உறுப்பு மீது இந்தச் சமாதானவாதிகளின் கருணை நாளைச் சிங்களப் பெண்கள் மீது பாயத் தயாராக உள்ளது. இது தான் கவிதையின் அடிப்படை.

ஆணாதிக்க அதிகார இனவாதிகள் மட்டும் தான் இதற்கு எதிராக ஊளையிடுவார்கள். பண்பாடு இல்லை என்பார்கள். பெண்மை இல்லை என்பார்கள். ஆபாசம் என்பார்கள். ஏனெனில் ஆணாதிக்க ஒழுக்கம் இவையல்லவா? இதை எதிர்த்துப் போராட அழைப்பு விடுகின்றார், கவிதை மூலம். இதைச் சமாதானத்துக்காகவா செய்தீர்கள்? எனக் கேட்க இது இனவாதக் காய்ச்சலை உண்டாக்குகிறது. அருவருப்பு உணர்ச்சியைத் தருகிறது என்கிறார் பெண்ணியவாதி செல்வி திருச்சந்திரன். நாகரீகம் தாண்டிய கவிதையாம். ஆணாதிக்க உலகமயமாதல் உலகைச் சார்ந்த நாகரீகத்தைக் கோரும் செல்வி திருச்சந்திரன். யோனி, நிர்வாணம் என எழுதுவது அவமானம் என்கின்றார்.

உயிரியல் படிக்கும் ஆண் - பெண், மருத்துவம் படிக்கும் ஆண் - பெண், இதை யதார்த்தமாய்க் கேட்கின்றனர், சொல்லுகின்றனர். அருவருப்பாக அல்ல. பாலியல் கல்வியின் அவசியத்தைப் பார்ப்பனிய இந்து மதம் இப்படித்தான் எதிர்க்கின்றது. ஆனால் ஆணாதிக்கச் சமூகம் பெண்ணைப் பொத்தியதைப் போல், இதைப் பொத்தி மூடி மறைத்து அநாகரீகம் எனக் கூறுவதன் மூலம், அந்தப் பெண்ணின் யோனி கற்பழிப்புக்கு உட்பட்டதையும், அதைக் குண்டுவைத்து தகர்த்த வக்கிரத்தையும் மூடி மறைத்து நியாயப்படுத்துகின்றனர். இதைச் சமாதானத்துக்கான யுத்தம் மீது செய்வதை மறைத்து, யுத்தத்தைச் சமாதானத்தின் பேரில் பாதுகாக்க முனைகின்றனர். இதன் மூலம் இனவாத ஆணாதிக்கத்தையும், இயல்பான யதார்த்த ஆணாதிக்கத்தையும் தமது வர்க்க நலனில் இருந்து பாதுகாக்கின்றனர்.





# 21. மார்க்சியப் பெண்ணியத்தின் மீது சந்தேகத்தை விதைக்கும் ஆணாதிக்கத்தின் போக்கு குறித்து

செல்வி திருச்சந்திரன் எழுதிய 'தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலைநோக்கு' என்ற நூல் பல்வேறு கடந்த காலத் தரவுகளை உள்ளடக்கி உள்ளது. பெண் சார்ந்து வந்த நூல்களில் இது ஒரு குறிப்பிடத்தக்க தரவு ஆய்வு நூலாகும். இந்த ஆய்வு மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டு செய்யவில்லை. மாறாக அதை முடிந்த முடிவுகளாக எடுக்கக் கூடாது என்பதன் ஊடாகவே நூல் உட்புகுகின்றது.

கடந்தகால இலக்கியத் தரவுகளை ஆதாரமாகக் கொண்ட ஆய்வுகளை உள்ளடக்கிய இந்நூல், இலக்கியம் சார்ந்த தரவுகளை முழுமையாக இல்லாவிட்டாலும் முறையாக ஒழுங்கமைத்துள்ளது. ஆனால் இந்த ஆய்வுகள் கடந்த வரலாற்றில் ஊடே நிகழ்ந்த வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொள்ளாததுடன், அக்காலத்தில் ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்ணியப் போராட்டங்களையும் உள்ளடக்கி விடவில்லை. அத்துடன் வரலாற்று மார்க்சிய ஆய்வுமுறையை, ஆய்வுகளை மறுத்ததன் மூலம், இப்பெண்ணியம் பெண்ணியத்தில் இருந்து விலகிச் செல்லுகின்றது. மாறாகத் தரவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முன்வைத்த கருத்துக்கள் சமுதாயத் திரிபைத் தனிச்சொத்துரிமை சார்ந்து உள்ளடக்கியுள்ளது. இதை நாம் ஆராய்வோம்.

"ஆரம்பக்கால மானிடவியலாளர்களான **பச்சோ.ஃபன்** (1861), **மார்கன்** (கி.பி. 1877), ஆகியோரதும் ஏங்கெல்ஸ் (கி.பி. 1884) போன்ற ஆய்வாளர்களதும் பெண் ஆதிக்கச் சமூகக் கோட்பாட்டின் ஒரு மீள் அமைப்பேயாகும். பல்வேறு ஆய்வாளர்கள் மத்தியில் இந்த முடிவுக்கு அவர்கள் எவ்வாறு வந்தார்கள் என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் இக்கோட்பாட்டினை அவர்கள் வரலாற்றுப் போக்கில் தொடர்ந்து கடைப்பிடித்தும் வந்துள்ளனர். உற்பத்திச் சாதனங்களையும் பெண்களே தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்றோ அல்லது சுயாதீனமான அதிகார அடித்தளத்தை அவர்கள் கொண்டிருந்தனர் என்றோ கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை. வரலாற்றுக்கு முந்திய பெண் முதன்மை சமூக அமைப்பு முறை என்பது கருதுகோலே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றி அதற்கு இலக்கியச் சான்றுகள் காணப்படவில்லை”[52] என்று மார்க்சியப் பெண்ணிய ஆய்வுகள் மீது சந்தேகத்தை எழுப்பி மார்க்சியத்துக்கு எதிராக ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமையை நிலைநிறுத்துகின்றார்.

இந்த வாதத்திற்கு எதிரான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. “எகிப்தியப்” பிரமிட்டுகள் செதுக்கிய சிற்பங்களில் ‘ஆஸிரிஸ்’ என்ற பருவத் தெய்வங்கள் முக்கியம் வாய்ந்தவை.

தாலமி அரசனின் கல்வெட்டிலும் இதே போன்று குறிப்பிடும் விடயங்கள் ஒரே தன்மை கொண்டவை.

இந்த மரபு சார்ந்த சடங்குகளை ஆராய்கின்ற போது எகிப்தை ஆண்ட அரசிகள் திருமணம் செய்து கொள்வதில்லை. விரும்பிய ஆண்களுடன் ஓர் ஆண்டு வாழ்ந்த பின் அந்த ஆணை அரசிகள் பலியிடுவர். ஆணாதிக்க அமைப்பு தோன்றிய பின் பலியிடுவது நின்று போனது. பின்னால் அரசி பதவியை இழக்க, அதை அடையும் ஆண் - பெண்ணைப் பலியிடுவது என்ற வடிவில் மாறிய சடங்குகள், அக்காலக் கட்டத்தின் தொடர்ச்சியை இன்றைய சடங்குகளும் பறைசாற்றுகின்றது.”[53]

வரலாற்றில் பெண் தலைமை தாங்கியது என்பது கற்பனையான புனைவுகள் அல்ல. பாபிலோனிய - சுமேரியப் படைப்புக் கதைகளில் “உன்னுடைய ஆணையைத் தேவர்கள் நிறைவேற்ற வேண்டும். நீ அவர்களை அடக்கி ஆள வேண்டும். நீயே யாவரிலும் வலியவன். உன்னை நான் கணவனாக ஏற்றுக் கொள்ளுகின்றேன். மூன்றுலகிற்கும் நான் உன்னை அதிபதியாக்குகிறேன்.”[53] இந்தக் கதையில் பெண் எல்லோரையும் விட வலிமையானவளாக இருப்பதுடன், தாய் அழிக்கப்படுவதை மையமாகக் கொண்டது இக்கதை. இங்கும் மற்றொரு பெண் தான், ஆண்களைவிட வலிமையான பெண்ணை அழிக்க கோரும் போது, திருமணம் செய்யும் வாக்குறுதியையும், அரசுரிமையையும் ஆணுக்கு அளிக்கின்றாள். பாபிலோனியாவில் நடத்தப்பட்ட வெவ்வேறு காலக்கட்டப் புதைபொருள் அகல்வாராய்ச்சியில், காலத்துக்கு முந்தியதில் நிறைய பெண் தெய்வச் சிலைகள் காணப்பட்டன. அதற்குப் பிந்திய காலக் கட்டத்தில் எந்த ஒரு பெண் சிலையும் அகப்படாமல் ஆண் தெய்வங்களே கிடைத்துள்ளது. இது மாறிவந்த சமூகத்தைக் காட்டுகின்றது. ஏங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற ஆராய்ச்சி நூலையும், அதில் குடும்பத்தின் நிலையைப் பற்றிய ஆய்வுகளையும், தனது சொந்த மார்க்சிய விரோதக் கண்ணோட்டம் என்ற ஒரே நிலையில் மட்டுமே வைத்து மறுக்கின்றனரே ஒழிய, ஏங்கெல்சின் ஆய்வுகளின் மேல் அல்ல.

அந்த நூலில் ஏங்கெல்ஸ் செனீகா இராகோஸ்கள் பற்றி எடுத்து எழுதும் ஒரு பகுதியை இதற்குப் பதிலாக பார்ப்போம். “...அவர்களுடைய குடும்ப அமைப்பைப் பொறுத்த மட்டில், பழைய நீளமான வீடுகளில் வசித்த பொழுதும் (சில குடும்பங்களைத் தழுவியிருந்த பொதுவுடைமைக் குடும்பங்கள்)





ஏதாவது ஒரு கிளான் (குலம்) அநேகமாக மேலோங்கி இருந்திருக்கக் கூடும். பெண்கள் மற்ற கிளான்களிலிருந்து (குலங்களிலிருந்து) கணவன்மார்களைக் கொண்டார்கள்..... பெண் பிரிவே வீட்டில் சகஜமாக ஆட்சி புரிந்தது. சேமிக்கப்பட்ட பொருட்கள் பொதுவிலிருந்தன. தன் பங்குக்குப் பொருட்களைக் கொண்டு வந்து தருவதற்கு வழியில்லாத, துரதிர்ஷ்டம் பிடித்த கணவன் அல்லது காதலன் கஷ்டப்பட வேண்டியதே. அவனுக்கு வீட்டில் எத்தனை குழந்தைகள் இருந்த போதிலும், எத்தனை பொருட்கள் இருந்த போதிலும் எந்த வினாடியிலும் அவனை வெளியேறும்படி உத்தரவிட முடியும். அப்படி உத்தரவிடப்பட்ட பிறகு அதை மீற முயல்வது அவனுக்கே நல்லதல்ல. அந்த வீட்டில் அவன் இனியும் இருக்க முடியாது. அவன் தனது கிளானுக்குத் (குலத்துக்குத்) திரும்பி விட வேண்டியது தான் அல்லது வெளியேறிச் சென்று வேறு கிளானில் புதிய திருமண உறவைத் தொடங்க வேண்டியது தான் - அப்படி அடிக்கடி நடைபெற்றது. பொதுவாக, மற்ற இடங்களைப் போலவே கிளான்களில் (குலங்களில்) பெண்கள் தான் பெரும் சக்தியாக இருந்தார்கள். தேவையான சந்தர்ப்பங்களில் தலைவனின் கொம்புகளைத் தட்டியெறிந்து - அதை அப்படித் தான் குறிப்பிட்டார்கள் - அவனைச் சாதாரண வீரர்களின் அணியில் தள்ளுவதற்கு அவர்கள் தயங்கியதில்லை.”[51]

இந்த ஆய்வுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பெண்களின் தொடர்ச்சியின் அதிகாரத்தின் எச்சங்களினை நேரடியாகப் பார்த்தும், ஆய்வு செய்தும் கருத்தை மீள முன் வைத்தார் ஏங்கெல்ஸ். “பெண் சுதந்திரமான நிலையிலிருந்தது மட்டுமன்றி மிகவும் மதிப்புமிக்க நிலையை வகித்து வந்தாள்”[51] என்று ஆதாரத்துடன் முன்வைத்த ஏங்கெல்சை மறுத்து விதிந்துரைப்பது ஏன்? பெண்ணியத்தை முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் பார்ப்பதும், வர்க்கப் புரட்சியில் இதை மறுப்பதும் இன்று அவசியமாகின்றது.

பெண் மீதான மதிப்பு என்பது பெண்வழிச் சமூக உருவாக்கமே அடிப்படையானது. பெண்வழி அடையாளம் மட்டுமே சமூகத்தை அடையாளம் காணக் கூடியதாக இருந்ததும், பெண்வழி அடையாளத்தால் வளர்ச்சி பெற்ற குடும்ப அமைப்புக்கு, பெண்ணே சமூகத்தின் ஆதாரமாக விளங்கியது. பெண் ஆதாரம், மதிப்பு ஆகியவை இல்லை என்றால் சமுதாயமே இல்லை என்ற அளவுக்கு நீண்ட வளர்ச்சிக் கட்டங்கள் நிறுவுகின்றன. அத்துடன் பொருள் உற்பத்திக்கு உரிய உழைப்பு ஆதாரமான மனித உற்பத்தியைச் செய்த பெண்ணின் மதிப்பு என்பது, மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. மனித உயிர் வாழ்தலே மனிதனின் போராட்டமாக இருந்த போதும், உழைப்பில் அதிகரித்த கைகளின் தேவையைக் கோரிய சமுதாயத்தில் பெண்ணின் பங்களிப்பு சார்ந்து (குழந்தை உற்பத்தி அச்சமூகத்தின் முக்கிய மூலதனமாக இருந்தது.), தாய்வழிச் சமூகமும் பெண்ணை உயர்த்தி வைத்தது.

பெண்வழிச் சமூகத்தில் ஆண் பெண்ணை நோக்கி வருதல் அவசியமாக இருந்தது. இன்றும் எஞ்சியுள்ள தாய்வழிச் சமூகத்தில், ஆணாதிக்கத்தின் உள்ளும் பெண்ணின் நிலை எதைக் காட்டுகின்றது என ஆராய்வோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைத் தமிழர்கள் தாய்வழிச் சமூகத்தின் வழியில் அதன் எச்சத்தைத் தொடருவதால் திருமணத்தின் பின் ஆண், பெண் வீட்டில் தங்குவதும், பெண்ணின் தாய்வழிச் சீதனம் பெண்ணுக்கே உரிமையாக இருப்பதும், அக்குடும்பத்தில் பெண் வழியில் பெண்ணே அதிகாரத்தைக் கொண்டும் உள்ளனர். திருமணம் செய்யும் ஆண், பெண்ணின் சொத்தில் பங்கு கோர முடியாது. குழந்தையை எடுப்பின் பெற்றோர் மற்றும் தாய் வழிச் சீதனத்தின் உரிமை பெண் குழந்தைக்கே உள்ளது. ஆனால் சட்டத்தில் சில வழக்கொழிந்த போதும் மரபு அதைக் கடைப்பிடிக்கின்றது. இந்த மரபுகளில் இருந்து ஆணாதிக்கம் கோலோச்சிய வரலாற்றில், பெண்ணுக்கு இன்று இருக்கும் உரிமைகள் (பல சிதைந்து வரும் போதும்), கடந்த ஆணாதிக்கத்துக்கு முந்திய சமுதாயத்தில் பெண்ணின் நிலைமையைத் துல்லியமாகக் காட்டுகின்றது அல்லவா?

இதே நேரம் பெண்வழிச் சமூகமாக இருந்த இந்தியத் தமிழர் (இந்தியாவில்) ஆண்வழிச் சமூகத்தின் ஆதிக்கம் கோலோச்சிய போது, பெண்ணின் நிலை இலங்கைப் பெண்களை விட மிகவும் தாழ்ந்த நிலைக்கு நகர்ந்துள்ளது. இங்கு பெண் திருமணத்தின் பின் ஆண் வீடு நோக்கி செல்வதும், சீதனத்தில் உரிமையை இழந்து போவதும் காணமுடிகின்றது.

இது பற்றி ஏ.எம். சமீம் என்பவர் எழுதிய இலங்கை முஸ்லீம்களின் திருமண சம்பிரதாயங்கள் என்ற நூலில் "மனைவி இறந்தால் அவள் சொத்துக்கள் அவளின் பிள்ளைக்கே சாரும். பிள்ளை இல்லாவிட்டால் தாயையும், தாயின் வழி பெண் வழியுரிமைப் பிள்ளையையும் சாரும். மேலும் ஒருவனுடைய வருமானம் அவன் மனைவியையே சேரும். இச்சமூகத்தில் திருமணத்திற்குப் பின் ஒருவன் தன் சுற்றத்தார்களை விட்டுப் பிரிந்து தன் மனைவியின் குடியுடன் ஒன்றி விடுகிறான். மனைவியின் சொத்துக்குப் பாதுகாவலன் கணவன் அல்ல. அவளது சகோதரர்களும் பிள்ளைகளும் தான் சொத்தைப் பாதுகாக்க உரிமையுள்ளவர்கள். இவர்களது உரிமை வழிச் சட்டமும் தாய்வழி மூலமாகத் தான்..... தாய் இறந்துவிட்டால் அவளின் குழந்தைகள் அவளின் சுற்றத்தாரிடம் வளர வேண்டும் என்பது நியதி"[54] என்று பல தரவுகளை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பெண்வழி பெண்ணாதிக்கச் சமுதாய வளர்ச்சியில் பெண்ணின் நிலைமை, அதன் ஆதி சமுதாயத்துக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஆணாதிக்கம் கோலோச்சிவரும் போக்கிலும், ஏகாதிபத்தியப் பண்பாட்டு ஆதிக்கத்திலும் தொலைந்து செல்வதில் சில எச்சங்களே இவை என்பது தெளிவானது.

ஆதி சமூகத்தில் இயற்கை மீது மனிதன் கொண்டிருந்த மதிப்பு பெண்ணை உயர்ந்த நிலையில் வைத்திருந்தது. பூமி, வானம்... என அனைத்து இயற்கையும் அள்ளி வழங்கிய உயிர் ஆதாரப் பொருட்கள் அழிவுகளின் போது, இயற்கையின் கோபத்தைத் தணிக்க முற்பட்ட சடங்குகள் எல்லாம் வாழ்வாதாரத்தின் மீதான மதிப்பை இயற்கை ஏற்படுத்தியது. இது போல் பெண் மனித இனவிருத்தியில் ஈடுபட்டுக் குழந்தையை உருவாக்கியதும், இதில் ஆணின் பங்கு பற்றி பல நூற்றாண்டு காலம் வரை தெரிந்திருக்கவில்லை.





பெண்ணின் குழந்தை உருவாக்கம் மற்றும் இயற்கை மீதான பெண்ணின் கண்டுபிடிப்பும், அதனூடாக உணவுத் தேவையைப் பூர்த்தி செய்த வழிகள், பெண்ணின் மதிப்பை இயற்கையை ஒட்டி வளர்த்து எடுத்தது.

கடந்த நீண்ட வரலாற்றில் தனிச் சொத்துரிமை உருவாகும் முன்பு யுத்தத்தில் வெல்பவன் ஆண்களைக் கொன்று விடுவதும், பெண்களைச் சுவீகரித்துக் கொள்வதும் கூட பெண்ணைப் பாலியல் பண்டமாக அல்ல, பெண்ணின் ஆற்றல் மற்றும் உயர்ந்த நிலையால் தான், சொந்தக் கூட்டத்துக்குள் உள்வாங்கினர்.

ஆகவே பெண்ணின் உயர் நிலையைப் பறித்தெடுத்த ஆணாதிக்க வரலாற்றில் உருவான இலக்கியங்கள், எவையும் எமக்குப் பெண்வழியில் ஆதாரப்படுத்திவிடாது. ஆணாதிக்கத்தை நிறுவும் போக்கில் பெண் மீதான திட்டுதலாகவும், அடக்குமுறையாகவும் இருக்கும். இவைகளை இந்து, கிறித்தவ, இஸ்லாமிய மதங்கள் பெண்கள் மீது ஆணாதிக்கத்தை நிறுவிய வடிவங்களில் காணமுடியும். இதை நான் மேலே ஆதாரப்பூர்வமாக விவாதித்துள்ளேன்.

இதை மறுத்து மனித வரலாற்றை ஆணாதிக்க வரலாறாகக் காட்டும் முயற்சியின் பக்கங்கள்தான் கருதுகோளாகத் திரிக்கும் வடிவங்கள். இது மட்டும் தான் இயற்கையை அடிப்படையாகக் கொண்டு சுரண்டலைப் பாதுகாக்கும். இது போன்ற வாதம் ஒன்றைத் தான் சரிநிகர் பத்திரிக்கையில் விடுதலைப் புலிகளில் பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றிய விமர்சனத்தில், பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது தவறு என்று முன்வைக்கப்பட்டது. அதில் பெண்கள் ஆயுதம் ஏந்தி போராடிய மனித வரலாற்றுக்கு இலக்கிய ஆதாரம் இல்லை என்று வைத்ததன் மூலம் (இதைக் கீழே விபரமாக ஆராய்வோம்.) பெண்கள் போராடக் கூடாது என்பதன் ஊடாக இனவாத அமைப்பைப் பாதுகாக்க அறைகூவலை மறைமுகமாக விட்டனர். இது தான் இங்கு நிகழ்கின்றது.

"சமூக அரசியல் உறவுகளையும் பெண்களே தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்றோ அல்லது சுயாதீனமான அதிகார அடித்தளத்தை அவர்கள் கொண்டிருந்தனர் என்றோ கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை" என்ற வாதத்தில் ஆதி பொதுவுடைமைச் சமூகத்தை மிக இலகுபடுத்தி இன்றைய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் புரிந்து விளக்குவதைக் காட்டுகின்றது. ஆதி பொதுவுடைமைச் சமுதாயத்தில் அதிகார வடிவமோ, அரசியல் வடிவமோ கிடையாது. அதிகாரம், அரசியல் வர்க்கச் சமுதாயத்தின் விளைவு மட்டும் தான். இல்லாத ஒன்றை இருந்ததாகக் காட்டி மறுப்பது உண்மையில் இன்றைய ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பது தான். ஏனெனின் பெண்களின் தலைமையில் இருந்த பொதுவுடைமைச் சமுதாயத்தைத் திரித்து மறுப்பதன் மூலம், அதை அடைவதை நோக்கிப் போராட்டத்தைச் சிதைப்பதாகும். இதில் இருந்தே ஏங்கெல்சின் ஆய்வைக் கருதுகோள் மட்டுமே என்கின்றார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதி பொதுவுடைமைச் சமூகம், பெண்ணின் தலைமை போன்றன ஒரு கருதுகோள் மட்டுமே என்கின்ற வாதங்கள் பின்நவீனத்துவத்தின் குப்பைத் தொட்டியில் இருந்து வீசும் நாற்றமாகும். கருதுகோள்கள், கேள்விகள், மறுவாசிப்புகள், முடிந்த முடிவுகள் எதுவுமில்லை, பெரும் தத்துவத்துக்கு எதிரான சிறு தத்துவங்கள் எல்லாவற்றையும் கூட்டியள்ளி வைக்கும் நரித்தனமான பின்பக்க விவாதம் தான் இவை.

ஆணாதிக்க வரலாற்றில் பெண்கள் ஆண் வீடு நோக்கி செல்வது பண்பாகியது. கால்நடை வளர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அலைந்து திரிந்த பிரிவுகளில் தான் முதல் ஆண்வழிச் சமூகம் தோன்ற உழைப்பின் வடிவம் காரணமாக இருந்தது. நிரந்தரமான இருப்பிடம் அற்ற இப்பிரிவுகளில் இருந்தே ஆண் வழிச் சமூகம், திருமணத்துக்காகப் பெண் ஆணை நோக்கிச் செல்வது வளர்ச்சி பெற்றது.

அண்ணளவாக கி.மு. 1000 முதல் 1500 வருடங்களில் எழுதப்பட்ட ரிக்வேதத்தில் இடையர்களின் வாழ்க்கை பாதுகாப்பு குறித்து இன்று அழிந்து போன கடவுளான பூஷா அருள் பற்றிய செய்தியில் "மணமகளுக்குக் கணவர் வீடு செல்லும் போது பாதுகாப்பு அளிப்பது"[55] என்ற செய்தி ஆண் வழிச் சமூகத்தின் இயல்பைக் காட்டுகின்றது. பார்ப்பனியம் கால்நடை வளர்ப்பையொட்டிய ஈரான் பகுதிகளில் இருந்து குடிபெயர் சமூகமாக இருந்ததால், நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்த பெண்களை இடப்பெயர்ச்சியில் ஆணை நோக்கி நகர்த்துவது அவசியமாக உழைப்பு கோரியது. ஏனெனின் கால் நடை வளர்ப்பு ஆணின் தொழிலாக இருந்தது அல்லவா. முதல் ஆண் வழிச் சமூகங்கள் கால்நடை வளர்ப்பை இடப் பெயர்ச்சியில் கொண்டிருந்த சமூகங்களிலேயே ஏற்பட்டது.

இந்தப் பார்ப்பனியத்தின் ஆணாதிக்க வரலாறு, கடந்த இந்திய வரலாற்றில் கோலோச்சிய போது அங்கு இருந்து நேரடியாகப் பெண் வழிச் சமூகத்தைத் தேடுவது சாத்தியமில்லை.. இலக்கிய ஆதாரங்கள் என்பது கடந்த 3000 வருடங்களுக்கு உட்பட்டவை மட்டுமே. தனிச்சொத்துரிமையின் வரலாற்றில் பெண்கள் மீது திணிக்கப்பட்ட ஆணாதிக்க அடக்குமுறையை நியாயப்படுத்தி வந்த இலக்கியத்தில் நேரடியான ஆதாரம் திரட்ட கோருவதும், அதில் இல்லை என்ற காரணம் காட்டி அதைக் கருதுகோள் ஆக்குவதும் நகைப்புக்குரிய சூனிய அறிவாகும்.

மனித வரலாற்று ஆய்வுகள், இலக்கிய ஆதாரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவையல்ல. இது மட்டும் தான் எனின் வரலாற்று ஆய்வு என்பது கற்பனையானது. 3000 வருட மனித ஆயுள் என்பது, மொத்த மனித வரலாற்றில் சில வினாடிகளுக்கே சமமானது. அப்படி எனின் 3000 வருடங்களுக்கு முந்திய வரலாற்றை எப்படி ஆய்வு செய்வது? ஆய்வே செய்ய முடியாதா? செய்ய முடியாது என்பதே இலக்கிய ஆதாரம் கோரும் கோட்பாட்டின் உள்ளடக்கம்.



மாறாக மனித வரலாற்றில் உழைப்பின் இயங்கியல் வளர்ச்சி பற்றிய விதி தான், மனித வரலாற்றை ஆய்வு செய்யும் அடிப்படையானதாகும். இதனுடன் பல்வேறு துறை சேர்ந்த ஆய்வுகள் துல்லியமானதாக இருக்கின்றது. இலக்கியச் சான்றுகள் மட்டுமே மனித வரலாற்றை நிறுவ போதுமான கருதுகோளாக்கும் அந்த நிமிடமே, இந்த விவாதத்தின் அடித்தளம் தகர்ந்து போகின்றது. அறிவற்ற மூடத்தனத்தில் முன்வைக்கும் குறுகிய பார்வை கொண்டவர்கள், தனிச் சொத்துரிமை சார்ந்த ஆணாதிக்க வரலாற்றில் (3000 வருடங்களாக) வெளி வந்த இலக்கியத்தில் இருந்து, மனித வரலாற்றைத் திரித்து கூறும் கருதுகோள்கள், இன்றைய ஏகாதிபத்திய அமைப்பைப் பாதுகாக்கும் கண்ணோட்டத்தில் வெளிவருகின்றது.

அடுத்து 3000 வருட இலக்கியங்கள் மீதான திரிபில் ஆராய்வோம். இலக்கியம் பெண்ணின் முந்திய நிலையை வெளிப்படுத்தவில்லையா? எனின் நிச்சயமாக வெளிப்படுத்தியுள்ளது. ஆங்காங்கே சிறு சிறு விடயங்களாக, எச்ச சொச்சங்களாக, ஆணாதிக்கத்தை நிறுவும் போராட்டத்தில், தனிச் சொத்துரிமையைக் கட்டமைக்கும் போராட்டத்தில் என எங்கும் பரந்துக் கிடக்கின்றது. இங்கு தேவை வர்க்கக் கண்ணோட்டம் கொண்ட விமர்சன ஆய்வு முறையாகும். அதை இந்த நூல் கொண்டிருக்கவில்லை.

வேதம் மற்றும் மனுவின் சட்டத்திட்டத்திலும், கௌடில்யர் காலச் சட்டத்திட்டத்திலும் (பார்க்க மேல் உள்ள விமர்சனத்தை), பைபிள், குர்ஆன், திருக்குறள், சிந்துமுதல் கங்கைவரை மற்றும் இந்து மதக் கதைகள், நாட்டுப்புற இலக்கியத்தில் என உலகெங்கும் பல்வேறு இலக்கியங்களில் மாறிவந்த சமுதாயப் போராட்டத்தில், பெண் அடிமைப்படுத்திய வடிவில் பல்வேறு தரவுகளைத் தொகுத்தளித்துள்ளது. அத்துடன் 18,19 ஆம் நூற்றாண்டுகளில் நேரடியாக ஆய்வு செய்யப்பட்ட பல்வேறு இனக்குழுக்களுக்கிடையில் நிலவிய பெண்ணின் உயர்ந்த தன்மையை ஆய்வாளர்கள் தெளிவாக வெளிக் கொண்டு வந்துள்ளனர். இது ஒரு கருதுகோள் அல்ல என்று ஆய்வுகள் மிகவும் துல்லியமாக்கியுள்ளது. உழைப்பை ஒட்டிய கருவிகளின் கண்டுபிடிப்புகள், எஞ்சிய எலும்புகள், 30000 - 40000 வருடங்களுக்கு முந்திய குகை ஓவியங்கள் எல்லாம் மனிதனின் வாழ்க்கையைத் துல்லியமாக்கியுள்ளது. இந்தியாவில் ஆரிய மரபு தான் இலக்கியத்தில் உண்டு திராவிட மரபு இல்லை அல்லது ஆரியத்தில் இருந்து திராவிடத்துக்கு வந்தது என்ற பல்வேறு ஆதிக்கக் கருத்துக்கள் போல்தான், பெண்ணின் தலைமையிலான சமூக அமைப்பை நிராகரிக்கின்றனர்.

சிந்துமுதல் கங்கை வரை என்ற கல்வெட்டு நூலில் (கடந்த 3000 வருட வாழ்க்கைக்கு உட்பட்ட நூல் தான்) பல்வேறு சமூக அமைப்பு பற்றிய செய்திகள், அனுபவங்கள் யதார்த்தக் கண்ணோட்டத்தில் தொகுக்கப்பட்டிருக்கின்றது. இதில் வரைமுறையற்ற புணர்ச்சி முதல் இணைமணம், ஒருதார மணம் பற்றிய நடைமுறை சார்ந்த வாழ்க்கைக் கருத்துக்கள், மற்றும் சமூகம் பற்றிய விவாதங்களை உள்ளடக்கியுள்ளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்செங்கல் நூல். புதை பொருள் கண்டுபிடிக்கப்பட்ட போது அதன் முக்கியத்துவத்தை, வரலாற்றுப் பக்கத்தில் இருந்து திட்டமிட்டே மறைக்கப்படுகின்றது.

ஏங்கெல்சின் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலில் கூட 60 இக்கும் மேற்பட்ட கடந்த கால இலக்கிய ஆதாரங்களை முன்வைத்துள்ளார். இந்த வகையில் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

"ரோமாபுரி நிறுவப்பட்டு 568 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது கி.மு 186-இல், செனெட் பின்வருமாறு உத்தரவிட்டது.

ஃபெஸெனியா ஹிஸ்பால்லாவுக்குத் தனது சொத்தை முடிவு செய்யும் உரிமையுண்டு, அதைக் குறைக்க உரிமையுண்டு, குலத்துக்கு வெளியே மணம் புரிய உரிமையுண்டு. தனது (மரணமடைந்த) கணவன் உயிலின் மூலமாக இந்த உரிமையைக் கொடுத்திருப்பதைப் போல் அவள் இப்படி நடந்து கொள்ளலாம். அவள் சுதந்திரமான நபரை மணம் புரிவதற்கு அனுமதிக்கப்படுவாள். மேலும், அவளை மணம் புரியும் ஆணுக்கு இதனால் கெட்ட நடத்தைப் பழியும் அவப்பெயரும் சேராது."[51]

இது சட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையில், பெண்ணின் நிலைமைகள் மாறி வந்த காலக்கட்டத்திய இலக்கியங்கள் சட்டத் திட்டங்களை விமர்சனப் பூர்வமாக அணுகும் போது, முந்திய சமுதாயத்தைக் காண முடியும். ஏங்கெல்ஸ் தனது ஆய்வில் **பாஸொஃபென்** பண்டைய கால மூலச் சிறப்பான இலக்கியத்தில் இருந்தே, கி.பி.1861-இல், கண்டறிந்து முன் வைத்த ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்ணின் ஆரம்ப நிலையைக் கண்டறிந்த முதல் ஆய்வு நூல் என்பதைக் குறிப்பிடுகின்றார். பெண்ணின் வரலாற்று நிலையை முதலில் கண்டறிந்து வெளி வைத்த முறை இலக்கியத்தில் இருந்தே தொடங்குகின்றது. ஆனால் அது சமுதாயத்தின் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி ஆராயாமையால் குறைபாட்டையும், தவறையும் கொண்டே வெளிவந்தது.

இலக்கியத்தின் உள்ளாற்றல் என்பது தனிச் சொத்துடைமையின் மேல் உருவானது என்பதால், அது ஆணாதிக்க யதார்த்தத்தைக் கொண்டிருந்தது. இதில் தான் தனிச் சொத்துரிமையைப் பாதுகாக்க அதையொட்டி உருவான ஆணாதிக்கத்தை நிலை நிறுத்த ஆணின் உரிமை கோரப்படும் போது பெண்ணின் கடந்த கால உரிமைகள், எதிர்ப்புகள் கொச்சைப்படுத்தப்படுகின்றன. இதை விமர்சனப் பூர்வமாக அணுகுகின்ற போதே முழுமையான பெண்ணின் இயற்கை வரலாற்றை ஒட்டிய பெண்ணின் மதிப்பார்ந்த வடிவத்தை வந்தடைய முடியும்.

மார்க்சியம் உழைப்பின் வளர்ச்சி மற்றும் குரங்கில் இருந்து பிரிந்து வந்த மனிதக் குரங்கு மற்றும் மனிதனின் வளர்ச்சி விதி, அதில் உழைப்பின் பாத்திரம் என்ற தொடர்ச்சியில் இருந்து தான் இதை நிறுவுகின்றது. டார்வினின் கண்டுபிடிப்பான குரங்கில் இருந்து மனிதக் குரங்கும் அதில் இருந்து மனிதன் என்ற பரிணாமத் தத்துவமும் சரி, பழைய காலத்தில் வாழ்ந்து அழிந்து





போன மிருகங்கள் பற்றிய ஆய்வுகளும் சரி ஒரு கருதுகோள் அல்ல. இயற்கையின் தோற்றம், வான்வெளியில் காணப்படும் 200 கோடி சூரியன்களும் அதைச் சுற்றி வரும் கோள்களும், அதன் தோற்றம் வளர்ச்சி போன்றன எல்லாம் கருதுகோள் அல்ல.

இயற்கை வரலாற்றை மறுத்து, மனித வரலாற்றைக் இயற்கை வரலாறாகக் காண்கின்ற போது இயற்கையான உலகம் மறுக்கப்படுகின்றது. சுரண்டல் வரலாற்றை மனித வரலாறாகக் காட்டும் போது மனித வரலாறு மறுக்கப்படுகின்றது. இதை உள்ளடக்கியே இலக்கிய ஆதாரம் கோருவது உதித்தெழுகின்றது.

அண்மையில் **2000 மில்லினியம் ஆண்டு** கொண்டாட்டம் எல்லாம் இதற்கு உட்பட்ட வரலாற்றுத் திரிபாகும். மனிதன் பற்றிய ஆய்வுகளும் சரி, அனைத்து இயற்கை ஆய்வுகளும் சரி அதன் வளர்ச்சி விதியின் எல்லா இடைநிலைகளையும் நிறுவி நிறுவப்படுகின்றது. பெண்ணின் நிலையும் இதன் வழியில் தொடர்ச்சியாக எல்லா இயற்கை மற்றும் மனிதக் கண்டுபிடிப்புகள் முரணின்றி தொடர்ச்சியாக நிறுவி வருகின்றன. ஆனால் ஏகாதிபத்திய அமைப்பும் ஆணாதிக்கமும் இதைத் திட்டவட்டமாக மறுக்கின்றது. இதைக் கோட்பாட்டளவில் கருதுகோளாக மாற்றி நடைமுறைப் போராட்டத்தைச் சிதைக்கின்றது.

மேற்சொன்ன கருத்தைத் தொடர்ந்து வைக்கும் வரிகளைப் பார்ப்போம். "பெண்கள் சொத்துரிமை முறையும், தாய்வழிக் குடிமரபும், சமூக நீதியில் ஒரு வகை சமத்துவம் நிலவியதற்கான சான்றுகளும், வெளிப்படையான பாரபட்சம், அடக்குமுறை என்பன காணப்படாமையும் பெண் ஆதிக்கம் செலுத்தி அதிகாரம் செய்த ஒரு சமூக அமைப்பு ஒன்று நிலவியது என்பதற்குரிய சான்றுகள் என இம்மானிடவியலாளர்கள் நம்பினர்"[52] என்று திரிக்கின்ற போதே இப்புத்தக நோக்கம் அம்பலமாகின்றது.

"பெண் ஆதிக்கம் செலுத்தி அதிகாரம்" கொண்ட பெண்கள் அமைப்பு நிலவியது என்று ஏங்கெல்ஸ் எங்கு, எப்போது குறிப்பிட்டுள்ளார். ஆதிக்கம், அதிகாரம் போன்ற சொற்களின் உள்ளடக்கம் வர்க்கச் சமுதாயத்துக்கே உரிய வடிவமாகும். நிலவாத ஒன்றை நிலவியதாக ஏங்கெல்ஸ் பெயரில் காட்டி மறுப்பதன் நோக்கம்தான் என்ன? ஆதிக்கம், அதிகாரம் வர்க்கத் தன்மை கொண்டவை. வர்க்கத்தைக் கடந்து இது நிலவ முடியாது. ஒருவகை சமத்துவம் என்பது என்ன? பெண் ஆதிக்கம் செலுத்த அதிகாரம் கொண்டிருந்தாக ஏங்கெல்ஸ் கருத காரணமாக இருந்தது எனக் குறிப்பிடும், வெளிப்படையான பாரபட்சம், அடக்குமுறை இன்மையே காரணம் என்று விரும்பியவாறு எல்லாம் திரித்துப் புரட்டி விளக்குகின்றார்.

பாரபட்சம், அடக்குமுறை போன்றன கூட வர்க்கச் சமுதாயத்தின் விளைவுதான். உழைப்பின் மீதான சுரண்டல் அமைப்பு உருவாகாத சமுதாயத்தில் பாரபட்சம், அடக்குமுறை, ஆதிக்கம், அதிகாரம் எல்லாம் கற்பனையானது. இந்த இடத்தில் ஏங்கெல்ஸ் தனது நூலில் "பாவறுஃபெனுடைய





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தின்படி, பெண்களின் பரிபூரண ஆட்சி ஏற்படுகின்ற அளவுக்கு அந்த மரியாதை உயர்ந்திருந்தது"[51] என்கின்றார். பரிபூரணமான ஆட்சி என்பதைக் கூட ஏங்கெல்ஸ் கையாளும் போது குறிப்பிட்டவரின் கருத்து என்பதைக் குறிப்பிட்டு மிகவும் அவதானமாகக் (நிதானமாகக்) கையாள்வதைக் காட்டுகின்றது.

ஏங்கெல்ஸ் உழைப்பின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டி, அதில் உழைப்பின் வகையில் இருந்தே இனப்பெருக்கம், உழைப்பின் தன்மையைக் கொண்டே (உறவைக் கொண்டே) பெண்ணின் தலைமையை உறுதி செய்தார். இதை ஏங்கெல்ஸ் "...குழந்தையின் தாய் யார் என்பதை உறுதியாகச் சொல்லலாம்... ஆகவே பெண்வழி மட்டும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ...ஆண்கள் பல்வேறு குலங்களிலிருந்து வந்தவர்கள். பூர்வீகக் காலத்தில் பெண்கள் எல்லா இடங்களிலும் மேலோங்கிய நிலையில் இருந்து வந்ததற்கு எதார்த்த அடிப்படை இதுவே"[51] என்று ஏங்கெல்ஸ் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய காலத்தில் காட்டுமிராண்டித்தனத்தின் எல்லையில் குழுவிற்குள்ளான உறவில், ஆண் - பெண் உழைப்பின் ஒரே தன்மையைத் தாண்டி, பெண்ணின் தாய்மை காரணமாக அவள் சமுதாய விருத்தியில் இயற்கையின் அன்னையானாள். இந்த இயற்கையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பு, பெண்ணை உயர்ந்த நிலையில் மதிப்புக்கு உள்ளாக்கியது. இயற்கையை வழிபட்ட மனிதன் இயற்கையின் இன்னுமொரு வடிவமாகப் பெண்ணைக் காண்பதும் மதிப்பதும் இயற்கையல்லவா?

அத்துடன் இதை முதலில் பழைய இலக்கியப் புராணங்களில் இருந்துதான் நிறுவியது என்பது இந்த விவாதத்தில் சிறப்பு அம்சமாகும். இதற்கு வாழ்ந்து வந்த சமுதாயத்தில் நிலவிய தொடர்ச்சிகள் பலவற்றையும் தனது ஆய்வில் மேலும் துல்லியமாக வெளிக்கொண்டு வந்தார். இதை மறுத்து முன்வைக்கும் வாதத்தில் வெளிப்படை, மறைமுகமெல்லாம் கைதேர்ந்த மோசடிச் சொற்களாகும். அத்துடன் ஒரு சமுதாயத்துக்கு இருக்கமுடியாத பண்புகளைப் பிளவுபடுத்தி அதை முரணாக்கி ஏங்கெல்ஸ் பெயரில் ஆணாதிக்க உலகத்திற்கு முண்டுகொடுப்பது, கைதேர்ந்த ஏகாதிபத்திய அடக்குமுறைக்காகச் ஜோடிக்கப்படும் திரிபு வடிவிலான மோசடியாகும்.

இதை மேலும் ஆராய்வோம். "மார்க்சிய அடிப்படை ஒன்று இருந்தாலும் அதை மீறிய ஒரு தேடலும் உண்டு. சமூகப் பரிமாணங்களை, பொருளாதார அரசியல் உருவாக்கங்களின் ஊடாக விளக்க முற்படுகின்றது. அதே சமயத்தில் வர்க்கம், சாதி என்ற பிரிவுகளுக்கு ஊடாகக் கலாச்சாரக் கட்டுமானங்களை இனம் கண்டு, அரசியல் பொருளாதார உருவாக்கங்களுக்கும் கலாச்சாரக் கட்டுமானங்களுக்கும் உள்ள தொடர்பினையும் தொட்டு நிற்கின்றது... வரலாற்றையும் மானிடவியலையும் இணைத்து மார்க்சிய நெறிமுறையில் பெண்நிலை நோக்கில் செய்யப்பட்ட இவ்வாய்வு ஒரு முதல் நிகழ்ச்சியாகவே கொள்ளப்பட வேண்டும். முடிந்த முடிவுகளாகச் சமூக விஞ்ஞானக் களத்தில்



நாம் எதையும் கொள்ள முடியாது. நாம் செய்த இவ்வாய்வு இன்னும் பல ஆய்வுகளுக்கு வழி வகுக்கும் என்பதே எனது எண்ணம்"[52]

- என்று மிகக் கவனமாகத் தெரிவு செய்த வரிகள் மூலம் மூடி மறைத்தபடி மார்க்சியத்தை மறுப்பதை அடிப்படையாக்குகின்றது. இயங்கியலின் வளர்ச்சி விதியை மறுக்காது கவனமாகத் தேர்ந்தெடுத்து, முடிவுகளை வளர்த்தல் என்ற போர்வையில் மார்க்சியத்தை மறுப்பது கோரப்படுகின்றது. இதை ஆய்வுக் களத்தில் முன்நிறுத்தியதன் ஊடாக நடைமுறை வடிவம் சிதைக்கப்படுகின்றது.

எந்தக் கோட்பாடும் நடைமுறையில் தான் சரி பார்க்கப்படுகின்றது, வளர்த்தெடுக்கப்படுகின்றது என்பதை மௌனமாக்கியதன் மூலம், கண்டறிந்த உண்மைகளை நடைமுறையில் ஏற்றுக் கொண்டு "முடிந்த முடிவுகளாக" கொண்டு போராடக் கூடாது என்பதன் ஊடாக மறுக்கின்றது. மார்க்சியம் கண்டறிந்த உண்மைகளை மறுத்து நிறுவாத வரை எப்போதும் அதுவே சமுதாயத்தின் உண்மையாகவும், நடைமுறைத் தத்துவமாகவும் இருக்கின்றது, நீடிக்கின்றது.

நடைமுறையில் போராடுபவன் எப்போதும் கண்டறிந்த உண்மைகளின் மேல் நின்று சமூகத்தை மாற்றுகின்றான். ஆனால் நடைமுறையில் போராட மறுப்பவர்கள் எப்போதும் முடிந்த முடிவுகளாக எடுக்க முடியாது, கேள்விகளை எமது அரசியல் எனக் கூறிக் கொள்வதன் ஊடாக, நடைமுறைப் போராட்டத்தைத் திட்டமிட்டு மறுப்பதுடன், நடக்கும் போராட்டத்தை சிதைத்தும் ஆணாதிக்க உலகமயமாதலுக்குக் கம்பளம் விரிக்கின்றனர்.

மார்க்சியத்தின் சில அடிப்படை உள்ளடக்கங்கள் மாற்றப்பட முடியாதவை. அது மாறுகின்ற போது அது மார்க்சியமாக இருப்பதில்லை அல்லது அது வழக்கொழிந்து போகின்றது. வரலாறு மற்றும் மானிடவியலை அக்காலத்துக்கேயுரிய இயற்கை மற்றும் வரலாற்றின் மீதே மார்க்சியம் அணுகுகின்றது. இதில் இருந்தே **அடிக்கட்டுமான பொருளாதாரமே சமுதாயத்தின் அனைத்தையும் தீர்மானிக்கின்றது** என்ற மார்க்சியத்தின் அடிப்படையான உள்ளடக்கம், எப்போதும் முடிந்த முடிவுதான். இதை மாற்றவோ, விளக்கம் சொல்லவோ, இது ஆய்வுக்குரியது என்று சொல்லும் மூடிமறைத்த மார்க்சிய விரோத அலங்காரச் சொல்வாதங்கள் பின்னால் புதைந்து காணப்படுவது பாட்டாளிவர்க்க விரோதக் கண்ணோட்டமாகும்.

பூமி தட்டை அல்ல என்பது முடிந்த முடிவுதான். இது கருதுகோளாக இருக்க முடியாது. இதுபோல்தான் மார்க்சியத்தின் அடிப்படை உள்ளடக்கமும். பொருளில் இருந்து சிந்தனை தோன்றுகின்றது என்பது, முடிந்த முடிவுதான். இல்லையென்றால் அது கருத்து முதல்வாதமாகும்.

"மார்க்சியத்தை மீறிய ஒரு தேடல் உண்டு" எனின் இவ்வாய்வின் வர்க்கத் தன்மை என்ன? வர்க்கம் கடந்த பெண்ணிய ஆய்வு இருக்கமுடியுமா? "வரலாற்றையும், மானிடவியலையும்", பொருளாதாரத்தையும் மீறிய முடிந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிவாகாத ஆய்வு எந்த வகையானது? அதன் உள்ளடக்கம் என்ன? உண்மையில் இக்கேள்விக்கு நேரடியாகப் பதில் அளிக்கும் தகுதி, இதை முன்வைக்கும் யாரிடமும் இருப்பதில்லை. முதலாளித்துவப் பெண்ணின் பூர்சுவா நலன்களையும், ஏகாதிபத்தியப் பெண்ணிய நலன்களையும் உள்ளடக்கிய வடிவில் மார்க்சியத்துக்குப் புறம்பாக முன்வைக்கும் கோரிக்கையாகி அடிப்படையான ஆய்வாகின்றது. இது மார்க்சியத்தை நேரடியாகவும், மூடிமறைத்தும் மறுக்கின்றது. அடுத்த திரிபைப் பார்ப்போம்.

''இயற்கையை ஆழ்ந்து அவதானிப்பவர்கள் என்ற வகையில் பொதுவாகவே அவர்களால் (பெண் மதக்குருக்கள்) எதிர்காலத்தை முன்கூட்டி அறியமுடிந்தது. எதிர்வரும் மழை வீழ்ச்சி பற்றியும் கூற முடிந்தது.''[52]

இந்த வாதத்தில் மிக நாசுக்கான முடிந்த முடிவாகக் கருதுகோள் தாண்டி, கருத்துமுதல்வாதம் திணிக்கப்படுகின்றது. அத்துடன் **திருவள்ளுவர்** குறிப்பிட்ட **"கற்புள்ள பெண் மழை பெய் என்றால் பெய்யும்"** என்ற உள்ளடக்கம், இந்தக் கருத்துமுதல்வாத ஆணாதிக்கத்தின் பின்னால் ஒழிந்து கிடக்கின்றது. ஆணாதிக்கக் கற்புக்கும், மதக்குருவால் மழையை முன்கூட்டியே கூறும் ஆற்றலுக்கும், கோடு பிரிக்க முடியாத தொடர்பு உண்டு.

பெண்களின் நிலையை விளக்க கடந்த கால இலக்கிய ஆதாரம் எதுவும் இல்லை என்று வாதாடிய பின், பெண்ணின் மதிப்பை எடுத்துக்காட்ட கையாளும் இலக்கிய வாதத்தில் சொந்த வர்க்கக் கண்ணோட்டத்தை நிர்வாணமாக வெளிப்படுத்துகின்றார். ''எதிர்காலத்தை முன்கூட்டியே அறியமுடிந்தது'' என்பது இன்றைய பார்ப்பனிய மற்றும் மதக் கூட்டத்தின் முன்கூட்டியே அறியும் வக்கிரங்களை மறைமுகமாக அங்கீகரிப்பதாகும்.

நவீன விஞ்ஞானமே எல்லா மாற்றங்களையும் முன் கூட்டியே சொல்ல முடியாது போயுள்ளது. அதாவது பொருள் (நிகழ்ச்சிக்கான சூழல்) உருவாகாமல் விஞ்ஞான விளக்கமே சாத்தியமில்லை. அப்படி இருக்கும் போது எப்படி மந்திரத் தந்திரத்துக்கு முடியும்? இது கருத்துமுதல்வாதமாகும். "இயற்கையை ஆழ்ந்து அவதானிப்பதன் மூலம்" என்ற தேர்ந்த மோசடி வரிகளை இணைத்ததன் மூலமே, முன்கூட்டி அறிய முடிந்தது என்ற வாதம் கருத்துமுதல்வாதத்தை இயற்கையுடன் இணைக்கும் நஞ்சு வேர்களாகும்.

மனிதன் பருவக்காலத்தையும், மாறி வந்த சூழலையும் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் மீது இயற்கையாகவே பெற்றான். மழை தொடக்கம் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதன் இயல்பின் சில தன்மைகளைப் புலனுணர்வுக்கு, உட்பட்ட போதே முன்கூட்டி உணர்ந்தான். இதை மிருகங்கள் கூட அவதானித்துச் செயல்படுகின்றன. புலனுணர்வுக்கு ஏதோ ஒருவகையில் பொருள் சார்ந்து புலப்படாத எந்த நிகழ்ச்சியையும் அவன் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் முடிந்தது என்பதையே "எதிர்காலத்தை முன்கூட்டி அறியமுடிந்தது" என்ற வாதம் மூலம் முன் வைக்கப்படுகின்றது. அன்றைய மனிதன் பருவ மற்றும் கால மாற்றத்தையும் சூழல் சார்ந்து புலனுணர்வுக்கு உட்பட்டதை



அவதானித்து கூறியவனை, ஏதோ ஒருவகையில் அவனை அழைப்பதையிட்டு எமக்கு ஆட்சேபனை இருப்பதில்லை. ஆனால் பொருள்முதல் வாதம் இவைகளுக்கான காரணக் காரியத்தை வெளியிடுகின்ற போது அதையும் கருதுகோளாகக் "கூறமுடிந்தது, அறியமுடிந்தது" என்று மறைமுகமாகக் கருத்து முதல்வாதத்தை மீள நிறுவுவது அபத்தமாகும்.

மிருகத்தின் வருகையை நுகர்வதன் மூலமும், மிருகத்தைத் தொடர தடங்கள் மூலமும், நடந்து சென்ற மிருகங்களைச் செடி, கொடிகளின் அசைவின் மூலமும், எரிகின்ற காட்டு வெப்பத்தை அல்லது தீயை மணம் (வாசனை) மூலமும், மனிதன் மற்றும் எதிரி மிருகத்தை மணம் (வாசனை) மூலமும் பொழிகின்ற மழையை முகில் மற்றும் ஈரப்பதம் மூலமும் மனிதனின் உழைப்பு மற்றும் சூழலை அடிப்படையாகக் கொண்டு ஆண் - பெண் வேறுபாடு இன்றி சூழலை அறிந்து வெளிப்படுத்தினர். இதில் ஆண் - பெண் தமது உழைப்புப் பிரிவினையில் வேறுபட்ட வகையில் சிறப்புத் தகுதியையும் பெற்றனர். அனுபவவாதம் மற்றும் பழக்க தோசங்கள், இயற்கை மாற்றம் போன்ற அனைத்தையும் புலனுணர்வுக்கு உள்ளாக்கி வெளிப்படுத்தினர். இது பொய்த்துப் போவதும் உண்டு. ஆனால் இதைச் சிறப்பாக முன்கூட்டி வெளிப்படுத்தியவர்கள் மதிக்கப்பட்டனர். இதில் இருந்தே புரோகிதர் என்ற பிரிவு உருவாகின்றது. இது தனது வாழ்க்கையைச் சொகுசு தனத்தில் உழைப்பில் இருந்து அன்னியப்படுத்திய போது, இயற்கை சார்ந்த புலனுணர்வைச் சிதைத்து கற்பனையான மந்திரத் தந்திர வழிபாடுகளை முன்வைத்து, சமூகத்தினைத் தமக்குச் சேவகம் செய்ய அடிமைப்படுத்துகின்றனர்.

இன்று பெண்கள் எதுவுமற்ற, அறிவற்ற, சூனியமான மூடர்கள் என்ற ஆணாதிக்க வாதத்தைத் தகர்க்க, பெண்ணின் அறிவார்ந்த கடந்தகாலச் சமூக மதிப்பீடுகளை எடுத்து வைப்பதும், அதை முன் கொண்டு வருவதும் அவசியமாகும். இதை வர்க்கப் போராட்டம் தனது இயற்கை மற்றும் வரலாற்று இயங்கியல் ஊடாகச் செய்வதைக் கோருகின்றது. ஆனால் அன்றைய மனிதன் பொருள்முதல்வாதத்தில் இருந்து அவதானித்ததை, கருத்துமுதல்வாத நிலைக்குத் தாழ்த்தி அற்புதமாக்குவது கேவலமாகும்.

எதிர்கால மழை வீழ்ச்சியை எப்படி முன்கூட்டி கூற முடியும்? முகில் மற்றும் ஈரப்பதமான காற்று போன்ற பொருள் சார்ந்த காரணங்களைத் தாண்டி யாரும் மழையை முன்கூட்டிக் கூறமுடியாது. புலனுணர்வு சார்ந்து அனைவராலும் இதை முன்கூட்டி வெளிப்படுத்த முடிந்தது. ஆனால் இதைக் கருத்துமுதல்வாத நிலையில் மந்திரத் தந்திரந் சடங்குகள் மூலம் பிழைத்த பிரிவுகளை (சாத்திரம் பார்ப்பவன் போல், 'உரு' வரும் பெண் கூறுவது போல்) வைத்து கருத்து கூறுவது அபத்தமாகும்.

நவீன விஞ்ஞானம் கூட முகில், அதைச் சார்ந்த காற்றின் போக்கைத் தாண்டி முன்பே மழையைக் கூறமுடியாது உள்ளது அல்லவா. அப்படியிருக்க எப்படி இயற்கை அவதானம் மீது மழையை முன்கூட்டிக் கூறமுடியும்? கூறமுடியாது. மாறாக கூறமுடியுமெனில் பெண்களும் பிழைக்கும் மந்திரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்திர மோசடிக்காரர்களும் இயற்கையின் புலனுணர்வைக் கொண்டு இருந்தனர் எனக் கூறலாம். விவசாயம் மீதான பெண்களின் அறிவை, கண்டுபிடிப்பை எடுத்துக் காட்ட முன்வைக்கலாம். ஆனால் பெண்கள் பொருளைக் கடந்து சக்தி வாய்ந்தவர்களாக இருக்கவில்லை. புலனறிவுக்கு உட்பட்டவராக மதிப்புடன் திகழ்ந்தனர் எனக் கூறலாம்.

இந்தப் புலனுணர்வு அறிவு எதிர்கால நிகழ்ச்சியை இதற்குட்பட்டுக் கூற முடிந்ததே ஒழிய அதைத்தாண்டி அல்ல. எதிர்காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் முன்கூட்டி பொருள் சார்ந்து உருவான போதே புலனுணர்வுக்கு உட்பட்டு வெளிப்பட்டனவே ஒழிய, அதைத் தாண்டி பொருளின்றி எதிர்காலத்தைக் கூறிய போது மோசடியும் ஏமாற்றும் அதில் புதைந்து கிடந்தது. இதையே இக்கட்டுரை வரிகள் நியாயப்படுத்துகின்றது. "மழை தொடர்பான சடங்கு'' நடத்தப்பட்டதன் வழியில் "எதிர்வரும் மழை வீழ்ச்சி பற்றியும் கூற முடிந்தது'' என்று அறுதியிட்டுக் கூறும் போதே கருத்துமுதல் வாதம் நியாயப்படுத்தப்படுகின்றது. சடங்குகள் எப்போதும் கோரிக்கையாக இருந்தனவே ஒழிய, முன்கூட்டியே கூறுபவையாக இருக்கவில்லை. இதுதான் பொருள் முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் அடிப்படையான வேறுபாடாகும். நடைமுறையில் பெண்கள் முன்கூட்டியே கூறாது, சடங்குகள் மூலம் கோருவதை எப்படி செய்கின்றனர் எனப் பார்ப்போம்.

தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டத்தில் மழை வேண்டி அதிக குழந்தை பெற்ற பெண்களும், கன்னிப் பெண்களுமாக மொத்தம் ஏழு பேர் இணைந்து, உடலில் ஆடை ஏதுமின்றி வட்டமாகத் தமது பின் பகுதியைத் தட்டிக் கொண்டு ஆடுகின்றனர். இங்கு பெண்களும் குழந்தைகளும் மட்டும் இருப்பர். இங்கு ஆண்களுக்கு அனுமதி கிடையாது. இங்கு பெண் உறுப்பின் இயற்கையான பிறப்பின் ஆற்றலைப் போன்று, வானத்தின் மழையாற்றலைக் கோரி இச்சடங்கு நடைபெறுகின்றது. இது தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் நிகழ்வதாகத் தெரிகின்றது.

இது போன்று பெண்கள் மழையைக் கோரி மழைக்கஞ்சி காய்ச்சுவது நிகழ்கின்றது. இதிலும் பெண்கள் வீடுவீடாகச் சென்று அரிசியைப் பிச்சையாகப் பெற்று மொத்தமாகக் கஞ்சி காய்ச்சி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பர். அத்துடன் மழை இல்லாது போனால் தாம் இறக்க நேரிடும் எனப் புலம்பி ஒரு பிரிவினர் இடுகாடு செல்ல, மற்றொரு பிரிவு மழைவரும் எனக் கூறி அழைத்து வரும் சடங்கு நிகழ்கின்றது. அடுத்த நாளே மழை வரும் என்ற நம்பிக்கையை இச்சடங்குகள் வெளிப்படுத்துகின்றன.''[56]

இங்கு இச்சடங்குகள் நம்பிக்கையை வெளியிடுகின்றன. தமது சொந்த வாழ்வின் அடிப்படையான தேவையை முன்வைத்துக் கோரும் போது, இது கற்பனையான கருத்துமுதல்வாதமல்ல. வாழ்க்கை மீதான நம்பிக்கையை, இயற்கை மீதான வேண்டுதலைச் சடங்காக்கும் போது, மனிதன் இயற்கை சார்ந்த பொருள் முதல்வாதியாகத் திகழ்கின்றான். ஆனால் மழை வரும் என முன்கூட்டியே சொல்லும் சக்தியைப் பெண்கள் (பூசாரிகள்) பெற்றிருந்தனர்



என்பது கருத்துமுதல்வாதமாகும். இது இயற்கையைத் தாண்டிய வடிவில் வெளிவருகின்றது. இங்குதான் சடங்கில் பூசாரிக்கும், மக்களுக்குமிடையில் உள்ள வேறுபாடு கோடு பிரிக்கின்றது. அத்துடன் இச்சடங்கு பெண்களின் விவசாயம் சார்ந்த உரிமையை, அதன் கண்டுப்பிடிப்பைப் பெண் சார்ந்து நிறுவுகின்றது. இங்கு கேள்வியை நாம் இப்படி எழுப்ப முடியும். பொருள் முதல்வாதம் ஒரு கருதுகோளா? அதுபோல் கருத்துமுதல்வாதம் ஒரு கருதுகோளா? எனில், இல்லை என்பது தெரியும். ஆனால் மார்க்சியத்தை மறுப்பதில் விடயங்களை வெறும் கருதுகோளாக்குவது அடிப்படையாகின்றது. பொருளாதார அடிக்கட்டுமான வெளிப்பாடுகளின் வர்க்க முரண்பாட்டை மூடிமறைக்க, வெளிப்பாடுகளை வெறும் கருதுகோளாகக் காட்டுவது அவசியமாகின்றது. இவைகளை மேலும் பார்ப்போம்.

"..சங்கக் காலத்தில் சடங்குகளில் தலைமை வகித்த நிலையில் இருந்த பெண்கள் சங்கக் காலப் பிற்பகுதியில் அசுத்தத்தின் தோற்றுவாயாகத் தரம் குறைக்கப்பட்டனர் என்பதே இங்கு நமது முக்கிய கவனத்துக்குரியது''[52] என்ற வாதம் தவறானது.

சடங்குகளில் பெண்கள் முன் நின்று தலைமையேற்று நடத்துவதில், பெண்கள் இன்றும் பலதுறைகளில் காணப்படுகின்றனர். பல்வேறு சடங்குகள் சமுதாய ரீதியாகப் பிற்போக்கான ஆணாதிக்க மற்றும் காட்டு மிராண்டித்தனமாக இருந்த போதும், அதைப் பெண்கள் தலைமையேற்று நடத்துவதும், அதற்காகப் போராடுவதும் காண முடிகின்றது. பெண் சமுதாய ரீதியாகத் தரம் குறைந்து போவதும், தள்ளி வைப்பதும், ஒதுக்கி வைப்பதும் போன்ற நடத்தைகள் அசுத்தத்தின் அடிப்படையில் இருந்து அல்ல. மாறாகப் பெண் சமுதாயத்தில் சொத்துரிமையிழந்து, ஆணின் அடிமையாகி ஆணைச் சார்ந்து வாழ்கின்ற நிலையில், பெண்ணின் சமூகத் தொடர்புகளைக் கட்டுப்படுத்த அசுத்தம் ஓர் ஊடகமாகியது.

கற்பு முதல் அசுத்தம் வரை பெண்ணின் சமூகப் பங்களிப்பை மறுப்பதில் தொடங்கி, ஓர் ஆணுக்குக் கட்டுப்பட்டு வாழும் அடிமைத்தனத்தில் இருந்தே தரம் குறைக்கப்பட்டாள். அசுத்தங்கள் பற்றிய விளக்கங்கள் சமுதாய ரீதியான சமூக அடிமைத்தனத்தை உறுதி செய்ய உருவானதே. சாதிய ரீதியாகத் தாழ்ந்த சாதிகளை அசுத்தம் பிடித்தவர்களாகக் காட்டிய போது, அங்கும் அடிமைத்தனத்தை உறுதி செய்வது தேவையாக இருந்தது. இது தான் பெண்ணுக்கும் நிகழ்ந்தது. பெண்ணின் மாதவிடாய் உள்ளிட்ட இயற்கை வெளிப்பாடுகளை, கடவுளின் முன் தீண்ட முடியாத அழுக்காக்கிய போது, பெண்ணின் கடவுள் வழிபாட்டில் வாழும் சமூகத் தன்மை கூட மறுக்கப்பட்டது. பெண் கணவனை வழிபட்டு வாழ நிர்ப்பந்தித்தது. கணவனே கண்கண்ட தெய்வம் என்ற பழமொழி கூட, கோயில் வழிபாட்டில் கிடைக்கும் சமூகத் தொடர்பு கூட, பெண்ணுக்கு மறுக்கப்பட்டது.

சமூகப் பங்களிப்பு, சமூகத் தொடர்பு, சமூக உழைப்பு போன்றன தடுக்கப்படவே, ஆணுக்கு இருக்காத (இல்லாத) பெண்ணின் இயற்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்பாடுகளை அசுத்தமாக ஆணாதிக்கம் விலக்கி ஒதுக்கியது. இவை கூட கடந்த கால மனிதன், இயற்கையிடம் தமது வாழ்வைக் கோரி நடத்திய வழிபாடுகளில், சடங்குகளில் தோல்வி ஏற்படுகின்ற போது, ஏன் என்ற காரணக்காரிய தொடர்புடைய கேள்விக்கு விடை தெரியாத மனிதன், தன் மீதே பழியைப் போடுகின்றான். இந்தப் பழியைப் பின்னால் ஊடுருவி ஆராய்கின்றான்.

பொதுவான ஆணாதிக்கச் சமூக மக்கள் கூட்டத்தில் எது எல்லோருக்கும் இல்லாது விதிவிலக்காக இருக்கின்றதோ, அதுவே பலன் கிடைக்காமைக்கான காரணமாக நினைக்கத் தொடங்குகின்றான். இந்த விதிவிலக்குகளை விளக்குவதன் மூலம் பலன் கொடுக்கும் என்ற அடிப்படையை இது உருவாக்குகின்றது. இங்கு விதிவிலக்கு கூட பலனை அடைய ஓர் ஊடகமாகவும் கருதி முன்னிலைக்குக் கொண்டு வந்த தாய் வழிச் சமூக கண்ணோட்டம், ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தில் எதிர்நிலையடைகின்றது. ஆணாதிக்கம் தனது சமூகப் பலனைப் பாதுகாக்க பெண்ணுக்கும், அதிலும் குறித்த விலகல்களையும் பண்பியல் மாற்றத்துக்கு உள்ளாக்கி, பெண்ணை அடிமைப்படுத்த இயற்கையின் வெளிப்பாடுகளை, பெண் சார்ந்து ஓர் ஊடகமாக்கினர். அடுத்த ஆணாதிக்கப் பெண்ணிய விளக்கத்தைப் பார்ப்போம்.

“பெண்களின் பால்நிலைத் தன்மையையும் ஆற்றலையும் போற்றுவதன் மூலம் இதனைப் புனிதமானதாக மாற்ற சில அறிஞர்களும், உரையாசிரியர்களும் முனைகின்றனர். இந்தப் புனிதத்துவமும் ஆற்றலும் பின்னர் பெண்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நியாயங்களாக மாறின.”[52]

ஆணாதிக்கத்தின் சொந்த விளக்கம் இப்படி தான் தன்னை முகம் காட்டுகின்றது. இங்கு அறிஞர்கள் என்று மறைமுகமாகக் குறிப்பிடுவது ஏங்கெல்சையே. பெண்ணின் பால்நிலைத்தன்மையும் ஆற்றலும் பெண்ணைச் சமுதாய ரீதியாக முன்னிலைப்படுத்தவில்லையா? தாய்வழிச் சமூகத்தின் ஆதாரம் என்ன? தாய்வழிச் சமூகம் இருக்கவில்லையா? இவை எல்லாம் கற்பனையான அறிஞர்களின் புனிதமான கூற்றுக்களா?

ஆணாதிக்கம் தாய்வழிச் சமூகத்தை மறுக்கின்றது. தாய்மை ஊடாகப் பெண் தலைமை ஏற்று நடத்திய புராதான கம்யூனிசத்தை மறுக்கின்றது. செல்வி திருச்சந்திரன் அதையே பின்பக்கக் கதவு வழியாகப் பெண்ணியத்தின் பின்னால் செய்கின்றார்.

சமுதாயம் பற்றிய வரலாற்று இயங்கியல் ஆய்வாளர்கள், கடந்து சென்ற மனித வாழ்வின் நேரடி ஆதாரங்கள், கடந்த இலக்கிய ஆதாரங்கள், புதைபொருள் ஆய்வாளர்கள், உயிரியல்துறை ஆய்வாளர்கள் என்று சமூகத்தில் பல்துறை சார்ந்த, இயற்கையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாளர்கள், தாய்வழிச் சமூகத்தில், பெண்ணின் பாத்திரத்தைத் தெட்டத் தெளிவாக நிறுவியுள்ளனர். பெண் வரைமுறையற்ற புணர்ச்சியில், குழந்தையின் தந்தை யார் எனத் தெரியாத சமுதாயத்தில் தாய்வழி மட்டுமே அடையாளம் செய்த





நிலையில் (இன்றும் அதுவே உண்மை), பெண்வழிச் சமூகம் உருவானது. இங்கு பெண்ணின் குழந்தை பெறும் ஆற்றல், அதைப் பாதுகாக்கும் ஆற்றல், குழந்தைக்குப் பால் உற்பத்தி செய்யும் ஆற்றல் என்பன சமுதாய ரீதியாகப் போற்றப்பட்டது. அதாவது உயிர் வாழ்வதும், உணவு தேடுவதுமே வாழ்வாக, போராட்டமாக இருந்த போது, பெண் அதை ஈடு செய்யும் வகையில் மறு உற்பத்தி, விவசாயக் கண்டுபிடிப்புகள் பெண்ணை சமுதாய ரீதியாக மதிப்படையச் செய்தது. இந்த மதிப்பைப் புனிதம் தரம் இறக்கி விடவில்லை.

பெண்ணின் உழைப்பும், அவளின் மறு உற்பத்தியும், சமுதாய ரீதியாகத் தேவையற்று உபரி தோன்றிய போது, பெண்ணின் மதிப்பு தரம் இறங்குகின்றது. ஆணின் உழைப்பு உபரியை உருவாக்கிய போது, அது அவனின் தனிச் சொத்தான போது, அதில் இருந்து விலகியிருந்த பெண் உபரியற்ற நிலையில், ஆணின் உபரியைச் சார்ந்து இருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இதன் வளர்ச்சி பெண்ணைச் சமூக உழைப்பில் இருந்து அன்னியப்படுத்தி விடுகின்றது. தனிச்சொத்துரிமை அமைப்பில் சொத்துரிமையை இழந்த பெண் ஆணின் அடிமையாகிய போது, பெண்ணின் பாலியல் தன்மையும், ஆற்றலும் சமூக ரீதியில் இழிவாகப் பார்க்கப்படுகின்றது. இவை சமுதாய ரீதியாகத் தனிச்சொத்துரிமையை மூலதனச் சந்தையில் உருவாக்குவதில்லை. பெண்ணின் இந்த ஆற்றல் ஆணாதிக்க அமைப்பில் கொச்சைப்படுத்தப்பட்டுச் (சந்தைப் பெறுமான அற்றவை என்பதால்) சமூகத் தகுதியை இழந்து இழிந்து போகின்றது. ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் இந்தச் சமூகத் தகுதியை மீளக் கோர வேண்டுமே ஒழிய, ஆணாதிக்கப் போக்கில் அதை மேலும் இழிவுபடுத்தி கைவிட்டு விடுவதல்ல. ஆணாதிக்கம் இதன் சமூகத் தகுதியை இழிவாக்கிய போது, இதைப் புனிதமாக்கி வழிபாட்டுக்கு உரியதாக்கியே அதன் உள்ளடக்கத்தை ஒடுக்க முடிந்தது என்பது வரலாறாகும்.

இன்று மார்க்சியத் தலைவர்களைச் சோவியத் உள்ளிட்ட சீனா வரை முதலாளித்துவ மீட்சியாளர்கள் வழிபட்டுப் புனிதர்களாகக் காட்டி எப்படி உள்ளடக்கத்தை நலமடித்தனரோ, அதுவே பெண்ணின் பாலியல் ஆற்றலுக்கும் நிகழ்ந்தது. பாலியல் ரீதியாகப் பெண்ணின் திருப்தியை ஆணாதிக்கம் இதன் வளர்ச்சியிலேயே மறுத்தது. ஆணின் பாலியல் இன்பம் முதன்மையான கூறாகியது. புனிதத்தின் பின் பெண்களைக் கட்டுப்படுத்தும் போக்கில், பெண்ணின் ஆற்றலை நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. பெண்ணின் தாய்மை ஆற்றல் போற்றப்பட்டு, கட்டுப்படுத்தப்படுவதை, புனிதமாக்குவதை மறுத்து சரியான வழியில் போராட வேண்டும். வர்க்கப் போராட்டத்தை எப்படி நாம் முன்னெடுக்க முயல்கின்றோமோ, அதே வழியில் பெண்ணின் ஆற்றலைச் சரியான வழியில் நியாயப்படுத்தி ஆணாதிக்கத்தை ஒழிக்க வேண்டும். இதை மறுத்து ஆணாதிக்கம் புனிதமாக்குகின்றது என்று கூறிய படி நாமும் மறுத்தால், பெண்ணியத்தின் இயங்கியல் இயற்கையைக் கூட மறுத்து ஆணாதிக்கத்துக்குப் பின்பக்க கதவால் சேவகம் செய்யவே முடியும். அதை மேலும் பார்ப்போம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"..தாய் வழி முறை என்பது தாய்வழிச் சொத்துரிமையை நாடும் ஒரு முறையைக் குறிக்கும்."[52] ஆங்கிலச் சொல்லுக்கு விளக்கம் கொடுக்கின்ற போது கொடுத்த மறுப்பிலும், விளக்கத்திலும் தாய்வழி முறைக்குக் கொடுக்கும் விளக்கம் அபத்தமானது. தாய்வழி முறையைத் தனிச்சொத்துரிமை அமைப்புக்கேயுரிய சொத்துரிமையுடன் முடிச்சு போடுவது பெண்ணியத்தின் குருட்டுத்தனமாகும். தாய்வழி முறை என்பது தாய்மையின் வழியாக உருவானதே. குழந்தை மீதான தாயின் உரிமை, அடையாளம் கண்டு கொள்ளும் சமுதாய முறைதான், தாய்வழி முறையாகும். இதை ஆணாதிக்க அமைப்பு தனிச்சொத்துரிமையூடாக மறுத்த போது, சொத்துரிமையூடாக அடையாளம் காண்பது என்றளவுக்கு நிலைமை மாறியது. இதையே முந்திய சமுதாயத்துக்குப் பொருத்திக் காட்டுவதன் ஊடாக செல்வி திருச்சந்திரன், ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அமைப்புக்கு முந்தியது, பெண் சார்ந்த தனிச்சொத்துரிமை அமைப்பு என மறைமுகமாகக் காட்டுவதன் மூலம், வர்க்கப் போராட்டத்தையும், புராதனக் கம்யூனிசச் சமூகத்தையும் மறுக்க கனவு காண்கின்றார். இதில் இருந்து உலகமயமாதலைக் காப்பாற்ற முனையும் அடுத்த விளக்கத்தைப் பார்ப்போம்

"..சோழர் ஏகாதிபத்தியத்தின் போது தான்..."[52] ஏகாதிபத்தியம் என்ற வரையறையை எப்படி செல்வி திருசந்திரன் கோணல்படுத்தி, சோழர்காலக் கட்டத்துக்குப் பொதுமைப் படுத்துவதன் மூலம், உண்மையில் அதன் உள்ளடக்கத்தைப் பெண்ணியத்தின் பின்னால் அரித்துவிட கனவு காண்கின்றார். இவரின் வரைமுறைப்படி கிறித்தவ மற்றும் இஸ்லாமிய எழுச்சிகள், படையெடுப்புகள், இந்தியா மீதான பல படையெடுப்புகள் (அதாவது உலக வரலாற்றில் உள்நாட்டு யுத்தம் தவிர்ந்த சகல யுத்தங்களும்) எல்லாம் ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்தவையா? சோழர் காலம் ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்தவை என்றால் (இப்படித் தான் சிங்கள இனவாதம், தென் இந்தியத் தமிழர் சார்ந்த படையெடுப்பை, இனவாதக் கண்ணோட்டத்தில் விளக்குகின்றது.), அனைத்து படையெடுப்புகளும் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டவை தான். ஏன் இந்தியா அண்மையில் இலங்கை, காசுமீர், சீனா, பாகிஸ்தான், மாலத்தீவு, தெலுங்கானா என்று ஆக்கிரமித்த போது, அதை ஏகாதிபத்தியம் என்று அழைக்க முடியுமா? இல்லை.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் முதிர்ச்சிதான் ஏகாதிபத்தியத்தை உருவாக்குகின்றது. உலகைப் பங்கிட்டதன் மூலம், மூலதனச் சந்தையில் நெருக்கடி ஏற்படும்போது ஏகாதிபத்திய மோதல் வெடிக்கின்றது. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முதிர்ச்சியில், மூலதன ஏகபோகத்தில், நிதி மூலதன ஏகபோக ஆதிக்கத்தில் உருவாகின்றது. ஏற்றுமதிச் சந்தையில் மூலதன ஏகபோகம், நிதி ஏகபோகம் இதன் அடித்தளமாகின்றது. முதலாளித்துவமல்லாத நிலப்பிரபுத்துவ அமைப்புகளின் ஆக்கிரமிப்பை, படையெடுப்பை ஏகாதிபத்தியம் என்று வரையறுப்பது, மார்க்சியத்தைத் திரிப்பதாகும்.




மார்க்சியம் முதலாளித்துவத்தின் முதிர்ச்சியை ஏகாதிபத்தியம் என்று வரையறுத்ததை செல்வி திருச்சந்திரன் சோழர் காலத்துக்குத் திரித்துப் பொருத்துவதன் மூலம், ஏகாதிபத்தியத்தை அரசியல் ரீதியாகப் பாதுகாக்க மார்க்சியத்தை அரித்து சிதைக்கின்றார். மார்க்சியத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் திரித்தபடி தான், ஏகாதிபத்தியப் பெண்ணியம் தனது ஆய்வுகளைக் கடந்த காலம் மீது வைக்கின்றது. கடந்த காலம் தொடர்பாக வரைமுறையற்ற விமர்சனச் சுதந்திரம் அனைத்தையும், இன்றைய சமூக வர்க்க அமைப்புகளும் நிபந்தனைக்குட்பட்டு அங்கீகரிப்பதால், அதைச் செய்வதன் மூலம் தம்மைப் பெண்ணியவாதியாகக் காட்டியபடி, ஏகாதிபத்தியக் கோட்பாடுகளைப் பின்பக்கமாக நுழைக்கின்றனர். நடைமுறை சார்ந்த யதார்த்தச் சமூக இயக்கம் மீது அனைத்துவித ஆணாதிக்க மற்றும் அது சார்ந்த ஏகாதிபத்திய நுகத்தடியை விமர்சிக்காது தம்மைப் பாதுகாத்தபடி, ஏகாதிபத்திய நுகத்தடியைப் பிடித்தபடி கால் சறுக்காது கண் கட்டிச் செல்வதையே இந்தத் திரிபுகள் தெளிவாக நிர்வாணமாக்குகின்றன. அடுத்த திரிபைப் பார்ப்போம்.

"தமிழ் சமஸ்கிருதச் சங்கமத்தில் தோன்றி வளர்ந்த நுண்கலை, சிற்பக்கலை, போன்றவை கோயிலை மையமாகக் கொண்டே தோன்றி, வளர்க்கப்பட்டது."[52] பார்ப்பனியத்துக்காக ஏகாதிபத்தியத் தயவுடன் இது புகுத்தப்படுகின்றது. பார்ப்பனியமும், சமஸ்கிருதமும் இந்தியா முழுக்க ஆதிக்கப் பண்பாட்டு மதமாக இருந்த போதும், ஏன் தமிழ் நாட்டில் மட்டும் நுண்கலை, சிற்பக் கலை தனித்துவமாகக் காணப்படுகின்றது. இந்தக் கேள்வி தெளிவாகச் சமஸ்கிருத மொழியின் வளமின்மையைத் தெளிவாக நிர்வாணமாக்குகின்றது.

தமிழ் மொழியின் வளமையுடன் கூடிய மக்களின் உழைப்பாற்றல் சமஸ்கிருதத்தைத் தாண்டி இருந்ததால் மட்டுமே, நுண்கலையும், சிற்பக் கலையும் தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்றது. அதாவது சமஸ்கிருதமும், பார்ப்பனிய இந்து மதமும், சைவ (இங்கு பல சிறு தெய்வ வழிபாடுகள் இருந்தன.) தமிழ் நாட்டில் ஊடுருவும் முன்பே சிற்பக் கலையும், நுண் கலையும் மக்கள் கலையாக இருந்தன. இன்றைய **தமிழ்நாட்டு இந்துக் கோயில்கள் பல முன்னைய சமணக் கோயில்கள் என்பது வரலாற்று உண்மை.** சமஸ்கிருதமும், பார்ப்பனிய இந்து மதமும், நுண் கலையையும், சிற்பக் கலையையும் பார்ப்பனிய இந்துமதப் பண்பாட்டுப் படுகொலை (திருஞானச் சம்பந்தர் தலைமையில் ஆயிரக்கணக்கில் சமணத் துறவிகள் கழுவில் ஏற்றப்பட்ட வரலாற்றுக்குக் கல்வெட்டுகள் ஆதாரமாக உள்ளது.) எழுச்சியூடாக ( விடுதலைப் புலிகள் மாற்றுக் கருத்து கொண்டோரின் மீது நடத்திய வன்முறையுடன் கூடிய ஆயிரக்கணக்கான படுகொலை மூலம், கட்டமைத்த எழுச்சி போல்), கோயிலை நோக்கி இவை மாற்றப்பட்டதுடன், அதுவே அதன் தோற்றமாகக் காட்டி மக்கள் கலையை அழிக்க முனைகின்றனர். இங்கு தமிழ் மீதான சமஸ்கிருதச் சங்கமத்தில் அல்ல, ஆதிக்க வன்முறை மீது இவை நிகழ்த்தப்பட்டன. அறிவால் அல்ல சதியால் இவை சாதிக்கப்பட்டது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகல சிறுவழிபாட்டுத் தெய்வங்களுக்கும் நடத்திய கட்டாயக் குடும்ப இணைப்புகள் மீதும் இந்து மதம் ஏற்படுத்திய உறவுகள், வக்கிரங்கள் எல்லாம் அதன் சதித் தன்மையை நிர்வாணமாக்குகின்றது. பார்ப்பனியம் தனது சொந்த மதத்தை இவைகள் மீது நிறுவ முடியவில்லை. ஆனால் பின்பக்க வழியாகப் புகுந்து கொண்டது. இதில் இருந்து புத்தம், சமணம் முற்றாக வேறுபட்டு நிற்கின்றது. தமிழ் மொழியில் சமஸ்கிருத மொழிச் சொற்களைப் புகுத்தியது எல்லாம் சதித்தன்மை கொண்டவை. பொருளாதாரப் பண்பாட்டு ஆதிக்கத்தைத் தமது கையில் பார்ப்பனியச் சமஸ்கிருதம் வைத்திருந்ததால், இவைகளை இடைச் செருகல் ஆக்க முடிந்தது.

குடும்பத்தில் எப்படி ஆணின் அதிகாரம் நிலவுகின்றதோ அதுபோல், பார்ப்பனியம் ஆணாதிக்க ஒருதாரக் குடும்ப உறவுக் கண்ணோட்டத்தில், தமிழ் நாட்டில் தனது வன்முறை அதிகார ஆதிக்கத்தால் தனது மரபை உருவாக்கியது. இங்கு சங்கமம் என்பது ஆதிக்கத்தை மூடிமறைக்கும் அப்பட்டமான மற்றொரு ஏகாதிபத்தியப் பெண்ணிய ஆக்கிரமிப்பாகும். ஆணாதிக்க வரலாற்றை ஏகாதிபத்திய உலகமயமாதல் எல்லையில் வகுத்து, வர்க்கப் போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியில், கடந்த கால இலக்கியம் மற்றும் மரபுகளைப் பயன்படுத்த பின்நிற்காத ஒரு முயற்சியில், உருவான நூலே இந்த நூலாகும். இதன் ஒரு பகுதியைச் சுருக்கமாகக் கோட்பாட்டு ரீதியில் ஆய்வு செய்ததன் மூலம், இதன் முழுமையான மார்க்சிய எதிர்ப்பு வெட்ட வெளிச்சமாகின்றது.





# 22. பெண்ணின் போராடும் உரிமை பெண்ணின் உயிரைக் காட்டிலும் அடிப்படையானது.

சரிநிகர்: 112 - 113 இல், இராதிகா குமாரசாமி என்பவர் "பெண்புலிகளும் பெண்விடுதலைப் பிரச்சினைகளும்" என்ற தலைப்பிலான தொடர் கட்டுரைகள் வெளிவந்தன. இந்தக் கருத்துக்களை மறுதலித்துக் பல கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன.

இராதிகா குமாரசாமியின் அடிப்படை அரசியலைக் கேள்விக்கு உட்படுத்தி விமர்சித்து அம்பலப்படுத்துவதற்குப் பதில், பல குறைபாட்டுடன் தமிழ் மக்களின் போராடும் உரிமையின் பெயரால் எழுதப்பட்ட விமர்சனக் கட்டுரைகள் பல வெளிவந்தன. நான் இக்கட்டுரை மீது, தொடர்ச்சியாக இரு கட்டுரைகள் எழுதியிருந்தபோதும், சரிநிகர் அவற்றை இருட்டடிப்புச் செய்திருந்தது. இராதிகா குமாரசாமியின் அடிப்படை அரசியலைக் கேள்விக்குட்படுத்துவதன் மூலம் நாம் இன்றுள்ள பூர்சுவா பெண்ணியவாதப் பிரமிப்புக்களை உடைத்தெறிய முடியும்.

"எந்த வடிவத்திலான முரண்பாட்டையும் தீர்ப்பதற்குப் பதிலாகப் பலாத்காரத்தை வழி முறையாகப் பயன்படுத்துவதற்கு நான் உடன்பாடில்லை" என இராதிகா குமாரசாமி திட்டவட்டமாகத் தனது அரசியல் எது? என்பதைத் தெளிவாக்குகின்றார். "துயரம் மலையளவு தான் ஆனால் மௌனத்தைக் காத்தல் சாத்தியமில்லை" எனப் பதில் அளித்த கட்டுரை வரிகள் முந்திய கூற்றுக்கு எதிராக அமைகின்ற போதே, வர்க்க முரண்பாட்டில் ஒரு பிரிவுக்காக வாதிடுவதை, பாதுகாப்பதைக் காட்டுகின்றது.

இன்றைய உலகமயமாதல் சார்ந்த ஆணாதிக்க இனவாதத்தை வன்முறை மூலம் தகர்ப்பதை எதிர்த்து நிற்கும் அதே நேரம், இதை அம்பலப்படுத்திப் போராடும் போது மௌனத்தைக் காத்தல் முடியாது உள்ளது என மீள் வன்முறையைப் பிரகடனம் செய்கின்றார். முதலாளித்துவ எல்லா பாராளுமன்ற ஜனநாயகவாதிகளும், எதைத் தமது அரசியல் அகராதியில் செய்கின்றனரோ, அதையே இவரும் அசகுபிசகாது வெளிப்படுத்துகின்றார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் அற்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க, சுரண்டும் வர்க்க அமைதி, சமாதானம், வன்முறையற்ற பிரகடனம் எல்லாம் பேசுகின்றனர். ஆனால் சுரண்டல் வடிவம் கேள்விக்குள்ளாகும் போது சமாதானம், ஜனநாயகம், வன்முறை என எல்லா பிரகடனங்களையும் மறுத்து, எதிர் நிலையில் வன்முறையைப் பரிசளிக்கின்றனர். இது மனித வரலாற்றின் வர்க்க வரலாறாகும்.

ஏனோ தெரியாது, இவர் ஐக்கியநாடுகள் சபையில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விஷேச அறிக்கையாளராக இருப்பதோ என்னவோ, அனைத்து வன்முறைகளுக்கும் எதிராக, குறிப்பாகப் பெண்களுக்கு எதிராகத் தொடரும் வன்முறைகளுக்கு உலகளவில் தலைமை தாங்கும் ஐக்கியநாடுகள் சபையைப் பாதுகாக்கத்தான் வன்முறையை நிராகரிக்கின்றார்.

ஈராக்குக்கு எதிரான மனிதப்படுகொலை வன்முறையில் ஐ.நா. ஈடுபட்டதன் மூலம், 15 இலட்சத்துக்கு மேற்பட்ட ஏழை மக்கள் இன்று வரை இறந்துள்ளதுடன், தொடர்ந்தும் இறந்து வருகின்றனர்.

செர்பியா நாட்டில் குண்டு மழை பொழிந்து மக்கள் குடியிருப்புகள் மற்றும் அனைத்துப் பொருளாதார அடிப்படைகளையும் தகர்த்த போதும், அது பற்றி மௌனம் சாதித்து அங்கீகரித்தபடி, அதே ஐ.நா.வின் கைக்கூலியாக, கூலிக்கு மாரடித்து அவ்வன்முறையைப் பாதுகாக்க வெட்கப்படவில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது தனிச்சொத்துரிமை வடிவில் சுரண்டல் அமைப்பின் விளைவாகும். ஐக்கிய நாட்டுச் சபையானது சுரண்டல் அமைப்பின் ஜனநாயகக் காவல் நாயாகத் திகழும் எல்லா நிலையிலும், பெண்களுக்கு எதிரான வன்முறையின் காவலனாக இருப்பது நிர்வாணமானது. வன்முறை பற்றிய அறிக்கைகள் சுரண்டல் அமைப்பைப் பாதுகாக்க, தனிமனிதனைக் குற்றவாளியாக்கும், இந்தச் சுரண்டல் அமைப்பினை நியாயப்படுத்த, எடுக்கும் புள்ளிவிபரத் தொகுப்புக்கே பயன்படுகின்றது.

ஆணாதிக்கம், சாதி ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை, நிற ஒடுக்குமுறை, சுரண்டல் என அனைத்தும் வன்முறை சார்ந்ததே. உலகத்தின் அனைத்து இயக்கங்களும் வன்முறை ஊடாகக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. பொதுவில் அமைதி என்பது இருக்கும் வன்முறையைப் பாதுகாக்கும், நியாயப்படுத்தும் கோட்பாடாகும். சமுதாயத்தில் இருக்கும் முரண்பாடுகளைத் தீர்க்க வன்முறை அரசியல் அவசியமில்லை என அடித்துக் கூறும் இராதிகா குமாரசாமி வர்க்க வன்முறையாளனின் காலில் விழுந்து கெஞ்சக் கோருகிறார்.

ஒரு முதலாளியிடம் கூலியைக் கெஞ்சியும் காலைப்பிடித்தும் கோரக் கோருகின்றார். சிங்கள இனவாதிகளிடம் தமிழீழ மக்கள் பணிந்து நின்று கேட்கக் கோருகின்றார். ஆண்களிடம் பெண்கள் அமைதியாகத் தலைகுனிந்தபடி கெஞ்சக் கோருகின்றார். இதுதான் ஐக்கிய நாட்டுச்சபை அவருக்கு வழிகாட்டும் பெண்ணிய வழியாகும். அதாவது ஒரு பெண்ணை ஆண் பாலியல் வன்முறைக்கு





உட்படுத்தும் போது எதிர்த்துப் போராடாது அமைதியாக வன்முறையை ஏற்று, பின் பேரம் பேசி, அதே ஆணைத் திருமணம் செய்ய வேண்டும் என்கிறார். இதுதான் பலாத்காரத்திற்கு உடன்பாடு இல்லை என்று கூறியபடி செய்ய நினைப்பதாகும்.

இன்று நடைபெறும் உலகமயமாதல் சூறையாடலைக் கைக்கு விலங்கிட்டபடி மௌனமாக, அமைதியாக ஏற்றபடி, மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிக பிச்சையாக நிதி உதவி வழங்க கோரி, இரங்கி கோரவேண்டும். இதுதான் இராதிகா குமாரசாமியின் அரசியல் அகராதி. ஏகாதிபத்திய, நவகாலனித்துவ ஆக்கிரமிப்பை எதிர்த்து வன்முறை வேண்டாம் என்கிறார். மாறாக, மாற்று வழி பொலிசாக நின்று சேவை செய்ய கோருகின்றார். இவர்களின் நோக்கமும் பூர்சுவா பெண்ணியவாதம் பற்றிப் புதிய உலகமயமாதலைப் பற்றியும் புரிந்து, அதற்கு இவர்கள் சார்பாகக் கதைக்கப் பழகவேண்டும் என்கிறார். அது சரி பெண்கள் காலம் காலமாக ஆயுதம் ஏந்திப் போராடவில்லை என்பது, ஆணாதிக்கம் மட்டுமின்றி மதக்கோட்பாடுகளின் தொடர்ச்சியும் ஆகும். மனிதச் சமூகம் காட்டுமிராண்டிச் சமூகமாக இருந்த போது, பெண்கள் தமது உணவுக்கும் தமது குழுவைப் பாதுகாப்பதற்கும் ஆயுதம் ஏந்தி ஆண்களைப் போல போராடினார்கள் என்பது உண்மையானது என, எல்லாப் பெண்ணியவாதிகளுக்கும் தெரியும். ஆனால் இவர்களுக்கு அவை கசப்பானவை.

சங்க இலக்கியத்தில் ஆதாரங்கள் கேட்பதும், பார்ப்பனிய இந்து மதத் தலைவர்களிடம் கேட்பதும் ஒன்றே. ஆணுக்குப் பெண் அடிமையான பின் தான் சங்க இலக்கியம் உருவானது.

சங்க இலக்கியத்துக்கு முந்திய தொல்காப்பியத்தில் வெட்சித் திணையில் உள்ள துறைகளில் ஒன்று கொற்றவை நிலை ஆகும். (தொல்: நூற்பா:59) இதில் மன்னன் போருக்குப் போகும் முன், பெண் தெய்வமான கொற்றவைக்கு முன் வாள், வேல் முதலியவற்றை வைத்து வணங்கிச் செல்வதன் மூலம், பெண்ணைத் தலைவியாகக் கொண்டு மதித்து வழிபடும் முறை பழைய சமுதாயத்தின் எச்சமாகும்.

ரிக் வேதத்தில், "இரவிலே நடந்த போரிலே கேலனுடைய மனைவியான விச்பலையின் கால், பறவையின் சிறகைப்போல் துண்டிக்கப்பட்டது. உடனே நீங்கள் அவள் நடந்து செல்ல அவளுக்கு இரும்புக் காலைத் தந்தீர்கள். அந்தப் போர் மறைத்து வைக்கப்பட்டிருந்த செல்வத்தைப் பற்றுவதற்காக நடந்தது."[55] பெண் யுத்தத்தில் ஈடுபட்டது மட்டுமின்றி, அதன் நோக்கம் மற்றும் பெண் தன்னை எப்படி பாதுகாத்தாள் என்பதை எல்லாம் இது காட்டுகின்றது.

"சந்திரகுப்த மவுரியரின் காலத்தில் (கி.மு 323-300) பெண்கள் படையிலும் பணியாற்றி வந்தனர். அவர் வேட்டைக்குப் போகின்றபோது பெண்கள் குழு ஒன்று அவருடைய மெய்க்காப்பாளராகத்"[57] தேர்களிலும், குதிரைகளிலும், யானைகளிலும் ஆயுதம் ஏந்திச் சென்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைய பாண்டிய நாட்டைப் பெண்கள் ஆண்டனர். இலங்கையிலுள்ள வன்னிப்பகுதியில் நடைபெறும் "நாச்சிமார் கோயில் வழிபாடுகள்,"[58] பெண்கள் தலைமையில் ஒல்லாந்தரோடு போராடி மடிந்த ஏழு பெண்களின் நினைவாக நடப்பது, பெண்களின் போராட்ட வரலாற்றையும், மக்களின் பங்குபற்றலையும் காட்டுகின்றது.

ஆனால் ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யப் புறப்பட்ட கைக்கூலிகள் வரலாற்று ஆதாரம் இல்லை என்று கூறி, பெண்களின் போராட்டத்தைச் சிறுமைப்படுத்துவது பெண்ணியமாகின்ற போதே, ஆணாதிக்கத்தின் ஆழமான பெண்ணியத் திரிபுகளையும் புரிந்து கொள்ளமுடியும்.

சங்க இலக்கியத்திற்குச் சற்று முன் சென்றால், பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடியதும் தலைமை தாங்கியதும் ஆவணமாகவுள்ளது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பெண் யுத்தத்தில் ஈடுபட்டதை உள்ளடக்கிய செங்கல் நூல் திரட்டில் பெண்ணின் நிலையைத் தெளிவாக்கியுள்ளது. இந்தச் செங்கல் கல் வெட்டை இப்படியே தொகுத்த நூல் தான் **இராகுல்ஜி "சிந்துமுதல் கங்கைவரை"** ஆகும். இந்நூலைப் படித்தால் ஓரளவுக்கு உண்மையான விபரங்களைப் பெறலாம். இது போல் அல்லியின் கதை போன்ற பல பெண்களின் வீரவரலாறுகள் எமக்கு முன்னுள்ளது.

பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்ததும், தனது சமூகத்தைப் பாதுகாக்கப் போராடிய மனித வரலாற்றையும் ஆதாரங்களின்றி பெண்விடுதலையை நோக்கிச் சிந்திப்பவர்களுக்குக் கூட இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், மனித வரலாற்றுத் தொடக்கம் ஆண் பெண்ணை அடக்கியதல்ல. ஆண் சமுதாயத்தில் பெண் அடங்கி அவன் தயவில் வாழ்ந்தவளும் அல்ல. இருவரும் சமூகமாகப் பெண் உள்ளிட்ட வாழ்வுப் போராட்டமாகவே இருந்துள்ளது. ஏன் மனிதகுல வரலாற்றில் பெண்கள் தான் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி போராடிய வரலாறும், ஒரு சரியான பெண்ணியவாதிக்குத் தெரிந்துதான் இருக்கும். ஆனால், இராதிகா போன்றோருக்குத் தமது ஆணாதிக்கத் தலைமையைப் பாதுகாக்க, பெண்ணின் உரிமையைப் பறித்ததைக் கோட்பாட்டுத்தளத்தில் கொச்சைப்படுத்துவது அவசியமாகவுள்ளது.

"இரண்டாவதாக விடுதலைப்புலிகளின் ஆண் - பெண் ஒருமை நிலைத்தன்மையைக் குறிப்பிடலாம். அதாவது ஆணையும் பெண்ணையும் ஒரே விதமாகச் செயலாற்றுவித்தல். இது பெண்மைக்கான சாவுமணி என்று கூறலாம்" என இராதிகா குமாரசாமி கூறுகின்றார். ஆண் - பெண் சமத்துவத்தை மறுக்கும் போது விடுதலைப்புலிகளின் மீதான செயற்தளத்தில் மட்டுமல்ல, எல்லாத் தளங்களிலும் இது கருக்கொள்கிறது.

நாம் விடுதலைப்புலிகளின் அரசியல் போராட்டவடிவம், ஒழுங்கு அமைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். ஆனால், பெண் - ஆண் இடையில் உள்ள இடைவெளி குறைக்கப்படும் போது, முரணற்ற ஜனநாயக நிலையில்



நின்று அதை நாம் வரவேற்போம். அதன் அடிப்படையில் பெண்கள் ஆயுதம் ஏந்தும் உரிமையைப் பாதுகாப்போம். பெண்கள் இன்று ஆண்களைப் போல் உள்ளனர் எனில் (ஆணாதிக்கத்தில் அல்ல அறிவு, வீரம், உடை ... என்று பல துறைகளில்) நாம் பெருமைப்படவேண்டும். அதற்காக ஒப்பாரி வைக்கக் கூடாது. ஒரு பெண் தலைமயிரை வெட்டி, நகையின்றி உள்ளபோது பெண்மைக்குச் சாவுமணி அடிக்கின்றது எனக்கூறுவது நகைப்புக்குரியது. ஏன் ஆண்கள் கூட முன்பு தலைமயிர் வளர்த்தும், நகையணிந்தும் இருந்தனர். ஆண் - பெண்ணுக்கிடையில் இது ஓர் அடிப்படை வேறுபாடாக முன்னைய சமூகத்தில் இருந்தது இல்லை. ஆனால், இன்று பெண்ணைக் கல்லாக்கிய போதும், அழகியல் பதுமையாக்கிய போதும்தான் இதைப் பெண்மை என்ற பெயரில் தொடரும் உண்மையான நோக்கம் என்ன என்று பார்ப்பதற்கு முன், இம்மாற்றம் விடுதலையாகிவிடாது.

ஏனெனின், பெண்ணின் விடுதலை என்பது, பெண் - ஆண் நிலைக்கு வருவதில்லை, மாறாக ஆண் - பெண் இருவரும் மூன்றாவது நிலையை அதாவது, ஆணாதிக்கமும் பெண்ணடிமையும் அற்ற நிலையை வந்தடைவதாகும். நகையணிதல், தலைமயிர் வளர்த்தல் பெண்மை என்ற பெயரில், பெண்ணை ஏகாதிபத்தியம் எப்படி அழகிய கவர்ச்சி பதுமையாக்கி சந்தையை விரிவாக்குகின்றதோ, அதில் இதை மறுக்கும் போது ஏற்படுத்தும் சிதைவை எதிர்த்தே இது எழுகின்றது.

பெண் இந்த அணிகலன்களைக் கைவிடுவதால் யாருக்கு நட்டம்? ஆணாதிக்க அமைப்புக்கு அதிலும் தனிச்சொத்துரிமை பொருளாதார அமைப்புக்குப் பாரிய சிதைவைக் கொடுக்கும். அதாவது சந்தையைப் பெண்ணின் அங்கம் மீது, பெண்ணின் பண்பாட்டு வடிவங்கள் மீது, அழகுபடுத்திக் காட்டி, கட்டமைக்க முடியாது போனால் அழகு சாதன வர்த்தகம் முற்றாகச் சிதைந்து போகும். இதனால் ஆணாதிக்கம் பெண்ணை மரபாக அடையாளப்படுத்திய வடிவம் சிதைகின்ற போது, அது ஆணாதிகத்துக்கு எதிரான போராட்டத்தின் அங்கமாகி, உலக ஏகாதிபத்தியமும், அதன் தொங்கு சதையான ஐ.நா.வும் தகர்ந்து போகும்.

பெண்கள் முடி வளர்த்து, காதல் உணர்வு ததும்ப ஆண்களுடன் கூடியுள்ளவரை, இந்த உலக ஒழுங்கு மாறாது என்பது தான் இராதிகா குமாரசாமி முதல் ஏகாதிபத்தியம் வரையிலான கொள்கை. அதுதான் பெண்களுக்கு அழகியல் சாதனங்களை உற்பத்தி செய்தும், விளம்பரம் செய்தும் பெண்கள் அதைப் பற்றி சிந்திக்கவும் கோருகின்றனர். பண்பாட்டுக் கலாச்சாரத் தளத்தில் பெண்ணின் வருணனைகள் எல்லாம் பாலியலில் பதுமையாக்கும் அல்லது வக்கிரத்தைக் கொட்டும் வகையில் எல்லா உறுப்புகளும் காட்டப்படுகின்றது, அழகுபடுத்தப்படுகின்றன.

பெண்மைக்கான இராதிகா குமாரசாமியின் இன்னுமொரு விளக்கம் தருவதைப் பார்ப்போம். "இரக்கச் சுபாவம், சகிப்புத் தன்மை, சமூகஉறவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேணல், சாந்தம் இது போன்ற குணங்கள் எல்லாம் மனிதர்களுடன் இணைந்து செயற்படும் போது அவர்கள் பாவித்திருக்கிறார்கள். இந்தப் பண்புகள், குணங்கள் எல்லாம் நீண்ட காலமாகப் பெண்களின் நற்பண்புகளாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டவை. இவை எல்லா நிலைமைகளிலும் மாறுபடாமையாகத் திகழவேண்டிய முக்கிய பண்புகளாகும்."

இவைகளுக்கு வர்க்கம் கிடையாதா? ஏன் இந்தப் பெண்கள் இரக்கம், சகிப்பு, சமூகஉறவு, சாந்தம் போன்றவற்றைப் பொதுவில் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு, உயர்சாதிப் பெண்கள் வழங்கவில்லை. தமிழ்ப் பெண்களுக்குள் உயர்சாதிப் பெண்கள் ஏன் வழங்கவில்லை? தமிழ் பெண்களுக்குச் சிங்களப் பெண்கள் ஏன் வழங்கவில்லை? கறுப்பு பெண்களுக்கு வெள்ளையினப் பெண்கள் ஏன் வழங்கவில்லை? மூன்றாம் உலக நாட்டுப் பெண்களுக்கு மேற்கு நாட்டுப்பெண்கள் ஏன் வழங்கவில்லை? ஏன் சொந்த மருமகளுக்குக்கூட மாமியார் ஏன் வழங்கவில்லை? இப்படி எத்தனையோ உண்டு.

ஏன் இவைகளை வழங்க மறுத்தபடி, கோட்பாட்டளவிலும் நடைமுறை அளவிலும் வன்முறை எனக் கூறி ஒப்பாரி வைக்கும் போது, மற்றைய பெண்ணுக்கு இந்தப் பண்புகளை மறுத்து வன்முறையைக் கையாளும் போது கேள்வியே இல்லையா?

இவை ஆணாதிக்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்டவை. ஆணின் தேவையைப் பூர்த்தி செய்ய பெண் அடங்கிப் போகவும், பெண்கள் மூலம் சமூக ஒழுங்கை ஏற்படுத்தவும் திணிக்கப்பட்டவையே. இது பெண்ணின் இயல்பான குணமல்ல. மாறாக வீரம், செயல், ஆற்றல், பரஸ்பர மதிப்பு என்பனவற்றை ஆண் - பெண் சமத்துவ நிலையில் தேடவேண்டும்.

இவைகளை எல்லா நிலைமைகளிலும் மானுட ஆளுமையாகக் காணவேண்டும் என்பது, வர்க்கப் போர் நடக்கும் போது, ஒரு முதலாளியை இரக்கம், சகிப்பு, சமூகஉறவு, சாந்தப்படி பாதுகாத்து, வர்க்கப்போருக்கு எதிராக இருக்கக் கோரும் இராதிகா குமாரசாமியின் அரசியல், இன்றைய உலக ஒழுங்கைத் தொடர்வது எப்படி என்பதை மையமிட்டுள்ளது.

மேலும், அவர் "பெண்கள் இராணுவ மயப்படுகின்ற நிலைமை முன்பைவிட அதிக அச்சுறுத்தலான ஒன்றாகும்'' எனக் கூறும் போது சிங்கள இனவாதத்தையும், ஏகாதிபத்திய உலகமயமாதலையும் பாதுகாக்க முனைகின்றார். இராணுவவாதம் மட்டுமல்ல பெண்கள் அரசியல் முதல் சகலதுறைகளிலும் முன்வருவது அச்சுறுத்தல் எனின், அது ஆணாதிக்கத்துக்கே என்பது தெளிவானது. இது அடிப்படையில் சுரண்டல் அமைப்புக்கு அச்சுறுத்தல் ஆகின்றது.

விடுதலைப்புலிகளின் அரசியல் மக்கள் போராட்டத்திற்குப் பதில் இனப் பிரிவுகளின், இனப் போராட்டமாகச் சீரழிந்தபோது, அது இனவாதச் சிங்கள





அடிப்படைவாதத்துக்குச் சாதகமாக இருந்தது, இருக்கின்றது. இந்நிலையில் புதிய படைப்பிரிவுகளை உருவாக்கி பெண்களை வீட்டுக்கு வெளியில் விடுதலைப்புலிகள் கொண்டு வந்தபோது, பெண்களின் படைப்பிரிவுகள் சிங்கள இனவாதத்திற்குச் சவால் விடுகின்றன. இந்தப் பெண்கள் அணிதிரள்வது என்பது, இந்திய துணைக் கண்டத்தின் சமூகக் கட்டமைப்பின் பெண்ணின் அடங்கிப் போகும் போக்கை, அதன் அடிப்படை உரிமையைக் (ஆணாதிக்கத்தைக்) கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இது எதிர்காலத்தில் இந்திய சமூகப் பெண்ணின் விழிப்புணர்வுக்கு ஊன்று கோலாகியுள்ளது. இது எதிர்காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கும், அது சார்ந்த தரகு அமைப்புகளுக்கும் விடப்படும் ஒரு சவாலாக எழுந்துள்ளது. ஜனத்தொகையில் பாதிப்பிரிவு அடங்கியுள்ளவரை (இது சுரண்டும் வர்க்க ஆதிக்கத்தில் அமைதி காத்தலாகும்.), சுரண்டும் வர்க்கம் தனது நிலையை இட்டு அலட்டிக் கொள்ளப் போவதில்லை. அதைத் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கீழ் அணிதிரண்ட பெண்கள், (விடுதலைப்புலிகளின் நடவடிக்கை பிழையாக இருந்த போதிலும்) இந்திய துணைக் கண்டத்தின் பண்பாட்டுக்குச் சவாலாக உருவாக்கியுள்ளது. எதிர்காலத்தில் இதன் விளைவுகள் தெளிவாகப் பிரதிபலிக்கும்.

இதையிட்டு அச்சுறுத்துவதாகக் கூறும் இராதிகா குமாரசாமி சரி, சிங்கள இனவாத அரசும் சரி, சுரண்டல் பிரிவும் சரி சொல்ல வருவது "பெண்ணே நீ மீளவும் அடுப்படிக்குப் போ'' என்றுதான். பெண் வீதிக்கு வந்தால் பயப்படுகின்றார்கள் என்றால் அவர்கள் ஆணாதிக்கவாதிகளும் அதைச் சார்பவர்களுமே ஆவர்.

ஆண் - பெண் வேறுபாடு இன்றி பெண் போராடவும், ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யவும் கோருவது ஒரு பெண்ணின் அடிப்படை உரிமையாகும். சமூகம் வன்முறையில் உள்ளவரை, வன்முறை திணிக்கப்படும் வரை அதற்கு எதிராக வன்முறையைக் கையாளும் உரிமை பெண்களுக்கு அவசியமும் அடிப்படையுமான உரிமையாகும்.

ஓர் இனம், ஒரு மதம், ஒரு தேசியம், ஒரு சாதி மீது வன்முறையை ஒரு பிரிவு கட்டவிழ்த்து விடுமாயின், அதை எதிர்த்துப் போராடுவதும், சொந்த ஜனநாயகத்தை, மனித உரிமையை மீட்கப்போராடுவதும் பெண்ணின் அடிப்படை உரிமையாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பில் பெண்களின் உரிமை நிலை நாட்டப்படுதல், பெண்விடுதலையை அடிப்படையாகக் கொள்ளாமை என்பன அரசியல் ரீதியில் விமர்சனத்திற்கு உரியவையே தவிர, போராடும் உரிமையை மறுப்பதில் மையப்படவில்லை.

ஒரு பெண் ஆணைப்போல் போராடும் சமூகக் கடமையின் மீது நின்றபடிதான் தனது விடுதலை நோக்கியும் போராட வேண்டும். அதற்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியில் ஒருபோதும் சாத்தியமில்லை. பெண் தனது உரிமையை மீள வென்றெடுக்கவும் போராடவும் சகிப்பு, அமைதி, சாந்தம், சமூகஉறவுகளைப் பின்பற்றுவதால் ஒருபோதும் பெறமுடியாது. பெண் தனக்காகப் போராடவும், இதற்கு வன்முறை பரிசாகக் கிடைப்பின், தற்பாதுகாப்புக்காக வன்முறையை முன்னெடுக்கும் உரிமையைத் தனதாகக் கொண்டுதான் பெண்விடுதலையை அடையமுடியும். ஏகாதிபத்தியப் பெண்களின் அமைப்புக்கள் தமது பூர்சுவா கண்டுபிடித்தல்களில் நின்று அமைதி, சாந்தம் பற்றி கூறும் போது எல்லாவிதமான சொற்பதங்களும் உண்மையில் பெண்களுக்கு எதிரான ஆணாதிக்கச் சார்பானவை என்பதில் சந்தேகமில்லை.

இராதிகா குமாரசாமி மேலும் கூறுகையில் "இலங்கையை நோக்கினாலும் சரி, முழு உலகை நோக்கினாலும் சரி, முழு உலகையும் எடுத்துக் கொண்டாலும் சரி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித உரிமைகளை ஈட்டிக் கொள்வதற்கு எதிராகப் பெருந்தடைக்கற்களாக உள்ளவை மத - இன மற்றும் தேசியவாதத் தத்துவார்த்தங்களே ஆகும். இந்த யதார்த்த நிலையை... எதிர்நோக்க விரும்பவில்லை" என இராதிகா குமாரசாமி தனது அங்கலாய்ப்பை வெளிப்படுத்துகிறார்.

உலக மனித உரிமைகளுக்குச் சவால் விடுபவைகள் இவையா? அல்லது வேறு ஒன்றா? எனப் பார்ப்போம். மனித உரிமைகளுக்குச் சவால் விடுபவை ஏகாதிபத்தியமும், சுரண்டல் அமைப்பு ஆகும். அப்படியிருக்க மத, இன தேசியவாதம் எப்படி சவாலாக இருக்கமுடியும்?

மத, இன தேசியவாத எழுச்சிகள் என்பது மனித உரிமைகள் மறுக்கப்படுதல் என்பதிலிருந்தே தோற்றம் பெறுகிறது. மனிதர்களை அடிமைப்படுத்தும் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள்தான், மத, தேசிய மற்றும் இனவாதமாக வெளிப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்வன்முறையை (போராட்டத்தை) நிராகரிப்பதன் மூலம் அந்த மக்கள் ஒடுக்கப்பட்டபடி வாழும் அமைதிதான், மனித உரிமையின் ஜனநாயகம் என வாதிட முனைகின்றார். அதாவது, இன்றைய உலகப் பொருளாதாரச் சூறையாடும் அமைப்பு வடிவைக் குலைக்க முனையும் போராட்டங்களைத் தான், மனித உரிமைக்குச் சவால் விடுகின்றது என்கிறார். அதாவது மனிதனை மனிதன் சுரண்டும் உரிமைதான் ஜனநாயகம் என்கின்றார். ஒரு முதலாளி சுரண்டும் உரிமையையும், ஒரு தொழிலாளி சுரண்டப்படும் உரிமையையும் ஏற்றுக் கொள்ளும் மனித உரிமைதான் உன்னதமான ஜனநாயகத்தின் சின்னம் என்கிறார்.

இன்று சிங்கள இனவாதத்தை எதிர்த்துப் போராடுவதுதான் இலங்கையில் மனித உரிமைக்குச் சவாலாக இருக்கிறது என்கிறார். சிங்கள இனவாதத்துடன் இணைந்து சலுகைகளைக்கோரிப் பெறுவது தான் தமிழ்ப்பிரிவின் கடமையே ஒழிய, எதிர்த்துப் போராடுவது அல்ல என்கிறார். பெரும்பான்மை இனத்தின்



இன வன்முறை அரசு ஆதிக்கத்தை எதிர்க்காத, தமிழின அமைதிதான் இலங்கையில் மனித உரிமையைப் பேண அடிப்படையாகும் என்கிறார். தமிழ் மக்களுக்குச் "சமஷ்டித் தீர்வு" தான் சரி எனக் கூறுவதன் மூலம், சிங்கள இனவாதத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் அடக்குமுறையின் கோட்பாட்டை அப்படியே எடுத்து, தமிழ் மக்களுக்கான ஜனநாயகமாகச் சமாதானத்தின் பெயரால் திணிக்க முனைகின்றார்.

தமிழ்மக்களுக்கு உண்மையான சமாதானம், ஜனநாயகம், மனித உரிமை என்பது சுயநிர்ணய உரிமையில் தங்கியுள்ளது. சுயநிர்ணயத்தை நிராகரித்த சமஷ்டி தீர்வு என்பது சிங்கள இனவாதத்திற்குட்பட்ட இனவாதத் தீர்வுகளையே எம்மீது திணிக்க முயல்வதாகும்.

சங்ககால இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்ற இராகவன் (விமர்சகர்) அவர்கள் "கன்னிப் பெண்கள் எதிரியுடன் போர் புரிவதற்கென உண்மையில் ஒருமுறை ரீதியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு முன் நிகழ்வைக் கூறமுடியுமா?" என வினா எழுப்பும்போது, இவர் ஒரு பெண்ணியவாதியா? என்ற கேள்வியே எஞ்சி நிற்கிறது. தொப்பிக்கு ஏற்ற தலையைச் செய்ய எண்ணிய இவர் உலக மற்றும் தமிழ் மரபை விபச்சாரம் செய்து ஆணாதிக்கத்துக்கு முண்டு கொடுக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 23. பெண் விடுதலையின் பின்னால், திரிக்கப்பட்ட ஆணாதிக்க நிலை நிறுத்தல்கள் மீது!

இயற்கை மற்றும் மனித வரலாற்றைத் தனிச் சொத்துரிமை அமைப்புக்குத் தகுந்த மாதிரி வெட்டி, திருத்திக் காட்டுவதன் மூலம், ஆணாதிக்க வரலாற்றை இயற்கை வரலாறாகக் காட்டும் முயற்சியில், மனித உணர்வுகளைக் கொச்சையாகப் பயன்படுத்துவது அதிகரித்துச் செல்லுகின்றது. இந்த வகையில் உளவியல் மீது தமது ஆணாதிக்க வக்கிரத்தைத் தீர்ப்பதைப் பார்ப்போம்.

"தனக்கில்லாத பிள்ளைப்பேறு ஆற்றல் பெண்ணிடம் இருப்பதைக் கண்டு ஆண் பொறாமையில் புழுங்கியிருப்பான். பெண்ணின் பேறு ஆற்றல் பற்றிய ஆணின் தாழ்வு மனப்பான்மையை **ஃபிராய்ட்** என்பவர் **'குழந்தைப் பேறு பொறாமை'** என விளக்குகின்றார். ஃபிராய்டின் சமகால உளப்பகுப்பாய்வாளர் தியோடர் ரெயிக், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் சடங்குகளைக் கள ஆய்வு செய்து அவர்களது சடங்கிற்கு விரிவான உளப்பகுப்பாய்வு விளக்கம் தந்துள்ளார்.

பேறு காலத்தில் பிள்ளைப் பேறு வலியில் பெண் அவதிப்படுவது போல், அப்பழங்குடி இனத்திலுள்ள ஆண், தானும் குழந்தைப் பேறு வலியால் அவதிப்படுவதாகப் பாவனைச் சடங்கு நிகழ்த்துவான். இதன் நனவு மனப்பொருள் அவளின் வலியை இவன் வாங்கிக் கொள்வதாகக் கருதப்படுகிறது.

பெண் மீதான ஆணின் இந்த அன்பு உணர்வுக்குள்ளே பகை உணர்ச்சி ஒளிந்துள்ளது."[59] ஃபிராய்ட்டின் இந்த ஆய்வு மிகவும் விசித்திரமானது. பிரசவ வலியில் ஆண் பங்கு கொள்ளும் அன்பின் பின், பகைமை ஒளிந்திருப்பதாகக் கூறும் வக்கிரம், முதலாளித்துவத் தனிச் சொத்துரிமையின், சொந்த வர்க்கக் கண்ணோட்டமேயாகும். தாய்மை, தாய்மைப் பேறில் குழந்தையைப் பெற்றெடுத்து, பாலூட்டி அன்பைச் சொரிகின்ற (பொழிகின்ற) கூட்டு வாழ்வில், தாய்மை குழந்தை மீது பகைமையைப் பாராட்டுவதில்லை. அன்புக்குப் பின்னால் பகைமை, பொறாமை இருப்பதாகக் கூறி எடுக்கும் எடுகோள், எவ்வளவு பேடித்தனமாகத் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் தகர்ந்து போவதை நாம் காணமுடியும்.



சடங்குகள், உழைப்பில் ஈடுபடுவதில் தொடங்கி பகிர்வதில் உருவாகின்றது. பெண்களின் தாய்மை உணர்ச்சிகள், அதன் விளைவுகளில் கூட்டு வாழ்வில் இருந்து ஆண் பங்கு பற்றுவதை (பெறுவதை) உள்ளடக்கிய சடங்குகள் பகைமை பாராட்ட, பொறாமையைத் தீர்த்துக் கொள்ள உருவானவையல்ல. மாறாகக் கூட்டு வாழ்வின் அடிப்படையான உள்ளடக்கமாகும்.

மூலதனத்துக்கே உரிய போலியான அன்பும், மறைமுகமான பகைமையும், சொந்த வர்க்கப் பொறாமையில் இருந்து உருவாகின்றது. இதை, அந்த உணர்ச்சிகள் ஊடுருவாத மக்களிடையே புகுத்திக் காட்டுவது, முதலாளித்துவ ஆய்வாளர்களின் வக்கரித்த பார்வையாகும். தனிச்சொத்துரிமை சுரண்டல் அமைப்பு வடிவில் உருவாக்கிய ஆணாதிக்க அமைப்பைப் பாதுகாக்க, பொறாமையை இயற்கையின் வரலாற்றுத் தொடர்ச்சியாகக் காலாகாலமாக இருப்பதாகக் காட்ட, குழந்தைப் பேற்றில் திரித்துக் காட்டுவது அவசியமாகிவிடுகின்றது.

இங்கு உளவியல் மனப்பாங்கு வானத்தில் இருந்தா! குதித்தெழுகின்றது. சமூகப் பொருளாதார அமைப்பில் இருந்தல்லவா உருவாகின்றது. அன்பு, பொறாமை, காதல்... போன்ற மனித உணர்ச்சிகள் தனிச் சொத்துரிமை சுரண்டல் அமைப்பின் வர்க்க வெளிப்பாடாகும். இதை மூடி மறைத்த விளக்கங்கள் ஆணாதிக்க அமைப்பைத் திரித்துக் காட்டுவதாகும்.

ஃபிராய்டின் ஆய்வு தொடர்பாக லெனின் கூறுவதைப் பார்ப்போம். "(பாலுறவுப் பிரச்சினை குறித்து) இந்தப் பிரசுரத்துக்கு விஞ்ஞான மேற்பூச்சுக் கொடுக்கும் பொருட்டு பிராய்டின் கருதுகோள் இதில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது படுமோசமான அபத்தமே அன்றி வேறில்லை... ஃபிராய்டின் தத்துவம் தற்போது மிகுந்த மோஸ்தருடையதாகி (Fashion) விட்டது. பல்வேறு கட்டுரைகளிலும். விஞ்ஞான ஆய்வுரைகளிலும், பிரசுரங்களிலும், பிறவற்றிலும் - சுருங்கக் கூறுமிடத்து முதலாளித்துவச் சமுதாயத்தின் குப்பை மேட்டில் அத்தனைச் செழிப்புடன் மண்டிவிட்ட அந்தத் தனிவகையான இலக்கியத்தில் எடுத்துரைக்கப்படும் பாலுறவுத் தத்துவங்களிடம் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஓயாமல் தனது உந்தியை (வயிறை) நினைத்துத் தியானம் புரியும் இந்திய ஆண்டியைப் போல எந்நேரமும் பாலுறவுப் பிரச்சினைகளிலேயே முழு நாட்டம் கொண்டுள்ள இவர்களை நான் நம்புவதில்லை. பெரும்பாலும் வெறும் கருதுகோள்களேயான, அதுவும் பல சந்தர்ப்பங்களில் தான் தோன்றித்தனமான ஊகங்களேயான, இந்தப் பாலுறவுத் தத்துவங்கள் அபரிமிதமாகியுள்ளதற்குச் சொந்த தேவைகளே காரணம் என்பதாகத் தோன்றுகிறது எனக்கு. முறைகேடான அல்லது மட்டு மீறிய தனது பாலுணர்ச்சிக்கு முதலாளித்துவ நெறியின் முன்னர் நியாயம் கற்பிக்க வேண்டும், கண்டிக்கப்படல் ஆகாதென வாதாட வேண்டுமென்ற விருப்பமே இந்தத் தத்துவங்களுக்குரிய மூல ஊற்றாகும்"[60] என்று வக்கரித்த பாலியல் ஆய்வுகள், விளக்கங்கள் ஆகியவற்றை லெனின் மிகத் தெளிவாகவே அம்பலம் செய்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போன்ற அடுத்த சமூகத் திரிபைப் பார்ப்போம் “பெண்ணுடைய மனித மறு உற்பத்தி ஆற்றல் இயற்கையாக நடந்தால் அதைக் கட்டுப்படுத்த வழியற்றவனாக நெடுங்காலம் ஆண் தவித்திருப்பான். இவனது தாழ்வு மனப்பான்மை இவனை அவளுக்கு எதிரியாக்கி இருக்க வேண்டும்.”[59]

இப்படி ஆணாதிக்க வரலாற்றைத் திரித்தபடி, சொந்தச் சுரண்டல் அமைப்பைப் பாதுகாத்தபடி, ஆணாதிக்க அமைப்பை ஜோடித்துக் காட்டுகின்றனர். பெண் தலைமை தாங்கிய சமுதாயத்தில், எப்படி ஆணின் தாழ்வு மனப்பான்மை பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கியது? எப்படி, அதைச் சாதிக்க எந்த சக்தி ஆணுக்குக் கிட்டியது? என்ன சமூகப் பொருளாதார அதிகாரம், பெண்ணை மீறி ஆணுக்குக் கிட்டியது? எப்படி அது சாத்தியமானது? இதெல்லாம் பெண்ணின் மறுஉற்பத்தியில், அதை ஆண் கட்டுப்படுத்த முடியாத தாழ்வு மனப்பான்மையில் ஏற்பட்டதாக, ஆணாதிக்க அமைப்புக்கு விளக்கம் கொடுக்க முதலாளித்துவம் முனைகின்றது. முதலாளித்துவ அமைப்பின் அச்சாணி ஆணாதிக்கமாக இருக்க, அதைத் திசை திருப்புவது வர்க்க அமைப்பைப் பாதுகாக்குமல்லவா? இதில் இருந்தே பாட்டாளி வர்க்க ஆய்வுகளை மறுத்துரைக்க, எல்லாவிதமான விலகல்களையும் முன்வைப்பதில் முனைப்பாக முன்வைக்கின்றனர்.

பெண்ணின் மறு உற்பத்தி மீதான தாழ்வு மனப்பான்மை, ஆணைப் பெண்ணுக்கு எதிராக நிலை நிறுத்தியது எனின், அது தான் இன்று வரை பொது அடிப்படையா? அப்படியெனின் இன்று பெண்கள் குழந்தைகளைப் பெற மாட்டோம் என்று, தனிப்பட்ட ஆண் எதிர்ப்பில் (ஆணாதிக்க அமைப்பை அல்ல.) முதலாளித்துவப் பெண்ணியப் பிரகடனங்கள், எந்த வகைப்பட்டன? பெண்களின் உளவியல் பிரமை ஆணாதிக்க வழியில் சீரழிவாகின்றது அல்லவா!

பெண்ணின் தாய்மை சார்ந்த மறுஉற்பத்தி, சமுதாய ரீதியாகப் போற்றப்பட்ட நிலையைத் தகர்த்தது எல்லாம் இந்தத் தனிச்சொத்துரிமை சார்ந்த சுரண்டல் அமைப்பு தான். இந்த அமைப்புக்கே உரிய உணர்ச்சிகள் பெண்ணை இழிவுபடுத்தியதே ஒழிய, அடிமைப்படுத்தவில்லை. அடிமைப்படுத்தப்பட்ட பெண் மீது, உணர்ச்சிகளின் வேற்றுமைகள் மீது இழிவைப் புகுத்தியது.

இயற்கையின் உழைப்பு வடிவத்தைத் திரித்து முன்வைக்கப்படும் வாதத்தைப் பார்ப்போம். “புராணம் சடங்குக்கு முந்திய வடிவம்”[59] என்கிற திரிபு, மனித உழைப்பைக் கருத்து முதல்வாதத்துக்குள் இட்டுச் செல்லுகின்றது. புராணம் உருவாகிய பின்பே சடங்கு தொடங்குகின்றது என்பது, பொருளை மறுக்கின்றது. **புராணம் எப்படி உழைப்பை மீறி உருவாகியிருக்க முடியும்?** உழைத்து அதைப் பகிர்ந்துண்ட மனிதன், தனது கூட்டுச் செயலை வெளிப்படுத்தும் நடைமுறையையே, சடங்காகச் செய்ய முனைகின்றான். உழைப்பினுடைய வெற்றி தோல்விகளின் விளைவுகளை இயற்கை மீதான அறியாமை மீது வெளிப்படுத்தும் போது, சடங்கு அதன் வடிவமாகின்றது. இந்தச் சடங்கில் ஈடுபட்ட மக்கள் கூட்டத்துக்கு விளக்கம் கொடுத்தோர், புல்லுருவியாக வளர்கின்ற போதே, கற்பனையான புராணமாகச் சடங்கு




மாற்றப்படுகின்றது. இது மட்டுமே புல்லுருவியாக வாழ அடிப்படையைக் கொடுக்கின்றது.

இன்றைய நவீன மதங்களின் தோற்றங்கள், மதம் மூலம் மூலதனத்தைப் பாதுகாக்கும் உலகமயமாதல் நோக்கத்துக்கு அப்பால், புல்லுருவிகளாக வாழும் பிரிவுகள் மக்களின் உழைப்பை அற்புதங்களின் பின், கடவுளின் பின் சூறையாடி வாழ, மதங்களை முதலாளித்துவ விளம்பர வழியில் விளம்பரம் செய்வதைக் காணமுடிகின்றது. மனிதனின் இயற்கை மீதான வழிபாட்டைத் திசை திருப்பி, ஏதோ தாங்களே அதைச் சாதித்துத் தருவதாகக் காட்டும் புல்லுருவித்தனத்தில், வழிபாட்டையே கட்டமைக்கின்றனர். சடங்குகள் பல கற்பனையான நடத்தைகள் மீது கட்டமைக்கப்பட்ட போதும், அது கருத்துமுதல்வாதமாக விளக்கி விடமுடியாது. ஏனெனின் பொருள் சார்ந்த உழைப்பை வெளிப்படுத்தும் போது, இயற்கையான பொருள்முதல்வாதம் மீது சடங்கின் தன்மை பிறக்கின்றது. ஆனால் சடங்கில் இருந்து சமுதாயத்துக்கே புல்லுருவியான வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட புராணம், திட்டவட்டமாகக் கருத்துமுதல்வாதத் தன்மை கொண்டவை. புராணத்தின் பின்னால் சமுதாயம் ஒட்டு மொத்தமாகவே புல்லுருவித்தனத்துக்குள் சிதைக்கப்பட்ட போது, கருத்துமுதல்வாதப் புராணம் சடங்கை விளக்கி வழி காட்டிய வழியில், சடங்கு மேலும் இயற்கை பொருள்முதல்வாதத்தில் இருந்து அன்னியமாகி, கருத்துமுதல்வாதமாகச் சீரழிந்தது.

மக்களின் உழைப்பை, அதன் விளைவான உற்பத்திப் பொருளை, எப்படி மூலதனமாக்கி மக்களிடம் இருந்து அன்னியமாக்கி பின், இன்று மூலதனமே உழைப்பை உருவாக்கியதாகக் காட்டும், காணும் பாதையைப் போல் சடங்கும் புராணத்தின் பின்னால் சீரழிந்தது. இதில் இருந்து சடங்கைப் புராணத்துக்கு பிந்தியதாகக் காட்டுவதும், அதன் போக்கில் சமுதாய நடத்தைகளைத் திரித்தும் முன்வைக்கப்படுகின்றது. ஆணாதிக்க அமைப்பை நிரந்தரமாக காட்டுவதும், பெண் வழிச் சமூகத்தைக் கொச்சைப்படுத்துவதும் நிகழ்கின்றது.

☛☛☛☛☛☛

**சிமோன்தெபோவா** என்பவரை முன் வைத்து, இன்று பெண்ணியல் வாதிகளால் போற்றப்படும் வார்த்தையாக **“ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. பெண்ணாக ஆக்கப்படுகின்றார்”**[61] என்கின்றனர். இதை **இரவிக்குமார், பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ்** தமது நூலின் முன்னுரையில் எடுத்து விளக்கியே, தமது ஆணாதிக்கத்தை முன்வைக்கின்றனர்.

‘ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை பெண்ணாக ஆக்கப்படுகின்றார்’ என்ற வார்த்தையின் பின்னால், ஆணாதிக்க அமைப்பு பாதுகாக்கப்படுகின்றது. ஆணாதிக்கத்தைப் பெண் உறுப்பு மீதும், பெண்ணின் பிறப்பைத் தனிப்பட்ட வளர்ப்பில் ஏற்படுவதாக, இது விளக்கம் கொடுக்கின்றது. ‘ஒருவர் பெண்ணாகப்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறப்பதில்லை' என்ற வாதம் கருத்துமுதல்வாதமாகும். ஆணாதிக்கச் சமுதாயம் ஒன்று இருப்பதை மறுக்கின்றது.

பெண் பிறக்கும் முன்பே, ஏன் கருத்தரிக்கும் முன்பே, ஆணின் விந்து பெண்ணைத் தீர்மானிக்கும் முன்பே, பெண் பெண்ணாகவே இருக்கின்றாள். இங்கு பிறந்த பின் 'பெண்ணாக ஆக்கப்படுவதில்லை. பெண்ணாகப் பிறப்பதில்லை என்ற வாதத்தின் பின், ஆக்கப்படுகின்றாள் எனின், பெண், பெண்ணாக ஆக்கப்படாமலும் போய்விடும் என்ற உள்ளடக்கத்தையும் இது கொண்டுள்ளது. இது அராஜகவாதப் பெண்ணியத்தின் கொச்சையான ஆணாதிக்க விளக்கமாகும். சமுதாயத்தில் இருந்து, அதற்குப் புறம்பாக யாரும், யாரையும் சுதந்திரமாக ஆக்க முடியாது.

ஒரு பெண், பெண்ணாகச் சமுதாயத்தில் அடையாளப்படுத்தப்பட்ட ஆணாதிக்கச் சமுதாயத்தில், பிறப்பிலோ, அதன் பின்போ பெண் வரையறுக்கப்படுவதில்லை. அதற்கு முன்பே அவை தீர்க்கமாக வரையறுக்கப்பட்டு விடுகின்றது. பிறப்பும், வளர்ப்பும் ஆணாதிக்க அமைப்பில் ஒரு சமூக நிகழ்வு மட்டுமே ஒழிய, புதிதாக ஒன்றைச் சமுதாயத்துக்குப் புறம்பாக உற்பத்தி செய்வதில்லை. பெண்ணாகப் பிறக்காமல் மாடாகப் பிறப்பதில்லை அல்லவா! அப்படியெனின் பெண்ணாகவே பிறக்கின்றாள்.

"ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. பெண்ணாக ஆக்கப்படுகின்றார்" என்கின்ற போதே, ஏதோ புதியதைக் கற்பனையாகச் சமுதாயத்துக்கு வெளியில் இருந்து கொண்டு வரப்படுவதாகக் காட்டும், கருத்துமுதல்வாதம், அராஜக அரசியல் போக்கில் இட்டுக் கட்டப்படுகின்றது. பெண்ணின் பிறப்பு, பெண்ணின் வளர்ப்பை ஆணாதிக்கச் சமுதாயத்துக்குப் புறம்பாக, பெண் உறுப்பின் வெளியேற்றத்தில், உறுப்பின் வளர்ச்சியில் காட்டுவதன் மூலம், ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அமைப்பின் அச்சாணி அசைவின்றி பாதுகாக்கப்படுகின்றது. பிறப்பும், வளர்ப்பும் ஆணாதிக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. பெண்ணின் உழைப்பாற்றல் மறுக்கப்பட்ட தனிச் சொத்துரிமை அமைப்பே, பெண்ணின் பிறப்புக்கு முன்பே பெண்ணை அடிமையாக்கி விடுகின்றது.

பெண் சமுதாயத்தில் உருவாகும் முன்பே, பால் ரீதியான வேறுபாடு கொண்ட மனித உயிராகப் பெண் இருந்தாள். இங்கு பிறப்பும், ஆக்கப்படுதலும் ஏன் நிகழவில்லை? நிகழ்வுகள், பின்னால் ஆணாதிக்கச் சமுதாய மாற்றத்தில் நிகழுகின்றது. ஆணாதிக்கச் சமுதாய மாற்றம் தனிச் சொத்துரிமையில் உருவாகின்றது. தனிச் சொத்துரிமை அமைப்பு தான் பெண்ணை உருவாக்குகின்றதே ஒழிய, பிறப்போ, வளர்ப்போ உருவாக்குவதில்லை. அது பின்னால் தனிச் சொத்துரிமை அமைப்பின் மீது நிகழ்கின்றது. யாரும் இருக்கின்ற தனிச் சொத்துரிமை அமைப்புக்குப் புறம்பாகப் பிறக்கவோ, ஆக்கப்படவோ முடியாது. அப்படி முடியும் என்பது கற்பனையான ஆணாதிக்கத்தைப் பாதுகாக்கும் அப்பட்டமான விபச்சாரமாகும்.





தொடர்ந்து முன்னுரையில் "பெண்ணியம் என்கிற சொல் பொதுவாக எல்லாப் பெண்களாலும் ஆதரவான ஒன்றாகக் கருதப்பட வேண்டும். ஏனென்றால் அது பெண்களுக்கு ஒரு புதிய தன்னிலைத்துவத்தை வழங்குகின்றது."[61] பெண்ணியம் எப்படி தன்னிலைவாதத்தைப் பெண் விடுதலையில் ஏற்படுத்தும் ஏகாதிபத்தியப் பெண்ணியவாதம், முதலாளித்துவப் பெண்ணியவாதம்... எப்படி தன்னிலைவாதத்தைக் குறைந்த பட்சம், தனது சொந்த வர்க்க எல்லைக்குள் ஏற்படுத்தும்? அதாவது இப்பெண்ணியம் எப்படி பெண்ணுக்கு ஆதரவானது. ஏகாதிபத்தியப் பெண்ணியம் போன்றன எந்தத் தளத்தில் பெண்ணை விடுவிக்கின்றது? பெண்ணை விபச்சாரியாக்குகின்றதே ஒழிய, வேறு எதையும் விட்டுச் செல்வதில்லை.

அடுத்து தன்னிலைவாதம் எப்படி பெண் விடுதலையைப் பெற்றுத்தரும்? தன்னிலைவாதம் பெண்ணுக்கு ஆணாதிக்க முகத்தை, அதன் போக்கில் ஏற்படுத்துகின்றது. தனிச்சொத்துரிமை அமைப்பில் அதற்குள் கோரும் தன்னிலை கண்ணோட்டம், ஆணாதிக்கத்தின் மறுவார்ப்பே. தன்னிலைவாதம் கோட்பாட்டுத் தளத்தில் அராஜகவாதத்தின் தனிமை வாதமாகும். சமூகத்தை எதிர்த்த தன்னிலைவாதம், உள்ளடக்கத்தில் தனிச் சொத்துரிமை சார்ந்து ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்தது. இதையே இந்த மார்க்சிய எதிர்ப்புக் கும்பல் தனது பெண்ணியமாக முன்நிறுத்துகின்றது.

இந்த எல்லையில் இவர்கள் "மார்க்சியத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து சென்றதில் தான் கோட்பாட்டளவில் பெண்ணியம் முதலான பிரச்சினைகளை விவாதிக்க வேண்டியதன் அவசியம் எங்களுக்குப் புரிந்தது. மார்க்சியத்தின் மீது எந்தெந்த திசைகளிலிருந்து விமர்சனங்கள் வைக்கப்பட்டன என்பதைத் தேடத் துவங்கிய.."[61] எங்கெல்லாம் மார்க்சியத்தை எதிர்த்து முதலாளித்துவ எச்சில் சோற்றுக்குப் பிழைத்த கும்பல்களின் மலத்தில் இருந்து தான் இவர்கள் பெண்ணியம் பேசுகின்றனர்.

மார்க்சியத்தின் அடிப்படை கோட்பாட்டை மறுத்து நிறுவ முடியாத இந்தக் கும்பல்கள் மார்க்சிய நெருக்கடி பற்றி பிதற்றுகின்றனர். மார்க்சியம் ஒவ்வொரு விடயத்தையும், முரணற்ற வகையில் இயற்கை மீது நிறுவி வளரும் இயங்கியலாக உள்ளது. இதன் எந்த உள்ளடக்கத்தையும், இது வரை எந்தத் தத்துவமும் மறுத்து நிறுவ முடியவில்லை. இதில் இருந்தே மார்க்சியம் மீது காழ்ப்பு கொண்டு, விவாதத்தில் இருந்து விலகி, திரித்து விவாதிக்க முடிகின்றது. பெண் எப்படி அடிமையானாள்? என்பது முதல் அவளின் விடுதலை எப்படி வரும்? என்ற நடைமுறை பாதை வரை, மார்க்சியம் துல்லியமாக விளக்கிப் போராடி வருகின்றது. இதை மீறி எதையும் யாராலும் முன்வைக்க முடிந்ததில்லை, முடிவதில்லை.

இந்த இலட்சணத்தில் "... ஆயிரக்கணக்கான வருடங்களாக அடிமைத்தனத்தை அவன் ஏன் ஏற்றுக் கொண்டான்? என்ற கேள்விகள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடையளிக்கப் படாமலேயே உள்ளது."[61]விடை தெரியாது நடிக்கும் இந்தக் கூட்டம் தான், அடிமையாக வாழும் பெண்ணுக்கு விளக்கம் தருகின்றது. ஆனால் ஆயிரம் ஆண்டுகள் அடிமை வாழ்க்கை முறை பெண்ணுக்கு எப்படி ஏற்பட்டது? என்பதற்கு மட்டும், பதில் தரவில்லை.

ஆனால் மார்க்ஸ் அதற்கு தெளிவாகப் பதிலளித்துள்ளார். ஆனால் அதை எடுத்து ஆராய்வோ, அதற்குப் பதில் தரவேண்டும் என்ற அரசியல் நேர்மையற்ற நிலையில் தான், பெண்ணிய அடிமை பற்றி புலம்புகின்றனர். தனிச்சொத்துரிமை அமைப்பில் மூலதனம் மக்களை அடிமைப்படுத்திய வரலாற்றில், எப்படி மக்கள் இழிந்து வாழ்கின்றனர் என்பதை, இயற்கை வரலாற்றில் புரிந்து கொள்வது சாதாரண பிழைப்புவாதத்தினால் சாத்தியமில்லை. யதார்த்த வாழ்க்கையில் மக்களை நடைமுறை ரீதியாக மூலதனம் எப்படி அடிமைப்படுத்தி சிதைக்கின்றது என்பதையும், இதை மறுக்கின்ற பிழைப்புவாத அறிவுத் துறையினர்கள் மூலதனத்துக்குக் கால் செருப்பாவதையும் மூடிமறைத்தபடி தான், எப்படி அடிமையானார்கள் என்று மூக்கை இழுக்கின்றனர்.

இப்படி இழுத்தபடி "பாலியல் மையம் என்பதே உளவியல் வாழ்வை முன்செலுத்துகிற விசையாக உள்ளது என்பதையும், இதனால் உயிரியல் எடுகோள்களும், வாழ்வின் சமூகக் காரணிகளும் மனத்தைக் கவிந்துள்ளன என்பதையும் நிரூபணம் செய்தது."[61] வறுமையில் சிக்கி, எலும்பாகி நாயாக வாழும் ஒரு மனிதனின் உளவியல் என்பது பாலியல் விளைவாகின்றதா? ஆணாதிக்கச் சீதனம் மற்றும் அடக்குமுறையில் சிக்கி தவிக்கும் பெண்களின் உளவியல் எங்கு உருவாகின்றது? சிறுகுழந்தையில் உழைத்து களைத்து இயந்திரமான குழந்தையின் உளவியல் எங்கு உருவாகின்றது?

∴பிராய்டின் பிதற்றல்களில் இருந்து பாலியலை மையமாக முன்வைத்த விளக்கமும், எந்த உளவியலும், இதற்குப் பதிலளிக்க முடியாது. மத்தியதர வர்க்கத்தின் ஊசலாட்டத்துக்கு ஆணாதிக்கத்தின் ஆதரவுடன், இவை தீனிபோட மட்டும் உதவும். சமுதாயத்தின் உளவியல் வெளிப்பாடுகள் எல்லாம் சமூகப் பொருளாதார விளைவுகளின் வெளிப்பாடாகும். இது நீண்ட சமுதாயப் பரப்பில் தனக்குள் மாறுபட்ட சமூகப் பொருளாதார விளைவுகளால் மேலும் துல்லியமாகப் பிரிகின்றது. விளம்பரம் முதல் இந்தச் சமுதாய ஏகாதிபத்தியக் கட்டமைப்பு ஈறாகப் பாலியலை முன் தள்ளி அதில் மூலதனச் சந்தை விரிவாகின்றது. இந்தப் பாலியல் மையம் ஆணாதிக்கத்தின் வக்கிரத்தில் கொப்பளிக்கின்றது. இதில் இருந்தே ஏகாதிபத்தியத் திசை வழியில், பாலியல் மையமாக, உளவியல் கூறாக அனைத்தையும் இதற்குள் கோடிட்டுக் காட்டுகின்றனர். இதில் இருந்தே "உயிரியல் எடுகோள்களும், வாழ்வின் சமூகக் காரணிகளும் மனத்தைக் கவிந்துள்ளன"[61] என்று பிதற்ற முடிகின்றது. ஏகாதிபத்திய உலகமயமாதல் இதை முன்வைக்கின்ற போது, அதன் சீடர்கள் வேறு எதைத்தான் எமக்கு முன்வைக்கமுடியும், வழிகாட்டமுடியும்.





சமூகப் பொருளாதார விளைவுகளை மூடி மறைக்க "மனிதனின் ஒழுக்க நியதிகள் புனிதமாக உதித்தவை அல்ல. மாறாகப் பெற்றோர்களும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் கையாண்ட கல்வி முறைகளிலிருந்தே உருக்கொண்டவை. இது ∴பிராய்டின் முக்கியமான நான்காவது கண்டுபிடிப்பாகும்"[61] என்று எடுத்து முன்வைக்கின்றனர். இதில் இருந்துதான் பிரான்சின் வலதுசாரிக் கட்சிகள் குழந்தைகளின் வன்முறைக்குக் காரணமாகப் பெற்றோர்களைக் குற்றவாளியாக்க முடிகின்றது. அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றும் கோருகின்றன. நவீன அரசுகளின் சிறைகளில் நிரப்பப்படும் தனிமனிதர்களைக் குற்றவாளியாக்கி சிறையில் தள்ளுவது எது? தனிமனித - தனிப்பட்ட வளர்ப்பு விதிக்குள் (பெற்றோர், சுற்று வட்டாரம்) பெற்ற ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவச் சட்டங்கள் தண்டனையை அளிக்கின்றது. சமூக அவலங்கள், குற்றங்களைத் தனிமனிதன் சார்ந்து தண்டனையையும், தீர்வையும் வெளிப்படுத்துகின்றன. சினிமா தனிமனித வாதத்தில் மாற்றத்தைப் பிரகடனம் செய்கின்றன. இது ∴பிராய்டின் முதலாளித்துவச் சமூக விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னை நிலை நிறுத்துகின்றது.

அடுத்து ஒழுக்கங்கள் புனிதமானவை அல்ல என்பதன் ஊடாக, ஒழுக்கம் என்ற ஒன்று இல்லை என்கின்றனர். அதாவது கருத்துமுதல்வாதத்தை முன்தள்ளுகின்றனர். இந்தச் சுரண்டல் ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஒழுக்கம் எப்போதும் புனிதமானவையல்லதான். ஆனால் சமுதாயத்தில் ஒழுக்கம் என்ற ஒன்று எப்போதும் மாறி வந்த வண்ணமுள்ளது. இது உழைப்பின் மீதான மனிதனின் கூட்டு உழைப்பு தொடங்கிய நாள் முதல் இது உருவாகி விடுகின்றது. எந்த ஒழுக்கமும் சமூகப் பொருளாதார மாற்றத்துடன் தன்னை மாற்றி வந்துள்ளது. இது இருக்கின்ற பொருளாதார எல்லைக்குள் தன்னைத் தொடர்ச்சியாகத் தகவமைக்கின்றது. ஒழுக்கமற்ற சமுதாயம் அராஜகவாதத்தின் காட்டுமிராண்டித்தனமாகும்.

இங்கு பெற்றோரினதும், சுற்றுவட்டாரத்தினதும் கல்வி முறையில் ஒழுக்கம் உருவாக்கப்படுகின்றது என்ற வாதம் அப்பட்டமான தனிச்சொத்துரிமைவாதமாகும். மூலதனம் தனது தனிமை வாதத்தில் நின்றபடி, சமூகத்தை மறுக்கும் எல்லைக்குள் ஒழுக்கத்தை, அதன் எல்லைக்குள் விளக்க, படைக்க தனது சமூகப் பொருளாதார வடிவத்தில் நின்று கூவுகின்றது. சமூகப் பொருளாதார ஆதிக்கத்தைச் சுரண்டல் வர்க்கம் கைப்பற்றியுள்ளதால், தொடர்ச்சியாகத் தனது நலன் சார்ந்து மாற்றிச் செல்லுகின்றது. இதன் எல்லையில் தனிமனிதச் சுதந்திரம், ஜனநாயகம் என்ற மூலதனக் கோட்பாட்டில் நின்று, ஒழுக்கம் தனிமைப்பட்டு இருப்பதாக நம்புகின்றது, காட்டுகின்றது.

ஒரு நாட்டில் ஒரே விதமான ஒழுக்கமும், சில நாடுகளில் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒரே விதமாக இருக்க காரணம் என்ன? ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு சுற்றுவட்டாரமும் வேறுபட்ட ஒழுக்கத்தை ஏன் ஏற்படுத்தவில்லை? இது ∴பிராய்டின் கண்டுபிடிப்பைக் கேலி செய்கின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலப்பிரபுத்துவ அமைப்பில் சிறு சுற்றுவட்டாரத்துக்குள் நிலவிய சமூகப் பொருளாதார வட்டத்துக்குள், வெற்றிகரமான வேறுபட்ட ஒழுக்கம் வெளிப்படுவதற்கான சமூகப் பொருளாதாரச் சூழல் காணப்பட்டது. விரிந்த சமூகப் பொருளாதார அரசுகள் மையப்பட்ட சந்தைகளை உருவாக்கிய எல்லா காலக் கட்டத்திலும் ஒழுக்கம் பொது வடிவமாக இருக்கின்றது. இங்கு பெற்றோரும் சுற்றுவட்டாரமும் சமூகப் பொருளாதார எல்லைகள் தான், குழந்தையின் ஒழுக்கம் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும். இவையல்லாது சுயேட்சையாக, சுதந்திரமாக வானத்தில் இருந்து புகுத்த முடியாது.

சமூகப் பொருளாதாரச் சமூக எல்லைக்குள் ஒழுக்கத்தைப் புகட்டும் போது, இதில் குறிப்பான முரண்பாடுகள், பெற்றோரின் பெற்றோர் விட்டுச் சென்ற பழைய ஒழுக்கத்துக்கும், யதார்த்த ஒழுக்கத்துக்கும், எதிர்கால ஒழுக்கத்துக்கும் இடையிலான மூன்று தலைமுறையில் மாறி வந்த சமூகப் பொருளாதார இடைவெளியால் ஏற்படுகின்றது. இதை மறுத்து, "குழந்தையின் விருப்பத்துக்கும் அதை ஒடுக்குகின்ற பெற்றோரின் செயலுக்கும் இடையிலான முரண்பாடே பிற்காலத்தில் ஒரே நபருக்குள் இயல்பு ஊக்கத்துக்கும் இடையிலான முரண்பாடாக மாற்றம் கொள்கிறது."[61] நவீன முதலாளித்துவத்தின் சட்ட ஒழுக்க விதிகளை அடிப்படையாகக் கொண்டே இதை விளக்குகின்றனர். விருப்பங்கள் எங்கிருந்து உருவாகின்றன?

விருப்பங்கள் சமூகப் பொருளாதார அமைப்பில் வெளிப்படுகின்றன. சமூகப் பொருளாதாரத்தில் இருந்து அன்னியமான எல்லா நிலையிலும், மூலதனத்தின் அடிமையாக விருப்பங்கள் பிரதிபலிக்கின்றன. இதை மறுப்பது இன்றைய நவீன மூலதனத்தை மறுப்பதாகும். அதாவது ஒரு விளம்பரத்தை எடுப்பின் அதன் நோக்கத்தைத் திசை திருப்பி, விருப்பத்தைத் தனிப்பட்ட முரண்பாட்டில் மூடிக் கட்டுவதாகும்.

குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையில் ஏற்படும் விருப்பம் சார்ந்த முரண்பாடு, மூலதனச் சந்தையின் வெளிப்பாட்டில் பிரதிபலிக்கின்றது. இதை மறுப்பது முதலாளித்துவ விளம்பரத்தையும், அதன் உள்ளடக்கத்தையும் கோட்பாட்டு ரீதியில் நீர்த்துப்போகச் செய்வதாகும்.

அதேநேரம் சமூகம் தான் ஒழுக்கத்தின் எல்லையையும், அதன் மாற்றத்தையும் நிர்ணயம் செய்கின்றது. இதைத் தாண்டி எந்த தனிமனிதனோ, மக்களில் இருந்து அன்னியமான சிறு குழுவோ, தனது வர்க்கச் சமூகப் பொருளாதார எல்லையைத் தாண்டி சுயேட்சையாக வெளிப்படுத்த முடியாது. ஒரே சமூகத்துக்குள்ளான வேறுபட்ட சில ஒழுக்கவிதிகள் வர்க்கம், இனம், பால், நிறம், சாதி என்ற பிளவில் ஏற்படும் உள்ளடக்கத்தில் கூட, சமூகப் பொருளாதார வடிவமே இதை நிர்ணயம் செய்கின்றது. இதைப் பிரதிபலித்தே வளர்ப்பு முறை நிர்ணயமாகின்றது. இதை மறுப்பது கற்பனையான வெற்றிடத்தில் ஒழுக்கம் தோன்றுவதாக விளக்குவது கருத்துமுதல்வாதமாகும்.





இந்தக் கருத்துமுதல்வாத எல்லையில் "பொருளியல் சூத்திரங்களிலோ இன்னும் சொன்னால் சமூகவியல் பகுப்பாய்வுகளிலோ உட்படாத மனதின் 'காதல்' எனும் விசயத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் தருவதும் அதை அடிப்படைக்கூறு என்பது போன்ற சித்தரிப்புகள் செய்வதும் மார்க்சியமற்ற செயல் இல்லையா? இதற்கான பதில், 'இல்லை' என்பது தான் என்று ஏங்கெல்சைத் திரித்துப் புரட்டி வைக்கப்படுகின்றது. ஏங்கெல்ஸ் இணை மணக் காதல் முதல் ஒருதார மணக் காதல் ஈறாக, அதன் சமூகப் பொருளாதார ஆய்வு மீதே தனது விளக்க உரையை முன்வைக்கின்றார்.

இந்த காதலைப் பற்றி லெனின் "உங்களுக்கு நம் இளந்தோழர் பற்றி தெரியுமா? அவர் ஒரு அற்புதமான இளைஞர். மிகவும் திறமைசாலி. இருப்பினும் அவரிடமிருந்து எந்தவொரு நன்மையும் விளையாது என்று அஞ்சுகிறேன். அவர் ஒன்றுமாற்றி ஒரு காதல் உறவில் சிக்கித் திணறுகிறார். இது அரசியல் போராட்டத்துக்கோ, புரட்சிக்கோ ஏற்றதல்ல. தமது சொந்தக் காதலுறவுகளை அரசியலோடு சேர்த்துக் குழப்பிக் கொள்ளும் பெண்களின் நம்பகத்தன்மையின் மீதும் போராட்டத்தில் அவர்கள் ஊன்றி நிற்பதன் மீதும் நான் நம்பிக்கை வைக்கமாட்டேன். கண்ட பாவாடையின் பின்னே அலைகிற, ஒவ்வொரு இளம் பெண்ணின் வலையிலும் சிக்கிக் கொள்ளும் ஆண்களின் மீதும் நம்பிக்கை வைக்க மாட்டேன். இல்லை, இல்லை! அது புரட்சிக்குக் கொஞ்சமும் உடன்பாடாயிருக்காது."[61]

காதலைச் சமூகப் பொருளாதாரத் தொடர்பற்ற மனதளவிலான வெற்றுப் பிண்டம் என்று கூறும் போது, கருத்துமுதல்வாதம் அதன் உள்ளடக்கமாகின்றது. காதல் வெற்றிடத்தில் ஏற்படுகின்றதா? காதல் எதையும் சார்ந்திருப்பதில்லையா? அதன் உள்ளடக்கம் என்ன? ஏன் காதலை ஒருதார மணத்தில் பெண்கள் மட்டும் பின்பற்றுகின்றனர்? ஏன் தொடர்ச்சியாக ஆண்கள் காதலிப்பதில்லை? இணைமணத்தில் தோன்றிய காதல் ஏன் அதற்கு முன்பு இருந்த சமுதாயத்தில் (நீங்கள் கருதும் வெற்றிடத்தில்) உருவாகவில்லை? இணைமணத்தில் ஆண் - பெண்ணுக்கு முன் பரஸ்பரமாக இருந்த காதலில், ஏன் ஆண் அதைக் கைவிட்டான்? இந்தக் கேள்விகளுக்கான ஆய்வும், பதிலும் காதலின் உள்ளடக்கத்தை, அதன் வர்க்கத் தன்மையை, அதன் ஆணாதிக்கக் கூறை இனம் காணமுடியும்.

சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கூறுகள் மாறி வந்த எல்லாக் கட்டத்திலும் காதலின் தன்மை மாறுபடுகின்றது ஏன்? எதற்காக? காதல் சுயேட்சையான இயங்கியல் அற்ற விதியா? அவை மாறி வரும் போது, அதன் உள்ளடக்கம் எதைச் சார்ந்து மாறி வருகின்றது? மனம் என்பது உள்ளடக்கத்தில் என்ன? எங்கிருந்து அது பிரதிபலிக்கின்றது? வெற்றிடத்திலா? அல்லது சமூகப் பொருளாதார உள்ளடக்கத்திலா? இறைக் கோட்பாடுகள் ஆத்மா என்ற வரையறையை முன்வைத்து அதைச் சுயேட்சையான,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொர்க்கத்தில் இருந்து யாரோ கட்டுப்படுத்துவதாகக் கூறுவது எவ்வளவு அபத்தமானதோ, அதுபோல் காதலைச் சுயேட்சையான மனம் தீர்மானிக்கின்றது என்பதும் உள்ளடக்கத்தில் இரண்டும் ஒன்று தான்.

முன்பு எல்லாம் அந்தச் சொர்க்கத்தின் ஆண்டவன், இன்று எல்லாம் அந்தக் காதலும் அதன் வெளிப்பாடான பாலியல் வக்கிரமும் என்ற நிலைக்குத் தடம்புரண்டு விடுகின்றது. ஆனால் பாதையை விட்டு நகரவில்லை. ஒரு மனிதன் காதல் செய்கின்றான் எனின் அவன் நிறம், இனம், சாதி, வர்க்கம், பொருளாதாரக் கட்டமைப்பு... என்ற வரலாற்று எல்லைக்குள் காதலிக்கின்றான். ஏன்? மனதின் சுயேட்சையாலா? சமூகப் பொருளாதார காரணத்திலா? இவையும் கூட ஆழமான சுற்றுச் சூழல் மற்றும் குறிப்பான நிகழ்ச்சிகள், சம்பவங்கள் சார்ந்து காதல் வெளிப்படுகின்றது. இங்கு பாலியல் அம்சம் எவ்வளவுக்கு எவ்வளவு வக்கரிக்கின்றதோ, அந்தளவுக்குக் காதல் விபச்சாரமாகின்றது.

ஏகாதிபத்திய உலகமயமாதல் காதலை விற்பனைப் பொருளாக்கியுள்ளது. இங்கு காதல் என்பது அர்த்தமற்ற (பார்க்கவும்: இந்தியாடுடே பிரதிபலிக்கும் மேட்டுக்குடியின் சில கட்டுரைகள்.) வகையில், அது தனிமனிதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் ஊடகமாகக் கருதுமளவுக்குச் சமுதாயச் சீரழிவுகள் வழிகாட்டுகின்றன. இன்று காதலை வெறும் பாலியல் ஊடகமாகக் கருதுவதும், பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் தனிமனிதச் சுதந்திர விபச்சாரம் விரிவாகி வளருகின்ற போது, காதலும் அதன் உள்ளடக்கத்தை இழந்து மறைந்து வருகின்றது. அதை மூன்றாம் உலக மேட்டுக்குடிகள் முதல் மேற்கு வரை பொதுவான பண்பாடாக உலகமயமாதல் மாற்றி வருகின்றது.

"பொருளியல் சூத்திரங்களிலோ இன்னும் சொன்னால் சமூகவியல் பகுப்பாய்வுகளிலோ உட்படாத மனத்தின் 'காதல்' "உலகமயமாதலில் எங்கு போய்விடுகின்றது? மனதில் உருவாகும் இயற்கையான ஒன்றாகக் காட்டப்படும் காதல், எப்படி உலகமயமாதல் முன் மண்டியிட்டு மறைந்து விடமுடியும்? வெற்றிடத்தில் பொருளோ, சிந்தனையோ உருவாக முடியாது. வெற்றிடம் அற்ற நிலையில் உருவாகும் பொருள் சார்ந்த சிந்தனை எப்படி தன்னிச்சையாகச் சுயேட்சையாக மறைய முடியும்? மறைகின்ற போதே அங்கு பொருளாதாரப் பண்பாட்டு மாற்றம் நிபந்தனையாகின்றது.

ஒருவன் அல்லது ஒருத்தி காதல் செய்கின்ற போது அழகு, நிறம், சாதி, அந்தஸ்து, கல்வி, தொழில், நுகர்வின் தன்மை, கலை ஆற்றல், ஆடம்பரம், ஏழ்மை, எளிமை என்று இது போன்ற ஏதாவது ஒரு கூறு அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகள் இணைந்து தான் காதலை ஏற்படுத்துகின்றது. இதை மறுத்து யாராலும் எதையும் சயேட்சையாக நிறுவிவிட முடியாது. இவை அனைத்தும் சமூகப் பொருளாதார உட்கூறு சார்ந்த சமுதாய விளைவாகின்றது. இதில் இருந்து பிறக்கும் காதல் சமுதாயத் தன்மை வாய்ந்தவை.



காதல் சமுதாயப் படிமானங்களில் அதன் தன்மை வேறுபடுகின்றது. சமுதாயப் பொருளாதாரப் பண்பாட்டுக் கூறில் வெறும் பாலியல் அம்சமாகவும், மற்றொரு தளத்தில் கூட்டுச் சமுதாயக் கண்ணோட்டம் கொண்ட வாழ்வாகவும் என வேறுபட்டும் காணப்படுகின்றது. இவை பொருளாதார உட்கூறுகளின் மீதான சமுதாயக் கண்ணோட்டத்தில் பிரிந்து வேறுபட்டுப் பிளவுபடுகின்றது. பெண்ணை உலகமயமாதலில் வெறும் பாலியல் நுகர்வுப் பண்டமாக, அதன் உறுப்பாக விளக்குகின்ற போக்கில், அங்கு காதல் வெறும் பாலியல் கூறு மட்டுமன்றி, விபச்சாரத் தன்மை வாய்ந்தவையும் கூட.

இந்த உலகமயமாதல் சமுதாயத்துக்கு வெளியில் நீடிக்கின்ற காதல் மட்டுமே, ஆண் பெண்ணின் பரஸ்பரத் தேவையின் அடிப்படையிலான சமுதாயக் கூட்டுக் கண்ணோட்டம் விரிந்த தளத்தில் காணப்படுகின்றது. இந்த வேறுபட்ட சமுதாயப் பிளவை மறுத்துக் காதலைப் பொதுவான ஒன்றாக, மார்க்சியத் தலைவர்களின் பெயரில் திரித்துக் காட்டுவதன் மூலம், ஏகாதிபத்திய நுகர்வு காதல் விபச்சாரத்துக்குச் சமூக நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவே, ஏகாதிபத்தியக் கோட்பாட்டாளர்கள் தலைகீழாக நிற்கின்றனர்.

காதலைச் சமுதாயத்தில் இருந்து சுயேட்சையானதாகக் காட்ட ஏங்கெல்ஸ் எழுதிய "இருபாலாருக்கிடையிலான உறவென்பது அந்த இரு நபர்களுக்கு மட்டுமே தொடர்புடைய ஒரு தனிப்பட்ட விடயமாகும், இதில் தலையிட சமூகத்துக்கு எந்தவித வழியும் கிடையாது. அரசால் கட்டுப்படுத்தப்பட்ட தனிப்பட்ட காதல் - அதாவது மணஉறவு விதிகள் என்பவை யாவும் காதல் மற்றும் நட்பு பற்றிய நடைமுறைகளில் எவ்வித மாற்றத்தையும் உண்டாக்காமல் நாளை மறைந்து போய்விடும்."[61] வரவிருக்கின்ற கம்யூனிசச் சமூகத்தில் காதல் எப்படி இருக்கும் என்பதையே ஏங்கெல்ஸ் தெளிவாக்குகின்றார்.

வர்க்கங்கள் அற்றுப் போகின்ற போது, வேறுபட்ட ஏற்றத் தாழ்வான சமூக அடித்தளம் வேறுபட்ட பொருளாதார அடிப்படையின்றி மாறுகின்ற போது, காதல் பற்றிய வேறுபட்ட அபிப்பிராயம் மறைந்து போய்விடுகின்றது. அது சம்பந்தப்பட்ட இருவரின் தனிப்பட்ட விடயமாகி விடுகின்றது. ஆனால் இன்று வேறுபட்ட ஏற்றத் தாழ்வான பொருளாதார வேற்றுமையினால், ஏற்படும் சமுதாய முரண்பாடுகள் காதல் பற்றிய எதிர்மறையான அபிப்பிராயத்தை உருவாக்குகின்றது. இதில் சமுதாயத்தை உறிஞ்சி உண்டு வாழும் ஒட்டுண்ணி பிரிவின் காதல், சமுதாய அலகாக வளர்ச்சி பெற்று ஆதிக்க உறவாக மாறுகின்ற போது, மனித உறவுகள் மலினப்படுகின்றன. சமுதாய நோக்கம் கொண்ட உறவுகள் இழிவாக்கப்படுகின்றது. காதல் சமுதாயப் பிளவு போல் பிளந்து விரிகின்றது. இதில் காதல் பற்றிய விமர்சனமும், வாழ்க்கைப் பிளவுகளும் நிரந்தரமாகி விடுகின்றது. வர்க்கச் சமுதாயப் பிளவுடன் அது ஒட்டி நகமும் சதையுமாகி விடுகின்றது. இதைத் திரித்து யாரும் காதலைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரமானதாகவோ, ஜனநாயகம் பூத்துக் குலுங்குவதாகவோ விளக்கிவிட முடியாது.

தொடர்ந்து இந்தக் கும்பலின் சார்பாக அஸ்வகோஷ்சின் பிதற்றலைப் பார்ப்போம். "பெண்கள் மீதான ஒடுக்குமுறையில் மிகப் பிரதானமானது பாலுறவு ஒடுக்குமுறையே. பாலுறவு விடுதலை இல்லாமல் பெண் விடுதலை இல்லை"[61] என்று சமுதாய மேல் கட்டுமானம் மீதே, ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை சமுதாயத்தைக் குறுக்கிக் காட்டுவதன் மூலம், தமது சொந்த வக்கிரத்தை விபச்சாரமயமாக்குகின்றார்.

பாலுறவு ஒடுக்குமுறைக்கு முன்பே பெண் பாலியல் பண்டமாக இருப்பது இயங்கியல். பெண் பாலுறவு ஊடாக இழிவு படுத்தப்படும் போக்கு எங்கிருந்து, எப்படி தோற்றம் பெறுகின்றது. பெண் இழிந்து, நசிந்து வாழும் வாழ்க்கையில் இருந்தே பாலுறவில் ஒடுக்கப்படுகின்றாள். பெண் ஏன் எப்படி இந்த இழிநிலைக்கு மாற்றப்படுகின்றாள். சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்ட வேலைப் பிரிவினையூடாக, அவளின் உழைப்பு சமுதாய மதிப்பிழந்த போதே, தனிச்சொத்துரிமை அமைப்பில் பெண் வக்கற்றுப் போனாள்.

இந்த வக்கற்றுப்போன சமுதாயத்தில் பெண் அனைத்துத் தளத்திலும் சூறையாடப்பட்டாள். இங்கு பாலியல் சுரண்டல் என்பது அதில் ஒரு வடிவம் மட்டுமேயாகும். பெண் மீதான பல்வேறு ஒடுக்குமுறைகளில் பாலியல் ஒரு அம்சம் மட்டுமேயாகும். இங்கு பல்வேறு பெண் ஒடுக்குமுறைகளைக் கைவிட்டு ஒன்றைப் பிரதானப்படுத்துவதன் மூலம், உண்மையில் ஆணாதிக்க உள்ளடக்கத்தைப் பூசி மெழுகி பாதுகாப்பதாகும். பெண் எப்படி, எதனால் அடிமைப்படுத்தப்பட்டாள் என்ற வரலாற்று இயங்கியல் மீது, பெண் ஒடுக்குமுறையை இனங்கண்டு போராட வேண்டும்.

இதை மறுத்து, பலவற்றில் ஒன்றை முதன்மைப்படுத்தி காட்டுவதன் மூலம், ஆணாதிக்க அமைப்பில், பெண்ணைப் பொது விபச்சாரத் தளத்துக்கு அழைத்து வர வேண்டும் என்ற கனவு மட்டுமே நோக்கமாக உள்ளது. இதை உறுதி செய்வது போல் "ஓர் ஆண் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களைக் காதலிக்க முடியும் என்றால் ஒரு பெண்ணும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் காதலிக்க முடியும்[61] என்று தீர்வு ஆணாதிக்க விபச்சார வழியில் முன்வைப்பதன் மூலம், ஆணாதிக்க அமைப்பில் பெண்ணை நிர்வாணப்படுத்த சபதம் ஏற்கின்றார். ஆணாதிக்க அமைப்பில் ஆண் பலதார மணத்தில் பல பெண்களைச் சூறையாடும் பண்பாட்டுத் தளத்தில், பெண்ணையும் மாற்றவேண்டும் என்று ஏகாதிபத்தியக் கூச்சல்களாக இவை எழும்புகின்றது. ஆணாதிக்கம் தனது சொந்த வக்கிரத்தில் பெண்ணை நுகர்வதை விமர்சித்து அதை வேரறுக்க போராடுவதுக்குப் பதில், ஏகாதிபத்திய நுகர்வு விபச்சாரத்தைப் பெண்ணுக்கும் பூச்சூட்ட விரும்புகின்றார்.



இந்தப் பூச்சூட்டை நிறைவு செய்ய "குடும்ப வாழ்க்கை வெற்றிகரமானாலும் அது சிறைதான். சமூகத்திற்கு மட்டுமல்ல, தனிமனிதனின் படைப்புத் திறனையும் விலங்கிட்டுச் சிறையிடுகிறது"[61] என்று கூறுவது ஏன்? பெண்ணைக் குடும்பம் சிறையிடுகின்றதா அல்லது தனிச்சொத்துரிமை அமைப்பு சிறையிடுகின்றதா? இங்கு குடும்பம் எதை அடிப்படையாகக் கொண்டு உருவாகின்றது? குடும்பத்தின் அடிப்படை என்ன? வெறும் பாலியல் தேவை மட்டும்தானா? இல்லை இதற்கு வெளியில் எதுவுமில்லையா? ஆணாதிக்க அமைப்பில் ஒருதாரமணத்தின் உள்ளடக்கம் என்ன? இவைகளை எல்லாம் ஏகாதிபத்தியப் பெண்ணியக் கோட்பாட்டில் நிராகரித்தபடி, குடும்பம் பெண்ணைச் சிறையிடுகின்றது. எனவே பெண்களை வெட்ட வெளியில், குடும்பத்துக்கு வெளியில் பொது விபச்சாரத்தில் ஈடுபட அழைப்பதே, இதன் அரசியல் உள்ளடக்கமாகும்.

இதன் மூலம், குடும்பம் பெண்ணின் சிறையாக இருக்க, அடிப்படையான தனிச் சொத்துரிமை அமைப்பை, சேதமின்றி மூடிப் பாதுகாப்பதாகும். இதைச் சாதிக்க "முழுமையான பாலுறவுச் சுதந்திரமும் அதற்கான சமூக அங்கீகாரமுமே பெண் விடுதலையைச் சாத்தியப்படுத்தும்"[61] என்ற கூற்றின் ஊடாக, ஏகாதிபத்தியப் பெண்களின் பொதுவான டிஸ்கோ விபச்சாரத்தை முன்வைக்கின்றனர். பாலியல் சுதந்திரம் பெற்ற மேற்கத்தியப் பெண் ஆணாதிக்க அமைப்பில் இருந்து விடுதலை பெற்றுவிட்டாளா? இல்லை. அவள் ஆண்களின் நுகர்வுக்கு மாறாகத் திறந்த பதுமையாகியுள்ளாள். இதைத் தான் இந்தியக் கோட்பாட்டுத் தரகுகள் கோருகின்றனர். மார்க்சியப் பெண்ணியத்தை உள்ளடக்கம் மீது விமர்சிக்காது, செம்மறி ஆடுபோல் மேய்ந்து விமர்சிக்கும் இவர்கள், தமது கோட்பாடுகளை ஏகாதிபத்தியப் பெண்ணியத்தில் இருந்து வேறு பிரித்தறியவோ, விளக்கவோ முடியாதவர்கள்.

அடுத்து, பன்றித் தொழுவத்தில் புரண்டு எழுகின்ற சாரு நிவேதிதாவின் வக்கிரங்களைப் பார்ப்போம். "யோனி மைய வாதம் ஒதுக்கப்பட்டுப் புட்ட உறவு, வாய் உறவு எனப் பாலுறவின் ஏனைய கூறுகள் முக்கியத்துவம் பெற வேண்டும். புட்டம், வாய் போன்றவற்றிற்குச் சமமான முக்கியத்துவம் யோனிக்குத் தரப்படவேண்டும்."[61] இதன் மூலம் ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியும் என்கின்றார். நீலப்படக் (புளூபிலிம்) காட்சிகளின் வக்கிரத்தில் மூலதனத்தைக் குவிக்கின்ற ஆணாதிக்கச் சந்தை மையத்தில் இருந்து, பொறுக்கி வைக்கின்றார். இயற்கை மீதான பாலியல் உறவு, வக்கிரமான நுகர்வுக் கவர்ச்சியால் கற்பழிக்கப்படும் போது, அதுவே நுகர்வின் எல்லையாகி விடுகின்றது. இந்த நுகர்வு பெண்களை இழி நிலையில் அலங்கோலப்படுத்தி சூறையாடுவதில் பின்நிற்பதில்லை.

பெண்ணின் இயற்கை உறுப்புகளின் செயற்பாடுகளை மறுக்கும் ஆணாதிக்கம், பெண்ணின் எல்லா உறுப்புகளையும் பாலியல் கவர்ச்சி அங்கமாக்குகின்றது. குழந்தைக்குப் பால் கொடுக்கும் பால் சுரப்பி (பெண்ணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்பு) அதன் உள்ளடக்கம் இழந்து, ஆணின் கவர்ச்சிக்கான பாலியல் ஊடகமாக மாறியது போல், பெண்ணின் வாய், புட்டத்தையும் பாலியல் ஊடகமாக்க ஆணாதிக்கம் துடியாத் துடிக்கின்றது.

மனித உறுப்புகளின் இயற்கை சார்ந்த பரிணாமத் தேர்வைத் தனிச் சொத்துரிமை மறுத்து, தனிச்சொத்துரிமை ஆணாதிக்க வழியில் மூலதனத்துக்கு அடிமையாக்கியது போல், பெண்ணின் உறுப்புகள் அதன் போக்கில் ஆணின் பாலியல் உறுப்புகளாகிப் போனது. இதை மேலும் உலகமயமாதலில் விரிவாக்கி பெண்ணை, எல்லா உறுப்பு வழியாகவும் புணர்ந்து வக்கரிக்க ஆணாதிக்கம் கெக்கலிக்கின்றதன் விளைவே, நீலப்படம் (புளுபிலிம்) பாணியிலான கோட்பாடுகளின் கோரிக்கையாகும்.

இந்தக் கோரிக்கையை வைக்கும் மரமண்டை (சாருதான்) "சோசலிச உருவாக்கத்தில் வெற்றியடைந்துள்ள சீனாவில் குடும்பம் சிதறி பெண்கள் ஒடுக்குதலுக்குள்ளாகி இருப்பதும், சுவீடன் போன்ற முதலாளித்துவ நாடுகளில் குடும்பக் கட்டுகள் தளர்ந்து பெண் விடுதலை பெருமளவில் சாத்தியமாகி உள்ளதையும் ஒப்பு நோக்க வேண்டும்."[61] எனவே பெண்விடுதலை வேண்டும் என்று கூறி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை நக்க விரும்புகின்றனர்.

சீனாவில் பெண்களின் மீதான ஆணாதிக்க அடக்குமுறைகளை, புரட்சி தனது சொந்த வர்க்கப் போராட்டத்தின் ஊடாகத் தொடர்ச்சியாக எதிர்த்துப் போராடி வந்தது. எந்த மூன்றாம் உலக நாடுகளையும் விடவும், மேற்கில் ஆணாதிக்கப் பிடிப்பை விடவும் சீனா தனது பாதையில் முன்னேறி வந்தது. ஆனால் கி.பி. 1970-களின் இறுதியில் மீண்டும் முதலாளித்துவ சுரண்டும் வர்க்கம் ஆட்சியைப் பிடித்தது முதல், ஆணாதிக்கம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய வேதாளமாகியது. இதை எடுத்து சோசலிசம் என்று காட்டுவதும், பிதற்றுவதும் ஏகாதிபத்தியத்தின் எச்சில்கள் ஆகும். சோசலிசத்தின் உள்ளடக்கம் தெரியாத பாலியல் வக்கிரத்தை வைத்து புகழ் (!) பெற்று பிழைக்கும் ஆணாதிக்கவாதிகள், சீனாவைத் திரித்துக் காட்ட மட்டுமே முடியும்.

சுவீடன் போன்ற நாடுகளில் பெண் விடுதலையடைந்து விட்டாள் என்பது நகைப்புக்குரியது. பெண் பாலியலில் பெற்ற சுதந்திரம் உள்ளடக்கத்தில் ஆணாதிக்க வகைப்பட்டவை. ஆணாதிக்கம் தனிச் சொத்துரிமை சுதந்திரத்தில் பெண்ணை வரைமுறையின்றி பாலியல் ரீதியாக அனுபவிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்ள, பெண்ணை விபச்சார நிலைக்கு ஆணாதிக்கமயப்படுத்தியது தான் நிகழ்ந்தது. மக்கள் சாதாரணமாகப் பயன்படுத்தும் பொருட்கள் முதல் பார்க்கும் தொலைக்காட்சி ஈறாகப் பெண் பாலியல் அங்கமாக வக்கிரப்படுத்தி காட்டப்படுகின்றாள். இதில் இருந்தே, இந்தப் பெண் விடுதலையின் வக்கிரத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.



இங்கு குடும்பம் மீள புதிய வடிவில் இணைவது நிகழுகின்றது. பழைய புனித மதக் குடும்பங்கள் தகர்ந்து போக, இணைந்து வாழும் புதிய கூட்டுக் குடும்பங்கள் உருவாகின்றன. அவை கூட நீண்ட ஆயுள் கொண்டதாக இருப்பதுடன், அங்கும் ஆணாதிக்கச் சமூகக் கூறுகள் தொடர்ந்து நீடிக்கின்றன. பொருளாதாரக் கட்டமைப்பு தனிச்சொத்துரிமை சார்ந்த ஆணாதிக்கமாக உள்ளதால், மாறி வரும் குடும்பங்கள் கூட அதற்குள் சிக்கிவிடுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. சமூகப் பொருளாதார வடிவங்கள் தான் குடும்பத்தின் பண்பைத் தீர்மானிக்கின்றது. மேற்கு நாடுகள் ஏகாதிபத்தியக் கட்டமைவில் ஆணாதிக்க வடிவமாக இருப்பதால், அங்கு வாழும் மக்கள் அதன் எல்லையின் விரிவாக்கத்துக்குள், தமது பாலியல் மற்றும் குடும்பப் பண்பாட்டைத் தீர்மானிக்கின்றனர்.

சாரு நிவேதிதா தனது பலதார வரைமுறையற்ற விபச்சாரப் பாலியலுக்குத் தடையான காரணத்தைப் புரிந்து கொள்ளும் வடிவத்தைப் பார்ப்போம். "யோனி என்பது இனப்பெருக்க மையமாக அமைந்து பெண்ணின் கர்ப்பம் குறித்த பயத்திற்கும் அடிப்படையாக உள்ளது. இந்தப் பயத்தின் அடிப்படையிலேயே ஆண் - பெண் உறவு கட்டமைக்கப்பட்டுக் குடும்ப வரையறை என்னும் அதிகாரத்திற்குள் ஒடுக்கப்படுகிறது"[61] என்ற எடுகோள், ஏகாதிபத்திய வரைமுறையற்ற நுகர்வு எல்லையில் பெண்ணை நுகரும் ஆணாதிக்கக் கனவுகளாக உள்ளது.

கர்ப்பம் பற்றிய பயம் இல்லை என்றால் பெண்களை ஏமாற்றவும், பெண்களை இலகுவாகச் சோரம் போக அழைக்கவும் முடியும் என்ற ஆணாதிக்க நப்பாசை இப்படி புலப்படுகின்றது. உதாரணமாக இந்திய நாட்டிலுள்ள மேட்டுக் குடிகள் ஆண் பெண் வேறுபாடற்ற நிலையில், டிஸ்கோ கலாச்சாரத்தில் குடி மற்றும் கும்மாளமாகப் பாலியல் வக்கிரத்தில் ஈடுபடும் போது, கர்ப்பம் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. இந்த மேட்டுக்குடிகளில் ஏகாதிபத்திய நுகர்வு ஒட்டுண்ணித் தனத்தையே, இந்த ஏகாதிபத்தியக் கோட்பாட்டாளர்கள் பெண் விடுதலையாக முன்வைத்து, ஆணாதிக்கப் பலதார மணத்தை இலகுபடுத்த பார்ப்பனிய வழியில் சதிராட்டம் போடுகின்றனர்.

இந்தக் கும்பலைச் சேர்ந்த மாலதி என்பவர் பாலற்ற தன்மை விடுதலையின் நிபந்தனை என்றபடி "பாலற்ற நிலை தான் விடுதலையின் உச்சம் என்றாகும் போது ஓரினப் பால் புணர்வு இங்கு அதிகாரத்திற்கெதிரான செயல்பாடாக மாறும் போது உடல்களின் மீதான ஆதிக்கம் விலகும்."[61] இதில் இயற்கையின் பால்த்தன்மையை மறுப்பது ஆணாதிக்க அம்சமாகும். இயற்கை இன்றி மனிதன் இல்லை. மனித வரலாற்றை இயற்கை வரலாறாகக் காண்பதும், விளக்குவதும் தொடரும் வரை, இயற்கையில் பால் வேறுபாட்டை மறுப்பது என்பது ஆணாதிக்கக் குணாம்சமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயற்கையான பாலியல் வேறுபாடு மறுக்கப்படும் எல்லா தனிச்சொத்துரிமை ஆணாதிக்கத் தன்மையில், மனித குல இழிவு காணப்படுகின்றது. இயற்கையான பாலியல் வேறுபாட்டை மறுத்து நலமடித்த ஆணாதிக்கம், பெண்ணின் இயற்கையான பாலியல் உணர்வுகளை இழிவாக்கி சிறுமைப்படுத்தியதை, மீண்டும் உறுதி செய்யவே, அதைத் தொடர்ந்து மறுக்க பிரகடனம் செய்கின்றனர். ஆணாதிக்கம் தனிச்சொத்துரிமை சார்ந்து இயற்கையான பாலியல் வேறுபாட்டை மறுத்து, பெண்ணை இயற்கை அல்லாத வழிகளில் அடிமையாக்கிய போது, இயற்கையான உணர்ச்சிகளைச் செயற்கையாகத் தீர்த்துக் கொள்வது புதிய வடிவமாகியது. செயற்கையான பாலியல் வடிவங்கள் அனைத்தும் இயற்கையான பாலியல் வேறுபாட்டை உள்ளடக்கமாகக் கொள்கின்றது. இது பால் வேறுபாட்டை மறுக்கின்ற போதே, ஆணாதிக்க வக்கிரம் கொப்பளிக்கின்றது. பாலற்ற தன்மையை ஒருக்காலும் உருவாக்க முடியாது. அது இயற்கையானது. இயற்கையான பால் வேறுபாட்டை, அங்கீகரிப்பதும், அதை இயற்கையாகப் பேணுவதும் ஆணாதிக்க ஒழிப்பின் முன் நிபந்தனையாகும்.

பால் வேறுபாட்டை மறுத்து அதை இழிவானதாகத் தனிச்சொத்துரிமை கண்ணோட்டத்தில் விளக்கிய போதே, பெண் பாலியல் ரீதியாக அடிமைப்படுத்தப்பட்டாள். இயற்கையான பால் வேறுபாட்டை மறுத்து முன்வைக்கும், பாலியல் மாற்றுகள் அனைத்தும் செயற்கையான ஆணாதிக்க வகை மாதிரிகளே. இது ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கும், அச்சமூகத்துக்கே உரிய பூர்சுவா நடைமுறைகள் மட்டுமே. இது போன்று இந்தக் கும்பலைச் சேர்ந்த, ஏகாதிபத்தியப் பெண்ணியத்தை முன்வைத்து மார்க்சியத்துக்கு எதிரானவர்கள், இந்த நூலில் எல்லையற்ற வகையில் ஆணாதிக்க அபத்தங்களைத் தமது வக்கிரத்துடன் அள்ளிக் கொட்டியுள்ளனர். அதற்குச் சில மாதிரிகளே இவையாகும்.

"மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும்" என்ற நூலில் இருந்து கெய்டி கார்ட்மன் "மார்க்சியத்தையும் பெண்ணியத்தையும் இணைக்க அண்மையில் எடுக்கப்பட்ட சில முயற்சிகள் பெண்ணியர்கள் என்ற முறையில் எமக்கு நிறைவளிப்பதாய் இல்லை. காரணம், முதலாளியத்துக்கு எதிரான 'பெரும்' போராட்டத்துக்குக் கீழ்ப்பட்டதாகவே அவை பெண்ணியப் போராட்டத்தை முன்வைக்கின்றனர். முன்னர் சொன்ன உவமையிலேயே சொல்வதானால், எமக்குத் தேவை ஓர் ஆரோக்கியமான திருமணமே. அவ்வாறு இல்லையெனில் மணவிலக்கே எமக்குத் தேவைப்படுகிறது."[62]

மார்க்சியம் என்றால் என்ன? சமுதாயத்தின் அனைத்து முரண்பாடுகளையும் விலக்க மார்க்சியம் இருக்க முடியுமா? மார்க்சியம் பெண்ணியத்தையிட்டு அலட்டிக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறம். மறுபுறம் இணைப்பதாக ஒப்பாரி. இரண்டும் பாட்டாளி வர்க்கம் மீது அவதூறுகளை அடிப்படையாகக் கொண்டவை. பெண்ணியத்துடன் மார்க்சியம் திருமணம் செய்ய, மார்க்சியம் ஆணாதிக்கத் தன்மை கொண்டவையா?

மார்க்சியம் இனம், நிறம், பால், சாதி வேறுபாடற்ற ஒரு வர்க்கப் போராட்டக் கோட்பாடாகும். மார்க்சியம் ஆண்களுக்கு மட்டும் சொந்தமானவை அல்ல. சமுதாயத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களையும் விடுவிக்கும் பாட்டாளி வர்க்கத் தத்துவமாகும். இது நிறம், மதம், பால், சாதி கடந்து ஆண் - பெண்களின் போராட்ட மார்க்கத்தை வழிகாட்டுவதாகும். இதை மறுத்து ஆண்களின் போராட்ட மார்க்கமாக மார்க்சியத்தைக் காட்டுவதன் மூலம், ஆணாதிக்கம் கொண்டதாக மறைமுகமாகக் காட்டுவதன் நோக்கம்தான் என்ன?

மார்க்சியத்தை எதிரிடையாக நிறுத்தி நிற்கும் பெண்ணியத்தின் முதலாளித்துவ நாற்றத்தை 'சென்ட்' (வாசனைத் திரவியம்) இட்டு மூடி மறைப்பதாகும். வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடும் பெண்ணை அதில் இருந்து பிரிக்க முனையும் நோக்கம் திட்டவட்டமாக ஏகாதிபத்திய நோக்கம் கொண்டவை. பெண் அடிமைப்பட்ட வரலாற்றில் பெண் தனித்து நின்று எப்படி தன்னை விடுவிக்க முடியும்? சமூகப் பொருளாதார அமைப்பில் சமுதாய மயமாகியுள்ள ஆணாதிக்கம் எப்படி, தனித்து நின்று சமுதாயத்தில் இருந்து ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியும்? ஆணாதிக்கம் சமுதாயத்தில் இருந்து தனித்துவமானதா? பெண்கள் சமுதாயத்தில் இருந்து தனித்துவமானவர்களா? இப்படித் தான் ஆணாதிக்கம் விளக்குகின்றது. இதைத் தான் பூர்சுவா பெண்ணியமும் மீள ஒப்புவிக்கின்றது. ஆணாதிக்கம் தனிச் சொத்துரிமையின் நாற்றம் கண்ட சீழ் என்பதை மறுப்பது, தனிச் சொத்துரிமை கண்ணோட்டம் கொண்ட பெண்ணியத்தின் அரசியல் விபச்சாரமாகும். இதில் இருந்தே மார்க்சியத்திடம் இருந்து விவாகரத்தை வர்க்க அடிப்படையில் கோருவது உள்ளடக்கமாகின்றது.

இதை நியாயப்படுத்தும் வகையில் "தொழிலாளி வர்க்கத்தை அது பிளவுபடுத்துகிறது"[62] என்று மார்க்சியம் கருதுவதால், நாம் பிரிந்து இருக்க வேண்டும் என்கின்றனர். அதாவது தொழிலாளி பெண்ணும், முதலாளித்துவப் பெண்ணும் ஐக்கியமாக எப்படி ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியும்? தெரிந்தால் சொல்லுங்கள். ஆணாதிக்கம் எப்படி தனிச் சொத்துரிமை அமைப்புக்குப் புறம்பாக உயிர் வாழ்கின்றது. தொழிலாளி வர்க்கப் போராட்டத்தைப் பூர்சுவா பெண்ணியம் வேட்டு வைக்க கனவு காண்கின்றது. அதில் இருந்து தான் இதை உபதேசிக்க முனைகின்றார்.

தொடர்ந்து தமது பூர்சுவா வர்க்க நலனைத் தக்க வைக்க "பெண்கள், பெண்கள் என்ற முறையில் ஒடுக்கப்படுவதற்கு மூலதனமும் தனிச் சொத்தும் மட்டுமே காரணமாக இல்லை. ஆகவே, அழிவினால் மட்டுமே பெண்களுக்கு விடுதலை கிட்டிவிடாது"[62] என்று தமது பூர்சுவா வர்க்க நலனில் இருந்து முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கும் போது, எவை ஆணாதிக்கத்தை ஒழிக்கும் என முன்வைக்க தவறி விடுகின்றனர். பெண் மூலதனம் சார்ந்த தனிச் சொத்துரிமையால் அடிமைப்படுத்தப்பட்டாள் என்ற அடிப்படைக் காரணத்தை மறப்பதில், மறுப்பதில் இருந்து, இது உருவாகின்றது.

பெண்ணின் உழைப்பு மூலதனத்துக்கு முன்னால் சமூகப் பெறுமானம் இழந்த நிகழ்ச்சியே, பெண்ணை அடிமையாக்கியது. இதை மறுத்து நிற்கும் பூர்சுவா பெண்ணியம், எப்படி பெண் அடிமையானாள் என்பதையிட்டு அலட்டிக் கொள்வதில்லை. தனிச்சொத்துரிமை அழிகின்ற போது, அரசு அழிவது போல் ஆணாதிக்கமும் அழிந்து போகும். அழிந்து போகாது எனில், எப்படி என்றல்லவா விளக்க வேண்டும்?

சோசலிசப் புரட்சி நடந்த நாடுகளில் சட்டப்படி தனிச் சொத்துரிமை அமைப்பு தகர்க்கப்பட்ட போதும், உள்ளடக்கத்தில் அங்கு இரண்டு வர்க்கத்துக்கிடையில் போராட்டம் தொடர்ச்சியாக இருப்பதால் தான், அது சோசலிசச் சமூகமாக இருந்ததே ஒழிய கம்யூனிசச் சமூகமாக இருக்கவில்லை. இதில் இருந்தே அங்கு முதலாளித்துவ மீட்சி நிகழ்ந்தது. **புரட்சி முடிந்தவுடன் எல்லாம் மாறிவிட்டது அல்லது மாறிவிட வேண்டும் என்ற அராஜகவாதக் கோட்பாட்டை,** பூர்சுவா பெண்ணியம் எடுத்து, அதில் இருந்து மார்க்சியம் மீது சேறடிப்பதில் அர்த்தமில்லை.

ஆண் பெண்ணின் அடிப்படையான ஆணாதிக்கப் பிளவுக்கு "..பிரிவினைக்கு முதலாளியமே காரணம் என இட்டுக்கட்டப்பட்டது"[62] என்று கூறி இதை மறுக்கின்றார். ஆண் பெண் பிளவுக்குச் சுரண்டும் வர்க்கமே காரணம் என்பதை எந்தப் பூர்சுவா பெண்ணியமும் ஏற்றுக் கொள்வதில்லை. பூர்சுவா பெண்ணியம் எப்போதும் அனைத்து ஆண்கள் - பெண்கள் மீது ஜனநாயகத்தைக் கட்டமைத்துள்ளதாக உருவாக்கியுள்ள பிரமையை இது தகர்த்துவிடும் என்ற ஒரே கோணத்தில் இதை மறுக்கின்றனர். இதில் இருந்தே வர்க்கம் கடந்த பெண்ணியத்தை முன்வைப்பதும், பாட்டாளி வர்க்கத்தை எதிராக வைத்து விவாகரத்தை முன்நிறுத்துவதும் நடக்கின்றன. **ஆண் - பெண்ணின் பிளவு சுரண்டும் வர்க்கத்தின் தனிச்சொத்துரிமை உள்ளடக்கமாகும்.** இது காலத்துக்குக் காலம் மாறிவந்த பொருளாதார வளர்ச்சியைப் பிரதிபலித்து, சுரண்டும் வர்க்கத்தின் மாறி வந்த வெவ்வேறு வரலாற்று வர்க்கப் பிரதிநிதிகள் பிளவைத் தீவிரமாக்கினர். ஆணாதிக்கம் இதன் ஊடாக விகாரமாகி வந்ததைத் தவிர, வேறு எதையும் ஆண் - பெண் உறவில் மனிதக் குலத்துக்குச் சுரண்டும் வர்க்கம் தந்துவிடவில்லை.

"...பெண்கள் மட்டும் வீட்டு வேலையிலும் ஆண்கள் தொழிலிலும் ஈடுபட நேர்ந்தது ஏன்? பெண்களின் மீது ஒழுங்கு முறைப்படி அமைந்த ஆண்களின் மேலாதிக்கம் என்ற ஆணாதிக்க முறைமையுடன் தொடர்புபடுத்தாமல் நாம் இதை விளக்க முடியாது"[62] என்று பூர்சுவா பெண்ணியத்தின் அலட்டல்



புலம்பலாகப் பிரதிபலிக்கின்றது. ஆண்களின் மேலாதிக்கம் எப்படி உருவானது? வானத்தில் இருந்து குதித்து எழுந்ததா? ஆணாதிக்கம் ஆண்களின் மேலாண்மை சார்ந்த சுயேட்சையா?

ஆணின் அடக்குமுறை என்பது தனிச் சொத்துரிமை மீதான ஆதிக்கத்தில் இருந்து உருவானது. அது உபரியைத் திரட்டியதில் இருந்து வெளிப்படுகின்றது. இந்த உபரி ஆணுக்குப் பெண்ணை விட அதிகமான சமுதாய உரிமையைக் கொடுத்தது. பெண் வீட்டுக் கடமையில் தன்னை நிறுத்தி விடவில்லை. மாறாக விவசாயம், மிருக வளர்ப்பு போன்ற பல துறைகளில் முற்றாக ஆதிக்கம் பெற்று உழைப்பைச் சமுதாயத்துக்கு வழங்கினாள். ஆனால் சமுதாயத்தில் உபரி சில துறைகளில் ஏற்பட, உபரி மனிதனை அடிமைப்படுத்த, உபரி முழுமையாக அனைத்துச் செல்வத்தையும் தனக்கு அடிமைப்படுத்தியது. பெண் உபரியை உற்பத்தி செய்யும் வகையில், தனது உற்பத்தியை உருவாக்கும் தன்மை, அவளின் வேலைப் பிரிவினை தடையாக்கியது. பெண் இதன் போக்கில் உபரி அற்ற நிலையில், உபரியைத் திரட்டியும் ஆண்களின் அடிமையானாள். இந்த அடிமைத்தனம் ஆணுக்குச் சேவை செய்வதை நிபந்தனையாக்கியது.

இன்று மூன்றாம் உலக நாடுகளின் கிராமப்புற விவசாயம், தேசிய முதலாளித்துவம் உபரியை உற்பத்தி செய்ய முடியாத வகையில், அதன் உற்பத்திப் பெறுமானம் மூலதனத்துக்கு முன் தகுதி இழக்கின்ற போது, மேற்கின் முன் அடிமையாக அடிமைப்பட்டுக் கூனிக் குறுகி வாழ்வது எப்படி சாத்தியமானதோ, அதுவே இன்று பொதுவான ஆணாதிக்க உருவாக்கமாகும்.

கூலி உழைப்பாளி இயந்திரத்தின் உறுப்பாக மாற்றப்பட்ட நிலையில், அதன் அடிமையாக வாழ எப்படி கற்றுக் கொள்கின்றானோ, அதுவே பெண்ணுக்கும் நிகழ்ந்தது. **பெண் தனிப்பட்ட ஆணின் அடிமையல்ல.** மாறாக ஆணாதிக்கச் சமூகத்தின் அடிமையாக அல்லவா, இருக்கின்றாள். தனிப்பட்ட பெண் இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் இருந்து சுதந்திரமாக இருப்பதாகப் பாசங்கு செய்யப் முடியுமே ஒழிய, விடுதலை பெற முடியாது. சமூகப் பொருளாதார அமைப்பே இதைத் தீர்க்கமாக வரையறை செய்கின்றது. இது தான் பின்னால் வேலைப் பிரிவினையை மேலும் மேலும் துல்லியமாக்கியது.

இதை மறுக்கும் வாதம் "முதலாளித்துவச் சமூக உறவுகள் முழுச் சமூகத்தையும் தழுவும்போது, பெண்கள் அதிகரித்த அளவில் சுயமாகச் சம்பாதிப்பவர்களாக மாறியிருப்பர். அதனால் குடும்பத்தில் ஆண்களுக்கு அடங்கிப் போக மறுப்பர். குடும்பமானது குறிப்பாகப் பெண்களையும் குழந்தைகளையும் ஒடுக்கி வருவதால், குடும்பத்துக்கு வெளியே சுதந்திரமாக வாழமுடியும் என்ற ஒரு சூழலில் குடும்பம் ஒழிந்துவிடும்"[62] என்று பூர்சுவா பெண்ணியம் விளக்குகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்கத்தைத் தனிப்பட ஆணுக்கு அடங்கிப் போகும் குடும்ப எல்லைக்குள் மட்டும், குறுக்கிக் காட்டும் குருட்டுத் தனத்தில் இது பிரதிபலிக்கின்றது. பெண்கள் வீட்டில் வாழ்ந்த போது மிருக வளர்ப்பு மற்றும் விவசாய உழைப்பில் ஈடுபட்டாள். ஆனால் சமூக அங்கீகாரம் பெற்ற உபரியைத் திரட்டும் உற்பத்தியில் பங்குபெறுவது மறுக்கப்பட்டது. ஆனால் முதலாளித்துவம் உபரியை அதிகம் திரட்ட, பெண்ணின் மலிவுவான கூலி மற்றும் தொழிலாளர் படையின் எண்ணிக்கை அடிப்படையில் பெண்ணை உழைப்பில் ஈடுபடுத்தியது. இந்த முதலாளித்துவ வளர்ச்சி மக்களின் பெரும் பகுதியின், தனிச் சொத்துரிமையைக் கைப்பற்றி குவித்து வரும் போது, ஆண் தனிச் சொத்துரிமையின் கூலியாக்கப்பட்டான். இது தனிச்சொத்துரிமை சார்ந்த குடும்ப அமைப்பைச் சிதறப் பண்ணியது.

கூலி என்பது வாழ்வதற்கே முடியாத வறுமையாகின்ற போது, பெண் உழைப்பில் ஈடுபடுவது நிபந்தனையானது. இங்கு கூலி வாழ்வதற்கு அடிப்படை உள்ளடக்கமாக உள்ளதாலும், தனிச் சொத்துரிமையைத் திரட்ட முடியாத நிலையிலும், பாரம்பரியக் குடும்ப அமைப்பு சிதைந்தது. இது சமூக மயமாகின்ற போது, மூலதனத்தின் பிரதிநிதிகள் தமது குடும்ப அமைப்புக்கும், உள்ளூர வேட்டு வைப்பது அவர்களை மீறியது.

அதாவது முதலாளித்துவம் எப்படி பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கித் தனக்குத் தானே வேட்டு வைக்கின்றதோ, அதுவே குடும்பத்துக்கும் நிகழ்கின்றது.

இங்கு மேற்கு முதலாளித்துவக் குடும்பங்களில் பெண்ணின் உழைப்பு கூட, மூன்றாம் உலகமக்களின் மீதான அடிமைத்தனத்தில் இருந்து பெறப்படும், கொள்ளை உபரி மூலமாகவே, தன்னைச் சுதந்திரமான பூர்சுவா பெண்ணாகப் பிரகடனம் செய்கின்றாள். இது மற்ற நாட்டு உழைப்பாளர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதை அங்கீகரித்தே, சுதந்திரம் பற்றி பிதற்ற முடிகின்றது. ஆனால் ஆணாதிக்கம் குடும்பம் சார்ந்ததா? இல்லை, அது தனிச்சொத்துரிமை சார்ந்தது. இது குடும்பத்துக்கு வெளியிலும் ஆணாதிக்கத்தைச் சமூகத் தன்மையாக்கியுள்ளது. சுதந்திரமாக ஆணைப் போல் பெண்ணும் உழைக்கும் நாடுகளில், குடும்பம் சிதைந்த நிலையில், ஆணாதிக்கம் அற்றுவிட்டதா? இல்லையெனின் அதன் ஊற்று மூலம் என்ன? குடும்பச் சிதைவு தனிச் சொத்துரிமை சிதைவால், பரந்து பட்ட மக்களிடையேயான சிதைவில் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் குடும்பச் சிதைவு ஆணாதிக்கத்தை ஒழித்துவிடவில்லை. ஆணாதிக்கம் முதலாளித்துவத்தின் உள்ளடக்கமாக உள்ளது.

''காலப் போக்கில் முதலாளியம் ஆணாதிக்கத்தைச் சகித்துக் கொள்ளாது''[62] என்ற பூர்சுவா பிதற்றல்கள், ஏகாதிபத்திய நாட்டில் கால் தூசுக்குச் சமமானதாக இருக்கின்றது. குடும்பத்துக்கு வெளியில் காணப்படும் கேவலமான, விகாரமான ஆணாதிக்கம், குடும்பத்துக்குள் குடும்பம் சார்ந்த பழைய ஒடுக்குமுறையில் இருப்பதில்லை. குடும்பம் சார்ந்த ஆணாதிக்கம்,



குடும்பத்தில் தனிச் சொத்துரிமையைச் சிதைத்து அதே தனிச் சொத்துரிமையின் கூலியானதால், அங்கு குடும்பம் சார்ந்த வன்முறை குறைந்து போனது. ஆனால் தனிச் சொத்துரிமை ஜனநாயகம் சமூக மயமாகி மூலதனம் குவிவதால், சமூகம் சார்ந்த ஆணாதிக்கம் மிக தீவிரமாக வக்கரித்து விரிவாகின்றது.

மூலதனத்தின் புனிதத்தைப் பாதுகாக்க பூர்சுவா பெண்ணியம் "மூலதனம் குடும்பத்தை அழித்துவிடும் என்ற வாதமானது, குடும்ப வாழ்க்கையை ஈர்ப்பு மிக்கதாக்கும் சமூகச் சக்திகளை அலட்சியப்படுத்துகிறது"[62] என்று கூறுவதன் மூலம், மூலதனத்தின் குவிப்பை மூடி மறைப்பதன் மூலம், தனிப்பட்ட பரந்துபட்ட மக்களின் குடும்பத்தின் சிறு மூலதனம் அழிக்கப்படுவதை, மூடிமறைக்க பிரயத்தனம் செய்கின்றார். மூலதனக் குவிப்பு எங்கிருந்து பறித்தெடுத்து குவிக்கப்படுகின்றதோ, அங்கே தனிச் சொத்துரிமை சிதைகின்றது. இதனால் தனிச் சொத்துரிமை சார்ந்து நீடித்த குடும்பங்கள், பாரம்பரியம் மிக்க குடும்பத் தன்மையை, பொருளாதார வடிவில் சிதைந்துத் விடுகின்றது. இதை யாரும் அலட்சியப்படுத்தவில்லை, மாறாக மூலதனம் குடும்பத்தின் தனிச் சொத்துரிமையை அலட்சியப்படுத்தி, குடும்பத்தைத் தனது மூலதன வளர்ச்சியில் சிதைக்கின்றது.

முதலாளித்துவம் எப்படி பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கி தனக்கே வேட்டு வைக்க முயல்கின்றதோ, அதுவே மூலதனத்தின் பின் குடும்பத்துக்கும் நிகழ்கின்றது. ஆனால் மக்கள் புதிய இணைக் குடும்பத்தை மூலதனத்துக்கு வெளியில் தேர்ந்து, சேர்ந்து வாழ்வது அதிகரிக்கின்றது. இதுவும் தனிச் சொத்துரிமையின் சமூகப் போக்கில் கறைபடிந்த போதும், முன்னேற்றகரமான புதிய குடும்பங்களாக உருவாகின்றது. இது தனிச் சொத்துரிமை வாரிசு கண்ணோட்டத்தை இட்டு அலட்டிக் கொள்வதில்லை? இதனால் பெண் ஆணுக்கு வாரிசு பிள்ளையைப் பெத்துப் போடும் இயந்திரமாக இருப்பதில்லை. உழைப்பு சமூக மயமாகி கூலியாவதால், வீட்டுக் கடமையும் சமூகமயமாகி மூலதனத்துக்கு அடிமையாகின்றது. உணவு தயாரித்தல் மற்றும் பல வீட்டுக் கடமைகள், மூலதனத்தைத் திரட்டும் சமூக மூலதனமாவதால், அதைப் பெண்ணிடம் இருந்து மூலதனம் அபகரித்து விடுவதால், பெண்ணின் இரட்டைச் சுமை குறைந்து வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் மக்கள் ஆணாதிக்க மூலதனத்தின் கூலி இயந்திரப் பாகமாகச் சார்ந்து நிற்கும் வகையில் சமூகமயமாகின்றது. இங்கும் தனிச்சொத்துரிமை குடும்பம் சிதைகின்றது. ஆகவே மூலதனக் குவிப்பு குடும்பத்தைச் சிதைக்கின்றது. இது புதிய குடும்பத்தை உருவாக்குகின்றது. அதே நேரம் மூலதனக் குவிப்பு ஆணாதிக்கத்தை நுகர்வுப் பண்பாட்டுத் தளத்தில் விரிவாக்குகின்றது. பெண்ணைச் சுதந்திரமான விபச்சாரியாக மாற்றுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூர்சுவா பெண்ணியம் மார்க்சியம் பற்றி விளக்குவதைப் பார்ப்போம். "பெண்ணியத்தின் மீது மார்க்சியம் ஆதிக்கம் செய்து வருவதற்கு, மார்க்சிய ஆய்வுத்திறனும், கட்சிக்குள் ஆண்களின் ஆதிக்கமும் காரணமாய் இருக்கின்றன."[62]

இதைவிட வெட்கக் கேடான புலம்பல் வேறு ஏதுவும் இருக்க முடியாது. மார்க்சியம் ஆண்களின் சொத்துரிமையல்ல. அது சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட அனைத்துப் பிரிவு மக்களின் போராடும் நடைமுறைத் தத்துவமாகும். அதிலும் சுரண்டும் - ஒடுக்கும் ஆண்கள் - பெண்கள் யாரும் மார்க்சியத்தை நெருங்க முடியாது. **மார்க்சியம் சமுதாயத்தில் ஒவ்வொரு சமூக இழிவுகளையும் களைகின்ற பொதுக் கோட்பாடாகும்.** மார்க்சியம் இதைத் தவிர்த்த எதையும் தனித்துவமாகக் கொண்டிருப்பதில்லை, விளக்குவதில்லை.

மார்க்சியத்தை வெறுக்கின்ற பூர்சுவா பிரிவுகள் தொழிற் சங்கத்தைப் பொருளாதாரக் கோரிக்கைக்குள்ளாக்கி, மார்க்சியத்திடம் சொந்த ஆணாதிக்கச் சுரண்டல் வக்கிரத்தில் விவாகரத்தைக் கோருகின்றது. இது போல் சாதி, இனம், மதம், பால் என்று அனைவரும் இதை முன்வைக்கின்றனர். மார்க்சியம் இயற்கை வாழ்வை மெய்யாகக் கண்டறியவும், அதை அடிப்படையாகக் கொண்டு போராடி இயற்கையை மீட்கவும் உள்ள போராடும் ஒரே தத்துவம் என்பதால், பூர்சுவா கோட்பாட்டாளர்கள் பலவிதமாக மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துகின்றனர்.

அடுத்து மார்க்சியத்தின் ஆய்வுத் திறன் காரணமாக மார்க்சியத்துடன் பெண்ணியம் இணைய முடியாது என்று திறமை மீது குற்றம் சாட்டி, அதனால் தனித்துவமாகப் போராட வேண்டும் என்கின்றனர். ஆய்வுத் திறனை அறிவியல் பூர்வமாக மறுக்க முடியாத நிலையில், பூர்சுவா அற்பத்தனத்தை நியாயப்படுத்த ஆய்வற்ற கண்மூடித்தனத்தில் காலத்தை ஓட்ட அழைப்பதன் மூலம், உண்மையில் சுரண்டல் அமைப்பையும் அதைச் சார்ந்து ஒட்டுண்ணியாக உள்ள ஆணாதிக்கச் சமூகத்தையும் பாதுகாக்க சபதம் ஏற்கின்றனர். ஆய்வற்ற புரட்சி பேச, தன்னியல்பான கும்பல் செயல்களைப் புரட்சியாகக் காட்டுவது, இதன் அரசியல் உள்ளடக்கமாகும். இது இந்த ஆணாதிக்கச் சமூக அமைப்பை சிதைவின்றி பாதுகாக்கும்.

கட்சியில் ஆண்களின் ஆதிக்கம் காரணம் என்பது, வர்க்கத்தின் உறுதியான வர்க்க தலைமையைக் குறித்த சேறடிப்பதாகும். பெண்கள் கூட மார்க்சியத்தின் தலைமை வழிகாட்டியாக இருப்பதை மார்க்சியம் என்றும் மறுத்ததில்லை. யாரும் ஆணா? பெண்ணா? சாதியா? இனமா? மதமா? என்று அடையாளம் கண்டு மறுக்க முடியாது. கட்சி தனது வர்க்கக் கடமையை பூர்த்தி செய்ய தனக்கான தகுதியுள்ள முன்னணி தலைமையை உருவாக்குகின்ற போது, இங்கு ஆண் - பெண் உள்ளிட்ட எந்த வேறுபாட்டையும் காட்டுவதில்லை. சமூகத்தில் இயல்பான பெண்ணின் பின்தங்கிய நிலை, பெண்களின்





எண்ணிக்கையைக் குறைவானதாக ஆக்குகின்றதே ஒழிய, இதை மார்க்சியம் வில்லங்கமாக வேண்டுமென்றே உருவாக்குவதில்லை. மார்க்சியம் மேலும் மேலும் பின்தங்கிய பிரிவுகளைக் கல்வியூடாக, முன்னிலைக்குக் கொண்டுவர போராடுவதை ஓர் அரசியல் பணியாகவே கொள்கின்றது. இதை எந்தப் பூர்சுவா பெண்ணியமும் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் அவர்கள் மார்க்சியத்தை வெறுப்பது யதார்த்த நடைமுறையாக, கோட்பாடாக உள்ளது.

இதில் இருந்து "பெண்கள் தங்களது நிலைகுறித்து ஒரு சுதந்திரமான விளக்கத்தை வளர்வதைக் கைவிட்டுவிட்டு இடதுசாரி விளக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி பெண்களைத் தூண்டுகிறார்கள்'[62] என்று தமது பாட்டாளி வர்க்க எதிர்ப்பைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றனர். பெண்கள் சுதந்திரமான சிந்தனையைச் சமூகத்துக்கு வெளியில் எப்படி? பூர்சுவா எல்லையில் பெறமுடியும். மதங்கள் பெண்ணின் அடிமை நிலையையும், முதலாளித்துவம் சுதந்திரமான சந்தையில் பெண்ணின் விபச்சாரத்தைப் பற்றியெல்லாம் முன்வைக்கும் பல்வேறுபட்ட கருத்துகளுக்கு, வெளியில் சுயேட்சையாக எப்படி பெண்கள் சுதந்திரமான முடிவை வந்தடைய முடியும்? ஆணாதிக்க ஒடுக்குமுறையை நடைமுறை ரீதியாக உணர்பவர்கள் கூட, இதற்குள் அல்லவா முடிவை வந்தடைய முடியும். ஆணாதிக்கம் பற்றிய வர்க்க ஆய்வுத் திறன் இன்றி, இயற்கையான பெண்ணின் வாழ்வை வந்தடைய முடியாது.

எந்தப் பெண்ணியமும், சிந்தனையும் அவை சுதந்திரமாக இருப்பதாகக் கற்பனை செய்யினும், ஒரு வர்க்கக் கோட்பாட்டைச் சார்ந்து தான் தன்னை வெளிப்படுத்த முடியும். இது போன்று எண்ணற்ற மார்க்சிய எதிர்ப்பை இந்த நூல் வெளிப்படுத்தியுள்ளது.

அடுத்து ஆணாதிக்கம் தன்னைப் பாதுகாக்க, போராட்டக் கடமையைப் பெண்களிடம் கைவிட்டுச் செல்லும் பிதற்றலைப் பார்ப்போம். " .. ஆணாதிக்க முறைமையின் குறிப்பான போராட்டங்களைப் பெண்களே தலைமை தாங்கி நடத்தவேண்டும்."[63] என்கின்றனர். பெண்களை அடிமைப்படுத்தியது ஆண்களா? அல்லது ஆணாதிக்கமா? இந்தியாவின் சாதிக் கொடுமைகளையும், மத அடக்குமுறைகளையும் ஒழிக்க யாரை எதிர்த்துப் போராட வேண்டும் பார்ப்பானையா? அல்லது பார்ப்பனியத் தத்துவத்தையா? ஒரு சமூகப் போக்கினை மாற்ற தனி மனிதர்கள், ஒரு பிரிவு மக்களை மாற்றி அமைப்பதன் மூலம் அல்லது ஒரு தனி மனிதன், ஒரு பிரிவு மக்கள் கூட்டம் போராடுவதன் மூலம் மாற்றிவிட முடியும் என்ற கோட்பாடு முன்வைக்கப்படுகின்றது. அதாவது மனிதர்களை மாற்றுவது என்ற அரசியலை முன்வைப்பது கருத்துமுதல் வாதமாகும். தனிமனிதர்கள் மாறுவதால் சமூகம் மாறிவிடுவதில்லை. இது போல் தனி மனிதன் போராடுவதால் சமூகம் மாறிவிடுவதில்லை. தனி மனிதர்கள் சமூக இயக்கத்தில் பங்களிப்பு வழங்குபவர்களாகவே இருக்கின்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக இயக்கமும் அதன் பிரதிபலிப்பும் பொருளாதார அடிக்கட்டுமானம் மீது உருவாகின்றது. ஆணாதிக்கத்தை எடுப்பின் அது தனிச் சொத்துரிமை அமைப்பின் ஒட்டுண்ணியாகும். இதைப் பெண்கள் வர்க்கம் கடந்து போராடுவதன் மூலம் ஒழித்துவிடமுடியாது. அதுபோல் பெண்கள் தனித்து, வர்க்கத் தன்மை கொண்டு போராடுவதாலும் ஒழித்துவிட முடியாது. சமுதாயம் என்பது பெண்களை மட்டும் கொண்டவையல்ல. அது போல் ஆணாதிக்கம் பொருளாதார அமைப்புக்கு வெளியில் சுயேட்சையானதும் அல்ல. ஆணாதிக்கம் ஆண்கள் மற்றும் சமூகப் பொருளாதார விளைவுகளில் இருந்து தனித்துவமானவையோ, சுயேட்சையானவையோ அல்ல. சுயேட்சையற்ற ஆணாதிக்க இயக்கம் எதனுடன் பின்னிப் பிணைந்துள்ளதோ, அவற்றுடன் இணைத்தே, ஆணாதிக்கத்தை வேர் அறுக்கமுடியும். அடிமைப்படுத்திய வடிவங்களில் இருந்து தனித்துவமாக, அதற்குப் புறம்பாகக் கோரும் மாற்றங்கள், உண்மையில் ஆணாதிக்கத்துக்கு நிகரான வகையில், பெண் ஆணாதிக்கத் தன்மையை அடைவதாகும்.

ஆணாதிக்கத்துக்கு எதிரான குறிப்பான போராட்டத்தைப் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் முன்னெடுக்க முடியும். இதைப் பெண்களுக்குக் குத்தகைக்கு வழங்குவது என்பது, வழங்குபவர்களும், வழங்க விளக்குபவர்களும், வழங்க கோருபவர்களும் தமது ஆணாதிக்க வடிவத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே செய்கின்றனர். பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஆணாதிக்கத்தை எதிர்த்து போராட முடியும். அது போல் ஆண்கள் மட்டும் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துவதில்லை பெண்களும் வெளிப்படுத்துகின்றனர். எனவே போராட்டம் ஆணாதிக்கத்தை எதிர்த்து, பால்வேறுபாடு கடந்து போராட வேண்டும்.

பெண்கள் தனித்துவமாகத் தம் மீதான ஒடுக்குமுறைகளை விவாதிப்பது, போராடுவது எல்லாம், பாட்டாளி வர்க்கத் தலைமையில் (இங்கு பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது ஆண் - பெண் வேற்றுமையைக் கடந்தது.) போராட்டத்தை விரிவாக்கி, பரந்த தளத்துக்கு எடுத்துச் செல்வது வெகுஜன நடைமுறை அரசியல் வழிகாட்டலுக்காகவே ஒழிய, ஆணில் இருந்தும் சமூகப் பொருளாதார விளைவுகளில் இருந்தும் விலகியிருப்பதற்க்கல்ல.

இடம் இன்மை மற்றும் முன் கூட்டியே பல இடங்களில் இவைகளை விவாதித்திருப்பதால், முக்கியமானதை மட்டும் இவ்விவாதத்தில் எடுத்து அம்பலப்படுத்த முனைந்தேன்.



# 24. பொருளாதார மறுசீரமைப்பைக் கோரும் ஆணாதிக்கமும் தலித் ஆணாதிக்கத்தை எதிர்க்காத பெண்ணியமும்

பழைய சரக்குகள் மக்கள் முன், பெறுமானம் இழந்து அம்பலமாகிப் போகப் போக புதியச் சரக்குகளைத் தேடிச் செல்லும் வியாபாரிகளைப் போல **அ.மார்க்ஸ்** "தலித் பெண்ணியம் ஒரு விவாதத்தின் முன்னுரை"[64] என்ற கட்டுரையை "இருள்வெளி" என்ற இருண்ட, மக்கள் விரோத, மார்க்சிய விரோத பாரீஸ் மலரில் எழுதியுள்ளார்.

இக்கட்டுரையில் **சாந்தால் மொ.ஃ.பே**யின் மேற்கோள்களை, தலைப்புக்குக் கீழ் தடித்த எழுத்தில் போட்டே தனது ஆணாதிக்கக் கட்டுரையைத் தொடங்குகின்றார்.

நாம் அந்த மேற்கோள்களைப் பார்ப்போம். "பெண்ணியங்களில் பலவகை என்பது தவிர்க்க முடியாதது. இவற்றில் 'உண்மையான' பெண்ணியத்தைத் தேடுவதென்பது கேலிக்குரியது"[64] என்று கூறுவதன் மூலம் ஆணாதிக்கத்திற்கு எதிரான ஒரே ஒரு பெண் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி கேவலப்படுத்துகின்றார். அதாவது, பெண்ணியத்தை வரையறுக்க முடியாது என்கின்றார். இதைப்போல் வறுமையை ஒழிக்கக் கோரும் உண்மையான போக்கைத் தேடுவதும் கேலிக்குரியது என்கின்றார்.

வறுமை ஒழிப்புப் பலவகை என்பதால் 'உண்மையான' வறுமை ஒழிப்பைத் தேடுவது என்பது கேலிக்குரியது என்கின்றார். இது சாதிக்குள், மதத்திற்குள் உண்மையான விடுதலையைத் தேடும் போது, **உண்மை கேலிக்குரியது என்கின்றார்.**

வறுமைக்குக் காரணம் அதிக பிள்ளைகளைப் பெறுவதே என்பதால் கருத் தடையை முன்வைக்கின்றனர் ஒருசாரார். மறுசாரார் தொழிலாளர்களின் உழைப்பு போதாது என்கின்றனர். இன்னும் ஒரு சாரார் முதலாளிக்கு வரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடியதால் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்கின்றனர். இதனால்தான் வறுமை என்கின்றனர்.

ஏகாதிபத்தியம் சொத்தை உலகமயமாக்கி குவிப்பதால் வறுமை ஒழியும் என்கின்றனர். தலித்துகள் சாதி ரீதியாக அணிதிரள்வதால் வறுமை ஒழியும் என்கின்றனர். சிலர் சந்தையில்லை எனவே சந்தையைப் பிடிக்க யுத்தத்தை நடத்தி சந்தையைப் பிடித்து வேலை கொடுத்து ஏழ்மையை ஒழிப்போம் என்கின்றனர். நாசிகள் வெளிநாட்டவரைத் துரத்தினால் மக்களின் வறுமை ஒழியும் என்கின்றனர். சிங்கள அரசு தமிழனை ஒடுக்கினால் சிங்களவர் வறுமை ஒழியும் என்கின்றனர். இந்திய இந்துக்கள் முஸ்லீமையும், தாழ்த்தப்பட்டோரையும் அடக்கி ஒடுக்கி தாழ்த்தினால், இந்துக்களின் வறுமை ஒழியும் என்கின்றனர்.

இப்படி வண்ண வண்ண கலரில் பல வகையான வறுமைக் காரணங்களும் வறுமை ஒழிப்புகளும் முன்வைக்கப்படுகின்றன. எனவே இவைகளில் உண்மையான வறுமை ஒழிப்பை, உண்மையான பெண் விடுதலையைத் தேடுவது கேலிக்குரியது என சாந்தால் மொ.்.பே போல் அ.மார்க்ஸ் முன் வைத்து, இதைப் பிரயோகிக்க எல்லாச் சுரண்டல் பேர்வழிகளின் வழியில் கைகோர்த்தபடி வெட்கம் இன்றி, சுரண்டும் மக்களின் போராட்டங்களைக் கேலிச் செய்கின்றார்.

வறுமை ஒழிப்பு என்பது ஒரே ஒரு வழியில் மட்டும்தான் முடியும். அது சுரண்டலை ஒழிப்பதில் தொடங்கி தேவைக்கு ஏற்ப பகிர்வதால் மட்டுமே சாதிக்க முடியும். இதற்கு வெளியில் எந்த ஒழிப்புக் கோஷமும் (முழக்கமும்) வறுமையைப் பாதுகாக்கும் செயல் தந்திரங்களே. உண்மையான வறுமை ஒழிப்பு என்பது வர்க்கப் போராட்டத்தில் மையப்படுகின்றது. இதுபோல் பெண் விடுதலை என்பது உண்மையான பெண் ஒடுக்குமுறைக்கான சமுதாயக் காரணத்தில் இருந்து தான், உண்மையான பெண்ணியம் கண்டு கொள்ளப்படுகின்றது. பெண் ஏன் ஒடுக்கப்பட்டாள் என்ற அடிப்படைக் காரணத்தைக் கண்டு எதிர்த்துப் போராடாத அனைத்து (வகை) வண்ணப் பெண்ணியச் செயற்பாடுகளும், ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கும் செயல் தளத்தில் அ. மார்க்ஸ் வைப்பது போல் முன்வைப்பவை தான்.

உலகில் உள்ள எல்லாவற்றையும் மனிதன் பகுத்தாய்வு செய்யவும், அதன் மூலம் தனக்கு இசைவாகப் பயன்படுத்தவும் முடியும். இதன் அடிப்படையில் மட்டும் தான் நாம் பயன்படுத்தும் பொருள் முதல, அனைத்து நோய்களையும் தீர்ப்பது வரை, வான் வெளிப் பயணங்கள் என அனைத்தும் பொது உண்மைகள் மீது தான் (உண்மையை அறியாத மனிதர்கள் இருக்கும் வரை, கருத்துமுதல்வாதம் இந்த அமைப்பைப் பாதுகாக்கும். மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட போதும் சரி, இன்று தொலைக்காட்சி முதல் அனைத்து தனிச்சொத்துரிமை சமூக இலக்கியம் ஈறாக இதையே செய்கின்றது. இதைத் தான் கோட்பாட்டில் அ.மார்க்ஸ் நியாயப்படுத்துகின்றார்.) மனித உயிர் வாழ்க்கை செயற்பாடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவை சமூக இயக்க முரண்பாடுகள் மீதும் விதிவிலக்கின்றி பொருந்தி உள்ளன. அ.மார்க்சும் சரி அவரின் எடுகோளும்





சரி உண்மையை மறுப்பின், அது பொய்கள் மீது கட்டியமைப்பவையாகவே இருக்கும்.

உண்மையை மறுத்த செயற் தளம் சமூக இயக்கத்தைத் தடுக்கவும், ஆணாதிக்கச் செயல் தளத்தைப் பாதுகாக்கவும் (இது ஏகாதிபத்திய அமைப்பைத் தவிர்க்க முடியாது தக்க வைக்கிறது.), நமது வாழ்வியல் பயன்பாட்டுச் செயல்தளத்திற்கு முரணாகக் கோட்பாட்டை முன் தள்ளுகின்றனர். இது மக்களின் அறியாமை மீது சவாரி செய்வதாகவும், அறியாமையை மேலும் அதிகரிக்க வைக்கவும் இச்சமூக அமைப்பின் நனவுகளின் பிரதிபலிப்பாக உள்ளது.

கட்டுரையை மேலும் ஆராய்வோம். "பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் முதலிய சிந்தனைகள் 'சாராம்சம்' என்பதைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன."[64] அதாவது **ஒன்றுக்கும் சாராம்சம் இல்லை என்ற அ.மார்க்சின் கண்டுபிடிப்பு நகைப்பிற்குரியது.** இது பொருளை மறுத்து கருத்தை முதன்மைப் படுத்துகின்றது. ஏன் ''தலித் பெண்ணியம்'' கட்டுரையேத்தான் ஒரு சாராம்சத்தைக் கொண்டுள்ளது. அது தலித் பெண்ணியத்தைப் பேசுவதாகப் பாசாங்கு செய்கிறது. இது உண்மைக்கு வெளியில் பொய்யை அடிப்படையாகக் கொண்ட சாராம்சத்தை வெளிப்படுத்துகிறது. சாராம்சம் இன்றி ஒரு படைப்பு படைப்பாக இருக்க முடியாது. இது அ.மார்க்சுக்கும் விதிவிலக்குக் கிடையாது.

ஒவ்வொரு பொருளும் தனக்கிடையில் வேறுபட்ட சாராம்சத்தைக் கொண்டுள்ளது. ஒரே பொருளில் பலவகையில் பொதுவான சாராம்சம் உள்ளது. அதுபோல் ஒரு பொருளின் வேறுபட்ட சாராம்சமும் உள்ளது. இவை இடைவெளியில் வேறுபட்டு ஏற்றத் தாழ்வுக்கான காலம், சூழல்,.. என அனைத்துடனும் தொடர்புடையதாக உள்ளது.

உதாரணமாகப் பெண்ணியத்தை எடுத்தால் நாட்டுக்கு நாடு, நகரத்துக்கு நகரம், கிராமத்துக்குக் கிராமம், வீட்டுக்கு வீடு, நபருக்கு நபர் மீதான ஒடுக்குமுறை வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றது. இது பொருளாதாரம், கலாச்சாரம், சூழல், புறச்சூழல் சார்ந்த சிந்தனை என அனைத்துடனும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதனால் ஆணாதிக்கப் பொதுச் சாராம்சம் இல்லாமல் போய்விடுகின்றதா? இல்லை. மாறாக ஆணாதிக்க ஒடுக்குமுறை உலகில் பொதுவானதாக, பொதுவான சாராம்சம் கொண்டதாகக் காணப்படுகிறது. எனவே ஒரு பொருள் ஒரு நிகழ்ச்சியை ஆராய்வது என்பது சாராம்சத்திற்கு உட்பட்டது. இதற்கு வெளியில் பொருள் பொருளாகவே இருக்க முடியாது. பொருள் இருப்பதாயின் பொது உண்மையும் அதற்குள் நீடிக்கின்றது. பொருள் என்ற உண்மை இல்லை எனின் பொருள் இல்லை. அதேபோல் சிந்தனையும் இல்லை. இருக்கிறது என்றால் அது கருத்து முதல்வாதமாக உள்ளது.

வாழைப்பழத்தை எடுத்தால், அதில் வேறுபட்ட பல இனங்கள் இருந்த போதும், வாழைப்பழம் என்பது பொதுவான சாராம்சத்தை நிர்ணயிக்கின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது ஒரு பொது உண்மையைக் கொண்டுள்ளதால் தான் அது வாழைப்பழமாக இருக்கின்றது. இது போல் ஆணாதிக்கம் பொதுவான சாராம்சத்தை அடையாளப்படுத்துகின்றது. இதனால் இது ஒரு பொது உண்மையைப் பிரதிபலிக்கின்றது. ஏகாதிபத்தியமும் அதன் நிறுவன அமைப்புகளும், கோட்பாடுகளும் தான் மனிதன் என்ற பொதுச் சாராம்சத்தை நிராகரிக்கின்றன. இதன் மூலம் மனிதன் என்ற பொது உண்மையை மறுத்து இனம், நிறம், சாதி, பெண், வர்க்கம் என பல தளங்களில் பல சாராம்சங்களில் பொதுவை மறுத்து ஒடுக்குகின்றன. இதன் மூலம் இயற்கையிலும் செயற்கையிலும் மனிதன் உயிர் வாழும் நியதியையும் சாராம்சத்தையும் மறுத்து, அதன் உண்மையைப் பொய்யாகக் காட்டி, கேலி செய்து, ஒட்டுமொத்தமாகச் சாராம்சத்தைத் தமது நலனுக்குப் பயன்படுத்தி அழிக்கின்றனர்.

**ஒரு பிரச்சினையின் அடிப்படையான சாராம்ச உண்மையை மறுத்து, பிரச்சினைக்கு ஆயிரம் காரணம் கூறி திசை திருப்பும் பொய்கள் தான், இன்றைய ஏகாதிபத்திய அமைப்பின் நீடிப்பிற்கான ஒரே ஒரு நிர்ணயமான பாதுகாப்பை வழங்குகிறது.**

வறுமைக்குக் காரணம் மனித உழைப்பைச் சுரண்டி, பொருட்களைத் தேவைக்கு ஏற்ப பகிரப்படாது சுரண்டுவதுதான் என்பது பொதுவான உண்மையும் பொதுவான சாராம்சமாகும். ஆனால் இதை மறுத்து "ஒருமித்த அடையாளத்துடன் நாம் வாழ்வதில்லை"[64] என்று கூறிக் கொண்டு வறுமைக்குக் காரணம் அதிக இனப்பெருக்கம், போன பிறப்பில் செய்த பலன் விதி, உழைப்பு போதாது, சந்தை இல்லை என அடுக்கடுக்காக அடுக்கி வைக்கும் பல காரணக்காரியங்களைக் கூறி, பொதுவான சாராம்சம் இல்லை எனக் கூறிய படி, உண்மைகளை மறுத்து பொய்களை முதன்மைப்படுத்தி ஏகாதிபத்திய நலனைத் தக்க வைக்க, அச்சமூக அமைப்பைப் பாதுகாக்கும் கடுமையான இடைவிடாத முயற்சியின் விளைவு தான், சாராம்சம் இல்லை என்றும் உண்மை கிடையாது என்று கதை அளப்பதாகும்.

இந்த நோக்கத்திற்காக அ.மார்க்ஸ் எடுத்து வைக்கும் அடுத்த வாதத்தைப் பார்ப்போம். "தொழிலாளியின் சாராம்ச முற்போக்குத் தன்மை ஆட்டம் காண்கிறது. சாராம்ச அடையாளங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அரசியல் சமூகங்களில் பிடிக்குள் அகப்படாமல் அழுத்திக் கொண்டு வெளியே நிற்கும் எச்சச் சொச்சங்கள், மிச்சம், மீதிகள் (Remain ders) தங்கள் குரலை இன்று மேலெழுப்பத் தொடங்கியுள்ளனர்"[64] என்று மேலெழுப்புவதை ஆராய்வோம்.

சாராம்சம் இல்லை என்ற மோசடிக்கு வெளியில் இலங்கையில் இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் எதிர்ப்பு, சாராம்சத்தில் ஜனநாயகத்துக்குச் சார்பானது தான். இந்தியாவில் இந்துப் பார்ப்பனியப் பாரதீய ஜனதாவிற்கு எதிரான போராட்டம், ஜனநாயகத்தைச் சாராம்சமாகக் கொண்டது. இரண்டாம் உலக யுத்தத்தில் நாசிகளுக்கு எதிரான ஒன்றுபட்ட





போராட்டம், மனிதக் குல விடுதலையைச் சாராம்சமாகக் கொண்டது. ஜப்பான் சீனாவை ஆக்கிரமித்த போதும், வியட்நாம் மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த அனைத்துப் போராட்டத்தின் போதும், ஒரு மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்புச் சாராம்சத்தைக் கொண்டு இருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டச் சாராம்சம் என்பது முற்போக்கு என எங்கும் எதிலும் உண்டு. ஒடுக்கும் பிரிவுகளின் சாராம்சம் மக்கள் மீதான அடக்குமுறையில் எங்கும் எப்போதும் பிற்போக்குச் சாராம்சமாகவே இருக்கும். இன்றிருக்கும் அதிகாரப் பிற்போக்கு சாராம்சத்தைப் பாதுகாக்க மட்டும் தான், சாராம்சம் இல்லை என்று கதைஅளந்து முன்தள்ளுகின்றனர். இது உண்மையை மறுத்து, பொய்யை உண்மையாகக் காட்ட முனைகிறது. இன்று சாராம்சம் இரு தளங்களில் கட்டி அமைக்கப்படுகின்றது. இங்கு இரு தளங்களில் சாராம்சம் உள்ளதுடன், அது செயல்படும் செயல் தளத்தில் முற்போக்கையும் - பிற்போக்கையும், உண்மையையும் - பொய்யையும் கோடு பிரிக்கின்றது.

ஏன் தலித்திய ஒன்றிணைப்பு என்பது ஒரு பொது சாராம்சத்தில் நின்று கோரும் தன்மையையும், பின் அ.மார்க்ஸ் அதையே மறுத்து சாராம்சம் இல்லை என மறுக்கும் பொய்மையுடன் கூடிய ஏமாற்றும், ஒரு மோசடிக்காரனின் கைவந்த குத்துக்கரணம் தான்.

இந்தியப் பார்ப்பனியம் இந்து என்ற பிற்போக்குச் சாராம்சத்தை எதிர்த்த **பெரியார்** இந்துக்கும், மதத்துக்கும், மொழி ஆதிக்கத்துக்கும் எதிரான முற்போக்குச் சாராம்சத்தைக் கட்டியெழுப்பினார். இப்படி **அம்பேத்கார்** முதல் இன்று வர்க்கப் போராட்டம் வரை உழைக்கும் மக்கள் என்ற பொதுச் சாராம்சத்தில், அனைத்து மனித ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான பொதுச் சாராம்சத்தில், ஒன்றி இணைக்கும் களத்தில் போராட்டமும் அணிதிரட்டலையும் செய்கின்றது. இதை மறுக்க மட்டும் தான் சாராம்சம் இல்லை என்று கதைவிட்டு கதை அளக்கின்றனர்.

ஒரு தொழிலாளி வேறுபட்ட சாதிகளின் பிரதிநிதியாக இருந்தாலும், இங்கு சாதிக்கு எதிரான போராட்டம் சாதிக்கெதிரான முற்போக்குச் சாராம்சத்தில் மட்டும் தான் ஐக்கியத்தைப் பாட்டாளி வர்க்கம் கோருகின்றது. இங்கு எதிலும் முரண்பாடு இருப்பதில்லை. இது ஆண் - பெண் என அனைத்துச் சமூக முரண்பாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் முன்வைத்து பொதுச் சாராம்சத்தில் போராடுகிறது. பாட்டாளி வர்க்கம் மனிதப் பிளவுகளைக் கடந்த பொதுச் சாராம்சத்தைப் பண்பாடு, பொருளாதாரம், கலாச்சாரம்....... என அனைத்திலும் கோருகின்றது. இது உண்மையை அடிப்படையாகக் கொள்கிறது. இதை மறுத்து பொய்யைப் பிரதிபலித்த படி சாராம்சம் இல்லை என்று கூறுவதன் மூலம் மனிதப் பிளவுகளை நிரந்தரமாக நிலைநிறுத்த, இந்தச் சமூக அமைப்பைத் தொடர, இருக்கும் ஏகாதிபத்திய நுகத்தடியைப் பற்றிப் பிடிக்க முன்வைப்பதே சாராம்சம் மறுத்த, உண்மையை மறுத்த கோட்பாடுகளின் செயல் தள முயற்சியாக உள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரண்டலுக்கும், சமூக ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான முற்போக்குப் பொது பெரும்பான்மை சாராம்சத்தை எதிர்த்து, சுரண்டும் பிற்போக்குச் சாராம்சத்தை முண்டு கொடுக்க நியாயப்படுத்தி அரும்பாடுபடுவது சுரண்டும் வர்க்கச் சேவைக்காகத் தான். சாராம்சம் இல்லை என்பதன் மூலம், சிறுபான்மை தனிநபர் சாராம்சத்தைப் பாதுகாக்க, தனிநபர் உரிமையின் பெயரில் பொதுவான சாராம்சம் இல்லை என்பதன் மூலம், தனிநபர் சமூக அமைப்பை இது சாராம்சத்தில் ஏகாதிபத்தியமாக உள்ளது என்பதை மூடி மறைக்கின்றனர். உலகமயமாதல் மூலதனக் குவிப்பில் சிறுபான்மை பிரிவின் நலன்களை ஜனநாயகமாக்க முனையும் போக்கில், சிறு தத்துவங்களைச் சமூகத்தின் முன் தள்ளி விடுகின்றது. அந்த எலும்பைக் கவ்விப் பிடித்தபடி தான் இந்த நாய்கள் அதற்கு விசுவாசமாகக் குரைக்கின்றன.

இதற்காக அ.மார்க்ஸ் கூறும் அடுத்த வரிகளை நாம் மேலும் பார்ப்போம். "பெண்'' என்றால் யார்? 'பெண்' என்கின்ற சொல்லின் பொருள் என்ன? எந்த ஒரு சொல்லிற்கும் பொருள் என்பது தனித்துவமான பண்பையும் பிரித்து வரையறுத்துக் காட்டுவதல்ல''[64] என்பதன் மூலம் பெண் மீது உலகளவில் உள்ள பொதுவான ஆணாதிக்கத்தை மறுக்கும் போதே, இதன் மூலம் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க வெட்கம் இன்றி விபச்சாரம் செய்யக் கோருகிறார்.

உலகளவில் பெண் என்ற அடையாளப்படுத்தல் என்பது ஆணுக்கு உட்பட்ட (இனவிருத்தி வேறுபாட்டைத் தவிர்த்து) சுரண்டல் ஆணாதிக்கம் தான். இங்கு ஆணாதிக்க ஒடுக்குமுறை வேறுபாடுகள் சமுதாய, பொருளாதார, கலாச்சார, பண்பாட்டுப் பண்பியல் வேறுபாடுகள் (ஏற்றத் தாழ்வுகள்) பெண் மீதான ஆணாதிக்கப் பொது சாராம்சம் மீது சீர்திருத்தத்தை, விட்டுக் கொடுப்பை மட்டும் வழங்கி உள்ளது. ஆனால் பெண்கள் எந்தச் சமுதாயத்திலும் வேறுபாடின்றி அதே ஆணாதிக்க ஒடுக்குமுறைகளுக்குள் மாற்றமின்றி, அதேநிலையில் பண்பியல் மாற்றத்துடன் நீடிக்கின்றனர்.

தனிச்சொத்துரிமையிலான சுரண்டலால் உருவான ஆணாதிக்கம், பெண்ணை ஒடுக்கி சுரண்டும் வழியில் உலகில் எந்த இனமும், சமூகமும் பின் நிற்பதில்லை. இங்கு ஏற்படும் வேறுபாடு சமுதாய ஏற்றத் தாழ்வுகளால் பண்பியல் ரீதியில் மட்டும் மாறி உள்ளது. தொடர்ந்து நிகழும் சமூக எழுச்சிகள், போராட்டங்கள் பெண்களுக்குச் சீர்திருத்தத்தை வழங்கி வந்தன என்பதற்கு அப்பால், பெண்விடுதலையைத் தந்து விடவில்லை. அதாவது ஆணாதிக்கத்தைப் பெண்ணியமாக்கி விடவில்லை. பாட்டாளிவர்க்கப் புரட்சிகள் இதை ஒழித்துக் கட்டும் போராட்டப் பாதையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்ற நிலையில், மீண்டும் அதை ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாயத்திடம் போராட்டத்தை இழந்து போனதும். மீண்டும் வர்க்கப் போராட்டப் பாதையை முன்னெடுக்கவும், பாதுகாக்கவும், போராடவும் முனைவதன் மூலம் பெண்கள் மீதான ஆணாதிக்கத்தை ஒரேயடியாக உலகில் ஒழித்துக் கட்ட பாட்டாளி வர்க்கம், வர்க்கப் போராட்டத்தினூடாகப் போராடுகின்றது.





இதை மறுத்து அ.மார்க்ஸ் எடுத்து வைக்கும் கூற்றை நாம் பார்ப்போம். 'சொல்' என்பது ஒரு தனித்துவமான பொருளுடன் தீர்மானகரமான உறவைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப்பின்னலாக அது விரிவு பெறுகிறது என்பதே சரியாகும்''[64] என்று சொல்லையே பொருளின் மீது மறுப்பதன் மூலம் பொதுமையை, கருத்துமுதல்வாத நிலையில் மறுக்கின்றார். நான் கற்பு பற்றிய விவாதத்தில் எடுத்தாண்டவை இங்கும் பொருந்தும்.

இதையே இன்னுமொரு நூலில் அ.மார்க்ஸ்தான் தேசியத்தைக் கற்பிதம் என்றார். தேசியவிடுதலைப் போராட்டம் தான் தேசத்தை உருவாக்குகின்றது என்றார். ஆனால் தேசம் முன்கூட்டியே இருப்பதை மறுத்து, அதில் இருந்தே போராட்டம் தொடங்குகின்றது என்பதை மறுப்பது அடிப்படையிலேயே கருத்துமுதல்வாதமாகும். இது இயங்கியலின் வரலாற்று வளர்ச்சி விதிகளை மறுக்கின்றது. பொருள் முன்கூட்டியே தோன்றுவதும் அதில் இருந்தே அடுத்த கட்ட பாய்ச்சல் நிகழ்வதும் இயங்கியல் ஒழுங்காகும். இதை மீறமுடியாது. இதை மறுத்து தேசியத்தைக் கற்பிதமாகக் கூறுவது, ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பை ஏற்றுக் கொள்வதில் இருந்து உதிக்கின்றது.

பூ வரும்முன்பு விதை பெறமுடியாது. மக்கள் பேசும் முன் வசனநடை மொழியில் வரமுடியாது. ஆனால் இது பின் ஒழுங்கமைக்கப்படுகின்றது. அது முந்திய வடிவிலும், திரிந்த வடிவிலும் கூட மாற முடியும். பூ விதையாக மாறும் போது இயங்கியல் ஒழுங்கிலும், பூவைப் பித்தெறியும் போது திரிந்த வடிவிலும் மாறுகின்றது, மாற்றப்படுகின்றது.

தேசிய விடுதலைப் போராட்டம் இருக்கும் தேசத்தில் இருந்து அரசை உருவாக்குகின்றது. அல்லது திரிந்த வடிவில் தரகாகத் துரோகம் செய்வதில் முடியும். இதுபோல்தான் கற்பு பற்றிய வாதங்களும்.

பெண் தனது பாலியல் நடத்தை மீதான சொந்தத் தெரிவை தெரிந்த போதே கற்பு பொருள் வடிவம் பெறுகின்றது. ஆனால் ஆணாதிக்கத்தால் முதிர்ச்சி பெற்ற போது கற்பின் அர்த்தம் திரிவுறுகின்றது. இதனால் பொருளில் திரிபடைந்து மாற்றம் காண்கின்றது. அதே நேரம் பழையது தொடர்ந்து இருப்பதை மறுக்கின்ற போது, பெண்ணின் சுதந்திரத் தெரிவை மறுப்பதை அடிப்படையாக்குகின்றது. கற்பு மொழிக்கு முன்னமே யதார்த்தத்தில் இருக்கின்றது. அதன் பின்புதான் மொழி வருகின்றது. இந்த மொழி திரிபடைவது பின்னால் நிகழ்கின்றது. ஆனால் பலர் இயங்கியலின் உட்கூறைக் கண்டு கொள்ள முடியாத இயங்கியல் மறுப்பாளர்களாக இருக்கின்றனர்.

ஏங்கெல்ஸ் இயங்கியல் வளர்ச்சியை மறுப்பது பற்றி கூறிய கருத்துக்கள் இந்த இடத்தில் சிறப்பாக பொருந்துகின்றது. **'வசனம்' என்ற சொல் தோன்றுவதற்கு நெடுங்கால முன்பே அவர்கள் வசனம் பேசியது போன்று''**[65] எனக் குறிப்பிட்ட போதே வசனம் முன் கூட்டியே மக்களால்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசப்பட்டது. வசனம் வந்த பின்பு அதன் அர்த்தம் மாறிவிடுவதில்லை. அது எந்த மொழியில் இருந்தாலும் பொருந்தும்.

உண்மையில் இந்தச் சொல் என்பது கற்பனையானதல்ல. சொல் என்பது பொருளைக் குறித்து அடையாளப்படுத்துவதுதான். பொருளை அடையாளப்படுத்துவது என்பது மக்களிடையே இருந்த தூரம், காலம், சூழல்... போன்ற இயற்கையின் விளைவாலும், சேர்க்கையான உழைப்பின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியாலும் ஒரு பொருளைக் குறித்து அடையாளப்படுத்துதல், என்பது மொழியின் உச்சரிப்பில் வேறுபட்டாலும் அது அடையாளப்படுத்துதல் ஒன்றையே குறிக்கின்றது. இந்த ஒன்றைக் குறித்த அடையாளப்படுத்துதலை வந்தடைந்த பாதை வேறுபட்டு, அதன் விரிவான அர்த்தம் மற்றும் பயன்பாட்டின் தன்மை வேறுபாடுகள் இருந்த போதும் பொருள் குறித்த அடையாளப்படுத்துதல் பொது சாராம்சத்தில் ஒன்றையே குறிக்கின்றது. இது உலகில் காணப்படும் பல்வேறு ஒரே பொருள்களுக்கும் பொருந்தும்.

உதாரணமாக நெல் இனத்தை எடுத்தால் அதில் பலவகையானவை, பல தன்மையுடன் இருந்த போதும் அது ஒன்றைக் குறித்தே நெல்லாகின்றது. இதன் பொதுச் சாராம்சம் இதைத் தெளிவாக நிர்ணயிக்கின்றது. ஏங்கெல்ஸ்சின் இந்த வளர்ச்சி விதியை விளக்கும் போது "..எனவே நிலைமறுப்பு நிலைமறுக்கப்படல் என்பது யாது? மிகவும் பொதுவான, இந்தக் காரணத்தால் மிகவும் பரந்த செயல்விளைவுடைய மற்றும் முக்கியமான இயற்கை, வரலாறு, சிந்தனை ஆகியவற்றினுடைய வளர்ச்சியின் விதியாகும். .....இயங்கியல் இயற்கை, மனிதச் சமுதாயம், சிந்தனை ஆகியவற்றினுடைய இயக்கம் மற்றும் வளர்ச்சியின் பொது விதிகளைப் பற்றிய விஞ்ஞானமே தவிர வேறு எதுவுமன்று."[65] இதை மறுத்தே பெண் என்ற சொல்லின் பொதுச்சாராம்சத்தைக் கொச்சைப்படுத்த முடிகின்றது.

பல சிக்கலான செயல்களின் தொகுப்பில் தான் பொருள் உண்டாகின்றது, நிலைக்கின்றது, நீடிக்கின்றது, மாறுகின்றது, சிதைகின்றது, மீளவும் உருவாகின்றது. ஒரு பொருள் ஒரு இயக்கம் என அனைத்தும் சிக்கலான பல இயக்கங்களின் விளைவுகளாகத் தான் நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன. இது தொடர்ந்து மாறிக் கொண்டுள்ளது. இது பொருளின் பொதுத் தன்மையை எந்த நிலையிலும் (அது வினாடியாக இருந்தாலும் நீடித்த பல கோடி வருடங்கள் ஆக இருந்தாலும்) கொடுக்கின்றது.

வளிமண்டலத்தை எடுத்தால் $O_2$,(ஆக்ஸிஜன்) $N_2$,(நைட்ரஜன்) $CO_2$ கார்பன் - டை ஆக்ஸைடு...... போன்ற வாயுக்கள் ஊடான ஒரு பொது உண்மையை, அது சார்ந்த சாராம்சத்தைப் பூமி எங்கும் கொண்டு உள்ளது. சுரண்டலை எடுத்தால் உழைப்பைச் சுரண்டும் பொதுச் சாராம்ச உண்மை, உலகெங்கும் பொதுவாக உள்ளது. பெண்ணை எடுத்தால் ஆணாதிக்கச் சுரண்டல் சாராம்ச உண்மை உலகளவில் பொதுவாக உள்ளது. சாதியை எடுத்தால் சாதி ஒடுக்குமுறையுடன் கூடிய சுரண்டல், சாதி உள்ள நாடுகளில் பொதுவாக உள்ளது. இது எல்லா இயக்கத்திற்கும், பொருளிற்கும், சிந்தனைக்கும்



பொதுவான உண்மையாக உள்ளது. இது மாற்றத்துடன் புதிய சாராம்சத்தைத் தொடர்ந்து பிரதிபலிக்கின்றது. தொடர்ந்தும் மாற்றத்துக்குள்ளாகின்றது.

மாறுபட்ட சூழல், பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், மதம் ....... என நீண்ட இடைவெளியில் ஏற்பட்ட பிளவுகள் இடைவெளிகள் வர்க்கப் போராட்ட வரலாற்றின் வழியே கடக்கப்பட முடியும், கடக்கப்படும். ஆனால் முதலாளித்துவ அமைப்பில் இது சாத்தியமில்லை. இதை லெனின் குறிப்பிடும் போது, "ஆடவர் மகளிர் என்றோ, சமயம், வருணம், இனம், தேசிய இனம் எவ்வித வேறுபாடும் இல்லாத குடிமக்கள் சமவுரிமையை முதலாளித்துவ ஜனநாயகம் எங்கும் எப்போதும் வாக்களித்திருந்த போதிலும் என்றுமே செயல்படுத்தவில்லை. மூலதனத்தின் மேலாதிக்கம் காரணமாகச் செயல்படுத்த முடியவில்லை."[66]

இங்கு இந்த வேறுபட்ட பிளவுகளில் காணப்படும் பொதுத் தன்மையும், குறித்த தன்மையும் ஒன்றிணைந்து செயல் தளத்தில், வர்க்கப் போராட்டம் மூலம் எல்லா இடைவெளிகளையும் கடக்க கோரி போராடுகிறது. ஆனால் இந்தப் பிளவு முதலாளித்துவத்தில் இருந்து ஏகாதிபத்தியமாக உருவான போது மேலும் ஆழமாகியது. இதைப் பாதுகாக்கவே சாராம்சம் இல்லை என்றும், மொழியின் வேறுபாடுபற்றியும், பெண்ணின் ஒடுக்குமுறைகள் ஒரே தன்மையற்றவை எனவும் பலவிதமாகக் கூற வேண்டியுள்ளது.

இதை மறுக்க எடுத்து வைக்கும் அ.மார்க்சின் எடுகோள்களைப் பார்ப்போம். "பெண்ணை ஒரு குறிப்பான பண்புக்குரியவளாகக் காட்டுவதைக் காட்டிலும் சிக்கலான பல பண்புகளின் வலைப்பின்னல்களாக பார்ப்பதே சரியானதாக இருக்கும். ........உடற்கூறு அடித்தளவாதத்தின் அடிப்படையில் பெண்ணுறுப்புகள் உள்ளவர்களை எல்லாம் ஒரே மாதிரியாகப் பெண்கள் எனப் பார்ப்பது அவர்கள் அனைவரின் அனுபவங்களையும் பொதுமைப்படுத்த முடியாது....... அப்படியானால் பொதுமைக் கூறுகளோடு வித்தியாசங்கள் உண்டு எனப் பார்க்கலாமா? அப்படிப் பார்ப்பது என்பது பின் ஏதோ ஒரு வடிவில் உடற்கூறு அடிப்படையிலான பொதுமைகளைப் பிரதானப்படுத்தி வித்தியாசங்களைப் புறக்கணிப்பதில் தான் முடியும் ....எனவே வெள்ளைப் பெண்ணுக்கும் கறுப்பு பெண்ணுக்கும் இடையிலான பொதுமைக் கூறுகளைக் காட்டிலும் வித்தியாசங்களே முக்கியம்"[64] என்கின்றார்.

பொதுமைகளை விட வித்தியாசங்களே முக்கியம் என்கின்றார். நாசிகள் ஆரிய இனம் எனக் கூறி மக்களின் பொதுமையை மறுத்து வித்தியாசத்தைப் பேண யூத மற்றும் பிற இனங்களை அழித்ததும் வித்தியாசங்களைக் கொண்டுதான். அதே வித்தியாசங்களை அ.மார்க்ஸ் பெண்ணுக்கும் வைக்கின்றார். அதாவது நாசிகள் இன்று கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக எதை முன் வைக்கின்றனரோ அதையே அ.மார்க்ஸ் கறுப்பு இனத்தின் பெயரில் நாசியாக முன்வைக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்ப்பனியச் சதிராட்ட வானரங்கள் தொட்டாலே தீட்டு என்று கூறி, பொதுமையை மறுத்து வித்தியாசங்களை முதன்மைப்படுத்தி எதனால் சாதியமைப்பைப் பாதுகாக்கின்றனரோ, அதையே மறுதளத்தில், பார்ப்பனியத்தில் தலித் என முன்வைத்து வித்தியாசங்களைப் பேண முயல்வதன் மூலம், பார்ப்பனியத்தைப் பாதுகாக்க முனைகின்றார்.

பார்ப்பனியம் மனிதர்களுக்கு இடையில் பொது சாராம்சம் இல்லை, வித்தியாசமே அடிப்படையானது என்று உருவாக்கிய சாதிப் படிநிலையை, பின்பக்க வழியாக அ.மார்க்ஸ் கோட்பாட்டில் புகுத்துகின்றார். பெண்களும், ஆண்களும் பொதுமைப்பட்ட சமூகமாக மாறுவதற்குப் பதில், பெண்களின் வித்தியாசங்கள் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதன் ஊடாக ஆணாதிக்கத்தை மறைமுகமாகத் தக்க வைக்கின்றார். இது எப்பொழுதும் பெண்ணை ஆணிடமிருந்து விலகக் கோருகின்றது. பொதுவாக அராஜகவாதக் கோட்பாடு நடைமுறையாகச் சீரழிகின்றது. ஏகாதிபத்தியப் பெண் நுகர்வுக் கண்ணோட்டத்தில் ஆணிடமிருந்து விலகி விடுவதைப் பிரதானப்படுத்தி குடும்பம் சிதறுகின்றது.

தலித் பெண்ணியத்தைக் கூறும் போது, தலித்தியத்தில் உள்ள வித்தியாசங்கள் முதன்மையானவை என்பதால், சாதிக் கட்டமைப்பு தலித்தியத்தினுள் இருப்பது அவசியம் என உயர்த்தி, தலித்தில் சாதிக் கடத்தலை நிராகரிக்க, பின் நவீனத்துவப் பார்ப்பனியத்தைக் கோட்பாடாக முன் தள்ளுகின்றனர்.

வெள்ளை - கறுப்பு பெண்களுக்கிடையில் வித்தியாசங்களே முக்கியத்துவம் என்கின்றார். பொதுமை கிடையவே கிடையாது என்கின்றார். ஆணாதிக்கம் என்பது பொதுமையாகக் கிடையாது என்கின்றார். வெள்ளை நாசிகள் எதைச் சொல்லுகின்றனரோ அதை கறுப்பு நாசிகள் சார்பாக முன்வைப்பதன் மூலம் நாசிச, பாசிச அமைப்பைப் பாதுகாக்க நாயாகக் குரைக்கின்றார். கறுப்பு - வெள்ளை இணைவும், அதன் பொதுமைக் கூறும், நாசிச, பாசிச இனத் தூய்மை வாதத்திற்கு எதிரானது. இது நிறத்தைக் கடந்த பொதுமைத் தன்மையில் வெள்ளையின பாசிச - நாசிச சமூக அமைப்பைத் தகர்க்கின்றது. வித்தியாசங்கள் வெள்ளையினக் கோட்பாட்டின் அதாவது, ஆதிக்க இனக் கோட்பாட்டின் அல்லது பிற்போக்கு வர்க்கத்தின் அடிப்படையான கோரிக்கையாக யதார்த்தத்தில் இருக்கின்றது.

தலித் பெண்கள் மற்ற பெண்கள் உடன் பொதுவான ஆணாதிக்கத்திற்கும் குறிப்பான ஆணாதிக்கத்துக்கும் எதிராக இணைந்து போராடுவது மட்டும் தான், உலகளவில் ஆணாதிக்கத்தையும் மற்ற சமூக அவலங்களையும் கடக்க உள்ள ஒரே பாதையாகும். இதை மறுத்து வித்தியாசங்களை முதன்மைப் படுத்தி பின்நவீனத்துவப் பார்ப்பனியத்தை முன் வைத்து, ஆணாதிக்க அமைப்பை உலகில் நீடிக்க வைப்பதன் ஊடாக, ஏகாதிபத்திய ஆணாதிக்க அமைப்பைத் தொடர காணும் கனவுகளின் புலம்பலே இவை.



பெண் மீதான ஆணாதிக்கப் பொது ஒடுக்குமுறையை மூடிமறைத்த படி பெண்ணின் உறுப்பினூடாக அடையாளம் காண்பதாகக் கூற முயல்வது ஏன்? பெண் உறுப்பு பொதுமையான சாராம்சத்தை வெளிப்படுத்திய போதும், அவை முதன்மையானது அல்ல. மாறாகப் பெண் மீதான ஆணாதிக்கம்தான் முதன்மையானது ஆகும். பெண் ஒடுக்குமுறை பாலியல் ரீதியில் மட்டும் கையாளப்படுவதில்லை. அதாவது பெண் உறுப்பில் மட்டும் ஆணின் வன்முறை நிகழ்வதில்லை. மாறாக மனித இயக்கம் முழுவதிலுமே பெண் மீதான ஆணாதிக்கக் கூறுகள் ஆழமாக வன்முறையைக் கையாளுகின்றன. இதன் பொதுவான பண்பு உலகளவில் விதிவிலக்கின்றி பொதுவாக உள்ளது.

பெண் மீதான ஒடுக்குமுறையைப் பெண்ணுறுப்பில் இருந்து அடையாளம் காண்பது என்பது, பெண்விடுதலையை மறுத்து பாலியலை விபச்சாரமாக்குவதாகும். பெண் எப்படி அடிமையாக்கப்பட்டாள் என்ற வரலாற்று உண்மையைக் கவனத்தில் கொள்ளாத ஆய்வுகள், கருத்துகள் அற்பத்தனமான நோக்கம் கொண்டவை. இங்கு ஆணாதிக்கச் சுயநலமும், ஒரு பகுதி பெண்களும் தமது சொந்த வக்கிரத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான பாதையை உள்ளடக்கிய கோரிக்கையாக உள்ளது.

அடுத்து இதற்காக அ.மார்க்ஸ் புலம்புவதைப் பார்ப்போம். "மார்க்சியம் பெண்ணியல் பாலியலுக்குரிய முக்கியத்துவத்தை அளிப்பதில்லை எனத் தீவிரப் பெண்ணியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்."[64]

மார்க்சியம் மட்டும் தான் பாலியல் பிரச்சினையைச் சரியாக ஆய்வு செய்தது, செய்கிறது என்பதை மறுத்து ஏகாதிபத்திய விபச்சாரத்தை அங்கீகரிக்கக் கோருவதே இந்த விதண்டாவாதமாகும். தீவிரப் பெண்ணியவாதிகள் (யார் இவர்கள்? எப்படி ஆணாதிக்கத்தை ஒழிக்க உள்ளனர்? மர்மமான இந்தத் தீவிரப் பெண்ணியல் வாதிகளை யாருக்கும் தெரிவதில்லை.) ஏகாதிபத்தியப் பொருளாதார மாற்றத்திற்கு இசைவாகப் பாலியலை, நுகர்வுப் பண்பாட்டில் அரங்கேற்றுகின்றனர். இதை மார்க்சியம் விமர்சிப்பதால் தான் பாலியலுக்குரிய முக்கியத்துவத்தை மார்க்சியம் மறுப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இந்தத் தீவிரப் பெண்ணியல்வாதிகள் யாரும், தாம் எப்படி ஏகாதிபத்தியப் பெண்ணியத்தில் இருந்து வேறுபடுகின்றோம் என்று சொல்லத் தெரியாதவர்கள்.

ஏகாதிபத்தியச் சந்தைப்படுத்தலுக்கு இசைவாகப் பெண்ணை விளம்பரப்படுத்தும் நுகர்வுப் பெண்ணியம், ஏகாதிபத்திய ஆணாதிக்க உலகத்திற்குப் பெண்களை நிர்வாணமாக்கி, பெண்களைப் பாலியல் பிண்டங்களாக மாற்றுகின்றது. இந்தப் பாலியல் பிண்டங்களாகப் பெண்களை மாற்றுவதையும், அதைக் கோரும் பெண்களையே பெண்ணியத்தின் தீவிரப் பெண்ணியமாகக் கூறும் ஏகாதிபத்தியம் முதல் அ.மார்க்ஸ் வரை, ஆணாதிக்க வக்கிரங்களைக் கோரவும் பாதுகாக்க கோருவதுடன், அதை மேலும் பெண்ணியக் கோஷத்தின் (முழக்கத்தின்) பின்னால் வளர்த்து எடுக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவில் இந்தத் தீவிரப் பெண்ணியல்வாதிகள் ஏகாதிபத்தியப் பெண்ணிய சீரழிவை அடையாளப்படுத்தி எதிர்ப்பதில்லை. ஏகாதிபத்தியத்தின் மற்ற கூறுகள் மீது எதிர்ப்பதாகப் பாசாங்கு செய்வதன் மூலம், சொந்த ஏகாதிபத்தியப் பெண்ணியத்தில் எதிர்ப்பதற்கு எதுவுமற்றவர்களாகி விடுகின்றனர். இவர்களின் எதிர்ப்பு என்பது நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ எச்சச் சொச்சத்தில் மீது மையப்படுகின்றது. இயற்கையின் பெண் நிலை மீதான வாழ்வியலை காண மறுக்கும் இவர்கள், ஏகாதிபத்தியச் சீரழிவைப் பெண்ணியமாக எப்போதும் முன்னெடுக்கின்றனர். இவை பொதுவாக அராஜகவாதப் பெண்ணியக் கோஷமாக (முழக்கமாக) எழுகின்றது.

அராஜகவாதம் தனிநபர் மீதான அதீதமான கற்பனைகளில் எழுகின்ற போது, சமுதாயத்தில் இருந்து அன்னியப்பட்டு விலகி தனிநபர் சுதந்திரமான விடுதலையை நாடுகின்றது. இது சமுதாயத்தில் இருந்து விலகிச் செல்லும் போது சமுதாய எல்லைக்குள்ளான சீரழிவுக்கும், இதன் கற்பனையான மானசீகமான விடுதலைக்கும் இடைவெளி அறவே நீங்கிவிடுகின்றது.

ஏகாதிபத்தியப் பெண் தனிநபர் சுதந்திரமான ஜனநாயகத்தில் விபச்சாரத்தைப் பாலியலாக வந்தடையும் போது, அராஜகவாதப் பெண்ணியல் சமுதாயத்தில் இருந்து விலகி அராஜகவாதத் தனிநபர் சுதந்திரத்தில் ஏகாதிபத்தியச் சீரழிவைத் தமது நடத்தையாக்குகின்றனர். இரண்டு பிரிவும் சாராம்சத்தில் சமூகச் சுதந்திரத்தை மறுத்து தனிநபர் சுதந்திரத்தை உயர்த்திப் பிடிக்கின்றனர். இதன் அடிப்படையிலேயே இரண்டு பிரிவும் தமது கோட்பாட்டைக் கட்டமைக்கின்றது.

மேலும் அ.மார்க்ஸ் கூறுவதைப் பார்ப்போம். “வெள்ளை இனத்தவர்கள் மத்தியிலுள்ள ஆண்-பெண் உறவும், கறுப்பர்கள் மத்தியில் உள்ள ஆண்-பெண் உறவும் ஒரே மாதிரியாக இல்லை என்பதால் கறுப்பர்கள் மத்தியில் ஆண்-பெண் உறவைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தனித்துவமான பெண்ணியப் பகுப்பாய்வுகள் தேவையாகின்றன”[64] என்ற கண்டுபிடிப்பை ஆராய்வோம்.

ஆண்-பெண்ணை, வெள்ளை-கறுப்பு மட்டுமா பிரிக்கின்றது? இல்லை. மாறாக கறுப்பு, வெள்ளை நிறத்துக்குள் பல வேறுபாடுகள் உள்ளன. இது தலித்துக்குள் பலவாக உள்ளது. ஆகவே இந்த வேறுபட்ட உறவு முறைக்கான சமூகக் காரணங்கள் தனித் தனியான ஆய்விற்குரியவை. இதற்கு முன் ஆண்-பெண் இடையில் உள்ள ஆணாதிக்க உறவு என்பது உலகில் விதிவிலக்கின்றி பொதுவான சாராம்சத்தால், அதன் உள்ளடக்கத்தால் கட்டி அமைக்கப்பட்டவை. இயற்கையின் தேர்ச்சியில் உருவான உறவு முறை, ஆரம்பத்தில் ஆப்பிரிக்காவில் ஒரே இடத்தில் இருந்து மனிதன் உலகெங்கும் சிதறி வாழும் நிலைக்கு மூதாதையர்கள் ஆனார்கள்.

பூமியின் ஒரே நிலத் தொடர்ச்சிகள் பூமியில் மேல் பட்டை மீதான தொடர்ச்சியான இடப்பெயர்ச்சியால் கடலால் பிளந்து சென்றது முதல் மனிதனின் உழைப்பு மற்றும் அறிவியல் தேடல் கண்டுபிடிப்புகள் வாழ்க்கைப் போராட்டத்தில்



பிரிந்து சென்ற நீண்ட வரலாற்றுக்கிடையில் தான் மொழி, நிறம், பண்பாடு, கலாச்சாரம், பால் ஒடுக்குமுறை........ என அனைத்து இடைவெளிக்கும் அடிப்படையாக அமைந்தது. இருந்த போதும் உலகில் சுரண்டலும், ஆணாதிக்கச் சமூக அமைப்பும் எங்கும் எல்லா இடமும் ஒரே மாதிரியானதாக, ஒரே காரணியால் கட்டி அமைக்கப்பட்டதைச் சமூக விஞ்ஞானம், பொருளாதாரம் தெளிவாக இனம் காட்டி நிறுவுகின்றது.

இன்று இடைவெளியைக் கடக்கும் போராட்டம் இரு தளங்களில் மட்டும் நடக்கின்றது. இது பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தின் ஊடாகவும், ஏகாதிபத்திய உலகமயமாதல் ஊடாகவும் (இங்கு ஏகாதிபத்தியம் பிளவுகளை விதைத்த தொடர்ச்சியில்) நேர் எதிர் தன்மைகள் நடந்த வண்ணமுள்ளது. இதை யாரும் இந்த இரு போராட்ட எதிர் தளங்களுக்கு வெளியில் தடுக்கவோ மாற்றவோ முடியாது. இதற்கு இடையில் மட்டுமே தான், எப்படி நகர்த்துவது என்பதில் போராட்டம் நடக்கின்றது. இடைவெளியைக் கடக்க முனையும் போக்கில் ஏகாதிபத்தியம் சிலவற்றில் தனது அதிகாரத்துக்காகச் சலுகைகளைச் செய்ய, இதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் சர்வதேசியக் கண்ணோட்டத்தில் உலகில் எல்லா இடைவெளிகளையும் கடக்கப் போராடுகின்றது.

இன்று ஆண் - பெண் உறவில் உலகில் உள்ள எல்லா ஒடுக்குமுறை செயல் தளங்கள் மீதும், குறிப்பாக ஆணாதிக்கச் செயல்தளங்கள் மீதான போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கம் முன்னெடுத்து இதை ஒழித்துக் கட்ட சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திடம் கோருகின்றது, போராடுகின்றது. இதற்கு வெளியில் எந்தப் பெண்ணியமும் உலகளவில் ஆணாதிக்கத்தைத் தகர்க்க கோரவில்லை. அது ஆணாதிக்க உலகைத் தக்க வைக்க பகுதிக் கோரிக்கைக்குள் முடக்கி விடுகின்றது.

அ.மார்க்ஸ் வைக்கும் அடுத்த பொன் மொழியைப் பார்ப்போம். “கறுப்புப் பொதுப்புலம், வெள்ளைப் பொதுப் புலத்தின் அளவு ஆண் தன்மையானதாக (mascnline) இல்லை”[64] என்கின்றார். இருக்கும் சமூக அமைப்பில் இதை நேர் எதிராகத் திசை திருப்புகின்றார். பெண்கள் மீதான ஆணாதிக்கச் செயற்பாடுகள் வெள்ளைப் பெண்ணை விட கறுப்புப் பெண் மீது அதிகமானது. இதை மறுத்து கறுப்புப் பெண்மீது ஆணாதிக்கம் குறைவு என்கின்றார். இதன் பின் கூட ஏகாதிபத்திய நலனும், நஞ்சும் எஞ்சியுள்ளது. ஏன்?

பொதுவாக வெள்ளைப் பெண்கள் வாழும் நாடுகளின் முதலாளித்துவப் புரட்சிக்குள்ளும், அதன் பின்னான ஏகாதிபத்தியத் தளத்திற்குள்ளும், தனிமனித நுகர்வுச் சுதந்திரத்திலும் வெள்ளைப் பெண்கள் ஜனநாயக உரிமைகளைப் பெற்றனர். அதேபோது முதலாளித்துவப் புரட்சி நடக்காத, நிலப்பிரபுத்துவ - மதவாத அடிப்படை கொண்ட நாடுகளிலுள்ள கறுப்புப் பெண்கள் அந்த ஜனநாயக உரிமைகளைப் பெறவில்லை. ஆதலால் கறுப்புப் பெண்கள் வாழும் நாடுகளின் ஆணாதிக்கம் கொடூரமானது, காட்டுமிராண்டித்தனமானது. அதை மறுப்பதன் மூலம் குறைந்த பட்சம் முதலாளித்துவப் புரட்சியைக் கோருவதை ஏகாதிபத்தியம் போல், இந்த அ.மார்க்ஸ் கும்பல் விரும்புவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கறுப்புப் பெண் முன்னால் வெள்ளை இனத்தை விட "நீ அதிக ஜனநாயகத்தை - சலுகைகளை ஆணாதிக்கவாதிகள் இடம் இருந்து பெற்றுள்ளாய்" என்பதன் ஊடாக, வெள்ளை இனப் பெண் பெற்ற ஜனநாயக உரிமைமீது சேறு வீசுவதும், அவர்களின் போராட்ட அனுபவங்கள் மற்றும் கோட்பாடுகளைத் தூற்றி வீசவும் செய்யும் முயற்சி தான் இந்த மாதிரி புலம்பித் திரிவதாகும்.

பொதுவில் வெள்ளைப் பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளைக் கறுப்பு இனப் பெண்கள் அனுபவிக்க முடியாத, ஏகாதிபத்தியத் தலைமையிலான பொது ஒடுக்குமுறையில் கறுப்பினப் பெண்கள் சிக்கி உள்ளனர். ஏகாதிபத்திய நாட்டுப் பெண் பெற்ற உரிமையில், ஜனநாயக உரிமையும் நுகர்வு ஜனநாயகமும் என இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. ஏகாதிபத்தியம் கறுப்புப் பெண்ணிடம் நுகர்வு ஜனநாயகத்தைத் திணித்தும் (வாங்கும் சக்தியை மறுத்தபடி), ஜனநாயக உரிமையைப் பறித்தும் தனது அதிகாரத்தைப் பாதுகாக்கின்றது.

கறுப்பு இனப் பெண் வெள்ளை இனப் பெண் அனுபவிக்கும் ஜனநாயக உரிமையைக் குறைந்த பட்சம் பெறுகின்ற போது, ஏகாதிபத்திய அமைப்பு தகர்ந்து போகும் என்ற உண்மையினால், வெள்ளை இனப் பெண்ணை விட கறுப்பு இனப் பெண் அதிகமாக உரிமை பெற்றுள்ளாள் என்று கதையளக்க வேண்டி உள்ளது. கறுப்பு இனப் பெண்கள் குறைந்த பட்ச ஜனநாயக உரிமையைக் கோரி போராடுவதைத் தடுக்க, ஏகாதிபத்தியத்தில் உள்ள ஆணாதிக்க அமைப்பைத் தக்க வைக்க, சமூகத்தையே தலைகீழாகக் காட்டுவது அவசியமாகிறது. இதைக் கவ்வி விளக்க நாலு நாய்கள் கிடைக்காமலா போய்விடும்? என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டுள்ளார் அ.மார்க்ஸ்.

வெள்ளை இனப் பெண்களை விட கறுப்பு இனப் பெண்கள் அதிகளவு ஆணாதிக்க நிலப்பிரபுத்துவக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்கின்றனர். இதை மறுக்கும் கபடம் நகைப்பிற்குரிய ஆணாதிக்கமாகும். பொதுவாகக் கறுப்பு - வெள்ளை இனத் தொழிலாளர்கள், கூலிகள் எப்போதும் மற்ற பெண்களை விட அதிகமாகச் சுயாதீனமாக, ஆண்களுக்கு நிகரானவர்களாக உள்ளனர். ஏனெனில் சொந்த உழைப்பும், போராடும் குணாம்சமும், இயற்கையைச் சார்ந்து இருத்தலும் இவர்கள் வாழ்க்கையில் உள்ளதால் இது இயல்பாகவே உள்ளதுடன், மற்ற பெண்களுக்கு தலைமை தாங்கி விடுகின்றனர்.

இதை மறுத்து அ.மார்க்ஸ் எடுத்து வைப்பதைப் பார்ப்போம். **"கறுப்புப் பெண்கள் தமது விடுதலைக்காக வெள்ளைப் பெண்களை நம்பியிருக்க முடியாது**"[64] என்கின்றார். அருமையிலும் அருமையான ஏகாதிபத்திய விசுவாசம். கறுப்பு - வெள்ளை என பிளக்கும் நாஜிகள், பாசிஸ்ட்டுக்கள், இனவாதிகள், ஆணாதிக்கவாதிகள் போல் பேசுகின்றார். பெண் விடுதலை என்பது கறுப்பு - வெள்ளை இனம் கடந்த போராட்டம் தான், ஆணாதிக்கத்தில் இருந்து பெண்ணை விடுவிக்கும். ஒன்று பட்டு பெண்ணைப் பிளந்து, ஆணாதிக்கத்துக்கு எதிரான ஒட்டு மொத்தப் போராட்டத்தை மறுப்பதன் மூலம், மனிதனின் ஒட்டு மொத்த





விடுதலைக்குப் போராடுவதை மறைமுகமாக மறுத்து, ஆணாதிக்கத்தைத் தக்க வைக்க முனைவதாகும்.

ஒரு வெள்ளை இனப் பெண் நிறவாதத்தைக் காக்கும் எல்லா நிலையிலும் கறுப்பு இனப் பெண் - வெள்ளை நிறப் பெண்ணை அங்கீகரிக்க முடியாது. இது போல் கறுப்பு இனப்பெண் நிறத்தைக் காக்கும் போது வெள்ளை இனப் பெண், கறுப்பு நிறப்பெண்ணை அங்கீகரிக்க முடியாது. இதற்கு மாறாக வெள்ளை, கறுப்பு பெண்ணின் இணைவு தமக்குள் உள்ள விசேட ஒடுக்குமுறையையும் எடுத்து இணைத்துப் போராட வேண்டும்.

இது சுரண்டல், இனம், மதம், சாதி,..... கடந்து அதற்கு எதிரான போராட்டத்தில் தான் சாத்தியமாகின்றது. இதை மறுப்பது என்பது காலனிய வாதிகள் எதை தமது ஆட்சிக்காகப் பிளவுகளை ஏற்படுத்தி பிளந்து ஆண்டார்களோ, ஆளுகின்றார்களோ, அதை அ.மார்க்ஸ் உலகமயமாதலுக்கான ஏகாதிபத்திய உலகுக்காக விசுவாசமாகப் பிரகடனம் செய்கின்றார் அவ்வளவே.

இதற்காக எடுத்து இயம்பும் வரிகளைப் பார்ப்போம். "கறுப்புப் பெண்களைப் பொறுத்தமட்டில் 'பெண்' என்பது அவளது முழு அடையாளமாக இருக்க முடியாது"[64] என்கின்றார். நகைப்பிற்குரிய வாதங்கள், எடுகோள்கள். ஆப்பிரிக்கா, ஆசியா ....... எங்கும் ஆணாதிக்கமுள்ள கறுப்பு நிறப் பெண்கள் பெண்களாக இல்லையா? அப்படியாயின் அவர்கள் கற்பிதமாகவா உள்ளனர்? முதலில் பெண் என்ற பொருளை (முதலாளிகளின் அர்த்தத்தில் அல்ல) மறுப்பதன் மூலம், அவள் மீதான ஒடுக்குமுறையையும் மறுத்து, கறுப்புப் பெண்ணைக் கேலி செய்யும் ஏகாதிபத்திய அமைப்பு போல், வெட்கம் இன்றி பெண் இல்லை எனக் கேலி செய்கின்றார். இங்கு பெண் என்ற அடையாளமே ஆணாதிக்கம் சார்ந்ததே.

மூன்றாம் உலகில் உள்ள கறுப்பு நிறப் பெண்கள் மீதான ஆணாதிக்க ஒடுக்குமுறையை மறைக்க, அதற்கு எதிரான போராட்டத்தைத் தடுக்க முனைவதன் மூலம், இப்போராட்டம் தவிர்க்க முடியாது ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இயல்பாக எழும் என்பதால், அதைத் தடுக்க கறுப்புப் பெண்ணை ஆணாதிக்கத்தால் பாதிக்கப்படும் பெண்கள் அல்ல என்கின்றனர். **பின்நவீனத்துவத் தமிழ் தலித் சாக்கடைகள்** இப்படி ஏகாதிபத்தியத்துக்காக நாய்வால் ஆட்டி முதுகு முறிய உழைக்கும் கோட்பாடு, அலட்டாமல், புலம்பாமல் ஒடுக்குபவர்களுக்கு எதிரான அடக்கப்பட்ட மக்களின் போராட்டத்தைச் சிறுமைப்படுத்தும் கனவுகளின் வெளிப்பாடுகள் தான் இவை.

தலித் பெண்ணை ஆணாதிக்க அமைப்புக்குள் தொடர வைக்க முன்வைக்கும் அ.மார்க்சின் வாதத்தைப் பார்ப்போம். "ஒரு தலித் பெண்ணுக்குப் 'பெண்' என்ற நிலையைக் காட்டிலும் 'தலித் பெண்' என்ற நிலையிலேயே அடையாளம் காட்டப்படுகிறது"[64] என்கின்றார். இப்படிப் பார்த்தால் தலித் பெண்ணைப் பள்ளர்பெண், நளபெண், சக்கிலியப்பெண், பறையர் பெண்........ எனப் பிளந்து அல்லவா ஆராய வேண்டும். அதைவிட்டுவிட்டு தலித் பெண்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனப் பொதுமைப்படுத்தும் சதிதான் என்னவோ? தலித் பெண் என்பதைக் காட்டிலும் அவரவர் ஒடுக்குமுறை வேறுபட்டது அல்லவா? ஆனால் ஏகாதிபத்தியத்தின் வெளுத்துப் போன பின்நவீனத்துவத் தலித் கோட்பாட்டுக்குத் திடீரென இடையில் பிழைப்புக்கு ஏற்றவாறு குத்துக் கரணம் அடிப்பது ஏன் எனக் கொஞ்சம் ஆராய்ந்தால், அந்த ஏகாதிபத்திய நோக்கத்தை இனங் கண்டு கொள்ள முடியும்.

'பெண்' ஆணாதிக்கத்துக்கு எதிரான ஒடுக்குமுறையில் பெண்ணாக அடையாளம் காண்கின்றாள். இப்பெண் தனக்குமேல் உள்ள ஆணாதிக்க ஒடுக்குமுறையை இனம் கண்டு, அதை எதிர்த்துப் போராட பெண்நிலைவாத நோக்கில் அணிதிரள்கின்றாள். இது சுரண்டல், இனம், மதம், சாதி, மொழி, ......... என அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து, பெண்ணாக, பெண்ணியவாதமாகக் கட்டி அமைத்து ஆணாதிக்கம் மீது ஒட்டு மொத்த வெற்றிக்காகப் போராடுகின்றனர். இதை மறுத்த அனைத்தும் விதிவிலக்கின்றி தவிர்க்க முடியாது ஆணாதிக்கத்தைக் கட்டமைக்கின்றது. ஏனெனின் ஒட்டுமொத்த ஆணாதிக்கத்தை எதிர்க்காத அனைத்துக் கோட்பாடுகளும், நடைமுறைகளும் தமக்குள் தமது நலனுக்குள் சீர்திருத்தத்தைக் கோருகின்றது.

அடுத்து ஆணாதிக்கத் தகவமைப்பைப் பார்ப்போம். "தலித் பொதுப்புலம் ஆண் சார்பற்றது எனச் சொல்ல முடியாதெனினும் இதிலும் மேற்சாதிப் பொதுப்புலத்தின் அளவு ஆண் சார்புத் தன்மை இல்லை எனலாம். ....... தலித் பெண்ணியம் சாதியத்தையும், பார்ப்பனியத்தையும் ஆணாதிக்கத்திற்கு இணையான இலக்குகளாகக் கொள்வது தவிர்க்க முடியாதது"[64] என தலித் ஆண்களின் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க அதனூடாக இச்சமூக அமைப்பை முண்டு கொடுக்க குரல் கொடுக்கின்றார்.

இதற்கு ஊடாக எதைப் பாதுகாக்கின்றார் எனப் பார்ப்போம். ஆந்திராவில் 'தொம்மரா', 'போகாம்' சாதியைச் (தலித்) சேர்ந்த பெண்களை, அதே சாதியைச் சேர்ந்த ஆண்கள் சந்தை அமைத்து ஏலம் விடுகின்றனர். ஒருவருட ஒப்பந்தில் ஏலம்விடப்பட்ட 10,000 இளம் பெண்கள் மும்பையிலும், ஆந்திராவிலும் விபச்சாரத்தில் ஈடுபட்ட பின், மீளவும் அச்சமூகத்துக்குள் திரும்பி விடுகின்றனர்.

பணமுதலைகளால் நடத்தப்படும் இந்த ஏலம், வறுமையில் வாடும் மக்களின் துயரத்தை விபச்சாரமாக்கி விடுகின்றனர். இதுபோல் மத்திய பிரதேசத்தில் விற்கப்பட்ட பெண்கள் வைப்பாட்டியாகவும், மீளவும் விபச்சாரத்துக்காக விற்கப்படுகின்றனர். (இதழ்-2-4,1999)[1] உண்மையான சாதிக்குள்ளான ஆணாதிக்க யதார்த்தம் நிர்வாணமாகப் பளிச்சிட்டு இருக்கும் போது, தலித் ஆணாதிக்கத்தை அ.மார்க்ஸ் மூடிமறைப்பதன் மூலம், கோட்பாட்டு விபச்சாரத்தை மானவெட்கமின்றி அதே தரகுத் தனத்தில் செய்கின்றார்.

தலித் ஆணாதிக்கம் இல்லை என்று கூறும் அளவிற்கு, ஒப்பீட்டில் கூறியபடி மோசடி செய்கின்றார். சமுதாயப் பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், சூழல்....... போன்றவற்றில் காணப்படும் ஏற்றத் தாழ்வான ஆணாதிக்க



வேறுபாடுகளை ஒப்பீட்டளவில் மறுத்து, ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கும் முயற்சி உண்மையில் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க வர்க்கப் போரை மறுத்துரைக்கும், கோட்பாட்டை உருவாக்கும் முயற்சியில் முன் வைப்பது தான்.

ஆணாதிக்கம் என்பதும் அதன் அச்சாணி என்பதும் பெண்களைச் சுரண்டுவதில் அதாவது தனிச் சொத்துரிமையில் இருந்து தொடர்கிறது. இது பெண்களை அடிமையாக்கியதுடன், பாலியலை நுகர்வுக்குரிய பண்டமாக மாற்றியதும் என்பது உலகளவில் பொதுத்தளத்தில் பொது உண்மையாக, பெண் மீதான ஒடுக்கு முறையாக உள்ளது. ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பில் உள்ள மாறுபட்ட குறிப்பான ஆணாதிக்க ஒடுக்குமுறையைக் கொண்டு, பொதுவான ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை மறுப்பது என்பது, ஏற்றத் தாழ்வுக்குள் குளிர் காய்ந்து அதில் பிழைக்க முனையும் கோட்பாடுகள், செயல் தளங்கள் உண்மையில் மக்களை ஏமாற்றி அதில் ஆணாதிக்கத்தைத் தக்க வைத்து பாதுகாப்பது தான்.

தலித் பெண்கள் சாதியையும், பார்ப்பனியத்தையும் ஆணாதிக்கத்திற்கு இணையாகக் கொள்வது என்பது, தலித் பெண்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடுவதை மறுப்பதாகும். தலித் பெண்களின் ஆணாதிக்க ஒடுக்குமுறையைச் சாதியத்திற்குள்ளும், பார்ப்பனியத்திற்குள்ளும் மூடி மறைத்து ஆணாதிக்க அமைப்பைப் பாதுகாக்க கோருவதன் மூலம், உண்மையில் இச்சமூக அமைப்பைப் பாதுகாப்பதன் மூலம் நனவாகப் பார்ப்பனியத்தையும், சாதியையும் பாதுகாக்க முனைவதாகும்.

இதில் சாதியத்தையும் பார்ப்பனியத்தையும் ஆணாதிக்கத்துடன் ஒப்பிடுவது என்பது ஒரு பூர்சுவா குடும்பத்தில் ஆண் - பெண் போராடுவது போல் ஆணாதிக்கத்துடன் சமரசம் கண்டு போராடத் தூண்டுவதும், ஆணாதிக்கத்தை எதிரியாகப் பிரகடனம் செய்யாத வகையில் தீர்வுக் காணக் கோருவதாகும். இது சாதி என்ற கட்டமைப்பில் பார்ப்பனியம் வரையறுத்த வகையில் சமூகத்தை வாழக் கோருவதாக உள்ளது. ஆணாதிக்கத்துக்கு மாற்றாகச் சாதியை வைப்பது என்பது இருக்கும் ஆணாதிக்க உலகைத் தக்க வைப்பதுமாகும். ஆணாதிக்கம் தகராத வரை சாதியமும் தகராது.

அடுத்து ஆணாதிக்க அமைப்பைப் பாதுகாக்க வைக்கும் வரிகளைப் பார்ப்போம். "இந்திய மரபுத்துவத்திற்கு உரிய பெண்ணியம் என்ற கருத்தை இன்று இந்துத்துவத்திற்கு உயர்த்திப் பிடிப்போர் முன்வைக்கின்றனர் பாரதீய ஜனதா கட்சியின் பெண்கள் பிரிவாகிய 'மகிளமோர்ச்சா'வைச் சேர்ந்த **மிருதுளா சின்கா** சொல்கின்றார். 'இந்தியப் பாரம்பரியம் முன் வைத்து ஏற்றுக் கொண்ட பாலியல் சமத்துவத்தை மீட்டுத் தருவதென பாரதீய ஜனதா கட்சி சபதமேற்கிறது ......மேற்கில் வளர்ந்து வரும் பெண் விடுதலை இயக்கங்களில் இருந்து நாங்கள் கோட்பாட்டளவில் வேறுபடுகின்றோம், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் ஒரு வகையான மறுசீரமைப்பை நாங்கள் கோருகின்றோம்"[64] என்கின்றார் அ.மார்க்ஸ். மேற்கு நாட்டுப் பெண் விடுதலையில் இருந்து கோட்பாட்டளவில் வேறுபடுவதாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறிக் கொண்டு (அதை என்ன என்று சொல்ல வக்கில்லாமல் போகின்றது.) பாரதீய ஜனதா பெண்விடுதலைக்கு மேள தாளத்துடன் அங்கீகாரம் வழங்குகின்றார், அ.மார்க்ஸ். வாழ்க பார்ப்பனியப் பெண்ணியம்! 'இந்த ஆணாதிக்கப் பார்ப்பனியம் பெண்ணியத்தை மறுப்பது என்பதும், வரையறுப்பது என்பதும் கேலிக்குரியது' எனக் கூறி ஆணாதிக்க ஏகாதிபத்தியத்திற்கு நியாயம் கற்பிக்கின்றார்.

பார்ப்பனிய ஆணாதிக்கத்தை முன்வைக்கும் மிருதுளா சின்காவின் கோரிக்கையை எப்படி விமர்சிக்க முடியும். ஏனெனின் பெண்ணியத்தை வரையறுப்பது கேலிக்குரியது, எனவே நாம் அதைப் பாதுகாக்க வேண்டும் என்கின்றார், பார்ப்பனியக் கோட்பாட்டாளர் அ.மார்க்ஸ்.

பாரதீய ஜனதா வைத்தாலும், அமெரிக்கா ஜனாதிபதி கிளிண்டன் மனைவி ஹிலாரி கிளிண்டன் வைத்தாலும் கோட்பாட்டளவில் வேறுபாடு உண்டு. ஆனால் அந்த ஆணாதிக்கத்தை மறுத்து, எதிர்த்துப் பெண்ணியத்தை நிலை நிறுத்த மாட்டோம் என்கின்றார். ஏனெனின் பெண்ணியத்தை வரையறுப்பது கேலிக்குரியது அல்லவா? உச்சரித்தால் போதும் அங்கீகரிப்போம் வாருங்கள் என அழைக்கின்றார் துரோகத்தை அரங்கேற்றி ஏகாதிபத்தியத்தை வாழவைப்பதற்கு.

தலித் பெண்ணியம் தலித் போன்ற கோஷங்களின் (முழக்கங்களின்) பின் இவர்கள் "பொருளாதாரத்தில் ஒருவகையான மறுசீரமைப்பைக் கோருகிறோம்"[64] என்பதன் ஊடாகப் பாரதிய ஜனதாக் கட்சி வைக்கும் பெண்ணியக் கோஷத்தை (முழக்கத்தை) அச்சொட்டாகவே முன்வைக்கின்றார். இந்த ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பார்ப்பனியச் சாதிய சமூகத்தில் மாற்றம் இன்றி பொருளாதாரத்தில் சலுகைகளைப் பார்ப்பனியத்திடம் கேட்டு பெறுவதைக் கோருவது, கறுப்பு - வெள்ளை - தலித் கோஷங்களின் பின் - முன்வைக்கும் அருவருக்கத் தக்க ஏகாதிபத்திய அருவருடித்தனமாகும்.

இந்த மாதிரி சுரண்டும் பன்றித்தனத்தைத் தெளிவாகக் காட்டியபின், மார்க்சியத்தை எதிர்ப்பதில் வியப்பேதும் இல்லை. மார்க்சியம் மட்டும் தான் உண்மையில் மக்களின் பிரச்சினையைப் பொருளாதாரச் சலுகைக்குப் பின் தேடாது, அவர்களை விடுவிக்கும் போராட்டத்தில் தியாகத்தின் ஊடாகத் தேடுகின்றது, போராடுகின்றது.

இருக்கும் ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பார்ப்பனியச் சாதிய அமைப்பைத் தலைகீழாக்க சமூகத்தை மார்க்சியம் கோரும் போது, அதைச் சேறடித்து சலுகைக்காக, பிழைப்புக்காகப் போராட விழையும் கூட்டம், பாட்டாளி வர்க்கம் போராடுவதை அங்கீகரிக்க மறுத்தும், மார்க்சியத்தை அந்த மக்களுக்கு எதிரானதாகக் காட்ட எல்லா வண்ணக் கோட்பாடுகளையும் மீள மீள முன்வைக்க முயல்வதைத் தான், மேற்கூறிய கோரிக்கைகள் தலித்தியத்தின் பின் எழுவதைக் காணமுடியும். அந்த வகையில் சில பொருளாதாரச் சலுகைக்காகப் பார்ப்பனிய மந்திரி சபைகளிலும், கட்சிக் கூட்டுகளிலும் சொந்தச் சலுகைகளை முன்நிறுத்தி





நாய் பிழைப்பு பிழைக்கும் நபர்கள் இந்தத் தலித் கோட்பாட்டின் தனிச்சொத்துரிமையின் உற்பத்தியே ஒழிய வேறு ஒன்றும் அல்ல.

இதற்காக எடுத்து வைக்கும் அடுத்த வாதங்களை ஆராய்வோம். "தலித் பெண்ணியம் இத்தகைய இந்துத்துவப் பெண்ணியத்தில் இருந்து விலகி நிற்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. **அயோத்திதாசரும் அம்பேத்காரும்** முயற்சித்ததைப் போல தலித் பெண்ணியமும் இந்திய மரபு என்பதை வைதீக வேர்களிலிருந்து அல்லாமல் பவுத்த, சைவ வைதீக மரபில் தேட முயலும். **அம்பேத்கார், பெரியார், பூலே** வழியில் நின்று சாதியம், பார்ப்பனியம், ஆணாதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கும், தலித் ஆணை அது தன் எதிரியாக நிறுத்தாமல் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்தை அது தனது இலக்காகக் கொள்ளும்"[64] என தலித் ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கப் பெண்ணியப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்த, தலித் ஆணாதிக்கமும் கிடையாது, போராட்டமும் கிடையாது என்கின்றார்.

தலித் ஆணாதிக்கச் சலுகைகளை விட்டுக்கொடுத்து, உயர்சாதி ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராடக் கோரும் ஜனநாயக விரோத அரசியல், உண்மையில் ஒட்டு மொத்த ஆணாதிக்கத்தைத் தக்க வைக்கத்தான். அ.மார்க்ஸ் தலித் ஆணாதிக்கத்துடன் சமரசம் கண்டு, தலித் பெண்களை எட்டி உதைக்கும் ஆணாதிக்கச் சுரண்டல் தலித்தியம் அந்த மக்களுக்கே எதிரானது. ஏனெனில் தலித் தனக்குள் உள்ள சுரண்டும் வர்க்கத்தை எதிர்ப்பதில்லை. தனக்குள் உள்ள சாதி ஒடுக்குமுறையை எதிர்ப்பதில்லை. தனக்குள் உள்ள ஆணாதிக்கத்தை எதிர்ப்பதில்லை. இப்படி தலித்துக்குள் உள்ள சுரண்டும் வர்க்க, ஆளும் வர்க்க ஆணாதிக்கச் சாதிப் பிரிவுகளின் சலுகையில் எழும் கோட்பாடு, போராட்டம் எப்படி அந்த மக்களை விடுவிக்கும்? என கொஞ்சம் யோசித்தால் இதன் நோக்கம், இந்த உலகைக் களங்கம் இன்றி சலுகைக்குள் பாதுகாப்பதைத் தான் கோருகின்றது.

தலித் பெண்ணியம் தனக்கு மேல் உள்ள தலித் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதில் தான் எழமுடியும். இது தனக்குள் உள்ள சுரண்டல், சாதி ஒடுக்கு முறை என அனைத்தையும் எதிர்த்து, மற்ற பிரிவு ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்து தான் எழமுடியும்.

தலித்துக்குள் ஒரு பார்ப்பனியப் பிரிவும், பிழைக்கும் சுரண்டல் பிரிவும், தமது சலுகைகளைத் தனித்துவமாகப் பெற எழும் கோட்பாடுகள், இயக்கங்கள் அற்ப சலுகைகளை வீசி எறிந்து, ஒட்டுமொத்தமாகச் சூறையாடுவதே எஞ்சும்.

கோட்பாட்டுச் செம்மல் அ.மார்க்ஸ் சலுகைக்காக என வைக்கும் கோட்பாடு, தலித் ஆணாதிக்கத்தை எதிர்த்து அல்ல, சுரண்டலை எதிர்த்து அல்ல, உள் சாதி ஒடுக்குமுறையை எதிர்த்து அல்ல என்ற ரீதியில், இதற்கு வெளியில் எந்தத் தலித் பிரிவும், எந்தப் போராட்டக் கோட்பாட்டையோ, வழியையோ, நடைமுறையையோ வைக்க முடியாது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலித்துக்குள் தலித் முதலாளிக்குச் சலுகை, தரகு முதலாளிக்குச் சலுகை, ஆணாதிக்கத்துக்குச் சலுகை, நிலப்பிரபுத்துவச் சலுகை, உயர்சாதிச் சலுகை என்று நீளும் கோட்பாட்டு வரையறைகள் உண்மையில் பாட்டாளி வர்க்கம் எதை மறுத்துப் போராடுகின்றதோ, அதன் மீது அதற்கு நேர் எதிராக முன்வைத்து நிலை நிற்கிறது. பாட்டாளி வர்க்கம் தலித்துக்குள் இச் சலுகைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நின்று மறுக்கின்றது.

இதை மறுத்து அம்பேத்கார் வழியில் போராடக் கோருகின்றார். இந்திய மரபை வைதீக மரபில் இருந்தல்ல பௌத்த, சைவ, வைதீக மரபில் தேட வேண்டும் எனக் கூறி, மற்றொரு வைதீக மரபில் மக்களை மீளவும் மூடிப் போட்டு வைக்க விரும்புகின்றார். இதற்குப் பெரியாரைக் கொண்டு வரும் முரண்பாட்டுக்குப் பதில் அளிக்க வேண்டியது இல்லை என நம்புகின்றார். **பெரியாரின் போராட்டம் மொத்த சமயக் கருத்து முதல் வாதத்திற்கு எதிரானது. அம்பேத்கார் கருத்து இதற்கு நேர் எதிரானது.**

இப்படி முரண்பாட்டை முன்வைக்கும் கோட்பாடு இடியாப்பச் சிக்கலைப் மாறிமாறிப் பேசுவதால் யாருக்கும் புரிவதில்லை, விளங்குவதுமில்லை என நம்புகின்றார். பெயர்களை உச்சரிப்பது நாய்ப்பிழைப்பிற்கு அவசியமாகிறது. இதன் மூலம் தலித், தலித் பெண்ணிய மோசடிகளை அரங்கேற்ற முடியும் என்ற கனவுகளைப் பெயர்களால் நனவாக்க முனைகின்றார்.

இதையே மேலும் முரண்பாட்டின் சிக்கலில் முன்வைப்பதை ஆராய்வோம். " 'தலித்' என்னும் உரிமையைப் பயன்படுத்தி ஒரு தலித் ஆண், தலித் பெண்ணின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அது ஏற்றுக் கொள்ளாது ........ 'தீண்டாமை' என்கின்ற சொல்லாடலைப் பயன்படுத்தி ஒரு தலித் ஆண், தலித் பெண்ணுக்கு எதிரான சலுகையைக் கோர முடியாது."[64] இது யாராவது கேள்வி கேட்டாலும் இல்லை எனச் சொல்ல, விரும்பியவாறு, மறுவாசிப்பு, மறுவிளக்கம் சொல்ல முன்வைத்த மோசடியாகும்.

வெள்ளையில் இருந்து கறுப்பைப் பிளந்து, கறுப்பில் இருந்து தலித்தைப் பிளந்து அங்கு படிப்படியாக ஒடுக்குமுறையில்லை எனக் கூறிய ஆய்வுரைகள், பின் போராட்டம் உள்ளே இல்லை எனப் பிரகடனம் செய்து, பின் சலுகைகளைக் கோர முடியாது என கதை அளக்கின்றார்.

தலித் ஆண் தலித் பெண் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது எனக் கூறும் அ.மார்க்சின் கோட்பாடு தலித் ஆணைத் தனது எதிரியாக நிறுத்தாது எனக் கூறுகின்றார். இது எப்படிப் பொருந்தும் என விளக்க வேண்டியது இல்லை என நம்புகின்றார். இதைச் சொல்லிப் பிழைத்தால் போதும் என்பதே அரசியல் நிலை.

குழப்பம், இடியாப்பச் சிக்கல், இதன் இறுதி முடிவு இருக்கும் அமைப்பை அசையாது பாதுகாக்கும் மறு வாசிப்பு செய்து ஒரு நாய்க் கூட்டத்திற்கு வழிகாட்டுவது தான் இதன் செயற்களம்.



மார்க்சியம் ஆணாதிக்கத்தை எதிர்த்து மறுத்து, ஆணாதிக்கத்தைப் புரட்டிப் போடுகின்றது. இதை மறுத்து மறுசீரமைப்பை நாங்கள் (தலித்-தலித் பெண்ணியம்) பொருளாதாரத்தில் கோருகின்றோம் என்பது, நாம் இனி எதை எனக் கூறத் தேவை இல்லை. இது இருக்கும் சமூக அமைப்பை, சலுகை பெற்று பாதுகாப்பதே.

தலித் பெண்ணியம், தலித்தியம் மற்றும் அனைத்துக் கோட்பாடுகளும், இதைத் தூக்கிப் பிடிக்கும் எல்லோரும் இதற்குள் தான் தமது அரசியல் பிழைப்பைத் தொடர்கின்றனர். இதை நாம் வேரறுக்க வேண்டும். இது தான் எம்முன் எஞ்சியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 25. மார்க்சியப் பெண்ணியம் மீதான கேள்விகள் மேல்

05-08-2000 அன்று ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரில் நடந்த சந்திப்பில், பெண்கள் தொடர்பான விவாதம் ஒரு பெரும் விவாதமாக மாறியது. இங்கு வைக்கப்பட்ட பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை ஒட்டிய விவாதத்தை வளர்த்து எடுக்கும் வகையில், அன்று முன் வைத்த கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. பொருளாதார விடுதலையே பெண்ணை விடுவிக்கும் என்று மார்க்சியம் பிரகடனம் செய்வதாகவும், பெண் பொருளாதார விடுதலையைப் பெற்ற போதும் ஆணாதிக்கம் ஒழிந்துவிடவில்லை என்ற வாதங்கள் மீது பார்ப்போம்.

இந்த விவாதம் மாக்சியத்துக்கு எதிரானது. **மார்க்சியம் வர்க்கப் போராட்டத்தைக் கோருகின்றதே ஒழிய, பொருளாதாரவாதத்தைக் கோரவில்லை.** வர்க்கப் போராட்டத்தை அரசியல் ரீதியாகப் புரிந்து கொள்ளாத எல்லா நிலையிலும், பொருளாதார வாதத்தை மார்க்சியமாகக் காட்டுவது நிகழ்கின்றது.

தொழிலாளர் வர்க்கம், வர்க்கப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் புரட்சிகர வரலாற்று நிகழ்வை, வெறும் தொழிற்சங்கப் பொருளாதாரக் கோரிக்கைக்குள் புரிந்து கொள்கின்ற போது, அரசியல் போராட்டம் பின்தள்ளப்பட்ட எல்லா நிலையிலும், பொருளாதார வாதம் முதன்மை பெறுகின்றது. இது சகல துறையிலும் விரவிப் பரவுகின்றது.

மார்க்சியத்தைப் பொருளாதார வாதமாகப் புரிந்து கொள்வதன் ஊடாக, மேல் கட்டுமான வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவதுடன் மட்டுமின்றி, அனைத்தையும் பொருளாதார வடிவத்துக்குள் காட்டி விடுவதும் நிகழ்கின்றது. இது வர்க்கப் போராட்டத்தின் உயிர்த்துடிப்பான போராட்டத்தை முடக்குவதுடன், சமுதாயத்தின் பிரச்சினைக்கான தீர்வுகளைப் புரட்சிக்குப் பின் என்ற வாதத்தை முன்வைத்து விடுகின்றனர்.

வர்க்கப் போராட்டம் சமுதாயத்தின் அனைத்து மேற் கட்டுமானம் மீதும் நாள்தோறும் நடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளாத வரை, அதை



மாற்றும் போராட்டத்தில் எமது கவனத்தைச் செலுத்தாதவரை, சீர்திருத்தம் கோட்பாட்டு ஆதிக்கத்தைப் பெற்று நடைமுறைத் தத்துவமாக மாறுகின்றது. மேல் கட்டுமானத்தில் கோரப்படும் ஜனநாயகக் கோரிக்கையில் பாட்டாளி வர்க்கம் ஊன்றி நிற்க தவறி, பொருளாதார வாதத்துக்குள் முடங்கிவிடும் போது, பொருளாதார எதிர்ப்புவாதமாக மாறி சீர்திருத்தம் ஆதிக்கத்தைப் பெற்றுவிடுகின்றது. இது பொருள்முதல்வாதத்தை மறுக்கும் பொருளாதாரவாத எதிர்ப்பாக மாறிவிடுகின்றது. இது மார்க்சிய எதிர்ப்பாக மாறுகின்றது.

பெண் பொருளாதார ரீதியாக விடுதலை அடைகின்ற போது, பெண் விடுதலை அடைவாள் என்று கூறியது மார்க்சியம் அல்ல. அது மட்டுமின்றி இது வர்க்கப் போராட்டமும் அல்ல. **ஏங்கெல்ஸ் பெண்ணின் பொருளாதார விடுதலை பெண் விடுதலைக்கு முன் நிபந்தனை என்று கூறினாரே ஒழிய, அது ஆணாதிக்கத்தை ஒழிக்கும் என்று என்றும் கூறிவிடவில்லை.** பெண் சுதந்திரமாகச் சிந்திக்கவும், சுயமாகப் போராடவும், அவள் பொருளாதார ரீதியாக ஆணைச் சார்ந்து இருப்பது முடிவுக்கு வரவேண்டும். இந்த குறித்த நிலைமை தான் இன்று வரை, பெண்ணின் சமூகப் பங்களிப்பை மட்டுப்படுத்துகின்றது. ஆண்கள் அளவுக்குச் சமூக ஈடுபாடு குறைவாக இருப்பதும், கல்வியில் பின்தங்கி இருப்பதும், தலைமை தாங்குவதில் முன்னேற முடியாது இருப்பதும் யதார்த்தமாக உள்ளது. பெண் பொருளாதார ரீதியாகச் சுதந்திரம் அடைவது, அவளின் விடுதலைக்கு முன்நிபந்தனையாகும்.

இந்தப் பொருளாதார விடுதலை என்பதை மார்க்சியம் இறுதியானதும் முடிவானதுமாக என்றுமே முன்வைத்ததில்லை. ஆனால் பெண்ணின் பொருளாதார விடுதலை பெண் விடுதலைக்கு நிபந்தனையானது என்பதை முன்வைத்ததுடன், புரட்சிக்குப் பிந்திய சோசலிசச் சமூகங்களில் பெண்ணின் பொருளாதார விடுதலைக்கு ஊடாகப் பெண்ணை முதலில் விடுவித்தது. பெண்ணின் விடுதலை என்பது பல பண்பாட்டு - கலாச்சாரப் புரட்சியூடாகவே நிறைவு பெறும் என்பதைப் பாட்டாளி வர்க்கம் தெளிவாக விளக்கியுள்ளது. இதுவும் சோசலிசச் சமூகத்தில் இருந்து கம்யூனிச சமூகத்தை நோக்கிய மாற்றத்தை, அடிக்கட்டுமான பொருளாதார அலகை மாற்றிச் செல்லுகின்ற போது பெண் விடுதலையை மேலும் துல்லியமாகக் கோருகின்றது.

2. சோசலிசப் புரட்சி பெண் விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற வாதம் தொடர்பாகவும், சோசலிசச் சமூகங்கள் பெண் விடுதலையைப் பெற்றுத் தரவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாகவும் பார்ப்போம்.

இவை இரண்டும் மார்க்சியத்தை விட்டு விலகிச் செல்லும் வாதமாகும். சோசலிசச் சமூகம் பெண் விடுதலையைப் பெற்றுத் தரும் என்று கூறுவதன் மூலம், சோசலிசப் புரட்சி வரை பெண்களின் பிரச்சினையை ஒத்திப் போடுவது போன்ற பொருளாதார வாதம் முன்வைக்கப்படுகின்றது. சோசலிசப் புரட்சியை நோக்கிய தயாரிப்பில், ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதும் ஒரு வர்க்கக் கடமையாகும். ஆணாதிக்கத்துக்கு எதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தைச் சோசலிசச் சமூகத்துக்கு முன்பே தொடங்குவது, அடிப்படையான பாட்டாளி வர்க்கக் கடமையாகும். இதுவே வர்க்கப் போராட்டத்தை நடத்துகின்றது. யாரும் முரண்பாடுகளையும் அதனால் எழும் போராட்டங்களையும் ஒத்தி வைக்க முடியாது.

சோசலிசச் சமூகம் வரை காத்திருக்க கோரமுடியாது. **போராடும் உரிமை உயிர் வாழ்தலின் அடிப்படை நியதியாகும்.** ஆனால் சோசலிசச் சமூக மாற்றமின்றி பெண் விடுதலையைச் சாதிக்க முடியும் என்ற காரியவாதச் சந்தர்ப்பவாதத்துடன் கூடிய, மார்க்சிய விரோதத் தன்மையை அம்பலம் செய்வதை இது தடுக்காது.

சோசலிசச் சமூகமும் அடுத்த கட்ட கம்யூனிசச் சமூகத்தை நோக்கிய வர்க்கப் போராட்டமுமே பெண்ணின் விடுதலையை நிறைவு செய்கின்றது. இருக்கின்ற சுரண்டல் அமைப்பில் இருந்து தொடங்கும் போராட்டம் கம்யூனிசச் சமூகத்தில் தான் குறித்த சமூக அவலத்தைக் களைகின்றது. இந்த நீண்ட போராட்டத்தை மறுத்த அனைத்து விலகலும், ஆணாதிக்கத்தைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொள்கின்றது. நீண்ட இடைவெளியற்ற போராட்டத்தை ஒத்திப் போடமுடியாத வரலாற்று நிகழ்வு காணப்படுகின்றது. இது ஏற்ற இறக்கம் கொண்ட வழிகளில் மட்டுமே ஒழிக்கப்படுகின்றது.

சிலர் சோசலிசப் புரட்சி நடந்தவுடன் பெண் விடுதலை அடைந்து விடவில்லை என்று மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துகின்றனர். இது சோசலிசப் புரட்சி பெண் விடுதலையைத் தந்து விடும் என்பது பொருளாதாரவாதக் கோட்பாட்டின் மறு பக்கமாகும். இது கோட்பாட்டு உள்ளடக்கத்தில் பொருளாதார வாதமாகவும், அராஜகவாதமாகவும் வெளிப்படுகின்றது. பண்பாட்டு - கலாச்சாரப் புரட்சியை மறுத்த, கம்யூனிசச் சமூகத்தை நோக்கிய அடிக்கட்டுமான மாற்றங்களை மறுத்த வழிகளில் இது பிரதிபலிக்கின்றது. புரட்சியின் ஏற்ற இறக்கம் கொண்ட நீண்ட அலைவரிசையான இயங்கியலை மறுக்கின்ற தன்மை, ஒரேயடியாக மாறிவிடும் என்ற அராஜகப் பிரமையை விதைப்பதன் ஊடாக, எதிர்ப்பதில் இரட்டைத் தன்மை இங்கு வெளிப்படுகின்றது. இது மார்க்சியத்தின் உயிரோட்டமுள்ள இயங்கியல் மற்றும் புரட்சிகர தன்மையைச் சிதைக்கின்றது. இது மார்க்சிய எதிர்ப்பாக வளர்ச்சி பெறுகின்றது. மார்க்சியத்தைத் திரித்த, திரிந்த வழிகளில் புரிந்து கொள்ளும் போது, ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் முடக்கப்படுகின்றது.

3.மார்க்சியத் தலைவர்கள் ஆண்களாக இருப்பதாகவும், மார்க்சியம் ஆண்களின் இயக்கமாக இருப்பதாகவும், அதனால் பெண்கள் தனியாகப் பெண்கள் தமக்குரிய தலைமையை உருவாக்க வேண்டும் என்ற வாதம் தொடர்பாகப் பார்ப்போம்.

மார்க்சியம் ஆண்களின் இயக்கமா? மார்க்சியம் ஆண்களின் சொத்துரிமையா? மார்க்சியத் தலைவர்களாகப் பெண்கள் வரமுடியாதா? என்ற அடிப்படையான கேள்வி இங்கு எழுகின்றது. இது பல நூல்கள் முதல்



பூர்சுவா பெண்ணியல் வாதிகள் வரை முன்வைக்கும் விடயமாகி, மார்க்சிய எதிர்ப்பாகி விடுகின்றது. மார்க்சியம் எப்போதாவது எங்காவது ஆண்கள் இயக்கமாகப் பிரகடனம் செய்ததா? பெண்களை உள்வாங்க மறுத்து, தலைமையில் இருந்து எட்டி உதைக்க முனைந்ததா? இப்படி எங்காவது நடந்தால் அங்கு விமர்சனம், சுயவிமர்சனம் நிகழ்கின்றது. விமர்சனம், சுயவிமர்சனம் மறுக்கப்படும் எல்லா நிலையிலும் அக்கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியாக இருப்பதில் இருந்து முதலாளித்துவக் கட்சியாக சீரழிகின்றது.

மார்க்சியம் தனிப்பட்ட நபர்களினதோ, குறித்த மக்கள் கூட்டத்தினதோ சொந்தச் சொத்தல்ல. புரட்சிகர வர்க்கமான தொழிலாளர் தலைமையில் ஒடுக்கப்பட்ட மக்களின் வர்க்கப் போராட்டப் பாதையில், மார்க்சியத்தை முன் வைத்து யாரும் போராட முடியும். இங்கு புரட்சிகர வர்க்கமான தொழிலாளர், அனைத்து மக்கள் கூட்டத்திலும் காணப்படுகின்றனர். இங்கு ஆண், பெண், மதம், சாதி, நிறம்.. என்ற எல்லை கடந்து யாரும் மார்க்சியத்தை முன்வைத்துப் போராடமுடியும். இங்கு மார்க்சியம் ஆண்களினதோ, உயர் சாதிப் பிரிவுகளினதோ, வெள்ளை நிறத்தினதோ சொத்தல்ல. சில மார்க்சிய விரோதக் கோட்பாட்டாளர்கள் இப்படி இருப்பதாகக் கூறுவதன் மூலமே, தமது இழிந்த குறுகிய காரியவாத, சந்தர்ப்பவாத, பிழைப்புவாத நலன்களை நியாயப்படுத்துகின்றனர்.

பெண்கள், சமூகத்தில் மிக பின்தங்கிய சாதிகள், கறுப்பு நிற மக்கள், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் என யாரும் மார்க்சியத்தைத் தமது புரட்சிகரத் தத்துவமாகக் கொண்டு போராடவும், தலைமை தாங்கவும், அமைப்புகளை உருவாக்கவும் முடியும். இதை யாரும் தடுக்கமுடியாது. இங்கு எந்த வேலியும், அதிகாரமும் கிடையாது. இவை தொழிலாளர் வர்க்கத் தலைமையில் மனிதப் பிளவுகளைக் கடந்து போராட, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுவதையும், அதைத் பாதுகாக்கவும், வர்க்கப் போராட்டத்தைத் தொடருவதையும் அடிப்படையாகக் கொள்ளும் போராட்டத்தை, முன்னெடுக்கும் எல்லா நிலையிலும் சர்வதேசியமாகிவிடுகின்றது.

4. ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் வர்க்கப் போராட்டமல்ல என்ற வாதம் தொடர்பாகப் பார்ப்போம்.

ஆணாதிக்கம் மீதான போராட்டம் வர்க்க எல்லை கடந்தது என்ற அரசியல் உள்ளடக்கத்தில் இருந்து இது முன்வைக்கப்படுகின்றது. இதன் மூலம் வர்க்கப் போராட்டமின்றி பெண் விடுதலை அடையமுடியும் என்ற கோட்பாட்டு விவாதம் மட்டுமின்றி, நடைமுறையிலும் முன்வைக்கப்படுகின்றது.

இவை உள்ளடக்கத்தில் சீர்திருத்தவாத, காரியவாத நலன்களை அடிப்படையாகக் கொண்டு தன்னை அடையாளம் காட்டுகின்றது. ஆணாதிக்கம் இயற்கையானதாக இது மறைமுகமாக விளக்க முனைகின்றது. ஆணாதிக்கம் எப்படி தோன்றியது என்ற வரலாற்றுத் தன்மையைப் புரிந்து கொள்ள மறுப்பதன் மூலம், ஆண்களின் சொத்துரிமையைத் தனிப்பட்ட பெண்கள் அனுபவிப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் முதலாளித்துவ அமைப்பில் சொத்துரிமை பெற்ற பெண்கள் வரை தமது வர்க்க நலன் சார்ந்து இதை முன்வைக்கின்றனர். அதாவது ஆணாதிக்கச் சொத்துரிமை வழியில் சலுகை பெற்ற பெண்கள் தமது சொத்துரிமையைப் பாதுகாக்க, வர்க்கப் போராட்டத்தில் இருந்து பெண்ணியத்தை விலக்கி வைக்க விரும்புகின்றனர்.

ஆனால் ஆணாதிக்கம் தனிச் சொத்துரிமை அமைப்பில் ஆண்களின் தனிச் சலுகையில் இருந்து உருவானது. ஆணின் வாரிசைப் பெத்துப் போடுவதன் ஊடாகப் பெண் ஆணின் அடிமையானதால், சொத்தையும் சொந்தக் குழந்தைச் செல்வத்தையும் ஆணிடம் இழந்த பெண், ஆணுக்குச் சேவை செய்வதன் மூலம் ஆணின் தயவில் வாழ நிர்ப்பந்தித்த மூலதன அமைப்பு, பெண்ணை ஆணின் அடிமையாக வாழ வழிகாட்டியது. இதற்கு எதிரான போராட்டம் என்பது மூலதனத்தைத் தகர்ப்பதில் சார்ந்துள்ளது. அதாவது தனிச் சொத்துரிமை அமைப்பின் மேல் கட்டப்படும் அனைத்து மேல் கட்டுமான அமைப்பின் மீதான போராட்டங்கள், திட்டவட்டமாக வர்க்கப் போராட்டமாக இருப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

ஆணாதிக்கம் அடிக்கட்டுமான அமைப்பில் உருவான பிளவாகும். சொத்தை இழந்த பெண் இங்கு ஆணின் அடிமையானாள். இதன் அடிப்படையில் உருவான பண்பாடுகள், கலாச்சாரங்கள் அது சார்ந்த மொழிகள் என அனைத்தும், ஆணின் தனிச் சொத்துரிமை எல்லைக்குள் வளர்ச்சி பெற்றவையே. இன்று ஆண்கள் பெருமளவில் சொத்திழந்த போதும், சிறிதளவு பெண்கள் சொத்தைப் பெற்ற போதும் (இங்கு பெண் சொத்தைப் பெற்றதால் ஆண் சொத்தை இழக்கவில்லை. மூலதனக் குவிப்பு சுரண்டல் வடிவில் உச்சக் கட்டத்தை அடைந்ததன் ஊடாக இவை நிகழ்கின்றது.), ஆணாதிக்க உறவு சொத்துரிமை வடிவில் நீடிக்கின்றது. இது பண்பாட்டு - கலாச்சாரத் தளத்தில் மிக இழிவாக மூலதன வடிவில் நீடிக்கின்றது.

பாட்டாளி வர்க்கப் போராட்டம் புரட்சிக்கு முந்திய நிலையில், மேல் கட்டுமானத்தில் நிகழ்கின்றது. புரட்சிக்குப் பிந்திய சமுதாயத்தில் தான் அடிக்கட்டுமான பொருளாதார அலகின் மேல் நிகழ்வதன் ஊடாக, மேல் கட்டுமான புரட்சி மேலும் வீறுகொள்கின்றது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தயாரிப்பு மேல் கட்டுமானம் மீதான அனைத்துத் தளங்களிலும் தயாரிக்கப்படுகின்றது. இது நடைமுறைப் போராட்டத்தில் ஜனநாயகக் கோரிக்கை முதல் கம்யூனிசச் சமூகக் கோரிக்கை வரை அனைத்தையும் முன்வைத்து ஆயுதபாணியாவதுடன், பல வீரமிக்க போராட்டங்களையும் முன்னெடுக்கின்றது. கோரிக்கைகளை வென்று எடுக்கின்றது. இதை நிரந்தரமாக்கவும், ஒரேயடியாக இவற்றை முடிவு கட்டவும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவவும் போராடுகின்றது. பெண் விடுதலைக்கான தயாரிப்பைப் புரட்சிக்கு முந்திய ஜனநாயகக் கோரிக்கையிலும் பாட்டாளி வர்க்கக் கோரிக்கையிலும் தயார் செய்கின்றது. நடைமுறை போராட்டத்தில் தலைமை தாங்கி கோரிக்கைகளை வென்று எடுப்பதுடன், அடுத்த இலக்கை நோக்கி முன்னேறுகின்றது. இந்த





வர்க்கப் போராட்டம் என்பது மார்க்சியத்தின் புரட்சிகரத் தன்மையால் தலைமை தாங்கப்படுகின்றது.

5.மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் பெண்ணியம் பற்றி கதைக்கவில்லை (பேசவில்லை) அல்லது மார்க்ஸ் அக்கறை கொள்ளவில்லை என்ற கருத்து தொடர்பாகப் பார்ப்போம்.

இந்த வாதம் தவறானது. மார்க்ஸ், ஏங்கெல்ஸ் பெண்கள் துன்பம் பற்றி கதைத்துள்ளதுடன், (பேசியுள்ளதுடன்) புகழ் பூத்த பெண்ணிய நூல்களையும் தந்தவர்கள். அவர்கள் தமது கடினமான போராட்டக் காலத்தில் கிடைத்த நேர எல்லைக்குள் இவை பற்றி கதைத்தேயுள்ளனர் (பேசியேயுள்ளனர்). இவர்கள் மார்க்சியத்தை நிறுவும் போராட்டத்தையே தமது காலத்தில் செய்தனர். பொருள் முதல் வாதத்தின் முரணற்ற விதியை நிறுவுவதிலும், அதன் மீது சகல சிந்தனைகள், துயரங்கள் நிலவுவதையும், இயற்கை கடந்த நிகழ்ச்சிகளில் இவற்றை நிறுவுவதிலும் போராட வேண்டியிருந்தது. அவர்கள் தேசிய இனப் பிரச்சினை, சுற்றுச் சூழல், ஆணாதிக்கம், நிறவாதம், காலனியாதிக்கம் என எண்ணற்ற பிரச்சினைகள் மீது தனித்துவமான ஆய்வுகளைத் தனித்து செய்வதில் அதிக கவனம் எடுக்க அவர்களின் ஆயுள் போதாததாகவே இருந்தது. இருந்த போதும் இவைகள் பற்றிய ஆய்வுகளை நடத்தி, தமது தெளிவான மார்க்சிய அபிப்பிராயங்களையும் கூட முன்வைக்க பின்நிற்கவில்லை. அவை வரலாற்று ரீதியாக முக்கியமானவையாக இன்றும் திகழ்வதைக் காணமுடியும்.

6.சோசலிசச் சமூகங்களில் புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் பெண் விடுதலையில் கவனம் எடுக்கவில்லை என்ற அபிப்பிராயங்கள் மீது பார்ப்போம்.

இந்தக் கருதுகோள் முற்றாகத் தவறானது. சோவியத் புரட்சியைத் தொடர்ந்து பெண்களுக்குச் சட்டப்படி வழங்கிய உரிமைகளை, உலகில் எந்த நாடும் வழங்கியதில்லை. அதன் தொடர்ச்சியில் பெண் விடுதலையில் தொடர்ச்சியாக அவர்களை விடுவிக்கும் பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டனர். இவை அந்த நாடுகளின் பெண்கள் வரலாற்றில் ஆதாரப்பூர்வமாக உள்ளது. லெனின் தனது கட்சி மீதான விமர்சனத்தில், பெண்கள் விடுதலையை மேலும் பண்பாட்டு - கலாச்சார - பொருளாதாரத் தளத்தில் தீவிரமாக்க தவறியதற்காகக் கடுமையான விமர்சனத்தைக் கூட ‘சோசலிசச் சித்தாந்தமும் கலாச்சாரமும் குறித்து’ என்ற நூலில் செய்துள்ளார்.

சீனாவில் பெண்களின் கல்வி மற்றும் கிராமப்புறப் பெண் அடிமைத்தனம் மற்றும் பெண் குழந்தை உழைப்பு போன்றவற்றைத் தகர்க்கும் போராட்டத்தைக் கலாச்சாரப் புரட்சி காலத்தில் தீவிரமாக்கி சமூக வடிவமாக்கினர். இவை பற்றிய தகவல்களை என் ‘ஆணாதிக்கமும் பெண்ணியமும்’ என்ற நூலில் தொகுத்துள்ளேன்.

7. ஓரினச்சேர்க்கை இயற்கையானது என்ற வாதங்கள் மீது பார்ப்போம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது இயற்கையைப் புரிந்து கொள்ள மறுப்பதில் இருந்து ஏற்படுகின்றது. இயற்கை ஆண் - பெண் வேறுபாட்டைப் பாலியல் சார்ந்து ஏற்படுத்தியுள்ளது. இதைத் தவிர ஆண் - பெண் வேறுபாடு பற்றிய விளக்கங்கள் எல்லாம், ஆணாதிக்கம் சார்ந்தவை. பாலியல் வேறுபாடு பெண்ணை ஆணின் அடிமையாக்கி விடவில்லை. இயற்கை சார்ந்த பாலியல் வேறுபாடு, அதற்கே உரிய உறவு விதியைக் கூட இயற்கை சார்ந்து உருவாக்கியது. இயற்கையை மனித வரலாற்றில் பாதுகாக்காதவரை, அவை மக்கள் விரோதத் தன்மை கொண்டவை.

இந்த இயற்கையை மறுத்த தொடர்ச்சியில் பாலியல் சார்ந்தும் ஆணாதிக்கமாக வளர்ச்சி பெற்றது. இது இயற்கை பாலியல் உறவை நலமடித்ததன் மூலம், இயற்கைக்குப் புறம்பாகப் பாலியல் உறவுகளை ஏற்படுத்தியது. இவை இயற்கை உறவைக் கொச்சைப்படுத்தும் வழியில், செயற்கையான உறவை ஆணாதிக்க எல்லையில் முன்வைக்கின்றது. இயற்கையான உறவை மறுக்கின்ற அனைத்து உறவுகளும் ஆணாதிக்க வகைப்பட்டவையே. ஆனால் ஆணாதிக்க அமைப்பில் செயற்கை உறவுகள், இயற்கையின் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் கூட ஏற்படுகின்றது. இதன் மீது நாம் அனுதாபம் கொள்ள முடியும். இதை மாற்ற இயற்கை நோக்கிய சமூகப் புரட்சியை நடத்த போராட வேண்டும்.

இங்கு ஓரினச்சேர்க்கை இயற்கையானது என்ற வாதத்தில், குரங்கில் இருந்து மனிதக் குரங்கு உருவாகிய காலக்கட்டச் செயற்பாட்டை ஆய்வுக்குக் கொள்ள முடியும். **குரங்குக்கும், மனிதக் குரங்குக்கும் குறிப்பானதும் அடிப்படையானதுமான வேறுபாடு கைகளினால் ஆன உழைப்பாகும்.** மரத்தில் தாவி ஏற பயன்படுத்திய கைகளை உழைப்புக்குப் பயன்படுத்திய மனிதக் குரங்கு, குரங்கில் இருந்து திட்டவட்டமாக வேறுபடுகின்றது. கைகளைப் பயன்படுத்த தெரிந்திராத குரங்குகள் எப்படி ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருக்க முடியும்.

உதாரணமாகப் பெண் குரங்குகள் உணர்ச்சியை எப்படி தீர்த்து இருக்கும்? கைகளைப் பயன்படுத்த தெரிந்திருக்காத குரங்கு, ஒருக்காலும் ஓரினச் சேர்க்கையில் வெற்றி பெற முடியாது அல்லவா. அத்துடன் பாலியல் இன்ப உணர்ச்சியைத் தீர்க்கும் குறைந்த பட்ச அறிவை, இயற்கைக்குப் புறம்பாக ஒருக்காலும் பெற்றிருக்கவில்லை. கைகளை எப்படி எதற்குப் பயன்படுத்துவது என்பது கூட நீண்ட அனுபவ ரீதியான நடைமுறை முயற்சிகளில், தற்செயலான சம்பவங்கள் நிர்ணயமான பாத்திரத்தை வழங்கின.

அறிவியல் பூர்வமாகப் கைகள் மூலமோ, வேறு உடலுறுப்புகள் மூலமோ பாலியல் இன்பத்தை அடைய முடியும் என்ற அனுபவ அறிவைப் பெறுவதற்குக் கூட, நீண்ட காலம் அவசியமாகவே இருந்தது மனிதனுக்கு. மனிதப் பாலியல் உணர்ச்சியையும், இன்ப நாட்டத்தையும் ஆண் - பெண் உறுப்புகளின் எப்பாகம் வழங்குகின்றன என்பதை இயற்கை கடந்து, புரிந்து கொள்ளும் அனுபவ அறிவு மனித வரலாற்றின் பிந்திய காலக் கட்டத்துக்குரியது. இங்கு ஆண் - பெண் உறுப்பு கடந்து எந்த உறுப்பும் பாலியல் அங்கமாக இருந்தது கூட இல்லை. இவை மிக அண்மைக் காலத்துக்குரியவையாகும்.




இன்று ஆண் குரங்கில் அவதானிக்கப்படும் (கவனிக்கப்படும்) விதிவிலக்கான ஓரினச்சேர்க்கை பெண் குரங்குகளிடையே இல்லை. இந்த ஆண் குரங்கு கூட பரிணாம வளர்ச்சியில் கைகளை மெதுவாக முன்பைவிட சிறப்பாகப் பயன்படுத்துவதின் விளைவு மட்டுமின்றி, குரங்கில் ஏற்படும் குறித்த கால வேட்கையின் விளைவாக அவதானிக்கப்படுகின்றது. பெண் குரங்கின் எண்ணிக்கை குறைவாக உள்ள போதும், ஆண்களின் போட்டியிலும், அதில் தோற்கின்ற போதே ஆண் குரங்குகளில் ஓரினச் சேர்க்கை அவதானிக்கப்படுகின்றது. ஆனால் வெற்றி பெறுவதில்லை. இந்த அவதானம் கூட எல்லாவகையான குரங்களிடமும் காணப்படுவதில்லை. இயற்கையாக அதிக உணவைப் பெற்று ஓய்வைப் பெறுகின்ற இனங்களிடையே தான், இவை முக்கியமாக அவதானிக்கப்படுகின்றது.

இங்கு அவை தன்னிச்சை சேர்க்கையில் ஈடுபடும் போது, அதை ஒத்த நிலையில் உள்ளது. உதவிக்கு வருவதன் மூலமே ஓரினச்சேர்க்கை அவதானிக்கப்படுகின்றது. இங்கு பெண்ணுடன் உடலுறவு கொள்வதில் மற்ற ஆண் குரங்குடன் போட்டியிட்டு வெற்றி பெறும் ஆண் குரங்கு, ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதில்லை. இது மற்ற விலங்குகளில் இருந்து விதிவிலக்காகக் கூட குரங்கில் அவதானிக்கப்பட்டது. மனிதன் இனவிருத்தியைத் தடை செய்து வளர்க்கும் மிருகங்களுக்கிடையில் கூட ஓரினச்சேர்க்கைக்கான முயற்சியில் முயல்கின்றதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் அதில் வெற்றி பெறுவதில்லை. அது இயற்கை சார்ந்து ஈடுபட துடிப்பதால், அதில் தோல்வி பெறுகின்றன.

இயற்கையாகப் பாலியலில் ஈடுபட முயன்று தோற்கின்ற போதே, ஓரினச்சேர்க்கை நிகழ்கின்றது. ஆணாதிக்க மனித அமைப்பில் பாலியல் நலமடிக்கப்பட்டு, அவை சிதைக்கப்பட்ட நிகழ்வுகளில் தான், ஓரினச் சேர்க்கை மையம் கொள்கின்றது. இது இயற்கையானது அல்ல. மாறாகச் செயற்கையாக ஆணாதிக்க விளைவாகக் காணப்படுகின்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 26. 'பூடகமான' மார்க்சிய எதிர்ப்புப் பெண்ணியம்

அ. மார்க்சின் கட்டுரையைத் தொட்டு வரக் கூடிய கூற்று ஒன்றை 'எக்சில்:2'-இல் அரவிந் அப்பாத்துரை எழுதியிருந்தார். அதைப் பார்ப்போம்.

"ஜாதி வேற்றுமை" பெண்ணை ஒடுக்கும் விதிமுறைகள் ஆகியவற்றைப் போதிக்கும் மனுதர்மம் என்ற நூலை எதிர்த்துப் போராடுவதில் மட்டுமே தலித்தியமும் பெண்ணியமும் ஒன்று சேர்கின்றது. மற்ற எல்லா பரிணாமங்களிலும் பெண்ணியமும் தலித்தியமும் வெவ்வேறு போராட்டங்கள்"[67] என்று ஏழுதுகின்றார் ஆனால் எப்படி என விளக்கவில்லை.

மனு தர்மம் என்ற நூலை எதிர்த்து எப்படி பெண்ணியம் போராடும் ஐயா? பார்ப்பனியப் பெண்ணியம் அதாவது அ.மார்க்ஸ் குறிப்பிடும் 'மிருதுளா சின்கா' எப்படி மனுதர்மத்தை எதிர்க்கும். அ.மார்க்ஸ் என்ற அறிவியல் ஆய்வாளர் பெண்ணியத்தை வரையறுப்பது கேலிக்குரியது என்கின்றார். நீங்கள் எந்தப் பெண்ணியத்தைச் சொல்லுகின்றீர்கள். கேலி செய்யும் பெண்ணியத்தையா? எதை?

மனுதர்மப் பெண்ணியத்தை எதிர்க்க வேண்டுமாயின் அது உண்மையான பெண்ணியமாக இருக்கவேண்டும். அது ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்து சுரண்டலை, ஆணாதிக்கத்தை, மற்ற பூர்சுவா மற்றும் பார்ப்பனியப் பெண்ணியத்தை எதிர்த்தும், சாதி அமைப்பைக் கடந்தும் போராட வேண்டும். இந்தப் பெண்ணியம் தான் மனுதர்மத்தை எதிர்க்கும். இந்தப் பெண்ணியம் கம்யூனிசப் பெண்ணியமாகும்.

அடுத்து தலித்தியம் மனுதர்மத்தை எதிர்க்கும் என்கின்றார். இது முழுமையானது அல்ல. தலித்தியம் மனு தர்மத்தை எதிர்க்க வேண்டுமாயின், தனக்கு உள்ளேயுள்ள மனுதர்ம வழிவந்த சாதிப்படி நிலையை முதலில் தகர்க்க வேண்டும். இதைத் தலித் மனுதர்மம், மறுக்கின்றது. இது மறுக்கப்படும் போது மிக கீழ் மட்ட சாதிக்கு இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எல்லாம் ஒன்று தான்.





மனுதர்மத்தை எதிர்த்துப் போராட வேண்டும் எனின் தலித்துக்குள் உள்ள மனுதர்மக் கூறுகளை எதிர்த்துப் போராடுவதில் தொடங்குகிறது. தலித்துகளுக்குள் உள்ள மனுதர்மத்தைப் பாதுகாத்த படி ஒருக்காலும் வெளியில் உள்ள மனுதர்மத்தைத் தகர்க்க முடியாது. மனுதர்மத்தை எதிர்த்த போராட்டம் எல்லாம் சாதிப்படி நிலை ஒடுக்குமுறைக்குள்ளும் தொடங்குகின்றது. இது சாதியைக் கடந்த போராட்டத்தைத் தொடங்குவதும், ஒடுக்கப்பட்ட மக்களின் மற்ற அனைத்துக் கோரிக்கைகளிலும் கைகோர்க்கின்றது. அப்போது மட்டும் தான் மனுதர்மத்தை ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் வேரறுக்கின்றன.

சாதியைக் கடந்து கோரும் மக்கள் தான், அதாவது பாட்டாளி வர்க்கம் தான் ஒட்டு மொத்த மனுதர்மத்திற்கு எதிராகப் போராடுகின்றது. அதை வேர் அறுக்கின்றது. மற்றவை அதைத் தக்க வைக்கவும், அ.மார்க்ஸ் கோருவது போல் சலுகைகளைக் கையேந்துவதிலும் தான் நீடிக்கின்றது.

அடுத்து அரவிந் அப்பாத்துரையின் பொன் மொழியைப் பார்ப்போம். "தத்துவரீதியில் கம்யூனிசம் என்பது சம உரிமைக்கான போராட்டம். இது முக்கியமான பொருளாதார, சமத்துவத்திற்கான போராட்டம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ......மார்க்சியவாதிகள் பெண்ணியப் போராட்டத்தில் பங்கு பெறுவோருக்குத் துணை நிற்கக் கூடும். இதைத் தவிர்த்து கம்யூனிசத்திற்கும் பெண்ணியப் போராட்டத்திற்கும் என்ன நேரடித் தொடர்பு இருக்கின்றது என்பது ஒரு 'பூடகம்' "[67] என்கின்றார்.

கம்யூனிசம் பற்றி தனது "பூடகமான" நிலையில் நின்றும், திரித்தும் வெளியிடும் கம்யூனிச எதிர்ப்பு அறிவியல் சார்ந்ததல்ல. கம்யூனிசம் தத்துவரீதியாகச் சம உரிமை கோருகின்றதாம். இதைப் பொருளாதாரத்தில் கோருகின்றதாம். எல்லா வண்ணப் பிழைப்புவாதிகளும் கம்யூனிசத்தைப் பொருளாதாரப் போராட்டமாகச் சுருக்கி, அதில் போராடிப் பிழைத்து அம்பலப்படுகின்றனர்.

பொருளாதாரத்தில் சமத்துவம், சமஉரிமை தான் போதும் எனின் தொழிற்சங்கப் போராட்டம் போதுமானதாக இருக்கும். இன்றைய தொழிற்சங்கங்கள் கம்யூனிசப் புரட்சியில் இருந்து விலகிச் சென்ற பாதை இதுதான்.

கம்யூனிசம் வர்க்கப் போரைக் கோருகின்றது. வர்க்க ஆட்சியைக் கோருகின்றது. பாட்டாளி வர்க்க ஆட்சியைப் பாதுகாக்கக் கோருகின்றது. இது வர்க்க எதிரிகளை ஒழித்துக் கட்டக் கோருகின்றது. இது தனிச் சொத்துரிமையை ஒழித்துக் காட்டுகின்றது. இதன் போராட்டப் பாதையில் சம உரிமை என்பது மறுத்து விடுகின்றது. பொருளாதாரத்தில் சமத்துவத்தை அல்ல தேவையை எடுக்கக் கோருகின்றது.

பொருளாதார வாதத்துக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தை நிறுவ மார்க்ஸ்-லெனின் பல நிறைய தத்துவப் போராட்டங்களை நடத்தி கம்யூனிசத்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுவினர். இதைப் 'பூடகம்' போல் இல்லாது படித்து கம்யூனிசத்தைத் திரிக்காது பார்க்காதவரை எப்போதும் கம்யூனிச எதிர்ப்புதான் அகராதியாகின்றது. .

பெண்ணியத்தில் சம உரிமைக்குத் துணைநிற்கும், அதற்கு வெளியில் கம்யூனிசம் ஒரு பூடகம் என்கிறார். இது அறிவு சூனியத்தின் குருட்டுப்பார்வை தான். பெண்ணியத்திற்குச் சம உரிமை கிடைத்தபின் எப்படி ஐயா பெண்ணியக் கோரிக்கை எழும்? சம உரிமை என்பது எல்லாத் துறையிலும் நடக்க வேண்டும்.

கம்யூனிசம் வர்க்கப் போரைப் பொருளாதாரத்தில் நடத்துவதில்லை. அது சுரண்டலுக்கு எதிராக, அதற்குக் காரணமான அனைத்துத் துறைகளுக்கும் எதிராகப் போராடுகின்றது. சுரண்டல் என்பது உருவாக்கியது தான், ஆணாதிக்கம், சாதிக் கட்டமைப்பு, பாலியல் வக்கிரங்கள் ........ என அனைத்துமாகும். இதை எதிர்க்கும் வர்க்கப் போராட்டம் சுரண்டலை ஒழிக்கும் போது அது அனைத்துத் துறையிலும் மாற்றத்தை நிகழ்த்தியிருக்க வேண்டும். இது மட்டும் தான் கம்யூனிசத்தின் கோரிக்கையும் வெற்றியுமாகும்.

மொழி, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், மதம்........ என இன்றைய அனைத்தையும் மறுத்து மாறுதலைக் கம்யூனிசம் கோருகின்றது. இதைப் புரிந்து கொண்டால் பெண்ணியத்துக்காக ஒரே ஒரு போராட்ட வடிவம் கம்யூனிசமாக இருப்பதைக் காண முடியும். இதைவிட்ட அறிவு சூனியப் 'பூடகமாக' இருப்பதால் எதுவும் நடக்காது, வம்பளப்பதும் சுகிப்பதும்தான் எஞ்சும்.





## 27. சுரண்டுவதில் தொடங்கிய ஆணாதிக்கம், சுரண்டல் ஒழியும் போது பெண் விடுதலை அடைவாள்

"தென்னாசியச் சமூகத்தில் பெண்நிலைவாதம்"[68] என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரை, தென்னாசியப் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகளால் எழுதப்பட்ட நூலில் இருந்து எடுத்து, எக்ஸிலில் (முன்னைய எக்ஸிலில்) முன்வைத்துள்ளனர். இதை ஆராய்வோம்.

"சமூகத்தில் நிலவும் பால் அடிப்படையிலான ஒடுக்குதல், ஆணாதிக்கம், தந்தைவழிச் சமூகம் என்பவற்றின் இருப்பைக் கண்டுகொண்டு, இவற்றிற்கு எதிரான ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர் பெண்ணியவாதி ஆவார்"[68] எனக்கூறுவதன் மூலம் கட்டுரை, பெண்கள் மீதான ஒடுக்குமுறையை மறைமுகமாக மறுத்தும், இயங்கியலை மறுத்தும் கூறும் அதேநேரம், பெண் விடுதலையின் ஆரம்பப் பார்வையே ஆணாதிக்கத்தில் இருந்து தொடங்குகின்றது.

முதலில் ஒரு பெண் பெண்ணாக இருக்கிறாள் எனின், அவளின் ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தான் அவள் உயிர்வாழ்கின்றாள். ஆணாதிக்கச் சுரண்டலுக்கு எதிரான போராட்டம் இன்றி உலகில் எந்தப் பெண்ணும் உயிர்வாழ்வதில்லை. இதுதான் பெண் உயிர் வாழ்தலின் உயிரியல் அடிப்படையாகும். ஆனால் இப்போராட்டம் தன்னியல்பாக நாள் தோறும் அவர்களை அறியாமலும் அறிந்தும் நீடித்தவண்ணம் உள்ளது. முதலில் ஒரு பெண் பெண்ணாக இருக்கும் போக்கில் போராட்டம் பிரிக்க முடியாத அம்சமாக இருக்கின்றது. ஆகவே போராட்டத்தை ஆணாதிக்கத்துக்கு எதிராகத் தெரிந்தும் தெரியாமலும் தன்னிச்சையாகவும் செய்யும் அனைவரும் பெண்ணியவாதிகளாக இருப்பதில்லை. மாறாக, பெண்களாக உள்ளனர். பெண் பெண்ணாக இருக்கின்றாள் எனின் ஆணாதிக்கத்துக்கு எதிராக இருக்கின்றாள்.

பெண்ணியவாதி, பெண் ஒடுக்குமுறை எப்படி தொடங்கி ஆணாதிக்கமாக எப்படி வளர்ச்சி பெற்றது? என்பதை, வரலாற்று இயங்கியலில் புரிந்து கொண்டு, அதை எப்படி ஒழித்துக் கட்ட முடியும்? என்பதை விஞ்ஞானப்பூர்வமாகப் புரிந்து, அதற்காகப் போராடுபவர்கள் மட்டும்தான் பெண்ணியவாதிகள் ஆவர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயத்தில் பெண் ஒடுக்குமுறைக்குக் காரணமான உபரியும் அதன் அடிப்படையிலான சுரண்டலில் தொடங்கி, பெண்ணைச் சுரண்டி, அடிமையாக்கிய பெண் மீதான பாலியல் சுரண்டலைத் தொடங்கியது முதல், இதை ஒழித்துக் கட்டும் போராட்டம் இறுதியானதும் முடிவானதுமான ஆணாதிக்கத்தால் வளம்பெற்ற சுரண்டலை ஒழித்துக்கட்டும் போராட்டத்துடன் தொடர்புடையது. இதைப் புரிந்து, இதற்காகப் போராடாத எவரும் பெண்ணியவாதியாக இருப்பதில்லை. ஏனெனின், இதை மறுக்கும் யாரும் பெண்களுக்குச் சலுகை கோருவதற்கு அப்பால் ஆணாதிக்கத்தை ஒழித்துக்கட்ட போராடுவதில்லை. மாறாக ஆணாதிக்கத்திடம் சலுகை பெற்று ஆணாதிக்கப் போக்கில் ஆணாதிக்க நிலையை அடைவது மட்டும் நிகழ்கின்றது.

இன்று பொதுவாக ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதை மறுக்கின்ற, ஆணாதிக்கத்தின் தோற்றத்தைப் புரிந்து கொள்ளாத பலர் பெண்ணியவாதிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர். இந்த வகையில் இருக்கும் சமூக எல்லையைத் தாண்ட கோரும் (கட்டுடைப்பை), எல்லாச் செயல்களிலும் ஈடுபடும் அனைவரும் பெண்ணியவாத வேஷம் போட்டுக் கொள்கின்றனர். ஒரு கவர்ச்சி மொடலிஸ்ட் முதல் சீர்திருத்தத்தை முன்வைக்கும் அனைவரும் வரை உண்மையில் பெண்ணியவாத வேஷத்துடன் ஆணாதிக்க இருத்தலுக்காக, அதன் வழியில் சலுகையை ஆணாதிக்கத்திடம் பெற்று முண்டுகொடுக்கின்றனர்.

அதாவது சமூகத்தில் வேறுபட்ட பல்வேறு ஒடுக்குமுறைகளில் ஒடுக்குவதற்கு சாதகமாக இருந்தபடி, பெண்ணியவாதிகள் வேஷத்துடன் பெண்களை ஏமாற்றி சீரழிக்க ஆளும் வர்க்கங்களால் கோட்பாட்டுச் செயல் தளங்கள் இடப்படுகின்றன. இன்று ஏகாதிபத்தியத்தால் பெண்விடுதலை கோஷங்களுடன் கட்டியமைக்கப்பட்டு, களத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தன்னார்வப் பெண் விடுதலைக் குழுக்களின் பிரதிநிதிகள் கூட, பெண்ணியவாதிகளாக உலா வருகின்றனர். இன்னுமொரு புறத்தில் மாறுபட்ட பொருளாதார (நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம்) இடைவெளிகளில் பெண்களின் ஒடுக்குமுறையின் வடிவங்கள் மாறுபடும் போது, அதை மறுத்து (பிந்தியதை) மற்றதைக் கோருவது பெண்விடுதலையாகக் காட்டப்படுகின்றது.

சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த நலனுக்கும், ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலைக்கும் உதவும் வகையில் இல்லாத எல்லா பெண்ணியவாதக் கோரிக்கையும், ஆணாதிக்கத்தைத் தக்கவைக்கும் முயற்சியின் அங்கமாக உள்ளதுடன், மனிதப் பிளவுகளில் உயிர் வாழும் நச்சுக் காளான்களாக உள்ளனர். பெண்ணியவாதி யார் என்ற விளக்கத்தின் ஊடாக ஏகாதிபத்திய நஞ்சுகளுக்கும் பால்வார்த்து வளர்க்க விரும்பும் தொடர்ச்சியில்தான் இக்கட்டுரை நகர்கின்றது. பெண்விடுதலையை அடையும் வழியில் முன்வைக்கும் மோசடித்தனத்தைப் பார்ப்போம்.

"....ஒருத்தி, ஒருவன் பெண்ணியவாதியாக இருப்பதற்கு ஒரு குழுவில் அல்லது ஓர் அமைப்பில் அங்கம் வகிக்கவேண்டிய அவசியமில்லை. இருந்தாலும்





எதையாவது காத்திரமாகச் செய்வதற்கு ஒரு குழுவில் அமைப்பில் இருத்தல் நன்று."[68]

எவ்வளவு மோசடி. பெண் விடுதலையடைய, அமைப்பின்றி சாத்தியம் என்பது இருக்கும் ஆணாதிக்கச் சமூகத்தை கட்டிக் காக்கும் நனவான கனவுகளில் பெண் விடுதலையின் பெயரால் முன்வைப்பதுமாகும். தனிநபர் அமைப்புக்கு வெளியில் காத்திரமாக எதுவும் செய்ய முடியாது என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டு, நடைமுறையில் மக்களுக்குள் போராடாது பெண் விடுதலையின் பெயரில், புத்தக மார்க்சியவாதிகள் போல் பெண்களைப் பற்றி திண்ணை விடுதலை பேசுவதை அங்கீகரித்து, பிழைக்க பின்நிற்கவில்லை. அத்துடன் அமைப்பைக் கோரும் பெண்ணியவாதமும், தனிநபர் அமைப்பில் சேருவதை எதிர்க்கும் அராஜகப் பிரிவினருடன் கோட்பாட்டு நடைமுறை விவாதத்தைத் திட்டமிட்டே, தனது கோட்பாட்டில் மறுக்கின்றது. அதாவது அமைப்பை மறுக்கும் அராஜகவாதப் பெண்ணியம் பேசுவோரின் கோட்பாட்டுக்குச் சலுகை வழங்கி பெண்களை ஏமாற்றவும் ஆணாதிக்கத்துக்குக் கம்பளம் விரிக்கவும் தயாராக உள்ளதைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

இதைச் செழுமைப்படுத்தும் வகையில், "பெண்ணியவாதியாக இருப்பதற்குச் சொற்கள் அல்லது சொற்கட்டுகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு கோட்பாடு அல்லது தத்துவத்தைக் கொண்டிருக்கத் தேவையில்லை. தேவையானது எல்லாம் ஆணாதிக்கத்தைக் கண்டுகொள்ளலும், இரட்டை நிலைப்பாடுகளையும், அநீதியையும் ஆணாதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான துணிவைக் கொண்டிருப்பதும் தான்"[68] என்று கூறுவதன் மூலம் ஆணாதிக்கத்தைத் தக்க வைக்க கோட்பாடற்ற பூர்சுவா பெண்களையும், ஆண்களையும் பெண்ணியவாதிகளாக முன்மொழிகின்றனர். திரொஸ்கி கட்சி உறுப்பினராக இருப்பதற்கு எல்லாத் தொழிலாளிகளுக்கும் தகுதி உண்டு எனச் சொன்னதைத் தான், பெண்ணியவாதத்துக்கும் பூர்சுவா பெண்நிலைவாதிகள் மீள முன் வைக்கின்றனர்.

ஆணாதிக்கச் சுரண்டல் அமைப்பில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை மட்டும் கோரும் பெண்ணைப் பெண்ணியவாதியாகச் சித்தரிப்பதன் மூலம், பெண்களை ஏமாற்றி பிழைக்க பூர்சுவா வர்க்கம் முயல்கின்றது. இந்தியாவில் பார்ப்பனியப் பாரதிய ஜனதாக் கட்சியிலுள்ள பெண்கள் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராடுகின்றனர். ஏன் பாராளுமன்றத்தில் பெண்பிரதிநிதித்துவத்திற்காகப் போராடுகின்றது.

அண்மையில் இந்தியாவில் அழகுராணி போட்டியை எதிர்த்து சிவசேனை கட்சியின் பெண்கள் அமைப்பு நிலப்பிரபுத்துவ இந்துக் கோட்பாட்டில் இருந்து போராட, பாட்டாளிவர்க்கம் ஏகாதிபத்திய ஆணாதிக்கப் பண்பாட்டை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டை உயர்த்தி போரிட்டது. இங்கு இரு போராட்டமும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேர் எதிர்த்தன்மை கொண்டன. இங்கு ஆணாதிக்கத்தை எதிர்த்த என்ற எல்லைக்குள் பெண்ணியவாதியாகச் சிவசேனைக் கட்சியின் பெண்கள் அமைப்பை அங்கீகரிக்க முடியாது.

நடைமுறையில் இயல்பாக எப்போதும் பெண்கள் கோட்பாடு தெரிந்தோ, தெரியாமலோ ஆணாதிக்கத்துக்கு எதிராக எப்போதும் போராடியபடிதான் உயிர்வாழ்கின்றனர். இவைகள் ஊடாகச் சில வெற்றிகளைப் பெறவோ, சலுகைகளைப் பெறவோ முடிகின்றது. இவை இறுதியான வெற்றிக்கு இட்டுச் செல்லும் போராட்டத்தை நடத்தி விடுவதில்லை. இவர்கள் பெண்ணியவாதிகளாக இருந்து விடுவதில்லை. மாறாகத் தம் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதால் மட்டும் பெண்களாகத் தொடர்ந்து உயிர் வாழ்கின்றனர். பெண்ணியவாதிகள் இவர்களில் இருந்து மாறுபட்டுப் பெண்ணின் ஒடுக்குமுறையை, விடுதலையை விஞ்ஞானப்பூர்வமாகப் புரிந்து சமூகத்தின் அனைத்து ஒடுக்குமுறைகளையும், ஒடுக்கும் மக்கள் சார்பாக நின்று, முரணின்றி எதிர்த்துப் போராட தத்துவார்த்தக் கோட்பாட்டில் அமைப்பைக் கோருபவளும், அமைப்பில் இருப்பவளும் மட்டும்தான் பெண்ணியவாதியாவள். இதற்கு வெளியில் பெண்ணின் ஒடுக்குமுறையில் ஏதாவது ஒன்றை உயர்த்தும் போது இவை சுரண்டல் சமுதாயத்தில் ஆணாதிக்கத்துக்கு உட்பட்ட ஜனநாயகக் கோரிக்கையாக மட்டும் இருக்கின்றது. இது சில சலுகைகளை ஆணாதிக்கத்திடம் பகிர்ந்துண்ண கோருவதற்கு அப்பால், ஆணாதிக்கத்துடன் இணைந்துகொள்வதுடன் தொடர்ச்சியாக அதன் போக்கில் பெண்ணுக்கு எதிராக வளர்ச்சி பெறுகின்றது.

இன்று காணப்படும் பெரும்பாலான அமைப்புகள் இந்த எல்லைக்குள்தான் செயல்படுகின்றன. விஞ்ஞானப் பூர்வமாக ஆணாதிக்கத்தை ஒழித்துக்கட்ட ஒரு பெண்ணியவாத அமைப்பு உருவாகும் பட்சத்தில், இச்சமூக அமைப்பு ஆட்டம் காணத் தொடங்கிவிடும். இது சமூகத்தின் எல்லா முரண்பாடுகள் மீதும் போராடுவதன் மூலம் இச்சமூக அமைப்பைத் தலைகீழாக்கி விடுகின்றது. இதுமட்டும் தான் பெண்ணியவாதியின் ஒரே பாதையாக இருக்கமுடியும்.

இதை மறுத்து வைக்கும் வாதத்தைப் பார்ப்போம். "இதனுடைய இறுதித்தீர்வு ஒரு குழுவின்மேல் இன்னொன்று வெற்றிவாகை சூடுவதில்லை. (இந்தச் சந்தர்ப்பத்தில் பெண் - ஆணின் மேல்) ஆணினால் சமூகத்தின் எல்லா விஷயங்களிலும் ஒரு மீள் சிந்தனை, ஒரு மீளமைப்பு. ஏனைய வர்க்கங்கள் தந்தைவழி ஆதிக்க/ஆணாதிக்க அமைப்பினுள்ளேயே தங்களுடைய குறிக்கோள்களை அடையமுடியும். தங்களுடைய விரோதிகளை வென்றோ அல்லது அழித்தோ அவர்கள் வெற்றியை அடையமுடியும். அவர்கள் உள் வர்க்க, சாதி, மத, இன வேறுபாடுகளற்ற ஒரு பொதுக் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் பெண்கள் அமைப்பு/இயக்கம் இவைகளில் எதையும் செய்ய முடியாது. அது அதனுள்ளேயே வர்க்கம் மற்றும் வேறுபாடுகளைக் களைந்து வெல்லுதல் வேண்டும். அது சமூகத்தின் சாராம்சத்தை மாற்ற வேண்டும். அது விரோதப்போக்கைத் திசை திருப்ப வேண்டும்"[68] என்று தமது பெண்விடுதலை கண்டுபிடிப்பைப் பகிர்ந்து உண்ணும் போக்கில் முன்வைக்கும் வாதத்தைப் பார்ப்போம்.

ஆண்களின் போராட்டங்கள் முரண்பாடற்ற பொதுக்கோரிக்கையில் வெல்ல முடியும் என்கின்றனர். அதாவது நோக்கத்தை வைக்காது, நடைமுறையைக் கோராது, போராடாது பேசிக் கொள்ளும் வகையாறுகள் தான் எவ்வித குறிக்கோள்களுமின்றி இருக்க முடிகின்றது. சமூகத்தின் உயிர் ஓட்டமுள்ள எல்லாப் பிரச்சினைகளிலும் பொது நீரோட்டம் ஒன்றை ஆணும் சரி பெண்ணும் சரி வந்தடைய இந்த வர்க்கச் சமுதாயத்தில் ஒருக்காலும் முடியாது. எல்லா முரண்பாடுகளும், எல்லா கோரிக்கைகளும் வர்க்கச் சமுதாயப் பிளவுகளால் எதிர்நிலைப் போராட்டத்துக்கு உட்பட்டுத்தான் யதார்த்தத்தில் உள்ளது. பெண் விடுதலைப் போராட்டம் ஆண் - பெண் வேறுபாடின்றி ஒரே தளத்தில் நடப்பதுடன் பொதுவாக ஆண் சார்பு நிலைக்கு எதிராக நடக்கின்றது. இங்கு விரோதப் போக்கை இல்லாது ஒழிக்கும் கற்பனைகளில் அல்ல. மாறாக, ஆணாதிக்கக் கருத்து நிலைக்கு எதிராக, அதன் ஆதிக்கப் பிரிவுகளுக்கு எதிராக வர்க்க விரோதத்துடன் தனது அதிகாரத்துக்காகப் போராடக் கோருகின்றது உண்மையான பெண்ணிலைவாதம்.

ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் சமூகத்தின் அனைத்து முரண்பாடுகளுக்கும் வெளியில் நடக்க முடியும் என்பது கற்பனையான கருத்துமுதல்வாதம். ஏனெனின் முரண்பாடும், வர்க்கப் பாதையும் இன்றி யதார்த்தம் இருப்பதில்லை. அது போல் யதார்த்தத்தை ஒட்டி நடைமுறை இருப்பதால் அனைத்து முரண்பாடுகளும் ஆணாதிக்கத்துக்குள்ளும் எழுகின்றது.

அதாவது பெண் விடுதலை என்பது மற்ற முரண்பாடுகளுக்குள் புதைந்து போயுள்ளது. பெண் ஒடுக்குமுறை மற்ற முரண்பாடுக்கு வெளியில் உருவானதல்ல. சுரண்டல் எப்போது தொடங்கியதோ அப்போதே பெண்மீதான ஒடுக்குமுறை தொடங்கியதுடன், அதன் வேறுபட்ட பண்பியல் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் இணைந்து கொண்டன. பெண்ணியவாதிகள் எனக் கூறிக் கொள்ளும் பலர் சுரண்டலைப் பேசுவதில்லை என சபதம் எடுத்துதான் பெண்விடுதலை பேச முனைகின்றனர்.

அதாவது பெண் எப்படி ஒடுக்குமுறைக்குள் உள்ளாக்கப்பட்டாள் என்ற வரலாற்று இயங்கியலை மறுத்து இயங்கியல் மறுப்பை முன்வைத்து உண்மையைப் பார்க்க மறுக்கின்றனர். பின் எம் ஒடுக்குமுறைக்கு எதிராக நாம் ஏன் போராடக் கூடாது எனக் கேட்பதன் மூலம் பெண்விடுதலை பேசுவதாகப் பாசாங்கு செய்கின்றனர். இங்கு இவர்கள் ஆணாதிக்கவாதிகளிடம் சலுகைகளைக் கோரிப் போராடுகின்றனரேயொழிய ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டப் போராடுவதில்லை.

ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமாயின் அது ஆணாதிக்கச் சுரண்டல் சமூகத்துக்கு எதிராகப் போராடும் ஒரே ஒரு பாதையில் மட்டும் நிகழ்வதாக உள்ளது. ஏனெனின் பெண் ஒடுக்குமுறை என்பது சுரண்டலைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடங்கியதில் இருந்துதான் உருவானது. மருத்துவர் போல் அடிப்படைக் காரணத்தைத் தெரிந்து மருத்துவம் செய்வது போல் ஆணாதிக்கத்தை ஆராய மறுக்கும் அரசியல் நோக்கம் கபடம் நிறைந்தது.

இன்றைய சுரண்டல் சமுதாயத்தைப் பற்றி கேள்விகேட்காத அமைதிப் பெண்ணியவாதம் பேசி சலுகைகள் கேட்பதன் மூலம், தொடர்ந்து ஆணாதிக்கச் சுரண்டலுக்குள் ஆணாதிக்கச் சலுகை பெற்று ஆணாதிக்கச் சமுதாயத்தைக் காப்பாற்ற கனவான நனவுகளுடன் செயல்படுகின்றனர். இதுதான், வேறுபாடுகளைக் களைந்த பெண்ணிய அமைப்புகளை வர்க்கம் கடந்து முன்வைக்கின்றனர்.

வர்க்கச் சமுதாயத்தில் வர்க்க எல்லை தாண்டாத நிலையில், வர்க்கம் கடந்த போராட்டம் நடத்த வேண்டும் என்பது நஞ்சுத்தனமான ஆணாதிக்க முன்மொழிவாகும். பெண்விடுதலையைக் கோரிப் போராடும் போது ஆணாதிக்க சுரண்டலை இனம் கண்டு அதற்கு எதிராக வர்க்க எல்லைக்குள் போராடுவதன் மூலம், எந்த வர்க்கம் பெண் ஒடுக்குமுறையின் காரணமாக யதார்த்தத்தில் நடைமுறையில் உள்ளதோ, அதை ஒழித்துக் கட்ட நடைமுறையில் போராடுகின்றது.

நாம் இந்தப் பெண்ணியவாத ஆணாதிக்கவாதிகளின் அடுத்த கூற்றைப் பார்ப்போம். "ஏனைய பல இசம்கள் தரமுடியாததைப் பெண்ணியவாதம் தரமுடியும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகின்றோம். இவற்றில் அநேகமானவை மனித குலத்தின் பாதியை மறந்தன அல்லது புறக்கணித்தன" என்று தமது ஆணாதிக்க இஸத்தை முன்வைக்கின்றனர். இந்த ஆணாதிக்க இசத்தைப் பார்ப்போம்.

பெண்ணியவாதம் எப்படி தனியாக ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்டும் எனக்கூற முடியாத வார்த்தைப் புரட்சிதான், ஆணாதிக்க இஸமாக வெளிவருகின்றது. பெண்ணியவாதம் எப்படி எங்கிருந்து சமுதாயத்துக்குள் புகுந்துகொண்டது? ஆணாதிக்கச் சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட மனிதர்கள் மீதான ஒடுக்கு முறைகளின் மீது பிறக்கும் போராட்டம், அதன் இருப்புகளைக் கேள்விக்குள்ளாக்குவதன் ஊடாக, அதற்கு எதிரான போராட்டத்தில் மட்டும்தான் பெண்ணியவாதம் இருக்கமுடியும். இதை முன்வைக்காத பெண்ணியவாதம் உண்மையில் ஆணாதிக்கப் பெண்ணியவாதமாக உள்ளது. மற்றைய இசங்கள் தரமுடியாததைப் பெண்ணியவாதம் தரமுடியும் என்கிற போது, எதைக் குறித்த தாக்குதலாக வெளிவருகின்றது என்பதை ஆராய்வோம்.

**பெண் விடுதலையை முன்வைத்த ஒரே கோட்பாடு மார்க்சியமாக உள்ளது.** மற்ற எல்லாப் பெண்களுக்குச் சலுகைகளைக் கோரினவே ஒழிய பெண் விடுதலையை அதன் தொடக்க (ஆரம்ப) ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் கோரவில்லை. அத்துடன் பெண்ணியவாதம் எங்கும் எந்தப் பிரிவும் தனித்துவமான கோட்பாட்டை மற்றவற்றில் இருந்து சுயமாக வைத்ததில்லை. வைக்காத நிலையில் வம்பளப்பதற்குப் பின்னால் உண்மையில்




பாதுகாக்க முனைவது பூர்சுவா கோட்பாடுகளையே. மார்க்சியம் அதை விமர்சித்து அதன் பூர்சுவாத்தனத்தை அம்பலப்படுத்தும் போது, அது தனித்துவமான பெண்களின் பெண்ணியக் கோட்பாடு என புலம்புவதும், பாதுகாக்க முனையும் போது எழுவதே, இந்தத் தனித்துவச் சுதந்திரமான பெண்ணியல் கோஷங்கள் கோட்பாடுகள்.

மார்க்சியம் சரிபாதி பெண்களின் விடுதலையைப் பேசவில்லை என்று மறைமுகமாகக் கூற முனைவது சுரண்டல் வர்க்கத்தைப் பாதுகாக்க முனையும் போக்கில், பூர்சுவா வர்க்கக் கோட்பாட்டில் பெண் விடுதலை என்ற பெயரில் முன்வைக்கும் ஆணாதிக்க நனவுகளில் முளைத்தெழுகின்றது.

மார்க்சியம் மட்டும்தான் பெண்விடுதலையைச் சரியாக இனம்காட்டுவதன் ஊடாக, அதை ஏற்றுக் கொண்ட பெண்கள் அமைப்பு மட்டும்தான் பெண்ணியவாத நிலைப்பாட்டில் மிகச்சரியாகவும், ஆராய்ந்தும் போராடுகின்றது. ஏனெனின் பெண் ஒடுக்குமுறை ஆணாதிக்கச் சுரண்டல் சமுதாய விளைவுகளாக உள்ளதால் அதை எதிர்த்துப் போராட்டத்துக்கு வெளியில் பெண் விடுதலை சாத்தியமில்லை. இதற்கு வெளியில் பெண்ணியவாத இசங்கள் எல்லாம் சுரண்டல் சமுதாயத்தைக் கேள்விக்குள்ளாக்கி போராடாத சமரசச் சலுகைக்காக, ஆணாதிக்கச் சமூகத்திடம் கையேந்துகின்றன.

மார்க்சியம் மட்டும்தான் சமுதாயத்தின் எல்லா முரண்பாடுகள் மீதும் முரண்நிலையின்றி பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக, நியாயமாக யதார்த்தத்தில் நடைமுறையில் போராடிக் கொண்டிருக்கும் ஒரேயொரு தத்துவமாக, போராட்ட அமைப்பாக உள்ளது. இதை யாராலும் மறுக்க முடியாது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 28. மார்க்சியமல்லாத பெண்ணியவாதிகளின் மௌனத்தின் பின்னால்

பெண்ணியவாதியாக **டயானா** காட்டப்பட்ட நிலையில், பெண்ணியல் வாதிகளின் மௌனம் அதை அங்கீகரிப்பது ஏன்? நடைமுறை ரீதியாக, கோட்பாட்டு ரீதியாக, வேறுபாடற்ற ஏகாதிபத்தியப் பெண்ணியத்தையே பெண்ணியமாகக் கருதும் வரை, மௌனம் அதன் அரசியல் பண்பாகின்றது. யார் இந்த டயானா? ஒரு கவர்ச்சிக்கன்னி, ஒரு மொடலிஸ்ட், ஒரு பணக்காரச் சீமாட்டி, ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தைக் கோரிய பெண்.

உலகப் பத்திரிக்கைகள் மக்கள் முன் டயானாவின் மரணம் தொடர்பான செய்திகளை வெளியிட்டன. இந்த வகையில் **வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, சரிநிகர், தொழிலாளர்பாதை, வெளி** என அனைத்துப் பத்திரிக்கைகளும் ஒரே விதமான ஆறுதல் ஒப்பாரிகளை முன்வைத்தபோது தான், இந்தப் பத்திரிக்கைகளின் ஒரே அரசியல் நிலைப்பாடு அப்பட்டமாக நிர்வாணமாகத் தெரிந்தது.

அஞ்சலிகளின் பின்னால் டயானாவை ஒரு பெண்ணியவாதியாகவும், சமூகச் சேவகியாகவும் முன்னிறுத்திய போது, மார்க்சியமல்லாத அனைத்துப் பெண்ணியவாதமும் தலையாட்டி அங்கீகரித்தது. உலகளவில் டயானாவைப் பெண்ணியவாதியாகக் காட்டியதுடன் நடைமுறைவாதியாகவும் காட்டி கட்டமைக்கப்பட்ட பிரச்சாரக் கோட்பாடுகள் மீதான மௌனம், பெண்ணியவாதிகளின் அரசியலின் ஒற்றுமையை டயானாவுடன் கொண்டு இருப்பதை அம்பலப்படுத்தியது. அந்தவகையில் எல்லாப் பெண்ணியவாதமும் டயானா பற்றிய நிலைப்பாட்டைத் தெரிவிப்பதனூடாக, தமது அரசியலையும் பெண்ணியத்தையும் தெளிவாக்குவது அவசியமாகும்.

சரிநிகர்: 130-இல், **ரத்னா** என்பவர் "பரந்துபட்ட உலகமக்கள் டயானாவின் மூலமாக ஒரு பழம் பெருமிதம் உடைபடுவதைக் கண்டார்கள். அவர் இன்னொரு திரேசாவாக (தெரசா) இயங்குவதை வரவேற்றார்கள். அன்று





முதல் இன்றுவரை பெண் என்ற ஒரே காரணத்துக்காகச் சமூக, கலாச்சார ரீதியான துன்பங்களை அவள் எந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்த வகையிலும் சரி அனுபவித்தேயாக வேண்டும். ...ஒரு பெண் என்ற விதத்தில், தான் விரும்பியபடி வாழ்வதற்கு அவருக்கு இருந்த நெருக்கடிகள் வேறெந்தப் பெண்ணுக்குமிருந்த பொதுவான நெருக்கடி தான். ...இந்த வகையில் இரக்கச் சுபாவமும், பிறருக்கு உதவும் மனப்பான்மையும் கொண்ட டயானா என்ற பெண்ணின் மரணத்தில், இரத்தக்கறை ஆணாதிக்கச் சமூகத்தின் கைகளில் படிந்திருப்பது மறுக்க முடியாததே" என்று எழுதியுள்ளார்.

அதே சரிநிகரில் **நாசமறுப்பான்** என்பவர் "டயானாவின் இறப்பு எமக்கு ஏற்படுத்திய அதிர்ச்சியும் **இளவரசர் ஹாரி** தேவாலயத்தில் விம்மி விம்மி அழுததும் எமது நெஞ்சை உருக்கி விட்டன. இக்கவலைக்கு மத்தியில் ....." என்று எழுதியுள்ளார்

அதே சரிநிகரில் மேலும் **ஆழ்வார்க்குட்டி** என்பவர் "அவர் நேர்மையாக இருந்தார். தனது வேரிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள முயலவில்லை. அவரால் அது முடியவுமில்லை. அரசக் குடும்பத்தின் போலி கௌரவத்திற்கும், விறைப்புக்கும் அவர் அடிபணியவில்லை. .....மிகவும் சாதாரணமான ஒரு பணக்காரச் சீமாட்டியாக அவர் வாழ்ந்துவிட்டுப் போயிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம். அவரது துன்பியல் முடிவுக்காக அனுதாபப்படலாம். அரசக் குடும்ப அங்கத்தவராகிவிட்ட பின்னரும் டயானா சாதாரண மக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அவர்களுடன் சுமூகமாகப் பேசினார். அரச மிடுக்கு அவரிடம் இருக்கவில்லை. சாதாரண மக்களைத் தொட்டுப் பேசினார்" என சரிநிகரில் பல ஆறுதல் ஒப்பாரிகளை முன்வைத்துப் புலம்பியிருந்தது. **யமுனா ராஜேந்திரன்** என்பவர் ஈழமுரசு 30-09-1998, 06-10-1998 இதழ்களில் இரட்டை வேடம் போட்டுப் புலம்பும் பகுதியைப் பார்ப்போம்.

"அன்னை தெரேசா பற்றி நிறைய அதிதீவிர இடதுசாரி விமர்சனங்கள் உண்டு. எந்தவிதமான விமர்சனமற்ற வலதுசாரி துதிப்பாடல்களும் உண்டு" எனக் கூறி நடுநிலையாகக் கூறுவது போல் பாசாங்கு பண்ணி "அன்னையைப் பரிவான கண்ணோட்டத்துடன் அணுகியவர்களே பெரும்பான்மையான இந்திய இடதுசாரிகள். அன்னையினுடைய செயல்களின் விளைவுகளை அரசியல் ரீதியில் பார்க்கத்தான் வேண்டும். ஆயினும் அன்னை தெரேசா அரசியல்வாதி இல்லை. அரசியலால், போரினால் பிளவுண்ட உலகத்தில் வாழநேர்ந்த தியாகச் சிந்தையுள்ள தெரேசா அன்னையின் அந்தரங்கச் சுத்தியைச் சேவா மனத்தை நிச்சயமாகச் சந்தேகிக்க முடியாது" எனக் கூறி அவரைப் புனிதர் எனப் பிரகடனம் செய்த யமுனா, டயானாவைப் பற்றிய தனது கருத்தில் "அவர் வெறுக்கத்தக்க மனுஷியாக வாழவில்லை. பரிதாபத்துக்குரிய ஜீவனாகவும், முடியாட்சி குறித்த பிரம்மை உடைத்தவராகவும், புனித வழிபாட்டுக்குரிய உருவமாகவுமே (ICON) அவர் காணப்பட்டார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“அவரோடு ஒப்புநோக்கத்தக்கவர்கள் வரலாற்றில் முன்பும் இருந்தார்கள். பின்பும் இருப்பார்கள். மர்லின் மன்றோ, ஜாக்குலின், ஒளாஸில், எலிட்பா, ஸின்டி, கிராட்போர்டு, மடோனா போன்றவர்கள் இவ்வாறு புனித வழிபாட்டு உருவங்களாக ஆனார்கள்.

தமிழகத்தில் நாம் ஜெயலலிதாவையும் இவ்வகையில் நோக்கமுடியும். ஐரோப்பிய மதிப்பீடுகளின்படி குடிமக்கள் மனோநிலையுடன் (Republican) விடுதலைக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டார். தொழிற்கட்சியை ஆதரித்தார். வெகுஜனங்களின் பார்வையில் வெறுக்கப்படக்கூடிய எந்தத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை. செயல்களையும் அவர் மேற்கொள்ளவில்லை” என யமுனா டயானாவையும் தெரேசாவையும் மக்கள் முன் மாய மயக்க வழிபாட்டுப் பிரமைகளைத் தமிழில் விதைத்ததன் நோக்கம், இந்த உலகக் கட்டமைப்புக்குச் சேதம் ஏற்படக்கூடாது என்ற ஒரே காரணத்தைத் தவிர வேறு ஒன்றுமல்ல.

இலண்டன் வெளி: 2-இல் “டயானா சமூகசேவகியாக வலம் வரத்தொடங்கினார். மிதிவெடிகளுக்கு எதிரான இவரது பிரச்சாரம் உலகளாவிய ரீதியில் அவருக்குப் பாராட்டைத் தேடித் தந்தது.”

அதே இதழில் ஒரு கவிதையில் “காலனித்துவக் கொள்ளையரைக் கரம்காட்டி எதிர்த்தாய் பெண்ணின் உரிமைக்காய் முடி துறந்த மன்னர்கள் விழிபிதுங்கி நிற்க மானுடம் காக்க மனிதரை நேசிக்க எதையும் செய்வேன் என்றாய் ..... ” எனப் பலவாறாக பல பல பத்திரிக்கைகள், பிற்போக்குக் முற்போக்குகள் எல்லாம் ஒன்றையே முரண்பாடின்றி எழுதிய போதுதான், இவர்கள் தத்தம் சொந்த அரசியல் முகம் ஒன்றே தான் என்பதை இனம் காட்டினர். இவர்கள் டயானா குறித்து பொதுவாக

1. அரசக் குடும்பத்தை எதிர்த்தார் என்கின்றனர்.

2. பெண் விடுதலையைக் கோரினார் என்கின்றனர்.

3. மனிதநேயத்தை நேசித்தார் என்கின்றனர்.

4. ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் குரல் கொடுத்தார் என்கின்றனர்.

5. ஒரு சமூகச் சேவகி என்கின்றனர்.

6. பழைய காலனியாதிக்கத்தை எதிர்த்தார் என்கின்றனர்.

7. தரைக்கண்ணிவெடி, யூகோசிலோவாக்கியா யுத்தம் மற்றும் வறுமைப்பட்ட பிரதேசத்துக்குச் சென்று மக்களுக்காகப் போராடினார் எனப் பலப்பலவாக இனம் காட்டுகின்றனர்.



டயானா கொல்லப்பட்டவுடன் ஏகாதிபத்தியச் செய்தி நிறுவனங்கள், தொடர்புச் சாதனங்கள் எதை எல்லாம் ஒப்பாரி வைத்தனவோ, அதை எல்லாம் கூட்டி அள்ளி வாந்தி எடுத்து வைத்துள்ளனர் (ஏகாதிபத்தியத்தின் கம்யூனிச எதிர்ப்பை மீள வாந்தி எடுப்பது போல்), இன்றைய முற்போக்குகள் எனக் கூறிக் கொள்வோர். ஆணாதிக்கத்தை ஒழிக்கப் புறப்பட்ட பெண்ணியவாதிகளின் மௌனம் மற்றும் அங்கீகாரத்துடன் கூடிய அபிப்பிராயங்கள் எல்லாம் சோரம் போனபோது, மக்கள் மீளவும் ஒருமுறை நிர்வாணமானார்கள். ஏகாதிபத்தியத் தலைவர்களும் இந்த முற்போக்குகளும் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்.

டயானா யார்? டயானாவுக்கும் மக்களுக்கும் இடையில் என்ன உறவு இருந்தது? என்ற கேள்விகளை சொந்த மூளையுடன் ஆராயும் சொந்தப்புத்தி உள்ள மனிதன் புரிந்து கொள்வான். யார் இந்த டயானா என்று?

ஒரு கவர்ச்சிக்கன்னி, ஒரு மொடலிஸ்ட், ஒரு பணக்காரச் சீமாட்டி, ஏகாதிபத்தியப் பண்பாட்டைக் கோரிய ஒரு பெண். இதை மூடி மறைக்க வேடமிட்ட ஒரு பம்மாத்துப் பொம்மை. இது தான் டயானாவின் உண்மை முகம்.

டயானா நேர்மையானவர். எதில் நேர்மையானவர் என்று சொல்ல முடியுமா? டயானாவின் ஆடம்பரக் களியாட்டக் கொட்டடிப்புகளுக்குத், மக்களைத் தொட்டு வித்தை காட்டவும் எல்லாம் எப்படிப் பணம் வந்தது? இந்த உயர்குடிச் சீமாட்டிகள் நேர்மையாக உழைத்தனரா? எங்கே? எப்போது? உழைத்துக் கை கால் தேய்ந்தது? மக்களின் வயிற்றைக் கொள்ளையடித்து, அதில் தான் டயானாவின் எல்லா ஆர்ப்பாட்டமும், ஆடம்பரமும் நடந்தன. இதை மறுக்க முடியுமா? அப்படியாயின் எதற்கு உங்களின் இந்த உடன்சலிப்புகளும், பழஞ்சலிப்புக்களும். டயானாவுக்குத்தான் நேர்மை கிடையாது, அதை எழுதிய நீங்கள் நேர்மையாகக் கூறுவீர்களா? முடியாது. ஒருக்காலும் உங்களால் முடியாது.

ஏழைகளை அதாவது மக்களைத் தொட்டுப் பழகினார். அவர்கள் உடன் ஏதேதோ செய்தார் என்கின்றீர்கள். நீங்கள் கனவு காண்கிறீர்களா? எம்.ஜி.ஆர், பிரேமதாசா முதல் இப்படி எத்தனை பேர். ஏன் உலக அழகுராணிகள் எத்தனை பேர் இதே வேஷம். இதே நாடகம். ஏன் சி.என்.என். (C.N.N.) தொலைக்காட்சி உரிமையாளர் நலிவுற்ற மக்களுக்கு 100 கோடி டொலரை ஐக்கிய நாட்டுச் சபைக்கு வழங்கியபோது உலகம் மூக்கில் கைவைத்தது. அண்மையில் உலகப் பன்னாட்டு நிறுவன உரிமையாளர் ஒருவர் கூறும்போது “எனது மூளை முதலாளித்துவச் சிந்தனையுடையது. எனது நடைமுறை சமூக ஜனநாயக வடிவமுடையது” என்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகில் 40 பெரிய பணக்காரர்களில் ஒருவனும் சி.என்.என். என்ற நிறுவனத்தின் சொந்தக்காரனுமான (TED TURNER) ரெட் ரீயுனர் 100 கோடி டொலர் பணத்தை ஐ.நா. சபையின் மனிதச் சமூக நலச் சேவைக்கு வழங்கி உள்ளார். சி.என்.என். மாத இலாபம் ஐ.நா.வின் ஒருவருட நிர்வாகத்துக்குப் போதுமானது. உலகை ஆட்டிப்படைக்கும் இந்தக் கூத்தாண்டியை உலகப் பொலிஸ்காரத் தலைவன் கிளிண்டன் பாராட்டியதுடன், இதைப் போல் செய்ய வேண்டும் என வேறு பலரையும் கோரியுள்ளார்.

உலகை ஆள்வதற்காகக் கூட்டாக ஆக்கிரமிப்பை மூடி மறைத்து ஜனநாயகக் கம்பளம் விரிக்கும் சி.என்.என். போன்ற செய்தி அமைப்புகளிடம் குவியும் கொள்ளைப் பணம், மூன்றாம் உலக நாடுகளை ஆக்கிரமித்து சூறையாடியவையே. இதில் ஒருபகுதியை மீளக் கொடுப்பதன் மூலம், அவர்கள் மீதான சிறையை இறுக்க, ஜனநாயக மற்றும் மோசடியூடாகக் கட்டமைக்க முடிகின்றது. அதாவது உலகை மேலும் மேலும் சூறையாட அற்ப எலும்புத் துண்டுகளை அள்ளி வீசுவது அவசியம். இதைச் செய்வதன் மூலம் டயானா போல் வேஷம் போடுவது, சூறையாடியது அம்பலமாகாது அடக்கி ஆள முடியும் என்ற கனவு காண்பதுதான் மனித உதவிகளின் பின்னுள்ள கபட நாடகமாகும்.

எல்லோரும் அதாவது மக்களின் உழைப்பைச் சூறையாடும் சொத்துடைய வர்க்கம் மக்கள் பற்றி பேசுகின்றனர். அடிமட்டச் சாதிப்பிரிவுகள் எழுச்சியுற்று எழுந்து போராடும்போது, மேல்மட்டத் தலைவர்கள் சமபந்தி முதல் எல்லா வேஷமும் போடுகின்றனர்.

நாம் வாழ்க்கை முழுக்க இந்த வேஷங்களை அடிக்கடி காண்கின்றோம். டயானாவின் வேஷமும் இதைத்தாண்டியது அல்ல. அந்தச் சீமாட்டி போடும் உடுப்பின் விலை கூட அவர் தொட்ட ஆப்பிரிக்க மனிதனின் பல ஆயுள் உழைப்புக்குச் சமமாகும். ஏன் டயானாவால் ஒரு சாதாரண மனிதனாக மாறமுடியவில்லை? அந்த மனிதனுடன் சேர்ந்து போராட முடியவில்லை. உழைத்துக் களைத்தபடி ஒரு வயிற்றுக் கஞ்சிக்காக நிலத்தில் கை ஏந்தி நிற்கும் மனிதன் எப்போதும், வான் வரை உயர்ந்து நின்று மக்களின் உழைப்பைச் சுரண்டி சூறையாடி வாழ்ந்த டயானாவை எட்டிப் பார்க்க முடியாது. இந்த அற்ப மனிதர்கள் டயானாவின் விளையாட்டுப் பொம்மைகளாகக் கைகளில் சிக்கியவை தான். இந்த விளையாட்டுக்குள் சிக்கும் ஏழைகள் மூலம் பணக்காரச் சீமாட்டிக்குப் புகழும் அந்தஸ்தும் கிடைத்தன. அதனால் தான் இந்த வேஷம் தேவைப்படுகிறது.

உலகில் கொள்ளைக்கார ஏகாதிபத்தியங்கள், காலனிகளை வைத்திருந்த போது புகையிரத (புகைவண்டி) தண்டவாளங்களை அமைத்தது முதல் இன்று தன்னார்வக் குழுக்களை விதைப்பது வரை எல்லாம் சேவையாகிவிடுமா?



இல்லை. இங்கு சேவைக்குப் பின்னால் கொடூரமான கைகள், நோக்கங்கள் தான் உள்ளன. அதுமட்டும் தான் உண்மையானவை.

டயானா அரசக் குடும்ப முரண்பாடு முற்போக்கான திசைவழிப்பட்டதா? அவரின் நடவடிக்கை பெண்விடுதலை வழிப்பட்டதா? வழிப்பட்டது தான் என ஏகாதிபத்தியச் சக்திகளில் இருந்து ஒப்பாரி வைக்கின்றனர் முற்போக்கு வாதிகளும் பெண்ணியவாதிகளும்.

டயானாவுக்கும் அரசக் குடும்பத்துக்கும் இடையிலான முரண்பாடு எந்த வகைப்பட்டது என ஆராயின் ஏகாதிபத்தியப் பெண்ணியத்துக்கும் (முதலாளித்துவத்தை உள்ளடக்கிய) நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க மதவாதத்துக்கும் இடையிலானதே. டயானா நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க மதவாதத்துக்குப் பதிலாக ஏகாதிபத்தியப் பெண்ணியக் கலாச்சாரத்தைக் கோரினார். இதுதான் டயானாவின் அரசக் குடும்ப மோதலாகும். இங்கு பெண்ணியம் கூட ஏகாதிபத்தியப் பெண்ணியத்தைக் கோரியதே ஒழிய, வேறு ஒன்றும் சமூகத்தைப் புரட்ட அல்ல. டயானா ஏகாதிபத்திய இன்றைய உலக மயமாதலில் எது எதுவெல்லாம் பெண்ணியல் மற்றும் சமூகக் கண்ணோட்டத்தில் தேவைப்பட்டதோ, அவை எல்லாவற்றையும் கோரினார் அவ்வளவே. இதற்கு வெளியில் உங்களால் காட்ட முடியாது.

உலக அழகுராணிகள் எதை எதையெல்லாம் செய்ய வேண்டுமென ஏகாதிபத்தியம் வழிகாட்டுகின்றதோ அதையெல்லாம் டயானா செய்தார். ஓர் அழகியாக, ஒரு மொடலாக, ஒரு விபச்சாரியாக, வேஷம் போடுபவராக, ஆட்டம் போடும் ஒரு பணக்காரச் சீமாட்டியாக எல்லாமுமாக எதுவெதுவாக இருக்கமுடியுமோ அப்படியே இருந்தார்.

அடுத்து கண்ணிவெடிக்கு எதிராக, யூகோசிலாவியா யுத்தக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார் என்கின்றனர். அதாவது, அமெரிக்கா அணுகுண்டுத் தடைக்குக் கையெழுத்து கோரியது போன்றதும், உலக ஆளும் அரசு தலைவர்கள் கண்ணிவெடிக்கு எதிராகக் குரல் கொடுத்தது போன்றதும் தான் டயானாவின் புலம்பல் நாடகம். பத்துக்கோடி செவ்விந்திய மக்களைக் கொன்று ஒழித்து உருவாக்கிய அமெரிக்காவின் இன்றைய தலைவர்கள், அதை உலகளவில் இன்று செய்தபடி, பழைய அமெரிக்க வரலாற்றுக்குச் செவ்விந்திய மக்களிடம் மன்னிப்பு கேட்பது போன்றதே இவை. செவ்விந்திய மக்களை அழித்து முடித்தபின் பூசி மெழுகி விட முயலும் மோசடிகளின் தொடர்ச்சிதான் டயானா போன்றோரின் கூத்துகள்.

ஆயுதத்தைச் செய்தவன், யுத்தத்தை நடத்துபவன், வன்முறையைக் கையாள்பவன், அடக்குமுறையைக் கையாள்பவன், பயங்கரவாதத்தைச் செய்பவன்தான் அடிக்கடி அதற்கு எதிராகக் குரல் கொடுக்கின்றான். இதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டயானா என்ற அழகி மொடலிஸ்ட் குரல் கொடுத்ததனால் தான், உங்களுடைய ஆணாதிக்கப் பார்வைக்கு ஏற்ப 'நா ஊறப் புல்லரிக்கின்றதோ?'

ஆயுதத்தின் நோக்கம், யுத்தத்தின் நோக்கம் மற்றும் அனைத்தினதும் அடிப்படை நோக்கத்தைக் கேள்விக்கு உள்ளாக்காது, அதன் காரணக் கர்த்தாக்களைப் பற்றி மௌனம் சாதித்து அங்கீகரித்தபடி புலம்பி நடிப்பதில் உலகம் மாறிவிடுமா? இதைத் தூக்கிப்பிடித்து நீங்கள் வைக்கும் ஒப்பாரி உலகத்தை மாற்றி விடுமா? இல்லை. இதைவிட இன்று மனிதர்களுக்காக நாள்தோறும் போராடிப் போராடி, இந்தச் சீமாட்டிகள் பாதுகாக்கும் அரசு நிறுவனத்தால் கொல்லப்படும் மனிதர்கள் இவர்களைவிட டயானாவை ஆயிரம் ஆயிரம் மடங்கு வான் உயர எழுந்து நிற்கின்றனர்.

கால் தூசுக்குக் கூட அருகதையற்ற சீமாட்டி டயானாவைப் பற்றி இன்று புலம்ப ஏகாதிபத்திய உலகம் உள்ளது. ஆனால் மக்களுக்காக, அவர்களுக்காகவே இறக்கும் ஆயிரம் ஆயிரம் மனிதர்களை நினைவு கொள்ள ஓர் உலகம் இல்லைதான். அதனால் தான் டயானாவைப் பற்றி ஒப்பாரிகள் புலம்பல்கள் நிரம்பிப் போயுள்ளது. ஆனால் வரலாறு மக்களின் வர்க்கப் புரட்சிகளால் ஆனது. அது இந்த அழுக்குகளை ஒழித்துக் காட்டும். மக்கள் வரலாறு நிறுவப்படும்.

புரட்சி பேசுகின்ற மார்க்சியக் கம்யூனிசக் கட்சியின் பத்திரிக்கையான 'தொழிலாளர் பாதை' டயானாவுக்கு அஞ்சலி செலுத்திய வண்ணத்தைப் பார்ப்போம். 'தொழிலாளர் பாதை' இலங்கை வெளியீடு: 484-இல், (அக்டோபர் 1997)

"டயானாவின் மரணமும் பிரித்தானியாவின் அரசியல் நெருக்கடியும்" எனத் தலைப்பிட்ட கட்டுரை தலையங்கம் எப்படி டயானாவின் மரணம் அரசுக்கு நெருக்கடி கொடுத்தது என்பதை விளக்கவில்லை. ஆனால் டயானாவுக்கு மறைமுகமாகக் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் வகையில் "எதிர்காலம் எதுவிதத்திலும் உறுதியானது அல்ல. டயானாவின் மரணத்துடன் வெடித்த பலம் வாய்ந்த பொதுஜன உணர்வுகளும் அவை அரசக் குடும்பத்துக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்டமையும் அது முதலாளி வர்க்கம் மீது திரும்பிப் பாயும் சக்தியுடைய பூதம் அடைக்கப்பட்டிருந்த பொத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது" என்று புரட்சியின் பெயரால் 'தொழிலாளர் பாதை' பிரகடனம் செய்து இருந்தது.

டயானாவின் அரசியல் என்ன? என்ன செய்து கொண்டிருந்தார்? என்ற கேள்வியைக் கேட்கவோ, விமர்சிக்கவோ முன்வராத தொழிலாளர் பாதையின் ஒரு பக்கக் கட்டுரையில், மனிதாபிமான டயானாவின் பின் திரண்டோர் முற்போக்குகள் என மறைமுகமாகப் பிரகடனம் செய்துள்ளதுடன், வர்க்கப் புரட்சிக்கு அணிதிரட்டக் கூடிய வகையில் அரசியல் மயமாகி கனிந்து உள்ளது



என பிரகடனம் செய்கின்றனர். அதாவது குடுவையில் இருந்து அரசியல் ரீதியில் டயானாவின் முற்போக்கில் வெளிவந்துள்ளார்கள். எதிர்காலப் புரட்சிக்கு அரசியல் ரீதியில் தயாராக உள்ளார்கள் என அத்தாட்சி செய்கின்றனர். இது தான் தொழிலாளர் பாதையின் புரட்சி வேஷம்.

இப்படி நாம் விமர்சிக்கும்போது யமுனா ராஜேந்திரன் போன்றோர் தீவிர இடதுசாரிகளின் பார்வை எனக் கூறி சேறு அடிக்கும் வழியில் தான், ரொக்சியவாதிகளும் (Trotsky) தீவிர இடதுசாரித்தனம் என சேறடித்து இந்த உலகைப் பாதுகாக்க அதீத பிரயத்தனம் செய்து உச்சநடை போடுகின்றனர்.

காலனியாதிக்க அரசு குடும்ப வடுக்களையோ, அங்கு கொள்ளையடித்த சொத்துக்களைப் பெறுவதிலோ, மக்கள் வரிப்பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ வெட்கப்படாத, ஆடம்பர களியாட்ட ஏகாதிபத்தியக் கலாச்சாரச் சீரழிவுகளைத் தனது வாழ்க்கையாகக் கொண்டு, அதற்குள்ளான சகதிக்குள் நடந்த இழுபறியில் தான் டயானா இறந்தார். இதற்காக ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் ஏன்தான் ஒப்பாரி வைத்து அழுது புலம்ப வேண்டும்? ஒடுக்கப்பட்ட மக்கள் இதை அம்பலப்படுத்தி எதிர்த்து இதைப் போற்றுவோரையும், அதன் எடுபிடிகளையும் வேரறுக்க வேண்டும். இதைப் பெண்ணியம் எனக்கூறும் நடத்தைகளையும் கோட்பாடுகளையும் அதை ஒட்டிய ஏகாதிபத்திய அரசியலையும் வேரறுக்கவேண்டும்.

குறிப்பு: இன்னுமொரு சாக்கடை நாயகியும் ஏகாதிபத்தியங்களின் புகழ்களைப் பெற்றுக் கொண்டவருமான அன்னை **திரேசா,** டயானா போன்று வேறு ஒரு வழியில் அதே சாக்கடைக்காக இயங்கியவர்.

**வறுமை கடவுளின் கொடை** எனப் பிரகடனம் செய்து, உலக ஏகாதிபத்தியத்திடமும், உலகச் சர்வாதிகாரிகளிடமும் கை குலுக்கி அவர்களை மனித நேயவாதிகளாகப் பிரகடனம் செய்து, அவர்கள் கொடுத்த பணத்தில் ஏழைகளுக்குச் சிரமதானம் செய்தார். அதுவும் ஏழைகளை நாயாக நடத்தி மருத்துவ உலகில் எவை தடை செய்யப்பட்டதோ, அதை எல்லாம் அவ்வேழைகளுக்குக் கொடுத்து, பலரைப் பரலோகம் அடைய வைத்தார்.

ஏழைகள் உள்ளவரை தான் தமது பிழைப்பும் நிலைக்கும் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டுதான், ஏழைகளை உருவாக்கும் சமூக அமைப்பைப் பாதுகாக்க அயராது உழைத்தார்.

கிறித்தவ மதம் மனிதனைப் பிளந்து அடக்கி ஆண்ட வெள்ளையின வரலாற்றுத் தொடர்ச்சியில், ஏகாதிபத்தியம் ஏற்படுத்தி வைத்துள்ள இன்றைய வறுமையையும், அதற்கு எதிரான போராட்டத்தையும் தடுக்கத்தான் ஏகாதிபத்தியம், மனித உதவித் திட்டங்களை முன்வைக்க, அதில் புரண்டு எழுந்தவர் தான் **அன்னை திரேசா என்ற நச்சுக்காளான்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 29. உலகமயமாகும் ஏகாதிபத்தியப் பெண்ணியம் பெண் எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்தி வக்கரிக்கின்றது

தமிழில் மொழிப் பெயர்ப்பாக **ரொஸலின்ட் மைல்ஸ்சின்** "உலக வரலாற்றில் பெண்கள்" என்ற முக்கியத்துவம் வாய்ந்த நூல் ஒன்று வெளிவந்துள்ளது. மனித வரலாற்றில் ஆதி மரபுகளை, பண்பாட்டுக் கலாச்சார எச்சங்களை, பழைய இலக்கிய மரபுகளில் இருந்தும், காலனித்துவக் குறிப்புகளில் இருந்தும் பல்வேறு விடயங்களையும் உலகளவில் தொகுத்து, அதை எடுத்துக் காட்டியுள்ளது. பெண் சார்ந்த, பெண்ணின் அதிகாரம் சார்ந்த பல்துறை வரலாற்று ஆதாரங்களை இந்த நூல் தனக்குள் திரட்டியுள்ளது. இந்த அடிப்படையில் மட்டும் சமூகத்தை மாற்றி அமைக்கப் போராடும் அனைவரும், இந்த நூலை நிச்சயமாகப் படித்து தெளிய வேண்டியது அவசியமாகும்.

வரலாற்றில் ஒரு பக்கத்தைத் திரட்டித் தனக்குச் சார்பாக அதாவது இன்றைய உலகமயமாதலில் பெண்ணின் நிலையை நியாயப்படுத்தும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது. மூலதனத்தின் அதிகாரப் பலத்தில் பெண் எதைச் செய்தாலும் அதை ஆதரிக்கும் இழிநிலைக்கு, ஆதாரத்தைத் தேடித் திரட்டியுள்ளது இந்த நூல். இது இன்றைய ஏகாதிபத்திய நுகர்வுக் கலாச்சாரத்தில் பெண்ணின் சீரழிவை நியாயப்படுத்துகின்றது.

கடந்தகால வழிபாடுகள் மற்றும் மரபுகளின் எச்சச் சொச்சங்களில் உள்ள பொருளுக்கும் கருத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஒரு பகுத்தாய்வு முறையில் பிரித்து எடுத்து ஆராய மறுக்கின்றது. பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் இருந்து சமூகத்தையும், அதன் மரபுகளையும் விமர்சனங்களுக்கு உள்ளாக்குவதைத் திட்டமிட்டே மறுக்கின்றது. கடந்த கால மரபுகள், பண்பாடுகள் தொடங்கி இலக்கியம் ஈறாகச் சமூகப் பொருளாதாரத்தைப் பிரதிபலித்த வண்ணம், தனக்குள் கருத்து முதல்வாதத்தை ஆழமாகக் கொண்டே காணப்படுகின்றது. இதை இந்த நூல் பிரித்துப் பார்ப்பதைத் திட்டவட்டமாக உள் நோக்குடன் மறுக்கின்றது. இதைத் துல்லியமாகவே இந்த நூலில் இருந்து ஆராய்வோம்.

("ஆணாதிக்கமும் பெண்ணியமும்" என்ற என் நூல் கி.பி. 2001-இன் நடுப்பகுதியில் எழுதப் பெற்றிருந்தது. அதை வெளியிடுவதில் உள்ள சில நடைமுறை பிரச்சினைகள் ஏற்பட்டதன் காரணமாக இரண்டாம், மூன்றாம் பகுதிகள் காலதாமதமாக வெளியாகின்றது. அதன் இறுதிப்பகுதியில் முக்கியத்துவம் கருதி இந்தக் கட்டுரை இணைக்கப்படுகின்றது.)

"உலக வரலாற்றில் பெண்கள்" என்ற நூல் தனது அடிப்படைத் தத்துவ விளக்கமாகப் பெண் ஏன், எப்படி அடிமையாக்கப்பட்டாள் என்பதை, எதை ஆதாரமாகக் கொண்டு விளக்குகின்றது எனப் பார்ப்போம்.

"சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து, மக்கட் தொகையில் ஏற்பட்ட பெருக்கம், உணவு உற்பத்தி செய்யப்பட்ட முறையில் மாற்றங்களைக் கட்டாயப்படுத்தியது. சிறிது சிறிதாகப் பெண்களின் தோட்டக் கலைக்குப் பதிலாகப் பெருமளவான மற்றும் கூடுதலான தீவிரமான விவசாயம் தோன்றியது" (பக்கம்-82) என்ற புரட்டில் இருந்து தோன்றியதாகும்.

உற்பத்தியை அதிகரிக்க வைத்து இன்றைய வறுமையை ஒழிக்கவே, பசுமைப் புரட்சி தொடங்கிய உலகமயமாகும் உற்பத்திக்குப் போராடுவதாக மார்பு தட்டும் மூலதனத்தின் சொற்றொடர்கள் தான் இது. வறுமைக்குரிய காரணத்தை மூலதனம் மூடிமறைத்து, உலகமயமாதலில் மேலும் மக்களை வறுமைக்குள் தள்ளி வேட்டை ஆடும் அலங்கார வார்த்தைகளே இவை. இதன் கடைக் கொடியில் நின்றே, 8000 ஆண்டுகளுக்கு முன் நடந்த உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு விளக்கம் கூறப்படுகின்றது.

மக்கள் தொகையில் ஏற்பட்ட பெருக்கமே உற்பத்தி முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது எனின், கேலிக்குரியதாக மாறுவது பெண்ணியவாதமாகும். 8000 வருடங்களின் முன் பெண்களின் தலைமையிலான தனிச் சொத்துரிமையற்ற சமூக ஆட்சியே காணப்பட்டது. சில வேளைகளில் ஒரு சில விதிவிலக்குகள் இருந்து இருக்கலாம். ஆனால் ஆணாதிக்கச் சமூகமும் தனிச் சொத்துரிமையும் இருந்ததில்லை. பெண்கள் இனவிருத்தியின் அடிப்படையிலும், உணவை உற்பத்தி செய்து சமூகத்துக்குச் சமூகத் தேவையில் இருந்து பகிர்ந்துண்ண தலைமை தாங்கியதிலும் இருந்து தொடர்ந்து சமுதாயத்தின் மதிப்புக்குரிய மனித ஜீவியாகவே வாழ்ந்த காலமாகும்.

இந்தக் காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் தான் உற்பத்தியை மாற்றியது எனின், பெண்ணின் இனப்பெருக்க ஆற்றலை அடிப்படையாகக் கொண்டே, (அதிக குழந்தைகளைப் பெறுவதால்) பெண்ணை இழிவுக்குள்ளாக்கித் தன்னைத் தானே (பெண் சமூகத்துக்குத் தலைமை தாங்கியதால்) அதாளப் பாதாளத்துக்குத் தள்ளியிருக்க வேண்டும். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்க வரலாறுக்கு முன் வரலாற்றில் அப்படி ஒரு போதும் நடந்ததில்லை. பெண்ணின் அதிக இனவிருத்திதான் அதிக மக்கள் தொகையைப் பெருக்குவதாகக் கூறி, உணவு கிடைப்பதைத் தடுத்த பெண்ணை அல்லது குழந்தையைப் பலியிட்டு இருக்க முடியும். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஆனால் ஏகாதிபத்தியப் பெண்ணியல்வாதம் இப்படி பூச்சூட்டிக் காட்டுவதன் உள் நோக்கம் தெளிவானதுதான்.

கடந்தகால உற்பத்தி முறைகள் இயற்கை கடந்து செயற்கையில் உணவை உற்பத்தி செய்த காலத்தில், உற்பத்தி கருவிகளின் முன்னேற்றம் தற்செயலாகவே எப்போதும் முக்கியமான பங்காற்றியுள்ளது. ஒவ்வொரு கண்டுபிடிப்பும் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு கருவியாக இருந்த போது, மனிதச் சமுதாயத்தில் தீர்க்கமான மாறுதல்கள் நடந்தன. உற்பத்தியில் கருவிகளை உபயோகிப்பதும், உழைப்பின் ஆற்றல் வளர்ச்சி பெற்ற போது, நிலையான சமூகங்கள் நிலைத்து வாழ்வது அதிகரித்தது. உணவைத் தேடும் வடிவம் பெருமளவில் சுற்றுப்புறம் சார்ந்து காணப்பட்டது. இதில் பல முன்னேற்றகரமான உழைப்புக் கருவிகள் உருவானதுடன், நவீனமாகியும் வந்தது.

இந்த நூல் ஆசிரியர் திரித்துக் காட்டுவது போல், மக்கள் தொகை பெருக்கம் உற்பத்தி வடிவத்தை மாற்றி அமைக்கவில்லை. அதிகரித்த மக்கள் தொகை பெருக்கம் உற்பத்தி வடிவத்தை மாற்றி அமைக்கவில்லை. அதிகரித்த மக்கள் தொகை எப்போதும் சமுதாய வளர்ச்சியின் நெம்புகோலாகவே இருந்தது. இரண்டு கைகள் இருந்த வரை சொந்த உடல் உழைப்பு ஆற்றல் சமூகச் சொத்தாக இருந்த வரை, மக்கள் தொகை என்பது சமூகத்தின் ஒரு பிரச்சினையாக என்றும் இருந்ததில்லை. தனிச் சொத்துரிமை தான், மற்றவனின் தேவையைச் சுரண்டியபடி மறுக்கும் போதே மக்கள் தொகை பற்றி கூச்சலிடுகின்றது. சமுதாயத்தின் சமூகத் தேவை எப்படி பகிரப்படுகின்றது என்பதில் இருந்தே, மக்கள் தொகை பற்றிய பிரச்சினை எழுகின்றது.

ஆணாதிக்க அமைப்புக்கு முந்தைய சமுதாயத்தின் தேவையை, சமூகத் தேவையில் இருந்து பெண்ணின் தலைமையில் பகிர்ந்த போது மக்கள் தொகை என்ற பிரச்சினையைச் சமூகம் உணர்வதற்கான எந்த அடிப்படையும் இருந்ததில்லை. இங்கு சுரண்டும் உபரி பற்றியோ, மற்றவனுக்கு மறுப்பது பற்றியோ யாரும் சிந்திக்கவே முடியாத உன்னதமான சமுதாயமாகத் திகழ்ந்தது. நவீன மூலதனம் மக்கள் தொகைப் பெருக்கம் என்று போலியாகவே உலக அறிவியலை ஏமாற்ற வைக்கும் நெருக்கடியை, அன்று ஒருக்காலும் அந்தச் சமூகம் சந்திக்கவில்லை. அது ஒரு பிரச்சினையாக இருந்ததில்லை. இந்தச் சமூகம் பெண்களின் தலைமையில் இருந்ததுடன், சமூகத் தேவையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சமூகம் தான். தனிச் சொத்துரிமை உருவாகாத உன்னதமான காலக்கட்டம் அது.



அந்தச் சமுதாயத்தில் இருந்து மாறி வந்த கால ஓட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டு உழைப்பில் ஏற்பட்ட முன்னேற்றம், உற்பத்தியில் முன்பை விட அன்றாடத் தேவைகளுக்கு அதிகமானதை உருவாக்கியது. இந்த அதிக உணவு பெண்ணின் தலைமையில் சமூகத் தேவையைப் பூர்த்தி (உணவு இல்லாத காலத்தில் அல்லது சூழல் பாதிப்பு ஏற்படும் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் சமூகத் தேவையாகவே) செய்யும் பொதுச் சொத்தாகவே இருந்தது. இந்த மேலாதிக உணவைப் பாதுகாக்கும், பதப்படுத்தும் வடிவங்கள் மேலும் மேலும் மேம்பட்டன.

அதே நேரம் சுற்றுவட்டாரத்தில் வேட்டைக்கு உரிய மிருகங்கள் அருகி வந்தன. வேட்டை ஆடும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், வேட்டையாடுவதில் இருந்து தப்பிக்க மிருகங்களின் இடப்பெயர்ச்சியும், பாரம்பரியமாக உணவு தேடும் ஆண்களின் வழிமுறைகளை நெருக்கடிக்கு உள்ளாகியது. ஆண்கள் பெண்களுடன் தரித்து நிற்கவும், பெண்ணின் உணவு உற்பத்தியில் முன்பைவிட நெருக்கடிக்குள்ளாகியது.

ஆண்கள் பெண்களுடன் தரித்து நிற்கவும், பெண்ணின் உணவு உற்பத்தியில் முன்பைவிட நெருக்கமாகச் சார்ந்து வாழத் தொடங்கிய ஆண், படிப்படியாக விவசாயத்தில் தனது உழைப்பைப் புகுத்தினான். இதனால் பலமான ஆணின் உடல் வலுவும், வேட்டையில் பயன்படுத்திய நவீன உத்திகளும், கண்டுபிடிப்புகளும் விவசாயத்தில் புகுந்த போது, விவசாயம் வேகமான வளர்ச்சியைச் சந்தித்தது. அத்துடன் விவசாய உற்பத்தி விரிந்த தளத்துக்கு மாறிச் சென்றது. ஆணின் வேட்டையாடும் திறன் இயல்பாக விவசாயத்தை அழிக்கும் மிருகத்துக்கு எதிரான தற்பாதுகாப்பு மற்றும் வேட்டை சார்ந்த தாக்குதல் திறன் சமுதாயத்தின் விவசாய உற்பத்தி முறையை விரிவாக்கியது. இருந்தபோதும் இந்த உணவு உற்பத்தி பெண்ணின் தலைமையில் இருந்ததுடன், அது சமூகத் தேவையில் இருந்து பகிரப்பட்டு நுகர்வதே சமூக நடைமுறையாக இருந்தது.

உழைப்புக் கருவிகளின் நவீனக் கண்டுபிடிப்பு இதனால் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பும் இயல்பாக ஆணின் மதிப்பை அதிகரிக்க வைத்தது. ஆணின் உடல் வலிமை, ஆணின் நவீன உற்பத்திக் கருவிகள் ஆணைச் சமூகத்தில் மதிப்புக்குரிய ஒருவனாக மாற்றியது. உணவுத் தேவை என்பது முன்பை விட இலகுவாகவும், தேவையானதைப் பெறுவதையும் உறுதி செய்தது. இந்த நேரத்தில் வேட்டை முற்றாகக் கைவிடப்படவில்லை. மூன்று விதமான உழைப்பில் ஆண்கள் தொடர்ந்து ஈடுபட்டனர்.

1. முற்றாக உழைப்பை விவசாயத்தில் ஈடுபடுத்தினர்.
2. முற்றாக உழைப்பை வேட்டையில் ஈடுபடுத்தினர்.
3. விவசாயத்திலும் வேட்டையிலுமாக உழைப்பை ஈடுபடுத்தினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு விவசாயத்திலும் வேட்டையிலும் ஈடுபட்ட பிரிவே தனிச் சொத்துரிமைக்கான அடிப்படையை நிறுவியது. வேட்டையில் மிருகங்கள் அருகிய போது, அயல் சமூகத்திற்கு இடையில் வேட்டை பொருள் மீதான உரிமை மற்றும் எல்லைக் கோடுகள் நெருக்கடிக்கு உள்ளாகியது. இதனால் கொல்லுவது, யுத்தம் செய்வது ஒரு மரபாக வளர்ச்சி பெற்றது. முன்பு இப்படி நடக்கும் போது கொன்று விடுவதே சமூக நடைமுறை. பின்பு அதை வேட்டையிலும் விவசாயத்திலும் ஈடுபட்ட பிரிவு மாற்றி, தனது விவசாய உழைப்புக்குப் பயன்படுத்த அவர்களைக் கட்டாயப்படுத்தி அடிமைப்படுத்திக் கொண்டு வருவது புதிய நடைமுறையானது.

மிருகங்களை அடைத்து பழக்கி உழைக்க வைக்கும் அனுபவம், அதில் இருந்து கிடைத்த தொடர்ச்சியான அனுபவம் கைதிகள் மேல் ஆழமான அடிமைத்தனத்தை நிறுவ முடிந்தது. சமுதாயத்தில் மனிதனை மிருகமாகக் கருதிய சமுதாய நடைமுறை இதற்குத் துணையாக நின்றது. சிந்திக்கும் ஆற்றல் உள்ள மிருகத்தின் (மனிதன்தான்) உழைப்பை உரிமை கொண்டாடியவனுக்கு உபரியை வழங்கியது. இந்த உபரியைச் சமூகத்தில் பொதுவாக்குவதா? அல்லது தனதாக்குவதா? என்ற போராட்டத்தில் தான், தனிச் சொத்துரிமை பரிணமிக்கின்றது.

இந்தப் புதிய உழைப்பு வடிவத்தைப் பெண்களும், விவசாயத்தில் ஈடுபட்ட ஆண்களும், வேட்டையில் ஈடுபட்ட ஆண்களும் நிராகரித்திருப்பர். மற்ற மனிதனை மிருகமாகவோ அல்லது தன் இனத்தைச் சேர்ந்த மனித இனமாகவோ கருதிய எல்லா நிலையிலும் புதிய சுரண்டல் வடிவம் சமுதாயத்துக்குப் புறம்பானதாக இருந்தால், இயற்கைக்கு எதிராக இருந்தால் கேள்விக்குள்ளாகியிருக்கும். அத்துடன் அடிமைகள் இரத்தப் பலிவாங்கலுடன் கூடிய போர்க்குணாம்சம், இனத்தின் இழப்புகளுக்கு அடிகொலுவானவாக இருந்திருக்கும். கைதி அல்லது அடிமை அங்கிருந்து தப்பிச் செல்கின்ற போது அல்லது பலிவாங்கும் போராட்டத்தில் எல்லாம், சமுதாயத்தின் உறுப்பினர்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாத நிகழ்வாக இருந்தது.

இதனால் சமூகம் அடிமை உழைப்புக்கு எதிரான உணர்வுகளால் அடிமையினதும் அதை வைத்திருந்தவனின் உழைப்பின் உற்பத்தியை ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கலாம். அடிமையை சுரண்டி வாழும் புதிய நடைமுறை சமுதாயத்தின் நடைமுறைக்கு எதிரானதாகக் காணப்பட்டதால் அவை தெளிவான எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கும். இது சமுதாய அமைப்புக்கே முற்றிலும் எதிரான புதிய நடைமுறை. ஆனால் வேட்டை, விவசாயத்தையும் கைக்கொண்ட பிரிவு அதீதமான உழைப்பில் உற்பத்தி திறனைக் கொண்ட பிரிவாக இருந்ததால், மனித இனத்தில் இரண்டாவது தடவையாக உழைப்பு பிரிவினைக்கு வித்திடுவதாக அமைந்தது.

இது எப்படி இருந்த போதும் தனிமனிதனின் குறிப்பான திறமை ஆண் சார்ந்த போது, அவனின் மரபைச் சமூகத்தின் முன் உயர்த்தியது. சமூகத்தின்



உணவுத் தேவையில் தனிப்பட்ட ஆணின் அறிவு மற்றும் உழைப்பின் ஆற்றல் கருவியின் மதிப்புடன் உயரே எழுந்தது. அவனுக்கு ஏற்பட்ட மதிப்பு, அவனின் கடந்தகாலப் வர்க்கத்துடன், மேலும் தனிச் சொத்துரிமை கண்ணோட்டமாக மாற்றுகின்றது.

வேட்டையின் போது தனியாகவும் கூட்டாகவும் வேட்டையாடும் பொருளை, ஆண்கள் அங்கு வைத்தே உண்ணுகின்ற நெடுங்காலத்திய பழக்கம், தனிச்சொத்துரிமைக்குக் குறிப்பாக ஊக்கியாகத் தொழில்பட்டது. வேட்டையின் மிகுதியைக் கொண்டு வருவது அல்லது பாதுகாப்பு கருதி (பிற மிருகங்களின் தாக்குதலுக்கு அஞ்சி) கொண்டு வருவது போக, எப்போதும் ஆண் தனியாக வேட்டையின் போதே உண்டு வாழ்வது ஒரு சமூகப் பண்பாக இருந்தது. இந்தப் பண்பும், கண்ணோட்டமும் விவசாய உழைப்பிலும் கோருவதற்கு அடித்தளம் இட்டது.

விவசாயத்திலும் வேட்டையிலும் ஈடுபட்ட ஆண்கள், வேட்டைக்குச் செல்லும் போது மந்தைகளை மேய்ச்சலுக்கு இட்டுச் செல்லும் நடைமுறை உருவானது. முன்பு பெண்கள் அருகில் இருந்த சுற்று வட்டார மேய்ச்சல் நிலம் சார்ந்து இருந்த போது, உணவுப் பற்றாக்குறையால் அதிக இனவிருத்தி மற்றும் பயன் குறைவாகவே இருந்தது. அதனால் இதை மாற்றிய ஒரு பகுதி ஆண்கள் விவசாயம் தவிர்ந்த நேரத்தில் மேய்ச்சலுக்கு வளர்ப்பு மிருகங்களை நகர்த்திய போது, அதிக பயனையும் மிருக விருத்திக்கும் வித்திட்டது. இது அதிக உபரிக்கு (தனிமனிதன் சார்ந்து) வழி அமைத்தது. உணவுத் தேவையின் பூர்த்தி மற்றும் சமுதாயச் செல்வத்தின் பங்கு அதிகரிக்க, அதிகரிக்க குறித்த ஆண்களின் செல்வாக்கு உயர்ந்தது.

விவசாயம், மேய்ச்சல், வேட்டை என மூன்று தளங்களில் ஆணின் நுகர்வு தனித்துவமாகத் தனியாக மாறுவது மேலும் நுட்பமடைந்தது. இதனால் பலமும், அறிவுத் திறனும், தொழில் நுட்பமும், அனுபவ அறிவும் கூட சிலரிடம் பிரிந்து அதிகரித்தது. மேய்ச்சல், வேட்டை என்ற இரண்டு தளங்களில் குழுக்கள் வேட்டையின் போது சிதறிச் செல்வது மேலும் வளர்ச்சியடைந்தது. இங்கு வேட்டை, மிருகப் பாதுகாப்பு என இரு உற்பத்தியிலும் பிரிவினை உருவானது. மிருகப் பாதுகாப்பின் போது மிருகங்களுடனான போராட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள், அதன் பாதுகாக்கும் உரிமை சார்ந்து தனிச் சொத்துரிமை கண்ணோட்டம் தனிப்பட்ட நுகர்வு சார்ந்து துல்லியமாக வளர்ச்சி பெற்றது. இது தனிச்சொத்துரிமைக் கண்ணோட்டத்தை மேலும் ஆர்வமாக்கியது. விவசாயம் மற்றும் வேட்டையில் இருந்து. மேய்ச்சல் தனியாகப் பிரிவதற்கு இது மேலும் துணையாகியது.

மந்தை வளர்ப்பு அதிக ஓய்வையும், அதிக நுகர்வையும் கொடுத்த போது, சுற்றுச்சூழல் மேலான அறிவைச் சிலருக்குக் குறிப்பாகப் பெற வழிவகுத்தது. இது சமுதாயத்தில் மேலும் ஆழமான மதிப்பைக் குறித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்களுக்கு வழங்கும் ஊடகமாகியது. மந்தை வளர்ப்பு அதிக உபரியைக் (தனிமனிதனுக்குக்) கொடுத்த போது, உழைப்பில் ஏற்பட்ட பிளவு அது சார்ந்து தனிச் சொத்துரிமையை உருவாக்கியது. இந்தத் தனிச்சொத்துரிமை ஆணின் செல்வாக்குக்கு வழிவகுத்தது.

உணவு மீதான ஆதிக்கத்தைத் தனிமனிதன் சார்ந்த ஆணின் உழைப்பு பெற, ஆணின் அதிகாரம் உருவானது. இப்படித் தான் முதன் முதலாக அதிகாரம் வித்திடப்பட்டது. சமுதாயத்தின் தேவை மறுக்கப்பட்ட நிலையில் சில ஆண்களிடம் சமுதாயம் அடிமையாவது தவிர்க்க முடியாத வகையில் உற்பத்தியின் பிளவு வழிகாட்டியது. சமூகத் தேவை மறுக்கப்பட்ட நிலையில், அதற்காகக் கையேந்தும் ஒரு பிரிவாகப் பெண்கள் மாறத் தொடங்கினர். பெண்ணின் உழைப்பு சமூகத்துக்குப் பகிரவேண்டி இருந்ததால், தேவை பூர்த்தி செய்யப்படாத நிலையில் பற்றாக்குறை இயல்பானதாகவும், இயற்கையானதாகவும் இருந்தது. இதனால் ஆணைச் சார்ந்து வாழ்வது ஒரு நியதியாக, அதுவே படிப்படியான ஆணாதிக்க அதிகாரமாகியது. இது தனிச்சொத்துரிமை அமைப்பாகியது.

இதற்கு நேர்மாறாக இந்த நூல் கூறுவதைப் பார்ப்போம். "பெண்கள் அவர்களது இயற்கையான நேசச் சக்தி என்ற முறையில், ஒருவகைப்பட்ட அனுதாப மாயச்சக்தியாக இயற்கையுடன் பணிபுரிந்து வந்தனர். ஆனால் இப்பொழுது ஆண்கள், அவர்கள் நிர்ணயித்ததை வழங்கும்படி செய்வதற்கு இயற்கையை வசப்படுத்தி, அதன் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டியிருந்தது. விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்ட புதிய வழிமுறைகளின் விளைவாக ஆண், பெண் பாத்திரங்களிலும் உறவு முறைகளிலும் அதே போன்று பாதிப்பு ஏற்படுத்தும் (பக்கம் - 82) என்று அடிப்படையற்ற ஒரு விவாதத்தை இப்படி இட்டுக் கட்டமுடிகின்றது.

பெண்களை அடிமைப்படுத்த ஆண்கள் திட்டமிட்டு இயற்கையை மாற்றி அமைத்தனர் என்ற கூற்று, பெண்ணின் இழி நிலையைத் திரிப்பதாகும். இயற்கை மீதான மனித உழைப்பு பெண்ணை அடிமைப்படுத்த உருவானவையல்ல. குரங்கில் இருந்து மனிதனாக மாறிய எல்லா படி நிலைகளிலும், அதன் எல்லா வளர்ச்சி படிநிலைகளிலும் இயற்கை மீதான உழைப்பின் பாத்திரம் தீர்க்கமான முறையில் பங்காற்றுகின்றது. எல்லா உழைப்பின் முன்னேற்றத்திலும், உழைப்புத் திறனிலும் விட இயற்கையை மாற்றுவதன் ஊடாக உணவைத் தேடுவது ஓர் இயங்கியலாக இருந்தது. இது இயங்கியலற்ற வகையில் திட்டமிட்ட வகையில் பெண்ணை அடிமைப்படுத்த ஆண்கள் உருவாக்கவில்லை. ஆண்கள் தமது உழைப்பின் வடிவத்தை மாற்றிய போது கூட, இது திட்டமிட்டு வசப்படுத்தி நடத்தப்படவில்லை.

பெண்கள் எப்படி இயற்கையைச் சார்ந்த இயற்கை மீது உழைத்தும், உழைப்பின் வடிவத்தை மாற்றிய படி வாழ்ந்தார்களோ, அதே போன்றே





ஆண்களும் வாழ்ந்தார்கள். ஆண் பெண்ணை அடக்க வேண்டுமென்றோ, பெண் ஆணை அடக்க வேண்டுமென்றோ உள்ளார்ந்த உணர்வு எதுவுமே இருக்கவில்லை.

இந்த நூல் தொடர்ச்சியாகப் பல இடங்களில் ஆணைப் பெண் அடக்கி வாழ்ந்தாள் என்றும், ஆண் பெண்ணை அடக்கி ஆள விரும்பினான் என்றும் இட்டுக்கட்ட தீவிர முயற்சி எடுக்கின்றது. தனிச் சொத்துரிமை உருவாகும் முன்பு, அனைத்துக் காலங்களிலும் யாரும் யாரையும் அடக்கி ஆளவில்லை. அயல் குழுக்களுக்கிடையிலான மோதல், எப்போதும் மற்றவர்களை மற்றொரு மிருகமாக எண்ணியே நடைபெற்றது. அதனால் நரமாமிச உண்ணிகளாக நீடித்ததன் மர்மம் இதில் தான் அடங்கியுள்ளது.

தனிச் சொத்துரிமை தான் மனிதனை மனிதன் அடக்கும் அனைத்து அடக்குமுறைகளுக்கும் வித்திட்டது. அதாவது உழைப்பின் பயனைச் சமூகத்திடம் இருந்து சுரண்டுவது, பாதுகாப்பது என்ற கண்ணோட்டம் உருவானது. தனிச்சொத்துரிமை அமைப்பு உருவாகும் முன்பு ஆண் விவசாயத்தில் ஈடுபட்ட போதும், மந்தை வளர்ப்பை விரிவாக்கிய போதும் கூட, ஆண் - பெண் முரண்பாடு உருவாகவில்லை. உழைப்பில் ஏற்பட்ட சமூகக் கூட்டுத் தன்மை, ஆண் - பெண் உறவில் இறுக்கத்தையும், ஒன்றாக நெருங்கி வாழும் சமூகத் தன்மையையும் பலப்படுத்தியது. முன்பைவிட சமுதாயத்தின் கூட்டு மனப்பாங்கு மீள ஒருமுறை உயர்வான நிலையில் காணப்பட்டது. பெண் நிலையாகத் தரித்து (தனித்து) நிற்கவும், ஆண் மட்டும் வேட்டையாடச் செல்லும் முறை தொடங்கும் முன்பு, ஆணும் பெண்ணும் குழந்தைகளும் ஒன்றாகவே போராடி வாழ்ந்தனர்.

இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்ட சமுதாய உணர்வு, பின்னால் பெண் தரித்து (தனித்து) நிற்க ஆண் வேட்டைக்குச் சென்று வந்த போது ஒரு முரண் காணப்பட்டது. ஆனால் அது ஒரு சமூகப் பிளவாக ஆகவில்லை. ஆனால் ஆண் - பெண்களின் விவசாயத்தில் உதவி புரிய தன்னை நுழைத்து அதை உழைப்பாக மாற்றிய போது, ஆண் - பெண் உறவில் முன்பைவிட மிகவும் மகிழ்ச்சியான கூட்டான வாழ்வு உருவானது. முன்பு இருந்த காலங்களை விடவும் தேவையான உணவு மற்றும் பாதுகாப்பு கூடிய சமூகப் பண்பு உயர்ந்த சமூக மட்டத்தை அடைந்து விடவில்லை. இதை முற்று முழுதாகக் கம்யூனிச சமூகம் மட்டுமே சாதிக்கும்.

ஆண் மற்றும் பெண்ணின் கூட்டான ஒரே உழைப்பு, சமுதாயத்தின் மதிப்பை உயர்ந்த நிலையில் நகர்த்தியது. பின்னாலும், சம காலத்திலும் உழைப்பில் ஏற்பட்ட பிரிவினையும், அதனால் சமுதாயத்தின் தேவையை மறுப்பதில் தொடங்கிய உபரியின் அதிகரிப்புடன் கூடிய உழைப்பின் பிரிவினையும் வளர்ச்சி பெற்ற போதே சமுதாயப் பிளவுகள் ஒரு நிகழ்ச்சி நிரலாகியது. வேலைப் பிரிவினை சமூகத்தில் உருவான போது, அது சார்ந்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிலருக்கு உணவுப் பற்றாக்குறை உழைப்பு வடிவத்துடனும், சூழலுடன் தொடர்புடையதாக உருவானது. இது பரஸ்பரம் பகிர்வது என்ற நிலை கடந்து, சிலர் தமது உழைப்பை அதன் விளைவையும் தனதாகக் கருதிய போது, உபரி மற்றவனின் உழைப்பைக் கடனாகவும், விலைக்கு வாங்கும் திறனையும் பெற்றது. இது மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டும் நிலைக்கு மாற்றியது. இது பெண்ணுக்கு மட்டுமின்றி சமுதாயத்திடம் இயற்கைக்கு மாறான அனைத்து அடிமைத்தனங்களுக்கும் அஸ்திவாரமாகியது.

விவசாயம் உழுது பயிரிடும் முறை ஆணின் அதிகாரத்தை உயர்த்தியது (பக்கம் - 86) என்ற கூற்று பாலியல் உள்ளடக்கத்தில் திரித்துக் காட்டுகின்றது. ஏர் உழவும் முறை ஆணின் அதிகாரத்தை உயர்த்தியதில்லை. இதை ஆண் மட்டும் சிறப்பாகக் கண்டுபிடித்தான் என்பது அடிப்படையற்ற, ஆதாரமற்ற வாதமாகும். பெண்தான் நிலத்தைப் பயன்படுத்தும் வடிவமாக உழுதலைக் கையாண்டாள். விவசாயத்துடன் தொடர்பற்று இருந்த ஆணால் இதைக் கற்பனையில் கூட நினைக்க முடியாது. பெண்ணின் உழைப்பில் ஆண் பங்குபற்ற (பங்குபெற) தொடங்கிய போது உழும் முறையை ஆண் மேம்படுத்தியிருக்கமுடியும். அவனின் வேட்டை சார்ந்த அறிவும் அது சார்ந்த கருவிகளின் அறிவும் இதற்குள் புகுத்தப்பட்டு இருக்கும்.

உழுதல் என்பது விவசாயத்தில் உற்பத்தி சார்ந்த கலையாக இருந்த போதும், இது உணவு உற்பத்தியை அதிகரிக்க வைக்கவில்லை. பல்வேறு சமுதாயத்தில் அண்மைக் காலம் வரை கூட, நிலத்தை உழுவது என்பது பூ என்ற தாயின் வயிற்றைக் குத்தி கிழிப்பதாகவே கருதப்பட்டது.

அமெரிக்கா கண்டமெங்கும் செவ்விந்தியத் தலைவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய போது உழுவதை எதிர்த்து நின்றனர். இன்று நவீன விவசாயத்தை எதிர்த்த போராட்டத்தில் இதுவும் ஓர் அம்சம். உழுவது ஏன்? உண்மையில் உழுவது என்பது இயற்கை வளத்தை அழிப்பதுடன், உணவுச் சங்கிலித் தொடர் நிகழ்ச்சியையும் அழிக்கின்றது. இதனால் பயிரின் வளர்ச்சி தடைப்படுகின்றது. நிலத்தில் பயிர்களும் உயிரினங்களும் உயிர்வாழும் மண்ணின் பதத்தை உருவாக்க உழுதல் அவசியமில்லை. இது விதிவிலக்கானது மட்டுமே.

ஆனால் உலகமயமாதல் உழுதலை ஒரு நிபந்தனையாக, உற்பத்தியின் திறனுடன் தொடர்பு படுத்துகின்றது. இதையே இந்தப் புத்தகம் காவி (அணைத்து) வருகின்றது. ஆனால் அன்றைய விவசாயி உழுதலை மண் பதப்படுத்தல் என்ற வகையில் விதிவிலக்காகவே கையாண்டான். இயற்கையில் வளப்படுத்த முடியாத நிலத்தின் மீது மட்டுமே இதைக் கையாண்டான். இது ஆண் அதிகாரத்தின் சின்னமாக எப்போதும் இருந்ததில்லை. வளப்படுத்துவதில் பெண்கள் கைதேர்ந்தவர்களாகவே இருந்தனர். அனுபவ ரீதியான அறிவு ஆணிடம் இதன் மேல் இருந்ததில்லை. வளப்படுத்தலுக்கு இசைவான சில





கருவிகளை வேட்டை சார்ந்து ஆண் மேம்படுத்தியிருக்க முடியும். மேம்படுத்தலின் போதும் கூட அது ஆணின் அதிகாரத்தை உருவாக்கவில்லை. சமுதாயத்தின் தேவையை மறுத்த உபரி ஒன்று தான், அதன் மீதான தனிச் சொத்துரிமை தான் பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கியது.

மற்றொரு அபத்தமான வாதத்தைப் பார்ப்போம். "பழங்குடிகள், தானியப் பற்றாக்குறையினாலோ அல்லது பயிர்கள் சரியாக விளையாததினாலோ நிர்ப்பந்தமாக இடம் பெயர்ந்து செல்ல நேரிட்டது. இதனால் குழுக்கள் ஒன்றையெதிர்த்து மற்றொன்று போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது." (பக்கம் - 82) இடம் பெயர்ந்தால் தான் யுத்தங்கள் ஏற்பட்டது என்பது மற்றொரு திரிபாகும்.

ஆரம்பக் காலங்களில் ஒரு குழு மற்றொரு குழுவை ஒரு மிருகமாகவே கருதியது. தன்னையொத்த மற்றொரு குழுவைச் சோந்த ஒருவனைத் தனது குழுவாகக் கருதவில்லை. மாறாக மற்றொரு மிருகக் கூட்டமாகவே எண்ணினான். இதன் போதான மோதலின் முடிவில் கொன்றவரை உண்டு (தின்று) விடுவது சாதாரண நடைமுறையாகவே இருந்தது. மற்றொரு மிருகத்துடன் நடக்கும் மோதலில் சொந்த அணியைச் சோந்தவர்கள் இறக்கும் போது, அவர்களை உண்பதும் ஒரு நடைமுறைதான். உணவு பற்றாக்குறையின் போது முதிர்ந்த சொந்த இனத்தவர்களைக் கொன்றுவிடுவது சமூக நடைமுறையாக இருந்தது. இதை டார்வின் தனது ஆய்வில் நேரடியாகக் கண்டறிந்தவர். இப்படி பல.

அன்றாடம் நடந்த இந்த இடப் பெயர்ச்சியே உலக முழுக்க மனிதன் பரவுவதற்கு வித்திட்டது. இந்த இடப்பெயர்ச்சிகள்தான் சூழலுக்கு முகம் கொடுத்த போது மனித இனத்தின் வெளித் தோற்றத்தில் பல மாறுதல்கள் உருவானது. அறிவின் வளர்ச்சியில் பரந்த தன்மை உருவானது. உணவு பழக்க வழக்கங்கள் முதல் பண்பாடு - கலாச்சாரம் வரை அனைத்தும் வேறுபட்டன.

இதில் இருந்து நிலையாக மனிதன் வாழத் தொடங்கி, உபரி என்ற தனிச் சொத்துரிமை ஏற்பட்ட காலத்தில் நடைபெற்ற இடப்பெயர்ச்சிகள், மற்ற குழுக்களின் வாழ்விடங்களை அபகரிப்பதாகவும் (அதிகரிப்பதாகவும்) தனிச்சொத்துக்களைக் கைப்பற்றுவதாகவுமே இருந்தது. இது வர்க்கப் போராட்டமாகவே இருந்தது. இது உணவுப் பற்றாக்குறையால் நடக்கவில்லை. தானியப் பற்றாக்குறையால் ஏற்பட்டவை விதிவிலக்கு மட்டுமேயாகும். இங்கு கிடைப்பதைப் பகிர்ந்து உண்ணும் கோட்பாடு கடைப்பிடிக்கப்படவில்லை. தானியத்தைப் பெறுவதற்கென்று நடக்கும் யுத்தம் எதிரி மனிதனுக்கு மறுக்கும் கண்ணோட்டம் சார்ந்தாக இருக்கும் போதே, அது தனிச்சொத்துரிமை கண்ணோட்டம் சார்ந்து தான் நடக்கின்றது. அதாவது தானியப் பற்றாக்குறையில் யுத்தம் நடந்தது எனின், தானியத்தைக் கைப்பற்றிய போது அது என்றுமே சமுதாயத்தின் தேவைக்குப் பகிரப்படவில்லை. மாறாக மற்ற சமுதாயங்களை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிமைப்படுத்த, சுரண்டலை அடிப்படையைக் கொண்ட இடப்பெயர்ச்சிகள் பல்வேறு போராட்டங்கள் போன்று ஒரு வடிவம் மட்டுமேயாகும்.

யுத்தங்களின் வரலாறு என்றும் தனிச் சொத்துரிமை அமைப்பில் எப்போதும், வர்க்கப் போராட்டமாகவே இருந்தது இது அடிமை உடைமை என்ற பொருளாதார அடிப்படையைக் கொண்டிருந்தது. இது வெறும் உணவுக்கான போராட்டமாக இருக்கவில்லை. உணவு அதில் ஓர் அங்கம் மட்டுமேயாகும். யுத்தங்களின் அடிப்படையிலான உள்ளடக்கத்தை, தன்மையை மறுத்து ஒரு கூற்றை மட்டும் முதன்மைப்படுத்திக் காட்டுவது இன்றைய யுத்தங்கள் வரை உள்ள பொதுவான திரிபாக உள்ளது. இது போன்றே அன்றைய இடப்பெயர்ச்சி மற்றும் பொதுவான யுத்தங்களையும் நாம் காணமுடியும்.

இடப்பெயர்ச்சியை விளைச்சலின் இன்மையிலும், பற்றாக்குறையிலும் மட்டும் நிகழ்ந்தது என்பது நுட்பமான திரிபாகும். இடப்பெயர்ச்சியில் இதுவும் ஓர் அங்கம் மட்டுமேயாகும். இடப் பெயர்ச்சி சூழலில் சார்ந்து, மனித விரிவாக்கம் சார்ந்து, உள் மோதல் சார்ந்து, மிருகங்களின் அச்சுறுத்தல் சார்ந்து, புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடியும், வளமான பூமியைத் தேடியும் நாடோடி வாழ்க்கையைச் சார்ந்தும், அடிமைகளைக் கைப்பற்றவும், புதிய பிரதேசங்களை ஆக்கிரமிக்கவும், ஒரு குழு ஒரு பிரதேசத்தில் ஊடுருவும் போது அதைக் கைவிட்டு செல்லல் என எண்ணற்ற வழிகளில் இடப்பெயர்ச்சிகள் நடந்தன. ஆனால் இவை அனைத்தும் யுத்தங்களைச் சந்திக்கவில்லை. மாறாக மனிதர்களற்ற, யுத்தமற்ற சூனிய பிரதேசத்திலும், மற்ற குழுக்களின் வரவேற்புடனும் நடந்த இடப்பெயர்ச்சிகளின் போது விதிவிலக்காகவே யுத்தங்கள் நடந்தன.

"ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் நாடோடிகளாகத் திரிந்து சென்றதிலும், போர் செய்ய வேண்டி நேரிட்டதிலும் ஆண்களுக்கே அனுகூலம் ஏற்பட்டது. ஏனெனின் அவர்கள் பெண்களைக் காட்டிலும் மேலான உடல் வலிமை கொண்டிருந்தனர்" (பக்கம் - 83)

நாடோடிகளாக அலைந்து திரிந்ததாலும், போர் செய்ய வேண்டி இருந்ததாலும், ஆண்கள் உடல் ரீதியான வலுவைப் பெற்றதால் ஆணுக்கு அனுகூலம் ஏற்பட்டது என்பது தவறான வாதம். உடல் வலிமை அனுகூலத்தை ஏற்படுத்தவில்லை. போர் மற்றும் நாடோடி வாழ்வில் மற்ற குழுக்கள் மீதான ஆதிக்கம் அல்லது சூறையாடல் சுரண்டிக் கொள்ளையடிப்பதைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தது. இங்கு வலிமை தனிச்சொத்துரிமை சார்ந்து செயல்படுகின்றதே இங்குள்ள முக்கியமான அடிப்படையாகும். இதனால் தான் பெண்ணைக் காட்டிலும் ஆண் அதிகமானதைச் சூறையாட முடிந்ததே ஒழிய சொந்த வலிமையால் அல்ல.



ஆண்களின் உடல் வலிமை பெண்ணை விட அதிகமாகக் காணப்படுவதற்கு அடிப்படையான காரணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட முதல் வேலைப் பிரிவினைதான் ஆகும். வேட்டைக் கருவிகள் நவீனப்பட்டதால் வேட்டையும் தற்பாதுகாப்பும் முன்பைவிட இலகுவானதாக, பெண் இயற்கை சார்ந்து தாய்மை மற்றும் குழந்தை பராமரிப்பில் தனித்து நிற்கத் தொடங்கினாள். ஆண் வேட்டைக்குச் சென்று வருவது மனித வரலாற்றில் நீண்ட காலக்கட்டமாக நீடித்தது. இந்தக் காலத்தில் வேட்டையாடும் இடத்தில் முதல் உணவை ஆண் உண்ணத் தொடங்கினான். அதிக இறைச்சியைப் பெற்று, அதிக உடல் உழைப்பையும் ஆண் செய்யத் தொடங்கிய போது, அவனின் உடல் பலம் பெண்ணை விட சீராக அதிகரித்தது. பெண்ணின் தனித்து நின்ற சடுதியான மாற்றமும், உழைப்பின் புதிய வடிவமும் அதன் எல்லை குறைவாக இருந்ததுடன், இறைச்சி உண்பது குறைந்தது. ஆண்களின் வேட்டையின் போது தான் உண்டது போக, மேலதிகமான இறைச்சி கிடைக்காவிட்டால் பெண் பட்டினி கிடப்பது என்பது ஒரு நடைமுறையாக இருந்தது. அத்துடன் ஆண் காட்டில் இயற்கையான தாவர உணவைப் பெறும் பூர்த்தியின் தன்மை, பெண்ணுக்கு மேலும் உடல் வளர்ச்சியில் சடுதியான இழப்பை ஏற்படுத்தியது.

ஆண் முதலில் கிடைக்கும் இயற்கை உணவு முதல் சிறு வேட்டையைக் கூட உண்டு விடுவான். ஆனால் அதைக் கட்டாயம் பெண்ணுக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. பெண் பட்டினியில் தவித்தாள். இதில் இருந்தே பெண் சுற்றுச்சூழலை ஆராய்ந்து உணவைக் கண்டறிந்துடன், விவசாய உற்பத்திக்கான முதல் கால்களை எடுத்து வைத்தாள். இந்தக் காலக்கட்டம் நீண்ட நெடிய போராட்டமாக இருந்தது. ஆண் அதிகமான உணவைப் பெற்றதால் பெண்ணை விட உடல் வலிமையைப் பெற்றான்.

மரத்தில் இருந்து இறங்கிய மனிதக் குரங்கு இறைச்சியை எப்போது உண்ணத் தொடங்கியதோ, அதில் இருந்தே இன்றைய மனிதன் பரிணமிக்க தேவையான வலுவைப் பெற்றான். மூளை விரைவாக வளர்ச்சி பெற்றது. இது போன்றே உழைப்பில் ஏற்பட்ட ஆண் - பெண் பிளவில் ஆண் மேலும் வலுப்பெறுவதற்கான அடிப்படையைப் பெற்றான். பெண் குழந்தையைப் பெற்று, உணவைப் பகிர்ந்து குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய தன்மை அனைத்தும் இணைந்த போது, பெண்ணின் பலத்தை ஆணுக்கு நிகராகக் கட்டிக்காக்க முடியவில்லை. இதில் இருந்தே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மூளையின் பருமனில் கூட வேறுபாடு தோன்றியது. அதிகமான இறைச்சி உடல் வலுவையும் உற்பத்தித் திறனையும் கொடுத்த போது ஆணின் சிந்தனை ஆற்றல் விரிவடைந்து மூளை வளர்ச்சி பெற்றது. இருந்த போதும் ஆண் - பெண் உறவில் சமுதாயம் விரிவாகியதால் இது ஓர் உயிரியல் பிளவாக வளரவில்லை. அத்துடன் சமுதாயத்தின் கூட்டு வாழ்வியல் இதைச் சமச்சீராகத் தலைமுறை கடந்த போதும் உயிரியல் அடிப்படையில் இயங்கியலாக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்க அமைப்பில் பெண் ஓர் உயிரியல் கூறு என்ற ரீதியில், ஒரு பெண்ணை அடக்கி ஒடுக்கி கூனிக் குறுக வைத்ததன் மூலம், பெண்ணின் பண்புக் கூறுகளில் இருந்து, மேலும் கூர்மையாகப் பெண் பலவீனப்பட்டாள். இவை மனித உடலியல் உயிர் தொகுதியில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஆணின் பலத்தைப் பெண் பெற முடியுமா எனின் நிச்சயமாக முடியும். ஆணாதிக்கமற்ற அமைப்பின் நீண்ட வளர்ச்சி கட்டத்தில் மட்டும் இது சாத்தியமானது.

பெண்ணின் அடிமைத்தனத்தையும், மக்களின் அடிமை வாழ்வையும் பலம் சார்ந்து ஏற்பட்டதாக திரித்துக் காட்டும் வடிவத்தை மேலும் ஆராய்வோம். "பலத்தை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய மோதல்கள் தவிர்க்க முடியாமல் ஆதிக்கம் செலுத்தும் குழுக்களையும் - பணிந்து போன குழுக்களையும், வெற்றியடைந்தவர்களையும் - தோல்வியடைந்தவர்களையும் தோற்றுவித்தது. இது ஏற்றதாழ்வு நிலையையும், அடிமைத்தனத்தையும் அடிமைப்படுத்துவதையும் நிர்ணயித்தது. இந்தச் சூழ்நிலையில் பெண்களால் இந்தக் கட்டமைப்பிலிருந்து தப்பித்துச் செல்ல முடியவில்லை. உழுமுனைக்கும் குத்துவாக்கும் இடையிலான வன்முறையில் சிக்கி கொண்ட பெண்கள் தோல்வி காண நேரிட்டது." (பக்கம் - 83)

பலத்தை அடிப்படையாகக் கொண்ட யுத்தமே ஏற்றத்தாழ்வுகளையும், அடிமைத்தனத்தையும், அடிமைப்படுத்துவதையும் உருவாக்கியது என்பது மனித வரலாற்றின் மற்றொரு திரிபாகும். பலம் எப்போதும் அடிமைப்படுத்துதலையும் ஏற்றத்தாழ்வையும் மனித வரலாற்றில் உருவாக்கவில்லை. இதற்கு பலம் குறிப்பாகச் செயலாற்றினவே ஒழிய, இதுவே (பலமே) அனைத்துமல்ல. ஏன் ஏற்றத்தாழ்வையும், அடிமைப்படுத்துதலையும் மனிதன் மற்றொரு மனிதன் மேல் செய்தான் என்ற கேள்வியே, இந்த ஆணின் வலிமைக் கோட்பாட்டைத் தகர்த்துவிடும்.

ஏற்றத்தாழ்வும், அடிமைத்தனமும் எதைச் செய்தது? தாழ்வாகப் பட்டவர்களின், அடிமையாக்கப்பட்டவர்களின் உழைப்பைச் சுரண்டுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டது, சுரண்டுவதற்காகவே மக்களை அடிமைப்படுத்தினர். அடிமைப்படுத்துவதற்காக யுத்தத்தை நடத்தினர். யுத்தத்தை நடத்துவதற்காகப் பலத்தைப் பெருக்கினர். பலத்தைப் பெருக்க முறையான போர் படையையும், நவீனக் கருவிகளையும், சதிகளையும் திட்டமிட்டனர். இதற்காக மக்களை மந்தையாக்கினர். ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளும் வகையில் ஒரு நீடித்த சங்கிலித் தொடராக நிகழ்ச்சிகள் தொடர்கின்றது. இவை அனைத்தும் மனிதனின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலம், அவனின் சமூகத் தேவையை மறுக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொள்கின்றது. பலம் இருந்ததால் மோதல்கள் நடக்கவில்லை.

முதல் கூற்றில் இடப்பெயர்ச்சியால் மோதல் நிகழ்ந்தது என்பதும், பின்னால் பலம் இருந்ததால் மோதல் நிகழ்ந்தது என்பதும் ஒன்றுக்கு ஒன்று



முரணான எடுகோள்கள். அதாவது சுயமுரண்பாடு) இந்த மோதல் தான் பெண்ணையும் மீளமுடியாதபடி அடிமைப்படுத்தியது என்பது மற்றொரு அபத்தமாகும். வலிமை தான் பெண்ணை அடக்கியது என்பது கற்பனாவாதமாகும்.

உண்மையில் பெண்ணை அடக்கிய போது தான் வலிமை அதில் பங்காற்றியது. பெண்ணை அடக்குதல் அல்லது ஒடுக்குதல் என்ற நடைமுறையில்தான் வலிமை அல்லது பலம் என்ற கருத்து தோன்றுகிறது. வலிமை இருந்ததால் பெண் அடக்கப்படவில்லை. வலிமை இருந்ததால் பெண் அடிமையானாள் என்பது நகைப்புக்குரிய ஓர் எடுகோள் ஆகும். ஆண் சமுதாயத்தின் தேவையை மறுத்து உபரியை உற்பத்தி செய்து அதைத் தனது சொத்தாக்கிய பின்பே, பெண் அந்த உபரியை தனிச்சொத்தைச் சார்ந்து வாழும் ஒரு நிலை உருவான போதே பெண் ஆணுக்கு அடிமையானாள். பெண் ஆணிடம் உணவுக்குக் கையேந்தும் அவலம் இதிலிருந்துதான் உருவானது.

இந்தத் தனிச்சொத்துரிமையைப் பாதுகாத்த ஆண், பெண்ணை அடிமைப்படுத்தும் பல்வேறு வழிகளில் வலிமையும் ஒன்று. பெண் அடிமையான போது, ஆண் பெண்ணின் உழைப்பையும் சுரண்டத் தொடங்குகின்றான். முதல் வர்க்கப் போராட்டம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் தான் தொடங்குகின்றது. இது கடுமையான போராட்டமாக விடாப்பிடியான வடிவில் நடந்தது, நடக்கின்றது.

இதனால் பெண்ணுக்கு எதிரான ஆணாதிக்க அமைப்பு விடாப்பிடியான போராட்டத்தை நடத்தியது, நடத்துகின்றது. பெண்ணின் எதிர்ப்புகளை ஒடுக்க இடைவிடாத ஒடுக்குமுறைகளைப் பண்பாட்டுத் துறையில் இருந்து உடல் ரீதியான கட்டுப்பாடு வரை கையாளப்பட்டது, கையாளப்படுகின்றது. தனிப்பட்ட குல வழிபாடுகள் தொடங்கி சிறு வழிபாடுகள் மேல் உருவான மதங்கள் இரண்டு பிரதான விடயம் சார்ந்து, தன்னைத் தத்துவார்த்த சமூகச் சட்டப் புத்தகமாக்கியது. ஆணுக்கு அடங்கிப் போகும் பெண்ணின் அடிமைத்தனமும், (ஆணின் சுரண்டலுக்கு எதிர்ப்பற்று கீழ்படிதல்), சமூகச் சொத்துரிமையில் இருந்த, தனிச் சொத்துரிமையைப் பாதுகாக்கும் போராட்டமும் என்ற இரு தளங்களில் தான் மதங்கள் தோன்றின. இதை விளக்குவதே மதத்தின் பணியாக மட்டும் இருக்கவில்லை. இதை மீறுவதற்கு எதிரான தண்டனைச் சட்டத்தையும், என்ன தண்டனை என்பதையும் கூட வரையறை செய்தது.

மனித வாழ்வில் பெண்ணை அடிமைப்படுத்தியதும், பெண்ணின் தலைமையில் இருந்த சமூகச் சொத்துரிமையைத் தனிச் சொத்துரிமையாக்கிய போதும் இருந்த கடுமையான எதிர்ப்பு மற்றும் அராஜகத்தை ஒழுங்குபடுத்தவே மதத் தத்துவங்கள் உருவானது. நடந்த வர்க்கப் போராட்டத்தின் பிரதிவாதங்களே, சொத்துரிமை சார்ந்து உருவான நிலப்பிரபுத்துவ வர்க்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்ந்து மதங்கள் உருவானது. இது தனிச் சொத்துரிமை சார்ந்து உருவான பெண்ணடிமைத்தனத்தையும். தனிச் சொத்துரிமையையும் பாதுகாக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது சட்டத்தொகுப்பே மதத் தத்துவமாகும். முதலாளித்துவம் உருவாகாத காலக்கட்டம் எல்லாம், மதங்களின் சட்டங்களே மனித ஒழுக்கத்தை வரையறை செய்ததுடன், ஆளும் வர்க்கத் தனிச் சொத்துரிமை அதிகாரத்தை ஒழுங்குபடுத்தியது. ஆணாதிக்கத்தை விரிவுபடுத்துவதற்கும், தனிச் சொத்துரிமையை மையப்படுத்துவதற்கும் எதிராக இருந்த சிறு வழிபாடுகளை மதம் அழித்தது. கடுமையான வர்க்கப் போராட்டமாக நீடித்த இக்காலக்கட்டம், இன்று வரை சில பிரதேசங்களில் குறிப்பான போராட்டமாக உள்ளது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்கே உரிய வகையில் மதம் கோலோச்சியது. அதிகாரம் நிலப்பிரபுக்களிடமும், அதை மையப்படுத்திய அரசிடமும் நிலவிய போது, மதத் தலைவர்களே மக்களுக்கு எதிரான சட்ட ஒழுங்கின் நீதிபதிகளாக விளங்கினர்.

இதற்கு எதிராக வைக்கும் கருத்தைப் பார்ப்போம் "ஏக கடவுள் கோட்பாடுகளும் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் துணை செய்து முழுமையாக்குகின்ற இரு எதிர் நிலைகளில் உருவாக்கப்பட்டன.'' (பக்கம் - 142) என்ற வாதம் முற்றாகத் தவறானது.

இங்கு ஒருவருக்கு ஒருவர் துணை செய்கின்ற அடிப்படையில் வர்க்கங்களையும், மனிதப் பிளவுகளையும் வர்க்கச் சமுதாயம் உருவாக்கவில்லை. முதல் வர்க்க ஒடுக்குமுறையாகத் தோன்றிய பெண்ணடிமைத்தனமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. மாறாக ஆண் அல்லது பெண்ணாக இருக்கலாம் அல்லது மற்ற சமுதாயப் பிளவுகளாக இருக்கலாம். அனைத்தும் ஒரு பிரிவினருக்கு அடங்கி அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. அதை இயல்பான விடயமாக்குவதும், பக்தியின் பெயரில் இணங்கி போவதைக் கோருவதாகவும் இருந்தது. இதை மீறிய எல்லாத் தருணங்களிலும், வன்முறை கையாளப்பட்டு அடங்கி போகக் கோரப்பட்டது.

இன்றைய ஜனநாயகம் போல் மதம் துணை செய்வது போன்ற தோற்றத்தைக் கொடுப்பதில், பண்பாட்டுக் கலாச்சார உள்ளடக்கத்தில் தீவிரமான கோட்பாடுகளை, கட்டுக் கதைகளைக் காவியமாக்கியது. இந்த எல்லையைத் தாண்டவில்லை. ஒருவருக்கு ஒருவர் துணை என்ற சொல்லடுக்கள் மீது, தன்னை அமைப்பாக்கிய நிலப்பிரபுத்துவ அமைப்பும், சட்டத் தொகுதியான மதமும் அல்லது இதை மீறிய போதும் இதை மறுத்த போதும் இன்றைய முதலாளித்துவ ஜனநாயகம் போல் வன்முறையைப் பரிசளித்தது.

இதில் மற்றொரு வாதமாக ஒருவருக்கு ஒருவர் துணை செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. இங்கு உருவாக்கப்பட்டது என்பது கருத்துமுதல்வாதமாகும். யாரும் சமூகத்துக்கு வெளியில் எதையும்



கற்பனையில் உருவாக்க முடியாது. ஆணின் கையில் தனிச் சொத்துரிமை உருவாகி அதுவே சில ஆண்களிடம் குவிந்த போதும், சொத்தற்றுப் போன பெண்கள் மற்றும் ஆண்களை அடக்கி ஆள உருவான சமூகப் பொருளாதார அமைப்பின் மேல் தான் மதங்கள் உருவானதே ஒழிய உருவாக்கப்பட்டவை அல்ல.

முதலில் பொருள் தோன்றி விடுகின்றது. இதன் மேல் உருவான மதம் கருத்துமுதல்வாதத்தால் தன்னை ஆயுதபாணியாக்கியது. பொருளை மறுத்து தன்னை ஆயுதபாணியாக்கும் போது, இருக்கும் சமூகப் பொருளாதார உறவின் அடிமைத்தனத்தின் பொருளாதாரக் கூற்றை அங்கீகரித்து அதைச் சட்டத் தொகுப்பாக்குகின்றது. உண்மையில் மதம் சமூக அடிமைத்தனத்தை நியாயப்படுத்த, ஓர் அடிமைக் கோட்பாட்டைப் பரந்துபட்ட மக்கள் முன் திணிக்கின்றது.

ஆணாதிக்க அமைப்பு எப்படி உருவானது என்பதைத் திரித்து புரட்டுகின்ற வரிகளைப் பார்ப்போம். ஆண் தனது விந்து கருவுறுவதற்கு அவசியம் என உணர்ந்த நிகழ்வு ஆணாதிக்கத்துக்கான ஒரு புரட்சியாக மாறியது. (பக்கம்-73)

பெண்களைக் கருவுறச் செய்வதற்கு ஓர் ஆண் மட்டும் தேவை என்ற உணரப்பட்டவுடனே, ஒரே ஒரு ஆண் என்ற கருத்தை நிலைநாட்டுவதற்கு அது ஒரு சிறிய நடவடிக்கையாயிற்று.'' (பக்கம்-90)

"எழுச்சியுற்று வந்த லிங்க வழிபாட்டாளர்களின் முயற்சிகள் அதிகமாக அதிகமாக கூடுதல்வகை வளமுள்ள மற்றும் தொடர்ந்த எதிர்ப்பையும் அவன் தோற்றுவித்தான்.'' (பக்கம்-96)

கி.மு. 1500 ஆம் ஆண்டுகளில் லிங்க உருவ வழிபாடு உலகெங்கும் பரவியபோது பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல் அதிகரித்த எதார்த்தத்தை மறுக்கமுடியாது.'' (பக்கம்-104)

லிங்க வழிபாடு எப்படி தோன்றியது என்ற அடிப்படைப் பொருளை மறுத்து, லிங்க வழிபாடு உருவான போதே பெண்ணின் அடிமைத்தனம் முதலில் தோன்றியது என்பது அர்த்தமற்ற வாதமாகும். ஒரே ஒரு ஆண் என்ற கண்ணோட்டமும், ஆணுக்குக் கருவுறச் செய்யும் ஆற்றல் உண்டு என தெரிந்தவுடன் ஆணாதிக்கம் உருவானது என்பது அடிப்படையான தர்க்க ரீதியான விளக்கமல்ல. பெண்ணைக் கருத்தரிக்க வைக்கும் ஆற்றல் ஆணுக்கு உண்டு என்பதால், ஒரே ஒரு ஆண் என்ற ஆணாதிக்கம் உருவானதாகக் கூறுவது இயங்கியல் தன்மையை இழக்கின்றது.

தனிச் சொத்துரிமை அமைப்புதான், ஆணின் விந்தும் கருத்தரிப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இடித்துரைக்கின்றது. இது எப்படி எனப் பார்ப்போம். பெண்ணின் தலைமையில் சமூகம் இருந்த போது, வரைமுறையற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புணர்ச்சியே (கால ஓட்டத்தில் மிக நெருங்கிய உறவுகளைத் தவிர்த்து) நிலவியது. பெண் கருத்தரித்தபடியே இருந்தாள். இது எப்படி நிகழ்கின்றது என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. நம்பிக்கை மற்றும் இயற்கை மீதான காரணத்துடன் தொடர்புபடுத்திய புனைவுகள் எல்லாம் ஓர் ஆணின் விந்து பெண்ணைக் கருவடைய வைக்கத் தேவை என்பதை அனுபவ ரீதியாக, பொருள் ரீதியாகப் (உடலுறவு தான் அதை உருவாக்குகின்றது.) புரிந்து கொள்ள எந்த நடைமுறை வழியும் இருக்கவில்லை.

தனிப்பட்ட பெண் தனிப்பட்ட ஆணின் சொத்தாக அல்லது தனிப்பட்ட ஆண் தனிப்பட்ட பெண்ணின் சொத்தாக உருவாகாத உலக வரலாற்றில், ஆணின் விந்து கருத்தரிப்பில் முக்கியமான பங்காற்றும் நிபந்தனை என்பதை யாரும் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் தனிச்சொத்துரிமை அமைப்பு உருவான போது, தனிப்பட்ட பெண் ஆணின் தனிச் சொத்துரிமை அமைப்பு சார்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டாள். இதனால் மட்டும் பெண் ஓர் ஆணைக் காதலிக்கவும், ஓர் ஆணைத் தேர்ந்தெடுக்கவும் செய்தாள். இது பின்னால் பெண்ணின் தேர்வை மறுத்து ஆணின் தேர்வாக மாறியது. பெண் அடிமையாக்கப்பட்டாள். இந்தக் காலத்தில்தான் குழந்தை பிறப்பில் ஆண் விந்தின் அவசியத்தை உணரக் கூடிய, நடைமுறையான அனுபவ ரீதியான அறிவு உருவானது. இது கூட விஞ்ஞான ரீதியானவை அல்ல. இதில் இருந்து தான் கற்பு பற்றிய கோட்பாடும், ஆணின் வாரிசுரிமை பற்றிய அடிப்படையான சமூக அமைப்பும் உருவாகின்றது.

பெண் ஆணின் சொந்த அடிமையான போது, பாலியல் உறவுகள் விலக்குகளுக்குள்ளாகிய போதே, கருத்தரிக்கும் ஆற்றல் ஆண் இன்றி பெண்ணுக்குச் சாத்தியமில்லை என்பதை எதார்த்தம் அனுபவ ரீதியாகக் கற்றுக் கொடுத்தது. ஒரே ஒரு ஆண் என்பது கருவுறச் செய்வதற்குத் தேவை என்பது, தனிச்சொத்துரிமையின் தொடர்ச்சி வாரிசுரிமை மீதே கோரப்படுகின்றது. அதாவது பெண் அடிமைத்தனம் உருவான பின்பே கருத்தரிக்கும் ஆற்றல் பெண்ணுக்குச் சுயமாக இல்லை என்பது சமூகத்துக்குத் தெளிவாகின்றது. இதில் இருந்தே வாரிசுரிமையைப் பெண்ணின் தூய்மை மீது கோருவதும், கற்பு பற்றிய கோட்பாடுகளும் எழுகின்றதே ஒழிய வெற்றிடத்தில் இருந்து அல்ல. அத்துடன் இதில் இருந்து லிங்க வழிபாடு தோன்றவில்லை.

லிங்க வழிபாடு ஏன் தோன்றியது தாய் வழிபாடு என்ன என்பதைச் சரியாகப் புரிந்தாலே லிங்க வழிபாட்டில் உள்ள அடிப்படையைப் புரிந்து கொள்ளமுடியும். தாயே எல்லாம் படைக்கின்றாள். உணவு அளிக்கின்றாள். தலைமுறையை உருவாக்குகின்றாள் என்ற எதார்த்தத்தின் மேல் உருவானது. மனித அறிவியலின் எல்லை எதார்த்தமாக உள்ள போது, அதன் ஒரு பிம்பமே வழிபாட்டுக்கு அல்லது மதிப்புக்கு உரியதாகின்றது. பின்னால் பெண் விவசாயத்தின் மூலம் அளித்த உணவால், இயற்கையைத் தாயாகப் போற்றுவதும், வழிபடுவதும் உயர்ந்த கட்டத்தை அடைந்தது.





இந்த இயற்கை சார்ந்த பெண்ணின் உழைப்பில், ஆணின் உழைப்பு புகுந்த போது ஏற்பட்ட வேலை பிரிவினையுடன் (மந்தை வளர்ப்பு) உருவான தனிச் சொத்துரிமை ஆணின் சொத்தான போது, தனிப்பட்ட ஆண் சமூகத்துக்கு உணவு வழங்குபவனாகத் திரிபடைந்தது. தனிச் சொத்துரிமை அமைப்பில் ஆண் முதன்மையானவனாக மாறியதால், அவனை வழிபடுவது என்ற புதிய போக்கு சமூகப் போக்காக வளர்ச்சி பெற்றது. தாய் வழிபாடு திரிபடைந்து தந்தை வழிபாடு உருவானது. இதனால் லிங்க வழிபாடு கோலோச்சியது.

சொத்துரிமை சார்ந்து, பெண்களை ஆண்கள் பாலியல் ரீதியாகக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியும், வரைமுறையற்ற காட்டுமிராண்டித்தனமான புணர்ச்சியும் மேலும் துல்லியமாகப் பெண்ணை இழிவுக்குள்ளாக்கியது. இதனால் பெண்கள் ஓர் ஆணைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் பரஸ்பர காதல், இருவரும் தாம் பரஸ்பரம் நெருங்கிய போது ஒற்றைக் குடும்ப அமைப்பு வளர்ச்சி பெற்றது. இது தனிச் சொத்துரிமையிலான காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக, சொத்து சார்ந்த வரைமுறையற்ற புணர்ச்சிக்கு எதிராகப் பெண்ணே தேர்வு செய்தாள். இதன் மூலம் மனிதன் மற்றொரு கண்டுபிடிப்பை அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. பாலியல் உறவு தொடர்பற்ற நிலையில் பெண் கருத்தரிக்க முடியாது என்ற உண்மையைத் தெரிந்து கொள்கின்றான். பெண்ணுடன் சேர்ந்து உறவுக் கொள்ளும் போதே கருத்தரிப்பு நிகழ்வதைப் புரிந்து மனிதன், ஆணின் புணர்ச்சியே கருத்தரிப்புக்கான அடிப்படையாக இருந்ததை அரூபமாகவே புரிகின்றான். மற்றொரு வழியிலும் இதைப் புரிந்து கொள்ள மந்தை வளர்ப்பும் ஊக்கியாக இருந்தது. மந்தைகளை ஆண் - பெண் வேறாகப் பிரித்த போது கருத்தரிக்காமையைக் கண்டாள். ஆணின் உறவு கருத்தரித்தலில் அவசியமானது என்ற உண்மையை மேலும் எதார்த்தத்தில் வலுவூட்டியது. அனுபவ அறிவு இதை செம்மைப்படுத்தியது. இதில் இருந்தே தனிச்சொத்துரிமை தனக்கான வாரிசு உரிமையைப் பெறுவதை உறுதி செய்ததுடன், அதைத் தக்க வைத்துக் கொள்ளும் நடைமுறைகளும் உருவாகியது. இதனால் லிங்க வழிபாடு மேலும் கூர்மையடைகின்றது. ஆணின் உறவுக்குரிய ஆண் உறுப்பு லிங்க வழிபாடாக வருவதற்குத் தனிச்சொத்துரிமை மீதான ஆணின் உரிமை உந்தித் தள்ளுகின்றது.

தனிச்சொத்துரிமை அமைப்பு ஆணின் கையில் இல்லாத எல்லா நிலைகளிலும், லிங்கம் வழிப்பாட்டுக்குரிய பொருளாக வந்திருக்கவே முடியாது. லிங்க வழிபாடு பெண்ணை அடிமைப்படுத்த வரவில்லை. தனிச்சொத்துரிமை உருவான போது கருத்தரிப்பில் ஆணின் உறவுக்குரிய முக்கியத்துவம் கண்டறியப்படுகின்றது. இது தனிச்சொத்துரிமை சார்ந்த வாரிசு உரிய உடைமை மற்றும் உரிமை என்பன இயல்பாகவே லிங்க வழிப்பாட்டைத் தாய்மை வழிபாட்டுக்குச் சமாந்தரமாகவும் (சமமாக) உருவாகி அதையும் மேவி வளர்த்தெழுகின்றது. தொடர்ந்தும் லிங்க வழிபாடு உலகம் தழுவிய ஒரு வழிபாட்டு முறையாக, உலகம் தழுவிய மதமாக மாற முடியவில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறாக நிலவிய தாய் வழிபாடு சிறுவழிபாடுகள், இயற்கை வழிபாடுகள், மூதாதையரை நோக்கிய எண்ணற்ற வழிபாட்டு முறைகள் மேல் புதிய மதங்கள் உருவாயின. இவை அனைத்தும் பழைய வழிபாட்டு முறையை அழித்தன அல்லது அதை உள்வாங்கி அதன் மேல் தெளிவாகப் பெண்ணை அடிமைப்படுத்தி சுரண்டுவதையும், சமூகச் சொத்துரிமையைத் தனிச்சொத்துரிமையாக்குவதையும் தெளிவாகவே உறுதி செய்தன.

நிலப்பிரபுத்துவச் சொத்துரிமை வடிவம் வீங்கி வெம்பி மையப்படுத்தப்பட்ட வாரிசு ஆட்சி வடிவமாக வளர்ந்த போது, மதம் ஓர் ஆதிக்கச் சக்தியாக அடிமைப்படுத்தும் ஒரு சின்னமாக எழுச்சியுற்றது. பெண்களுக்கு நாயிலும் கீழான ஓர் அடிமை வாழ்வுடன் கூடிய சித்திரவதையை வாழ்வாக்கியது. ஒரு பெண் சிந்திப்பது, அதை வெளிப்படுத்துவது உள்ளிட்ட அனைத்தையும் கைவிட நிர்ப்பந்தித்த மதம், தனது முகத்தையும் கூட மற்றவர் தெரிந்து கொள்ள முடியாத இருண்ட சூனியத்தில் சிறை வைக்கப்பட்டாள். அதே நேரம் கடின உழைப்பில் அலுப்பூட்டும் வகையில் ஒரே வேலையை, மிக நெருங்கிய ஆண்களுக்கு முகமன் செய்தே சேவை செய்து வாழ்வதே உயர்ந்த பண்பாக மதங்கள் சமூகமயமாக்கின. இந்த அடிமை மரபுக்கு இணங்க அழுந்தி சாவதைச் சமூகம் உறுதி செய்தது.. இது உலகம் தழுவிய ஒரு போக்காகக் காணப்பட்டது.

ஆனால் இதை மறுத்து வைக்கும் வாதம் பெண் அடிமைத்தனத்தையே திரிப்பதாக உள்ளது. "நிகழ்ச்சிகளின் நிர்ப்பந்தமும் புதிய முனைப்புத் தன்மையுடன் கூடிய லிங்க உருவ எழுச்சியின் தூண்டுவிசையும் இணைந்து பெண் தெய்வ அதிகாரத்தின் மற்றும் கடைசி எஞ்சிய கூறுகளையும் விரட்டியடித்தன. பொதுவாகப் பார்க்கும் போது, இந்த மாற்றங்கள், முதலாவதாக ஏற்பட்ட வெற்றிகரமான சமூக ஒழுங்கமைப்பின் விளைவான மக்கள் தொகைப் பெருக்கத்திலிருந்து தோன்றின."

"விழிப்புணர்வு ஆழமடைந்த போது இந்த வெற்றிடத்தில் பொறாமை நுழைந்து புதிய உயிரைப் படைக்கும் சக்தி முற்றிலும் பெண்களிடத்தே இருக்கும் தோற்றத்தைக் கண்டு, அச்சமடைந்து பெண் கருப்பையின் காரணமாகப் பொறாமையடைந்த ஆண்களிடத்தில் எதிர்ப்பு உருவாயிற்று. இயற்கையின் அனைத்து லயங்களையும் பெண்கள் தமது ஏகபோகமாக்கிக் கொண்டதனால் சினங்கொண்ட ஆண்கள் தங்களுடைய சொந்த லயங்களைப் புனைந்து உருவாக்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர்." (பக்கம் - 71)

ஆணின் லிங்க வழிபாடும், மக்கள் தொகைப் பெருக்கமும், பொறாமையும், அச்சமும், எதிர்ப்பும் பெண்ணின் அதிகாரத்தையும், பெண்ணியச் சமுதாயக் கண்ணோட்டங்களையும் ஒழித்தது என்பது கருத்துமுதல்வாதமாகும். இது நேரடியாகப் பொருள் முதல்வாதத்தை மறுப்பதாகும். லிங்க வழிபாடு திடீரென ஏன் தோன்றியது என்பதை வெறும் ஆண்களின் பொறாமையாகக்



காட்டுவது ஒரு திரிபாகும். அப்படியானால் ஏன் திடீரென பொறாமை உருவானது? எதிர்ப்பு ஏன் திடீரென உருவானது? அச்சம் ஏன் திடீரென உருவானது? மக்கள் தொகை பெருக்கமே பெண்ணை மிதித்தது எனின், பெண்ணின் கருத்தரிப்புதான் அவளுக்கு எதிராக இருந்ததா?

நான் மேலே விவாதித்ததன் அடிப்படையில் இந்தக் கூறுகளும் பெண்ணை அடிமைப்படுத்தவில்லை. இவை அடிமைப்படுத்தப்பட்ட பெண்ணின் அடிமைத்தனத்தை மேலும் ஊக்குவிக்கும் ஒரு மேல்கட்டுமானமாக இருந்தது. இது போன்று பல கூறுகள் செயற்பட்டன. மக்கள் தொகைப் பெருக்கம் தான் பெண்ணை அடிமைப்படுத்த காரணம் எனின், ஆணின் உறவுக்குரிய முக்கியத்துவம் கண்டறியப்பட்ட நிலையில் ஆணை அல்லவா இழிவாக்கியிருக்க வேண்டும். அச்சம், பொறாமை, எதிர்ப்பு என்பன மானிட அமைப்பில தனிச் சொத்துரிமை தோன்றிய பின் உருவானவையே. இவை முன்பு தோன்ற எந்த அடிப்படையும் ஆதாரமும் எதார்த்தத்தில் கிடையாது.

மனித வரலாற்றில் உணவை எப்படி எந்த வழியில் பெறுவது என்பதே தீர்க்கமான சமூகப் பண்பாட்டுக் கூறுகளை உருவாக்கியது. அனைத்துப் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள் தொடங்கி அதிகார அமைப்புகளின் தோற்றங்கள் முதல் அடிமைப்படுத்துதல் ஈறாக இது சார்ந்து தெளிவாகத் தன்னை எதார்த்தத்தில் வேறுபடுத்தியும், மாற்றியும், மாறியும் வந்துள்ளது. உணவு தேடும் வடிவம் எந்த உற்பத்தி வடிவங்கள் ஊடாக, எந்த உழைப்பின் ஊடாக, எப்படி உணவைப் பகிர்கின்றது என்ற சமூக அடிப்படையில் இருந்தே, அனைத்துவிதமான சமூகப் பொருளாதாரக் கூறுகளும் உருவானது, உருவாகின்றது. மனித அடிமைத்தனங்கள் இதற்கு வெளியில் கற்பனையில் உருவாவதில்லை. இது சார்ந்தே மனிதப் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகள் உருவாகின்றன.

மக்கள் தொகைப் பெருக்கம், லிங்க வழிபாடு வெறும் வெற்றிடங்களில் இருந்து உருவாவதில்லை. மனிதத் தேவையைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி முறைக்கும், அது பகிரப்படும் முறைக்கும் வெளியில் மனிதச் செயற்பாடுகள் - சிந்தனைகள் உருவாவதில்லை. மாறாக உணவு பகிரப்பட்ட வடிவத்தில் இருந்தே வழிபாட்டு முறையும், மக்கள் தொகை பற்றிய கூச்சலும் எழுகின்றது. மக்கள் தொகை பற்றிய கூச்சல் நவீன முதலாளித்துவத்துக்குரிய ஒரு மாபெரும் மோசடி மட்டுமேயாகும். மனிதன் தன் தேவைக்கு உழைக்க இரண்டு கைகள் இருந்த வரை, மனித உழைப்பு இயற்கை மீது சுதந்திரமாக இருந்த வரை, மக்கள் தொகை பெருக்கம் என்ற கூச்சல் வெறும் கட்டுக்கதை மட்டுமேயாகும்.

மக்கள் தொகை பற்றி சுரண்டுபவன் கூறுவதற்கு அதாவது மனிதத் தேவையை மறுப்பவன் கூறுவதற்கு எந்த அருகதையும் கிடையாது. அது எப்பொழுதும் உள்நோக்கம் கொண்டவையாகும். இவை நவீன ஆய்வு முறைக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருத்தமற்ற ஒரு தர்க்கவியலும் கூட. ஆனால் ஏகாதிபத்தியச் சுரண்டல் கோரமாக இது ஒரு நிரந்தரமான வாழ்வியல் மனிதக் கோட்பாடாகக் காட்டுவது வாழ்வியல் திரிபாகும். இதை என்றைக்கும் நிலவியதாகப் பூச்சூடுவதும் நவீன மோசடியாகும்.

லிங்க வழிபாடு ஆணாதிக்க அமைப்புக்கு அஸ்திவாரமாக இருந்தது என்றால், இன்றைய மதங்கள் ஒருக்காலும் தோன்றியிருக்க முடியாது. லிங்க வழிபாடு உலகெங்கும் ஆதிக்கம் பெற்ற ஒரு மதமாக வளர்ச்சி பெற்றிருக்கும். தனிச்சொத்துரிமை ஆணாதிக்க அமைப்பும், நிலப்பிரபுத்துவமும் இணைந்து இதைத் தனது ஆதிக்க மதச் சின்னமாக மாற்றியிருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. அது சரி பெண்ணை அடிமைப்படுத்தியதாகக் கூறும் ஆணாதிக்கச் சின்னமாக இருந்த லிங்க வழிபாடு, ஆணாதிக்கம் அழியாமல் ஏன் எப்படி அழிந்து போனது? முதல் வர்க்க ஒடுக்குமுறையாக எழுந்த பெண் அடிமைத்தனம் இன்றுவரை அழியவில்லை அல்லவா! லிங்க வழிபாடு அழிந்து விட்டதல்லவா! எப்படி இது சாத்தியமானது?

தொடர்ந்து பார்ப்போம். பெணகள் நிர்வாணமாக முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது, அதீனியாவில் கணவன் இறந்தால் மனைவி நிர்வாணமாகச் சவ ஊர்வலத்தில் செல்வது போன்றன பற்றி இந்நூல் பேச முனைகின்றது. (பக்கம்-62)

சிவனுக்குப் பூஜை செய்யும் ஓர் அர்ச்சகர் கோயிலில் இருந்து நிர்வாணமாக வெளியே வந்து ஒரு சிறிய மணியை ஒலித்த வண்ணம் தெருக்களின் வழியாக நடந்து செல்வார். இந்த மணியோசை சமிக்ஞையைக் கேட்டதும் எல்லாப் பெண்களும் வெளியே வந்து, கடவுள் பிரதிநிதியின் புனிதமான பிறப்பு உறுப்புகளை முத்தமிடுவார்கள்.'' (பக்கம்-77)

ஓர் அராபியர் ''வீரியமுள்ள உறுப்புகளைக் கொண்ட தந்தையே. என்னுடைய பிரமாணத்திற்குச் சான்றாக இருப்பீராக'' என்று கூறி ஆண் உறுப்பை ஆராய விருந்தினரை அனுமதிக்கின்றார். ரோமானியர் ஆண்குறியைப் பிடிப்பது, அதன் மேல் வாழ்த்து கூறுவது, தொழுவது என்பனவற்றைக் கடைப்பிடித்தனர். (பக்கம்-77)

கிரீசில் பல ஆண்குறி கொண்ட சிலைகள், உருவப் பொருட்கள் உருவாக்கப்பட்டன. இதைவிட பல லிங்கம் பெண்ணுக்கு எதிராக நிலை நிறுத்தப்பட்டது அல்லது சுற்றி வளைக்கப்பட்டது. எகிப்தில் பெண்கள் லிங்கத்தைத் தமது வழிபாட்டின் போது எடுத்துச் சென்றனர். இப்படிப்பட்ட போக்கில் ''பெண் தெய்வங்கள் தான் லிங்க வழிபாட்டை நிறுவியது'' (பக்கம்-75)

ஏன்? இதை மட்டும் கட்டுரை விவாதிப்பதை மறுக்கின்றது. பெண்கள் ஏன் லிங்க வழிபாட்டை ஏற்றுக் கொண்டனர்? அடிப்படையில்





தனிச்சொத்துரிமையின் சொந்தக்காரனாக ஆண் இருந்தான் என்பதே அடிப்படையாகும். ஆண் பெண்ணுக்கு உணவளிக்கும் முறை உற்பத்தி சார்ந்து உருவாகியவுடன், லிங்க வழிபாடு சமுதாய வழிபாடாக மாறுகின்றது. லிங்கம் சக்தி வாய்ந்த உற்பத்திமுறையின் பிறப்பாகத் திரிபடைகின்றது. ஆனால் இது பெண் வழிபாட்டுடன் சமரசம் செய்தே தோன்றுகிறது. நிலப்பிரபுத்துவ அமைப்பு வளர்ச்சி பெற்று இறுக, இறுக சமரசம் தகர்ந்து அடக்குமுறையாக மாறும் பொது, புதிய மதம் உருவாகின்றது. இருந்த பழைய சமுதாய எச்சத்தை உள்ளடக்கிய புதிய சமுதாயத்தின் தோற்றத்தில் காணப்பட்ட அராஜகத்தை ஒழித்துக் கட்டுகின்றது. இதனால் லிங்க வழிபாடும் தகர்கின்றது அல்லது உட்செரிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றது.

கி.மு. 1300-இல், எகிப்தை ஆண்ட **மெனெப்தா** நிறுவிய பெரிய லிங்க சிலையில் ஒரு கல்வெட்டின் கீழ் வாசகம் ஒன்று எழுதப்பட்டு இருந்தது. அதில் தனது பகைவனை வென்றதுடன் 13,240 ஆண்களின் ஆண்குறியை வெட்டி வந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. (பக்கம் - 79)

இதனால் இந்த நூல் ஆசிரியர் பெண்ணின் அதிகாரம் தகரவில்லை என்று கூறி இதை ஆதாரமாகக் காட்டுகின்றார். இதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. சமூகத்தை மாற்ற முடியாத வக்கரித்த பெண்கள் இதைப் பெருமையாகக் கூறி, தமது ஆட்சியின் பெருமையாகப் பீற்றுகின்றனர்.

ஒரு யுத்தத்தில் ஆணின் ஆண்குறியை வெட்டிக் கொண்டு வருவதன் மூலம் அதுவே பெண்களின் ஆட்சி என்பது, அடிப்படையான சமூகப் பொருளாதாரக் கூறுகளையே மறுப்பதாகும். மக்களை அடக்கி ஒடுக்கி ஓர் ஆட்சி அமைப்பு நிலவியது என்றால், அங்கு தனிச்சொத்துரிமை அமைப்பு இருக்கிறது என்பது அரசியலில் அடிப்படை அறிவாகும். தனிச்சொத்துரிமை அமைப்பு இருக்கின்றது என்றால், பெண் அடிமைத்தனம் அதன் அச்சாக உள்ளது என்பது அர்த்தம். ஆண்குறியை வெட்டுவதன் மூலம் பெண் விடுதலையை எதிரி நாட்டுப் பெண்ணுக்கு வழங்கினாரா? அந்தப் பெண்களுக்கு என்ன தான் நடந்தது? சொந்த அந்தப்புரத்தில் அல்லது சொந்த நாட்டு வீரர்களின் சொத்தாக்கினாரா? பெண்களின் தந்தையை, கணவனை, மகனைக் கொல்வதன் மூலம் அல்லது ஆண் குறியை அறுப்பதன் மூலம், அவர்களின் பாலியல் ரீதியாக அடிமை உடைமை உரிமையாக வாழ்ந்த பெண்கள் மேல், எதிரி நாட்டு ஆணாதிக்க ஆண்கள் நிரந்தரமான உரிமையைப் பெறுவதையே உறுதி செய்தனர். சொந்த நாட்டுக்காகப் போராடிய வீரர்களின் ஆண் உறுப்பு என்ற கண்ணோட்டத்தில் வெட்டப்படவில்லை.

சொந்த நாட்டு வக்கிரம் பிடித்த ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை ஆட்சிகளின் செயல்களுக்குக் காரணம் கூறி, அதைப் பெண்ணியல் நோக்கில் நியாயப்படுத்துவது இன்றைய பெண்ணின் இழிநிலைக்குக் கம்பளம் விரிப்பதாகும். பெண் எதைச் செய்தாலும் அதை ஆதரிப்பதும், ஆணுக்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராக ஆண் தொடங்கி, எந்தப் பிற்போக்குப் பெண்ணும் எதைச் செய்தாலும் அதை ஆதரிப்பது, நவீன பெண்ணியத்தின் உச்சக்கட்ட வக்கிரமாகும். இதைப் போன்று கடந்த காலத்தில் பெண்கள் ஆணாதிக்க அமைப்பிலான ஆட்சிகளில் கொலுவீற்று இருந்த போது, அவர்களின் ஆட்சியைப் பெண்ணிய ஆட்சியாக இந்த நூல் பல இடங்களில் எடுத்துக் காட்டுவதன் மூலம் நியாயப்படுத்துகின்றது. இதை உலக வரலாற்றில் பெண்ணின் பெருமையாகப் பீற்றுகின்றது.

அதில் சிலவற்றைப் பார்ப்போம். ''....பெண்கள் மிக ஆரம்பக் காலத்திலேயே அதிகார இயந்திரத்தை எவ்வாறு இயக்குவது, கட்டுக்கோப்பினுள் - அது அவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்தியிருக்க கூடும். எவ்வாறு வெற்றிகரமாகச் சூழ்ச்சித் திறனுடன் செயலாற்றுவது என்பதைக் கற்று அறிந்து இருந்தனர்.'' (பக்கம்-99)

''ரோமானியச் சக்கரவர்த்தினிகள் **ட்ருசில்லாவிவியாவும்** (கி.மு. 55 - 29), **வலேரியா டெஸ்ஸாலினாவும்** (கி.பி. 22- 48) தங்களுடைய சூழ்ச்சித் திட்டங்களுக்கு எதிராக ஏற்படும் எந்தத் தடங்கல்களையும், தங்கு தடையின்றி விஷத்தை உபயோகப்படுத்துவது உள்ளிட்டு, முடிவற்ற பயங்கரமான சூழ்ச்சிகளைக் கையாண்ட பலரில் அடங்குவர். காவியப் புகழ் அழகி **ஸெனோபியாவின்** ஆயுதங்களில் விஷமும் ஒன்றாகும். இந்தச் சைத்திய இன வீராங்கனை அரசி ரோமானிய இராணுவத்தை முறியடித்து, எகிப்தையும், ஆசிய மைனரையும் கைப்பற்றினாள். இறுதியில் ரோமானியர்களால் தோற்கடிக்கப்பட்ட இந்த அரசி, ஓர் ரோமானியச் செனட்டரை வசியப்படுத்திக் கொண்டதன் மூலம், கொல்லப்படுவதில் இருந்து தப்பித்தாள். பின்னர் அவள் அவரையே திருமணம் புரிந்து கொண்டாள். பின்னர் பெருந்தன்மையுடன் ஓய்வு பெற்று வாழ்ந்து வந்தாள்'' (பக்கம் - 100)

''இரு புதல்விகளையும் கொண்ட **'ஜீலியஸ்கள்'** என்ற சக்தி வாய்ந்த பெண் பரம்பரையின் புகழ்பெற்ற வாழ்க்கைகளிலிருந்து காணப்படுகின்றது. மூத்த சகோதரி **ஜீலியா தோம்னா,** செவெரஸ் சக்கரவர்த்தியை மணந்து கொண்ட போது ரோமன் அதிகார அரசியலுக்குள் முதலில் ஊடுருவினாள்.

கி.பி. - 217 இல், அவள் மரணமடைந்த போது, அவளுடைய இளைய சகோதரி **ஜீலியா மெய்ஸா** ஆட்சியை மேற்கொண்டாள். அவள் 'ஜீலியஸ்கள்' என்ற தனது இரண்டு புதல்விகளுக்கும் மதிநுட்பத்துடன் மணமுடித்து வைத்ததன் பயனாக, அவர்கள் அடுத்த இரண்டு சக்கரவர்த்திகளுக்கு அன்னை ஆனார்கள். அவர்கள் மூலமாக, இந்த மூன்று பெண்களும் 235 ஆண்டு வரையில் மிகவும் உறுதியாக ஆட்சிபுரிந்தனர்.'' (பக்கம் - 98)

பெண்கள் பாலியல் ரீதியாக எதிரியுடன் உறவு கொண்டு படுகொலை செய்வது அல்லது அதை நோக்கி கவர்ந்து யுத்தங்களை வெல்வதன் மூலம் ஆட்சியை அல்லது அதிகாரத்தைத் தக்க வைப்பது அல்லது அதிகாரத்தில்



உள்ளவர்களுடன் சோரம் போய் தம்மைத் தற்காப்பது (பக்கம் - 63) என அனைத்தையும் இந்த நூல் பெண் என்பதால் நியாயப்படுத்துகின்றது.

பெண் அதிகாரத்தில் இருந்தால் அதைப் போற்றுவது என்ற கடைக் கோடியில் நின்று, இந்த ஆணாதிக்க அமைப்பை ஆதரிக்கின்றது. இன்றைய உலகமயமாதல் வரை இதற்குள் சங்கமமாகின்றது. பெண்கள் பழைய மரபு ரீதியில் அல்லது கணவன் இறக்க அதைக் கைப்பற்றுவது அல்லது கணவன் பலவீனமானவனாக இருந்தால் அதிகாரத்தைப் பெறுவது அல்லது பாலியலை உபயோகித்து அதிகாரத்தைக் கைப்பற்றுவது அல்லது சதிகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவது அல்லது யுத்தத்தில் நாட்டைக் கைப்பற்றி புகழ் பெற்று அதிகாரத்துக்கு வருவது என எண்ணற்ற வழிகளில் சமுதாயத்தின் இழிந்த ஆணாதிக்கப் போக்குகளின் மூலம் பெண்கள் உலகின் பல பாகங்களில் ஆட்சிக்கு வந்தனர், வருகின்றனர். இவை அனைத்தையும் பெண்ணின் திறமையாகவும், பெண்ணின் ஆட்சியாகவும் இந்த நூல் பெருமை பட எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பெண்கள் ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்புக்கு எதிரான போராட்டத்தை நடத்தி, சமூகச் சொத்துரிமையின் காவலராக, ஆணாதிக்க அமைப்பின் தூண்களாகவே திகழ்ந்தனர். இவர்கள் பெண்ணின் இழிநிலையைப் போக்கியவர்கள் அல்ல. சிற்சில சீர்திருத்தங்களைச் செய்திருக்கலாம். ஆனால் பலர் ஆணாதிக்கக் கொடூரத்தை ஆழமாக்கி கொடுங்கோல் ஆட்சியை மக்கள் மேல் நிறுவினர். பெண்களின் ஆட்சியாக இருந்தாலும் சரி, ஆண்களின் ஆட்சியாக இருந்தாலும் சரி எங்கும் அதன் தன்மை அதன் நோக்கம் ஒன்றாகவே இருந்தது. வெறுமனே ஆட்சியில் இருந்தவர்கள் பால் ரீதியில் மட்டும் உடலால் வேறுபட்டனர். சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கூறுகளால் இவர்கள் வேறுபட்டு இருக்கவில்லை. பெண் அங்கு எந்த விடுதலையும் பெற்றிருக்கவில்லை.

பெண் என்ற முதன்மைப்படுத்துதல் மூலம் அதை ஆண் வெறுப்பாக மாற்றி பெண்ணின் அனைத்துச் செயல்களையும் ஆதரிப்பதும், அதை மட்டும் முதன்மைப்படுத்துவதும் என்ற கடைக்கோடிக்குச் செல்கின்றனர். இதன் அடிப்படையில் வைக்கும் மற்றொரு வாதத்தைப் பார்ப்போம்.

அடிமைகளின் எண்ணிக்கை பெருக பெருக பிரமிடுகள் உருவாக்கப்பட்டன. இதில் பெண்கள் மட்டும் ஈடுபட்டதாகக் காட்டுவதன் (பக்கம்-95) நோக்கம்தான் என்ன? ஆண் அடிமைகளும் இதில் பங்காற்றினர் என்பதைத் திட்டமிட்டே மூடி மறைக்கப்படுகின்றது. அத்துடன் பிரமிடுகளை அடிமைகளின் மூலம் நிறுவினர் என திரிக்கின்றனர். அடிமைகள் எப்படி உருவானார்கள்? ஆணாதிக்க அமைப்பு அதற்கான அச்சாணியாக இருந்தது. பிரமிடுகள், கோபுரங்கள் உருவான வரலாறுகள் கடுமையான சுரண்டலுடன் கூடிய, அதீதமான உபரிக்கு உரிய பங்கு இங்கு திட்டவட்டமாக மூடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைக்கப்படுவது நிகழ்கின்றது. இந்தப் பிரமிடுகள் உருவான போது அங்கு பெண்கள் ஆட்சிகளும் நிலவியிருந்தன.

மிகவும் செல்வச் செழிப்பான நீர் வளங்கள் உள்ள பிரதேசத்தில் உற்பத்தி உபரியாகப் பெருகிய போது, அடிமை வாழ்க்கை நோ்விகிதத்தில் எகிறிப் பாய்ந்தது. அடிமைகளின் அடிப்படைத் தேவையை மறுத்ததன் மூலம் இயற்கையின் வளத்தைத் தனிச் சொத்துரிமை அமைப்பு தனதாக்கிய போது அது உபரியாகியது. வா்க்க முரண்பாடுகள் கூர்மையான போது உழைக்கும் வா்க்கத்தைச் சவுக்கு அடிக்கு முன்நிறுத்தி, உபரியின் சொந்தக்காரரான அதிகார வா்க்கம் தனது அடக்குமுறையின், அதிகாரத்தின் பெருமைகளையே பிரமிடாக்கினா். அந்தப் பிரமிடுகளை உருவாக்கிய தேவைகள் மறுக்கப்பட்ட அடிமைகள், அஸ்திவாரத்தின் தூண்களாக மாற ஆயிரக்கணக்கில் தம் உதிரத்தையே அஸ்திவரத்துக்குப் பாய்ச்சினா்.

இதுதான் சோழ கால கோபுரங்களின் வான் உயர்ந்த அதிகாரத்திலும் நடந்தது. தஞ்சைப் பிரகதிஸ்வரர் கோயில் (பெரிய கோவில்) (கங்கைகொண்ட சோழபுரம்). தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமன்றி, சொந்தச் சாதியைச் சேர்ந்த ஏழைகளின் மேல் நிறுவிய இந்துப் பண்பாட்டு ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை ஆட்சியே, கோபுரங்களாக வெளிப்பட்டன. மனித உழைப்பை உயிருடன் உறிந்து பலியிட்ட உயர்ந்த கோபுரங்களை, பிரமிடுகளைக் கட்டி முடிப்பதில் தொடங்கி அதற்குத் தனது ஒரு வாய் சோற்றைக் கூட உழைக்கும் மக்கள் தியாகம் செய்தனா். இந்த அடிமைகளின் சின்னங்கள் மேட்டுக் குடிகளின் கவா்ச்சிகரமான வக்கிரமான பிரமிடுகளாக, கோபுரங்களாக வெடித்துக் கிளம்பின.

அடிப்படையும் ஆதாரமற்றதுமாக, சமூகப் பொருளாதார எதார்த்தத்துக்கு எதிராக வைக்கும் மற்றொரு வாதத்தில் பெண்ணின் ஆட்சியை ஆண்கள் எப்படிக் கைப்பற்றினா் என்பதாகும். “ஆட்சி அதிகாரம் பெண் வழியில் சென்ற இடங்களில், ஒரு துணிச்சலான சாகசக்காரன் அரசியை வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து கொள்வதன் மூலமோ அல்லது கற்பழிப்பதன் மூலமோ அவளைத் தன் வசப்படுத்திக் கொள்வதன் மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.'' (பக்கம்-86)

இப்படி ஆணாதிக்கம் கோலோச்சியதாகக் கூறுவது பெண்ணியம் பற்றிய இழிவான கொச்சைத்தனமாகும். ஆணாதிக்க அமைப்பு என்பது உலகளவில் இது போன்ற அடிப்படைத் தத்துவத்தாலோ அல்லது உதிரிச் சம்பவத்தாலோ உருவானவையல்ல.

உலகம் தழுவிய ஆணாதிக்க அமைப்பு, விதிவிலக்கின்றி தனிச் சொத்துரிமை அமைப்பின் மேல் எழுந்ததே. ஆணாதிக்க அமைப்பில் பெண் ஆட்சியில் இருந்து அலங்கரித்த போது பலாத்காரமான சம்பவங்கள், சதிகள், நஞ்சூட்டல்கள் என எண்ணற்ற செயற்பாடுகள் தனிப்பட்ட மனிதன் தன் சொந்த அதிகாரத்தைப் பெறுவதற்காக நிகழ்ந்தவையே. இதில் ஆண் - பெண் வேறுபாடு இன்றி எதிர் பாலினத்தின் விடுதலை அல்லது ஒடுக்குதல் என்ற அடிப்படையில் பெண் அல்லது ஆண் ஒருநாளும் கையாண்டது இல்லை. மாறாக ஆணாதிக்க அமைப்பில் சொத்துரிமை இயங்கியலுக்கு ஏற்ப நடந்தவைதான். இதைப் பெண்ணியமாகவும், ஆணியமாகவும் ஜோடிப்பது வக்கிரமான கோட்பாடாகும்.

இதைப் போன்றே மற்றொரு வாத “பெண்களின் தனிச் சிறப்புரிமையின் மீதான மூர்க்கமான ஆணின் ஆக்கிரமிப்பு ஏற்பட்ட இந்தக் காலக்கட்டத்திலிருந்து மன்னா் குடும்பத்தில் முறையான புணா்ச்சி புகுத்தப்பட்டது. இதன்படி தனது மனைவி இறந்ததையொட்டி சிம்மாசனத்தை விட்டு இறங்குவதற்கு விருப்பமில்லாத அரசன் சிம்மாசனத்திற்கு நியாயமான வாரிசை, அதாவது அவளுடைய மகளைத் திருமணம் செய்து கொள்வான் அல்லது இதற்கு மாறாக, அவன் தனது புதல்வா்களில் (மகனை) ஒருவனைப் புதிய அரசிக்குத் திருமணம் செய்து கொடுப்பான்.'' (பக்கம்-86)

இது கூட எப்போதும் விதிவிலக்கான உதிரிச் சம்பவங்களே. இது ஆணாதிக்கத்துக்கும் பெண்ணியத்துக்கும் எதிரானது அல்லது சார்பானது அல்ல. இது இருக்கின்ற தனிச் சொத்துரிமை அமைப்பை எந்த விதத்திலும் மாற்றி விடவில்லை. தனிப்பட்ட ஆண் அல்லது பெண்ணைப் பாதிக்கின்ற வகையில் வா்க்கக் கொடூரங்களின் ஒரு பாகமாக இருந்தது. தனிச்சொத்துரிமையை ஆட்சியில் தக்கவைக்கவும், அதை நீடிக்கவும், சொந்த வா்க்க அதிகாரத்துக்கும், சுகபோகம் சார்ந்து இந்தச் சம்பவங்கள் புகுத்தப்பட்டன அல்லது புதிதாக நடைமுறையாக்கப்பட்டது. இதற்கு மதங்கள் கொள்கை விளக்கம் வழங்கின. ஆனால் இது ஆணாதிக்க அமைப்பின் உலகம் தழுவிய விதியாக இருக்கவில்லை. தனிப்பட்ட ஆண் - பெண் தனிச்சொத்துரிமை அமைப்பில் சுரண்டலின் தொடா்ச்சியைப் பேணி, தமது தனிச்சொத்துரிமை அமைப்பின் நலன்களைத் தக்கவைக்க செய்யப்பட்ட இரிவான பக்கங்கள் தான் இவை.

தொடா்ந்து இந்த நூல் உலகத்தை வகைப்படுத்தும் போது (பக்கம் -79)

1. முதலாவது கட்டத்தில் ஆற்றல் மிக்க அன்னை மட்டுமே உலகமாக இருக்கின்றாள் அல்லது படைக்கின்றாள். அவளுக்கு நிரந்தரமான காதலா்கள் இருக்கின்றனா். பல குழந்தைகளின் தாயாகவும் தலைமையானவளாகவும் இருக்கின்றாள்.

2. இரண்டாவது கட்டத்தில் அவளுக்கு ஒரு வாழ்க்கைத் துணைவன் இருக்கின்றான். அதாவது அவன் மகனாகவோ அல்லது இளைய சகோதரனாகவோ அல்லது இளைய மகனாகவோ இருக்கின்றான். இதில் இருந்தே அவனின் அதிகாரம் வளர்ச்சி அடைகின்றதாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. மூன்றாவது கட்டம் கடவுள், அரசன், வாழ்க்கைத் தலைவன் பெண் தெய்வத்துடன் சமமாக ஆட்சி புரிகின்றான். அவள் கீழே வீழ்த்தப்படுவதற்குக் களம் அமைக்கப்படுகின்றது. ஆண் கடவுள் அரசனாகின்றான். பெண் கடவுள் தோற்கடிக்கப்படுகின்றாள்.

அனைத்தையும் பாலியல் எல்லைக்குள் காட்டுவதன் மூலம், சமூகங்களின் வரலாற்றுப் பக்கத்தைத் திரிப்பது நிகழ்கின்றது. பெண் குழந்தைகளின் தாயாகவும், எல்லா ஆண்களுடனும் உறவு கொள்ளும் ஆற்றல் மிக்க அன்னையாக, அவளே உலகமாகக் கொண்ட பெண்ணாகவா இருந்தாள்? இல்லை.

மாறாக மனிதக் குரங்கில் இருந்து உருவான மனிதன் வேட்டையையும் இயற்கையையும் ஆதாரமாகக் கொண்ட மனிதனில் பெண் முதன்மை பெறவில்லை. அதுபோல் ஆணும் முதன்மை பெறவில்லை. இங்கு உழைப்பு சார்ந்த சமூகமே முதன்மை பெற்றதாக இருந்தது. இங்கு முதன்மை பெற்ற ஒரு பிரிவு என்று இருக்கவில்லை. ஆண் அல்லது பெண் இரு பகுதியினருமே ஒரே வகையில் உணவைத் தேடினர். ஒன்றையே உண்டனர்.

பால் உறுப்புகளும் அதன் செயல்வினை சார்ந்தும், பெண் கருவுறுவதும் மட்டும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் விதிவிலக்காக இருந்தது. குழந்தை பாதுகாப்பில் விசேடமாக எதையும் முதன்மைப்படுத்தப்படவில்லை. தாய் எல்லா உயிரினத்தைப் போலவும் குழந்தையின் பாதுகாப்பில், மூர்க்கமானவளாக, ஆணைவிட அதிக பலம் கொண்ட எதிர்ப்பாற்றல் கொண்டவளாக உயிர்வாழும் போராட்டத்தில் திகழ்ந்தாள். ஆண் இதற்கு அக்கம் பக்கமாகத் தொழிற்பட்டான். இது ஒரு குறித்த வேலைப் பிரிவினையாக இருக்கவில்லை. இயற்கையான ஒரு பிரிவாக இருந்த போதும், வாழ்வின் உயிர் வாழ்தல் சார்ந்து இது முரணாக மாறி விடவில்லை. பெண்ணை மதிக்கும் சமூக அடிப்படை பின்னால் ஏற்படுகின்றது. இது எப்படி உருவானது?

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட உழைப்புப் பிரிவினையில் இது உருவானது. உயிர்வாழும் போராட்டத்தில் குழந்தையின் பாதுகாப்புக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்ட அச்சுறுத்தலின் போது தற்காப்பு கருதி குழந்தையைத் தாங்கிய கருத்தரித்த பெண், குழந்தையுடன் பெண் நிலைத்து நிற்பது அவசியமாகின்றது. இதன் போது கூட அனைத்துப் பெண்களும் தனித்து விடவில்லை. தாய்மை மற்றும் கருத்தரித்த பெண் நிலையாகத் தற்காப்பில் தனித்து நிற்கத் தொடங்கியது முதல் படிநிலை மாற்றம் ஆரம்பமானது.

அடுத்து தனித்து நின்ற இடங்கள் மேலான மற்ற மிருகங்களின் இலகுவான தாக்குதலால் ஏற்பட்ட இழப்பை எதிர்கொள்ள, முதிய பெண்களும் முதிய ஆண்களும் அதைத் தொடர்ந்து அனைத்துப் பெண்களும் நிலையாகத் தனித்து வாழும் வேலைப்பிரிவினை உருவானது. இது ஓர் இயங்கியல் ரீதியான நீண்ட வளர்ச்சிப் போக்கில் நிகழ்ந்தது. முதலில் தனித்த பெண்





தற்காப்பு ஆயுதங்களை மேம்படுத்தியதுடன், சுற்றுச்சூழல் மேலான ஆராய்வில் முதிர்ச்சி பெற்று விவசாயத்தைக் கண்டுபிடித்தாள். இதனால் தனித்து நிற்கும் இயல்பு படிமுறையாக வளர்ச்சி கண்டது. இது ஆண் தனித்து நிற்கும் வரை தொடர்ச்சியான இயங்கியல் தன்மை கொண்டதாக இருந்தது. உணவு உற்பத்தி மற்றும் உழைக்கும் கைகளை உடைய குழந்தை செல்வம் சார்ந்து பெண் சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டாள்.

அத்துடன் குழுவின் பலம் உழைக்கும் இரண்டு கைகள் சார்ந்து பெருகிய போது, எதிரியை இலகுவாக வெல்வது நடைமுறையாகின்ற போது, குழுவின் உயிர்வாழும் ஆற்றல் பலமான போது குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மை சிறப்புக்குள்ளாகியது. பெண் போற்றப்படுவது சமூக நடைமுறையாகியது. பெண் நிலையாக நிற்பது மேலும் பலப்பட்டு விவசாயத்தை வாழ்வின் ஆதாரமாக்கி, மிருக வளர்ப்பை உருவாக்கிய போது, குழுவின் உயிர் வாழும் ஆற்றல் மேலும் முன்பைவிட பல மடங்கு உயர்ச்சி அடைந்தது. இதைக் கண்டறிந்து செயற்படுத்திய பெண்களின் மதிப்பு சமுதாயத்தில் உயர்ந்த மதிப்பாகியது. இந்த வளர்ச்சியில் பெண் சமுதாயத்தைத் தலைமை தாங்கி நடத்தியது மட்டுமின்றி, புராதான கம்யூனிசத்தைச் சமூகக் கொள்கையாக நடைமுறையில் கொண்டிருந்தாள். எதுவும் யாருக்கும் சொந்தமில்லை. அனைத்தும் சமூகத்தின் சொத்தாக நிலவியது. தாயின் தாய்மைக் கூறுகள் சமூகத்தின் கண்ணோட்டமாக நிலவியதால், இந்த உன்னதமான தாயின் நிலை காரணமாக இதைச் சமுதாயம் போற்றிப் பாதுகாத்தது. குழுவின் பாதுகாப்பு முதன்மையானதாகவும். உயிர்வாழும் ஆற்றல் பகிரப்பட்டு செம்மையாக நிலவியது. உற்பத்தியும் அதன் பயன்பாடும் தாய்வழி அமைப்பில் என்றைக்கும் ஒரு தனிமனிதனின் சொத்தாக இருக்கவில்லை. இதுவே தாய்வழிச் சமூகத்தின் சிறப்பான முதன்மையான அம்சமாகும்.

தாய்வழிச் சமூகத்தில் நிலவிய சமூகச் சொத்துரிமை, எப்போது மாற்றப்பட்டதோ அப்போதே தனிச்சொத்துரிமை உருவானது. இங்கு ஆண் அல்லது பெண் மரபு சார்ந்து தலைமை ஏற்ற போது, அவை அனைத்தும் ஆணாதிக்கச் சமூக அமைப்பின் ஒரு வடிவமாகத் திகழ்ந்தது. சமாந்தரமாகச் சமச்சீராக ஆணாதிக்கமும் பெண்ணியமும் ஒரு நாளும் நீடிக்கவில்லை. இங்கு ஒன்று முதன்மைக் கூறாக மற்றது இரண்டாவது கூறாக நீடித்த வளர்ச்சியையும் அழிவையும் சந்தித்தது. சமூகக் கண்ணோட்டம் ஒன்றில் தனிச்சொத்துரிமை ஆணாதிக்கமாகவும் அல்லது பெண்ணின் தலைமையிலான சமூகச் சொத்துரிமை கொண்ட சமூகமாகவே நீடித்தது. இரண்டும் ஒரே நேரத்தில் ஒரே சமூக அமைப்பாக இருக்கவில்லை. ஆனால் சமூகத்தினுள் பல்வேறு கூறுகள் உதிரியாக மட்டும் நீடித்தன. சமூகக் கண்ணோட்டமாக நீடிக்கவில்லை, நீடிக்கமுடியாது. இது எல்லாக் கூறுகளுக்கும் பொருந்தும். ஆனால் இந்த மாற்றம் உலகளவில் ஒரே நாளில் சடுதியாக (விரைவாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படவில்லை. உற்பத்தி மற்றும் உழைப்புப் பிரிவினை வெவ்வேறு பிரதேசத்தில், வெவ்வேறு காலத்தில் உருவானது போது, ஆணாதிக்கமும் அதற்கு இசைவாகவே இருந்தது.

இதை மறுத்து வரலாற்றைக் குறிப்பாக்கி திரித்துக் காட்டும் வடிவத்தைப் பார்ப்போம். "பெண்கள் மட்டுமே புதிய உயிரை உண்டாக்க முடியும். எனவே அதன் காரணமாகப் பெண்கள் மதிக்கப்பட்டு வந்தனர். இயற்கையின் எல்லாச் சக்தியும் இயற்கையின் மீதான சக்தியும் அவர்களுடையதே" (பக்கம் - 38)

வெறும் உயிரை உண்டாக்கும் (இயந்திரப்) பெண் என்பதால் பெண் மதிக்கப்படவில்லை. மாறாக உயிர்வாழும் போராட்டத்தில் உணவு கிடைப்பதை உறுதி செய்ததாலும் நீடிக்க வைத்த தலைமுறையின் உரைக்கும் ஆற்றல் சார்ந்த தாய்மையின் தொடர்ச்சியாலும் அவள் மதிக்கப் பெற்றாள். பெண் மனித இனத்தின் உயிர்வாழும் ஆற்றலின் மையமாகத் திகழ்ந்தாள். உழைக்கும் இரண்டு கைகளையும், விவசாயம் மற்றும் மிருக வளர்ப்பின் மூலம் சமுதாயத்தின் உயிர் மூச்சை உயர்ந்த நிலைக்கு நகர்த்தினாள். இதற்கு மாறாக இயற்கை மீதான எல்லாச் சக்தியும் அவளுடையதே என்ற அடிப்படையில் மதிக்கப்படவில்லை. மாறாக நிலையாக நிலைத்து வாழத் தொடங்கிய சமுதாயத்தில், இயற்கை மீது தானிய உற்பத்தி மற்றும் மிருக வளர்ப்பை உருவாக்கி மனிதத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆற்றலைப் பெற்ற போதே மதிக்கப்பெற்றாள். அத்துடன் தேவைக்கு ஏற்ப பகிர்வைச் சமுதாயத்தின் ஒழுக்கமாகக் கொண்டு தலைமை தாங்கினாள். இதைப் பெண்கள் தமது வாழ்வு சார்ந்து உழைப்புப் பிரிவினை சார்ந்து சாதிக்க முடிந்தபோதே, பெண்ணின் மதிப்பு மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்ந்தது. சமுதாயத் தேவையைப் பூர்த்தி செய்வதில், பெண்ணின் குறிப்பானதும் முக்கியமானதுமான உழைப்பு சார்ந்த உற்பத்தியும், உழைப்பை விருத்தி செய்த இனவிருத்தியின் நீடித்த பண்பும், இயல்பாகச் சமூகத்தில் மதிப்புக்கு உரியதாகியது. இதற்கு வெளியில் இதற்கு யாரும் வேறு விதமாகப் பூச்சூட்ட முடியாது.

அடுத்த திரிபைப் பார்ப்போம். "எண்ணற்ற பண்டைக்காலப் புராணக் கதைகள் பெண்களிடமிருந்து அல்லது பெண் கடவுள்களிடமிருந்துதான் மொழி பிறந்தது என்று கூறுகின்றன" (பக்கம் 191) என்று புராணக் கதைகள் மற்றும் கல்விக்கான பெண் கடவுளை ஆதாரமாக வைக்கின்றார்.

மொழியை ஆண் அல்லது பெண் உருவாக்கியதாகக் கூறுவது ஓர் எல்லைக்குட்பட்ட எடுகோள்தான். இந்த நூல் பார்க்க மறுத்த தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான நெருக்கமான உறவு, மொழிக்கான முயற்சியில் மிக தீர்க்கமான பங்கை ஆற்றியிருக்கும். இதில் குழந்தை கூடுதலாகத் தாயிடம் தனது தேவையைக் கோருவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். குழந்தையின் உந்துதல்தான், தாயின் மொழியாகின்றது. இதில் ஆண் -





பெண் குழந்தைக்கு இடையில் பேதம் இருந்ததில்லை. தாய் குழந்தை மேல் ஆண் - பெண் பேதத்தைக் காட்டியதில்லை.

சமுதாயத்தில் மிக நெருக்கமான தாய் - குழந்தை உறவில், குழந்தை தாயை நோக்கிய உள்ளுணர்வுடன் கூடிய தேவை மொழிக்கான முதல் முயற்சியாக இருந்திருக்கும். மனித உணர்ச்சி உடலில் பிரதிபலித்து, அதுவே தாள கதியாகின்ற போது மொழிக்கு அஸ்திவாரமிட்டது. ஆனால் இந்த மொழி உணர்ச்சி சார்ந்த மிக குறுகிய மொழி குழந்தைக்கும் தாய்க்கும் இடையில் மட்டும் பெரும்பாலும் நீடித்தது. இதை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் அனுபவத்தை, அதை வெளிப்படுத்தும் ஆற்றலை உருவாக்குகின்றது. ஆனால் மொழியின் விரிவாக்கம் சமூக வாழ்வில், சமுதாயத்தின் ஒன்றுபட்ட உழைக்கும் வாழ்வுக்கான போராட்டத்தில் இருந்து பரிணாமித்தது. உழைப்பையும், உழைப்புக்குப் பயன்படும் பொருட்களை விளக்கவும், புரிய வைக்கவும் முயன்ற போது மொழி உயர்ந்த கட்டத்துக்கு வளர்ச்சி பெற்றது.

முதலில் குழந்தை தாய் உறவில் மொழி ஓர் அர்த்தமற்ற கத்தலாக, கொஞ்சலாக, கெஞ்சலாக, கோரிக்கையாக, பாசம் நிறைந்த உணர்ச்சியாக வெளிப்பட்டதில் இருந்து, மொழி பொருள்சார்ந்து உழைப்பைக் கையாள்வதில் இருந்து சீர்பட்டு அர்த்தமுள்ள பொருள் சார்ந்தே வளர்ச்சி பெற்றது. அதாவது மொழி பொருள்சார்ந்து அதற்குரிய அர்த்தமாகிய போது, சீர்பட்ட ஓசைகள் ஒரு பொது மொழியாகின்றது.

பெண்ணின் அடிமைத்தனத்துக்குக் காரணமாகக் கூறும் முந்தைய வாதத்துக்கு முரண்பாடான திரிபு ஒன்றைப் பார்ப்போம். பெண்களைக் கற்பழித்தே தனிப்பட்ட ஆண் தொடங்கி ஆணாதிக்கச் சமூகம் தமது மேலாண்மையை நிறுவியது (பக்கம்-111)

"வரலாற்றுக்கு முந்திய காலத்தில் பாலியல் ரீதியான பலாத்காரமும் நடைபெறாமல் இருக்கவில்லை" (பக்கம்-29)

ஆணாதிக்கத்தைப் பெண் மீதான கற்பழிப்பில் நிறுவப்பட்டதாகக் கூறி புனைவது, இயற்கையின் வரலாற்று இயங்கியலை மறுப்பதாகும். கற்பழிப்பது என்பது ஆணாதிக்கத்தால் இறுகிய ஒரு சமுதாயத்தின் குறித்த பண்பேயாகும். தனிச் சொத்துரிமை அமைப்பில் பெண்ணை அடிமையாக்கி பின் ஏற்பட்ட பாலியல் ரீதியான பிளவும், பாலியல் மறுப்பும், திருமணம் என்ற பெயரில் உள்ள விபச்சாரமும் கற்பழிப்பின் ஊற்று மூலங்களாகும். ஒரு பெண்ணின் மீதான பலாத்காரம் முதல் கற்பழிப்பு வரை, தனிச்சொத்துரிமை என்ற கண்ணோட்டம் சார்ந்தே சமூகத்தில் நடைமுறையாகியது.

தனிச்சொத்துரிமைக்கு முந்திய தாய்வழிச் சமூகத்தில் தாயின் ஆட்சியிலும் கற்பழிப்பு என்பது, நகைப்புக்குரிய ஒரு கண்மூடித்தனமான எடுகோளாகும். காதல் கூட தனிச்சொத்துரிமை அமைப்பில் வரைமுறையற்ற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கற்பழிப்புக்கு எதிர் நிலையில் உருவான ஒரு குறித்த பண்பாகும். (சமுதாயத்தில் சில விலக்குகள் இருந்தது.) ஆண் - பெண் புணர்ச்சி நிலவிய சமுதாயத்தில், தனிச்சொத்துரிமை புகுந்த போது சொத்துடைய வர்க்கம் அதைத் தனது நலனுக்கு இசைவாக்கியது. வரைமுறையற்ற பாலியல் நடைமுறையைச் சொத்துரிமை சார்ந்து சொத்துடைய வர்க்கம் கற்பழிப்பாக மாற்றியது. இங்கு பெண்ணின் உணர்வைச் சொத்துரிமை மறுக்கின்ற போதே, முந்தைய சமுதாயத்தில் இருந்து வேறுபட்டு கற்பழிப்பாகியது.

பெண் தன் மீதான கற்பழிப்பைத் தடுக்கும் தற்காப்பில் நின்று உருவாக்கிய ஓர் உணர்ச்சி காதலாகும். பெண்ணைத் தனிச்சொத்துரிமை கண்ணோட்டத்தில் அடிமைப்படுத்திய பின்புதான், கற்பழிப்பு நடக்கத் தொடங்கியது. தனிச்சொத்துரிமை வளர்ச்சியடைய, பெண் அடிமைத்தனம் ஒரு சமூக ஒழுக்கமாகியது. ஆணாதிக்கச் சமூகச் சொத்துரிமையால் தூக்கி எறியப்பட்டுத் தனிச் சொத்துரிமை சார்ந்த வாரிசு உரிமையில் பங்காற்ற முடியாத பெண்கள், விபச்சாரம் என்ற நிலைக்குள் ஆணாதிக்க அமைப்பு தள்ளிச் சென்றது. இதன் மூலம் வரைமுறையற்ற புணர்ச்சியைச் சொத்துடைய ஆணாதிக்கம் தக்கவைத்தது. இதைப் பெண்களுக்குச் சொத்துடைமை சார்ந்து மறுத்ததுடன், இருதார இணை (பரஸ்பரம் காதலிப்பதை) மணத்தை அழித்து ஒருதார மணமான திருமணத்தை உருவாக்கி அதையும் விபச்சாரமாக்கியது. விபச்சாரம் மனிதச் சமுதாயத்தின் ஒரு சாரமாகியது.

இதற்கு மாறாகப் பெண்கள் மீதான கற்பழிப்பைச் செய்து பின்பு பெண்ணை அடிமைப்படுத்தவில்லை. பெண் வழிச் சமுதாயத்தில் கற்பழிப்பு என்பது நினைத்தே பார்க்க முடியாத ஒன்றாகும். சில மரபுகள் சார்ந்து இன்று கூட விரும்பிய ஆண் விரும்பிய பெண்ணைப் புணர்வதும், இதை அடிக்கடி மாற்றிக் கொள்வதும் எதார்த்தத்தில் காணப்படுகின்றது. அதாவது நான் சொத்துடைய இன்றைய வர்க்கத்தின் வரைமுறையற்ற நுகர்வு விபச்சாரத்தைக் குறிப்பிடவில்லை. மாறாக நாகரிகம் எட்டாத மிக வறிய கிராமங்களில் நடக்கும், சில மரபு சார்ந்த இயற்கையான உறவைக் குறிப்பிடுகின்றேன். நூலின் முன் பகுதியில் இவை பற்றிய ஆதாரத்தையும் தந்துள்ளேன்.

எந்தப் பெண்ணும் எந்த ஆணையும் உரிமை கொள்ளாத சமுதாயத்தில், கற்பழிப்பு என்பது கற்பனையே. கற்பழித்த பின் தான் பெண்ணை ஆண் அடிமைப்படுத்தினான் என்பது ஒரு கற்பனையே. பெண்ணை அடிமைப்படுத்திய பின்புதான் கற்பழிப்புகள் நடந்தன என்பதே மனித இனத்தின் வரலாறாகும்.

ஆணாதிக்கம் எப்படி உருவானது என்று கூறும் மற்றொரு திரிபைப் பார்ப்போம். ‘‘பெண் இனத்தினுடைய அதிகாரத்தின் சவாலை ஏற்றுக் கொள்வதற்கு ஆணின் செருக்கு பொங்கி எழுந்தது. வருகின்ற ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பாலியலையும் சமுதாயங்களையும் பிரிப்பதற்கான பாலியல்





போரைத் துவங்கியதன் மூலம், மனிதன் பெண்ணை ஆற்றல் மிக்க அன்னையாகவும் பெண் தெய்வமாகவும், போர்ப்படையாளியாகவும், காதலியாகவும் மற்றும் அரசியாகயாகவும் ஆக்கிய அனைத்துக்கும் சாவு மணியடித்து அழிப்பதன் மூலம் தனது ஆண் தன்மையை வலியுறுத்துவதற்கு முயன்றான்.’’ (பக்கம்-68)

“பாலியல் போரில் பெண்களின் உடம்புகள் இத்தகைய ஒரு கேந்திரமான போர்க்களமாக மாறியதேன்? இதற்கான பதில் மேலாதிக்கத்திற்கான ஆணினத்தினுடைய போராட்டத்தின் மையத்தில் அடங்கியுள்ளது. பெண்களைத் தனிப்பிரிவாக வேறுபட்டவர்களாக, தாழ்ந்தவர்களாக, கீழ்ப்பட்டவர்களாகக் குறிப்பிட்டதன் மூலம் மனித இனத்தின் வரலாற்றில் முதலாவது மற்றும் மிகப் பெரிய ஒதுக்கப்பட்ட பிரிவாக்கினர்.’’ (பக்கம்-150)

பெண்ணை அடிமைப்படுத்த ஆணின் பாலியல் போரும், செருக்கும், மேலாதிக்கமும்தான் காரணம் என்ற வாதம் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தையே மறுக்கின்றது. அத்துடன் தனிப்பிரிவாக, தாழ்ந்தவர்களாக, கீழ்ப்பட்டவர்களாக, வேறுபட்டவர்களாகக் காட்டியதன் மூலம், அடிமைப்படுத்தினர் என்பது பொருளை மறுக்கின்ற அர்த்தமற்ற கற்பனைப் புனைவாகும்.

பாலியல் போரை ஆண் நடத்தினான் எனின், கற்பனையான அழகான பூச்சூடல்தான். பாலியலே மனித வரலாற்றின் தத்துவம் என்பதும் பெண்ணின் அடிமைத் தனத்துக்கு அதுதான் அடிப்படை என்பதும் இன்றைய உலகமயமாதலின் வெட்டுமுகம்தான். பால் ரீதியான வேறுபாடு பாலியல் போரை நடத்துவதற்கான எந்த அடிப்படையையும் கொண்டிருக்கவில்லை. உயிரினத் தொகுதிகளில் ஒரே உயிரினத்தில் ஆண் பெண் என்ற ஒற்றைத் தொகுதியில் தொடங்கி உருவான ஆண் - பெண் என்ற வேறுபட்ட உயிர்ப் பிரிவில் என்றைக்கும் பாலியல் யுத்தம் நடக்கவில்லை.

பாலியல் எப்போதும் ஆண் - பெண் உறவில் தீர்க்கமானதாகவும், நேசத்துக்குரியதாகவும் இருந்துள்ளது. ஆண் - பெண்ணின் நெருக்கமான பிணைப்பு, சமூக உருவாக்கத்தை மேலும் ஆழமாக்கியது. உயிர் வாழ்வதற்கான போராட்டத்திலும், உணவைத் தேடும் போராட்டத்திலும் சமூகக் கூட்டுணர்வு நிலவிய போது, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மிக நெருங்கிய உறவு அச்சமூகத்தின் ஐக்கியத்தைத் தொடர்ச்சியாகப் பலமாக்கியது. இங்கு பெண் தரித்து நின்ற காலத்திலும், ஆண் வேட்டைக்குச் சென்ற நிலையிலும் கூட இந்த உறவு என்றைக்கும் பிரிந்து சென்றதில்லை.

ஆண் - பெண்ணுக்கிடையில் பாலியல் போர் நடந்தது என்பது கற்பனை ஆகும். இது போன்று ஆணின் செருக்கு பெண்ணை அடிமைப்படுத்தியது என்பதும் கற்பனையாகும். செருக்கு என்பது தனிச் சொத்துரிமை அமைப்புக்கே உரிய ஒன்றாகும் தனிச்சொத்துரிமை அமைப்புக்கு முன்பு செருக்கு இருந்தது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது வெற்று வெட்டித்தனமாகும். அதற்கு முன் செருக்கு ஏற்படுவதற்குச் சமூக அடிப்படை எதுவும் கிடையாது. உழைப்பும் அதன் பயன்பாடும் சமூகச் சொத்துரிமையாக இருந்த வரை, செருக்கு இருந்தது என்பது சமூக அடிப்படையற்ற ஒன்றாகும். தனிச் சொத்துரிமை தான் தனது மேலாண்மை சார்ந்து செருக்கு என்ற புதிய உணர்வை உண்டாக்குகின்றது. செருக்கு என்ற உணர்வுக்கு முன்பே பெண் அடிமையாகிவிட்டாள். செருக்கு, பாலியல் அடிமைத்தனம் என்பன ஆணாதிக்க அமைப்பில் உருவானவை. எந்த வரலாற்றிலும் ஒரு பாலியல் போர் நடக்கவில்லை. ஆணாதிக்க வரலாற்றில் பாலியல் அடிமைத்தனமும், சேவைத்தனமும், நூகர்வும் விபச்சார உணர்வுக்குள் அரங்கேறுகின்றது.

தாழ்ந்தவர்கள், கீழ்ப்பட்டவர்கள், வேறுபட்டவர்கள் எனக் காட்டி பெண்ணைத் தனிப்பிரிவாக மாற்றி ஆணாதிக்கத்தை ஆண்கள் நிறுவியது என்பது நல்ல மாஜிக் வித்தையாகும். எதையும் எப்படியும் கற்பனையில் மாற்றிவிடவோ, உருவாக்கிவிடவோ முடியாது. மாற்ற வேண்டுமாயின் அதற்குச் சில அடிப்படையான செயல்பாடுகள் தேவை. இது உணர்வில் இருந்து பொருளை உற்பத்தி செய்யும் செயல் வரை பொருந்தும். பெண்கள் தாழ்ந்தவர்களாக, கீழ்ப்பட்டவர்களாக, வேறுபட்டவர்களாக, தனிப்பிரிவாக இன்று வாழ்கின்றனர் எனின், அது ஆணின் விருப்பங்கள் என்ற உணர்வு மாற்றி விடவில்லை. ஆணுக்கு அப்படி ஒரு விருப்ப உணர்வு வரவேண்டுமாயின் கூட, அது கற்பனையில் உருவாக முடியாது. விருப்பங்கள் தனிச்சொத்துடைமை அமைப்பில்தான், அடிமைப்படுத்தும் கண்ணோட்டத்துக்கு அடிப்படையாகின்றது. இதுவே பின்னாள் மனித இனத்துக்கு எதிரான, இயற்கைக்கும் எதிரான உணர்ச்சிகளை உருவாக்குகின்றது.

மனிதச் சிந்தனை ஆற்றல் எப்படி உருவானது? என்பதை எப்படி திரிக்கின்றார் என்று பார்ப்போம். மாதவிடாய்க்கும் சந்திரனின் பிறைக்கும் இடையில் தொடர்புபடுத்தி பெண் அரூபமானதை உணர்ந்து கொள்ளவும், இணைப்புகளை ஏற்படுத்தவும், உருவக ரீதியில் சிந்திப்பதற்கான ஆற்றலைத் தூண்டிவிட்டன (பக்கம் - 17) என்ற கூற்று நகைப்புக்குரியது.

பெண்ணின் மாதவிடாய்க்கும் சந்திரனின் பிறைக்கும் தொடர்பற்ற ஒரு நிலையில், கற்பனைக் கனவுகள் ஒருதலைபட்சமாகப் பெண்ணை உயர்த்திக் காட்டுவதில் திரிபடைகின்றது. பிறை ஓர் ஒழுங்குமுறைக்கு ஊடாக, கோள்களின் சுழற்சியில் ஏற்படுகின்றது. ஆனால் மாதவிடாய் வரைமுறையற்ற, ஒழுங்கற்ற முறையில் பெண்களிடையே உருவாவதுடன், தனிப்பட்ட பெண்ணுக்கு மட்டும் ஒழுங்குக்கு உட்படுகின்றது. இதிலும் மாதவிடாய் தடைப்படும் போது ஒழுங்கு குலைந்து புதிய வடிவில் ஒழுங்குக்கு வருகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு, பிறையுடன் எந்த விதத்திலும் பொருத்திப் பார்க்க முடியாது. அத்துடன் மாதவிடாயும், பிறையும் எண்ணிக்கையில் ஒரே நாட்களை அடிப்படையாகக் கொண்ட சுழற்சியை அடிப்படையாகக் கொண்டவை அல்ல.



இந்த நிலையில் இதனுடன் பொருந்திய பெண் சிந்திப்பதற்கான ஆற்றலைப் பெற்றாள் என்பது கற்பனையானது. சிந்தனையின் ஆற்றல் என்பது உணவைத் தேடுவது எப்படி என்ற அடிப்படையில் இருந்து தொடங்குகின்றது. உணவை இயற்கையிலும், செயற்கையில் கருவிகளைக் கொண்டும் பெறுவது எப்படி என்ற அடிப்படையில் இருந்து பரிணமிக்கின்றது. இதற்கு வெளியில் இருந்து அல்ல. சிந்தனை பொருளைக் குறித்து அதன் செயல்பாடுகளைக் குறித்து அதை எப்படி மாற்றி அமைப்பது? என்ற வடிவில் மொழியாக வளர்ச்சி பெற்றது. இதற்கு வெளியில் இருந்து அல்ல. உணவை எப்படி பெறுவது என்பதில் சிந்தனை பரிணமிக்கின்றது.

குரங்கில் இருந்து மனிதனாக மாறிய படிநிலையிலும் சரி, அடுத்தடுத்த மனித முன்னேற்றத்திலும் சரி உணவைத் தேடும் உழைப்பு சார்ந்தே சிந்தனை வளர்ச்சி பெற்றது. இது இயற்கையான பொருள் மேலானதாக அதன் மேலான உழைப்பு சார்ந்ததாக இருந்தது. தனிச்சொத்துரிமை அமைப்பு உருவான பின்பு, கருத்துமுதல்வாதம் உள்ளடங்கிய வகையில் உபரியை எப்படி எந்த தளத்தில் பெறுவது சார்ந்து சிந்தனை திரிபடைந்து பிரிவடைகின்றது. இதற்கு முந்திய சிந்தனை இயற்கை மீதானதாகவே எப்போதும் இருந்தது.

தொடர்ந்து கோட்பாடு ரீதியாக ஆணாதிக்கத்தைக் காப்பாற்ற பெண் பற்றி கற்பனையான பிரமிப்புகளை முன்வைப்பதைப் பார்ப்போம். "முதலாவது (ஆதிகாலப் பெண்) பெண் சிற்றின்ப வேட்கையை மாதவிடாயாக மாற்றுவதற்குக் கற்றுக் கொண்டாள். இது அவளை ஆணுக்கு ஆண்டு முழுவதும் பாலின ரீதியில் நுகரச் செய்வதற்கு அனுகூலமாக்கியது." (பக்கம்-20)

என்ன வேடிக்கையான வாதம். சரி எப்படி பெண் சிற்றின்ப வேட்கையைக் கற்றுக் கொள்ளமுடிந்தது? எப்படி மாற்றி அமைக்க முடிந்தது? உயிரினத் தொகுதி தனது உயிாவாழும் ஆற்றலுக்கான உந்துதல், அதனால் மனிதன் தனது உழைப்பைக் கொண்டு வாழ முடிந்த போது, தனது உடலை அதற்கு இசைவாக நீண்ட பல படிநிலைகளில் மாற்றிக் கொள்ள முனைகின்றான். இதனால் உடற்கூறுகள் மனித உழைப்புச் சார்ந்தும், உயிர்வாழும் ஆற்றல் சார்ந்தும் பரிணாமம் அடைகின்றது. இது நின்றுவிடாது தொடர்கின்றது. இதில் பாலியல் கூறும் ஒன்று.

பெண் - ஆண் என இருவரும் பாலியல் உறவு கொள்ளும் வகையில் சமச்சீராகவே ஒரே உயிரியல் தொகுதியில் தன்னைத் தான் வாழும் முறை சார்ந்த பரிணாமத்துக்கு இசைவாக மாற்றி அமைக்கின்றது. இதைப் பெண் மட்டும் தனக்குச் சார்பாக விரும்பியவாறு மாற்றவில்லை, மாற்றவும் முடியாது. மிருகத்தில் இருந்து பிரிந்த மனித இனத்தில், உழைப்புக்கும் இயற்கைக்கும் உள்ள உறவே உடல்ரீதியான மாற்றத்தை உருவாக்குகின்றது.

இதைப் போன்ற மற்றொரு கற்பனையாகக் கூறியதைப் பார்ப்போம். "அம்மண மனிதக் குரங்கு பற்றிக் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்குவது போன்று, பெண் மார்பகங்களை வளர்த்துக் கொண்டதன் மூலம் புணர்ச்சியை மேலும் இன்பகரமாக்கும், இந்த விருப்பத்திற்கு விட்டுக் கொடுத்தது.'' (பக்கம் - 20)

என்ன வக்கிரமான இன்றைய ஏகாதிபத்திய நக்குவாதம். பெண் மார்பகத்தை இன்பம் தரும் பாலியல் கூறாக மாற்றினாள் என்றால் அதுவும் ஒரு கற்பனையே. ஓர் உறுப்பைப் பாலியல் கூறாக மாற்றமுடியாது. பாலியல் கூறு என்பது இயற்கையான இனப்பெருக்கம் சார்ந்தது. மார்புகள் தாய்மைக் கூறில் திகழும் முக்கியமான உணவூட்டும் ஓர் அங்கம். குழந்தையின் உயிர்வாழ்வுக்கு மிக முக்கியமான அடிப்படையான உறுப்பாகும்.

உண்மையில் மார்பகம் குழந்தைக்குப் பால் கொடுக்கும் ஓர் உறுப்பு மட்டுமேயாகும். அது இயற்கையாகவே குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குகின்றது. குழந்தை அதன் வெதுவெதுப்பில் தூங்கி வாழும் மென்மையான தங்குமிடம் மேனியாகின்றது. இது பாலியல் உறவில் குறிப்பான பாலியல் உறுப்பு அல்ல. எந்த மிருகமும் இதைப் பாலியல் உறுப்பாகக் கருதி புணர்வதில்லை. நவீன மூலதனத்தினால் புட்டிப்பால் வர, முன்பு மார்பகத்தின் முக்கியத்துவம் திரிபுகள் இருந்த போதும் பின்பு தெளிவாகப் பளிச்சென இருந்தது. பெண்ணின் மார்பு பற்றிய நவீன புனைவுகள் அனைத்தும் ஆணாதிக்க அமைப்பில் ஏற்பட்ட வக்கிரங்களே.

ஒரு பெண்ணைக் கற்பழிக்க எண்ணும் கண்ணோட்டம் போன்று, பெண்ணின் மார்பு பற்றி கூறப்பட்ட பல நிலப்பிரபுத்துவ உற்பத்தி சார்ந்த பாடல்கள் காணப்படுகின்றது. முதலாளித்துவம் இதைப் பின்னால் நவீனப்படுத்தியது. உண்மையில் ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் மார்பு பற்றிய கற்பனைப் புனைவுகள், படிப்படியாக ஆண் - பெண் சிந்தனைத் தளத்தில் பாலியல் உறுப்பாக மாறுகின்றது.

உண்மையில் ஆணாதிக்கச் சிந்தனைத் தளத்தில், மார்பகம் ஒரு பாலியல் உறுப்பாக மாற்றப்பட்டதே ஒழிய, அதற்குரிய இயற்கையான சமூகத் தேவையின் அடிப்படையில் இருந்து அல்ல. குழந்தைக்குப் பால் கொடுப்பதை மறுக்கின்றது. ஆணாதிக்கச் சிந்தனைக்குத் தீனி போடுகின்றது. மார்பகத்தைப் பெண் வளர்த்துள்ளாள் என்பதன் மூலம் மார்பகம் சிறுத்த பெண்களை ஆணாதிக்க இழிவாடலுக்குள் இட்டுச் செல்லுகின்றது. இது மட்டுமா? இன்று செயற்கையாகவே மார்பகம் செய்யப்படுகின்றது. பெண்ணின் மார்பகத்தை ஆணாதிக்கம் பாலியல் உறுப்பாக்கியதால், மூலதன்ம தனது விளம்பரத்தின் மையமான இருப்பிடம் ஆக்கிவிட்டது.

அடுத்து மற்றொரு உயிரியல் உறுப்பைப் பற்றிய திரிபைப் பார்ப்போம். “பெண்கள்தான் மனித இனமேயாவர். சக்தி வாய்ந்த தொடக்கப் பாலினமாவர். ஆண்மகன் உயிரியல் ரீதியில் பின்னர் ஏற்பட்டவனேயாகும்.'' (பக்கம்-4)



இதற்குக் கருவுறும் நிகழ்வின் போது பெண்ணை உருவாக்கும் ஒரே இணையானப் பாலினக் கூறு XX இலகுவாக இணைவதாகவும் ஆணை உருவாக்கும் வேறுபட்ட இணையான பாலினக் கூறு XY வேற்றுமைக்கிடையில் இணைவதையும் எடுத்துக்காட்டுகின்றார். கரு இணைவில் உள்ள வேறுபாடுகளைக் கொண்டு ஆண்கள் உயிரியல் ரீதியில் உருத்திரிந்தவர்கள் என்றும், வழிவிலகி தோன்றியவர்கள் என்றும் காட்டுகின்றார். உண்மையில் அறிவியல் ஆராய்ச்சிகளை ஆணாதிக்கம் போன்று, சீரழிந்த பெண்ணியவாதிகள் போன்று திரித்துக் காட்டுகின்றார்.

மனிதன் மனிதனாக எப்போதும் தோன்றி விடவில்லை. மாறாக நீண்ட நெடிய பரிணாம வளர்ச்சியில் தோன்றிவன். இனவிருத்தி என்ற அடிப்படை இன்றி உயிரினங்கள் முன்னேறி இருக்கவில்லை. இங்கு ஆண் - பெண் என்ற இரு அடிப்படைக் கூறுகளும் எப்போதும் இருந்து வந்துள்ளது. ஓரணு உயிரில் (அமீபாவில்) இருந்து இதன் செயற்பாடு இருந்துள்ளது. பெண் மட்டும் முதலில் தோன்றி ஆணை பெத்துப் போடவில்லை. இது கடவுள் என்ற கற்பனையின் கருத்துமுதல்வாதத்துக்கு இட்டுச் செல்லுகின்றது. பெண் மட்டும் முதலில் தோன்றினாள் என்றால், எங்கிருந்து? எப்படி? ஏன் தோன்றினாள்? எப்படி இனப்பெருக்கம் நடைபெற்றது? பெண்ணுக்குத் தாயும் தந்தையும் இல்லையா? தாய் மட்டுமே இருந்தாளா?

பெண்ணில் இருந்து உருத்திரிந்த உயிரே ஆண் என்பதும், வழிதவறியவர்கள் என்பதும் உண்மையில் ஆணாதிக்க அமைப்பில் தத்தம் நிலையைத் திரித்துக் காட்ட எடுக்கும் முயற்சியாகும். உயிரியல் கூறு எங்கும் எல்லாவற்றிலும் ஆண் - பெண் கூறு பிரிந்தே காணப்படுகின்றதே ஒழிய உருத்திரிந்து வழிதவறி பிறக்கவில்லை. பெண் முதலில் தோன்றினாள் என்பது, உருத்திரிந்தது என்றால், இந்தக் கற்பனை உலக அதிசயம்தான். உருத்திரிந்த வழிவிலகிய உயிரினம் எப்படி பெண்ணுடன் பாலியலில் உறவு கொள்ளும் வகையில் எப்படி உருத்திரிந்தாள்? எப்படி பெண் அதற்கு இசைவாக மீள உருக்குலைந்தாள். இவை அனைத்தும் பொருளற்ற கருத்துமுதல்வாதமாகும். இதை ஆணாதிக்கம் போல் ஜோடித்துக் காட்டவே இந்த நூல் முனைகின்றது. மனிதனைக் கடவுள் ஆணாதிக்கவாதியாக அதற்கு இசைவாக எப்படி தோற்றுவித்தானோ, அதே போல்தான் இதுவும்.

உணர்வுகளும் உணர்ச்சிகளும் உருவான சமூகப் பொருளாதார அடிப்படைக்கு நேர் எதிராகக் காட்ட முனைவதைப் பார்ப்போம். “எதார்த்தத்தில் ஆரம்பக்கால ஆண்கள், ஆரம்பக் காலப் பெண்களைப் போன்றே மற்றவர்களிடம் எவ்வாறு அன்பு செலுத்துவது என்பதைக் கற்றுக் கொண்ட போதுதான் மனிதத் தன்மை உடையவர்களாயினர்.'' (பக்கம்-28)

பெண்கள் எப்படி அன்பு செலுத்துவது என்பதைப் புரிந்தே ஆண்கள் அதைக் கற்றனர் என்பதும், அதில் இருந்து மனிதத் தன்மை உருவானது என்பதும் மற்றொரு திரிபாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதத் தன்மை என்பது என்ன? அன்பு என்பது என்ன? மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டையே இது திரிக்கின்றது. **அன்பு மனிதனுக்கு உரிய பண்பு அல்ல. அது சொத்துடைமைக்கு உரிய பண்பு.** மனிதனையும் மிருகத்தையும் எது பிரிக்கின்றது நிச்சயமாக அன்பும் அதனால் உருவானதாக காட்டும் மனிதத்தன்மையும் அல்ல.

மனிதன் என்பவன் இயற்கை மீதான உழைப்பு என்பதில் இருந்தே, மிருகத்திடமிருந்து தெளிவாகத் தன்னை வேறுபடுத்துகின்றான். அன்று முதல் அவன் மனிதன் தான். இங்கு சமுதாயத்தின் கூட்டு உழைப்பும், கூட்டுச் சமுதாயக் கண்ணோட்டமும் உன்னதமான மனிதப் பண்பாக இருந்தது. இது அன்பு, பொறாமை, வெறுப்பு, காதல், மனிதத் தன்மை என்ற எந்த உள்ளடக்கமும் அற்றது. சமுதாயத்தின் இருப்பு, வாழ்வு அதன் பாதுகாப்பே மனிதப் பண்பாக இருந்தது. இங்கு யாரையும் யாரும் அடிமைப்படுத்தவும் இல்லை, அடக்கவும் இல்லை. இதுதான் இயற்கையான உயர்ந்த மனிதப் பண்பாகும். இந்தப் பண்புதான் மிக உயர்ந்த சமுதாய வடிவமும் ஆகும். இதைப் பிந்திய எந்த மனித வரலாறும் இந்தளவுக்கு உயர்ந்த மனிதப் பண்பைக் கொண்டிருக்கவில்லை.

இதை மறுத்து அன்பு மூலம் மனிதப் பண்பைப் பெண் கற்றுக் கொடுத்தாள் என்பது, மிகக் கீழ்த்தரமான ஆணாதிக்க வாதமாகும். அன்பு என்பது சொத்துடைமை வர்க்கத்தில் சொத்துடைமை சார்ந்து உருவான ஓர் உணர்வே. எல்லோருக்கும் பதில் குறிப்பாக அன்பு செலுத்தும் மானிடப் பண்பு சொத்துடைமையின் குறித்த பண்பாகும். மனித இனத்தின் அன்பு செலுத்தும் பண்பு, சொத்துடைமைக்கு எதிரானது. இங்கு அன்பு என்பது அர்த்தம் இழந்து போகின்றது. வர்க்கமற்ற சமுதாயத்தில் ஜனநாயகம், அரசு எப்படி அர்த்தமற்ற கற்பிதமாகி விடுகின்றதோ, அதே போல் அன்புக்கும் நிகழும். **அன்பு என்பது சிலரை மட்டும் நேசித்து, பலரை நேசிக்க மறுப்பதில் இருந்து உருவான ஒரு சமூகப் பொருளாதாரப் பண்பே.**

தாய்க்கும் குழந்தைக்கும் இடைப்பட்ட உணர்வு இயற்கையான ஒரு சமுதாயப் பிணைப்புதான். செயற்கையான பிணைப்பு அல்ல. இதை அன்பு என்று வரையறுக்க முடியாது. அன்பு என்பது சமூகப் பொருளாதாரத் தனிச் சொத்துரிமை அமைப்பால் குறிப்பான அர்த்தம் பெற்று உருவாகும் முன்பே, தாய் - குழந்தை உறவு இருந்தது. அதாவது உயிரினங்களிடையே எப்படி குழந்தைக்கும் தாய்க்கும் இடையில் உறவு நீடிக்கின்றதோ, அது மனிதனுக்கும் பொருந்தும்.

தனிச்சொத்துரிமை அமைப்பு உருவாகும் வரை என்றைக்கும் எப்போதும் அன்பு என்பதும், மனிதத் தன்மை என்பதும் விவாதத்துக்கு உரிய மனித நடத்தைக்கு உரிய உரு பொருளோ அல்லது அது ஓர் உணர்ச்சியோ அல்ல. அன்பு, மனிதத் தன்மை, பொறாமை, ஏக்கம் என அனைத்தும் தனிச்





சொத்துரிமை அமைப்புக்குரிய சிறப்பான மனிதப் பிளவு சார்ந்த உணர்ச்சிகளாகும். இருப்பவனுக்கும் - இல்லாதவனுக்கும், அடக்குபவனுக்கும் - அடங்குபவனுக்கும் இடையிலான பல்வேறுபட்ட உணர்ச்சிகளாகும்.

அடுத்து உயிரியல் கூறு சார்ந்த மற்றொரு திரிபைப் பார்ப்போம். மனிதனின் வலது கை பயன்பாட்டுக்குப் பெண்கள் குழந்தைகளை இடது கையால் எடுத்துச் சென்றதால் ஏற்பட்டது என்கின்றனர். இதில் இடது கையால் இடது பக்கத்தில் எடுத்துச் செல்ல முக்கிய காரணம், இதயத் துடிப்பால் குழந்தைக்கு ஆறுதல் கொடுக்க முடியும் என்பதால், அதைப் பெண்கள் செய்தனர் என கூறப்படுகின்றது. (பக்கம் - 14)

இதயத் துடிப்பை உள்ளடக்கிய உள் உணர்ச்சி சார்ந்து, பெண்கள் இயல்புணர்ச்சிக்கு உட்பட்டு இதைச் செய்தனர் எனின் இது வரலாற்று இயங்கியலுக்குப் பொருந்தி வரவில்லை. சரிபாதியான ஆண்கள் ஏன் வலது கைப் பழக்கமாக இருக்கின்றனர் என்பதை இது விளக்கவில்லை. ஆண்கள் இரண்டு கைப் பழக்கத்தையும் கொண்டவராக இருந்திருக்க வேண்டும். தாய்மைப் பண்பு போன்று பெண்களுக்கு மட்டுமே இது சிறப்பாகப் பொருந்தியிருக்க வேண்டும். இது பொருந்தாத போது இது பெண்ணுக்கு எதிராகவே மாறிவிடுகின்றது. இத்துடன் பெண்ணின் கருத்தரிப்பு காலம், குழந்தையைத் தன் மார்பில் வைத்திருந்த காலம், பெண்ணின் ஆயுளில் மிக குறைவான காலமாகும். இன்று உள்ளது போல் அன்றி, குழந்தை நேரடியாகத் தாயைச் சார்ந்து வாழ்ந்த காலம் மிகக் குறுகியது.

எந்தக் கையால் அதிகம் உழைப்பது என்பதைப் பெண்ணின் தாய்மை தீர்மானிக்கவில்லை. குழந்தையைத் தூக்கி வைத்திருக்கும் காலம் கூட நகர்ச்சியின் போதும், விதிவிலக்கான நிலைகளில் மட்டுமே நிகழ்ந்தது. மிகக் குறுகிய பலத்த இடைவெளிக்கு இடையில் சமுதாயத்தில் சிலர் மட்டும் குழந்தையைத் தூக்கிச் சென்ற வடிவம், நிச்சயமாக வலது கைப் பழக்கத்தை உருவாக்க முடியாது. அதுவும் பெண் ஆணைப் போல் வேட்டையாடி வாழ வேண்டிய நிலையில் இருந்தாள்.

குரங்கில் இருந்து மனிதனாகத் தோன்றிய பல இடைநிலை வடிவங்களைக் கடந்த போதும், குழந்தையே தாயைப் பிடித்துக் கொள்ளும் பழக்கம் நீடித்தே இருந்திருக்கும். இது உழைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வசதியானதாகவும், பாதுகாப்பானதாகவும், தற்காப்பானதாகவும் இருந்திருக்கும். மனித உழைப்புக்கு ஏற்ப மனிதன் பரிணாமம் அடைந்த போது, குழந்தை தாயைக் கவ்விப் பிடிக்கும் ஆற்றலை இழந்தது. அதாவது கை உழைப்புக்கு ஏற்ப தன்னை இசைவாக்கிய போது, குழந்தை தாயைக் கையால் பிடித்திருக்கும் ஆற்றலை இழக்கின்றது. இது அலைந்து திரிந்து வேட்டையாடும் உழைப்புக்குத் தடையாக இருக்கும் ஓர் இடைநிலை படிவத்தை உள்ளடக்குகின்றது. குழந்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாயைப் பிடித்திருக்கும் ஆற்றலை இழக்கும் தன்மை, நிலைத்து வாழும் வாழ்வுக்கு நெருங்கிய காலத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது.

இதனால் தாய் குழந்தையைத் தனது கையால் பிடிக்க வேண்டிய புதிய நிலைமை உருவானது. தாயின் உழைப்பு மற்றும் தற்காப்பு முன்பைவிட கடுமையாகியது. இதனால் தாய்மை அடைந்த பெண்கள் மட்டும் தனித்து வாழ வேண்டிய நிலைக்குச் சமுதாயத்தை இட்டுச் சென்றது. தாய் மற்றும் குழந்தையின் தற்காப்பு, சமுதாயத்தில் முதிர்ந்தவர் பாதுகாப்பு, குழந்தையின் பாதுகாப்பு, உற்பத்தியில் புதிதாக ஏற்பட்ட விவசாயம் என அனைத்தும் ஒருங்கே சேர்ந்த போது, பெண் தாயுடன் இணைந்து தனித்து வாழத் தொடங்கினாள். இது புதிய உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்தியது. ஒட்டு மொத்தமாக ஆராயின் வலது கைப் பழக்கத்துக்கு வேறு அடிப்படை காரணமே இருந்திருக்கும். உழைப்பின் குறிப்பான நீடித்த வடிவம் ஒன்று எல்லோருக்கும் நீண்ட பல இலட்சம் வருடங்கள் வலது கை சார்ந்த வகையில் பொருந்தியிருக்க வேண்டும். இது ஓர் உழைப்பின் முறையின் மீதான அனுபவ உழைப்பாகவும் அறிவு சார்ந்தாக இல்லாத நிலையிலும், வலது கைப் பழக்கம் ஒரு மனித விபத்தாகவே மாறியிருக்கும். எப்படி உழைப்பு சார்ந்து மனிதன் நிமிர வேண்டி ஏற்பட்டதோ, அதுபோன்றே வலது கைப் பழக்கமும் ஏற்பட்டதாகும்.

அடுத்து ஓர் உயிரியல் அடிப்படையிலான மற்றொரு புரட்டைப் பார்ப்போம். தொடக்கக் காலப் பெண்கள் 20 வயது பெண்கள் யாரும் இருக்கவில்லை (பக்கம் - 10) என்பது ஒரு நகைப்புக்குரியவாதம். குழந்தை பராமரிப்பை மாதவிடாயுடன் தொடர்புபடுத்தும் அதி நவீன புத்திசாலித்தனமான திரிபாகும். பராமரிப்பு பற்றி கூறும் வாதங்கள் நிலைத்து வாழத் தொடங்கிய சமுதாயத்துக்கு முந்திய காலத்தில், அவசியமற்ற வெற்று வாதமாகும். நிலைத்து வாழாத வரை, பராமரிப்பு என்பது குழு சார்ந்ததாகவே இருந்தது. அத்துடன் முதிர்வு என்பது மாதவிடாயுடன் தொடர்புடையவை அல்ல. முதிர்ந்த பெண்ணுக்கு மாதவிடாய் நின்று விடுவதில்லை. அதேபோல் முதிராத பெண்ணுக்கு மாதவிடாய் நிச்சயம் தொடர வேண்டிய அவசியமில்லை.

இங்கு ஆணின் முதிர்வை வரையறுப்பது? முதிர்வு என்பது வேறு அடிப்படையைக் கொண்டது பொதுவாக முதிர்வு என்பது உழைப்பில் ஈடுபட முடியாத ஒரு நிலையை, அடிப்படையாகக் கொண்டதுதான். ஆனால் இன்று உள்ள ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை சமுதாயத்தில் பலவிதமான அர்த்தப்பாட்டைக் கொண்டு காணப்படுகின்றது. முதிர்வுக்கான அடிப்படை சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரக் கூறுகளால் வரையறுக்கப்படுகின்றது. மாதவிடாய் நின்ற பெண்கள் உழைப்பில் ஈடுபடாது ஓய்வில் இருந்தில்லை. ஏன் பாலியல் உறவைக் கூட நிறுத்தியதில்லை. நூலில் பல வாதங்கள் பாலியல் கண்ணோட்டத்தில் வெற்று குதர்க்கவாதமாகின்றது.

20 வயது தான் அன்றைய மாதவிடாய் சமுதாயத்தின் ஆயுளாக இருந்தது எனின், அந்த 20 வயதில் முதிர்வும் இயற்கையானதே. மாதவிடாய்



20 வருடத்துக்குள் நின்று போகும் இயல்பும் இயற்கையானதே. முதிர்வற்ற ஒரு சமுதாயமாக அன்று மனித இனம் இருக்கவில்லை. இயங்கியலில் வளர்ச்சியில் முதிர்வு என்ற விதிக்கமைய, உயிர்வாழும் உயிரினங்களின் விதியை அன்றைய 20 வயது மனிதனும் கூட கொண்டே காணப்பட்டான். இன்றைய நடப்பு மனிதனின் 20 வயது இளமையை, அன்றைய மனிதனின் 20 வயது முதுமையை மறுத்து, பொருத்துவது ஒரு முட்டாள்தனமான குதர்க்கவாதமாகும். இதைச் சொல்லி பெண்ணை ஒருதலைப்பட்சமாக உயர்த்திக் காட்டுவது நவீன ஏகாதிபத்தியப் பெண்ணியச் சீரழிவுகள் தான்.

ஆண் - பெண் உயிரியல் தொடர்பு சார்ந்த இயற்கை விதிக்கு முரணாக, ஆணாதிக்கம் எப்படி பெண்ணை அடிமைப்படுத்துகின்றதோ, அதே போன்ற ஒரு குதர்க்கத்தைப் பெண் சார்ந்து வைக்கப்படுவதைப் பார்ப்போம். “பெண்ணை மையமாகக் கொண்ட குடும்பத்தில் ஆண்கள் எப்போதாவது அங்கு வருபவர்களாக இருந்தனர். முக்கியத்துவமற்றவர்களாக இருந்தனர்.” (பக்கம் - 14) என்ற வாதம் தனிச் சொத்துரிமை அமைப்பு சார்ந்து இன்றைய நவீனத்துவக் கண்ணோட்டத்துக்குப் பொருந்தும் வகையில் பொருத்திக் காட்ட முனைகின்றது.

மனிதன் நிலைத்து வாழத் தொடங்கும் முன்பு நீடித்த மனித வரலாற்றில், ஆண் - பெண் என்றுமே தனது கூட்டத்துக்கு வெளியில் பிரிந்து வாழ்ந்ததில்லை. உயிர் வாழும் போராட்டத்தில் உணவைத் தேடும் போது சமுதாயத்தின் ஒன்றுபட்ட செயற்பாடு, மிக அவசியமானதாகவும் நிபந்தனையானதாகவும் இருந்தது. இங்கு உழைப்பு பிரிவினை உருவாக்கி விடவில்லை. ஆண் - பெண் என்ற பிளவு இருந்ததில்லை. ஒன்றாகவே கூடி உண்டு வாழ்ந்தனர். சமுதாயம் நிலையாகத் தனித்து வாழ தொடங்கிய போது, பெண் ஆணுக்கிடையில் பிளவு ஏற்படவில்லை. உழைப்பு சார்ந்தும், இதுவும் பல படிகளைக் கடந்தே வந்தது. ஒரேயடியாகக் கூட்டத்தின் எல்லாப் பெண்களும் தனித்து வாழவில்லை. இது தொடர்ந்தது. அத்துடன் முடிவடைந்து விடவும் இல்லை. இதன் வளர்ச்சியில் ஆண்களும் தனித்து வாழ்கின்ற நிலை பின்னால் உருவாகின்றது. அது மற்றொரு வேலைப் பிரிவினைக்கு இட்டுச் சென்றது. இதை மேலே எடுத்துக் காட்டியுள்ளேன்.

தாய் அல்லது பெண்கள் தனித்து வாழத் தொடங்கிய சமுதாயத்தில், உழைப்புச் சார்ந்து ஆண் வெளியே செல்பவனாக இருந்தான். இது முதிய ஆண்களுக்கு விதிவிலக்கே. இதிலும் கூட ஆண் தற்காப்பு கருதி இரவில் நிலைத்த பிரதேசத்துக்கு வந்துவிடுபவனாகவே இருந்தான். இங்கு வேட்டை கிடைத்தவுடன் தனித்து வாழ்ந்த பிரதேசத்துக்குள் வந்துவிடுபவனாகவே இருந்தான். ஆண் எப்போதாவது வருபவனாக இருக்கவில்லை. ஆண் பெண்ணுடன், பெண் ஆணுடன் எப்போதும் ஒன்றாக ஒரே சமூகமாக இருந்தனர். தேவையை அடிப்படையாகக் கொண்ட உழைப்புச் சார்ந்து மட்டும் குழுவுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியில் ஆண் சென்று வந்தான். ஆண் முக்கியத்துவமற்றவராக மாறிவிடவில்லை.

தனித்து வாழத் தொடங்கிய பின், பெண் சொந்த உற்பத்தியில் உணவைப் பெறவும், குழந்தையைப் பராமரிக்கவும், ஆணுக்கு வேட்டை கிடைக்காத போது உணவு அளிக்கவும் முடிந்த போது பெண்ணின் மீதான மதிப்பு உயர்ந்தது. அத்துடன் தாய்மையும் குழந்தையும் உழைப்பில் தீர்க்கமான பங்காற்றிய நிலையில் தான் பெண்ணின் மதிப்பு உயர்வாக இருந்தது. இதனால் ஆண் எப்போதும் வருபவனாக மாற்றி விடவில்லை. மனித இனத்தின் அடிப்படை சமூகக் கூட்டில் சார்ந்துள்ளது. எப்போதும் வருபவனாக இருந்தால், மனித இனம் எப்போதே அழிந்திருக்கும்.

ஆண் சமுதாயத்தில் முக்கியமற்றவனாக இருந்தான் என்பதும் கற்பனையே ஆகும். முக்கியத்துவம் என்பதை எது தீர்மானிக்கின்றது? எது அதை நிராகரிக்கின்றது? இன்றைய ஏகாதிபத்தியத் தனிச் சொத்துரிமை சொல்வது போன்று ஒரு வக்கற்ற சமூகத் தன்மைதான், இதை வரையறுக்கின்றது. மூலதனம் உழைப்பையும், உழைப்பை வழங்கும் மனிதர்களும் எப்படி முக்கியத்துவமற்றதாகத் தூக்கியெறிந்து ஜனநாயகத்தைப் பற்றி பீற்றுகின்றதோ, அதே வாதமே இங்கும் பூச்சூடுகின்றது. மனித உழைப்பு இல்லை என்றால் மூலதனம் இல்லை. இது போன்று தான் அன்றும். சமுதாயத்தில் ஆண் - பெண் யாரும் முக்கியத்துவமற்று போகவில்லை. யாரும் சமுதாயத்துக்கு வெளியில் சுதந்திரமாக வாழவும் இல்லை. இது ஆணாதிக்க அமைப்பிலும் எதிரிடையில் பெண் சார்ந்தும் பொருந்தும். ஆதிக்கம் செய்ய விரும்பும் தனிச் சொத்துரிமை பிரிவுகள், மனித வரலாற்றைத் திரித்துக் காட்டுவதும், வரலாற்றை இழிவாக்குவதும் இன்றைய நவீன சிந்தனைகளில் ஒன்றாகும்.

ஆணாதிக்க அடிமை வரலாற்றைத் திரித்துக் காட்டி பூச்சூடும் வரிகளைப் பார்ப்போம். "கூடுதலாக விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டு, குலங்கள் நகரியங்களாக ஒன்றுபடுத்தப்பட்டதோடு, மானிடச் சமுதாயங்கள் மேலும் மேலும் போலிப் பகட்டுடையதாயின. அவற்றுக்குக் கட்டுமானங்களும், அமைப்புகளும், அரசு நிர்வாகமும் தேவைப்பட்டன. உயிர்வாழ்வது உறுதி செய்யப்பட்டவுடனே, உபரியானது சொத்தாயிற்று." (பக்கம்-110)

இங்கு உபரி சொத்தாயிற்று என்பது, உபரி சமுதாயத்தில் சுதந்திரமாகப் தோன்றுவதாகக் காட்டப்படுகின்றது.

**உற்பத்தியின் அதிகரிப்பே, உபரியின் தோற்றுவாய்** என்ற உள்ளடக்கத்தை இது முன் வைக்கின்றது. மனிதன் அல்லாத உயிரினம் தனது தேவைக்கு அதிகமானதை உபரியாக்கிக் கொள்வதில்லை. ஆனால் இன்றைய மனிதன் அதை உபரியாக்கிக் கொள்கின்றான் ஏன்? கடந்த கால மனிதனும் தேவைக்கு அதிகமானதை உபரியாக்கியதில்லை. தேவைக்கு



மேலதிகமானது உபரியாக அழைக்கப்படுவதில்லை. இது ஒரு மாயைத் தோற்றமாகும். உபரி என்பது உழைப்பையும், உழைப்பில் பங்கு கொள்ளாத ஒருவன் அபகரிப்பதில் இருந்து உருவாகின்றது. இது சமூகம் என்ற கண்ணோட்டத்தை நிராகரிப்பதில் இருந்து தோன்றுகின்றது.

உபரி என்பது சமுதாயத்தில் என்றுமே தோன்ற முடியாது. இயற்கையை யாரும் உபரியாகவும் கொள்ள முடியாது. சமுதாயம் தனது தேவைக்கு அவசியமான உற்பத்தி செய்யும் போது, அங்கு உபரி இருப்பதில்லை. அன்றாடத் தேவைக்கு அதிகமானதைச் சேகரிக்கும் போதும் கூட, அது உபரியாக இருப்பதில்லை. மாறாக அதுவும் சமுதாயத்தின் தேவையாகவே இருக்கின்றது. ஏனெனில் இயற்கை மற்றும் சூழல் சார்ந்து ஏற்படும் நெருக்கடிகளில் சேகரிப்பும் தேவையாகவே உள்ளது.

உபரி என்பது சமூகமாக மனிதச் சமூகம் உள்ளவரை என்றுமே உருவாக முடியாது. உபரி என்பது உழைப்பைச் சுரண்டும் போது மட்டும் உருவாகும் ஒன்றாகும். அடிப்படையில் மற்றவனின் தேவையை மறுக்கும் போது, அதாவது சமுதாயத்தின் தேவை மறுக்கப்பட்டு இருக்கும் போது, உபரி உருவாகின்றது. நவீனக் கண்டுபிடிப்புகள் சமுதாயத்தை ஒன்றிணைக்கின்றது என்ற வாதம் கூட திரிபாகும். நவீனக் கண்டுபிடிப்புகள் தனிச் சொத்துரிமை அமைப்பில் சமுதாயத்தைப் பிளக்கின்றது. சமுதாயம் ஒன்று இணைவதை அழித்தே நவீனக் கண்டுபிடிப்புகள், தனிச் சொத்துரிமை அமைப்பை வீங்க வைக்கின்றது. சமுதாயத்தின் ஒன்றிணைவு என்பது, சுரண்டலை விரிவாக்கவும், அதிக மக்களைச் சுரண்டவும் உருவான வடிவங்களேயாகும். இதற்கு நவீனக் கண்டுபிடிப்புகளைச் சார்ந்து நிற்கின்றது.

இங்கு உலகமயமாதல், நவீனக் கண்டுப்பிடிப்புகளால் ஒன்றுபடுத்தப் படவில்லை. உலகைச் சுரண்டவே, உலகங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு நவீன அறிவியல் விபச்சாரம் செய்கின்றது. போலியான பகட்டுத்தனம், சுரண்டலின் உச்சக் கொப்பளிப்பாகும். சுரண்டல் கோரமாகும் போது, பரந்துபட்ட உழைக்கும் மக்களின் தேவை மறுக்கப்பட்டு இல்லாமை சமுதாய மயமாகி விடும் போது, பகட்டுத்தனமும் போலித்தனமும் உச்சத்தை அடைகின்றது. இந்த அமைப்பைக் கட்டிப் பாதுகாக்கவே அரசுகள் உருவாகின்றது. அரசுகள் வர்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன. இதைப் பாதுகாக்க சட்டமும், நீதியும், தண்டனையும் அரசால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. சமுதாயப் பிளவை நியாயப்படுத்த ஜனநாயகம் என்ற போலித்தனம் சமுதாயத்தின் ஒழுக்கமாகின்றது. இதை நியாயப்படுத்தும் வாதங்களைப் பார்ப்போம்.

18-ஆம் நூற்றாண்டில் மூலதனத்தின் தோற்றம் இயந்திர உற்பத்தியைத் தொடங்கிய போது, பெண்களையும் ஆண்களையும் ஈவிரக்கமின்றி கொடுமைப்படுத்திய நிகழ்வை இந்த நூல் பாதுகாத்து வக்காளத்து வாங்குகின்றது. இதைத் "தொழிற்சாலை ஸ்தாபனத்தின் மீதே பழி போட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட முடியாது'' என்று குறிப்பிட்டு, மக்கள் தொகைப் பெருக்கமே மனித அவலத்துக்குக் காரணம் என பழி சுமத்துகின்றது. அதிக குழந்தைகள் உயிர் பிழைத்தமை, பெண்கள் பிரசவத்தின் போது உயிர் தப்பியமை, குழந்தைகள் உயிருடன் தப்பித்து வாழ்ந்தமை ஆகியவற்றால் ஜனத்தொகை மீது குற்றம் சாட்டுகின்றார். (பக்கம் - 301)

மக்கள் உயிர்வாழவும், உணவு அளிக்கவும், உடையைப் பெறவும் இதனால் வேலை பெறவும் இயந்திர மயமாக்கல் அவசியம் என்கிறார். அயர்லாந்தில் ஐந்து பேரில் ஒருவர் இறந்தது என்பது இயந்திரமயமாகாமையேதான் என்கிறார். அந்தப் பிரதேசத்தை விட்டு மக்கள் வெளியேறியமை மற்றும் காலனிகளை நோக்கி மக்கள் புலம் பெயர வைத்தமை அவசியமானதாக இருந்தது. ஏன்எனின் மக்கள் தொகைப் பெருக்கம் அனைத்துக்கும் காரணம் என்று கூறுகின்றார். (பக்கம் - 302)

வறுமை, மக்களின் இழிந்த நிலை, அடிமை வாழ்வு, கேட்பாரற்ற அடக்குமுறை, இயந்திரத்தின் ஒரு பாகமாகி சக்கையாகின்ற துன்பம் அனைத்துக்கும் மக்கள் தொகைப் பெருக்கமே காரணம் என முன்வைப்பதன் நோக்கம்தான் என்ன? மூலதனம் மீதான பற்றான காதலே.

மூலதனத்தின் சொந்தக்காரர்கள் மேல் இதற்கான காரணத்தைக் குற்றம் சாட்டமுடியாது என்று எடுத்துக் காட்ட, பல மரமண்டைகளின் கடந்தகால மேற்கோள்களைக் காட்டி வக்கரிக்கின்றனர். தொழிற்சாலைகள் மக்களின் இரத்தத்தை உறிஞ்சி இயந்திரம் இயக்கிய போது, மூலதனத்தைப் பல மடங்காகப் பெருக்குவதே அதன் குறிக்கோளாக இருந்தது. ஆனால் மக்களுக்கு உணவும், உடையும், இருப்பிடமும் அளிக்க இது அவசியம் என்கின்றார், இந்த ஏகாதிபத்தியப் பெண்ணியவாதியான ஆசிரியர்.

மக்களை இழிநிலைக்குள்ளாக்கி அவர்களைக் கொன்று, அவர்களுக்கே வாழ்வளிக்க விரும்பினராம் மூலதனத்தின் தந்தைகள். என்னே நகைப்புக்குரிய வாதம். இன்று உலகமயமாதல் ஏழை எளிய மக்களின் உழைப்பையும் வாழ்வையும் அழித்து, பட்டினிக்குள் தள்ளி குளிர்காய்கின்றது. மக்களின் உழைப்பு ஆற்றலுக்குரிய அடிப்படை மூலப் பொருட்களை அபகரித்து, கொழுத்தது எல்லாம் மக்களின் நலனுக்காக என்பதே நூலாசிரியரின் மையவாதமாகும். ஏழை எளிய மக்களைக் கையேந்தி வாழவைக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மூலதனத்தின் வக்கிரத்தை, நியாயப்படுத்த அன்றைய முதலாளித்துவத்தின் வக்கிரத்தைத் திரித்துக் காட்டுவது அவசியமாகின்றது. பஞ்சப் பராரைகளாக உள்ள மக்கள் கூட்டத்தைப் பட்டினியில் கொன்ற இன்றைய நவீன மூலதனத்தின் அடிப்படையாக இருப்பது அன்றைய மூலதனம். மக்களைப் பலாத்காரமாகக் காலனிகளுக்கு அனுப்பி வைத்தனர் அல்லது நாடு கடத்தினர். மக்களின் சொத்தைச் சூறையாடிய மூலதனம், அவர்களின் உழைப்பு ஆற்றலை அழித்து அவர்களை





வக்கற்றவர்களாக்கியது. காலனிகளை உருவாக்கி அங்கு வாழ்ந்த மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டியதுடன், அந்த மக்களைக் கொன்று அதன் மேல் நவீனச் சமுதாயங்களை உருவாக்கினர். பல காலனிய நாட்டு மக்கள் அழிக்கப்பட்டுப் புதிய நாடுகளாக, புதிய ஒரு சமுதாயத்தினால் நிரப்பப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் மூலதனத்தினுடைய கால்களின் கீழ் புதைந்து உரமானார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் நவீனத் தொழில் துறை உருவாகாத நாடுகளில் எங்குமே, இந்தளவுக்கு வறுமையிலும் மனிதச் சிதைவிலும் சிதைந்து விடவில்லை. நிலப்பிரபுத்துவ ஆட்சிகளுடன் கூடிய சமூகப் பண்பாடுகளும் நிலவிய, காலனித்துவவாதிகளின் சுரண்டல் சட்டங்களும், சுரண்டலும் புகாத பிரதேசத்திலும் வாழ்ந்த மக்கள், மேற்கு சமுதாயம் அடைந்த இழிநிலையை ஒருக்காலும் சந்திக்கவில்லை. இது வரலாற்று உண்மை.

உண்மையில் மேற்கு மக்களின் உழைப்பு ஆற்றல் பறிக்கப்பட்டு அல்லது இயந்திரத்தின் ஒரு பாகமாக்கி, உடுக்க ஆடையற்று நிர்வாணமாகக் கையேந்திய பஞ்சத்திலும் சிக்கி வாழ இடமற்று பொந்துகளிலும் நெரிந்து வாழும் இழிநிலைக்குள்ளானார்கள். இவர்களின் வாழ்வுமுறையின் மேல் அடக்குமுறை சமூகத்தின் ஒழுக்கமாகவும் ஜனநாயகமாகிய குறிப்பான நிலைமையை மூலதனமே உருவாக்கியதே ஒழிய அதிக மக்கள் தொகை அல்ல. அதிக உணவைத் தயாரிக்கும் உற்பத்தி முறை அல்ல. மாறாக மூலதனத்தை விரிவாக்க உற்பத்தி முறையை மாற்றாத எந்த நாட்டிலும், இந்த இழிவு ஒருக்காலமும் நடந்ததில்லை. அந்த நாடுகளில் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கே உரிய ஒடுக்குமுறையே நீடித்தது.

மூலதனத்தைப் பாதுகாத்தபடி ஆணாதிக்கத்தை எதிர்க்கும் போது "உயிர் வாழ்வதற்கான போராட்டம் ஓரளவு தளர்ந்து, அதன் பொருளுக்கான மிகவும் கடினமான போராட்டமாக மாறிய போது, பெண் முதலாவது உருவக ரீதியான சிந்தனையின் குவிமையமும், சாதனமும் ஆனாள்'' (பக்கம் - 37) பொருளுக்கான போராட்டம் என்றால் என்ன? இது எப்படி பெண்ணை அடிமையாக்கியது? ஆணின் உழைப்பில் ஒரு உற்பத்திக்கான பொருளாகப் பெண் இருக்கவில்லை அல்லவா! ஏன் பெண் எதிரிடையில் ஆணைப் பற்றி உருவகமாக சிந்திக்கவில்லை? ஆண் மட்டும் இப்படி சிந்தித்தான் எனின் ஏன்?

எதையும் சமூகப் பொருளாதார வாழ்வுடன் ஆதாரமாக வைக்க முடியாத அடிப்படையற்ற வெற்றுவாதம். பொருள் என்பது மனித உழைப்பு தொடங்கிய போதே இயற்கையிலும், இயற்கை மீதான உழைப்பிலும் செயற்கையில் உருவாகின்றது. இது எந்த விதத்திலும் உயிர் வாழும் போராட்டத்தின் முடிவை அல்லது தளர்வை ஏற்படுத்தவில்லை. உற்பத்தி செய்த பொருளை எப்போது மற்றவனிடம் இருந்து மற்றொரு மனிதன் அபகரித்தானோ, அப்போதே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனிச்சொத்துரிமை உருவாகின்றது. இதில் பெண் ஆணைச் சார்ந்து வாழ்வது அதிகரிக்க அதிகரிக்க, பெண் அடிமைத்தனம் உருவாகின்றது. இந்த அடிமைத்தனமே பெண் மீதான உருவாக ரீதியான சிந்தனை சார்ந்த ஒடுக்குமுறையையும் உருவாக்குகின்றது. அதாவது மற்றவனைச் சுரண்டச் சுரண்ட, தன்னைச் சார்ந்து வாழ்பவர்கள் உருவாகின்றனர். இதன் மேலான புதிய அடக்குமுறையும், அது சார்ந்த சிந்தனையும் உருவாகின்றது. இது முதலில் பெண்கள் மேலானதாக ஆணின் தனிச் சொத்துரிமை சார்ந்து மாறுகின்றது.

இந்த நூலுக்கான முன்னுரையில் குறிப்பிடும் போது, சமுதாய நாகரிகத்தில் பொதுவான வளர்ச்சிக் கட்டத்தில் பெண்ணின் விடுதலையைக் காட்டுகின்றது என லெனின் கூறியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இது உண்மையானால் பண்டைய அதீனியக் கலாச்சாரம், மறுமலர்ச்சி, பிரெஞ்சுப் புரட்சி பெண்ணுக்கு விடுதலையைத் தரவில்லை என்று (பக்கம்-7) கூறி லெனினை மறுக்கின்றது.

லெனின் எதைக் கூறினார்? என்பதைப் புரிந்து கொள்ளாமல், அதைத் திரிக்கும் போதே இப்படி கூற முடிகின்றது. இப்படி சொன்ன லெனின் எதற்காகப் போராடினார் என்பதே, இதற்கான தெளிவான பதிலாகும். லெனின் நடந்து வந்த புரட்சி அனைத்தையும் வர்க்க யுத்தமாகக் கருதியதுடன், அவை அனைத்தும் சுரண்டலை ஒழிப்பதை, அதாவது தனிச் சொத்துரிமையை ஒழிப்பதைக் கொண்டிருக்கவில்லை என்றார். அப்படி இருக்கும் போது பெண் எப்படி பூரண விடுதலையை அடையமுடியும்? லெனின் ஒவ்வொரு புரட்சியிலும் கூட பெண்ணுக்கு மூச்சு விடுவதற்கு ஓர் ஓட்டையை விட்டுச் சென்றதையே குறிப்பிட்டுக் காட்டுகின்றாரே ஒழிய, பெண்ணின் விடுதலையை அது பெற்றுத் தந்ததாக ஒருநாளும் கூறவில்லை. பாட்டாளி வர்க்கப்போராட்டம் மட்டும் தான், பெண்ணின் விடுதலையைத் தனிச் சொத்துரிமை ஒழிப்பில் சாதித்து காட்டும். இதுவே லெனின் பெண் பற்றி கூறிய பொதுவான மையமான, அடிப்படையான சாராம்சமாகும்.

ஆணாதிக்க வரலாறு சார்ந்து ஆணின் உரிமை ஒன்றை, திரித்துக்காட்ட இந்த நூல் தொடர்ந்து முனைகின்றது. ஆணாதிக்க அமைப்பில் பெண்ணை முதலில் புணர்வது சொந்தக் கணவனாக இருந்ததில்லை. சமூகத்தின் பல மட்டத்தைச் சேர்ந்த அரசன், பூசாரி, நிலப்பிரபு, உயர் அதிகாரி கூட்டான பல ஆண்கள் ஒன்றன் பின் ஒன்றாக, தந்தை அல்லது குடும்பத்தில் இன்னொரு மூத்த உறுப்பினர் கன்னிப் பெண்ணைப் புணர்ந்தனர். இந்தச் சம்பவத்தை இரத்தம் மீதான பீதி (முதல் உடல் உறவின் போது கன்னிச் சவ்வு உடைதலில் இரத்தம் வருவதால்) அல்லது பிசாசின் தரிப்பிடத்தைக் கணவன் புணரக் கூடாது என்று கூறி நடந்தது என்கிறார். இது பெண்ணின் இழிவு சார்ந்து கட்டமைக்கப்பட்டது என்கிறார். (பக்கம்-161-162)



இந்த வாதம் ஆணாதிக்கத்தின் வரைமுறையற்ற புணர்ச்சி உரிமையைப் பாதுகாக்கின்றது. இரத்தம் மீதான பீதி, பெண்ணின் உறுப்பானது பிசாசின் இருப்பிடமாக இருப்பதால் கணவன் முதலில் புணரக் கூடாது என்ற காரணத்தினால், பெண்களின் முதலிரவுப் பிற ஆண்களினால் புணரக் காரணமானது என்பது ஒரு திரிபாகும். இங்கு முதல் புணர்வு சார்ந்து பிசாசு, இரத்தப் பீதியை ஒழிக்க சமூகத்தில் உயர்ந்த வர்க்கங்கள் ஈடுபட்டது என்பது, உண்மைக்குப் புறம்பான நோக்கத்தை வெட்டவெளிச்சமாக்குகின்றது. தீட்டு மற்றும் இழிவான காரியத்தைப் போக்க உயர் வர்க்கங்கள் ஆர்வத்துடன் உரிமை சார்ந்து ஈடுபட்டன என்பது, மைய வாதத்தின் மோசடியை அம்பலமாக்குகின்றது.

பெண்ணைக் கணவன் புணரும் முன்பு, பிற ஆண் அல்லது ஆண்கள் புணர்வது என்பது என்பது சடங்கு முறைகள் அல்லது பயத்தில் இருந்து உருவாகவில்லை. வரைமுறையற்ற ஆண் - பெண் உறவு முறையைத் தனிச் சொத்துரிமை ஆணாதிக்கம் தகர்த்த போது, உடலுறவு மிகவும் மோசமான தனிச்சொத்துரிமை கண்ணோட்டமாகியது. பெண்கள் முன்பை விட இந்தப் புதிய உடலுறவுமுறை, தம் மீதான பாலியல் ஆதிக்கத்தைத் திணிப்பதைக் கண்டு வெறுத்தனர். முந்திய வரைமுறையற்ற பாலியல் உறவில் இருந்த தேர்வுச் சுதந்திரமும், இயல்பான இணைவும் சொத்துரிமை சார்ந்து குரூரமாகி பெண்ணை இழிவாக்கத் தொடங்கியது.

பெண் இதை எதிர்த்து ஓர் ஆணைத் தெரிவு செய்யும் இருதாரத் திருமணத்தைக் (இரு தாரம் என்பது ஆண் - பெண் பரஸ்பரம் இருவரும் காதல் செய்வதைக்) கோரினாள். இது தனிச்சொத்துரிமை அமைப்புக்கு எதிரான, ஆணின் தனிச் சொத்துரிமை சார்ந்த ஆதிக்க வெறிக்கு எதிராகப் பெண் தொடுத்த போராகும். இதைச் தனிச்சொத்துரிமை ஆண்கள் சகித்துக் கொள்ள மறுத்து, பழைய வடிவில் வரைமுறையற்ற புணர்ச்சியைத் தனக்கு மட்டும் கோரினான். இதைப் பெண் மறுக்கவும், ஒரு தொடர்ச்சியான போராட்டமே நடந்தது. தனிச் சொத்துரிமை சார்ந்த ஆணாதிக்கம், பழைய பாலியல் ஆதிக்கத்தைத் தக்கவைக்க கையாண்ட வழிகளில் சடங்கு ரீதியான முறைமைகளும் ஒன்று. பழைய மரபைச் சடங்கு ரீதியாக அனுபவிப்பதை ஆணாதிக்க மரபு புகுத்தியது. இதன் போதே பெண் தேர்வு செய்த இருதார மணத்தின் முன், மற்ற ஆண்களின் உரிமையும் ஏற்று கொள்ளப்பட்டது. அதாவது திருமணத்தின் முன் பெண்ணின் மேலான ஆண்களின் வரைமுறையற்ற பாலியல் உறவு அங்கீகரிக்கப்பட்டது. இதுவும் பல தளங்களில் பல மாறுதல் வடிவங்களில் நீடித்தது. வெவ்வேறு சமுதாயங்களில் பெண்கள் கூட திருமணத்தின் முன் வரைமுறையற்ற புணர்ச்சியைப் பேணமுடிந்தது.

மறுதளத்தில் ஆணாதிக்க அமைப்பு இருதார மணத்தைக் கைவிட்டு ஒருதார மணத்தைக் கோரிய போது, அது பெண்ணைத் தனிச் சொத்துடைமை ஆக்கியது. இந்த இடத்திலும் பெண் பழைய மரபை அடிப்படையாகக் கொண்ட வரைமுறையற்ற புணர்ச்சியைக் கோரினாள். இதன் போதும் பெண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமணத்துக்கு முன் அல்லது சில சடங்குகளில் அல்லது சில நாட்கள் என்ற பல வகைப்பட்ட வகையில் பிற ஆண்களுடன் உறவு கொள்வது ஒரு வடிவமாகியது. ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட பாலியல் உறவு முறைமைகள் அக்கம்பக்கமாகச் சமுதாயத்தில் நீடித்து நிலவியது. இவை காலத்தால் பல திரிபுகளுக்கு உள்ளாகியது.

ஒருதாரமணம் இறுகி பெண் - ஆணின் தனிப்பட்ட சொத்தாகியதால், பெண்ணின் தூய்மை, கன்னித் தன்மை என்பன கோரப்படுவது அதிகரித்தது. இக்காலத்தில் மதங்கள் சொத்துரிமையையும் ஆணாதிக்கத்தையும் சார்ந்து சமுதாயத்தை ஒழுங்குபடுத்தியதால், ஆண் சார்ந்த பாலியல் உரிமை மதத்துடன் இணைக்கப்பட்டது. ஒருதார மணத்தில் பெண் மிகவும் கீழ்த்தளமாகத் தாழ்ந்த போது, பெண் பல ஆணுடன் சில மரபு சார்ந்த புணர்ச்சி வடிவங்களின் காட்டுமிராண்டித்தனத்தைச் சகித்துக் கொள்ளுவதை எதிர்க்கத் தொடங்கினாள்.

இங்கு பல முரண்பட்ட உறவு முறைமைகள் அக்கம் பக்கமாக நிலவிய போதும், ஆணாதிக்க அமைப்பு தனக்கு இசைவாகவே முதல் புணர்ச்சியை மதம் சார்ந்த ஒரு பக்தி மற்றும் மிரட்டல் போன்ற வழிகளில் பெண்ணின் மீது தனது உரிமையைத் தக்கவைத்துக் கொண்டது. இதுவும் கால ஓட்டத்தில் கடுமையான எதிர்ப்பை முரண்பட்ட கண்ணோட்டத்தில் ஆணும் பெண்ணும் இதை வெறுத்ததன் மூலம், இந்த முறைமையும் தகர்ந்து போகின்றது.

பெண் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்த நிலையில், ஆண் கன்னித்தன்மை மற்றும் தனது விந்துவால் உருவான குழந்தை என்ற கண்ணோட்டம் வரைமுறையற்ற புணர்ச்சி சார்ந்த சடங்குகளைத் தகர்த்தது. ஆணாதிக்க மதங்கள் உருவாக்கிய மிரட்டல், பீதி, சடங்கு என அனைத்தும் தகர்ந்து சிதைந்து போனது. சில விதிவிலக்குகள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. முதல் உறவு சார்ந்த உரிமை பிந்திய சமூக வடிவங்களில் இருந்து தோன்றவில்லை. அது வரலாற்று ரீதியான தனிச் சொத்துரிமை அமைப்பில் சூறையாடும் முன்னேற்றத்தில் இருந்து தோற்றம் பெற்றது.

பெண் தெய்வங்கள், அரசிகள் ஆணைப் புணர்ந்த பின் கொல்லும் பலவிதமான நடைமுறைகள் இருந்தது. (பக்கம் - 46-47) ஆணின் ஆண்மை நலமடிக்கப்பட்ட நிகழ்வுகள் அல்லது கொல்லுவதற்கு முன் ஆணை நலமடித்தல் (பக்கம்-47) போன்றன பெண்ணின் பெருமையாக அல்லது பெண்ணின் உரிமையாக இந்த போற்றுகின்றது.

இவை உண்மையில் சமூகத்தில் காணப்படவில்லை. தனிச் சொத்துடைமை சார்ந்த அதிகாரத்தில் காணப்பட்டது. ஆனால் இதைப் பெண்ணியக் கண்ணோட்டத்தில் உயர்ந்த நடைமுறையாகப் பெருமைபட இந்த நூல் எடுத்துக்காட்டுகின்றது. தனிச் சொத்துரிமை அமைப்பு உருவான போது, மரபு சார்ந்த சமரசங்களுடன் பெண்களின் தலைமையிலான ஆட்சிகள் நிலவத்தான் செய்தது.



அதாவது முதலாளித்துவம் உருவான போது, ஐரோப்பாவில் புரட்சிகள் இன்றி நிலப்பிரபுத்துவ மற்றும் மதஅடிப்படைவாதிகளுடன் எப்படி சமரசங்கள் காணப்பட்டு அதன் ஆட்சி வடிவங்களாக இருந்தது. அதன் போது ஆணாதிக்க அமைப்பில் அதிகாரத்தில் இருந்த விதிவிலக்கான பெண்ணின் பாத்திரம் தனிச்சொத்துரிமை சார்ந்து கொடூரமானதாக மாறியது.

சொத்துரிமை பொதுவான சமூகத்தில் ஆணிடம் இருந்த போது, அதிகாரத்தில் இருந்த ராணிகள் அல்லது செல்வம் படைத்த அல்லது அதிகாரம் பெற்ற பெண்கள் ஆணாதிக்க வடிவில் தனது வக்கிரத்தைத் தீர்த்துக் கொண்ட போது, தன்னுடன் உறவு கொள்ளும் ஆணின் ஆண்மை மீது உரிமையைக் கோரினாள். ஆண்மையை ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் தனது சொத்துரிமையாக்கினாள். இதன் அடிப்படையில் நுகர்வு வெறியுடன் புணர்ந்த இந்த மேல்மட்டப் பெண்கள், அந்த ஆணைத் தனது பாலியல் தேவைக்கு, பின் கொல்லுதல் அல்லது நலமடித்தலை அல்லது இரண்டையும் செய்தனர். இது ஒரு சமூக நடைமுறையல்ல. ஆணாதிக்கச் சமுதாயத்தில் இது

விதிவிலக்காக இருந்தது. சமுதாயத்தில் இதற்கு நேரிடையான எதிர்போக்கு சொத்துடைமை சார்ந்து இறுகி வந்தது. விதிவிலக்கான சடங்குகளை, சம்பிரதாயங்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்தி ராணியின் கோபமாகவும் புனையப்பட்டது. கடவுள் இரட்டை பெண்சாதிக்காரனாகவும், பல பெண்களைப் புணர்பவனாகவும் எதார்த்தத்தில் புராணங்கள் முதல் சிற்பங்கள் வரை சமூக நடைமுறைக்கு எதிர் திசையில் இருக்கின்றது. எதார்த்தக் காட்சிகள் போன்றே இவை இருந்தன. இது ஆணாதிக்க அமைப்பைப் பழிவாங்க உருவானவை அல்ல. ஆணாதிக்க அமைப்பைப் பெண் உள்வாங்கிய போது, அதிகாரம் மற்றும் சொத்துரிமை சார்ந்து எழுந்த விதிவிலக்கான ஆணாதிக்க வக்கிரங்களே ஆகும்.

தனிச்சொத்துரிமை அமைப்பு வளர்ச்சி கண்டபோது பெண் ஒருதார மணத்துக்குள் சிறைவைக்கப்பட்டாள். பெண்ணின் தெரிவை மறுத்து, பெண்ணை விலை கொடுத்து வாங்கும் நிலைக்குச் சீரழிந்த போது, பெண் ஆணின் போகத்துக்குரிய பண்டப் பொருளாக மாறுகின்றாள். வாங்கிய பொருளை எப்படியும் பயன்படுத்தலாம் உரிமை சட்டவடிவமாகின்றது. ஆனால் சந்தை விதிக்கமைய வாங்கும் சந்தை மாறுகின்றது.

சந்தையில் பெண் விற்கப்படுவது நெருக்கடிக்குள்ளான போது, பெண்ணுடன் பணம் கொடுத்து விற்பது என்ற புதிய ஆணாதிக்க வடிவம் மேலேகின்றது இப்படி தான் ஒவ்வொரு நடைமுறையும் உருவானது, வளர்ச்சி கண்டது. சொத்துரிமை ஒரு வடிவமாகின்ற போது, அதன் பண்பாட்டுக் கலாச்சாரக் குணாம்சங்கள் தனது கொடூரத்தைச் சமூகமயமாக்கியது. அன்று சில பாகங்களில் மூத்த குழந்தை அல்லது ஆண் குழந்தை அல்லது குறித்த நாளில் ஒரு சமூகத்தின் குழந்தைகள், கடவுளின் பெயரால் அல்லது ஏதோ ஒரு காரணத்தால் நெருப்பில் இடுதல் அல்லது பல வழிகளில் பயிரிடப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இவை அனைத்தும் ஏதோ ஒரு குறித்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆனால் இந்த நூல் எதிரிடையில் இதைக் காட்ட முனைகின்றது. சீனாவில் ஓர் இனம் பெண்ணைத் தேர்ந்தெடுத்து ஒரு வருடம் நன்றாகப் பராமரித்த பின் மஞ்சள் நதியில் தள்ளிவிடும் சடங்கு முறையை (பக்கம்-94) எப்படி ஆணாதிக்கத்தின் கொடூரமாக நிறுவமுடியும். இதுபோன்ற சடங்குகள் எப்போதும் கருத்துமுதல்வாதத்தின் அடிப்படையில் இருந்தே எழுகின்றன. வாழ்வின் ஆதாரத்தை அடிப்படையாகக் கொள்ளாத நம்பிக்கையை ஆதாரமாக கொண்ட சடங்குகள், இயற்கையின் கோபத்தைத் தணிக்க கருத்துமுதல்வாதம் அதன் அடிப்படையாக உள்ளது. இது பெண்ணை அல்லது குழந்தையை அல்லது தாயைச் சடங்கு ரீதியாகப் பலியிடுதல் என்பது குறித்த நிகழ்வின் குறிப்பான தன்மையுடன் பொருத்திப் பார்க்கவேண்டும்.

பெண்ணை மஞ்சள் நதியில் தள்ளும் போது பெண் என்பதால், அதை ஆணாதிக்கச் செயலாகக் காட்டிவிட முடியாது. இதுபோன்று பொருத்திக் காட்டும் இந்த நூலின் பல உதாரணங்கள், அர்த்தமற்ற வாதங்களாக உள்ளன. அன்று எந்த அர்த்தமற்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இது போன்ற செயல்கள் எப்படி நீடித்ததோ, அதே போன்று பெண் என்பதால் அதை ஆணாதிக்கமாக ஜோடிப்பதும் எந்தவிதத்திலும் அன்றைய நிகழ்வை விட குறைவானவையல்ல. பெண் என்றால் அனைத்தையும் ஆதரித்து நியாயப்படுத்தும் நிலைக்கு அல்லது அதை ஆணாதிக்கத்தின் கொடூரமாகக் காட்டும் நிலைக்கு இந்த நூல் தன்னைக் கோட்பாட்டு வடிவத்தைக் கொடுக்கின்றது. இங்கு சமூக இயக்கம் அனைத்தையும் புறக்கணித்து அதைக் கேவலப்படுத்துகின்றது. பெண் உயர்ந்த நிலைக்கு எப்படி வந்தாலும் அதை அங்கீகரிக்கும் நிலைக்கு வக்காளத்து வாங்குகின்றது.

காலனித்துவத்தை ஏற்படுத்தி அதை மேற்கத்திய சமூகம் சூறையாடிய போது, அங்கு வாழ்ந்த மக்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினர். இதை எதிர்த்து மேற்கு பெண்கள் வீரம் செறிந்த போராட்டத்தைப் பெண்ணிய வழியில் நடத்தியதாக, இந்த நூல் பெருமைப்படுகின்றது. கி.பி.1857 - ஆம் ஆண்டில் இந்தியாவின் சுதந்திரத்துக்கான போராட்டத்தை எதிர்த்து, பிரிட்டிஸ் வெள்ளையினப் பெண்கள் சளையாது வீரமாகப் போராடியதாக இந்த நூல் பெருமைப்படுகின்றது. (பக்கம்-325)

இது போன்று இந்தியா முதல் அமெரிக்கா வரை அங்கு வாழ்ந்த மக்களைக் காட்டுமிராண்டிகளாகவும், சுதந்திரத்துக்கான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும் இந்த நூல் பெண் சார்ந்து பெருமைப்படுகின்றது. காலனித்துவ ஆக்கிரமிப்புக்கு எதிரான தாக்குதலை மண்ணின் மக்கள் நடத்திய போது, அதை எதிர்த்த ஆக்கிரமிப்பு பெண்கள் எப்படி போராடினர் என சில பக்கங்கள் பெருமைப்படவே முன்வைக்கின்றது. அது மட்டுமின்றி பெண்கள் காலனிகளில் வெற்றிகரமாகப் பணம் சேர்த்ததையும், மக்களை மதம் மாறவைத்து அடிமையாக்கிய பெருமையையும் பீற்றுகின்றது. இந்தியா போன்ற



நாடுகளில் பெண்கள், அதிகார வர்க்கம் சார்ந்து சொர்க்கத்தைப் போன்ற ஆடம்பரக் களியாட்டங்களில், விழாக்களில் சொக்கிக் கிடந்தப் பெண்ணின் பெருமையாக இந்த நூல் பீற்றுகின்றது. பணம் படைத்த அதிகார வர்க்கம் சார்ந்து தன்னைத் தான் மேச்சும் போது, அடிமட்டப் பெண்ணைத் தனது சொந்த கால்களின் கீழ் மிதிக்கின்றது.

‘‘ரோம் செனட்டர்கள் கி.மு. 215-இல் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பெண்கள் அரை அவுன்சுக்கு அதிகமான தங்கத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கக் கூடாதென்று தடை செய்து அவர்கள் ஒரு சட்டத்தை இயற்றினார்கள்’’ (பக்கம்-96)

இதை எதிர்த்துப் போராடிய பெண்கள் இந்தச் சட்டத்தை வாபஸ் பெறச் செய்ததாகக் கூறப்படுகின்றது. உண்மையில் சொத்துடைய வர்க்கத்தின் வர்க்க நலன்களை இது பிரதிபலிக்கின்றது. இந்தச் சட்டம் போன்று ஆண்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படாததை இந்த நூல் பேசவில்லை. பெண்களுக்கு எதிராகக் கொண்டு வந்திருந்தால், அதை ஆணுக்கு எதிராகக் கொண்டு வரக் கோரியே போராடியிருக்க வேண்டும். சொத்துடைய வர்க்கம் தனது ஆடம்பரத்தில் கூத்தடித்ததை எதிர்த்துப் (அதாவது அது ஆணா? பெண்ணா? என்பதல்ல இங்கு முக்கியமான விடயம்.)

பெண்ணுக்கு மட்டும் என்றால், அதை எதிர்த்து ஆணுக்கும் சட்டமாக்க கோரியிருக்க வெண்டும். இருவருக்கும் எதிரான சட்டங்களாக இருந்திருந்தால் இந்தப் போராட்டமே பிற்போக்கானது. **சொத்தற்ற வர்க்கங்களின் அவலத்தைப் போக்க போராடாது சொத்துடைமையைப் பாதுகாக்க நடத்தும் போராட்டம் பெண்ணியமாக இருப்பதில்லை.** இதை இன்று இந்த நூல் எந்த நிபந்தனையும் இன்றி போற்றும் போது, நூலுக்குரிய நோக்கம் உலகமயமாதலில் பெண்ணின் விபச்சார நிலையை அங்கீகரிப்பது தான். பெண் என்றால் அனைத்தையும் நியாயப்படுத்தும் உரிமை பெண்ணியமாக இந்த நூல் காட்ட முனைகின்றது.

பெண் எப்படி அடிமையானாள் என்பதை மறைத்துத் தனிச்சொத்துரிமை அமைப்பில் பெண்ணின் உயர் நிலைபற்றி பெருமைப்படுகின்றது. இதற்கு வரலாற்று ரீதியாகப் பெண் மீதான ஒடுக்குமுறைகளைத் தொகுத்து, அதன் மேல் பெண்ணின் பெருமையாகத் தனிப்பட்ட பெண்ணை முன்னுக்குத் தள்ளுகின்றது. இந்தத் தனிப்பட்ட பெண்கள் ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை அமைப்பில் ஒரு நெம்புகோலாகவே இருந்தனர். இன்றும் இந்த ஏகாதிபத்திய அமைப்பில் தனிப்பட்ட பெண்களின் முன்னிலைப் பாத்திரம் கூட அதை அந்த விதத்திலும் மாற்றிவிடவில்லை. உலகமயமாதலை உலக மக்களுக்கு எதிராகப் பெண் கையாளும் போது, அதைப் பெண்ணின் பெருமையாக்கி, இதை இன்றைய ஏகாதிபத்தியப் பெண்ணியம் அங்கீகரிக்கின்றது. இதையே இந்த நூலில் ரோஸலின்ட் மைல்ஸ் செய்ய முனைகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 36. விமர்சனத்தின் மீது ஒரு பதிலுரை:

## பெண்ணாதிக்கச் சமூகத்தில் நிலவிய சமூகச் சொத்துரிமையும் சமூக அடிப்படையும் ஆணாதிக்கச் சமூகத்தில்நிலவிய தனிச் சொத்துரிமையும் சமூக அடிப்படையும்

ஆணாதிக்க அமைப்பில் பெண்ணுக்கு எதிரானதாகக் காணப்படும் அனைத்தையும், எதிர்மறையில் புரிந்து மறுக்கும் ஒரு விமர்சனத்தை “ஆணாதிக்கமும் பெண்ணியமும்'' (தொகுதி:1) என்ற என் நூல் மீது **சேது** என்பவர் முன்வைத்துள்ளார்.

இயற்கையின் வளர்ச்சி விதியையும் அதன் தேர்வையும் அதன் இயங்கியல் தன்மையையும் கூட மறுத்து விடுகின்றார். ஆணாதிக்கத்தை வெறுமனே ஒற்றைப் பரிணாமத்தில் புரிந்து, அதை வறட்டுத்தனமான ஆணாதிக்கத்தை முன்தள்ளுகின்றார்.

உதாரணமாகக் குழந்தை மீதான தாய்மையையும், தாயுரிமையையும் மறுக்கின்றார். இவற்றைப் பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு சிறப்பிதழாக வெளிவந்த **“மனித உரிமைக் கங்காணி''** என்ற பத்திரிக்கையில் வெளியிட்டுள்ளார்.

ஒரே நூலாக எழுதி பின் நடைமுறையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டதால் தனித் தனி நூலாக வெளிவரும் என் நூலின் இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் விமர்சகரின் பல்வேறு விடயங்களுக்குப் பதில் அளிக்கின்றது. அத்துடன் என் முதல் நூல் விமர்சகரின் கருத்துக்குப் பல தளங்களில் மறுத்துரைத்த போதும், அதை எடுத்து விமர்சிக்க முடியாத பரிதாப நிலைக்குச் சென்று, ஒற்றைப் பரிணாமத்தில் கருத்தை ஒருதலைபட்சமாகவே வைக்கின்றார். இருந்தும் விமர்சனம் தொடர்பாகக் குறிப்பாக ஆராய முற்படுகின்றேன்.

அவர் தனது விமர்சனத்தில் “....மனிதன் இயற்கையைத் தனது உழைப்பைக் கொண்டு மாற்றத் துவங்கியவுடன் உற்பத்தியின் வேறுபட்ட தன்மையுடன் கூடிய **வேலைப் பிரிவினையை விடவும்,** மனித வளர்ச்சியை





ஒட்டிய இயற்கைப் பிளவுகளும் வளர்ச்சி பெற்றது என்று போகிற போக்கில் சொல்லப்படுவது அதிர்ச்சியளிக்கின்றது'' (பக்கம் -46) என்று நான் எழுதியதாகக் கூறி மறுக்கின்றார்.

நான் எழுதியது என்ன? “மனிதன் இயற்கையைத் தனது உழைப்பைக் கொண்டு மாற்றத் தொடங்கியவுடன், உற்பத்தியின் வேறுபட்ட தன்மையுடன் கூடிய **வேலைப் பிரிவினையும், பிளவும்,** மனித வளர்ச்சியை ஒட்டிய இயற்கைப் பிளவுகளும் வளர்ச்சி பெற்றது.'' (பக்கம் -027) என்றே எழுதியிருந்தேன்.

இது ஆழ்ந்த அர்த்தங்களைக் கொண்டவை. அதாவது வேலைப் பிரிவினையும், பிளவும், மனித வளர்ச்சியை ஒட்டிய இயற்கையான பிளவுகளும் கூட, இதை ஒட்டி வளர்ச்சி பெற்றது என்பதையே சுட்டிக் காட்டியிருந்தேன்.

உலகளாவிய மனிதப் பிளவுகள் (இனம், நிறம்,...) மட்டுமல்ல, அதன் வேறுபட்ட பண்பாட்டு கலாச்சார அடிப்படைக்கான கூறுகளையும் இது சுட்டிக் காட்டுகின்றது. உழைப்பு “பிரிவினையும் பிளவும்'' மனித வளர்ச்சியுடன் கூடிய இயற்கை பிளவுகளுடன் வளர்ச்சி பெறுகின்றது என்றே எழுதப்பட்டுள்ளது. பெண்ணின் நிலை உழைப்பின் பிரிவுடனும் பிளவுடனும் எப்படி தரம் தாழ்ந்தது என்பதையும் விளக்குகின்றது. இதற்கு இயற்கையான பிளவும் மனித வளர்ச்சியுடன் எப்படி துணை போகின்றது என்பதை விளக்குகின்றது.

என் சொற்களான **‘‘பிரிவினையும் பிளவும்''** என்பதைப் **“பிரிவினையை விடவும்''** என மாற்றிய விமர்சகர், என் கருத்தின் பெயரில் ஒன்றை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிடுவதன் மூலம், உள்ளடக்கத்தைத் திரித்துக் காட்டிவிடுகின்றார். தனிச் சொத்துரிமை உருவாக்கிய சமூக அடிமைத்தனத்தை, இயற்கையின் பிளவுகள் எப்படி உதவி செய்கின்றது என்பதும், இயற்கை சார்ந்த மனிதப் பிளவுகளுடன் எப்படி வளர்ச்சி பெறுகின்றது என்பதே என் விளக்கம். இதில் ஒன்றை உயர்ந்ததாகவும் மற்றதைத் தாழ்ந்ததாகவும் காட்டுவது என் கருத்து அல்ல.

அடுத்து விமர்சகர் என் கருத்தாகப் “பெண்ணின் வீட்டு உழைப்பு உபரியைத் தோற்றுவிக்கவில்லை'' (பக்கம் -46) என எடுத்துக் காட்டி இதை மறுக்கின்றார்.

நான் என்ன எழுதினேன் எனப் பார்ப்போம். “பெண்ணைச் சமூக உழைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்ட போக்கு (பெண்ணின் உழைப்பு மூலதனத்துக்கே உரிய உபரி பெறுமானத்தை இழந்தது.) என்பது, பெண்ணைச் சமூக வாழ்க்கையில் இருந்து படிப்படியாக அகற்றியதில் வெற்றி கண்டது. வீட்டுக் கடமை என்பது சமூகக் கடமையாக இருந்ததுடன் அது மதிப்புக்குரியதாக இருந்தது. தனிச் சொத்துரிமை உபரியை அடிப்படையாகக் கொள்ளத் தொடங்கிய நிலையில், பெண்ணின் வீட்டு உழைப்பு உபரியை உற்பத்தி செய்யவில்லை. ஆணின் உழைப்புக்குச் சமூகப் பெறுமானத்தை உபரியின் ஊடாகப் பெற்ற போது, பெண்ணின் உழைப்பு அந்த உபரியின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன் சமூகப் பெறுமானத்தை இழந்தது. இந்த நிலையில் வீட்டு வேலையும், வீட்டு நிர்வாகமும் சமூகத் தன்மையை இழந்தது.'' (பக்கம்-017)

இந்த பக்கம் முழுவதும் இது பற்றி விபரமாக எழுதப்பட்டுள்ளது. என் கருத்தின் அடிப்படையான அரசியல் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளத் தவறியதில் இருந்து, ஒருதலைபட்சமாகக் கருத்து வைப்பது நிகழ்கின்றது.

அதேநேரம் "பாலின வேலைப் பிரிவினையும் உபரியும் இதனைத் தொடர்ந்து தனிச்சொத்துடைமையும் உருவானதை ஆசிரியர் தெளிவாக விளக்கவில்லை'' என்று கூறியதன் மூலம் புரிதலில் உள்ள முரண்பாடு தொடங்குகின்றது. பாலின வேலைப் பிரிவினையில் உபரி ஆண் சார்ந்து இருந்ததையும், பெண் உபரியை உற்பத்தி செய்யாத நிலையில் தான் ஆணாதிக்கச் தனிச்சொத்துரிமை அமைப்பு உருவாகின்றது. இதை மறுக்கும் விமர்சகர், இதை நான் விளக்கவில்லை என்று கூறுவது அவரின் இயங்கியலற்ற புரிதலுக்கு இசைவாக என்னை விளக்க கோருவது ஒரு வேடிக்கையான விடயம்.

பெண்ணின் சமூகத் தகுதி என்ன? என்ற கேள்வியில் இருந்தே, இந்த உபரி பற்றிய பிரச்சினையைப் புரிந்து கொள்ளமுடியும். பெண்ணின் உழைப்பு இயற்கையான வேலைப் பிரிவினையுடன் மனித முன்னேற்றம் சார்ந்து வேறுபடத் தொடங்குகின்றது. இந்த வேறுபட்ட உழைப்பு சார்ந்து உற்பத்தி உபரியை உருவாக்கிய போது (இங்கு சமூகத் தேவை மறுக்கப்படுவது உருவாகின்றது.), ஆணின் உழைப்பே அதை வழங்கியது. இந்தப் புள்ளியில் இருந்தே ஆண்வழிச் சமூகம் பரிணமிக்கின்றது. மூலதனத்தை உற்பத்தி செய்யும் சமூக உழைப்பில் உபரியை உற்பத்தி செய்ய முடியாத ஆணாதிக்கச் சமூக எல்லையில் தான், பெண்ணின் அடிமைத்தனத்தைச் சமூகம் உறுதி செய்கின்றது. பெண்ணின் உழைப்பு (குழந்தை பராமரிப்பு, வீட்டுவேலை, விவசாயம்) உபரியை (சமூகத் தேவையை மறுத்து இருப்பின்) உருவாக்கியிருப்பின், தனிச் சொத்துரிமை அமைப்பில் நிச்சயமாகச் சமூகத் தகுதி பெற்றிருக்கும். இதனால் பெண்ணின் அடிமைத்தனம் என்பது சாத்தியமில்லை.

வர்க்கச் சமுதாயத்தில் அடிமைத்தனம் என்பது எப்போதும் பொருளாதாரக் கட்டுமான ஆதிக்கம் யாரிடம் உள்ளது என்பதைப் பொறுத்து விடயமாகும். பொருளாதாரக் கட்டுமான ஆதிக்கம் பெண்ணிடம் இருந்தால் ஆண் அமைக்கின்ற அடிமைத்தனமும், ஆணிடம் இருந்தால் பெண் அடிமைத்தனமும் உருவாகும் என்பது அதன் அடிப்படை விதியாகும்.

பெண்ணின் தனிப்பட்ட உழைப்பு தனது தேவைக்கு அதிகமாக (இதை உபரியாக அழைப்பது தனிச் சொத்துரிமை கண்ணோட்டமாகும்.) உற்பத்தி செய்த போதும், அடிப்படைத் தேவையின் எல்லைக்குள் தான் (குழந்தை வளர்ப்பிலும், சமூகத் தேவையிலும்) அவை இருந்தன. இதை உபரி என்று சொல்லமுடியாது.



தாய் வழிச் சமூகத்தின் அடிப்படை தேவையைப் பூர்த்தி செய்வதை, உபரியாகக் கூறுவது தனிச்சொத்துரிமை கண்ணோட்டமாகும். தாய்வழிச் சமூகத்தின் சிறப்பே, உபரி (சமூகத் தேவை தனியுடைமையான உபரிக்கு எதிராக இருந்தது.) இல்லாமல் இருப்பதால்தான். அதனால்தான் முதல் சமூகம் ஆதி பொதுவுடைமைச் சமூகமாக இருந்ததை மார்க்சியம் எடுத்துக் காட்டுகின்றது. இங்கு ஆண் அச்சமூகத்தின் அங்கமே ஒழிய, ஆணைச் சார்ந்து அச்சமூகம் இருக்கவில்லை. ஆண் எந்த நேரமும் பெண்வழிச் சமூகத்தால் வெளியேற்றப்படக் கூடிய நிலையில்தான் இருந்தான். ஆண் பெண்வழிச் சமூகத்துக்குத் தன் உழைப்பை நல்கினான். இதில் இருந்து முற்றாக மாறுபட்டது ஆண்வழிச் சமூகம்.

பெண் இயற்கை சார்ந்து நிலையாக இருந்தாள். ஆண் அலைந்து திரிந்த வாழ்வியலில் ஆண் பலம் பெற்றான். அவன் உணவுப்பழக்கங்கள் பெண்ணில் இருந்து வேறுபடத் தொடங்கியது. வேட்டையைச் சார்ந்து புதிய கருவிகளையும், பல அறிவியில் கண்டு பிடிப்புகளையும் ஆண் பெற முடிந்தது. பெண்களை விட அதிக அளவுக்கு உண்ட இறைச்சியானது மூளை வளர்ச்சியையும் பலத்தையும் ஆணுக்கு வழங்குகின்றது. நீண்ட பயணங்கள் ஊடான உயிர் வாழ்தலுக்கான போராட்டங்களும், உணவுப் போராட்டங்களும் உடலை வலுவூட்டியது. அத்துடன் வேட்டை மற்றும் வேட்டையின் எல்லையோரப் போர்கள், ஆணின் அதிகாரத்துக்கான பொருளாதார மேன்மைக்கு அடிப்படையாகியது.

பெண் நிலையான தளத்தில் சூழல் சார்ந்தே கண்டுபிடிப்புகளையும், அறிவியலையும் கண்டறிய முடிந்தது. ஆனால் ஆண் சமூகத்துக்கு வெளியில் இருந்து கொண்டு வந்த பொருட்கள், அதன் மீதான மதிப்புக்கு அடிப்படையாகியது. இந்த மதிப்பு உபரிக்கான அடிப்படையாக மாறுகின்றது. ஆண் தொடர்ச்சியான புதிய அறிவியல் வளர்ச்சியில் மதிப்பைப் பெறுவதில் முனைப்பு பெறுகின்றது. தேவைக்கு அதிகமாக மதிப்பைப் படைப்பதில், அவனின் உழைப்பு வளர்ச்சி பெறுகின்றது. உழைப்புப் பிரிவினையால் ஏற்பட்ட ஆணின் அறிவியல், பெண்ணின் உழைப்பு எல்லைக்குள் செல்வாக்கு செலுத்த தொடங்கியது. இந்த இடைநிலைக் காலக்கட்டத்தில் ஆண் உழைப்பு மற்றும் அறிவியல் பெண்வழிச் சமூகத்தில் தவிர்க்க முடியாத மதிப்பை ஆணுக்கு வழங்குகின்றது.

ஆணின் உழைப்பும் அறிவியலும், சலுகைகளாகி படிப்படியாக அவனின் உரிமையாக, உழைப்பின் உபரி அவனைச் சாருகின்றது. அதே நேரம் மந்தை வளர்ப்பைப் பெண்ணின் கையில் இருந்து ஆண் அதைப் படிப்படியாகக் கைமாற்றுகின்றான். ஆண் பெண்வழிச் சமூகத்துக்கு வெளியில் இருந்து வருபவனாக இருந்ததால், அவன் சமூக உழைப்பில் பங்கு பெற வேண்டியிருந்தது. வேட்டையாடல் மனித வளர்ச்சியுடன் குறைய, ஆண் மிருகங்களை மேய்ப்பதற்காக கொண்டு செல்வது ஒரு போக்காக தொடங்குகின்றது. **மந்தை வளர்ப்பு பிரதான உற்பத்தியாக மாற,**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆணின் உழைப்பு முன்னுக்கு வருகின்றது.** மந்தை மீதான உரிமை, அதன் பாதுகாப்பு முதல் அதன் மீதான அறிவியலை ஆண் படிப்படியாகப் பெற்றுக் கொள்வது அதிகரிக்கின்றது.

பெண் சமூக வளர்ச்சியில் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்யும் தகுதியை, ஆணினுடைய உபரியின் முன் இழந்து விடுகின்றாள். ஆணைச் சார்ந்து பெண் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்யும் போது, தாய்மை என்ற சமூகப் பண்பற்ற ஆண் தனது உழைப்பை உபரியாக மாற்றுகின்றான். சமூகத் தேவையை மறுத்து உபரியைச் சந்தைப்படுத்துவதற்குப் பதில் மற்றவனுக்குக் (பெண்ணுக்குக்) கொடுக்கும் போது, தனக்குச் சேவை செய்யக் கோரும் ஓர் எதிர்பார்ப்பைக் கோரத் தொடங்கினான். தனது உபரியில் வாழ்பவர்களை அடிமைப்படுத்தும் கண்ணோட்டமே ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அமைப்பாக உருவாகின்றது. தனது உபரிக்கு வாரிசு உரிமை என்ற அடிப்படையில், குழந்தையைப் பெற்றுப் போடும் பெண் என்ற அடிப்படையில், அவள் ஆணின் அடிமையானாள். இந்த அடிமை வாழ்வு ஆணின் உபரியை வீங்க (அதிகரிக்க) வைத்தது. ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை குடும்பத்துக்கு வெளியில், உபரி பரிமாறப்படும் விற்பனை வடிவம் உருவாகின்றது. உபரியை நுகரும் குடும்ப எல்லை ஆணாதிக்கமாகவும், சேவையைக் கோரும் அடிமைக் குடும்பமாகவும், உபரியின் விற்பனை தனிச்சொத்துரிமை சமூகமாகவும் பரிணமிக்கின்றது.

இவை பெண்ணின் அடிமை வாழ்வுக்கு வித்திட்ட ஆரம்பக் கால நிலையாகும். விமர்சகர் இன்றைய வரலாற்று நிலையுடன், பெண்வழிச் சமூகம் ஆண்வழிச் சமூகமாக மாறிய நிகழ்வைப் போட்டுக் குழப்பியடித்து விடுகின்றார். ஆணாதிக்கச் சமூகம் எப்படி பெண்ணை அடிமையாக்க முடிந்தது என்பதை விளக்கும் போது, தனிச் சொத்துரிமை அமைப்பு உருவான போது உபரி பற்றி ஆராய்வது அவசியமாகி விடுகின்றது. பெண்வழிச் சமூகத்தில் இருந்து பெண் அடிமைத்தனத்தை ஆராயும் அன்றைய காலக்கட்டத்தை, இன்றைய ஏகாதிபத்திய அமைப்பில் ஒப்பிட்டுக் கருத்து கூறமுடியாது.

உலகமயமாதல் தனிச் சொத்துரிமையைப் பரந்துபட்ட மக்களுக்கு ஒழித்து விடுகின்றது. இங்கு உபரி என்பது மூலதனத்தின் அதாவது மற்றொருவரின் சொத்தாகவே உள்ளது. பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் தனிச்சொத்துரிமை இல்லாத போது, தனிமனித உபரி பற்றிய விவாதத்தை ஆண் - பெண் இடம் பேசுவது அவசியமற்றது. பெண்ணாதிக்கச் சமூகத்தில் இருந்து ஆணாதிக்கம் உருவாகிய காலத்தில் தனிப்பட்ட ஆணின் உபரியே தனிச்சொத்துரிமையை உருவாக்கியதுடன், ஆண் - பெண்ணின் குறிப்பான சமூக உறவாக்கங்களை உருவாக்கியது. ஆணாதிக்க அமைப்பில் பெண்ணை அடிமையாக்கிய போது, பெண்ணின் வீட்டுவேலை முதல் அவளின் உழைப்பும் சமூகப் பெறுமானத்தைப் பெறவில்லை. ஆணாதிக்க அமைப்பில் அவளுக்கு அது மறுக்கப்பட்டது. இங்கு உழைப்புக்கே மதிப்பில்லாத போது, உபரி பற்றி பேசுவதும் அர்த்தமற்றவை. பெண்ணின் உழைப்பு மதிப்பிழந்து, ஆணாதிக்க அமைப்பில் பெண் அடிமை வாழ்வுக்கு இதுவே அஸ்திவாரமாகும்.



பெண்ணின் உழைப்பை முதலாளித்துவம் வீட்டில் இருந்து வெளியில் கொண்டுவந்த போது, ஆணைப் போல் அந்தப் பெண்ணுக்குத் தனிச் சொத்துரிமையை அனுமதிக்கவில்லை. ஆனால் பெண்ணின் உழைப்பு, மூலதனத்துக்கு தேவைப்பட்ட உபரியை வழங்கியது. ஆனால் தனிப்பட்ட பெண்ணுக்கு உபரியை வழங்கவில்லை. மூலதனத்துக்குப் பெண்ணின் உழைப்பு உபரியை வழங்கியதால், பெண்ணின் உழைப்புக்கு மதிப்பு ஏற்பட்டது. இந்த மதிப்பு பெண்ணுக்குக் கூலியை வழங்கியதன் மூலம், அவள் மூச்சுவிட முடிகின்றது. ஆனால் அவளின் மதிப்பு ஆணை விட கீழாகவே வைக்கப்பட்டது.

ஆணும் சரி, பெண்ணும் சரி இங்கு தனக்கான உபரியை உற்பத்தி செய்யவில்லை. மூலதனத்துக்கு உபரியை (இங்கு உபரி என்பது ஆண் - பெண்ணின் அடிப்படை தேவைக்கு மிஞ்சியதை மட்டும் எடுக்கவில்லை. தேவை மறுக்கப்பட்ட நிலையிலும் பெறப்படுகின்றது.) வழங்கியதன் மூலம், சொந்த அடிப்படை தேவையின் ஒரு பகுதியைத் தான் பெறமுடிந்தது, முடிகின்றது. ஆணும் சரி, பெண்ணும் சரி தேவையைக் கூலியாகப் பெறுவதை, உபரியாக மதிப்பிட முடியாது. இன்று உலகமயமாதல் விரிவாக்கத்தின் போது சிறுவிவசாயிகளின் உற்பத்தி உபரியை உற்பத்தி செய்வதில்லை. மாறாகத் தேவையைப் படைக்கின்றனர். ஆனால் பலர் இதில் கோட்பாட்டு ரீதியாக உபரியை உற்பத்தி செய்வதாகக் கூறி அவர்களை எதிரியாக்குகின்றனர்.

உபரி பற்றி அடிப்படை புரிதல் இன்மையில் இருந்தே விமர்சகர், பூர்சுவா மிதவாத ஆணாதிக்கக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்த முடிகின்றது. **உபரி என்பது தனிச் சொத்துரிமைக்கே உரியது.** சமூகத் தேவையை மறுக்கும் போது உருவாகின்றது. தேவை மறுக்கப்படும் போது, உபரி என்பது எதிர்மறையில் வளர்ச்சி பெறுகின்றது. இந்த அடிப்படை உள்ளடக்கத்தில் தான், தாய்வழிச் சமூகத்தில் பெண்ணின் உழைப்பு உபரியை உற்பத்தி செய்யவில்லை.

தாய்வழிச் சமூகம் சமூகத் தேவையை உற்பத்தி செய்த போது, அங்கு உபரி என்பது கற்பனையானது. அங்கு அன்றாடத் தேவையைத் தாண்டிய உற்பத்திகள் கூட, அச்சமூகத்தின் உபரியல்ல. நாளைய சமூகத்தின் தேவையை அடிப்படையாக கொண்டு சமூகத் தேவையாக இருந்த வரை, அவை உபரியல்ல. சமூகம் தனது தேவையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்த வரை, அவை உபரியல்ல. தனது தேவையைப் பூர்த்தி செய்யும் பண்ட மாற்றத்தில் ஒன்று அல்லது பல உற்பத்தி சார்ந்து மற்ற சமூகங்களுடன் செய்த வரையும் கூட, அவை உபரியல்ல. தேவையை மறுத்து தான் உபரி உருவாகின்றது. அதாவது சமூகத் தேவை உள்ள போது, அதை மறுக்கும் அடிப்படை விதிதான் உபரியாகும். தேவை மறுக்கப்படும் ஒரு நிலையில் தான், உபரி நேர்விகிதத்தில் அதிகரிக்கின்றது. சமூகத் தேவைக்கு வெளியில் நுகர்வு விளம்பர வெறியாட்டம் கூட, உபரியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிவாக்குகின்றது. அதாவது இது மூலதன வடிவத்தில் செயற்கையாகக் கட்டமைக்கப்படுகின்றது.

பெண்வழிச் சமூகத்தில் அதாவது ஆதி பொதுவுடைமைச் சமூகத்தில் தேவையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி, உபரியைப் படைக்கவில்லை. இதில் இருந்து ஆணாதிக்கச் சமூகம் உருவான போது, சமூகத் தேவையைப் பூர்த்தி செய்வது என்பது மறுக்கப்படுகின்றது. அதாவது சமூகத் தேவைக்குப் பதில் ஆணாதிக்கச் சமூக அமைப்பு, தனிமனிதன் சார்ந்த கண்ணோட்டம் தனிமனித உபரியை உருவாக்குகின்றது. இது சமூகத் தேவையை மறுக்கின்றது. தனிமனிதத் தேவையும் அதன் பூர்த்தியும் நிறைவுறும் போது, தனிமனித உற்பத்தி சார்ந்த உபரி உருவாகின்றது. (அதாவது உழைக்கும் தனிமனிதன் உழைக்க முடியாத சமூக உறுப்பினர்களின் தேவையை மறுப்பது உபரி உருவாவதற்கு அடிப்படையாகின்றது.) இதைவிட இயற்கை சார்ந்த தடைகள், உற்பத்தி திறன் மற்றும் தொழில் நுட்ப அடிப்படை சார்ந்தும் ஏற்படும். தேவைக்கு தனிமனித உழைப்பைப் பங்கிடுவதை மறுத்ததன் மூலம், தனிச் சொத்துரிமை அமைப்பு உபரியை உருவாக்குகின்றது. பெண்வழிச் சமூகத்தில் இருந்து ஆண் வழிச் சமூகம் உருவான வரலாற்றில், உபரி ஆணைச் சார்ந்தே இருந்தது.

பெண்கள் இக்காலத்தில் ஆண்களுக்கு நிகராக விதிவிலக்காகச் சில தனிநபர்கள் அபரிதமான உற்பத்தியைச் செய்திருந்தாலும், பெண்ணின் சமூகக் கண்ணோட்டம் சமூகம் சார்ந்து அது உபரியாகி விடவில்லை. பெண் தனது சொந்தக் குழந்தை முதல் சொந்தத் தாய் வழிச் சமூகத்தின் தேவை மீதான உணர்வுபூர்வமான பங்களிப்பு வரை இயற்கையாகவே உபரிக்கு எதிரானதாக இருந்தது. தனிச்சொத்துரிமை வழிவந்த ஆணாதிக்கச் சமூகம் உழைப்பையும் உற்பத்தியையும் தனிச் சொத்துடைமையாக்கிய போது, சமூகத் தேவை மறுக்கப்பட்டு உருவான உபரி தனி ஆணிடம் மையப்பட்டது. அந்த உபரிக்கே பெண் அடிமையானாள். அந்த அடிமை கூட தனிச் சொத்துரிமை வாரிசை உருவாக்கும் அடிப்படையில், ஆண் தனது இரத்த வழியை உறுதி செய்ய உருவானது. இதற்குப் பின் பெண்ணின் உபரி என்ற பேச்சுக்கே இடமற்ற, ஆணாதிக்கச் சமூகத்தின் அடிமையாகவே வாழ்ந்தாள், வாழ்கின்றாள்.

உழைப்புச் சந்தையில் பெண் பங்கு பற்றிய வெவ்வேறு காலத்திலும் கூட, பெண்ணின் உழைப்பு தேவைக்கு மிஞ்சிய உபரியைப் படைக்கவில்லை. பெண்ணின் தேவை மறுக்கப்பட்டுச் சுரண்டப்பட்ட உபரி என்பது, பெண்ணின் சொத்தாக இருக்கவில்லை. மாறி வந்த சமுதாயத்தின் ஆளும் வர்க்கங்களின் சொத்தாகவே (மூலதனமாகவே) இருந்தன. பெண் உபரியைப் படைக்கின்றாள் என்பது, உள்ளடக்கத்தில் அபத்தமானவை. அவளின் தேவை மறுக்கப்படும் போது, உபரி படைக்கின்றாள் என்பது கோட்பாட்டு ரீதியாகவே பெண்ணை இழிவுபடுத்துவதுதான். மாறாக அவளின் உழைப்பு வரைமுறையின்றி சுரண்டப்படுகின்றது. இங்கு அவளின் உபரியை மட்டும் மூலதனம் சுரண்டவில்லை, தேவையையே சுரண்டுகின்றது. இவை பாட்டாளி வர்க்க ஆணுக்கும் கூட விதிவிலக்கின்றி பொருந்தும்.



மூலதனம் உழைக்கும் ஆணின், பெண்ணின் தேவையை மறுத்து, உருவாக்கும் தேவை பற்றிய நிர்ணயமே உபரிக்கான அஸ்திவாரமாக உள்ளது. இந்த உபரியைப் படைக்க இங்கும் மேலதிக நேர உழைப்பை உருவாக்கும் வரையறையை அடிப்படையாகக் கொண்டு, உபரி உருவாக்கப்படுகின்றது. இந்த ஆணாதிக்கத் தனிச்சொத்துரிமை அமைப்பு, தேவைக்குரிய உற்பத்தியைச் செய்யாத வரை, உபரி என்பது உழைக்கும் மக்களின் தேவையை மறுப்பதில் இருந்தே செயற்கையாக உருவாக்கப்படுகின்றது.

இன்று உலகளாவிய உணவு உற்பத்தியை எடுத்தால் உபரி என்பது வெற்றுச் சொல்தான். கோடிக்கணக்கான மக்களின் உணவுத் தேவை மறுக்கப்பட்டு அரைப்பட்டினி, முழுப்பட்டினி ஏற்படுத்தி, அதில் உபரி என்பது வெற்றுச் சொல்லாகும். மனிதத் தேவையை மறுத்து உருவாகும் உபரியான உலக உணவுக் கையிருப்பு ஒரு வருடத்துக்குக் கூட போதாது. இந்த உபரியும் கூட தேவையை மறுப்பதை அடிப்படையாகக் கொண்டது. அதாவது மக்களின் தேவை என்பதில் இருந்து, எதிர்கால சமூகத் தேவையை மறுக்கும் போதே உபரி உருவாகின்றது. இவை அனைத்தும் தேவையை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் உபரி பற்றிய புலம்பல் நிகழ்கின்றது.

உபரியை பெண் படைக்கவில்லை என்ற என் மையவாதம், மனிதச் சமுதாயத்தில் பெண் ஒருக்காலும் உபரியின் சொந்தக்காரியாக இருக்கவில்லை. அதாவது தனிச்சொத்துரிமையின் தலைமையை ஒருக்காலமும் அவள் அலங்கரிக்கவில்லை.

பெண்வழிச் சமூகத்தில் இருந்து உருவான ஆண்வழிச் சமூகத்தில், உபரியின் சொந்தக்காரனாக ஆண் மட்டுமே இருந்துள்ளான். அதுவே இன்றுவரை நீடிக்கும் ஆண்வழிச் சமூகமாகும். பெண்வழிச் சமூகத்தில் இருந்து ஆண்வழிச் சமூகம் உற்பத்தி சாந்து உருவான போது, தனிச்சொத்துரிமையின் வாரிசாக ஆண் உருவாகின்றான். இந்த ஆண்வழிச் சமூகத்தில் தனிப்பட்ட ஆண் தனிச்சொத்துரிமையின் சொந்தக்காரனாக மாறிய போது, உபரி அவனின் கையில் கொழுவீற்று இருந்தது. தனிப்பட்ட எல்லா ஆண்களும் (விதிவிலக்குகள் சில இருந்தபோதும்) தனிச்சொத்துரிமையின் பிரதிநிதியான போது, உபரி அதன் மூலமாகியது. இந்த நிலையைப் பெண் ஒருக்காலும் (சில விதிவிலக்குகள் இருந்த போதும்) அடையவில்லை. இந்த தனிச்சொத்தின் உபரிக்குச் சொந்தக்காரனான தனிப்பட்ட ஆண்களின் சொத்துகள், மாறிவந்த உற்பத்தி மாற்றங்களுடன் பரந்துபட்ட மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டு, சிலர் அதன் சொந்தக்காரர்கள் ஆனார்கள். இது உலகமயமாதலாக இன்று தொடர்கின்றது..

விமர்சகர் தொடர்கின்றார். "இதைவிட வேடிக்கையாக, தாய்மை உணர்வு என்பது ஆண் - பெண் இருவருக்குமே பொதுவானது" என்று கூறுகின்றார்.

தாய்மை உணர்வு என்பது பெண்ணுக்கு மட்டுமே உரியது என்ற என் கருத்தை வேடிக்கையாகவே எதிர்மறையில் நின்று மறுக்கின்றார். மறுக்கின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது ஆணாதிக்கச் தனிச் சொத்துரிமை, பெண்ணின் மீது சுமத்தியுள்ள தாய்மையின் கடமைகளைப் பட்டியல் இட்டுக் காட்டுகின்றார். தாய்மை உணர்வு என்பது ஆணாதிக்கம் சொல்வதில் இருந்து புரிந்து கொண்டதால், இந்த அவலம் நிகழ்கின்றது.

மார்க்சியம் இயற்கையில் இருந்தே தாய்மையைப் புரிந்து கொண்டு அதைப் பாதுகாக்கின்றது. மூவாயிரம் ஆண்டுகளாக நிலவும் ஆணாதிக்க அமைப்புக்கு முன்பு நிலவிய தாயுரிமை சமூகத்தில், தாய்மை பெண்ணின் உரிமையாக, பெண்ணின் உணர்வாக, தாயுரிமையைப் பிரதிபலிக்கும் சின்னமாக இருந்தது. இதனால் தான் பெண் தலைமை தாங்கினாள். **பெண்ணின் தலைமை என்பது பெண்ணின் தாய்மையினால் தாய்மை உணர்வினால் ஏற்பட்டது.** இங்கு தாய்மை உணர்வு இருவருக்கும் பொதுவானதாக இருந்தால் ஆணும் - பெண்ணும் தலைமை தாங்கியிருப்பார்கள்.

தாய்மை என்பது ஆணாதிக்கச் சமூக எல்லைக்குள் நாம் புரிந்து கொள்வோமாயின், இது ஏகாதிபத்தியப் பெண்ணியத்தின் வக்கிர வெளிப்பாடுதான். குழந்தையைப் பெண் சுமக்கும் கணம் தொடங்கி அவற்றை ஆணாதிக்கக் கடமையாகச் சுமத்தப்பட்ட சமூக இழிவுகளுக்கு அப்பால், பெண் உணர்வுபூர்வமான தாய்மை உணர்வுகளை இயற்கையாகக் கொண்டே வாழ்கின்றாள்.

தனிச்சொத்துரிமை தனிமனித வக்கிரத்தில் உலகமயமாக்கி மனித உணர்வுகளை மலினப்படுத்தியுள்ளது. இருந்தபோதும் பெண்ணின் தாய்மை உணர்வு இயற்கை சார்ந்த சமூக உணர்வாக நீடிக்கும் பண்பு, ஆணாதிக்கத் தனிமனிதத் தனிச் சொத்துரிமை பண்புக்கு எதிரானது. தாய்மை உணர்வை ஆணுக்கும் சமமாக நிலை நாட்டிக் காட்டுவது, ஆணாதிக்க அமைப்பில் பெண்ணை வக்கிரப்பட வைப்பதாகும். இயற்கையில் நாம் எல்லா உயிரினத்திலும் ஆணின் சமூக உணர்வுகளை விட, பெண்ணின் சமூக உணர்வுகளைத் தாய்மைப் பண்பில் புரிந்து கொள்ளமுடியும். ஆணாதிக்க அமைப்பில் பெண்ணின் தாய்மை உணர்வு, ஆண் தலைமை தாங்குதல் என்ற அடிப்படையில் இழிவாக்கப்பட்ட போது, அதை அப்படியே ஏகாதிபத்திய எல்லையில் பெண் புரிந்து கொண்டால் எது நிகழுமோ, அதை அப்படியே விமர்சகர் வெளிப்படுத்தி விடுகின்றார்.

பெண்வழிச் சமூகத்தில் குழந்தை வளர்ப்பில் சமூகப் பங்களிப்பு உயிரோட்டமாக இருந்தது. இதில் ஆண்கள் பெண்களுக்கு ஒத்துழைத்தனர். பெண் நிலைத்து வாழவும், ஆண் அலைந்து வேட்டையாடும் சமூகக் கண்ணோட்டம் வளர்ச்சி பெற்றது. பெண்வழிச் சமூகத்திற்குப் பெண்ணின் தலைமையும் இங்கு அஸ்திவாரமாக இருந்தது. எல்லாப் பெண்களும் எல்லாக் குழந்தைகளுக்கும் தாயாகவே இருந்தனர். தாய்மைப் பண்பின் சிறப்பு இது. இதுவே எல்லா ஆண்களும் கணவனாகவும், எல்லாப் பெண்களும் மனைவியாகவும் வாழ வழியமைத்தது. சமூகமே குழந்தை வளர்ப்பில் பொறுப்பான முக்கிய சமூகப் பங்கை வகித்தது. ஆணாதிக்க அமைப்பில்





ஆணின் ஒத்துழைப்பைப் பெண் கோரும் போது, குடும்பம் என்ற சமூகக் கூட்டு எல்லைக்குள் பெண்ணின் ஜனநாயகக் கோரிக்கையாகவே உள்ளது. இந்த எல்லைக்குள் மட்டும் மார்க்சியம் ஆதரித்துப் போராடுகின்றது. தாய்மை உணர்வை ஆணுக்கு இடம் மாற்றும் ஏகாதிபத்தியப் பெண்ணியச் சீரழிவை எதிர்த்துப் போராடுகின்றது. அதே நேரம் மார்க்சியம் அதைவிட முன்னேறிய நிலையில், குழந்தை பராமரிப்பில் சமூகப் பங்களிப்பை முதன்மைப்படுத்துகின்றது. அதையே மார்க்சியம் தனது ஆணையில் வைக்கின்றது.

தொடர்கின்றார் விமர்சகர். உடல் சுதந்திரம் சார்ந்து "...சட்டப்பூர்வமாக வயதுக்கு வந்த ஒரு பெண் சுயாதீனமாகப் பூரண விருப்புடன் எவ்வித கட்டாயமும் இன்றி உறவு கொள்ளுதல், திருமணம் செய்து கொள்வது, அவள் விருப்பப்படி கருத்தரிப்பது, கருக்கலைப்பது, குழந்தை பெற்றுக் கொள்வது, குடும்பக் கட்டுப்பாடுச் சாதனங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்டு மிக அதிகமான உள்ளடக்கியவை" (பக்கம்-48) என்று என் கருத்தின் மீதான விமர்சனமாக இதை வைக்கின்றார்.

என் நூலில் இறுதிக் கட்டுரையில் (பக்கம்-256-268) விரிவான அடிப்படையில் எழுதப்பட்ட இந்த விடயத்தை எடுத்து, ஒரு வரியில் கூட அதை மறுக்க முடியவில்லை. சட்டப்பூர்வமான வயது தடையை மட்டும் போட்டபடி, உரிமை பற்றிய விவாதத்தை முன் வைக்கின்றார். சட்டப்படியான வயது என்ற ஒன்றை யார்? எப்படி? எதன் அடிப்படையில் தீர்மானிப்பது?

பெண்ணின் உடல் சார்ந்த விடயங்களை அவள் தீர்மானிக்கும் உரிமையை இந்த ஆணாதிக்க அமைப்பில், ஆணிடம் இருந்து கோரும் ஜனநாயக எல்லைக்குள் மட்டும் இது சரியானவை. ஆனால் இந்தப் பெண்ணின் உடல் மீதான ஆணின் உரிமையும் சரி அல்லது பெண்ணின் உரிமையும் சரி ஆணாதிக்கச் சமூக அமைப்பே தீர்மானிக்கின்றது. இதன் அடிப்படையில் இந்த உரிமை பற்றிய ஆணாதிக்கக் கண்ணோட்டத்தை, அதன் எல்லா அம்சங்கள் மீதும் மார்க்சியம் எதிர்த்துப் போராடுகின்றது. இதைப் பெண் எதிர்த்துப் போராடாத வரை உடல் உரிமை என்பது எப்போதும், ஆணாதிக்க ஏகாதிபத்தியப் பண்பாட்டு எல்லைக்கு உட்பட்ட கோரிக்கையே. தனிச் சொத்துரிமை தனிமனிதன் சார்ந்த அனைத்தையும் தீர்மானிக்கும் சமூக அமைப்பில், அது பெண்ணுக்கு மறுப்பதையே மார்க்சியம் எதிர்த்து நிற்கின்றது. இதுவே ஜனநாயகக் கோரிக்கையாகின்றது. ஆனால் பெண் விடுதலைக்கு இது தீர்வை வழங்குவதில்லை. பெண்ணின் இக்கோரிக்கை இயல்பில் இந்த ஏகாதிபத்திய அமைப்பில் வாழ்ந்தபடி, அதன் எல்லைக்குள்ளான தீர்வாக முன்வைப்பதால் ஏகாதிபத்தியக் கோரிக்கையாக மாறிவிடுகின்றது. பெண்ணின் உடல் மீதான கட்டுப்பாடு அனைத்தும் ஏகாதிபத்தியச் சமூக எல்லைக்கு உட்பட்டதே. ஏகாதிபத்திய அமைப்பில் உடல் கட்டுப்பாடு என்பதும், பாட்டாளி வர்க்க அமைப்பில் பெண்ணின் உரிமை (உரிமை என்று எதுவும் இருப்பதில்லை.) என்பதும் முற்றிலும் தலைகீழானவை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வித கட்டாயமும் இன்றி பெண் உறவு கொள்ளும் உரிமை, ஏகாதிபத்திய அமைப்பில் பூர்சுவா நுகர்வு விபச்சாரத்தைக் கோருவதே. ஆணாதிக்கமும் பெண்ணியமும் என்ற நூலின் இறுதிக் கட்டுரையில் காதலிக்க சுதந்திரம் வேண்டும் என்று கேட்ட போது, லெனின் எதைச் சொல்கின்றாரோ அது இதற்கும் மீளச் சிறப்பாகப் பொருந்துகின்றது. பெண் விடுதலையின் பெயரில் ஆண் எதை எல்லாம் செய்கின்றனோ, அதை எல்லாம் பெண் கோருவது என்பது ஏகாதிபத்தியக் கோட்பாட்டுக்குள் பெண், ஆண் மயமாகின்றாள் என்பதே அர்த்தம்.

ஆணாதிக்க அமைப்பில் பெண் புகைக்க இருக்கும் தடையை மறுத்து, பெண் புகைக்கும் உரிமை கோரப்படும் போது, ஜனநாயகக் கோரிக்கையின் எல்லைக்குள் மட்டுமே சரியானது. ஆனால் புகைப்பது பெண் விடுதலையின் ஒரு வடிவமாகக் கருதி புகைப்பின், அவற்றை நாம் எதிர்த்து நிற்கின்றோம். பாட்டாளி வர்க்கச் சமூகத்தில் உடல் மீதான உரிமை என்ற கோரிக்கை என்பது அதன் சுய அர்த்தத்தையே இழந்துவிடும். அதாவது அரசு, ஜனநாயகம், சுதந்திரம் எல்லாம் எப்படி அதன் அர்த்தத்தை இழந்து விடுகின்றதோ அதுவே இதற்கும் நிகழும். **ஒரு பெண் உறவு கொள்ளும் உரிமையைக் கோரும் போது, விபச்சாரத்தின் உள்ளடக்கத்தை எதிர்த்தே கோரவேண்டும்.** இக்கோரிக்கைகள் இந்த ஆணாதிக்க அமைப்பில் இரண்டு எல்லைகளுக்குள் கோரப்படுகின்றது. ஒன்று **ஜனநாயக கோரிக்கை**யாகவும் இரண்டாவது **ஏகாதிபத்தியக் கோரிக்கை**யாகவும் உள்ளது. இதன் விலகல் கத்தி விளிம்பில் ஊசலாடுகின்றது. இது எல்லா ஜனநாயகக் கோரிக்கைகளுக்கும் பொருந்தும்.

நான் யாரைத் திருமணம் செய்வது என்பது நிலப்பிரபுத்துவ அமைப்பில் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றது. அதைப் பெண் கோரும் போது வர்க்கம், சாதி, நிறம், இனம், மதம் போன்ற சமூக ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து கோரவேண்டும். ஆனால் இந்த உரிமையை பெற்றுவிடுவதால் பெண் விடுதலை அடைந்து விடுவதுமில்லை. இந்த ஏகாதிபத்திய அமைப்பில் அதன் எல்லைக்குள் தான் இந்த ஜனநாயகக் கோரிக்கை செயற்படுகின்றது. மேற்கத்திய சமூகங்களில் இவைகளைத் தெளிவாகவே எதார்த்தத்தில் காணமுடியும்.

கருத்தரிக்கும் உரிமை, குழந்தையைப் பெற்றுக் கொள்வது என்பது பெண் தனித்து எடுக்கும் உரிமை சார்ந்தவை அல்ல. சம்பந்தப்படும் இரண்டாவது நபருடன் தொடர்புடைய விடயமாக உள்ளது. இங்கு சமூகக் கூட்டுத் தன்மை முதன்மையானது. தனிச்சொத்துரிமைக் கண்ணோட்டத்தை உடல் மீது கோரும் பட்சத்தில், ஆணாதிக்கக் கண்ணோட்டமே அங்கு பிரதிபலிக்கின்றது.

கருக்கலைப்பது என்பது கூட சம்பந்தப்பட்ட இரண்டு நபருடன் தொடர்புடையதே. அத்துடன் குழந்தையின் அதாவது மூன்றாவது நபர் சம்பந்தபட்ட விடயமாகவும் உள்ளது. இந்தக் கரு அழிப்பிலும் ஏகாதிபத்தியக்



கண்ணோட்டமே தீர்க்கமாகச் செயல்படுகின்றது. இங்கு சமூகக் கூட்டு இல்லாத நிலையில் மட்டும் பெண் முடிவு எடுக்க முடியும்.

ஆனால் இவை அனைத்தும் ஒட்டு மொத்தமாக இந்த ஏகாதிபத்தியச் சமூக அமைப்பின் எல்லைகளே தீர்மானிக்கின்றன. குழந்தை பேறு, யாருடன் உறவு கொள்வது, எப்படி உறவு கொள்வது, கரு அழிப்பது, எந்தக் கருத்தடையைப் பாவிப்பது என அனைத்தும் இந்த ஏகாதிபத்தியப் பண்பாட்டு - கலாச்சார நுகர்வுப் பொருளாதாரக் கூறுகளே பெண்ணுக்கும் சரி, ஆணுக்கும் சரி முடிவைக் கொடுக்கின்றது. ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு எதை படைக்கின்றதோ, அதை நுகர்வதன் மூலம் மனிதச் சமூகத்தின் விளைவாகின்றது.

ஏகாதிபத்திய மூலதனம் எதைச் சந்தைப்படுத்த முடியுமோ, அதுவே சமூகத்தின் நடைமுறைத் தீர்வாக வாழ்வியலாக உள்ளது. இதை ஆணாதிக்க அமைப்பில் ஆணிடம் இருந்து பெண் கோரும் போது எந்த மாற்றமும் நிகழ்வதில்லை. பெண் ஆணிடம் உடல் கூறு சார்ந்து சில சலுகைகளைப் பெறுவதற்கு அப்பால், எதுவும் தலைகீழாகி விடுவதில்லை. பாட்டாளி வர்க்கம் இதில் உள்ள ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு அப்பால், மற்றவற்றை ஈவிரக்கமின்றி எதிர்க்கின்றது. பாட்டாளி வர்க்கம் இந்த ஏகாதிபத்தியத் தனிமனிதச் சமூக அமைப்புக்கு மாற்றான ஒரு சமூகத்தைக் கோருகின்றது. தனிமனிதத் தனிச் சொத்துரிமை சமூகக் கண்ணோட்டங்களையும், அது சார்ந்த பண்பாடுகளையும், கலாச்சாரங்களையும் தகர்த்தெறியக் கோருகின்றது. மாறாக இயற்கையின் பாதுகாப்புடன் கூடிய மனிதக் கூட்டுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்பாட்டை, கலாச்சாரத்தைச் சமூகம் சார்ந்து கோருகின்றது.

மேலும் விமர்சகர் "செயற்கையாக உருவாக்கப்பட்ட இப்பாலினவாத வேலைப் பிரிவினையானது வன்முறையால் மட்டுமே நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது'' என்ற வாதம் உண்மையில் தவறானவை.

பாலின வேலைப்பிரிவினை செயற்கையாக உருவானவையல்ல. மாறாக மனித வளர்ச்சியில் இயற்கையாக உருவானவை. அங்கு வன்முறை கையாளப்படவில்லை. ஆணாதிக்கத் தனிச் சொத்துரிமை உருவான போது இயற்கையின் தன்மை செயற்கையாக மாற்றப்பட்டது. அதாவது ஆணின் தேவையையும், கடமைகளையும் பூர்த்தி செய்யுமாறு ஆணாதிக்கச் சமூக ஒழுங்கு மாறத் தொடங்கியது. இது வன்முறையால் மட்டும் சாதிக்கப்படவில்லை. ஆணின் பொருளாதார ஆதிக்கத்தால், சமூகத் தன்மை அழிக்கப்பட்டுப் படிப்படியாக இயல்பாக மாறி வந்தது. இங்கு இந்த நிலை ஒரே நாளில் ஏற்படவில்லை. நீண்ட காலமாகப் பல படிநிலைகளைக் கடந்தே வளர்ச்சி பெறுகின்றது. ஆண் - பெண்ணுக்கு இடையிலான வேலைப் பிரிவினை நீடித்த பாதுகாப்பை, ஆணாதிக்கப் பொருளாதாரச் சமூகப் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகளே கட்டமைக்கப்படுகின்றது. இது மீறப்படும் போதே வன்முறை கையாளப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து டார்வினின் "மற்றொரு கோட்பாடான வலிமையுள்ளதே உயிர்வாழும் என்பது பெண்களுக்கும் மட்டுமின்றி சுற்றுச்சூழலுக்கும் எதிரானதே இவ்விடயம் போகிற போக்கில்தான் சொல்லப்படுகின்றது."

இந்த விடயம் என் தலைப்புக்கு உட்பட்டவையல்ல. ஆனால் விமர்சகர் இது பெண்களுடன் தொடர்புடையது என்கின்றார். **டார்வின்** கோட்பாட்டை இயற்கைக்கு வெளியில் தனிச் சொத்துரிமை அமைப்பில் புரிந்து கொள்ளும் அனைவரும் இதே தவறு இழைக்கின்றனர்.

இயற்கையில் உயிரினங்களுக்கு இடையிலான உயிர்வாழ்தலுக்கான போராட்டம், வலிமையில் மட்டுமல்ல, பல்வேறு கூறுகளுடன் தொடர்புடையவை. அனைத்து இயற்கையையும் அழித்து அதில் உயிரினங்கள் தம்மை நிலைநிறுத்தியதில்லை. மனிதன் இயற்கையை அழிக்கின்றான் என்பதால், அதை டார்வின் கோட்பாடாகப் பொருத்துவது தவறானது. ஒரு சமூகம் தனக்குள் வலிமையைக் கொண்டு உயிர்வாழ்தலை டார்வின் குறிப்பிடவில்லை. அதே போல் இயற்கையை அழித்து உயிர்வாழ்தல் பற்றியும் டார்வின் குறிப்பிடவில்லை. அப்படி குறிப்பிட்டதாகச் சிலர் திரித்தனர் என்பதே உண்மை.

உயிரினங்களின் தோற்றம் பற்றி டார்வின் அடிப்படை ஆய்வில் வலிமை பற்றி பேசும் போது, குட்டியை விட வலிமையான தாய் - தந்தை மற்றும் சமூகத் தன்மையில் வலிமையாக இருந்தவைதான் அதற்காகக் குட்டியை அல்லது சொந்த இனத்தில் வலிமை குறைந்ததை அழித்து உயிர்வாழ்ந்ததாக டார்வின் நிறுவவில்லை. ஒரு சமூகத்தின் உள்ளான அழிப்பு என்பது உயிர்வாழ்தலுக்குத் தடையானவை என்பதை டார்வின் தெளிவாகப் புரிந்தே இருந்தார். மிருகங்கள் - பறவை இனங்கள் என எங்கும் தனது சொந்த இனத்தினுள் இந்த வலிமை விதியைக் கையாண்டது இல்லை. அது போல் வலிமையால் இயற்கையை அழித்து உயிர் வாழ்ந்தவையல்ல. இந்த வலிமையில் உயிர்வாழ்தலை உருவாக்கவில்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் டார்வின் இருந்து இருந்தால், அவர் ஒரு சமூக இயற்கை விஞ்ஞானியாக இருந்து இருக்கவே முடியாது.

உண்மையில் டார்வின் கோட்பாடுகள் தனிச் சொத்துரிமை கண்ணோட்டத்தில் திரிக்கப்பட்டன. தனிச் சொத்துரிமைவாதிகள் தமது சூறையாடலை நியாயப்படுத்த, டார்வினின் விதியை இயற்கைக்கு எதிராகத் திரித்து கேடாகவே பயன்படுத்தினர், பயன்படுத்துகின்றனர். இதில் இருந்து விமர்சகர் தன்னை விடுவிக்கத் தவறி, அதில் இருந்து இதை எதிர்மறையில் நிலை நிறுத்திவிடுகின்றார்.

சுற்றுச்சூழல் என்ற வார்த்தை பிரயோகத்தையும், அதன் தனிச் சொத்துரிமை பாதுகாப்பை உள்ளடக்கிய சொல்லாக இருப்பதாலும், மார்க்சியம் அதை மறுதலிக்கின்றது. இதற்குரிய சரியான சொல் கண்டறியப்பட வேண்டும். இதை வெளிவரவுள்ள **"உலகமயமாதலும் சர்வதேசியமும்"** என்ற என் நூலில் விரிவாக ஆராய்கின்றேன்.



அடுத்து என் விவாதத்தில் விமர்சித்தவைகள் எந்தப் பெண்ணியம் (எந்த வர்க்கம்) சார்ந்தது என்று குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டு, அதைக் குறைபாடாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதாவது கோட்பாடுகளை முதலாளித்துவத் தாராளவாதப் பெண்ணியமா? தீவிரப் பெண்ணியமா? அல்லது மார்க்சியப் பெண்ணியமா? என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும் என்கின்றார். **நாம் நடுநிலைவாதிகள் அல்லர்.** மார்க்சியப் பெண்ணியத்தை உயர்த்துபவர்கள்.

இங்கு முதலாளித்துவத் தாராளவாதப் பெண்ணியத்தையும், தீவிரப் பெண்ணியத்தையும் ஒரே சித்தாந்த அடிப்படையாகவே மார்க்சியம் கருதுகின்றது. கோட்பாட்டு ரீதியாக இவை இரண்டும் முதலாளித்துவக் கண்ணோட்டம் சார்ந்த, ஆணாதிக்கத்தைத் தக்கவைப்பதே. மார்க்சியம் இரண்டையும் அதன் கோட்பாட்டு அடிப்படையில் வேர் அறுக்கும் போது, தனக்கு எதிரான வர்க்க அடிப்படையில் நிலை நிறுத்தி அம்பலம் செய்கின்றது. எனவே என் விமர்சனங்கள் அனைத்துமே இன்றைய முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கச் சிந்தனையை எதிர்த்து மார்க்சியத்தை முன்வைக்கின்றது. இதைப் படிப்பவர்கள் தெளிவாகவே எதார்த்தத்தில் புரிந்து கொள்வர்.

நடைமுறை யுத்தத்தந்திர ரீதியில் மட்டுமே இந்த வேறுபட்ட போக்கு பற்றிய தெளிவு அவசியமாகும். அவர்களின் ஜனநாயகக் கோரிக்கையை இனங்கண்டு கொள்ளவும், ஐக்கியப்பட்ட போராட்டத்துக்கு வழிகாட்டவும் மட்டுமே. சித்தாந்த ரீதியாக மார்க்சியம் அல்லாத பெண்ணியங்கள் அனைத்தும், எதிரி வர்க்கத்தைத் தெளிவாகப் பிரதிநிதித்துவம் செய்பவையே.

"தனிக் கொத்தடிமை" தகர்க்காமல் பெண் விடுதலை சாத்தியமில்லை என்று கூறும் எதையும் நான் சொல்லவில்லை. **தனிச்சொத்துரிமையைத் தகர்க்காமல் பெண்விடுதலை சாத்தியமில்லை என்பதே என் கருத்து.** என் மொழி பற்றிய என் கருத்தை முன்னுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

என்னைப் பற்றி தவறான விளக்கம் ஒன்று இதில் உள்ளது. என்னை இலங்கை மலையகத் தமிழர் என்று குறிப்பிட்டது தவறானது. நான் மலையகத்தில் பிறந்தவன். என் இளமைக் காலத்தில் (10 வருடங்கள்) அங்கு வாழ்ந்தவன். என் அப்பாவின் வேலை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கிலும், நீர்கொழும்பிலும் இறுதியாக யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்தவன். ஆனால் என் பூர்வ அடையாளம் மலையகத் தமிழன் என்று அடையாளப்படுத்தப்படும் இந்திய வம்சவழியல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 31. முடிவுரை

தொகுப்பாக, இந்த ஆய்வு இயற்கையை ஆதாரமாகக் கொள்கின்றது. சமுதாயத்தின் பல்வேறு மனித அவலங்களை நாம் இனம் கண்டு கொள்ளவும், அவைகளை ஒழித்துக் கட்டவும் மார்க்சியம் சகல விடயங்கள் மீதும் தன்னை உறுதியாக இணைத்துப் போராடுகின்றது.

மார்க்சியம் என்பது அனைத்துச் சமூக அவலங்களையும் இனங்கண்டு ஆய்வு செய்யும் ஒரு முறை மட்டுமின்றி, அதை மாற்ற நடைமுறையாக **வழிகாட்டும் ஒரு போர்த் தந்திரப் புரட்சிகர அரசியல் வழியாகும்.** இத்தத்துவம் சமுதாயத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிகாட்டுவதுடன், அதைப் பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் முன்னெடுத்து வழிநடத்துகின்றது.

இந்தத் தத்துவம் எந்தச் சாதிக்கோ, இனத்துக்கோ, பாலுக்கோ (ஆண்பால் - பெண்பால்), நிறத்துக்கோ, மதத்துக்கோ உரிமையானதல்ல. இது உலகளாவிய ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிகாட்டும் பாட்டாளி வர்க்கத் தத்துவமாகும். இது உலகமயமாதலுக்கும், ஏகாதிபத்தியத்துக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும், மதவாதத்துக்கும், நிறவாதத்துக்கும், இனவாதத்துக்கும், ஆணாதிக்கத்துக்கும் என மனிதனை அடிமைப்படுத்தும் அனைத்துக்கும் எதிரானது.

இந்த வகையில் ஆணாதிக்கம் மீதான ஆய்வுகளை, மார்க்சியம் அதன் இயற்கை சார்ந்து அடையாளம் கண்டு, அதை வேரறுக்கப் போராடுகின்றது. இதனால் மார்க்சியம் அல்லாத மற்ற வர்க்கப் பெண்ணியங்கள் கடுமையான எதிர்ப்பை முன் வைக்கின்றனர். ஆனால் பல்வேறு துறை சார்ந்து ஆய்வு மற்றும் விமர்சனங்களைச் சமுதாய விடுதலை நோக்கி முன்வைப்பதன் மூலம், வர்க்கப் போராட்டத்தின் அரசியல் பாதையை உறுதி செய்கின்றது. பல்வேறு முதலாளித்துவப் பெண்ணிய ஆய்வுகளின் பின்னால் உள்ள ஆணாதிக்கத்தை, விபச்சாரத்தை, சோரம் போதலை அம்பலமாக்குகின்றது.

பொதுவாகப் பலர் ஆணாதிக்கத்தைப் பெண்ணின் உறுப்பு மற்றும் பாலியல் நடத்தை ஊடாகவே அடையாளம் காட்ட முனைகின்றனர். இன்றைய



விளம்பர உத்திகளின் வழியில் இதைப் பொதுவாகக் கையாள எல்லா விதமான முயற்சியையும் செய்கின்றனர்.

இதையொட்டி லெனின் "பாலுறவு திருமணம் பிரச்சினைகள் யாவும் சமுதாயப் பிரச்சினையைச் சேர்ந்த கூறுகளே ஆகும் என்பதே மறந்து விடப்படும் ஒரு நிலைக்கு இது இட்டுச் செல்லும். இதற்கு பதிலாய், மாபெரும் சமுதாயப் பிரச்சினையே பாலுறவுப் பிரச்சினையின் கூறாக அதன் வாலாகக் கருதப்படத் தொடங்கிவிடும். பிரதான அம்சம் இரண்டாந்தர நிலைக்கு உரியதாக்கப்பட்டுப் பின்னிலைக்குத் தள்ளி ஒதுக்கப்படுகிறது."[60]

பெண்ணின் மீதான ஆணாதிக்க இழிவுகள், ஆணாதிக்க விடுதலைகள், பெண்ணை நசிந்து அடிமையாக வாழவும், கவர்ச்சி காட்டி சுதந்திரமாக வாழவும் வழிகாட்டுகின்றது. பெண்ணைப் பாலியல் அங்கம் ஊடாக இனம் காட்டவும், பெண் அப்படி காட்டி வாழவும் பழக்கப்படுத்தபட்டுள்ளாள். இந்த இரு போக்கிலும் இரு எதிர் நிலைக் கோட்பாடுகள் கட்டமைக்கப்படுகின்றன. எதிர் பிரிவை அடிமையாக அடக்கப்படுவதாகக் காட்டி சுதந்திரமாக இருப்பதாகப் பிதற்றவும், சுதந்திரமாக இருப்பதை விபச்சாரமாகக் காட்டி அடிமையாக இருக்க, எதிர்நிலைக் கோட்பாடுகள் சமூக வடிவமாகின்றன. இவை பலவிதமான ஆணாதிக்கக் கோட்பாடுகளை, பெண் விடுதலை சார்ந்து உற்பத்தி செய்கின்றது.

இந்த நிலையில் பெண் மேலும் மேலும் நுகர்வின் கவர்ச்சி பண்டமாக மாறும் பாதையை, சுதந்திரமானதும் ஜனநாயகத்தின் தெரிவாகக் காட்டுவதும், இன்றைய உலகமயமாதலின் உலகக் கண்ணோட்டமாகும். இதில் இருந்து பாலியல் விடுதலை பற்றிய பிரமைகள் ஊட்டப்படுகின்றன.

பெண் பண்பாட்டு ரீதியாகத் திறந்த விபச்சார உலகுக்குள் அழைத்து வரப்படுகின்றாள். இங்கு ஆண்கள் பலதார மணத்தின் வரைமுறையற்ற ஆணாதிக்கப் பாலியல் கனவுகள் பூர்த்தியாவது பண்பாடாகின்றது. பெண் வரைமுறையற்ற ஆணாதிக்கத் தேவையைப் பூர்த்தி செய்யும் விபச்சாரப் பாலியலை வந்தடைய, ஆணின் வரைமுறையற்ற பாலியல் தேவையைப் பூர்த்தியாக்குவதை, ஆணாதிக்கப் பூர்சுவா பெண்ணியம் கொடிப் பிடித்து அழைத்துச் செல்லுகின்றது.

உலகமயமாதல் மூலதனத்தைக் குவித்துச் செல்வதால், சொத்திழப்பு தீவிரமடைகின்றது. சொத்திழந்த மக்கள் கூட்டம் பாரம்பரிய வாரிசு குடும்ப அமைப்பை விட்டு சுதந்திரமாகின்றனர். இதனால் குடும்பச் சிதைவும், புதிய குடும்ப உருவாக்கமும் நிகழ்கின்றது. இந்தக் குடும்பம் பரஸ்பர இணைவை முன்வைத்து இணைக் குடும்பங்களாக மாறுகின்றன. ஆனால் ஆணாதிக்க அமைப்பில் தொடர்ந்து இருப்பதால் அவை தொடர்ச்சியாகக் கறைபடிகின்றது.

சொத்திழந்து செல்லும் மக்கள் கூட்டத்தில் பெண்கள் நிலை மேலும் கடினமாகின்றது. பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேறுவதன் மூலம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்கக் கட்டுகளை விட்டு வெளியில் வரமுடியும் என்ற பூர்சுவா வாதங்கள், யதார்த்தத்தில் பொய்யான பிம்பங்களாகின்றன. ஏனெனின் பெண் உலகமயமாதலின் மூலதனக் குவிப்பால் சொத்திழப்பின் அங்கமாக இருக்கும் போது, எப்படி பொருளாதார முன்னேற்றத்தை வந்தடைய முடியும்.

பூர்சுவா பொருளாதார முன்னேற்றம்? ஆணாதிக்கத்தை ஒழிக்கும் என்ற வாதங்களை நடைமுறை புள்ளிவிபரங்கள், தகர்த்துவிடுகின்றன.

ஆணாதிக்கம் தனிச்சொத்துரிமையின் ஒட்டுண்ணி என்பதால், தனிச் சொத்துரிமை ஒழிக்கப்படும் போதே பெண்ணின் விடுதலை சாத்தியமாகும். இதில் சலுகைகள் என்பது ஆணாதிக்கத்துக்கு உட்பட்ட ஆணாதிக்கச் சமூக அமைப்பைப் பாதுகாக்கும் ஒரு கடிவாளமாகக் கடமையைச் செய்வனவாகும்.

பெண்ணியம் என்பது சமுதாயத்தை அதன் இயற்கையின் இயங்கியல் வளர்ச்சியூடாக ஆராய்ந்து, ஆணாதிக்கத்தைத் தகர்க்கப் போராடுவதில் சார்ந்துள்ளது. சமுதாயத்தை விஞ்ஞானப் பூர்வமாக, பொருள்முதல்வாத நோக்கில் ஆராய மறுத்து, வைக்கின்ற தீர்வுகள் எல்லாம் ஆணாதிக்கத்துக்கு உட்பட்டவையே. இவை மார்க்சியப் பெண்ணியத்துக்குத் திருத்தத்தை முன்வைப்பதன் மூலம், ஆணாதிக்க ஒழிப்பைப் பின்போட (தள்ளிப் போட) கனவு காண்கின்றது. ஆனால் மார்க்சியப் பெண்ணியம் ஆணாதிக்க ஒழிப்பைத் தனது வர்க்கப் போராட்ட கடமையாக, அங்கமாகக் கொள்வதுடன், அதன் பாதையில் தொடர்ச்சியான தியாக வரலாற்றைப் புரட்சிகரமான போராட்டமாகக் கொண்டு போராடி வருகின்றது.

அந்தப் பாதையை முன்னெடுப்பதில் இவ்வாய்வு மேலும் ஓர் ஆயுதமாகின்றது. சுரண்டும் வர்க்கத்தை ஒழிக்கும் போராட்டத்தில், அதன் ஒட்டுண்ணியான ஆணாதிக்கத்தை இந்த மண்ணில் இருந்து அகற்றி, இந்த மண்ணில் ஒரு சொர்க்கத்தைப் படைக்க, பாட்டாளி வர்க்கப் புரட்சிகர அரசியல் போராட்டத்தில் பங்குகொள்வோம். வாருங்கள். அணிதிரளுங்கள். புரட்சிகரமான சமூகத்தைப் படைத்திடுவோம். இது தான் ஒவ்வொரு மனிதனின் சமூகக் கடமையாகும்.

W



## மேற்கோள் குறிப்புகள்


1. **புதிய ஜனநாயகம்:** இமூதியப் புரட்சிகர மார்க்சிய ஆதரவு அரசியல் பத்திரிக்கை
2. **விழித்தெழு, காவற்கோபுரம்: ஏகாதிபத்திய ஆதரவு மறுவாசிப்பு மதப்பிரிவுகளின் வெளியீடு**
3. Organisation internationale du trarai!
4. லதனம் - பாகம்: 1 - கார்ல் மார்க்ஸ் (தியாகு மொழிபெயர்ப்பு)
5. இமூதியாவில் குழமூதைத் தொழிலாளர்கள்: மிரான் வைனர்
6. வீரகேசரி: இலங்கையில் இருமூது வெளிவரும் தமிழ் தினப்பத்திரிக்கை
7. சுட்டுவிரல்: பிரான்சில் வெளிவமூத தமிழ்ச் செய்திப் பத்திரிக்கை
8. இளைஞர்களைப் பற்றி: வி.இ.லெனின்
9. Alternatives Economiques - Jan 2000
10. தினக்குரல்: இலங்கையிலிருமூது வெளிவரும் தமிழ் தினப் பத்திரிக்கை
11. EURO STAT/CDIA
12. LE PARISAIN - AUJOURD'HUI: பிரான்சில் இருமூது வெளிவரும் செய்திப் பத்திரிக்கை
13. இமூதியா டுடே: இமூதிய ஏகாதிபத்திய ஆதரவு வெகுஜன பத்திரிக்கை
14. MUSEE DE L'HOMME
15. CIDIL / OCHA / FISCHLER
16. INSEE
17. பரீசியன்: பிரான்சில் இருமூது வெளிவரும் செய்திப் பத்திரிகை
18. அராஜகவாதமும் அராஜகவாத சிண்டிக்கலிசமும்: மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் - லெனின்
19. சுமைகள்: நார்வே நாட்டிலிருமூது வெளிவரும் முற்போக்குத் தமிழ்ப் பத்திரிக்கை (என் கட்டுரையில் இருமூது)
20. IDE
21. SECI
22. Femmes, le mauvais gener?
23. ENJEUX
24. LIBERATION: இடது தன்மை கொண்ட பிரான்சில் இருமூது வெளிவரும் செய்திப் பத்திரிக்கை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25. ஈழ முரசு: பிரான்சில் இருமூது வெளிவரும் புலி ஆதரவு பத்திரிக்கை
26. **CLARA ZETKIN:** பிரான்சில் இருமூது வெளிவரும் பூர்சுவா பெண்களின் பத்திரிக்கை
27. உயிரோடு உலாவ: இமூதியப் பெண்களின் வாழ்க்கைப் போராட்டமும் சுற்றுச் சூழலும் - வமூதனா சிவா
28. **CHIFFRES CLES DEL'ECONOMTE MONDIAL:** Jacques genereux
29. **TABLEAUX - I'express**
30. **JOURNAL DE DIMANCHE:** பிரான்சில் இருமூது வெளிவரும் செய்திப் பத்திரிக்கை
31. **MAGZ**
32. **OMS, NEWS WEEK QUID 1997**
33. யூ.என்.டி.பி. அறிக்கை: 1997 - இமூதியா டுடே
34. யூ.என்.டி.பி. அறிக்கை: 1998 - இமூதியா டுடே
35. **UNION INTER PARLEMENTAIRE, GENEUE**
36. **Alternatives Economiques - 2000**
37. **LE PARISAIN - AUJOURD'HUI:** பிரான்சில் இருமூது வெளிவரும் செய்திப் பத்திரிக்கை
38. **HUMANTE PARISAIN:** பிரான்சில் இருமூது வெளிவரும் (போலி கம்யூனிஸ்ட் கட்சியின்) இடதுசாரி வாரப் பத்திரிக்கை
39. **CFI - PAQUE**
40. **TELE Z:** பிரான்சின் தொலைக்காட்சி நிகழ்ச்சிநிரல்
41. சரிநிகர்: இலங்கையில் தன்னார்வ நிதி ஆதாரத்தில் தமிழில் வெளிவரும் குறிப்பிடத்தக்க ஒரேயொரு மாற்றுப் பத்திரிக்கை
42. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்: ஏங்கெல்ஸ்.
43. எக்ஸில்: 3 - பிரான்சில் இருமூது தமிழில் வெளிவரும் கோட்பாடற்ற மார்க்சிய எதிர்ப்பு பத்திரிக்கை
44. சோசலிசச் சித்தாமூதமும் கலாச்சாரமும் குறித்து: வி.இ. லெனின்
45. உயிர்நிழல்: 2.4 - பிரான்சில் இருமூது தமிழில் வெளிவரும் கோட்பாடற்ற மார்க்சிய எதிர்ப்பு பத்திரிக்கை
46. அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்: ஷீலா ரௌபாத்தம்
47. முன்னணி: மாநில அமைப்புக் கமிட்டியில் இருமூது தனித்தனி நபராக விலகி உருவான குமுவின் வெளியீடு
48. கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை: மார்க்ஸ் - ஏங்கெல்ஸ்
49. **L'HISTOIRE LESFEMMES - SPECIAL**
50. பெண்களின் சுவடுகளில்: சாமூதி சச்சிதானமூதம்
51. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்: ஏங்கெல்ஸ்
52. தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலைநோக்கு: செல்வி திருச்சமூதிரன்.
53. பழங்கதைகளும் பழமொழிகளும்: நா. வானமாமலை
54. இலங்கை முசுலீம்களின் திருமணம் சம்பிரதாயங்கள்: ஏ.எம். சமீம்
55. பிராமண மதம்: ஜோசப் இடமருகு
56. தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள்: டாக்டர் ச. முத்துச்சிதம்பரம்
57. பகவத் கீதை ஓர் ஆய்வு: ஜோசப் இடமருகு
58. ஈழத்து வாழ்வும் வளமும்: பேராசிரியர் சு. கணபதி பிள்ளை
59. பண்பாட்டு வேர்களைத் தேடி: தொகுப்பு - ஞா. ஸ்டீபன்
60. களப்பிரர் காலம் முதல் தமிழ் சினிமா உலகம் வரை: அருணன்
61. அரசு - குடும்பம் - பெண்ணியம்: தொகுப்புக் கட்டுரைகள்
62. மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும்: தொகுப்புக் கட்டுரைகள்
63. தமிழீழம்: இலக்கம் - 4 - தமிழீழ மக்கள் கட்சியின் பத்திரிக்கை
64. இருள்வெளி: பாரிசில் வெளியாகிய மார்க்சிய எதிர்ப்பு மலர்
65. இயக்கவியல் பொருள் முதல்வாதம்: மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் - லெனின்
66. சர்வதேசத் தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றி: வி.இ. லெனின்
67. எக்ஸில்: 2 - பிரான்சில் இருமூது தமிழில் வெளிவரும் கோட்பாடற்ற மார்க்சிய எதிர்ப்பு பத்திரிக்கை
68. எக்ஸில்: 1 - பிரான்சில் இருமூது தமிழில் வெளிவரும் கோட்பாடற்ற மார்க்சிய எதிர்ப்பு பத்திரிக்கை
69. பெண் உரிமை: இமூதியப் பெண்களின் விடுதலைக்காகப் போராடும் பெண்கள் அமைப்பின் பத்திரிக்கை
70. மண்ணில் மறைமூததோ? மனிதம்
71. மண்ணும் மனித உறவுகளும்: முனைவர் கோ. கேசவன்
72. மெல்லச் சாகுது மனிதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கீழைக்காற்று வெளியீடுகள்

| த ஸ் | நூல் | நூல் ஆசிரியர் | பதிப்பு ஆண்டு | விலை |
|---|---|---|---|---|
| 1. | வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும் | கோவிந்த முகோத்தி | செப்.-1994 | 7.00 |
| 2. | மார்க்சிய லநூல்களுக்கு வாசகர் வழிகாட்டி | மாரிஸ் கார்ன் ஃபோர்த் | ஜன.-1995 | 35.00 |
| 3. | தலித் அரங்கியல் | கே.ஏ. குணசேகரன் | மே-1995 | 16.00 |
| 4. | வஞ்சக வலைவிரிக்கும் தன்னார்வக் குழுக்கள் | தொகுப்பு நூல் | செப்.-1995 | இ.இ. |
| 5. | கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா? | தொகுப்பு நூல் | மே-1996 | 6.00 |
| 6. | மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை | ஜார்ஜ் தாம்சன் | மே-1997 | 40.00 |
| 7. | தேசியம் - பாட்டாளி வர்க்கக் கோரிக்கையல்ல | பி. இரயாகரன் | மே-1998 | 20.00 |
| 8. | மாசேதுங் மேற்கோள்கள் | மாசேதுங் | மே-1999 | 50.00 |
| 9. | மாவோவின் ன்று சொற்பொழிவுகள் | மாசேதுங் | நவ.-1999 | 8.00 |
| 10. | தொழிலாளி வர்க்கம், கட்சிஇயல்பு பற்றி | ஸ்டாலின், சென்யுன் | மே -2000 | 15.00 |
| 11. | இந்திய இடதுசாரிப் போக்கு | தொகுப்பு நூல் | மார்ச்-2001 | 3.00 |
| 12. | புரட்சியில் இளைஞர்கள் | தொகுப்பு நூல் | மார்ச்-2001 | 12.00 |
| 13. | மக்களிடையே நமது பணிகள் | கதீப் அன்சாரி | ஆக.-2001 | 4.00 |
| 14. | இயக்கவியல் - வரலாற்றுப் பொருள்முதல்வாதம் | ஸ்டாலின் | அக்.-2001 | 15.00 |
| 15. | அரசு | வி.இ. லெனின் | டிச.-2001 | 10.00 |
| 16. | ஆணாதிக்கமும் பெண்ணியமும் | பி. இரயாகரன் | டிச.-2001 | 90.00 |
| 17. | மாபெரும் தெலுங்கானா போராட்டம் | தொகுப்பு நூல் | ஜன.-2002 | 10.00 |
| 18. | கட்சி அமைப்பு பற்றி | தொகுப்பு நூல் | பிப்.-2002 | 15.00 |
| 19. | ஆணாதிக்கமும் சக ஒடுக்குமுறைகளும் | பி. இரயாகரன் | டிச.-2002 | 135.00 |
| 20. | ஆணாதிக்கமும் மார்க்சியமும் | பி. இரயாகரன் | டிச.-2003 | 150.00 |

## எமது பிற வெளியீடுகள்

| | | ரூ. |
|---|---|---|
| இந்தியஇடதுசாரிப்போக்கு - ஒரு கண்ணோட்டம் | : | 3.00 |
| மக்களிடையே நமது பணிகள் - கதீப் அன்சாரி | : | 4.00 |
| தேசியம் எப்பொழுதும், எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய, பாட்டாளி வர்க்கக் கோரிக்கையல்ல - பி. இரயாகரன் | : | 20.00 |
| மார்க்சிய லநூல்களுக்கு வாசகர் வழிகாட்டி - மாரீஸ் கார்ன் ஃபோர்த் | : | 35.00 |
| மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை - ஜார்ஜ் தாம்சன் | : | 40.00 |
| மாசேதுங் மேற்கோள்கள் | : | 50.00 |
| தலித் அரங்கியல் - முனைவர் கே.ஏ. குணசேகரன் | : | 16.00 |
| புரட்சியில் இளைஞர்கள் | : | 12.00 |
| மாவோவின் ன்று சொற்பொழிவுகள் | : | 8.00 |
| தொழிலாளி வர்க்கம் கட்சி இயல்பு பற்றி... - ஸ்டாலின் - சென்யுன் | : | 15.00 |
| கம்யூனிசம் தோற்றதா? முதலாளித்துவம் வென்றதா? | : | 6.00 |
| வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும் - கோவிந்த முகோர்த்தி | : | 7.00 |
| இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்றியல் பொருள் முதல் வாதமும் - ஸ்டாலின் | : | 10.00 |
| அரசு பற்றி - லெனின் | : | அச்சில் |
| ஸ்தாபனத்தைப் பற்றி | : | அச்சில் |

